169

Vol II

T.D.R.C. 415

R.R. 169/1-1901

சேதுபுராணவசனம்

Q23:38.219

No 1

2 97121

உ

கடவுள் துணை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
27 FEB.1901
MADRAS

ஸ்ரீசேதுபுராணவசநம்.

இஃது,

நிரம்பவழகிய தேசிகராற் செய்யப்பட்ட

தமிழ்க்காவியத்திற்கு அருத்தமாக

இராமேச்சுரம்

முத்துவிஜயம் பிள்ளையவர்களால்

எழுதப்பட்டிருந்த ஏட்டுப்பிரதியைச்

சென்னை:

கோ. லோகநாதமுதலியாரவர்கள்

முதற் பதிப்பு.

சிலவித்துவான்களால்

பரிசோதனைசெய்துபிழையறத்திருத்தித்

தமது

மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தனர்.

சார்வரி௵ கார்த்திகைமீ.

REGISTERED COPY-RIGHT.

இதன்விலை ரூபா - ௨.

சுத்தப்பதிப்பான புத்தகவிளம்பரம்.

பஞ்சதசப்பிரகரணம்	1	0	0
வேதாந்தபோதினி அல்லது நாலு சிஷ்யர்களின்கதை	0	8	0
மனவுல்லாசகதை	0	8	0
பகவற்கீதை வசனம் (தஞ்சைபதிப்பு)	1	4	0
ஞானப்பிரகாசதீபிகை அண்டபிண்டபஞ்சீகரணபடம்	1	0	0
வள்ளலார் 20 சாஸ்திரம்	1	8	0
ஸ்ரீ குமாரதேவர் 16 சாஸ்திரம்	0	10	0
பொன்னம்பலசுவாமி கைவல்லியநவநீதவிருத்தியுரை	2	0	0
திருமந்திரம் மூவாயிரம்	1	8	0
கந்தபுராணச்சுருக்கம்	0	12	0
திருவிளையாடற்புராணம் செய்யுள்புட்நோட்டுடன்	2	0	0
திருவாதவூர்புராணம் விருத்தியுரை யாழ்ப்பாணப்பதிப்பு	1	0	0
சானந்தகுணேசர் புராணம் உரை	0	12	0
விருத்தாசலபுராணம் உரை	0	10	0
அருணசலபுராணம் உரை படத்துடன்	0	8	0
சிவதலமான்மியவசனச்சுருக்கம்	0	12	0
விஷ்ணுதலமான்மியவசனச்சுருக்கம்	0	8	0
மூவர்தேவாரம் பண்முறை	3	8	0
சூடாமணிநிகண்டு 12-தொகுதியும்	1	4	0
,, 10, நிகண்டுவரை	1	0	0
,, 11, 12-வது நிகண்டுகள்	0	8	0
நித்தியானுஷ்டானவிதியும் திருவ[illegible]மும்	0	4	0
வேதநாயகம்பிள்ளைகீர்த்தனை [illegible]	0	8	0
நந்தனார்சரித்திரக்கீர்த்தனை [illegible] படத்துடன்	0	8	0
பெரிய-சின்னசாமிதாசர் கீர்த்தனை	0	8	0
சப்தரிஷிவாக்கியம் 5500 பாடல்	4	0	0
மனைவிதிவிளக்கம்	0	4	0
சோதிடபாலதீபிகை	0	6	0
சாதக அலங்காரம்	0	8	0
அரிச்சந்திரபுராண மூலம்	0	8	0
பிரபுலிங்கலீலை மூலம்	0	8	0
சுப்பிரமணியபண்டிதர் [illegible]	4	0	0
ஞானவாசிட்டவசனம்	1	8	0
மனுதர்மசாஸ்திரம்	3	8	0

முக்கியகவனிப்பு:—இதில்கண்டிராத வேறு எந்தப்புத்தகங்கள் வேண்டியிருந்து எழுதினால் வாங்கி அனுப்பப்படும். தங்கள் கடிதம் கண்டவுடன் வி. பி. போஸ்டில் புத்தகங்கள் சீக்கிரம் அனுப்பப் படும். தாங்கள் எழுதும் ஒவ்வொரு கடிதத்திற்கும் தங்கள் மேல் விலாசம் எழுதவேண்டும்.

கோ. லோகநாதமுதலியார்,
மிநோன்மணிவிலாச சென்ட்ரல் புக்டிபோ,
20 - வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

21196
OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 27 FEB. 1901 MADRAS
9712

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சேதுபுராணவசநம்.

காப்பு.

திங்களங்குழவியென்னத்திகழொருமருப்பிற்சோதி
தங்குமிம்புரிவயங்கத்தடாமணிமகுடந்தாங்கித்
துங்கநல்வரங்களெல்குந்தூயசீராமசேதுப்
புங்கவர்வணங்குமியானைமுகத்தனைப்போற்றல்செய்வாம்.

இ-ள். பரிசுத்தமான ஸ்ரீராமபிரானால்கட்டப்பட்ட சேதுவில் பாலசந்திரன்போலப்பிரகாசிக்கின்ற ஒற்றைக்கொம்பினிடத்து ஒளி யமைந்த இம்புரி விளங்காநிற்கப்பெரிதாகிய ரத்நகசிதமான கிரீடத் தைத்தரித்து எழுந்தருளியிருக்கின்றதன்னைவந்து தரிசிப்பவர்க்கு அவ ர்கள் விரும்புவனவாகிய மேலான நன்மையமைந்த நல்லவரங்களைத் தடையின்றிக்கொடுத்தருள்வோரும், தேவர்களால் வணங்கப்படுவோ ரும் ஆகியயானைமுகக்கடவுளாகிய ஸ்ரீவிநாயகமூர்த்தியை, இந்நூல் இனிது முடிதற்பொருட்டு, யாம்வணங்குவோம். எ-று. (க)

சைவசமயிகள் யாதானும் ஓர்நூல் செய்யப்புகின், அந்நூல் இ னிது முடிதற்பொருட்டு முதற்கண் விநாயகக்கடவுளை வாழ்த்துதல் மரபாதலால், இந்நூலாசிரியரும் தாம் எடுத்துக்கொண்ட சேதுபு ராணம் என்னும் இந்நூல் இனிதுமுடிதற்பொருட்டு இவ்வாழ்த்துக் கூறினார் என்றுணர்க. மருப்புவளைவினாலும் நிறத்தாலும் பாலசந்திர னுக்கு உவமையாயிற்று. இதனை வண்ணம் வடிவு என்பனவற்றைப் பற்றி வந்தபண்புவமை யென்பர்.

கயமுகாசுரனைச் சங்கரித்தற்பொருட்டு ஒருமருப்பை முறித் துக் கைக்கொண்டார் என்றும், வேதவியாசமுனிவர் பாரதக தையைக் கூறுங்கால், அதனை மேருவின்புறத்தில் எழுதுதற்குரி ய எழுத்தாணியாகக் கோடற்கு முறித்துக்கைக்கொண்டார் என்றும்

புராணங்களில் கூறப்படுதலானும், முகத்துள்ளது ஒற்றைக்கொம்பேயாதலானும் "இகழொருமருப்பின்" என்றார். "சோதிதங்குமிம்புரி" என்றதனால் மணிகளிழைத்த இம்புரியென்றதாயிற்று. இம்புரி, யானைக்கொம்பிற் கட்டும்பூண். வழங்குதல்-வரானமாகக்கொடுத்தல். சேதுவில்மூழ்கினோர் பெரும்பாவங்களையெல்லாமொழித்துப்புனிதர் ஆதல் திண்ணமாதலானும், அவர்க்கு அப்புனிதத்தன்மைதருதல் உண்மையால் சேதுவைத்தூயசிரிராமசேது வென்றுங்கூறினர். வயங்க, தாங்கி, கல்லும் யானைமுகத்தன் என்றும் புங்கவர்வணங்கும் யானைமுகத்தன் என்றும் இயைத்துக்கொள்க.

போற்றல்செய்வாம்—என்னும் வினைக்குயாம் என்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது. இனிவரும் கடவுள்வாழ்த்தில். "பூமாது" என்னும் முதற்செய்யுளின் ஈற்றில்சேர்ப்பாம் என்பதற்கும் இரண்டாஞ்செய்யுள்முதலானவற்றின் ஈற்றிலுள்ளவாழ்வாம் என்பது முதலியவற்றிற்கும் இவ்வாறே அமைத்துக்கொள்க. தாம் ஒருவரேயாதலால் தனித்தன்மைப் பன்மையென்றாயினும் தம்போல்வாரையும் உளப்படுத்திக் கூறுவதால் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை யென்றாயினுங்கொள்க.

தொடர்கின்றபிறவிக்கண்வெறுப்புத்துகள்படத்துளைக்குமேலோ
னடர்கின்றவடற்குநாதனெனுமைங்கைமுக்கட்
படர்வென்றிப்பகவன்முன்னைப்பவமுதற்படியினெல்லா
விடர்நின்றும்புரக்கவெம்மையெங்கணுமெஞ்ஞான்றும்.

இ-ள். ஆன்மகோடிகளைத்தொடர்ந்துவருத்துகின்ற பிறவித்துன்பமாகிய மலையானது பொடிபடும்படி அதனைத்தொலைக்கின்ற மேலோனும் வருத்துகின்ற அத்துன்பத்திற்குத் தலைவனுமாகிய ஐந்துதிருக்கரங்களையும், மூன்றுகண்களையும், மிகுந்தவெற்றியையுமுடைய விநாயகக்கடவுள், அநாதியாய்த்தொடர்ந்துவருகின்ற பிறவிமுதலாகச் சொல்லப்பட்ட இவ்வுலகத்திலுள்ள எல்லாத்துன்பங்களினின்றும் எம்மையெவ்விடத்தும் எந்தக்காலத்தும் காத்தருள்வாராக. எ-று.(உ)

பிறவித்துன்பத்திற்குக் காரணமாகியவினை, ஆன்மாக்கள் சென்றுபிறக்கும் பிறவிதோறும்விடாது தொடர்கின்றமையின், "தொடர்கின்றவிடுக்கண்" என்றும், அவ்விடுக்கண்பாவராலும் அசைக்கப்படாது நிலைபெறுதலால் அதனைவெற்பு என்றும், அஃது அன்னதாயி

னும் முதற்பிள்ளையார் தம்மையடுத்தாரது துன்பத்தை நிர்மூலமாக நீறுசெய்வது திண்ணமாதலால், "துகள்படத் துளைக்குமேலோன்" என்றும், தம்மைவழிபடாதார்க்கு அத்துன்பத்தை யுண்டாக்குவோராதலால் "அடற்குநாதன்" என்றுங்கூறினர். வழிபடாதார்க்குத் துன்பஞ்செய்வர் என்பதனைத் திரிபுரசங்காரகாலத்தில் தமது தந்தையாரது இரதத்தின் அச்சிறுத்தமையே விளக்கும். எங்கணும் என்றது மூன்றுலகத்திலும் எனவும், எஞ்ஞான்றும் என்றது முக்காலத்தும் எனவுங்கொள்க. படி, பூமி, மேலோன், நாதன், பகவன் என்பன ஒருபொருள்மேல்வந்த பலபெயர்கள். இவற்றுளொவ்வொன்றும் புரக்கவென்னும் வியங்கோள் வினையோடு சென்றியைந்து முடிவுபெறும். இதற்கு எம்மையென்பது செயப்படுபொருள்.

கடவுள் வாழ்த்து.

சபாபதி.

பூமாதுபொலிவெய்தமுகுந்தன்காக்கும்
புவிமாதுவளம்பெருகப்புலமைசான்ற
நாமாதுகலைத்தழைப்பவிருள்கால்சீக்கு
நகைநிலவுதவழ்மவுலிகன்னிக்கங்கை
மாமாதுபுனலளிப்பமறைகள்வாழ்த்த
வளர்தில்லையம்பலத்துள்வாமபாகத்
தேமாதுவிழிகுளிர்ப்பவமரர்போற்றத்
திருநடஞ்செய்சபாபதித்தாள்சென்னிசேர்ப்பாம்.

இ-ள். தாமரைமலரில்வாழ்கின்ற திருமகள் பிரகாசத்தையடையவும், திருமாலினால் காக்கப்படுகிற பூதேவியின் பல்வகைவளங்களும் செழிக்கவும், கல்வியறிவுமிகுந்த சரஸ்வதியின் அழகுசெழிக்கவும், இருட்டைப்போக்குகின்ற ஒளியையுடைய பாலசந்திரன் தவழ்ந்த திடமாகிய சடாமகுடத்திலுள்ள பரிசுத்தமான நீரையும், எல்லாருடைய பாவங்களையும் தீர்த்தலாகிய பெருமையையுமுடைய கங்காதேவி நீரைத்தளிக்கவும், நான்கு வேதங்களுந்துதிக்கவும், எப்போதும் ஒருகுறைவும் இன்றி அபிவிர்த்தியடைந்துவருகின்ற தில்லையம்பலத்தில் தனது இடப்பாகத்தை நீங்காதிருக்கிற தெய்வத்தன்

மைபொருந்திய உமாதேவியாரது கண்கள்குளிரவும், இந்திரன்முதலாகிய தேவர்கள் வந்துவணங்கவும் திருநடனஞ்செய்கின்ற ஸ்ரீசபாபதியினுடைய சிலம்பணிந்ததிருவடிகளை எமதுசிரத்தில் அமைத்துக்கொள்வோம்யாம். எ-று. (௩)

பூ எனப்பொதுப்படக் கூறினாராயினும் பூமாதுஎன்பது திருமகளை யுணர்த்திநிற்றலால் அஃது ஈண்டுத்தாமரை மலருக்காயிற்று. இவ்வாறன்றிப் "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்றும், "பூந்தவிசில் வீற்றிருக்கும்பொன்" என்றும் பிறவிடங்களிலும் பூவென்பது தாமரை மலரையே யுணர்த்திநிற்றல்காண்க. பூமாதுபொலிவெய்தலாவது இவ்வுலகத்தில் செல்வம்மிகுப்பொலிய, என்றதாயிற்று. புவிமாது வளம்பெருகுதலாவது பைங்கூழ்முதலியனசெழித்துப் பயன்தருதல். நாமாது நலந்தழைந்தலாவது கல்வி அபிவிர்த்தி அடைதல். சரஸ்வதி, கல்விக்கு அதிதேவதையாகலானும் அவளின்மிக்க புலமையுடையோர் ஒருவர் இல்லையாதலானும் "புலமைசான்ற நாமாது" என்றார். கங்கைமாமாது புனல்துளித்தலாவது, இறைவன் திருநடநஞ் செய்தலால், அசைவுற்றுத் ததும்பித் திவலைவீசுதல். அன்றிக் காலமழைபெய்தலுமாம். "வாமநீங்கா" என்னும் விசேடணத்தால் "மாது" என்பது உமாதேவியாரையுணர்த்திற்று. எய்த, பெருக, தழைப்ப, துளிப்ப, வாழ்த்த, குளிர்ப்ப, போற்ற என்னுஞ்செயவெனெச்சங்கள் திருநடஞ்செய்தல் என்னும் வினைகொண்டுமுடிந்தன. திருநடஞ்செயி என்பது ஒருசொல். இஃது ஈண்டுப்பகுதிமாத்திரையாய்ச் சொல்லப்படுதலால், காலங்கரந்த பெயரெச்சமாகிய வினைத்தொகையாய்த் தாள் என்னும் பெயர்கொண்டுமுடிந்தது.

மறைகள் வாழ்த்தலாவது தில்லையம்பலமும் அதில் திருநடஞ்செய் நூபுரத்தாளும் நீடூழிவாழ்கவென மங்கலவாழ்த்துக்கூறுதல். வாமநீங்காத்தேமாது விழிகுளிர்த்தலாவது, திருநடஞ்செய் நூபுரத்தாளையுடைய எம்பெருமானது திருமேனியின் பேரழகைக்கண்டுகளித்தல். "தடக்கோட்டி மயத்தேனோக்கிக்கு மெழிலுடையான்" என்றார்பிறரும். அமரர்போற்றுதலாவது இந்திரன்முதலிய இறையவர் தத்தம்பதப்பேறுகளுக்கு ஓர் இடையூறுண்டாகாவண்ணம் காத்தருள்கவெனப் போற்றுதலாம். அம்பலம்-பொது. அம்பலத்துள் திருநடஞ்செய் என இயையும்.

இராமநாதசுவாமி.

பூந்தவிசினிருந்தபிரான்முதலோர்காணப்
புண்டரிகமகள்கொழுநன்புகழ்விளங்கை
வேந்தனுயிர்ப்பழிகழுவுமுகந்தாவ்யரிக்கும்
விடையவனையுடையவனும்வேதவாய்மை
யாந்தரங்கம்வெளிசெய்வானனிலவரோடு
மினைந்துகந்தமாதனத்திலருச்சித்தேத்து
மேந்துபுனற்சடிலமுடியிராமநாத
னிணையடிச்செந்தாமரைகளிறைஞ்சிவாழ்வாம்.

இ-ள். தாமரைமலராகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமன் முதலிய தேவர்கள் காணும்படி, திருமகள் நாயகனாகிய ஸ்ரீராமபிரான் பராக்கிரமம் முதலியவற்றால் பெருங்கீர்த்தியமைந்த இலங்காதிபனாகிய இராவணனது உயிர்க்கொலையால் சேர்ந்த பாவத்தைப் பரிகரித்தலாகிய வழியால் எல்லார்க்கும் இடபவாகனனாகிய சிவபெருமானே தலைவன் என்கிற வேதங்களின் உண்மையாகிய இரகசியத்தை வெளிப்படுத்தும் பொருட்டுச் சுக்கிரீவ மகாராஜன் முதலிய எல்லாரோடுங்கூடிக் கந்தமாதனபர்வதத்தில் அருச்சனை செய்தற்குரிய மலர்களைக்கொண்டு அருச்சித்துத் துதித்த கங்கையைத்தாங்கிய சடாமகுடத்தையுடைய இராமநாதசுவாமியினது, இரண்டுதிருவடிகளாகிய செந்தாமரைமலர்களை வணங்கிவாழ்வோம் யாம். எ-று. (௪)

பூந்தவிசின் இருந்த என்னும் விசேடணத்தால் பிரான் என்பது பிரமனையுணர்த்திற்று. முதலோரென்பது இந்திரன் முதலியோரை. உயிர்ப்பழி-உயிர்நீக்கியபாவம். கழுவுதல் ஈண்டுப்பரிகரித்தல் என்னும்பொருளது. அந்தரங்கமென்பது அந்தரங்கம் எனஅதனை நோக்கி நின்றது. வெளி செய்வான் என்பதில் வான்-எதிர்கால முணர்த்தும் செயவெனெச்ச விகுதி. கந்தமாதனம். இராமேச்சுரத்திலுள்ள ஓர் குன்று. அடிச்செந்தாமரை என்றோதும் செந்தாமரை யடியெனச் சொல் முன்பின்னாகமாற்றிச் செந்தாமரை மலர்போன்ற திருவடி எனப்பொருள் கொள்க.

புண்டரிகமகள் கொழுநன் அருச்சித்து ஏத்தும் இராமநாதன் இணையடிச் செந்தாமரைகள் இறைஞ்சி வாழ்வாம் எனவினைமுடிக்க.

பர்வதவர்த்தனியம்மை.

தன்னெனவும்வெச்செனவுந்தருசாயாத்
தகைபயின்றுவிடநீக்கித்தலைவற்கென்று
முன்னமுதந்தனையுதவியிமையமேரு
வுயர்சிகரமந்தரத்தையொருவிச்சேர்ந்தங்
கண்ணுதலைவிளர்ப்புறலாற்கயிலையென்னிக்
கௌணியர்க்குத்தமிழ்சுரக்குங்காட்சியாலே
வண்ணமுலைமலயமலைமாறுங்கன்னி
மலைவளர்காதலிமலர்த்தாண்மனத்துள்வைப்பாம்.

இ-ள். தட்பவெப்பங்களை யுடையனவாகியும், சாயாத பெருமையை யுடையனவாகியும், மதனையெய்ப்பித்து விடத்தலையகற்றி அமுத நிலையைத் தனது காயசுகத்தில் சிவபெருமானுக்குத் தந்தும், முன்றில் தட்பம் ஒன்றனையே யுடைய இமயமலையையும் திரிபுரதகன காலத்தில் வளைத்த மேருமலையையும் திருப்பாற்கடல் கடையுங் காலத்தில் அதில் உண்டான விடம் அமுதம் என்னும் இரண்டனுள் அமுதமிருக்க, விடத்தைச் சிவபெருமானுக்குத் தந்த உயர்ந்த சிகரங்களையுடைய மந்தரமலையையும் இகழ்ந்தும், தலைவனைப் பிரிந்தவிவர் உடல் வெளுத்திருத்தல் போல நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைச் சேர்ந்திருந்தும் வெளுத்திருத்தலால் கைலாசமலையை யிகழ்ந்தும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்க்கு ஞானப்பாலூட்டித் தமிழ்ப்பாடல் சுரக்கச் செய்த (உலகத்தார்க்குத் தமிழையுதவியருளிய) காட்சியனையாலே பொதியமலையை ஒத்தின்ற அழகிய தனங்களையுடைய இளமை வாய்ந்த பர்வதவர்த்தனியம்மையின் தாமரைமலர்போன்ற திருவடிகளை யெமது மனத்தின்கண் இருத்துவோம் யாம். எ-று. (௫)

தன்னெனவும் வெச்செனவும் என்பன ஒன்றித் தொழிற் பெயராய்த் தண்ணென்றிருத்தல் வெச்சென்றிருத்தல் எனப்பொருள் கொள்ளக்கிடந்தன. சாயாத்தகை-இறுமாப்பு. மாதர்தனம், ஆலிங்கன முதலாயின உஷ்ணகாலத்தில் தண்ணென்றும் சீதகாலத்தில் வெச்சென்றும் இருத்தல் இயல்பாதலால் தண்ணெனவும் வெச்செனவும் தந்து எனத் தனத்தை விசேடித்தார். தந்து, நீக்கி, உதவி, ஒருவி, என்னி என்னும் செய்தெனெச்சங்கள் சுரக்கும் என்னும் வினைகொ

ண்டு முடிந்தன. தண்ணெனவும் வெச்செனவும் தருதல் முதலிய குணங்களையுடையதும், தமிழ்சுரக்கும் காட்சியில் மலய மலையை நிகர்த்திருப்பதும் ஆகிய வண்ணமுலை மலைவளர்காதலி மலர்த்தாள் மனத்துள் வைப்பாம் என வினை முடிபுசெய்க. பொழிப்பாதலான் இச்செய்யுளின் அகலவுரை வரையப்படவில்லை. கௌணியர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்; பூமியிலுள்ளோர். பர்வதவர்த்தனி-மலைவளர்காதலி.

விநாயகக்கடவுள்.

வேணிமுடிப்பனிர்திகிர்புனற்றுளைகைவாங்கி [டாற்
விடுத்தங்ஙன்வெண்டலைப்புருட்டியிளிர்வெண்கோட்
கோணிலையமதிக்குழவியுழுதுமேருக் [கித்
கொடுமுடியிறக்கிளைத்துவெண்டோள்குழையத்தாக்
தாணெடியவிடைமுழுதுங்குயிலுமுக்கட்
டாதையொடுவிளையாடித்தண்டாவன்பர்
மாணிலவுமனத்தகத்தினுலாவுந்தெய்வ
வாரணத்தைத்தினைந்துறைந்துவழுத்தல்செய்வாம்.

இ-ள். சடைமுடியில் அணியப்பட்டிருக்கிற கங்காநதியின் நீரைத் தனது துதிக்கையினால் உட்கொண்டு உமிழ்ந்தும், பிரமனது வெண்டலையை உருட்டியும், விளங்குகின்ற வெள்ளைக் கொம்பினால் தோன்றிய இளமையாகிய பிறைச்சந்திரனை உழுதும், மேருமலையின் கொடுமுடிகளைப் போலத் திரண்டிருக்கிற எட்டுத் தோள்களும் குழையும்படி தாக்கியும், நீண்டகால்களையுடைய இடபத்தைக் கோபித்தாக்கியும், திருக்கைலாயமலையில் எழுந்தருளியிருக்கிற மூன்று கண்களையுடைய தன் தந்தையாகிய சிவபெருமானோடும் விளையாடியும், தன்னிடத்து அன்பு செய்பவராகிய அடியார்களுடைய மாட்சிமைதங்கிய மனமென்கிற கட்டுத்தறியில் கட்டப்பட்டுநின்று உலாவுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய யானைமுகத்தோனாகிய விநாயகக்கடவுளை மனத்தால் நினைத்துக், காயத்தால் வணங்கி, வாக்கினால் தோத்திரஞ் செய்வோம் யாம். எ-று. (௬)

பனிர்-பனிரதனால் சொல்லப்பட்டது. புனற்கை வாங்கி விடுக்கும் நீருக்கு சீகரி யென்று பெயர். இது "இவுளிவாயினும்

யானைக்கையினு மூமிழ் நீர் விலாழி யென்றுரைக்கப்படுமே,, என்பதனால் இனிது விளங்கும்.

சிவபெருமான் தம் திருமிடற்றில் அணிந்திருப்பது அநேக பிரமர்களுடைய வெண்டலையாற் சமைத்த மாலையாதலால் அயன் வெண்டலையென்றது பன்மையைக் குறிக்கின்றது. அதிலுள்ள தலைகளை எடுத்து விளையாட்டுக் கருவியாகிய பந்து போல உருட்டுதலால் அயன் வெண்டலையுருட்டி யென்றார். பகீரதிநீர், வெண்டலை, மதிக் குழவி, எண்டோள், விடை என்பனவற்றை முறையே வாங்கி, உருட்டி, உழுது, தாக்கி, முனிந்து விளையாடச் சிவபெருமான் எவ்வாறு பொறுத்திருந்தனர் எனின், மூத்தபிள்ளையாதலால் இவர் மீது தந்தையாகிய தமது அன்பின் மிகுதி தோன்றப்பொறுத்திருந்தனர் என்க. தந்தைக்கு மூத்தபிள்ளை மீதும், தாய்க்கு இளைய பிள்ளை மீதும். அன்பு மிகுந்திருத்தல் உலகவியல்பு என்க.

இவ்வாறு விளையாடும் இளம்பருவ முள்ளவராயினும் அன்பர் மனம் விட்டகலாதவர் என்றுணர்த்துதற்கு, “தன்பாலன்பர் மாணிலவு மனத்தறி னின்றுலாவும் தெய்வவாரணம்,, என்றார். நினைந்து, இறைஞ்சி, வழுத்தல் செய்வாம் என்றது முக்கரணத்தாலும் வழிபடுவோம் என்றவாறு.

வாங்கி, விடுத்து, உருட்டி, உழுது, தாக்கி, முனிந்து, விளையாடி உலாவும், தெய்வவாரணத்தை நினைந்து, இறைஞ்சி, வழுத்தல் செய்வாம் எனவினை முடிக்க.

சுப்பிரமணியக்கடவுள்.

குலவுமலைமகள்கலசமுலைப்பால்வாசக்
குமுதமவள்கொழுநர்மறைகொழிக்குஞ்செவ்வி
நிலவுமுகமலர்கமழச்செய்துமுன்னோ
னெடுந்துளைக்கைபிடித்தேறிநெற்றிப்பட்டத்
துலவிவிளையொருமுவருவப்பமாலோ
டும்பர்கணங்களிதூங்கவலசமுடுங்
கவடமாகதமயிலூர்சூறற்கால்வென்றிக்
கந்தனைவந்தனைசெய்துகருத்துள்வைப்பாம்.

கொண்டு, பரஞ்சுடரை அங்கணனை செங்கைவிரல் கொடுநெறித்துத் தெரிக்குந்தோன்றல் என்றுங்கூறினர். வழுதியுடல் வெப்பு நீக்க வணிதிகழ் வெண்டிருநன்னீறள்ளிச்சாத்தினவரலாற்றைத் திருவிளையாடற்புராணத்துப் பாண்டியன் சுரந்தீர்த்தபடலத்தில் விரிவாய்க் காணலாம்.

காதும் விடையும் முதலகாட்சி அடையாளங்கள் புகன்றுபோற்றி பரஞ்சுடரை அங்கணனை வழுதியுடல் வெப்புநீங்க திருநன்னீறள்ளிச்சாத்தும் செங்கைவிரல் கொடுதெரிக்கும் தோன்றல் சிற்றடியின் பெருந்தகைமை சிந்தைசெய்வாம் என வினைமுடிபு செய்க.

திருநாவுக்கரசுநாயனார்.

தேவரையுமுனிவரையுந்தளவமார்பிற்
திருவரையுங்குரவரையுஞ்செல்வமிக்கோர்
யாவரையுமேவல்கொளுநெற்றிநாட்டத்
திறைவரைமுன்னிகழ்த்திருந்தவெண்ணந்தோன்றச்
சேவரையுநெடுங்கொடியின்தகைமையெல்லாத்
திசைவரையுஞ்செலத்தமிழின்செய்யுள்பாடு
நாவரையர்புகழ்மொழிகள்வரைந்துகூறி
யுவந்தவர்செய்திருத்தொண்டுவியந்துவாழ்வாம்.

இ-ள். பிரமன்முதலிய தேவர்களையும் சநகாதிமுனிவர்களையும் தளவமாலையைத்தரித்த மார்பின்கண் திருமகளையமைத்துக்கொண்ட திருமாலையும், திருநந்திதேவர்முதலிய ஆசாரியர்களையும், செல்வத்தால் மிக்கோராகிய குபேரன்முதலிய எல்லாரையும் ஏவல்கொள்ளுகின்ற நெற்றிக்கண்ணராகிய சிவபெருமானை முன்னே நினைந்திருந்த தமது கருத்து வெளியாகும்படி அந்தச் சிவபெருமானது இடபக்கொடியின் பெருமையானது எல்லாத்திசைகளிலும்சென்று வியாபிக்கத் தமிழ்ச்செய்யுளால் பதிகங்கள்பாடியருளிய திருநாவுக்கரசு நாயனாருடைய புகழ்மொழிகள்யாவையும் எடுத்துச்சொல்லி விரும்பி அவர்செய்த திருத்தொண்டினைப் பாராட்டி வாழ்வோம். எ-று.

முனிவர் - இறைவனை மனனஞ்செய்வோர். இவ்வாறு மனனஞ் செய்வோருள் சநகாதியர் சிறந்தமையின், முனிவர் என்பதற்கு சநகாதியர் எனப்பொருள் கூறலாயிற்று. சநகாதியர் என்றது சநகர்

முதலிய நால்வரை. அந்நால்வராவார். சநகர், சநந்தநர், சநற்குமா ரர், சநத்சுஜாதர்என்போர். இந்நால்வரும் பிரமன்மாநஸபுத்திரரும் கல்லாலின்நீழலில் சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளி யிருந்து பிரமப்பொருளைச்சொல்லாமற் சொல்லப்பெற்றவரும் ஆத லால் இவர்க்கு முனிவருட் சிறப்புப்பெறப்பட்டது. இவருள் சநற் குமாரர் தன்னிடத்திலிருந்த அன்புபாராட்டுவோனை விதுரனால் பிரார்த்திக்கப்பட்டு திருதராட்டிரனிடம்வந்து அவனுக்கு ஞானோப தேசஞ்செய்து போயினர் என்பது புராணகதை. இவ்வாறன்றி அத் திரிமுதலிய முனிவர் எனினும் அமையும். குரவர் என்றது நந்தி தேவர்முதலிய எழுவரை. செல்வப்பெருக்குள்ளோரில் குபேரன் சிறந்தோனாதலால், செல்வமிக்கோர்யாவரையும் என்பதற்குக் குபே ரன்முதலிய எல்லாரையும் எனப் பொருளுரைக்க லாயிற்று. இகந் திருந்த என்பதற்கு அவமதித்திருந்த என்றுரைப்பினும் அமையும். சே-இடபம். வரைதல்-எழுதல். தமிழ் என்றது தேவாரப்பதிகங் களை. தமிழின்செய்யுள் என்பதற்குஇனியதமிழ்ச்செய்யுளாலமைந்த பதிகம் எனப் பொருள்கொள்க. நாவலாயர் என்பது நாவுக்கரசு என்பதன் பரியாயம். இவரை வாகீசர் என்பர் வடநூலார்.

சுந்தரமூர்த்திநாயனார்.

தாதுகொண்டமலர்ச்சுரியற்பரவைவென்பா
டனத்துணைமேன்மயற்குளிரின்றளர்வுதீர
வேதுகொண்டுவிழையுநெறிவிரும்பிமாலும்
விரிஞ்சனுமுன்றொடராதவெளியையாரும்
யாதுகொண்டுமறிவரிதாயெங்குமான
விரும்பொருளைநெருங்குமிருளிரவின்மீளத்
தூதுகொண்டார்தமையெமையாட்கொள்வீரென்று
சொல்லியவர்பதம்புல்லித்தொழுதல்செய்வாம்.

இ-ள். காமமயக்கமாகிய குளிரினால் தமக்குண்டான தளர்ச்சி நீங்கும்படி மகரந்தத்தைக்கொண்ட பூமாலையைத்தரித்த கூந்தலை யுடைய பரவையென்பவளுடைய இருதனத்தின்மேல் வேது கொ ண்டு கலவிசெய்யுநெறியை இச்சித்து, திருமாலும், பிரமதேவனும் முற்காலத்தில் தொடராவொண்ணாத ஒளியுருவனும், எல்லாரும் எதை க்கொண்டும் அறிதற்கருமையாய் எவ்விடத்தும் வியாபித்திருக்கிற பெரும்பொருளும் ஆகிய சிவபெருமானை மிகுந்த இருளையுடைய

இராக்காலத்தில் அவளிடத்திற்போய்மீண்டுவந்து, மீட்டும்போம் படித் தூதுகொண்டவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனாரைத்துதித்து, எம்மை ஆட்கொள்ளக்கடவீரென்றுசொல்லி அவருடைய திருவடி யையடைந்து வணங்குவோம் யாம். எ-று. (கஉ)

சுரியல்-பெண்மயிர். துணை-இரண்டு. வெளி-ஒளி. இருளினும் வெளியினும் என்புழி, வெளி ஒளியெனப் பொருள்படுதல் காண்க. வெளி சிதாகாயரூபி எனினும் அமையும். "பரவைதன்புலவி தீர்ப் பான் கழுதுகண்படுக்கும்பாதி யிரவினிற் றூதுகொண்டோன்" என ஆன்றோர் கூறுதற்கேற்ப இவரும் "நெருங்கு மிருளிரவின் மேவத் தூதுகொண்டார்" என்றார். மாலும் விரிஞ்சனும் முன்தொ டராத என்றது அவ்விருவர் மாறுபாட்டை நீக்குதற்கு நெருப்புப் பொருப்பாய் நிமிர்ந்தவரலாற்றைக் குறித்தது. தீர, வேதுகொண்டு, விரும்பி, தூதுகொண்டார் என இயையும். விழைதல் கலவி செய் தல். (புணர்தல்.) வேதுகொள்ளல் ஒற்றடங்கொள்ளல். என்பான் செயப்பாட்டு வினைப்பெயர். இறைவனைத்தூதுகொண்டார்க்கு எம் போலியரை ஆட்கோடல்சால எளிதாமெனஉட்கொண்டு, வெளியை பொருளைத் தூதுகொண்டார் தமை எமையாட் கொள்வீ ரென்று சொல்லியவர்பதம் புல்லித்தொழுதல் செய்வாம் என்றார்.

வெளியை, பொருளை என்னும் இரண்டனுருபுகள் தூது கொ ண்டார்என்னும் வினைகொண்டன. எம்மை என்னும் இரண்டனுருபு ஆட்கொள்வீர் என்னும் வினைகொண்டது.

மாணிக்கவாசகசுவாமிகள்.

செழியர்குலபதிகொடுத்தமாடுகொண்டு
சென்றுதிருப்பெருந்துறையிற்செறிந்தசம்புப்
பழிவிரவுபரித்திரள்கொண்டனைத்துமாறன்
பணித்திட்டார்க்கிரங்கியருள்பாடிப்போற்றி
வழிவழுதகிரணிலாமகுடமீதே
மதுரையமர்பரம்பரனைவந்திக்காகச்
செழிபெருகுபுனற்றரங்கவைகையாய்மண்
சுமப்பித்தார்பதந்தலைமேற்சுமத்தல்செய்வாம்.

இ-ள். பாண்டியர்குலத்திற்பிறந்த அரிமர்த்தநன் என்னும் அர சன் குதிரை கொள்ளக்கொடுத்த பொன்னைக்கொண்டுபோய்த்திருப்

பெருந்துறையில் யிருந்தபழிக்கிடமாகிய நரிப்பரிகளின் கூட்டத்தைக்கொண்டுவந்து பாண்டியன் தண்டித்ததனாலுண்டான துன்பத்துக் கிரங்கித் திருவருளைப்பாடி வணங்கி வந்தியாகிய செம்மனச் செல்வியென்னும் பிட்டு வாணிச்சியின்பொருட்டு வழிந்தோடுகின்ற அமிர்தகிரணங்களையுடைய பிறைச்சந்திரனையணிந்த சடாமகுடத்தின்மீது மதுரையில் எழுந்தருளிய சிவபெருமானாகிய ஸ்ரீ சோக்கலிங்கப்பெருமானைச் சுழிகண்மிகுந்தநீரையும் அலைகளையும் உடைய வைகையாற்றங்கரையில் மண்சுமக்கச் செய்தவராகிய ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளுடைய திருவடியை எமது சிரத்தின்மீது தாங்குவோம் யாம். எ-று. (கரு)

செழியர்-பாண்டியர். குலம்-வமிசம். பதி-அரசன். மாடு-பொன். சம்பு-நரி. வந்தி-மலடி. நாகம்-அலை. சென்று, அணைந்து, இரங்கி, பாடி, போற்றி, சுமப்பித்தார். எனவினை முடிபு செய்க. பரம்பரனை என்னும் இரண்டனுருபு சுமப்பித்தார் என்னும் வினை கொண்டது. "அக்கடுவிடத்தை யரனுக் கருள்வதென்றே மைக் கடலில் வைகலொழிவையை வளநாடு" என்னும் செய்யுளில் சிவபெருமானுக்கு நஞ்சளித்த கொடுமையைப்பொறாது கடலைவெறுத்து அதனோடு சங்கமம்செய்தலை யொழிந்தவையைநதிபோல, வழிய முதகிரண நிலாமகுடமீதே மதுரையமர் பரம்பரனை மண்சுமப்பித்தானை வெறுத்துக்கோடல். தமக்குக் கடமையாயிருக்க (அவரது) பதந்தலைமேற்சுமத்தல்செய்வாம் என்றதனால், இந்நூலாசிரியர்க்கு இறைவன் மண்சுமந்தமை உவப்புப்போலும். இறைவன் மண்சுமந்தமையால் யாம்பதம் சுமப்போம் என்றாராயிற்று.

சண்டேசுரநாயனார்.

மனாதிகளுக்கெட்டாதபரமானந்த
வாழ்வினையங்கோரிலிங்கமணலாற்கூப்பித்
தனாதிதயந்தனினின்றுந்தாபித்தான்பா
றழைத்தவன்பாலாட்டவந்துதடுக்கத்தாதை
யெனாதவன்றனிருபதமும்மழுவாற்றுண்டித்
திகழ்ந்தவனைப்பரபதத்துளிருத்தித்தானும்
பினாகியருளடைந்தவிறற்சண்டேசன்றன்
பிரசமலரிறைத்திறைஞ்சிப்பரசுவாமே.

இ-ள். அவ்விடத்து மணலால் ஒருலிங்கவடிவத்தைச் செய்து மனமுதலிய முக்கரணங்கட்கும் எட்டாதமேலான இன்பவாழ்வாகிய

சிவபெருமானைத் தமது இருதயத்தினின்றும் அந்தலிங்கத்தில் தாபித்துத் தமதுமிக்க அன்பினால் பசுவின்பாலைக்கொண்டு அபிஷேகஞ் செய்யக்கண்ட தந்தையானவர்வந்து தடுக்க, அவரைத் தந்தையென்று அன்புபாராட்டாமல் அவருடைய இரண்டுபாதங்களையும் மழுவாயுதத்தால் வெட்டிவைத்து அவரைமேலான சிவபதத்தில் இருத்தித் தானும் சிவபிரானது திருவருளையடைந்த வெற்றியையுடைய சண்டேசுரநாயனாரது திருவடியைத் தேன்பொருந்திய மலர்களைத் தூவி வணங்கிப்புகழ்வோம் யாம். எ-று. (கசு)

மனாதிகள்-மனமுதலியவைகள். அவைமனம், வாக்கு, காயம். என்னும் முக்கரணங்கள். இவைகட்கு எட்டாமையாவது மனத்துக்கு நினைக்கலாகாமையும், வாக்குக்குவாழ்த்தலாகாமையும், காயத்துக்கு வணங்கலாகாமையுமாம். பரமானந்தம்-பேரின்பம். அங்கு என்றது-ஆனிரைமேய்த்த விடத்தை. கூப்புதல் - குவித்தல். "தனாதிதயந் தனினின்றுந் தாபித்து." என்றதனால் இறைவன் இவரது இதயத்தில் இடையறாமற் குடிகொண்டிருத்தல் பெறப்பட்டது. ஆனகரச் சாரியைபெற்று ஆன் என நின்றது. மழு ஓர் ஆயுதவிசேடம். பரபதம் - மேலானபதவி. பினாகம் என்னும் வில்லையுடையாதலால், இறைவனைப்பினாகியென்றார். தாதை யிருதாளைத் துண்டித்திகழ்தல் தலையாய தீமையேயாயினும் அது சிவலிங்காராதனை பங்கத்தைப் பங்கப்படுத்தின பெரிதாகிய சிவபுண்ணியமாதலால், அத்தாதையைப் பரபதத்துளிருத்தித் தாமும் இறைவனருள் அடைதற்குரியராயினர் என்க. கூப்பி, வாழ்வினை, இதயந்தனினின்றுந் தாபித்து என இயையும். பிரசமலர் என்றது பேரரும்புகளை. இவற்றைப்போது எனவும் மொட்டு எனவுங்கூறுவர். "மொட்டறு மலர்பறித்திறைஞ்சி" என்றார் திருவாதவூரடிகளும்.

மெய்கண்டதேவநாயனார்.

அல்லாதபரசமயவலகைத்தேர்வின்
டகலவகல்புனற்பெண்ணையயல்சூழ்வெண்ணெய்ப்
பொல்லாதவிபமுகத்துப்புத்தேடன்பாற்
புனிதசிவாகமப்பொருண்மைபொருந்தவாய்ந்து
நில்லாதநிலையிதுமற்றென்றுமொன்றாய்
நிற்குநிலையிதுவெனமெய்ந்நெறிதேர்ந்தியாரும்
வெல்லாதசிவஞானபோதஞ்சொன்ன
மெய்கண்டான்சரணமுடிமீதுகொள்வாம்.

இ-ள். சைவசமய மல்லாத பிறசமயங்களாகிய கானற்சலமானது நீக்க அகன்ற நீரையுடைய பெண்ணை நதியானது பக்கத்தில் சூழப்பெற்ற திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி யிருக்கின்ற யானைமுகத்தையுடைய பொல்லாப்பிள்ளையாரிடத்தில் வழிபட்டுப் பரிசுத்தமாகிய சிவாகமங்களின் அர்த்தங்களைப் பொருத்தமாகவாராய்ந்து, நில்லாதநிலையிது நிலையிதன்றி எக்காலத்தும் ஒருபடியாய் நிற்கும் நிலையிது என்று உண்மையார்த்தத்தைத் தெளிந்துணர்ந்து, எவ்வகைப்பட்டாராலும் வெல்லவொண்ணாத சிவஞானபோதம் என்னும் வீட்டுநூலைத் திருவாய்மலர்ந்தருளிச்செய்த மெய்கண்டதேவ நாயனாருடைய திருவடிகளை எமது சிரத்தின்மேற் றரித்துக் கொள்வோம் யாம். எ-று. (௧௦)

அகல, ஆய்ந்து, தேர்ந்து, சொன்ன, மெய்கண்டான் சரணம் முடிமீது கொள்வாம் எனவினைமுடித்துக்கொள்க. அல்லாத - சைவசமயமல்லாத. பரசமயம்-வேறுசமயங்கள். அவை பௌத்தம், சைநம் முதலியவைகள். கானற்சலம் பேய்களுக்கு இரதமாதலால் அதனை அலகைத் தேர் என்றார். அலகை-பேய். தேர்-இரதம். "பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப் பேய்த்தேர் முகக்குறும் பேதை குணமாகாமே" என்றார் திருவாதவூரடிகள். "அலகைத் தேரி னலமருகானின் உலகப்பொய்வாழ்க்கையுடலையோம்பற்க." என்றார் திருவெண்காட்டடிகள். இதனை வடநூலார் பசாசரதம் என்பர். வெண்ணெய் - திருவெண்ணெய் நல்லூர். இபம்-யானை. புத்தேள்-தேவன். ஆகமம், பதிபசுபாசங்களின் இலக்கணங்களை விரிவாய்க் கூறும் நூல். இது இறைவன் திருவாக்காதலால் புனிதசிவாகமம் என்றார். பொருந்த - சுருதியுக்தி அநுபவங்களுக்கிணங்க. யாரும் வெல்லாத என்றது எச்சமயத்தாராலும் வென்று பூர்வபக்ஷஞ்செய்யப்படாத என்றபடி. சிவஞானபோதம்-வீட்டுநூல்களுள் முதனூல். இது சைவசித்தாந்தநூல்களுள் ஒன்று. சிவாகமப் பொருண்மை பொருந்தவாய்ந்து மெய்ந்நெறி தேர்ந்தோராதலால் இவர்க்கு மெய்கண்டார் என்னுஞ் சிறப்புத் திருநாமஞ் சூட்டலாயிற்று.

திருத்தொண்டர்.

முன்னடையவரியசிவமூர்த்திபெற்றோர்
முதலகிலத்தின்விரும்பிமுயலாநின்றோர்
பின்னடையவருமவர்கண்முதலாயுள்ள
பிள்ளையிளவெள்ளைமதிபிறங்குவேணி

மின்னடையுமணிமௌலிவேதகீதன்
வெண்ணீறுங்கண்டிகையுமெய்விடாமற்
றன்னடைநன்னெறிதம்மையடைந்துளார்க்குந்
திருத்தொண்டர்பெருந்தொண்டுதலைமேற்கொள்வாம்.

இ-ள். அடைதற்கரிய சிவமூர்த்தியை முன்னே யடைந்தவர்களும், பழமையாகிய இவ்வுலகத்தில் அச்சிவமூர்த்தியையடைய விரும்பி இப்போது முயல்கின்றவர்களும், அதனை இனி அடையவருவோர்களும் முதலாகவுள்ளவர்களும், இளமைபொருந்திய வெண்ணிறமுள்ள பிறைச்சந்திரன் பிரகாசிக்கின்ற சடாடவியாகிய மின்னற்கொடிகளாற் செய்யப்பட்ட அழகிய மகுடத்தையுடையவரும், வேதகீதத்தையுடையவரும் ஆகிய சிவபிரானது திருவெண்ணீறும் உருத்திராக்க மாலிகையும் திருமேனியை நீங்காதிருத்தலாகத் தாமடைந்துள்ள நன்னெறியைத் தம்மைவந்தடுத்தவர்களுக்கும் அருள் செய்கின்றவர்களும் ஆகிய திருத்தொண்டரது பெருமை பொருந்திய திருத்தொண்டினையாம் சிரமேற்கொள்வோம். எ-று. (௧௧)

பிறங்குதல்-விளங்குதல். வேணி-சடை. மௌலி-மகுடம். வேதகீதன்-வேதமாகிய திருப்பாட்டையுடையவன்; வேதமாகிய திருப்பாட்டினுல் புகழப்பட்டவன். கண்டிகை - உருத்திராக்கம். முதலாயுள்ள தொண்டர் எனவியையும். தொண்டர்க்குத் தொண்டின்மேல் விருப்பமாதலால், யாமும் அவர் திருவுள்ளத்துக்கு உவப்பாகத் தொண்டு செய்தலே எமக்குய்யு நெறியென்பார், தொண்டர்பெருந் தொண்டு தலைமேற்கொள்வாம் என்றார். சிவசின்னங்கள் பலவற்றுள்ளும் சிறந்தமைபற்றி வெண்ணீறுங் கண்டிகையும் என்றாராயினும் மற்றைச் சிவசின்னங்களுங் கொள்ளப்படும்.

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௧.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சேதுபுராணவசநம்.

நைமிசாரணியச்சிறப்பு.

நைமிசம் ஆரணியம் - நைமிசாரணியம். இது ஒரு சிறந்தவனம். முற்காலத்தில், மரீசி, அத்திரி, பிருகு, வசிட்டர், கிரது, அங்கிரசன், என்றுசொல்லப்பட்ட இவர்களுடைய வமிசத்திற்பிறந்தவர்களாகிய ஆறுவகையினரும், தாம்நிச்சலமாயிருந்து தவஞ்செய்தற்குத்தகுந்த இடத்தைக் காட்டவேண்டுமென்று பிரமதேவனைப் பிரார்த்திக்க, அவர், அவர்களுடைய பிரார்த்தனைக்கு மனமிரங்கி, ஒருமனோமய சக்கரத்தைச்சிருஷ்டித்து, அதனை உருட்டிவிட்டு, அவர்களை நோக்கி, நீங்கள் இந்தச்சக்கரத்தின்பின்னே தொடர்ந்து செல்லுங்கள், இது எவ்விடத்தில் நிற்குமோ அவ்விடம் உங்களுக்குத் தவஞ்செய்யத்தகுந்த இடமாகும் என்று நியமித்தார். அவ்வாறே அவர்கள் அந்தச் சக்கரத்தைப் பின்தொடர்ந்து போகும்போது, அது நெடுந்தூரம் வரைக்கும் உருண்டோடி, அதன்மேலுள்ள இருப்புக்கட்டானது கழலவே, தடைபட்டு நின்றுவிட்டது, சக்கரத்துக்கு நேமியென்னும்பெயர் உண்டாதலால் அந்தநேமிநின்ற இடம்நைமிசம் என்றும், அவ்விடம்வனமாயிருந்தலால் நைமிசாரணியம் என்றும் சொல்லப்படும். இது புராணப்பிரசித்தமான ஆரணியம். இதில் அநேக இருடிகள் நெடுங்காலமிருந்து தவஞ்செய்தலால் இதனை மகாபுண்ணியக்ஷேத்திரமென்று அறிஞர்கள் கொண்டாடுவார்கள். இவ்வாறன்றி, பிரமதேவன் தன்கையிலுள்ள தருப்பைப்புல்லினால் ஒருவளையம் உண்டாக்கி அதனையுருட்டிவிட, அது ஓடுகின்ற

இடமே நைமிசாரணியம் என்று சொல்லுவதும் உண்டு. இந்தவேறுபாடு புராணங்களில் காணப்படுகின்றது. இந்த நைமிசாரணியமானது, நான்குமுகங்களையுடைய பிரமதேவர்கள் ஒருகோடிபேர் பிறந்ததையும் இறந்ததையும் கண்டபெரிய தபோதனர்களுக்கு உறைவிடமாயுள்ளது. இந்தத்தபோதனர்களுடையதொகை, திருப்பாற்கடல்கடைந்த காலத்தில் அதிலுண்டான அமிர்தத்தை நாள்தோறும் புசித்துவாழ்வோராகிய தேவர்களுடைய தொகையினும் மிக்கதாயிருக்கும். குறைந்ததொகையுள்ள அந்தத்தேவர்களுக்கு இடமாயிருப்பதாகிய தேவலோகத்திலும், அதிகதொகையுள்ள இவ்விருடிகளுக்கு இடமாயிருப்பதாகிய இந்தநைமிசாரணியம் சிறந்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமோ; ஐம்பெருந்துன்பங்களையுடைய பிறப்புக்கு அஞ்சித் தன்னிடத்துவந்து அடைந்தவர்களை, சூரியன் உதித்துப் பிரகாசிக்கிற பகற்காலமும் சூரியன் அஸ்தமித்து மறைந்துபோகிற இராக்காலமும் என்று சொல்லப்பட்ட இரண்டும் இல்லாததாகிய அகண்ட சிற்பரம் பொருளாகிய சிவத்துடன் சேர்க்கின்ற செய்கையால் இந்த நைமிசாரணியம் அளவில்லாத கற்பகாலங்களைக் கடந்துள்ளது. யானைக்கூட்டம்முதலாகிய பெரியமிருகங்களின் சத்தத்தையும், பலதுறைகளையுடைய காட்டாறுகள் அலைகளோடுதாவியெழுகின்ற பெரியநீர்ப்பெருக்கின்சத்தத்தையும், நெருங்கிய மரங்களின்மேல் தவழ்கின்றமேகக் கூட்டத்தின் சத்தத்தையும், இந்தநைமிசாரணியமானது தன்னிடத்தில் நீங்காதிருக்கிறவேத முழக்கத்தைக்கொண்டு அடக்குகின்ற பெருமையையுடையது.

மேன்மேலும் பெருகுகின்றகாமம் வெகுளி மயக்கம் என்றுசொல்லப்பட்ட முக்குற்றங்களையும், இறப்புப்பிறப்பு என்று சொல்லப்பட்ட இரண்டினையும், தன்னிடத்தில் வந்தடைந்தவர்களுக்குக்கொடாத உறுதிப்பாட்டினையுடையதாதலால், இந்தநைமிசாரணியமானது எல்லாவுலகத்தினரோடும்

போர்செய்கின்ற மன்மதனும் யமனும் தரிசநஞ் செய்திரியாதது. உவர்ச்சுவையுள்ள கடல்வற்றினாலும், மேகங்கள் மழைபெய்யாமல்வறுமையடைந்தாலும், தான் வறுமையடையாமல் எல்லாவளங்களையும் பூர்ணமாகப் பெற்றிருக்கும். அன்றியும் காமமுதலியகுற்றங்களில்லாத சிறந்தமாதவர்களுடைய நித்திய நைமித்திகாதிகளுக்கு ஒருகுறைவு நேரிடாதவண்ணம் நீர்வளமுதலியவெல்லாவளங்களாலும்ஒப்பற்றஆதாரமாயிருக்கும். ஆதலால் இந்த நைமிசாரணியமானது இந்தப்பூமியிலுள்ளார்க்குப் பெருமைபொருந்திய நவநிதிகளை நிகர்த்திருக்கிறது. தேனைஆராய்கின்ற வண்டுக்கூட்டங்களும், கிளிக்கூட்டங்களும், குயிற்கூட்டங்களும், தபோதநர்கள்தங்குகிறசாலைகளைச்சூழ்ந்து ஒலிக்கும் ஒலியானது, அழகுக்குப் பிறப்பிடமான மன்மதனுடைய கரும்புவில்லுக்கு நாணாகியும், அவனுக்குவாகநமாகியும், திருச்சின்னமாகியும் அலைத்த எங்கள் பாவத்தையொழித்து எங்களை ஆண்டருளவேண்டுமென்று தோத்திரம் பண்ணுவதை நிகர்த்திருக்கும். அவ்விடத்துள்ள தபோதநர்கள் தமக்கெதிரே வந்திருக்கிற பிரமதேவன் முதலானதேவர்களுக்கு, அவர்கள் முன்னோர்கள் பெருமையுடனே முற்காலத்தி லிருந்ததையும், அவர்கள்நடந்த நல்லநடையையும் சொல்லுவதைக்கேட்டு, அச்சொற்களைப் பாடம்செய்துகொண்டு. அவ்வாறுசுகவேபேசுகின்ற நாகணவாய்ப்புட்களும் இறந்தகாலத்தை அறிந்திருப்பது போன்றிருக்கும். நீட்சியையுடைய பாம்புகள் பகையில்லாமல் மயில்களோடுகூடி ஆடிக்கொண்டே, வேதசாத்திரங்களையறிந்த தபோதநர்களுடைய சாலைகளுக் கெதிரில்வருதல், அந்தத்தபோதநர் தாம்செய்யும் விரதரூபமாகியதவத்தினால் ஐம்புலப்பகையை யொழித்துவிட்டார்கள் என்னும்பொருளை எதிரேநின்றுகாட்டுஞ் செய்கையை நிகர்த்திருக்கும். அந்தநைமிசாரணியத்தில் சஞ்சரிக்கிற கரிய எருமைக்கடாக்களின் கூட்டங்கள், நமக்கிது தகுந்த காரியமல்லவென்று நினைக்காமல் அங்குள்ள அருமையாகிய தபோதநர்மீது, அநேகந்தாம் படையெடுத்துவந்து அவர்

களுக்குத் தோற்றோடின காலர்கள் விட்டுப்போன பல்வாகநங்களை நிகர்த்திருக்கும். வண்டுகள்வேதவொலிபோலச் சூழ்ந்தொலிக்க, அவ்விடத்துள்ள முனிப்புதல்வர்கள், நெருப்புப்போலச்சிவந்து மொட்டுவிரிந்து அழகாயிருக்கிற செங்காந்தட் பூங்கொத்தின்மேல், பலாசங்களைத் தேனெய்யாகக்கொண்டு, நீண்டமாவிலைச் சுருவினால்வார்த்து யாகஞ்செய்து விளையாடுகிற இடங்களே எங்கும் விளங்கிக்கொண்டிருக்கும். ஐம்புலவாசையை வென்ற தபோதநர் வசிக்கிற பர்ணசாலைகளின்மேற்படர்ந்து அசையாநின்றமெல்லியகொடிகள், அவர்கள் செய்கிறயாகாக்கினியின் கிலேசத்தினாலும், அவர்களுடைய கருணைநோக்கத்தாலும், பலமுறைவாடுவதும் தளிர்ப்பதுமாயிருக்கும்.

துதிக்கையினையுடைய யானையும், சிங்கமுமாகிய இவைகள், தபோதநர்வாழு மிடங்களிலிருந்தும், தமக்கு அநாதியாயுள்ள பகைநீங்கி ஒருதுறையில் நீர்பருகும். இதனோக்குமிடத்தில், உபசாந்தியடைந்த மனத்தையுடைய மேலோர் கொண்ட கோட்பாட்டை மூன்றுலகத்தாரும் கொள்வார்கள் என்கிற அறிஞர்வார்த்தை விளங்காநிற்கும். அங்குள்ளமுனிவர்கள் பலவகையாகிய பூஞ்செடிகளையும் கொடிகளையும் வளர்ப்பதனோடு முல்லைக்கொடிகளுக்கும் நீர்வார்த்துவளர்க்குஞ் செய்கையை நோக்குமிடத்து, பசுகாட்டுக்களைப்பாராட்டாத சமநிலையானது அவர்மனதிற்பதிந் திருப்பதை வெளிப்படுத்துவதுபோலிருக்கும். அந்தவனத்திலுள்ள பிரமசாரிகள் கூட்டமோ, இல்லறத்தார்கூட்டமோ, வானப்பிரஸ்தர்களுடையகூட்டமோ, முற்றத்துறந்த சந்நியாசிகள் கூட்டமோ, யாதோபெரிதென்று கண்டோர்சொல்லும்படி அந்த நைமிசவனம் சிறந்திருக்கும்.

அந்தவனத்தின் ஒருபக்கத்தில் யாகம்செய்கிற ஓமகுண்டங்களிருக்கும், மற்றொருபக்கம் யோகீசுவரர்கள் யோகஞ்செய்யுமிடமாயிருக்கும். மற்றொருபக்கம் ஆசிரமமுதலிய

நூல்களை ஆராய்கிற இடமாயிருக்கும், மற்றொருபக்கம்யோகநிஷ்டாபரர்திருவருளோடு இரண்டறக்கலக்கும்படியான இடமாயிருக்கும். அழகான தண்டகாரணியம், பதரி காசிரமம், முதலான இடங்களிலிருந்து, தம்முடையமனைவி மக்களோடு அரிய தபோதனராகிய உறவினர், கூட்டங் கூட்டமாய் விருந்தாகவந்து மீண்டுபோகின்றதனாலுண்டாகிற ஓசையே நாள்தோறும் அவ்வனத்தில் மிகுந்திருக்கும். அழகாகிய அந்த நைமிசவனத்தில் வாழ்கின்ற பெருந்தவத்தினையுடைய முனிவர்கள், ஆன்மாவில் மறைந்திருக்கும் ஆணவமலத்தைப்போல மண்ணில் மறைந்திருக்கிறதென்று கிடைத்தற்கரிய கிழங்குகளைத் தோண்டியெடுப்பதும், துன்பஞ்செய்யும்மனத்தைப்போலக் கிளைத்திருக்கிறதென்று செழுமையாகிய சமித்தையொடிப்பதும், ஊழ்வினை முதிர்ந்துகனிந்தாற்போல முதிர்ந்து கனிந்திருக்கின்றனவென்று அருமையானகனிகளைப்பறிப்பதுமாயிருப்பார்கள், நன்மை தீமைகளையும், பகை உறவுகளையும், இன்பதுன்பங்களையும் நாடாதமுனிவர்கள், தேவர்களும்சென்று காண்பதற்கரிய சிவபிரானை, உயர்ந்ததிருவருட்சத்தியானது உணர்த்த, தம்மனத்திற்பொருந்திய அன்போடு கண்டு, அத்திருவருளோடு இரண்டறக்கலந்து, விளங்காநின்ற சித்திரப்பாவைபோல எப்பொழுதும் அசைவற்றிருப்பார்களாகையால், நைமிசவனத்தில் முனிவர்கள் இல்லையோ வென்று கண்டோர் எண்ணவும் சொல்லவும் தகுதியானதாயிருக்கும். மனமொழிமெய்கள் என்கிறயாவும் சிவபிரானுடைய உடைமையென்று அம்முனிவருணர்ந்திருந்தாலும், சாருவாகன் முதலானோருடைய மதங்களைச்சிலர் எடுத்துச்சொல்ல, வேறுசிலர்வந்து அந்த மதங்களைமறுக்கும் நூல்களையெடுத்துச்சொல்ல, கண்டோர்களுக்கு இந்தநைமிசவனத்தில், வைதிகர்கள் சைவர்கள் என்பவர்களேயன்றி, எல்லா மதத்தர்களும் தங்கியிருப்பார்களோ என்கிறசந்தேகம் உண்டாகும். பெருந்தவத்தோராகியமுனிவர் நீராடி அந்தநீர்புலரத்தடாகக்கரைகளில்நிற்கையில், அவருடையசடைகளின்நுனியிலிருந்து

வடிந்து வீழ்கின்ற நீர்த்துளிகளை நோக்குமிடத்தில்யோகிகள் மூலாதாரத்தில் மூண்டெரிகின்ற மூலாக்கினியைத் தமது முயற்சியால் மேலெழுப்பி, இடை பிங்கலைகளையடைத்து, சுழுமுனையைத் திறந்தபோது, சந்திரமண்டலத்திலிருந்து அமுததாரைகள் சிந்துவனபோலிருக்கும். முறுக்கவிழ்ந்து விரிந்தசெந்தாமரை மலர்போலச் செந்நிறமாயெரிகின்றயாகாக்கினிக்கெதிரில் நிலைபெற்றிருக்கிற மாதவர்களை நோக்குமிடத்தில், அந்தக்காட்சி செந்தாமரைமலர்மேல் வீற்றிருக்கின்ற எண்கண்ணனாகிய பலபிரமதேவர்களுடையகாட்சியை நிகர்த்திருக்கும். மிகவும் அருமையாகிய தவத்தை யல்லது வேறொன்றை விரும்பாதமுனிவர்களும் விரும்பிவாழ்கின்ற அந்தநைமிசாரணியத்தின் பெருமையை யெடுத்துப்பேசவல்லவர் யாருளர், ஒருவருமில்லை. அப்படிப்பட்ட பெருமையுள்ள புண்ணியக்ஷேத்திரமாகிய அந்த நைமிசாரணியத்தில்; ஸ்ரீ வேதவியாசபகவானுடைய மாணாக்கராகிய சூதபௌராணிகர், சௌநகாதிகளாகிய இருபத்தாறாயிர முனிவர்களுக்கு அநேகமான தலமான்மியம், தீர்த்தமான்மியம், மூர்த்திமான்மியம் முதலியவற்றையெடுத்துச் சொல்வது வழக்கமாதலால் ஒருநாள் அந்தச்சௌநகாதி முனிவர்கள் சூதபௌராணிகரை வணங்கி, சுவாமி, தேவரீர் இதுவரையில் எங்களுக்குச்சொல்லிக்கொண்டுவந்த புண்ணியகதைகளுக்கு ஒரு எல்லையில்லை, அவற்றைக்கேட்டு மனங்களித்த எங்களுக்கு ஸ்ரீ ரகுநாதனால் கட்டப்பட்ட திருவணையாகிய சேதுவின் மகிமையையும், அங்குள்ள தீர்த்தங்களின்மகிமையையும், அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமநாதனென்கிற மூர்த்தியின் மகிமையையும் கேட்டுக்களிக்க வேண்டுமென்கிற ஆசையுள்ளிருப்பதனால் அந்தப்புண்ணிய க்ஷேத்திரமாகிய சேதுவின் மான்மியத்தை அடியோங்களுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, சூதமுனிவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிரங்கி, அவர்களை நோக்கி, நான் இந்தக்கதையை இதற்கு

முன்னே ஒருவருக்கும்சொல்லவில்லை, இப்பொழுது நீங்கள் மிகவும் ஆசையோடுகேட்டுக்கொள்ளுவதனால் உங்களுக்குச் சொல்லுகிறேன், சாவதான சித்தத்தையுடையவர்களாய்க் கேளுங்கள் என்றுசொல்லி, தமது ஆசிரியராகிய ஸ்ரீவேதவியாசபகவானுடைய திருவடிகளைத்தியானித்துக்கொண்டு சொல்லத் தொடங்கினார்.

திருநாட்டுச் சிறப்பு.

இனிமைபெற்ற தமிழ்மொழிக்கெல்லை யிரண்டி லொன்று தன்னிடத்ததாக நிலைபெற்றுநின்ற வேங்கடமலைக்குத் தென்பாலில், உலகத்திற்கபாயநீக்க இறைவன் ஆணையால் வந்த அகத்தியர் வீற்றிருந்தருளிய பொதியமலையினின்றுந் தோன்றின பொருநையாறென்னுந் தாம்பிரபருணிநதியால்மிகு வளம்பெற்ற திருப்பாண்டிநாட்டிலே, திருவருள் மிகுதியால் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய நினைத்தற்கரிய பரம்பரனை, அங்கயற்கண்ணம்மையொடு நெருங்கிச்சூழ்ந்து, மலரினையிட்டு வழிபட்டுத் தேவர்கள் இடம்பெறாது புறத்தேநிற்க, மாதர்கள் ஆடவருடன் தொழத்தக்கதும், ஞானசொரூபியாகிய உமாதேவியை மூன்றுதனங்களையுடைய தடாதகைப்பிராட்டியாராகத் தந்து, அளவிடற்கரிய ஆனந்தவடிவாகிய சிவபிரான் பாண்டியனாகி முடிதரித்து அரசினையாண்டுவரச்செய்து, சங்கப்புலவரெதிர்நின்று சங்கேதமொழிந்து சிறக்கத்தந்ததும், என்னாலும் பிறராலும் அளவிடுதற்கரிய புகழினையுடையதுமாகிய மதுரையும்; அற்பமாகிய சமணசமயத்தவர் ஏவலால் பாண்டியர் பெருமானாகிய கூன்பாண்டியன்மீது படர்ந்த கொடியசுரப்பிணி தணியத் திருஞானசம்பந்தசுவாமிகள் எழுந்தருளிய திருமடம்விளங்குங் காட்சியையுடையதும், அலையாற்பொன்னைக் கொழித்துவரும் வைகையாற்றின்வடபாகத்துள்ளதுமாகிய திரு ஆப்பனூரும்; உமாதேவியின் திருமுலைப் பாலருந்தியவராகிய அருளுடைய பிள்ளையார் பொய்யாகிய சமணமதத்தாரோடு வாது

குறித்தெழுதிவிட்ட திருப்பாசுரமெதிரேறி வரப்பெற்றதும், மாதர்கள் ஆடவருடன் நீர்மூழ்கிவிளையாட்டயர்வதுமாகிய திருவேடகமும்; தாமரைத்தடாகத்தும், சோலையிடத்தும், பளிக்கறை நெருங்கிய இடங்களிலும், மாதரும் ஆடவரும் போல, மதவெள்ளம்பெருக இளம்பிடிகளும் களிறுகளும் விளையாடுகின்ற கொடுங்குன்றமும்; முத்தினைச் சொரியும் சங்குகள்தவழ்ந்து திரண்டுமாளிகை முற்றங்களின் எந்தப் பக்கத்தும்மாதர் அடிபெயர்த்துவைக்க இடமில்லாமல் மந்தரமலையாகிய மத்திட்டுக்கடைந்த பெரிய திருப்பாற்கடல் போலத் தாமரைத்தடாகங்கள்சூழ்ந்த புத்தூருமே; பிறப்பிறப்பில்லாதவனும், நினைப்புமறப்பில்லாதவனும், வேறொன்றோடும் கூடுதலுடன் பிரிதலற்றவனும், குணக்குறியற்றவனும், ஆறுமுகப்பிரானையும் ஆனைமுகப் பிரானையும் அளித்தருளினவனும் ஆகிய சிவபரஞ்சுடரைவழிபட்டுத் தேவர்கள் தங்கள்வறுமை நீங்கப்பெற்ற திருவாடானையும்; மனுநிகளுக் கெட்டாததாய் அகண்ட சுடர்ப்பிழம்பாய், பேரின்பமயமாய், யாவராலும் நினைக்க அரிதாகி, அவர் உள்ளம்புகும் ஒன்றை திருத்தொண்டர் கூட்டமாகிய வாயிலாற்பெறுவோர் பெற வழங்கும் பெருந்தன்மையால், யாவரும்போற்றும் திருப்புனவாயிலும்; தேவர்கள் உயர்வாகிய மாளிகையாகிய சோபானங்களின் வழியேவந்து கடல்சூழ்ந்த இவ்வுலகத்தைச் சேர்ந்து, தந்திடமுவிற்புகுந்து நீராடித் தலையால்வணங்கும் ஞானத்தையுடைய முனிவர் மனத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் சிவபிரானது திருக்காளப்பேரும்; கோவணமுங் கீளும்பெற்றுத் திருவெண்ணீற்றினிடத் தன்புடையார் கூட்டங் கூட்டமாய், வசிக்கும் மடாலயங்கள் மிகநெருங்கி அளவில்லாதகாட்சியைப்பெற்று, செந்நிறவொளிதங்கிய சடைமுடியை யுடையார் புகழ்கூறுமொலி தேவர்கள் காதிற்றுளைக்கப்படும் திருப்பூவணமும்; பருமையாகிய சுழியிலேமிதக்கும் யானைமிலத்திற் செல்லப்பாய்ந்தடரும் ஆழமாகிய ஆற்றுச்சுழி விசைப்பட, வளையலணிந்த மாதருந்திகிட்டத்து ரோமவரிசையைக் காட்

டும் கங்கையாறுபுனைந்த சடைமுடியையுடைய இறைவன் வாழுந் திருச்சுழியலும்; தாரகனும் அவனுக்கு முன்னவனும் பெற்றவரங்கெட்டழிய வேலேவிய மயில்வாகனக் கடவுளாகிய இளையபிள்ளையார், வள்ளிநாயகியாரைத் திருமணஞ்செய்வதற்கு முன்பு தெய்வகுஞ்சரியைத் திருமணஞ் செய்துகொண்ட திருப்பரங்குன்றமும்; வானோர்கடல் கடைந்தபொழுது ஆலாலவிடந்தோன்ற வருந்துவதுகண்டு, அதனையுண்டு அவர்களைக் காத்தருளியமூர்த்தியும், சனகாதிநால்வருக்கும் வேதாகமமுடிவாகிய தத்துவப்பொருளைக் கல்லாலின் நீழலிலெழுந்தருளியிருந்து சொல்லாமற் சொன்னவனுமாகிய சிவபெருமான் எழுந்தருளிய திருக்குற்றாலமும் திருக்குறும்பலாவும்; செந்தீயினிறம்படைத்த தேமாங்கனியுடைந்த செந்தேன் மணக்கும் வாழைச்சோலையையுடைய பாண்டிநாட்டணியை விளக்குந்தன்மையதாகி, பிரமனாலும் அளவிடற்கரியதாய், வேயீன்ற முத்தம் ஒளிவிட்டெறிக்கும் திருநெல்வேலிப்பதியும், ஆகிய பதினான்கு திருப்பதிகளையும் தன்னிடத்திற்கொண்ட தமிழ்நாடு உலகிற் சிறந்திருக்கும்.

இந்நாட்டில், தமிழ்ச்சங்க மூன்றுமிருந்தன; அன்றியும் எம்மிறைவனே பாண்டியனாய் மகுடஞ்சூட விரும்பினன், தென்றிசையிலுள்ளநாடு தென்னாடாயினும், அழகுடையநாடென்னும் பொருள்படுதலால் இந்தத்தமிழ்நாட்டையுணர்த்துவதாகிய தென்னாடு என்னுஞ்சொல்லே இந்நாட்டின் வளத்தைத்தெரிவிக்கும். கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில், எம்மால் புகழப்பட்ட மதுரைமுதலாகிய திருப்பதிகளை யுடையதும், பொருநையாறு சூழ்ந்ததும் ஆகிய தமிழ்நாட்டின் சிறப்பைத் தொகுத்துச் சொல்லினேம், இனிவகுத்துச் சொல்வோம். அஃதென்னை யெனின்:—கொடைக்குணம் மீக்கொண்டு தம்மைவிடாதிருப்பதினாலே கைம்மாறெவ்வளவுமெதிர்நோக்காது வரையாதளிக்கும் வள்ளலைப்போல வெண்மைநிறம்பொருந்திய மேகக்கூட்டங்கள் ஒருங்குசேர்ந்து, கடலிற்

படிந்து, அதிலுள்ள சலத்தையருந்தி, அக்கடல் வண்ணமாகக்கறுத்து, மீண்டும் ஆகாய வீதியாகவந்து, பூமியிலுள்ளவுயிர்க்கூட்டங்கள்சோர்வடைந்திருப்பதைக்காண்பதுபோல, மின்னலாகிய விளக்கையேந்தி, கோடையரசனை யதட்டிச் சீறிவைவதுபோ லிடிமுழக்கஞ்செய்து, வானவில்லை வளைத்துப் பலவித ஆயுதங்களைப் பிரயோகித்ததை யொப்பத்திசைகளெங்கும்பரவி, தவசிரேஷ்டரான அகத்திய முனிவரிருக்கையெனப் பலராலுந்துதிக்கும் மகிமையினையுடைய பொதிகைமலையாகிய யானையைவளைந்து, போர்க்களத்தில்சுத்தவீரன் விடும் சரமாரியைப்போல நீர்த்தாரைகளைப்பொழிந்தன. அதனால் பெருகியவெள்ளம் அம்மலையிலுள்ள நவமணிகள்முதலிய சகலவிழுப்பொருள்களையும் வாரிக்கொண்டு, அதன்மேலிருக்கும் நெருங்கியசந்தனச்சோலைகளின் வேர்களைக்கல்லிப் பொலிவுற்று, பொருநைநதியிற்சேர்ந்து; அதிலடங்கொள்ளாமல் கரைபுரண்டு, பெரிய அணைகளையுடைத்து, சமுத்திரத்தை நோக்கிச் செல்லுகையில், வழியெதிர்ப்பட்ட மிருகங்களையுருட்டிக்கொண்டும், செங்காந்தட்புட்பங்களை வேங்கைமரத்தின்மேல் சேர்த்தும், வேங்கைப்புட்பங்களை வெண்காந்தட்கொடிமேல்சேர்த்தும், கொடிச்செடிகளை மரங்களின்மேல்சேர்த்தும்; இங்ஙனந் தாறுமாறுகச்செய்து, பெரியவிருட்சங்களை வேருடனேகல்லிச்சாயாமல் அடித்துக்கொண்டுபோவதினால் அவற்றிலுள்ள பறவைகள் ஓடிப்போகாமல் நித்தியப்படி கூடாடிக்கொண்டிருக்கவும், சந்தனமரங்கள் பொதிகைமலைப்பாறைகளில் உராய்ந்துதேய்ந்து வெள்ளத்துடன் கலந்து குழம்பாகிப்பாய அதில்தோயும் மனிதர்களுடைய தேகத்தில் படிந்த சந்தனச் சேறுபோகும்வண்ண மழுந்தத் தேய்த்துக் கழுவிலமேயென்று கரையேறுமல்மீளவும் குளிக்கவும், மலைபடுதிரவியங்களை வரிசைவரிசையாக மாலையைப் போல இருபக்கங்களிலும் ஒதுக்கியும், பலவாய்க்கால்வழியாகவும் பலதிக்கிலும் சென்று வயல்கள்முழுவதிலும் பரவி உழவர்களைப் பூரிக்கச்செய்யும்.

பொருநைநதி குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தலாகிய ஐந்திணைகளின் வழியாகச்சென்று, அவ்வவற்றுள்ள திரவியங்களைக் கிரகித்துச் சமுத்திரத்திற்கலப்பது, குறிஞ்சி நிலப்பெண் பொருநைநதியாகிய கன்னிகையை வருணனுக்கு விவாகஞ்செய்துகொடுப்பதை யொத்திருக்கும்.

இவ்வாறாக வெள்ளம்பாயும் ஆரவாரமும், அதிலுற்பத்தியாகுஞ் சங்கின்கூட்டங்களினுடைய வோசையும், உழவர்கள் கொண்டாட்ட வோசையும், உழுங் கால் நடைகளுடைய கோலாகலமும், பட்சிகளின் ஓசையும் வலிமை பொருந்திய கடலின் முழக்கத்தை யடக்கியவாம்.

மள்ளர்கள் எருமைக்கடாக்களின்மேல் *அழகியபெரிய நுகத்தடிகளைப்பூட்டி, வைரத்திறற்செய்த கலப்பைகளைத் தாங்கிச்சென்று, பூமியைப்பிளக்கத் திருமாலெடுத்தவராகாவதாரமும் அதிசயப்படும்படியாக வுழும்போது பேர்க்கப்படும் செம்பொற்கட்டிகளையும் சாலின்வழியிற்கிடக்குஞ்சங்குகளையுமெடுத்தெறிந்து; இனிமையாகியஇராகத்துடன்தேவேந்திரனைப்புகழ்ந்துபாடி, சேறுபழமைப்பட, நாற்றங்காலிற் செந்நெல்லை விதைத்து, அதுமுளைகிளம்பும் பக்குவமறிந்து, தாய்மார்குழந்தைகளுக்குப்பால்வேண்டுங்காலமறிந்தூட்டுவதையும் வேண்டாக்காலந்தெரிந்து நிவர்த்திப்பதையும்போல, வேண்டுங்காலத்தில் நீர்பாய்ச்சியும்வேண்டாக்காலத்தில் நீரைவடித்தும்வர, அப்பயிர் நாளுக்குநாள் சகல மேம்பாடுமுள்ள செல்வக்குழந்தைகள் போலவளர்ந்து, முன்வெண்ணிறமாகிப் பின்பு பசந்து தளிர்த்து வருவதைநோக்கி, வாணிபர் முதலைக் கையில்வைத்துக்கொண்டு இலாபங்கிடைக்கும் வழியைத்தேடிச் செல்வதுபோல வேறுகழனிகளில் இந்நாற்றை நட்டு இலாபமடையக்கருதி, நாற்றுகளைப்பறித்து, சத்துருக்களின் முடிகளைப் பாண்டியன்கொணர்ந்து குவிப்பதுபோல அந்நாற்றுமுடிகளை யிடமில்லாமலெங்குநிரப்பி, கழனிகளிற் சேடையுழுது, பரம்படித்து, அண்டைகழித்து, பக்குவப்படுத்த,

கடைசியர் பலபல களியாடல்களுடன் அந்நாற்றுகளைக்கழனிகடோறும் வரிசையினொழுங்குபெற நடவுசெய்து, துன்மார்க்கர் மானிட வுருவங்கொண்டு அதேயுருவம் பொருந்திய சன்மார்க்கருடன் கலந்திருந்து அவருக்குத் தீங்கிழைப்பது போல, தழைத்தோங்கி வரும்பயிர்களுக்கு விரோதமாயவற்றுடன்கூட அடர்ந்துவளர்ந்து அவற்றின் வளப்பத்தைக் கெடுக்கும்புல், கருநெய்தல், குவளை, தாமரை, அல்லிமுதலிய பலகளைகளைத் தலைவரோவலர்உழத்தியர் வெகு கோலாகலத்துடன் களைந்தெறிந்து, பயிர்களைக்காக்கவேண்டிய முறைமைப்படி காத்துவர, அந்தப்பயிர்கள் தமக்குச் சத்துருவாயிருந்த களைகள் நீங்குதலும், ஒருவனைத்தொடர்ந்த பெரும்பாவந்தொலைந்தவுடனே அவன்செய்திருந்த நல்வினையானது அவனுக்குப் பயனைத்தருவதுபோல, பசுமையாகிய சுருள்விரித்து, தாம்கொண்டிருந்த கருவை வெளிப்படுத்தி, கதிர்த் தொகைகளையீன்று, நாளுக்குநாள் விருத்தியடைந்து, சாக்கியர்போலத் தலைநிமிர்ந்து, ஆளுடையபிள்ளையாரோடு வாதுசெய்துதோல்வியடைந்தபிறகு, அவர்கள், பிள்ளையாரை வணக்கும்பொருட்டுத் தலைவளைத்தாற்போல, நெற்பொறையால் தலைசாய்ந்தன, அவைமுதிர்ந்து தலைசாய்ந்த பக்குவமறிந்து, மள்ளர்கள் அரிவாள்கொண்டு செந்நெல்லை அரிந்து, அரிபரப்பி, சிவபெருமான் வளைக்காத பலமேருமலைகள்போலப் பலபோர்கள்செய்து, அவைகளை, இந்திரன் மலைகளைச்சிறகரிந்து வீழ்த்திறற்போல இரண்டுபக்கங்களிலுஞ்சரித்துவீழ்த்தி, கொற்கைவேந்தன் மேகங்களைவிலங்கிட்டதுபோலக் கரிய எருமைக்கடாக்களைப்பிணித்து, வளைவித்துத்துவைப்பித்து, வைக்கோலை உதறியெறிந்து, குற்றத்தையும் குணத்தையும் வேறுபிரித்தறியும் விவேகிகள்போலக் காற்றுவரும்போது அவற்றைத் தூற்றி, ஆகாயத்தை அளாவும்படி உயரப்போட்ட நெற்றிரளின் பொலிக்கட்டங்கள் எவ்விடத்திலும்நெருங்கி நிறைந்தன. பிறகு அவற்றைக்கலைத்தெடுத்து, ஆறிலொருபங்கு அரசனுக்குக்கொடுத்து, மற்ற ஐந்துபங்குகளை, தெய்வத்துக்கொரு

பங்கும், தென்புலத்தார்க்கொருபங்கும், விருந்தினருக்கொரு பங்கும், உறவினருக்கொருபங்கும், தனக்கொரு பங்குமாக உபயோகித்துப் பெருங்குடிகளாய் வாழ்வோருக்கு உறைவிடமாயுள்ள பலவூர்கள் அந்தப்பாண்டிநாட்டிலுண்டு. இப்படிப்பட்ட பாண்டிநாட்டின் பெருஞ்சிறப்பானது ஆயிரநாக்குகளுள்ள ஆதிசேடன்சொல்லி, ஆயிரங்கைகளுள்ளவாணனெழுதினாலும், அவர்களுடைய சொல்லுக்கும் எழுத்துக்கும் அடங்காது; ஆதலால் அதை எமதறிவிற்குப் புலப்பட்டவரைக்கும் ஒருவாறு சுருக்கிச்சொன்னோம். இனி இந்நாட்டில், தேவர்கள் அமுதவுண்டியில்லாமல் பசித்துவந்தடைந்தாலும் அவர்களைத் தாங்கும்படியான செல்வப்பெருக்கினால் உயர்ந்துள்ளசேதுவில், அலைகளையுடைய சமுத்திரங்களால் சூழப்பட்ட கந்தமாதனமலையின்சிறப்பை, சிவபெருமானது திருவருளால் ஒருவாறு சுருக்கிச்சொல்லுவோம்; கேளுங்கள் சௌநகாதி முனிவர்களேயென்று சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார்.

கந்தமாதனச் சிறப்பு.

அந்தப்பாண்டிநாட்டில், கந்தமாதனம் என்னும் ஒருமலையுண்டு, அது, அழகிற்சிறந்த ஸ்ரீராமமூர்த்தியானவர், முற்காலத்தில், இராமநாதன் என்னும்பெயருள்ள சிவபெருமானைப் பிரதிஷ்டைசெய்து அருச்சித்துவணங்கின எல்லையாகும். இந்தமலையின்மேல் மழைபொழியவரும் மேகக்கூட்டங்களைக் கலைக்கவரும் வாடைக்காற்றினால் அந்தமேகக்கூட்டங்கள் இந்தமலையைநீங்கிக் குமுறிக்கொண்டு வெகுதூரம்போவதை நோக்குமிடத்தில், ஆலாலவிஷத்தை யுண்டருளின சிவபெருமானது திருவருளால், ஸ்ரீராமமூர்த்திக்கு இராவணசங்காரத்தால் நேரிட்டபாதகம் தொலைந்தோடுவதை நிகர்த்திருக்கும். மேகக்கூட்டங்கள் ஆகாயத்திலெழும்பி, மின்னலை விரித்து, இந்தமலையைமூடி இதில் ஒடுங்குவதை நோக்குமிடத்தில், நடுராத்திரியிற் சஞ்சரிக்கிற யோகினிதேவியின் பரி

சாரகர்களாகிய கொள்ளிவாய்ப் பசாசங்களின் கூட்டங்கள் தன்மையைக்கொண்ட வீடுகளின்முற்றங்களில் உலாவுதலை நிகர்த்திருக்கும். இந்தமலையின்மேல்நெருங்கி வளர்ந்திருக்கிற மூங்கில்கள் தூண்களாக, அவற்றின்மேல்கரிய மேகங்கள் கவிந்திருக்கிறதை நோக்குமிடத்தில், ஸ்ரீராமமூர்த்தியானவர் முற்காலத்தில், சிவபெருமான் திருமேனியின்மீது வெயில்படாதிருக்கும்படி கரியதுகிலினாற் செய்யப்பட்டகூடாரங்கள் அமைத்திருப்பதை நிகர்த்திருக்கும். ஒளிபொருந்திய மின்னல்களோடுகூடி வெவ்வேறாகப் பற்பலமேகங்கள் பரவித்தோன்றுதலை நோக்குமிடத்தில், பிறவிகள்தோறும் சிவபெருமானது திருவுருவத்தை வணங்கிவழிபட்ட பல ஸ்ரீராமமூர்த்திகளின்கூட்டத்தை நிகர்த்திருக்கும். இந்தமலையின்மீதுள்ள யானைகளைநோக்கினால், இடித்தல், நீர்த்துளிகளை வெளிவிடத்திலும் இறைத்தல், பொடித்தலையுடைய துளிமழையைச் சொரிந்துலாவுதல், இவையாவுமிருந்தாலும், இதனிடத்தில் மின்னலொன்றில்லாமையால் இதுமேகத்தின் சாதிபேதமாயிருக்கலாமென்று அம்மலையடிவாரத்தி லிருப்பவர் பேசிக்கொள்வதற்குப் பொருத்தமாயிருக்கும். பலவகையாய்ப் பெருகிவருகிற நீர்வெள்ளப்பாம்புகள் அகப்பட்டு இந்தமலையின் கல்முதலியனவைகளைப் பற்றிக்கொண்டு தொங்குவதைநோக்கினவர், ஒலிக்கின்ற அருவியாறுகளிற்சில, ஆகாயத்திலிருந்து கீழேவிழாமலிருத்தற்குக்காரணம் யாதென்றுபேசிக்கொள்வார்கள். பலபாம்புகள் அம்மலையின்மேலிருந்து கீழேவிழாமல் கல்முதலியவற்றைப்பற்றிக்கொண்டு தொங்குவதைநோக்கினால், இந்தமலையின்மேலுள்ள மாதவர்கள் விரித்தலர்ந்த சடைத்திரள்களை நிகர்த்திருக்கும். கடலின் நீரைமொண்டு கொண்டுமேலேறின கரியமேகங்களும், அவற்றோடுகூடவே யேறினயானைகளும் உருண்டுவிழுவதை நோக்குமிடத்தில், மிகுந்த ஒலியையுடைய அருவியாறுகளில் மூழ்குகின்றமக்களுடைய பாவக்கூட்டங்கள் அவர்களைவிட்டுத் தொலைந்து உருண்டுவிழுவதை நிகர்த்திருக்கும். வெள்ளைவஸ்திரத்தை

விரித்தாற்போலவும், இந்தமலையானது பட்டு உரிஞ்சுதலால் ஆ
காயத்திலுள்ள பூர்ணசந்திரனது அமிர்தநாளைகள்போலவும்,
தொண்டர்களுடைய மெய்ஞ்ஞானச் சுடர்த்திரள்போலவும்,
இந்தமலையின் எல்லாவிடங்களிலும் வற்றாத அருவியாறுகள்
விளங்கிக்கொண்டிருக்கும். இந்தமலைக்குநேராகப் பிரகாசிக்
கிற பூர்ணசந்திரனைக் கண்டோர், உண்மையாக இதிலுள்ள
நீலநிறக்களங்கமானது இயற்கையன்று, நிறைமதிக்குக் களங்க
முண்டோ, இம்மலையின்மீதுள்ள உயர்ந்தசோலைகளின் பச்
சிலைகள் படுதலாலுண்டான பசுமையேயாகுமென்பார்கள்.
இந்தமலையின்மீதுள்ள மரக்கூட்டங்கள், தம்மீது வாழ்கின்ற
மேகங்களை கூந்தலாகவும், வெண்மையாகியநக்ஷத்திரங்களை
அந்தக்கூந்தலிலணிந்த மல்லிகைப் பூங்கொத்துக்களாகவும்,
அசையாநின்றகொடிகளை இடையாகவும்கொண்டு, வில்லை
நிகர்த்தநெற்றியையுடைய மாதரைப்போலத் தூரப்பார்வைக்
குக் காணப்படும். யாசகர்கள், இந்தக்கந்தமாதநத்திலுள்ள தே
வதாரமரங்களைக் கற்பகமரங்களென்றுநினைத்துத் தாம்வேண்
டியவற்றையிரந்து அவைகொடாமையால், இவைநாம்விரும்
பினவற்றைக் கொடுத்தில ஆதலால், இவைகளும் நம்மைப்
போலவே வறுமையடைந்தனவோ என்பார்கள். இருபுறத்
திலுமுள்ள மரங்களின்நீண்ட கிளைகள்மேல்படர்ந்து பின்
னிக்கொண்டிருக்கிற கொடிகளின்மீது மயிற் கூட்டங்கள்
நின்று தம்தோகையைவிரித்து ஆடுவதைநோக்குமிடத்தில்,
அழகாகியகயிற்றின்மீதேறி யாடுகின்ற கழைக்கூத்தப்பெண்
களை நிகர்த்திருக்கும். தம்மீது எறிகும்வானரங்கள் கூத்
தாடும்படி, நடுவே அலங்கரிக்கப்பட்ட படர்கொடிகளின்
அயலில் கொம்புகளில்லாத மரங்கள்காணப்படுவது, கழைக்
கூத்தாடிகள் நட்டகம்பங்களை நிகர்த்திருக்கும். சூரியன்நாள்
தோறும் இந்தமலையின்மீதுள்ள குளிர்ந்தசுனைநீரில்மூழ்கியு
செவந்தவெங்கதிரொன்று சொல்லும்படியாகவே திரிகான்
அதுநோக்குமிடத்தில், துஷ்டர்களநல்லோர்களுடனே சி
நேகித்தாலும் தமக்குமிகுதியாயிருக்கிற துர்க்குணத்தை விடா
கள் என்பதை விளக்குகின்றது.

குயில்களும், வண்டுகளும், கிளிகளும், மயில்களும்நெ
ருங்கியிருத்தலால் இம்மலையிலுள்ள பரிமளப்பூஞ்சோலைகள்,
மன்மதனானவன் அங்குள்ளமுனிவர்மேல் படையெடுத்து
வந்திறங்கின மதில் சூழ்ந்தபடைவீட்டின் அழகைக்கொண்
டிருக்கும். இந்தமலைச்சுனைகளில் சேல் முதலிய மீன்கூட்டங்
கள் உலாவித்திரிவதைநோக்குமிடத்தில், இச்சுனைகளைக்கண்
டு களிக்கின்ற தெய்வப்பெண்களின் கண்ணிழலைநிகர்த்திருக்
கும். சுனைகளில் நீரைமுற்றும்மறைத்திருக்கிற பசியதாமரை
யிலைகளை நோக்குமிடத்தில், இம்மலையானது, தாமரைமலரா
கிய தன்பெண்ணுக்குச் சூரியன் கணவனும், தனக்கு மருமக
னும் ஆதலால், நாணத்தால்; அவனுக்கெதிரில் நிற்கமாட்டா
மல், பச்சைவஸ்திரத்தால் தன்னைமறைத்துக் கொண்டதை
நிகர்த்திருக்கும். வாசனையுள்ள நீரோடைகளில் இந்திரன்
வசிக்கிற தேவலோகமுழுதும் பிரதிபிம்பித்ததைநோக்குமிடத்
திலே, முற்காலத்தில் அரியதவத்தையுடைய துருவாசமுனி
வர் சாபத்தால் அந்தத்தேவலோகமுழுதும் கடலில் விழுந்த
செய்கையை நிகர்த்திருக்கும். இதிற்பிரவேசித்தவர்கள் பே
ரின்பமடைந் திவ்விடத்திற்றானே நிலைபெறுதலன்றி மீளுத
லில்லாமையால் இம்மலையானது பரமசிவனுடைய திருவடி
யை நிகர்க்கும். ஆனால் இதையறிந்தால் எல்லாரும்வந்து பிர
வேசிப்பார்களென்றெண்ணி, வித்வான்கள் இதை மலையெ
ன்று மறைத்துச்சொன்னார்கள். வாழை, மா, பலா, என்னு
முக்கனிகளின் தேனும் ஒன்றாய்க்கூடிப் பெரிய நதிகளாயோ
டும். முற்காலத்தில் நாங்கள்செய்ததீமைக்காக தேவரீர் எங்
கள் தோலையுரித்துப் போர்த்துக்கொண்டீர், இனியாகிலும்
எங்களைக் காத்தருளவேண்டுமென்று சொல்லுவனபோல,
மான், யானை, புலி, சிங்கம் என்பவை இம்மலையையடைந்து
சூழ்ந்திருக்கும். அருவியாறுகள் கொழிக்கின்ற பொற்று
கள்கள் அழகாகப் பக்கங்களில் விளங்குவதை நோக்கினால்
பொன்னாலாகிய மேருமுதலாகிய மலைகள் இந்தமலையோடேந்

காத கட்டுக்கொண்டிருப்பதை நிகர்த்திருக்கும். மான் கன்றுகள் புலி முலைப்பாலுண்ணும், யானைக்கன்றுகள் சிங்கங்களோடுகூடி நித்திரைசெய்யும். வெயிலைப்பொறுக்கமாட்டாத பாம்பின் குஞ்சுகள் கருடன்சிறைநிழலில் ஒதுங்கி நிற்கும். குளிர்ந்தபளிக்கறைபோலக் காணப்பட்டுத் தம்மிடத்துவந்தவர்களை அமிழ்த்திவிடுகிற பூஞ்சுனைகள், முனிவர்வேடம்பூண்டிருந்து, தன்னிடத்துவரும் பெருந்தவத்தினருடைய உருவுயிர்களைக் கவர்கின்றவில்வலனை நிகர்த்திருக்கும். மிகவும் பகைகொண்டு வாலைவளைத்துக்கொண்டிருக்கிற பச்சோந்திக்கெதிரில் மயில்கள் நடித்துக்கொண்டிருக்கும். தம்முடலில் தினவுநீங்கவிரும்புகிற சிங்கங்கள், எட்டுக்காலுள்ள சரபப்பக்ஷியின்மூக்கில் உராய்ந்துகொள்ளும். வளைந்தகொடியவில்லையுடைய குறவர்கள் மான்களோடுபுலிகளும் அகப்படும்படி வளைத்துக்கட்டினவலைகள், நல்லோர் தீயோர் என்னும் இருதிறத்தாருக்கும் ஒரேதன்மையாய் முடிவையுண்டாக்குகிற யமனுடைய கொடுங்கோலை நிகர்த்திருக்கும். அருளையுடைய முனிவர்போல அவர்களுடைய புதல்வரும் யாகங்களைச் செய்து விளையாடுவார்கள், அப்படி அவர்கள்செய்வது பூர்வசந்திரன்போலவே இளம்பிறையும் அமுதகிரணத்தையே வீசுவதுபோன்றிருக்கும். இந்தக்கந்தமாதநத்திலுள்ளவர்களுடைய உயிரைக்கவர்ந்து சுவைத்தயமனுமில்லை, இங்குள்ள முனிவர்மீது புஷ்பபாணங்களைப்பெய்து அவமானமடையாதமன்மதனுமில்லை, பெரியோர்வசிக்கிற இம்மலையின்மீது அருவியாறுகள் குதித்துப்பாயும் ஓசையும், யானைகளின்முழக்கமும், யாகாக்கினிகள் சுவாலித்துக்கிளைவிட்டெரியும் ஓசையும் ஒன்றோடொன்று கலந்தொலிக்கும். இலைகள்நெருங்கினமரங்கள் அடர்ந்து வெயில்புகுதற் கிடமாயிருத்தலால் ஒருபக்கத்தில் என்றும் இராக்காலமாகவே யிருக்கும்; மாணிக்கங்கள் விளங்கிக்கொண்டிருத்தலால் ஒருபக்கத்தில் என்றும்பகற்காலமாகவே யிருக்கும். திரிமூர்த்திகளும் தேடிக்காணாத பொருள்களாவும் இந்தக்கந்தமாதநத்திலுண்டு, இதில் இல்லாதபொருள்

20

எவ்விடத்திலுமில்லை. பனைக் கொடிகளின் மேல் நெருங்கியிருக்கிற முத்துகள், தனக்கொடியில் குளித்தோர்களுடைய பாவம் நெகிழ்த்தோடுவதுகண்டு கடலாகியபெண் புன்னகைசெய்வதுபோன்றிருக்கும். பனைமரங்கள் தலைவிரித்தெழுந்து, விளக்கும் உருவமொன்றாகி, நீண்டு, தம்மீதுள்ள அண்டங்களையும் அவற்றிலுள்ள சிவராசிகளையும் தாங்குதலால், அவை இத்தப்பூமியைத்தாங்குகின்ற ஆதிசேடனை நிகர்த்திருக்கும். புன்னைமரக்கிளின்மேலுள்ள அரும்புகளின் காட்சியானது, மரகதமணி அழகும் பசுமையுமுள்ள பச்சிலைவடிவமாயமைந்திருக்கின்றதென்று, முத்துக்கள்தாமும் வெண்மையாகிய அருவுருவங்கொண்டு நெருங்கியிருப்பதை நிகர்த்திருக்கும். பாசிலையுள்ள குங்குமமரங்களினின்றும் விழுந்தமகரந்தப்பொடியின்மேல் புரண்டசக்குக்கூட்டங்கள், இக்குங்குமசக்கினங்கள் செந்நிறமுள்ளனவென்று கண்டோர்சொல்லும்படி காணப்பட்டுப் பெரியோர்களையும் அதிசயிக்கவாக்கும். முனிச்சியர், நீர்க்குடத்தில் உள்ள இரண்டுசெல்மீன்களோடு தமது கண்ணிழலிரண்டையும் சேர்த்து நான்கு மீனென வயிற்றக, விலைகொடுத்து வாங்கினவர்கள் நீரையூற்றிப்பார்த்து இரண்டேயுள்ளன, மற்றிரண்டுமீன்களைக் கண்டிலேம்; இதுஎன்ன அதிசயமென் றென்னுவார்கள். துளையர்தாமரைச் செடிகளின்மேல் வலைவீசியிழுத்தபோது, அந்தவலைக்குள்ளே அடங்கிநின்றொழுகின்ற தாமரைப்பூவின் அரும்புகள், அந்த வலையிலகப்பட்ட கொக்குகளை நிகர்த்திருக்கும். ஸ்ரீகோதண்டத்தைத்தாங்குவாராகிய ஸ்ரீராமமூர்த்தியால் உண்டாக்கப்பட்ட சேதுவாகிய கந்தமாதநமலையின் வளமும், அதைச்சூழ்ந்தகடலின் வளமும் அளவையின்றிச்சொல்லுந் தரத்தனவோ. அளக்கப்படா, சிவபெருமான்தானே வேதமுதலாகிய நூல்களைக்கொண்டு தன்பெருமையைச் சொன்னாற்போல, இந்தக்கந்தமாதநமும் தன்பெருமையைத்தானே வாய்திறந்துசொன்னாலன்றி நால்வர்களும் அறியவாரும் என்றுசொல்லிமுடித்து, மேலேசேதுவின்சிறப்பைச் சொல்லத் தொடங்கினார்.

சேதுசருக்கம்.

கேளுங்கள், சௌநகாதிமுனிவர்களே. இந்தக்கடல் சூழ்ந்த உலகத்தில் ரகு என்னும் அரசன்மரபில் அவதரித்த ஸ்ரீராமமூர்த்தியால் வாநராதிபர்களைக்கொண்டு உண்டாக்கப்பட்டதும், கடல்நீர்மோதப்பெற்றதும் ஆகியசேது இராமேச்சுரம் என்றொரு திவ்யக்ஷேத்திரமுண்டு, அதில், மேன்மையாகிய பலதீர்த்தங்கள் உண்டு, அந்தக்ஷேத்ரமும் தீர்த்தங்களும் பிறவூர்களிலுள்ள க்ஷேத்ர தீர்த்தங்களினும் மிகவுஞ்சிறந்தன. அந்தச்சேதுவி ராமேச்சுர தீர்த்தம் தன்னைத் தரிசித்தவர்களுக்கு உடனேமோக்ஷானந்த முத்தியைக்கொடுக்கும். அன்றியும் சங்கரன்திருமால் என்பவர்களிடத்தில் அன்பு முண்டாகும். முத்தொழிலை நடத்தும் வல்லமையும் உண்டாகும்; இதில் ஒரு சந்தேகமில்லை. இந்தப்பிறப்பில் எவன் இந்தச்சேதுவைவந்து கண்டாலும், அவன்சிவபெருமான் சந்நிதியில், தந்தைதாய்வமிசத்தோராகியகோடி உறவினரோடுமுன்னே இன்புற்றிருந்து, பின்னேமோக்ஷத்தையும் அடைவான். பூமியிலுள்ள நுண்ணியதுகள்களும் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களும் ஆகிய இவற்றின்தொகையினும் மிக்குவிளங்குகிற தேவர்களுடைய தொகையும்போல, இந்தச்சேதுவைத் தரிசித்தவர்களுக்கு உண்டாகும் அநேகபலன்களையெண்ணிச் சொல்லவல்லவன்யாவன், ஆயிரநாவுள்ள ஆதிசேடனும் சொல்லவல்லவனல்லன். பெருமைவாய்ந்த ஸ்ரீராமமூர்த்தியால் உண்டாக்கப்பட்ட ஆழ்ந்தநீருடைய இந்தச்சேதுவை ஒருதரம் கண்ணிற்கண்ட மனிதன், அளவில்லாதயாகங்கள், தவங்கள், தீர்த்தயாத்திரைகள் என்பவற்றைச்செய்து முடித்தபயனை யுடையவனாவான். உலகத்தில் ஒருவனைநோக்கி, நீசேதுயாத்திரைபோவென்று சொன்னவன் இந்தப்பலன்களை யெல்லாம் அடைவானானால், வேறுபற்பலவகையாக நாம் எடுத்துச்சொல்வதில் என்னபிரயோஜநம். இந்தச்சேதுவில்மூழ்கினமாநுடன், தன்னெழுகோடி வமிசத்தாரோடும் புனிதனாகி, மாயாரூபமான பிரபஞ்சத்தொ

டர்பை நீங்கி மேலானமுத்திப்பதவியையடைவான். இந்தக்கந்தமாதனமலையையும், அதிலுள்ள சிவபிரானையும், சேதுவையும் நினைத்தவனுடைய தீவினைப்பகுதிகளியாவும்முடிந்து அவனும் உயர்ந்தபதவியையடைவது உண்மையேயாகும். அதுவுமல்லாமல், அவன்தன்னைப்பெற்ற தாய்தந்தையென்னும் இரண்டுபேருடைய வமிசத்திற்றோன்றின கோடிலக்ஷந்தொகையாகிய உறவினரோடு, மூன்றுகற்பகாலம்வரைக்கும் சிவபதமடைந்திருந்து, அதற்குமேலே அவ்விடத்திலிருந்து, உயர்ந்த முத்திப்பேற்றையும் அடைவான். சேதுவில்மூழ்கினவன் பஞ்சமஹாபாதகங்களைச் செய்தாலும், பிரமதேவன்வாழ்கின்ற மூன்றுதினங்களாகிய ஆறுயிரம் சதுர்யுகங்கள்வரைக்கும் ஸ்ரீவைகுண்டத்தில், தன்தந்தைதாய் உறவினர் நூறுகோடிபேர் என்பவர்கள்விரும்பும்படியிருந்து, பந்தவிமோசநமடைவான். சேதுவைத்தொழுது அதில் மூழ்கினவன், துன்பத்தைத்தருவதான உலைக்களத்தின்மேலிருந்து உருகமாட்டான், ஏழுவழுப்பாகிய நிணக்கிணற்றில் மூழ்கியழுந்தமாட்டான், இழுமென்னும் ஓசையுடனோடுகின்ற வைதரணிநதியில் இறங்கமாட்டான். ஆசையோடு இந்தச்சேதுவில் மூழ்கினவன் வளைந்தவாலையுடையநாய்த் தசையை உண்ணமாட்டான், தானும் அந்நாய்க்கு இரையாகமாட்டான். மூத்திரபாத்திரத்தையும் நினைக்கமாட்டான், முன்னே சேதுவில் மூழ்கினவன், உலைக்களத்திற்காய்ந்த குலத்திறல் கருங்கல்போலக் கரிந்துபோகமாட்டான், உதிரந்தோய்ப்புழுக்களையுண்ணமாட்டான், முள்ளிலவமரத்திலேறமாட்டான், மலமடுவில் மூழ்கமாட்டான். சேதுவில்வந்துதங்கினவன், கல்மழை, நெருப்புமழை, வெந்நீர், கடுக்காரநீர், உதிரநீர், என்பவை நிறைந்திருக்கிற கிணற்றில் குளிக்கமாட்டான், தீப்பாயமாட்டான். சேதுவுக்குப்போனவன், தலைகீழாகத் தொங்கமாட்டான், செக்கிலிட்டரைப் புண்ணமாட்டான், நெருப்பின்மீது புரளமாட்டான், வாயுவினால் அலைப்புண்ணமாட்டான். சேதுவுக்குப்போனவன், விந்துநீரைக் குடிக்கமாட்டான், மலத்திரளை யுண்ண மாட்

டான், உடல்மீதும் பூசிக்கொள்ளமாட்டான், தடியாலடிக்கப் பெருந்துயரடைந்து வருந்தமாட்டான். சேதுவில் மூழ்கினவன், கூர்மையாகிய அரிவாளினால் அரியப்படமாட்டான், பித்தம் கோழைகள் பெருகாநின்ற கைப்பான உணவுகளை யுண்ணமாட்டான், எலும்போடுகூடிய தசையைவிரும்பமாட்டான். அதுப்புண்ணமாட்டான், பாசவிமுக்தனாவான். போய்ச்சேதுவில் மூழ்கினவன், பாம்புகளின் நெருங்கினதொளைகளோடு கூடினபற்களால் கடிக்கப்படமாட்டான், மலையைநிகர்த்தயானைக்கொம்பினால் குத்தப்படமாட்டான், காய்ந்தபாஷாணத் தென்னெயைக் குடிக்கமாட்டான், அதில் விழுந்தெழுந்திருக்கமாட்டான், முனைக்கூர்மையையுடைய ஊசியின்மேல் இருக்கமாட்டான், முகத்திலும் மூக்கிலும் மிகுந்தகாரம் சிந்தயங்கமாட்டான். ஒப்பில்லாத சேதுவில்மூழ்கினவன், தன்சரீரத்தினின்றும் எலும்பைப்பிடுங்க ஒடுங்கமாட்டான், மரத்தின்மேலிருந்து மலப்பள்ளத்திற் குதித்தழுந்தமாட்டான், அச்சத்தைச்செய்கிற முத்தலைச் சூலத்தால் இறக்கமாட்டான், பரிசுத்தமாகிய சேதுவில்மூழ்கியெழுந்த பரிசுத்தன், கொடியயமபாசத்தினால் சரீரம் கட்டுண்ணமாட்டான், வெப்பமாகியபுகையினால் மூடப்படமாட்டான், காய்ந்த இருப்புப்பலகையின்மேல்நட்ட ஆயுதங்களின்மேல்படுத்துறங்கமாட்டான். நெடிய நீரால்நிறைந்த சேதுவில் சேர்ந்தவன், ஆண்குறியில் இருப்புண்டைகளைக் கட்டித்தொங்கவிடவாடமாட்டான், முகத்திலும், கண்களிலும், சந்துகளிலும், ஊசியைச் செருகவருந்தமாட்டான். இப்படிப்பட்டகொடிய நரகங்கள் அளவற்றனவாயினும், நீண்டகடலாற் சூழப்பட்ட சேதுவில் நனைந்தசரீரத்தையுடைய மானுடன், இந்நரகவேதனைகளை மனத்தால் நினைக்கவுமாட்டான். சேதுவின் அலைகளோடுகூடிய நீரில்மூழ்கப் போவேனென்று நாலடி பெயர்த்து வைத்தாலும், அப்படிவைத்தவன் மஹாபாதகங்களைச் செய்தாலும், அந்தப்பாதகங்களினின்றும் நீங்குவான், நரகத்தைய

டையமாட்டான். அழகிய ஸ்ரீராமமூர்த்தியால் உண்டாக்கப்பட்டசேதுவின்மேல் கண்ணுறங்குவோர் தம்சரீரத்தில் ஒட்டிக்கொள்ளுகிற மண்ணின்தொகையாகிய அந்தணரைக் கொன்றபாவமுழுதும் அற்றுப்போகும், இதற்குச்சந்தேகமில்லை. கோசலநாடனாகிய ஸ்ரீராமமூர்த்தியால் உண்டாக்கப்பட்ட சேதுவில் வீசுகின்றகுளிர்ந்தகாற்றானது மேலேபட்டால், கள்ளுண்டலால் உண்டாகிறபதினாயிரம்பாவங்கள் அந்தக்ஷணத்திலேயே தொலைந்துபோகும். முத்துக்களைக்கொழிக்கிற குளிர்ந்தநீரையுடையசேதுவில் சிரமுண்டனம்செய்துகொண்டால், பதினாயிரம் குருபத்நீகமனஞ்செய்தபாவம் நீங்கிவிடும். பசும்பொன்னைக்கொண்டுவந்துகொழிக்கின்ற அலைகளையுடைய சேதுவில், தம்முடையபுத்திரபௌத்திரர்களால் தம்முடையமரணத்திற்குப்பிறகு தமதுசரீரத்தின் எலும்புகள் நனைக்கப்பட்டால் அந்தக்ஷணமே ஸ்வர்ணஸ்தேயஞ்செய்தபதினாயிரம் பாவங்களும் நீங்கிவிடும். வளைந்த வில்லையுடைய ஸ்ரீராகவனால் உண்டாக்கப்பட்ட திருவணையாகியசேதுவில் சிரத்தையுள்ள மனத்தோடு சென்றுமூழ்கினால் பெரும்பாதகர்களோடு புணர்ந்தபாவமும் விரைவிலே ஒழிந்துவிடும். நல்வழியை மாறுபடுத்துகிறவனாய் மாதவர்வேதியர் என்பவர்களைப்பழுதுசொன்னவன், உடன்பிறந்தார் முதலியோருடைய பாகத்தைத் தனக்காக்கிக்கொள்ளுகிறவன், பேருண்டியுண்பவன், வேதசாஸ்திரங்களை விற்கிறவன், அந்தணரைக் கொலைசெய்தவன் என்கிற ஐவரும், பிராமணருக்குப் பொருள் கொடுப்பேனென்றுசொல்லிப் பிறகு இல்லையென்றுசொல்லுகிற அறிவிலி, தன் ஆசிரியரைவணங்காதவன், மிக்ககோபமுள்ளவன், பிரமஹத்திசெய்தவன், தாகத்தோடு நீருண்ணச்செல்லும் பசுக்களை வெருட்டியோட்டுகிறவன், என்கிற இந்தப்பாவிகளும் இவர்போல்பவரும் சேதுஸ்நாநத்தினால் ஒப்பற்றபாவத்தொகுதியினின்றும் நீங்குவதுநிச்சயம். நாள்தோறும் வேதியர்கூட்டம் செய்கின்ற அக்கிநிகாரியங்களுக்கு விரோதம்செய்தவன், பதிதனும், தாசியும் ஆகிய இவருடைய உணவையும், தேவ

ருணவையும் உண்பவன், கள்ளுண்ணும் மாதுக்குக் கணவனு
யிருப்பவன் என்றுசொல்லப்பட்டவரும், கள்ளுண்டவரும்,
சிவபெருமான்முதலிய தேவர்களுக்கென்று அமைத்துவைத்
த கந்தமூல பதார்த்தங்களையும் கனிகளையும் தாம்பூலத்தை
யும், பட்டாடையையும், சந்தநம் கஸ்தூரிமுதலிய சுகந்த
வர்க்கங்களையும், தாமிரம் வெள்ளி பொன் முதலியவற்றாற்
செய்த பூஜாபாத்திரங்களையும், தேன் நெய் பால் முதலியதிர
வியங்களையும், கண்டிகைமுதலிய பூஷணங்களையும் அபகரித்
துக் கொண்டவன், சிற்றன்னை, சிநேகன்மனைவி, மகன்மனை
வி, காற்றவாயினளாகிய தூரஸ்த்ரீ, நம்பினவள், இழிந்தசாதி
ப்பெண், பிறன்மனைவி என்று சொல்லப்பட்டவருடைய சங
த்தைவிரும்பி அவர்களைத்தழுவினவன், குருமனைவியை யிச்
சித்துப் புணர்ந்தவன், என்றுசொல்லப்பட்ட இவர்களுடை
ய பாவங்களெல்லாம் சேதுவில்மூழ்கினமாத்திரத்தில் பற்றற
வொழிந்துபோகும். தேவதைகளையும், அக்கினியையும், பூமி
யையும் பூசித்தலும், யாகங்களைச்செய்தலும் ஆகிய இவைக
ளில்லாமலே அரம்பை மாதர்களுடைய போகத்தை விரும்
பினவர் யாவரும் சேதுயாத்திரை செய்யுங்கள். பூமி பொன்
தானியம் அரிசி என்பவற்றைத் தானஞ்செய்தலும், விரதமுத
லியவற்றால் உடம்புவாடுதலும் ஆகிய இவைகள் வேண்டிய
தில்லை, சேதுவைத்தரிசித்து அதில் மூழ்கினால் தேவர்களாக
லாம். சேது ஸ்நாநபலமானது ஓமம் யாகம் ஜபம் தபம் என்
னும் இவற்றின் பலனைப்பார்க்கிலும் அதிகமென்று புராணங்
கள் சொல்லுகின்றன. மனத்தில்வேறு எண்ணங்களில்லா
மல் இந்தச்சேதுவில் மூழ்கினால், அப்படிமூழ்கினவர்களுக்கு
மறுபடியும் இவ்வுலகத்தில்வந்து பிறக்க வேண்டியதில்லை.
அலைகளையுடைய இந்தச் சேதுவானது, செல்வத்தைவிரும்பி
னாலும், தெய்வப்பெண்களுடைய சுகத்தை விரும்பினாலும்,
பற்றற்றமனத்தை விரும்பினாலும் தடையில்லாமல் கொடுக்
கும். தீவினையைநீக்கி நல்வினையை மிகவுந் தருவதாதலால்
இந்தச்சேதுவில் மூழ்கினவர்கள் தாம் விரும்பும் இன்பங்க

ளெல்லாவற்றையும் அடையலாம். இந்தச்சேதுவில் மூழ்கு
தல், எல்லாயாகங்கள செய்தலினும், எல்லாத் தீர்த்தங்களில்
மூழ்குவதினும், பிறவியச்சத்தை நீங்குதற்குக் காரணமாகிய
யோகங்களைச் செய்தலினும் மிகவும் சிறந்தது. சுவர்க்கலோக
த்தையும், திருமாலுலகமாகிய வைகுண்டத்தையும், சிவ
பெருமானுலகமாகிய கைலாயத்தையும், பிரமலோகத்தையும்
விரும்பினவர்கள் இந்தச்சேதுவில் மூழ்கக்கடவர். இந்தச்சே
து ஸ்நாநமானது, செல்வம், ஆயுள், சிறப்பு, கல்வி, மந்திர
சித்தி முதலானவைகளையுந்தரும். இந்தச்சேதுவில் அன்போ
டாயினும் அன்பின்றியாயினும் எப்படி மூழ்கினாலும், மூழ்
கினவர்களை இம்மைமறுமைகளில் துன்பமானது தொடர
மாட்டாது. ஆதலால் இந்தச்சேதுவானது தன்னிடத்தில்
மூழ்கினவருடைய வறுமையாகிய பாம்புக்குக் கருடனை நிகர்
க்கும். இதைத்தரிசிக்கிற உயிர்களுக்கெல்லாம் இளம்பிறை
போல எல்லாத்தருமங்களும் தழைத்துவளரும், காமதேநு,
கற்பகவிருக்ஷம், சிந்தாமணி என்பவை தம்மிடத்து வந்து
இரப்பவர்க்கு அவர்விரும்பின எல்லாவற்றையுங்கொடுப்பது
போல, இந்தச்சேது நீரானது தன்னிடத்தில்வந்து மூழ்கு
வோர்க்கு அவர்விரும்பின எல்லாவற்றையும் கொடுக்கும்.
சேது ஸ்நாநத்துக்குப்போகிறவன், கையிற்பொருளில்லாமை
யால் பெரியோரிடத்தில் வாங்கிக்கொண்டு போகலாகாது,
போனால் பொருள்கொடுத்தவர் ஸ்நாநபலத்திற் பாதியைக்
கைக்கொள்வார். சேது யாத்திரைபோகிறவர் கைப்பொருள்
குறைந்தானல் அந்தணரிடத்தில் வாங்கலாம். அன்றி அரசர்
வைசியரிவர்களிடத்திலும் வாங்கலாம், சூத்திரரிடத்தில் வா
ங்கலாகாது, அப்படிவாங்குதல் பெரியபாவமாகும். ஆடை,
பொருள், பலவகைத்தானியம் இவைகளை மனமிசைந்து தா
னஞ்செய்து சேது யாத்திரைக்குப் போவென்று ஒருவனை
இசைவித்தேவினவன், வேதபாராயணத்தாலும் அசுவமேத
முதலிய யாகங்களாலும் சொர்ணதானத்தாலும் அடைகிற
பயன்முழுதும் அடைவான். சேதுயாத்திரை போய்வந்தால்

உனக்குப் பொருள்கொடுக்கிறேனென்று ஒருவனுக்குச் சொல்லி, அவன்போய்வந்தபிறகு கொடாமல் இல்லையென்றுசொல்லுகிற வஞ்சகனை, பிரமகத்திசெய்தமகாபாதகன் என்று அறிவுடையோர் சொல்வார்கள். சேதுயாத்திரை போகிறேனென்றுசொல்லிப் பொருள்யாசித்து அவ்வாறு போகாத வலிய நெஞ்சமுடையவனை, பூசுரரைக் கொன்றவனென்று உலகஞ் சொல்லும். செல்வனாயிருந்தும் சேது ஸ்நாநம் செய்யப்போகிறேனென்று யாசித்துப்பொருளைச் சேகரிப்பவனை, பொற்கள்ளன் என்று சொல்லுவார்கள். பூசுரரைச் சேதுயாத்திரை போவதற்கு வேண்டியபொருள் முதலியவுதவிசெய்து ஏவினால் அது சிறந்தபுண்ணியமாகும். யாகங்களைச் செய்வதற்கு யாவரிடத்திலும் பொருள்முதலியவற்றை யேற்றாலும் தீமையுண்டாகாததுபோலச் சேது யாத்திரையின்பொருட்டும் எவரிடத்திலும் பொருள்வாங்கலாம், ஆதனால் ஒரு குற்றமுமில்லை. இந்தச்சேதுவானது கிரேதாயுகத்தில் ஞானசொருபமாயிருந்து யாவருக்கும் மோக்ஷத்தையும், திரேதா யுகத்திலே வேதசொரூபமாயிருந்து மேலானபுண்ணிய லோகங்களையும், துவாபரயுகத்தில் சிவசொரூபமாயிருந்து சக்கரவர்த்தித்வம் முதலான சம்பத்துக்களையும், கலியுகத்தில் சேது சொரூபமாயிருந்து அவரவர்கள் நினைத்தகாரியங்களெல்லாவற்றையும் தருதலால், இதின்பெருமையை யாவர்சொல்லவல்லவர், ஒருவருமில்லை, ஆனாலும் ஒருவாறு சுருக்கிச்சொன்னோம், இனியிந்தச்சேது வந்தவரலாற்றைச் சொல்லுவோம், கேளுங்கள் என்று சௌநகாதிமுனிவர்களுக்குச் சூதபௌராணிகர்சொல்லத் தொடங்கினார்.

சேதுவந்த சருக்கம்.

கோசல தேசத்துக்கரசனாகிய ஸ்ரீரகுநாயகன், தந்தையாணையால் தன்காதலியாகிய சீதாபிராட்டி பின்தொடர்ந்துவரத் தம்பியாகிய இலக்குமணனோடு தண்டகாரணியத்தையடைந்து, பஞ்சவடிதீரத்தில் வாசஞ்செய்யுங்காலத்தில், மா

ரீசன் பொன் மானாய்வந்துசெய்த மாயையால் இராவணன் பிராட்டியைக் கொண்டுபோக, ஸ்ரீராமரும் தம்பியுமாக அந்தக்காடெல்லாந் தேடியுங்காணாமல், பம்பைக் கரையில்வந்து ஒருவாநரம் நிற்பதைக்கண்டார்கள். அப்பொழுது, அந்தவாநரமானது, கோதண்டபாணியாய் வருகிற ஸ்ரீராமமூர்த்தியையும் இலக்குமணனையுங்கண்டு, மிகுந்த ஆசையோடு நின்று, உம்மையொத்தவர் இந்தவனத்தில் இதற்குமுன்னே வந்ததில்லை, நீங்கள்யாவர், உமது இருப்பிடம்யாது, உம்முடைய பெயர்யாது, வந்தகாரியம் என்ன, என்றுகேட்டது; அதுகேட்ட கேள்விகளுக்கு ஸ்ரீராகவன் விடைகூறினபின்பு அதின்வரலாற்றைவினவ, கலைக்கடலாகிய அந்தவாநரம், என்பேர் அநுமான், சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவமகாராஜனுக்கு நான் மந்திரியாவேன். எங்கள் அரசன் உன்னோடு நட்புக்கொள்ள நினைந்து என்னை இங்கேயேவினான், அவனிடத்துக்கு வந்தால் உம்முடைய காரியங்களெல்லாம் நன்மையாய் முடியும் என்றுசொல்ல, அவ்வாறே ஸ்ரீராமமூர்த்தி அந்த அநுமானோடுசென்று சுக்கிரீவமகாராஜனைக்கண்டு வார்த்தையாடினபிறகு, தானும் தம்பியும் அக்கினிசாக்ஷியாய் அவனோடுநட்புக்கொண்டார்கள். இப்படியிருக்கையில், ஸ்ரீரகுநாயகன் வாலியைக்கொல்வேனென்று உறுதிமொழிகூறினன், சுக்ரீவனும் ஜாநகியைத் தேடிக்கொண்டுவந்து தருவேனென்றான். இவ்வாறு இருக்க அன்போடு அவ்விடத்தில் இருக்கையில், ஸ்ரீரகுநாயகனது வலியையறிய விரும்பிச் சுக்கிரீவன் பிரார்த்திக்க, அவனது பிரார்த்தனைக்கிசைந்து அங்குக்கிடந்ததுந்துபியின் பேருடலைப் பத்துயோசனைக் கப்பாற்சென்று விழும்படித் தன்றிருவடியின் பெருவிரலால் உந்தினதுமன்றி, அங்கேயிருந்த மராமரங்கள் ஏழுந்தொளைபடும்படி, ஒருபாணத்தால் எய்தனன், இந்தப்பேராற்றலைக்கண்ட வாநரவேந்தனாகிய சுக்ரீவன், இனி இந்திரனாலும் எனக்கு அச்சமில்லை, உனது நட்பைக்கொண்டு அரக்கனாகிய இராவணனுடையவலியையழித்துச் சாநகியைத் தரவல்லேன்; இப்பொழுது வாலிவாழ்

கின்ற கிஷ்கிந்தைக்கு என்னோடு வரவேண்டுமென்று பிரார்த்திக்க, ஸ்ரீரகுநாதன் அதற்கிசைந்து வாலியின் இருப்பிடத்துக்கு இலக்குமணனோடும் சென்றனன். அப்பொழுது சுக்ரீவன் கோவித்துச்சென்று வாலியைப்போர் செய்யவாவென்றறை கூவினன். அதைக்கேட்ட வாலிவந்து போர்செய்யவே, அவனுக்கெதிர் நிற்கமாட்டாத சுக்ரீவன்பயந்து ஸ்ரீரகுநாதனை வந்தடைந்தான், ஸ்ரீரகுநாதன் அவனை அஞ்சாதேயென்று ஆதரித்து, நீங்களிருவருங்கலந்து போர்செய்யுங் காலத்தில், நான் அவன்மீது அம்பெய்வேனாகில் உன்மீது பட்டாலும்படுமே, ஆகையால், அவனுக்கும் உனக்கும் வேற்றுமை தெரியும்படி இதை அடையாளமாகத்தலையிற் சுற்றிக்கொள்வாயென்று ஒருகொடியை அவன்தலையிற்சுற்றி அனுப்பினான், சுக்ரீவன் அவ்வாறே சுற்றிக்கொண்டு மறுபடியும் வாலியை அதட்டிப்போர்க்கு அழைத்தலும் அவன்வந்து போர்செய்து கொண்டிருக்கையில், ஸ்ரீரகுநாதன் ஒரு அம்பினால் வாலியினுயிரைக்கவர்ந்தனன், சுக்ரீவனும் தனது பட்டணத்தில் பிரவேசித்துக் கார்காலம் நீங்கினபிறகு, தன்வானர சேனையுடன் ஜாநகியிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கும்பொருட்டு ஸ்ரீரகுநாயகன் எழுந்தருளி யிருக்குமிடத்துக்கு வந்தனன், வந்து அங்கிருந்துகொண்டே வானரவீரரை நாற்றிசையிலுந் தேடவிடுத்தான், அவர்களுக்குள்ளே வாயுகுமாரனாகிய அநுமான் ஜாநகியைக்கண்டு சூடாமணியையுங் கொண்டுவந்து ஸ்ரீராகவனுக்கு அறிவிக்க, அந்தச்சூடாமணியைக்கண்டு துன்பக்கடலிலும் இன்பக்கடலிலும் மூழ்கினான். பிறகுதேறின ஸ்ரீரகுநாதன், தன்தம்பியாகிய இலக்குமணன், சுக்ரீவன், சாம்பவன், நளன், அநுமான், அங்கதன், நீலன் முதலிய வானரவீரரோடும் சேனைகளோடும் கிஷ்கிந்தையைநீங்கி, மகேந்திரமலையையடுத்த தென்கடற்கரையில்வந்து சேர்ந்தனன், இப்படியிருக்க, இராவணன் தம்பியாகிய விபீஷணன் அநலன் முதலிய மந்திரிமார் நால்வரோடும் இலங்கையிலிருந்துவந்து, தாசரதீ, அடைக்கலம் என்றுவேண்ட, அவனுக்கு அபயம்

நல்கி, அவனிடத்தில் சுக்ரீவன்கொண்டிருந்த சந்தேகத்தை நிவர்த்திசெய்து, முரசம் சத்திக்க, அவனுக்கு இலங்காதிபத்தியமருளி, முடிசூட்டித் தனக்கு அவ்விபீஷணனையும் ஒரு அமைச்சனாக்கிக் கொண்டனன். அதின்பிறகு, ஸ்ரீரகுநாதன் அவர்களியாவரும் அறியும்படி ஆலோசித்து, நமது சேனாசமுத்திரமோ அளவிடப்படாதது, கடற்பரப்போமிகவும் அகன்றுள்ளது, மலைப்பாம்புகள்போல அலைகள்புரளாநின்றன, விளக்கவாளையுடைய முதலைகள் அநேகமாகத்திரியாநின்றன, சுறாமீன்கள் மோதாநிற்கும், கடுங்காற்றுவீசும், கொடிய முதலைகளும் நீக்குதற்கரிதாகிய பெருங்கடலைநீந்துதற்குவழியாதோ, கண்ணால்நோக்கவும் பயமாயிருக்கின்றதே, மனமும் அஞ்சும்படியான நூறுயோசனையகலமான பரப்புள்ளதென்று கணிதஞ் செய்திருக்கிறார்களே, இடியேறுகள்கூடி யொலிக்கப்பெற்ற மேகத்தொகுதிகள் நெருங்கி வருணனுக் கிருப்பிடமாகியகடலைப் பெருதவியொன்றில்லாமல் கடந்து கரையேறுவதாகிய உபாயம் வேறுயாதோ, துன்பம்பெரிது, சேனையோடு கடப்பதற்குவழியுமில்லை, இவ்விடத்தில் நெருப்பம் விடுப்பவராகிய துணைவரையும் காண்கிலேம், சாநகியையும் தந்தையையுமிழந்து படுந்துயரத்தினும் கடல்கடக்குந் துயரம் பெரிதாயிருக்கின்றது. இந்தக்கடலை எந்தவிதமாய்க்கடப்போம், அகத்தியமுனிவர், இலங்காதிபனாகிய இராவணனைக் கொன்ற, அந்தக்கொலைப்பாவம் நீக்குதற்குரிய இடமாகிய கந்தமாதநத்தைச் சேர்வாயென்று சொன்னசொல்லும் பொய்யாகுமோ வென்றுசொல்லி மனம் புழுங்கினான். இப்படி இராகவன் இரங்குதலும், சுக்ரீவன்முதலியோர், கைகட்டி வாய்புதைத்து நின்று, எம்மிறைவனே, மரக்கலங்களையும் தெப்பங்களையும்கொண்டு கடலைக் கடக்கலாம் என்றார்கள், அப்பொழுது விபீஷணன், நமது இறைவனாகிய ரகுநாதன் வமிசத்தில் தோன்றினசகரர் தோண்டினதாதலால் வணங்குதற்குரியது, நாம்வந்தகாரியமும் முடிவுபெறும் என்றுசொல்லக்கேட்ட ஸ்ரீராகவன் சொல்லுகின்றான், கடலின் விஸ்தீர்

ணம் நூறுயோசனையென்றும், மிகுதியும் ஆழ்ந்திருப்பதென்றுஞ் சொல்லுவார்கள். வானரப்படை அளவிடப்படாததாயிருக்கின்றது, அலைகள் எழுதற்கு மரக்கலங்கள் பற்றுதனவாயிருக்கும்; வணிகருக்கு மிகவுந்துன்பமுண்டாகும், இடையில் பகைவர்வந்து வருத்துவார்கள், இந்தவகைகளால் கடலைக்கடக்க முடியாது, விபீஷணன் சொன்னசொல்லே என் மனத்துக்கிசைந்ததாயிருக்கின்றது, ஆகையால் வருணனை உபாசிக்கிறேன்; அவன் வழியுண்டாக்காதபக்ஷத்தில் என் கையம்பொன்றைப் பிரயோகித்து இந்தக்கடலைக் குடிப்பிக்கிறேன் என்றுசொல்லி, மிகுந்த அன்போடு ஸ்ரீரகுநாயகன் தம்பியோடும் ஆசமநம்பண்ணி வேதமுறையால் வருணனை உபாசிக்கத்தொடங்கித் தருப்பசயநத்தின்மீது செந்தாமரைக் கண்வளர்ந்தருளினன். மூன்றிரவுகழிந்தும் வருணன் இரங்காமைகண்டு, கண்சிவந்து, எம்மைமதியாத இந்தப்பெருங்கடலை என்வில்லம்பினாற் கலங்கச்செய்து, இறந்த கருமீன்திரளால் இடராக்கி, வானரக்கூட்டங்கள் நடக்கின்றமையாகிய அணையொன்று அமைப்பேன், தம்பி, வில்லைத்தாவென்று கேட்டான். உடனே தம்பி வில்லெடுத்துக்கொடுக்க வாங்கி, அதரந்துடிக்கவும், புருவமேலேறவும், கருணை பொழியும் கண்கள் தீயைப் பொழியவும் மிகுந்த கோவத்தோடு வில்லை வளைத்து, நெருப்பைக் கக்குகிற கொடிய பாணங்களைப் பிரயோகித்தலும், வருணன் தன்பிலத்திலிருந்து மிகுந்ததுன்பத்தோடு மனங்கலங்கி, ஸ்ரீரகுநாதனுக்கெதிரில்வந்து வணங்கி நின்று, உனக்கு அடைக்கலம் புகுந்தேன், விசுவாமித்திர முனிவருடைய யாகத்தைக்காத்தவனே, தேவர்கள் தொழும்படியான திருவடியையுடைய அழகனே, வேத முதல்வனே, உயிர்களுக்குத் துணைப்பொருளே, ஜாநகிதழுவுந் திருமார்பையுடையவனே; அன்போடுவந்தடைந்தவருடையதுன்பங்களை நீக்குகின்ற அருட்கடலே, திருவடிப் பொடியால் அகலிகையின் சாபந்தீர்த்தவனே, தாடகைமுதலான அரக்கர் கூட்டத்தை வேரோடுகளையும் பொருட்டும், தேவர்குலம்

செழிக்கும் பொருட்டும் அவதரித்த மேகவண்ணனே, என்னிடத்தி லுண்டான குற்றத்தைப் பொறுத்தருளி, அடியேன் சொல்லுகிற இதனைக்கேட்டருளவேண்டும், ஆதிகாலத்தில் பிருதிவிமுதலிய பஞ்சபூதங்களையும் பிரமதேவன் படைத்ததுமுதல் இதுவரைக்கும் அவைகள் தத்தம்நெறி கடவாதிருக்கின்றன, அதுபோலவே நானும் எனதுநிலைமை கெடாதிருக்கவேண்டும், என்நிலைமை மாறுபடுதற்கு நான் சம்மதிக்கமாட்டேன். நீ வில்லேந்திப் போர்செய்யப்புகுந்தால், வில்வித்தையில் சமர்த்தராயிருக்கிற பிறரும் போர்புரியத்தொடங்குவார்கள். ஆதலால், காகுத்தனே; வேறோருபாயம் சொல்லுகிறேன், என்னென்றால், இந்த வானரசேனைகளில், தெய்வத்தச்சனாகிய மயன் புதல்வனும், நளனென்னும் பெயருள்ளவனுமாகிய ஒருவனிருக்கிறான். அவன் தன்கைப்பட்ட இருணம் மலைமுதலிய எல்லாப் பொருள்களையும் நீர்மேல்மிதக்கப்பண்ணுவான், அவனைக்கொண்டு ஒருஅணைகட்டுவித்து, அவ்வழியாக இலங்கையை அடையலாம் என்றுசொல்லி, வருணன் தன்னுருவை மறைத்தவுடனே, தேவர்க்கு இதஞ்செய்தற்பொருட்டு அவதரித்த ஸ்ரீரகுநாயகன், மிகுவிருப்பத்துடன் நளன் என்பவனை அழைத்து, அவனைநோக்கிச் சொல்லுகின்றான் வாராய்நளனே, நீதச்சத்தொழிலில், மயன்போலப்பெருமையும் அறிவும் படைத்திருக்கிறாயாதலால், நாங்களெல்லாம் இலங்கையைச்சேரும்படி இந்த அலைகளோடுகூடிய கருங்கடலில் ஒரு அணை கட்டவேண்டுமென்று நியமித்தவுடன், அதற்கிசைந்த நளனென்பவன், தெய்வத்தச்சனாகிய மயன் என்தாயைநோக்கி, சிற்பத்தொழிலில் அதிசமர்த்தனாகிய என்னைப்போலவொருசிறுவனைப் பெறுவாயென்று வரந்தந்துபோனபடியேபிறந்தேன்; தேவரீர் கட்டளையிட்டபிரகாரம் செய்துமுடிக்கிறேன் என்றனன், ஸ்ரீராமபிரானும் வானரவீரரைநோக்கி, நீங்களும் உம்முடைய சேனைகளோடுகூடி அணைகட்டப்போங்கள் என்றுநியமித்தான். உடனே வானரக்கூட்டங்கள் கருடனைப்போலவும், காற்றைப்போலவும் எழுந்து ஸ்ரீரா

மபிரானிடத்தில் விடைபெற்று, உலகமுழுநும் பரவிச்சென்று, காட்டுமரம் கொடிசெடிகள்முதலிய எல்லாப்பொருள்களையும் எடுத்துக்கொண்டுவந்துகொடுக்க, தெய்வத்தச்சன் மகனுகியநளன் கடலையடைத்தான், இவ்விதமாகச் செய்யப்பட்ட அணை எழுநூற்றுமுப்பதுயோசனை நீளமுள்ளது, இந்தச்சேதுவின் மேற்சந்திரசடாதரனுகிய சிவபெருமான் எழுந்தருளியிருந்து, இதில் மூழ்குவோராகிய முக்தர்களிடத்தில் கருணைவைத்து, அவர்களுடைய மனோரதங்களையெல்லாம் நிறைவேற்றுவர். பலவகையான விரதங்கள் யாகங்கள் தவங்கள் முதலானவற்றைச்செய்கிற உண்மைநெறியையுடையவர்களும் இதில்மூழ்கினுல் சர்வபாபவிமோசநத்தை யடைவார்கள். அச்சத்தைத்தருகிற இருட்கூட்டத்தைக் கிழித்தெழுகின்ற சூரியனுடைய ஒளிபோல நிகரில்லாததாகிய வெற்றிப்புகழையுடைய ஸ்ரீரகுநாயகன், வாநரங்களால் கட்டுவித்த சேதுவின்மூலமாகிய இ[illegible]மையைத்தருகிற தருப்பசயநம்என்றுஉலகம்சொல்லும். முற்காலத்தில் ஸ்ரீராமபிரான் சேதுபந்தநஞ்செய்தகதை யிதுவேயாகும். ஸ்ரீராகவன்வகுத்த இந்தச்சேதுவில் அளவற்ற தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றின் அளவும் பெயருஞ்சொல்லுதற்கு, அவன்விட்டுவந்த அணையாகிய ஆதிசேடனுலும் முடியாது, இந்தஅளவற்றதீர்த்தங்களுள்ளே முக்கியமானவை இருபத்துநான்கு. அவை-சக்கரதீர்த்தம், வேதாளதீர்த்தம், பாவவிநாசம், சீதாகுண்டம், மங்களதீர்த்தம், அமுததீர்த்தம், பிரமகுண்டம், அநுமகுண்டம், அகஸ்தியதீர்த்தம், இராமதீர்த்தம், இலக்குமணதீர்த்தம், சடாயுதீர்த்தம், இலக்குமிதீர்த்தம், அக்கினிதீர்த்தம், சுக்ரீவதீர்த்தம், சிவதீர்த்தம், சங்குதீர்த்தம், கங்கையமுனைகயைகோடிதீர்த்தம், சாக்கியவமுதசர்வதீர்த்தம், தநுக்கோடி தீர்த்தம் என்பனவாம், இவற்றில் தம்மனைவியரோடு மூழ்கினவர்கள் பாசவேரறுத்துப் பரகதியடைவார்கள். இந்தக்கதையையெடுத்துப் பேசுவோரும் பிறப்பிறப்பில்லாதவராய்ப் பே

ரின்பவாழ்வை யடைவார்கள் என்று சூதபுராணிகர் சௌநகாதிமுனிவர்களுக்குச் சொல்லியருளினுர்.

சக்கரதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள்முனிவர்களே; முன்னொருகாலத்திலே காலவமகாரிஷி; தென்பாகத்திற புல்லாரணியப் பாலோடை யென்னும் நதிக்கருகில் விஷ்ணுவைநோக்கித் தவஞ்செய்யவேண்டி ஊணுறக்கமின்றிப் பொறிபுலனடக்கி, மவுனத்தோடுஞ் சாந்தமடைந்து வாயுபக்ஷணம் பண்ணிக்கொண்டு, ஆகாயத்தினின்றிலங்கு மேழுமேகங்களில் ஆவர்த்தமென்னு மேகத்தால் பெய்கின்ற மழையோடுமழையாயும், காற்றோடுகாற்றாயும், தீயோடு தீயாயும், மகாவிஷ்ணுவினது அஷ்டாக்ஷரத்தை இடைவிடாமல் தியானித்துக்கொண்டு, தேவவருடத்தில் ஆயிரம்வருடம்வரையில் தவஞ்செய்து கொண்டிருக்கையில், அம்முனிவர்மீது ஸ்ரீமந்நாராயணன் கருணைகூர்ந்து, சங்குசக்ரகதாபாணியாய், கருடவாகனமீது, மகாலட்சுமிசமேதராய், முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணுயிரம்ரிஷிகள், கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தர்வர், சித்தர், வித்யாதரர் உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர் யாவரும் புடைசூழ வெழுந்தருளி, புல்லாரண்ய க்ஷேத்திரத்தில் பஞ்சாக்கினி மத்தியில் தவஞ்செய்து கொண்டிருக்குங் காளவமுனிவனுக்கு ப்ரசன்னமாக, அப்போது முனிவன் கண்ணைவிழித்துக் கடவுளைநோக்கி யெழுந்து, மகாபக்திவிநயத்தோடும் அஷ்டாங்க பஞ்சாங்கதிரியாங்கமாய்ப் பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரத்தின்மேற் கூப்பி, ஆனந்தக்கூத்தாடி புளகாங்கிதங்கொண்டு, இருகண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் தாரைதாரையாய்ப்பெருக, ஆண்டவனை ஸஹஸ்ரநாமங்களாலுந் தோத்திரஞ்செய்துநிற்க, ஜகதீசனுகிய திருமால்மனமகிழ்ந்து, காளவமுனிவனைப்பார்த்து, முனிவரனே; நீசெய்ததவத்திற்குயாம் மெச்சியதால் உமக்கென்னவரம் வேண்டுமென்றுகேட்க, காளவமகாரிஷி, சுவாமி, வே

தாந்தமூர்த்தியே, அடியேன் தேவரீரைப் போலவுருவங் கொண்டு, வைகுண்டத்திலெப்போதும் உம்மைவிட்டகலாதிருக்கவும், உமதுசரணாரவிந்தத்தை நித்யமுத்தராகிய பரமபாகவதாளுடனே வணங்கிக்கொண்டிருக்கவும் வாக்கருளவேண்டுமென்றுகேட்டனன்; அப்போது ஸ்ரீமந்நாராயணன், காளவமுநியே; நீ ஒருவருங்கேளாதவரத்தைக் கேட்டமையால் நாம் அப்படியேகொடுப்பதற்குத்தடையில்லை, ஆயினும், இக்கர்மபூமியிலே யின்னஞ்சலன மநுபவிக்கவேண்டியிருப்பதினலே, அவைதொலையும்படியாய் நீரிப்போது தவஞ்செய்துகொண்டிருக்குமிடத்திற்குச்சிலதூரம் உத்தரபாரிசத்திலே, தருமபுட்கரிணியென்றொருதடாகமிருக்கின்றது. அந்தத்தடாகத்தினிடம் இதற்கு முன்னோர்காலத்திலே, தருமதேவதையானது, தான் அன்பால் சிவபிரானைநோக்கித்தவஞ்செய்து கொண்டிருக்கையில், சிவபெருமான்மான்மழு சதுர்ப்புஜ காளகண்டதிரிநேத்ர சூலபாணியாயும், சந்திரசடாதரமூர்த்தியாயும், பார்வதிசமேதராயும், சிவகணங்கள்சூழ, வெள்ளைவிடை மீதெழுந்தருளித் தருமதேவதைமுன் ப்ரத்யக்ஷமாகி, உனக்கென்னவரம்வேண்டுமென்றுகேட்க, தருமதேவதையும்வணங்கித் தோத்திரஞ்செய்து, சுவாமி; அடியேன்சர்வகாலமும் தேவரீரது திருப்பணிசெய்து தேவரீரைச் சுமந்துகொண்டிருக்க ஆவல்கொண்டமையால், அவ்வாறருள்செய்யவேண்டுமென்றுகேட்க, அதற்குப் பரமசிவன், சந்தோஷமடைந்து அவ்விடத்திலோர் தடாகத்தை, தெய்வீகமாயுண்டு பண்ணி அதில்தருமதேவதையை மூழ்கச்சொல்லினன், அவ்வுரைகேட்ட தருமதேவதையும்அப்படியேமூழ்கையில், முன்னிருந்தவுருவமாறி, நந்தியுருவமாய், நான்குகால்களும் இரண்டுகொம்பும் வாலுமாய்த்தோன்றி, சுவாமியின் முன்னிற்க, அதுகண்ட நீலகண்டமூர்த்தியாகிய பரமசிவன், பார்வதியாருடனே அதன்மீதெழுந்தருளி, யாவருக்குங்காட்சிகொடுத்து, இத்தடாகத்திலே தீர்த்தமாடி, நம்மைத்தாங்கினமையால், இத்தடாகத்திற்கு இதுமுதல் தருமபுட்கரிணி யென்று நாமம்வழங்குதலோடும், இதில்தீர்த்தமாடியபேர்

கள், நினைத்தபடி, எல்லாநன்மைகளையும் பெறுவார்களென்று திருவாய் மலர்ந்தருளி, பின் தேவர்களுடனுஞ் சிவகணங்களுடனுங் கயிலாயத்திற் கெழுந்தருளினன்.

ஆதலால் அத்தடாகத்திற்கு அன்றுமுதல் தரும புட்கரிணியென்றும், தெய்வீகத் தன்மையுடைய தென்றும், மகத்துவ மிருப்பதால், நீரும் அதில்மூழ்கிச் சதாகாலம் அக்கரையிலே தவஞ்செய்து கொண்டிருந்தால், நம்முடைய வுருவம் பெற்றுவைகுண்டத்துக்குவருவீர், மேலும், அவ்வண்ணம் நீர் தவஞ்செய்கையில், அன்னியரால் இடையிலேதேனுந்தவத்துக்குப்பின்னம் நேரிட்டால், அப்படி நேரிடச்செய்தவரை, நம்முடையசக்கரம் உடனேவந்து, அக்கொடியரைச் சங்கரித்துவிடுமென்று திருவாய்மலர்ந்தருளி, மாயப்பிரான் ஸ்ரீவைகுண்டத்துக் கெழுந்தருளினன். பின்னர் காளவமுனிவனும் அவ்வாறுசென்று, உதயாதி அந்திகோரத்திற்குள், அத்தருமபுட்கரிணியில் மூன்றுகாலந் தீர்த்தமாடி, அதின்கரையில் தனது தேவபூசையாகியசாளக்கிராமங்களை வைத்துப்பிரதிஷ்டைசெய்து, பூசைபண்ணிக்கொண்டு, சங்கிரம சஷ்டி அஷ்டமிசதுர்த்தசி பூர்ணை அமாவாசை முதலாகிய தினங்களிலே தர்ப்பண முதலாகிய கிரியைகளை நடாத்தித் தவஞ்செய்து கொண்டிருக்கையில், அம்முநிவனை ஒரு அரக்கன்வந்து மாயையால் பாய்ந்தெடுத்தான், அப்போது காளவமுனிவன் ஸ்ரீமந்நாராயணனை நினைந்து துதிக்கையில், உடனே விஷ்ணுசக்கரம் கோடிசூரியப்பிரகாசம்போல் சரசரவென்று சுழன்றுவந்து, அவ்வரக்கனைச் சங்கரித்துக் காளவமுனிவனை விடுவித்துவிட்டது. அப்போது அம்முநிவன் மிகநடுக்கங்கொண்டு, விட்டுணு சக்கரத்தைப்பணிந்து, நீ யெந்நாளுமென்னை யிடைவிடாமற் காக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அப்போது சக்கரஞ்சொல்லுகின்றது, யானெந்தையாகிய ஸ்ரீமந்நாராயணனது உத்தரவின்படிவந்து அரக்கனைச் சங்கரித்ததுசரியே, இனிமேல் உமதுவேண்டுதனிமித்தம் நான்வந்து இருக்கவேண்டுமாயின் எம்பிரானிடம் விடைபெற்றுக்கொண்டு உன்னிஷ்டப்படி

வர்திருக்கின்றேன் இப்போது நானிந்த அரக்கனைக் கொன்ற
பாவந்தீர எனக்கொருவகை சொல்லுமென்று சக்கரங்கே
ட்க, அதற்கு அம்முநிவன் சந்தோஷமடைந்து, இத்தடாகத்
திலே மூழ்கென்றுசொல்ல, அதுபோலச் சக்கரம் உடனே
மூழ்கித்தெய்வீகமாய்த் தனகருமத்தையொழித்து;பழையபடி
ப்பிரகாசம் பொருந்திச் சொல்லுகின்றது, நானித்தடாகத்தில்
முழுகியபடியால், இன்றுமுதலாக இதற்குச் சக்கர தீர்த்தமெ
ன்று பெயர்விளங்கக்கடவதென்று திருவாய் மலர்ந்தருளி,
இன்றுமுதல் இத்தீர்த்தத்தில் யார்மூழ்கினலும் அன்னவரை
ப்பற்றியபேய்பசாசம் அலகைவேதாளங்களெல்லாம் விலகிப்
போகக்கடவதென்றும் வாக்குத்தந்து,ஆசீர்வாதஞ்செய்து;கா
ளவ முனிவனிடத்தில் விடைபெற்றுச் சக்கரம்வைகுண்டம்
போய்ச் சேர்ந்தது.

அவ்வாறுண்டாகிய சக்கரதீர்த்தம் ஆதியிற் சேதுபந்த
னஞ்செய்த திருவணையிலுண்டாக்கப்பட்டு, தருமபுட்கரிணி
யென்று பெயர் விளங்கிக்கொண்டிருக்கின்றதன்றி, இத்தீர்த்
தத்தின்பெருமை யொருவராலுஞ் சொல்லிமுடியாது. அன்றி
யும், ஆயிரங்கோடி ஜன்மங்களிலே செய்தபாவங்களை யெல்
லாம்அச்சேதுவிலுண்டாயிருக்குஞ் சக்கரதீர்த்தத்தை நினைத்
தாலும் விமோசனமாகும். மேலும், உலகிற் சொல்லப்பட்ட
கங்கை யமுனை துங்கபத்திரா கிருஷ்ணை நருமதை கோதா
வரி காவேரிமுதலியவும் இதற்கிணையல்ல வென்று சூதமுனி
வன்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்ய வாசிகளாகியமுநி
வரர்,பிரமானந்தபரிதராய்,ஆச்சரியங்கொண்டு, சூதமுநிவரை
நோக்கி, சுவாமி, இத்தன்மைபொருந்திய சக்கரதீர்த்தக் கரை
யில் தவஞ்செய்திருந்த காளவமுனிவனைத் தூக்கிய அரக்கன்
யார், அதனையும், ஸ்ரீமந்நாராயணன் அவ்வரக்கனைத் தனது
திகிரியை விடுத்துக் கண்டித்தகாரணத்தையும், அடியோங்
களுக்குப் புலப்படுத்தவேண்டுமென்று பணிய, அவர்களுக்
குச் சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர்.

சக்கரதீர்த்தச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

துத்தமச்சருக்கம்.

நைமிசாரணிய வாசிகளாகிய முநிவர்களே, இவ்வுலகின்
நாற்றிசையினுள், தென்பாகமாகிய தென்றிசையில், திருவால
வாயென்னுந்திருநாமமுடையமதுராபுரித்தலத்தில்,திருவுருக்
கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்சுந்தரேசனாகிய சோமசுந்
தரக்கடவுளைப் பூசைசெய்துகொண்டு,சதாகாலமுமெக்கியங்க
ளும் யாகாதிகிரியைகளும் வழுவின்றி நிறைவேற்றிக் கொ
ண்டு வருகின்ற வசிஷ்டமுனிவர்முதலிய இருபத்துநாலாயிர
முநிவர்களும் தீவினைக் கெட்டாதவர்களாய், நற்கிரியைகளை
யநுட்டித்து வருகையில், விசுவாவசு வென்னுமோர் காந்
தர்வ ராஜகுமாரனாகிய துத்தமனென்பவன், தன்னுடைய கர்
வத்தால் அநேககாந்தர்வ மாதரைக்கூடி யுலாவி, தானு மிரு
யானையின் கூட்டத்துள் மும்மதங்கொண்ட யானையைப்போ
லும், மான்கூட்டத்துள் புலிபோலும்,பசுக்கூட்டத்துள் இட
பம் போலும் கர்ஜித்துக்கொண்டு,பூலோகத்திற்குவந்துவே
ப்பமரங்களாலுங் கடப்பமரங்களாலுஞ்சூழ்ந்து நெருங்கியிரு
ண்டகாவேபோற் பிரகாசிக்கின்ற அம்மதுராபுரி யென்னுந்
தலத்தில், விசாலத்தோடும் விளங்கிக்கொண்டிருக்கும் பொற்
றாமரை யென்னுந்தடாகத்திலே, நிர்வாணமாய்த் தானுந் தன்
மாதர்களுடனிறங்கி ஜலக்கிரீடை செய்துகொண் டிருக்கையில்,
அத்தலத்தில் வாசஞ்செய்து கொண்டிருக்கும் வசிஷ்டர் முத
லிய மகாரிஷிகள் இருபத்துநாலாயிரம்பேரும், ஸ்நானஞ்செ
ய்து நித்தியகருமங்களைமுடிக்க அத்தலத்திலிருக்கும் பொற்
றாமரைத் தடாகத்தை நாடிவருங்காலையில், அவர்வரவுகண்ட
காந்தர்வமாதர்யாவரும் அதிகநாணத்தோடுந் தடாகத் தினின்
றுங் கரையேறி,அவரவர்கள்சேலைகளையெடுத்து உடுத்திக்கொ
ண்டனர், துத்தமனென்னுங்காந்தருவன்மாத்திரம் இறுமாந்து
சிறிதேனு மச்சமில்லாமலும் நாணமில்லாமலும் அசட்டை
செய்து நிற்கக்கண்ட மகாரிஷிகளியாவருங் கோபங்கொண்டு,
கண்களில்தீயெழநோக்கி, அடாகாந்தர்வா, நீ யெங்கள் வரவு

கண்டும் நிர்வாணமாய் நின்றெங்களை யவட்டியஞ் செய்தமையால் அரக்கனுகக் கடவையென்று சபித்தனர்.

தபோதனர்களாற் கொடுக்கப்பட்ட சாபத்தைத் தூத்தமன் கோடைகாலத்திடி முழக்கங் கேட்ட கட்செவிபோலும், அரிமாவென்னுஞ் சிங்கத்தின்கர்ஜனைகேட்ட யானைபோலுங்கேட்டு நடுங்கி, உள்ளம்பதைத்து, யாதுந்தோன்றாமற் சித்திரப்பாவையென நின்றனன், இப்படி நிற்கிறமனனைக்கண்ட காந்தருவமாதர் யாவருமிரக்கங்கொண்டு, அந்தோ அரசே; என்செய்வோம், உம்மைவிட்டெவ்வாறுய்வோம், நீர் அம்மகாமுனிவர்களை அணைந்து அவர்கள் பாதபத்மங்களிற் சரணாகதியென்றடைந்தால், உமது குற்றத்தை மன்னித்தாட்கொள்வரன்றே, மேலும், "சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே" என்னும் நீதிவாக்கியமிருக்கின்றமையால் எவ்விதமும் க்ஷமிப்பார்கள், போய்ப் பணியுமென் றுரைத்தனர், அதைக்கேட்ட தூத்தமன், முனிவர் சாபத்தினால் இக்கிரமைகொண்டு யாதுந்தோன்றாது நிற்க, அம்மாதர்கள் மனம்வெதும்பித் துக்கசாகரத்திலாழ்ந்து, நாயகனை விட்டுப் பிரியமாட்டாதவர்களா யாவரு மொருமித்துக்கூடி, வசிஷ்டர் முதலிய முனிவர்களைநெருங்கிக் கண்ணீர் விடுத்துச் சண்டமாருதத்தாற் சாய்ந்ததாபராதிகளைப்போல் இருடிகளது பாதபத்மங்களிற் சாய்ந்து, தேவரீர்பெருமை தெரியாமையினாற்செய்த தூத்தமனது அபசாரத்தைமன்னித்து, விமோசனஞ்செய்ய வேண்டுமென்று அநேகமாய்த் துதித்துப் பரத்தடிவீழ்ப்பணிய, வசிஷ்டர்முதலிய யாவருங்கூறுவார்கள்.

பெண்களே, இக்கொடியவனாகிய தூத்தமன் எங்களால் நேரிட்டசாபத்தை யநுபவித்தாலொழியத்தீராது, ஆகிலும் உங்களை வேண்டிச்சொல்லுகின்றோம், இவன் இந்த அரக்கவுருவத்துடனே பதினாறுவருடம்வரையில் நரமாமிசமுதலிய ஜீவ இமிசையாற் பசிதணித்துலாவி, பின்னர் முடிவில் சிறப்போங்கிய சேதுவிலிருக்கப்பட்ட சக்கரதீர்த்தக்கரையில்

தவஞ்செய்துகொண்டிருக்குங் காலவமுனிவனைப் பட்சணஞ்செய்யவேண்டி அவனைக் குறுகியெழிப்பான்; அப்போது அம்முனிவர் நடுக்கமுற்று ஸ்ரீமந்நாராயணனைச் சிந்திப்பார்; அச்சிந்தனைகேட்ட ஜகதீசன் தன்சக்கரத்தைப் பிரயோகிப்பன். அச்சக்கரம் அதிவேகத்தோடுங்கூடிவந்து இவன் சிரத்தைக் கண்டித்தவுடனே சாபவிமோசனமாகும்; பின்பு காந்தர்வ வுருவங்கொண்டு உங்களைச்சேர்ந்து சுகித்திருப்பானென்று சொல்லி, வசிஷ்டர் முதலிய யாவருந்தங்களாசிரமத்திற்கெழுந்தருளினர், உடனே தூத்தமனாகிய காந்தர்வனும் மூன்றாம் பிறைபோன்ற வக்ரதந்தங்களும், அந்தகாரம் போன்ற தேகமும், செம்மேகம்போன்ற கேசங்களும், வளைந்த புருவமும், தீவர்த்தியைப் போன்றகண்களும், மலைபோன்ற மூக்கும், அலைபோன்ற நாக்குமுடையவனாய்த் தன்னை நேசித்திருந்தமாதரைப் பசியினாற் பக்ஷிக்கவேண்டித் துரத்தினான், உடனே காந்தர்வமாதர் யாவருங்கண்டு நடுக்குற்று, மெய்சோர்ந்து, எவ்வணமீள்வோமென்று அதிவேகமாயோடிக்காந்தர்வலோகம்புகுந்தார்கள். அப்பால் காந்தருவனாகிய அரக்கன் காடுமலைவனம் வனாந்தரங்களிலும் காறுமுதலிய பல இடங்களிலும் பதிகளினும் சுடுகாடுகளிலும் சூறாவளியென்னுங் காற்றைப்போற் பசிப்பிணியாற்சுழன்று, மான், பன்றி காட்டானை, சிங்கம், கரடி, புலி, முட்பன்றி முதலியவற்றையருந்தியும், பறவையினங்களைப் புசித்தும், ஜலத்தில்வாழ்கின்ற மச்சங்களை ஜலத்தோடே வாரிவாரியருந்தியும், தனக்குச்சிக்கிய முனிவர்களைப் பிடித்துக்கொன்றுதின்றும், உதிரங்களைக் குடித்தும், மலமூத்திரங்களைப் புசித்தும், ஊர்வனவாகிய ஜெந்துக்களில் மலைப்பாம்புமுதலிய சர்ப்பங்களையும், உடும்பு, மலையுடும்பு, பல்லி, அரணைகளைக் கையினாற்பிடித்துக்கடலைபோற் கொறித்தும், தன்பசி நோயடங்காமல், ஓர்நாள் சக்கரதீர்த்தக்கரையைநாடி, அதன்கரைமேல் தருப்பாசனம்பரப்பி, அதன்மேல், அங்கவாதனமாகிய பத்மாசனஞ் செய்துட்கார்ந்து, மனத்தைச் சுத்தசத்துவத்திற் பொருத்தி, ஸ்ரீமந் நாராயண

னது அஷ்டாக்ஷரத்தைச் செபித்துக்கொண்டிருக்குங் காளவ முனிவனைக்கண்டு, அதிக ஆவல்கொண்டு, திடீரெனப்பாய்ந்து பற்றித்தூக்கினான், அப்போது வசிட்டரால் நியமித்த சாபத்தின் பிரமாணக்குறிச் சமீபித்தமையால் இவனது கர்ம விமோசனமாம் பொருட்டுக்காளவரும் மிகவடுங்கி, கருணைக் கடலாகிய திருமாலைச்சிந்திக்க, அப்போது ஆபத்பந்துவாகிய ஜகதீசன் தன் திகிரியைப் பிரயோகஞ்செய்த மாத்திரத்தில், அச்சக்கரம் கோடிசூரியப்பிரகாசமாய் ஜொலித்துக்கொண்டு, அதிவேகத் தோடும்வந்து, அரக்கன்தலையைக் கண்டித்துத் தள்ள, அத்தீர்த்தத்தில்மூழ்கியவுடனே, அரக்கனாகிய துத்தமனுங் காந்தர்வ சொரூபங்கொண்டு, அருகேயிருக்குங் காளவ முனிவனது பாதகமலங்களை வணங்கித் தோத்திரஞ்செய்து, சுவாமீ, தேவரீராலே அடியேனுக்குச் சாப விமோசனங் கிடைத்ததென்று பணிந்துநிற்க, அதுகண்டமுனிவர் சித்தங் களித்து, துத்தமனாகிய காந்தருவனைப்பார்த்துக் கூறுவார், அப்பாகாந்தருவனே, உன்சாபவிமோசனம் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருப்பதால், நீ இந்தச் சக்கரதீர்த்தத்தில் மூழ்கென்றுசொல்ல, அதுபோல் அவனு மூழ்கியவுடனே, தெய்வலோகத்திலிருந்து விமானம்வர, அதன்மேலேறிக் காளவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, காந்தர்வலோகம் போய்ச் சேர்ந்து, முன்னே தன்னைவிட்டுப்பிரிந்திருந்த காந்தர்வ மாதருடனேகூடிச் சுகித்திருந்தான்.

இத்தன்மைவாய்ந்த சக்கரதீர்த்தம் இந்தத்தேவிபட்டணத்தில் மாத்திரமிருக்கிறதென்று யோசிக்கவேண்டாம், இதுபோலவே தர்ப்பசயனத்திலும் ஒருகடைப்பக்க மிருப்பதன்றியும் இதனதுவிசாலங் கிழக்குமேற்கு ஒருயோசனை யுள்ளதாயும் விளங்கியிருக்கையில், பிரமசிருட்டியிலுண்டான மலைகளுக் கெல்லாஞ் சிறகுகளிருக்கும்போது, அவைகள் லோகாலோகங்களெல்லாம் பறந்துதிரிந்தும் ஊர் நாடு தேசங்களையும், கோயில்குளங்களையும் [illegible] நல்வசிக்கும் பன்னசாலை முதலிய மடங்களையும் இராக்காலங்களிலும் பகற்காலங்களிலும் ஆகாயமார்க்கமாய்ப்பறந்து வந்து, திடீரென்று கீழேதாழ்ந்து, யாவற்றையும் நாசப்படுத்திக்கொண்டு திரிந்ததுமல்லாமல் யாவருக்குந் துன்பத்தைக் கொடுக்க, உலகிலுள்ள தபோதனராகிய இருடிகள்முதலிய யாவருந் தேவர்கட் கிறைவனாகிய இந்திரனிடத்தில் முறையிட, அம்முறைகேட்ட தேவராஜனுங் கோபங்கொண்டு, வச்சிராயுதபாணியாய் பூலோகத்திலே பிரவேசித்துப்பார்த்து, உண்மை யெனக்கொண்டு, ஆச்சரியமிகுதியி னெழும்பிவரும் பருவதங்களையெல்லாம் வளைத்துச்சின்னாபின்னப்படுத்தியும், சிறகுகளை வெட்டியெறிந்தும், பலவிதமாகத் துன்பப்படுத்துகையில், அவற்றிலோர்மலை தன் இரண்டு செட்டைகளுமிழந்தமையால், ஆகாயத்தினின்றும் பூமியில் பிரகாசித்துக் கொண்டிருக்குஞ் சக்கர தீர்த்தத்தில் வீழ்ந்து அழுந்திப்போனபடியால், அம்மலையால்திட்டாகிய இடந்தவிர இரண்டு கடைப்பக்கமுங் கொஞ்சமிருந்த தீர்த்தந்தானிப்போது நவபாஷாணத்திலும் தர்ப்பசயனத்திலும் விளங்கிக்கொண்டிருக்கின்றது, இதுவல்லாமலும் இச்சக்கரதீர்த்தத்தில் அஷ்டவசுக்களிலொருவனாகிய வீதூமனென்பவனுக்கும் அலம்புசையென்னு மோரரம்பை மாதுக்கும் நராகச்சனிக்கும்படிப் பிரமதேவனால்நேரிட்ட சாபமும் விமோசனமா யிருக்கின்றதென்று சூதமுனிவன்சொல்ல, நைமிசாரணிய வாசிகளாகியமுனிவர்கள்கேட்டு ஆனந்தித்தோடும், பிரமதேவனால் அஷ்டவசுக்களி லொருவனாகிய வீதூமனுக்கும் அலம்புசையென்னுந் தெய்வலோகத்துக் கணிகை மாதுக்கும் எவ்வகையாய்ச் சாபம்நேரிட்டதோ, அதையும், அவ்விருவரும் பூலோகத்தில் எப்படி உற்பவித்தாரோ, அதையும் தேவரீர் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

துத்தமச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

விதூமச் சருக்கம்.

நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, ஸ்ரீவைகுண்டவாசனுகவும், சர்வாந்தரியாமியாகவும், சகல்புவன கர்த்தாவாகவும், அநுதிவஸ்துவாகவும், ஆதிமூலப்பொருளாகவும், அஷ்டாக்ஷரனுகவும், அடியார்க்கெளியவனுய் திருவருள் சுரந்தாட்கொள்ளும் ஸ்ரீமந்நாராயணனருளாலிலங்கும் அண்டப்பரப்பின்கண் ஓங்கும் அசராசரங்களைப் படைக்கும் பொருட்டு ஓர் புதல்வனை வேண்டித்தன் உந்தியாகிய பதுமத்தினின்றுஞ் ஜனிப்பித்து, பிரமலோகத்துக் கதிபதியாக்கப்பட்டுக் கலைமகள் சமேதனுய்விளங்கும் சதுர்முகப் பிரமனென்னுஞ்சிருஷ்டிகர்த்தனும், அமராவதிக்கிறைவனுகிய தேவேந்திரனும், மூப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளும், கின்னரர் கிம்புருடர் கருடர் காந்தருவர் தும்புரு நாரதர் சித்தர் வித்யாதரர் பன்னகருரக சாரணர்களும், நவகோடிசித்தரும், சப்தரிஷிகளும், அஷ்டவசுக்கள் அஷ்டதிக்குப்பாலகர்முதலிய தேவதேவருஞ் சூழ்ந்தகாலையில், கணக்கூட்டங்க ளணியணியாய்நின்று, ஆலவட்டந் தாலவட்டம் முத்துக்குடை பீலிக்குடைகளை கவிக்க, சாமரை கவாஞ்சி கின்னரி தம்புரு சுரமண்டலி வீணை முகவீணைகளும், காகளபூரி பேரிதவுண்டை துத்தாரி புள்ளாங்குழல் நாகசுரமுதலிய வாச்சியங்களும் முழங்கவும், அரம்பை யூர்வசி மேனகை திலோத்தமைமுதலிய அப்சரஸ்திரீகள் பரதநாட்டிய சங்கீதம்பாடவும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்னும்நான்கு வேதங்களும் ஒலிசெய்ய, தேவரிஷிகள் முதல்யாவரு மாசிகூறிநிற்க, மகரகுண்டல கேயூரமணி மகுடங்கள் பிரகாசிக்கப் பலவாயிரங்கோடி அண்டபுவன சராசரங்களிலும் எறும்புகடை யானைமுதலாகிய எண்பத்துநான்கு நூறுயிரம்ஜீவாத்மாக்களின் சிரத்திலே அவரவர்களுடைய நல்வினை தீவினைகளும் எழுதப்பட்ட எழுத்தாணியானது வலக்கரத்திற் பிரகாசிக்கவும், தான் ஆரோகணிக்கு மன்னமானது கவரிமான்

கற்றைகளைப்போன்ற தோகையும், ஒப்புவமையில்லா வனப்போங்கியசிரமும், பவளம்போன்றகால்களும், மெல்லிய வடிவும் பிரகாசிக்கத்தக்கதாகவும், சத்தியலோகத்திலே பிரமதேவன் கொலுமண்டபத்தி லெழுந்தருளி யிருக்கும்போது, அரம்பாஸ்திரீகளில் அலம்புசை யென்பவள் பரத சாஸ்திரவிதிப்படி சுத்தமத்தளம் புள்ளாங்குழலொலிக் காலத்தி லிறழாமல் நடனஞ் செய்கையில், அந்நடன சிங்காரத்தை விநோத விசித்திரமாகப் பிரமதேவன்முதலிய யாவரும் கண் இமையாமலும் வாய்பேசாமலும் கரசரணுதிகளசையாமலும் பிரமைகொண்டவர் போற்பார்த்துக் கொண்டிருக்கையில், அலம்புசையின் தேகலாவண்ய விசித்ரவஸ்திரத்தை வாயுபகவான் விளையாட்டெனநினைத்தவிழ்ந்து கீழேவிழும்படிசெய்தமையால், அம்மாது நிர்வாணமாய் அதிநாணத்தோடே நிற்க, பிரமன்முதலிய தேவர்களியாவரும் வெட்கித் தலைகுனிந்திருக்க, அவர்க்கிடைக்கையில் வசுவிதா அதிமோகத்தைக் கொண்டும் தான்கொண்டமோகக் குறிப்பை யவளறியக் காட்டியுந் தானும் மோகங்கொள்ளவுமாய் இப்படியிருவரு மொருவர்க்கொருவர்கொண்ட மையலையறிந்த மன்மதன், இருவர்மீது மலர்ப்பகழியெய்ய, அதனைசகிக்க மாட்டாதவனுய் மூர்ச்சித்திருந்த அஷ்டவசுக்களி லொருவனுகிய விதூமனென்பவனையும் அலம்புசையினது கோலத்தையுங்கண்ட பிரமன் உடனே விதூமனையும் அலம்புசையையு மழைத்து, நீங்கள் தேவசபையிலே, நாணமென்பதை மோகத்தினுலே மறந்து, இந்தேவசபையிலிருக்கு மெங்களையுங் குறியாம லொருவர்க்கொருவர் கண்ஜாடைகள் செய்திருந்தமையால், இக்கணமே நீங்க ளிருவரும் பூலோகத்திலே ஸ்திரீ புருஷராகப் பிறந்து பாணிக்கிரகணம் பண்ணிக்கொள்ளக் கடவீரென்று சாபங் கொடுத்தனன், அவ்வுரைகேட்ட விதூமனும் அலம்புசையும் நடுநடுங்கி மெய்சோர்ந்து, யாதுந்தோன்றுமல் பிரமனை வணங்கிப் பலவகையாய்த் தோத்திரஞ்செய்து, சுவாமி, அடியேங்கள் செய்தபிழைதனைப் பொறுத்துக் காக்கவேண்டுமென்று அநேகம் வேண்டுதல்செய்தும் அகடாக்ஷமாய் பூமியிற்பிற

ந்தும் வருந்தி நின்றனர்; அவர்மீது பிரமன் கருணைகூர்ந்து
சொல்லுவான்.

காமாந்தகரே, நாமிட்டசாபத்தை விலக்கக் கூடாதா
யினும் நீங்களிருவரும் நம்மைவணங்கித் துன்புறு கின்றமை
யால் உங்கள்மேற் கருணைகூர்ந்து புகலுவதியாதெனின். நம்
மாற் கொடுத்தசாபப்படி பூலோகத்திலே போய்ப் பிறந்து
மணஞ்செய்துகொண்டு சிலநாள் இராச்சியபரி பாலனம்பண்
ணிக்கொண்டிருந்து, உங்களிருவருக்கும் பிறக்கும் பிள்ளைக்
குப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்து, பின்னர் துறவடை
ந்து யாத்திரைவாசிகளாய்த் தேசசஞ்சாரஞ் செய்துவருகின்ற
போது, தெட்சணபாகமாகிய தென்திசையிலே தசரதகுமா
ரனாகிய ஸ்ரீரகுகுலோத்துங்கனாற் செய்விக்கப்பட்ட சேதுவி
லேவிளங்குஞ் சக்கரதீர்த்தத்திலே நீங்களிருவருந்தீர்த்தமாடு
வீர், அப்படி தீர்த்தமாடியபின்புடனே பாம்பின் சட்டைய
கன்று பளிங்காவதுபோலக் கர்மத்தாலுற்ற வுங்கள் மானிட
தேகம் நீங்கிப் பழையபடியே தேவவுருவத்தோடும் பொன்
னுலகம் புகுந்துவாழ்வீர்களென்று சிருஷ்டி கர்த்தாவாகிய
திசைமுகன் திருவாய் மலர்ந்தருளினன், மேலும் இவ்வாறு
பிரமன் பன்னியதோ ருரைகொண்ட விதூமனோடு அலம்
புசையுந் 'தரைகண்டார் பிறவியதைச்சார்ந்து' என்பதற்
கிணங்க பிரமனாற்கூறிய வாய்மையைக்கேட்ட விதூமன்
துன்பமுற்று, பிரமனைப்பணிந்து, தன்னிருப்பிடஞ்சேர்ந்து,
யாம்பூலோகத்தில் யாருக்குப்புத்திரனைப் பிறப்போமென்று
கருதித் தன்தம்பிமாராகிய மாலியவான், புட்பதந்தன், பலோற்
கடனென்னு மூன்றுபேரையுமழைத்து, பிரமதேவனாற்றனக்
குக்கிடைத்தசாபத்தையறிவித்து அதன்காரணத்தையுஞ்சொ
ல்ல, அதுகேட்டதம்பிமார்கள் திடுக்கிட்டுமனங்கலங்கித்துக்க
சாகரத்திலமிழ்ந்தித் தமயனைநோக்கிக் கூறுவார்கள், தேவரீர்
பூலோகத்திலே மானிடயோனியிலே யுற்பவித்துப் பிராந்தியை
யடைந் தெங்களையும் மறந்துதனித்திருக்க, நாங்கள் மூவரு
மிவணெவ்வா றும்மைவிட்டுப்பிரிந்து துன்பத்தை யடைந்

திருப்போம், இஃதன்றியும் நாங்கள் காரணமின்றித் தெய்வ
சபைக் கெவ்வாறுசெல்லுவோ மாதலால் நாங்களுங் கூடவே
பூலோகத்திற்பிறந்து தேவரீருக்குதவியுஞ்செய்து கொண்டிருக்
கும்படி கட்டளையிடவேண்டுமென்று மூவரும் வணங்கிச்
சொல்ல, அதுகேட்ட விதூமன், தம்பிமார்களே நான்தான்
வினைப்பகுதியால் நரகத்துக்குச் சமானமாகிய மானிட யோ
னியி லுதித்து வினைப்போகங்களைத் தொலைக்கப் போகின்றே
ன் நீங்களென் விருதாவாய் மானிடயோனியிலுதித்துத் துன்
பத்தை யநுபவிக்க நினைக்கின்றீர்கள், வேண்டாமென்று
அனேகவிதமாய்க்கூறியுங்கேளாமைகண்டு, உங்கள்மனத்தின்
படியே யெனக்குத் துணையாய் பூலோகத்திலே பிறப்பீர்களெ
ன்று கட்டளையிட, நால்வரும் அலம்புசையும் பாரிற்பிறக்க
வுன்னினர்.

இவர்களிப்படி சிந்தித்துக் கொண்டிருக்குங் காலையில்
பூலோகத்திலே தேவர்களாலோதும் சோமசூரியாக்கினி என்
னு முக்குலத்துள் சந்திரகுலசிகாமணியாய் தேவேந்திர குமா
ரனாகவும் பாண்டுவின் புதல்வனாகவுஞ்ஜனித்த அர்ச்சுனமகா
ராஜனுக்கு சுபத்திரையினிடமாகப்பிறந்த அபிமன்னு மகாரா
ஜனது புதல்வன் பரிட்சித்து, பரிட்சித்துவின்புதல்வன் ஜன
மேஜயன், ஜனமேஜயன் புத்திரனாகவும் கௌசாம்பி
தேசத்திறைவனாகவு மோங்குஞ் சதானீகனென்பவன், இரா
ச்சியபரிபாலனஞ் செய்துகொண்டு மநுநீதியுடனே குடிகளி
டத்தில் அதிமேலொரு கடைமை யாக்கித் தன்னுயிர்போல மன்
னுயிரையும் பாதுகாத்துத் தரணியாண்டுவரும் நாளில், தனக்
குப் புத்திரப் பேறில்லாமையால் மிகவுந் துன்பமடைந்து
யாதாந்தோன்றும் விருப்பதோடுந் தனது மந்திரியாகிய சுகந்
தானுக்குஞ் சேனாபதியாகிய விப்பிரதிபனுக்கும் அரண்மனை
ப்புரோகிதனாகிய ஞானவல்லவ னென்பவனுக்கும் புத்திர
பாக்கியமில்லாமல் வியாகுலப்படுவதுகண்டு, நால்வருங்கூடி
யொன்றுயோசித்து, தனதுசெங்கோற்குளடங்கிய தேசத்தை
ச்சார்ந்த வனத்திற் பன்னசாலை யமைத்து அதன்கணிருந்து

தவமிழைத்துக் கொண்டிருக்கும் சண்டில மகாரிஷியை
யழைத்துவந்து, புத்திரகாமேஷ்டியாகஞ் செய்யக்கருதி, அப்
படியே யாகநிறைவேற்றிப் பூரணாகுதிசெய்து, அவரவரது
மனைவிமார்களுக்குப் பிண்டங்கொடுக்க யத்தனித்தபோது;
பிரமஞானமுடைய வம்முனிவரர்; தெய்வலோகத்திற் பிரம
னுடைய சாபத்தால் புவியிற் பிறக்கவேண்டிச் சிந்தித்துக்
கொண்டிருக்கின்ற விதூமன்முதலிய நான்குபேரையும் நா
ன்கு பிண்டத்திலே தியானித்துக்கொடுத்தார்; அதுபோலவர்
களுடைய மாதரும் அன்றுமுதற் கெர்ப்பமாகவிருந்து, பூர
ண மானவுடன்; சதானீகனுடைய தேவியாகிய விண்டுமாமதி
வயிற்றிலே விதூமனும், சுகந்தரன் மனைவியாகிய சந்திரதீபி
கைவயிற்றிலே மாலியவானும், விப்ரதீபன் மனைவியாகிய சுக
ந்தலாவணிவயிற்றிலே புட்பகந்தனும், ஞானவல்லவனுடைய
மனைவியாகிய சுகந்தரர்வதி வயிற்றிலே பவோர்ணு கடனும்
கூடப்பிறந்தனர்; இவ்வகையாய் ஜனித்தவர்களுள் இராஜகுமா
ரனுக்கு சகத்திராநீகனென்றும் மந்திரிகுமாரனுக்கு பூகவல்
லவனென்றும் சேனாபதிகுமாரனுக்குச் சதுரங்கனென்றும்
புரோகிதகுமாரனுக்கு வசந்தனென்றும் நாமகரணஞ்செய்து
நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்த்து
வந்தனர். இவ்வண்ணம் வளர்ந்துவரும் பிள்ளைகளுக்கு ஐந்
து வயது பூரணமாகுங்காலையில், அயோத்தியா பட்டணத்
துக் கிறைவனாகிய இருதவன்மாவென்னு மரசன் புத்திரபாக்
கிய மில்லாதவனாய்த் தவஞ்செய்ய அவன்மனைவி மனோவதி
யென்பவள் வயிற்றிலே அலம்புசையென்னு மரம்பாஸ்திரீ
மிருகாவதி யென்னும் பெயரையுடைய பெண்ணாய்ப் பிறந்து
வளர்ந்துவருகையில், தெய்வலோகத்திற் பாம்புப் பல்லனெ
ன்னு மிராக்கதனும் அவன்தம்பியாகிய தாலசென்னியனும்
தெய்வநாயகனாகிய இந்திரனையெதிர்த்து யுத்தஞ்செய்கையி
லப்போது தேவேந்திரனுக் கவர்களைவெல்ல முடியாது பூலோ
கத்தில் கௌசாம்பி தேசத்திற் கிறைவனாகிய சதாநீகனென்
னும் வேந்தன் புஜபலபராக்ரம சாலியென்று கேள்வியுற்று

அவனை அழைத்துவரும்படியாகத் தன்சாரதியைத் தேர்கொ
ண்டு போகும்படி உத்தரவளிக்க, அவனுமப்படியேகொண்டு
போய் பூலோகத்திலிருக்குஞ் சதானீகனுக் கறிவித்து, இரதத்
தின் மீதேற்றிக்கொண்டு தெய்வலோகத்திற்குப்போய்த் தேவ
ராஜன்முன்பாக விடுத்தனன். அப்போது தேவேந்திரனும்
பூலோகத்தரசனாகிய சதானீகன் சவுரியங்களையுந் தேஜசுகளை
யுங்கண்டு தன்னிடமிருக்கு மந்திரிமார் மூவர்களி லிவனு
மொருவனாகவிருக்க மந்திரிபட்டங்கட்டி முடிசூட்டிச் சிம்
சயின்யங்களுடனே தானும் சதானீகனுமாய்ப் புறப்பட்டுப் பா
ம்புப்பல்லன் தாலசென்னியனென்னு மரக்கருடனெதிர்த்து
யுத்தஞ்செய்யும்போது, கோரயுத்தத்திலே பாம்புப்பல்லனை
யும் தாலசென்னியனையும் சதானீகன் கொன்று பொன்னுல
கத் திறைவனாகிய தேவேந்திரனுக்குச் சதானீகன் வெற்றி
மாலையைச் சூட்டினான், அதுகண்ட இந்திரன் சந்தோஷ
மடைந்து ஜெயமுரசறைந்து சதானீகனுடனே அமராவதிப்
பட்டணம் வந்துசேர்ந்து சதானீகனை மிகக்காதலோடும் நே
சித்து வருகின்றநாளில், பிரமகற்பனைப்படி சதானீகன் மரண
மடைந்தான், அதுகண்டு இந்திரன் இரக்கமுற்று அவனுடை
ய ஆத்மாவுக்கு தேவரூபத்தைக் கொடுத்து வைத்துக்கொண்
டு தூலத்தைக் கௌசாம்பிய தேசத்திலிருக்கப்பட்ட அவன்
குமாரனாகிய சகத்திராநீக னிடத்திற்கு அனுப்பிவிட்டான்
அதுகண்ட புதல்வனும் அவன் தாயும் மந்திரிமுதலிய யாவ
ரும் வருத்தமடைந்து செய்யும் விதிமுறையாவும் வழுவின்
றிச்செய்து, பின்னர் சதானீகனுக்கு இல்லாளாக விருந்த
விண்டுமாவதி நாயகனில்லாளாக விருந்தாள். பின்பு இராச்சி
யத்துக் கரசனில்லாமையால் சதானீகனது மந்திரிமார்களுஞ்
சில பெரியோர்களுங்கூடி மந்திராலோசனைசெய்து அரசன்
புதல்வனாகிய சகத்திராநீகனுக்கு நல்ல சுப முகூர்த்தத்தில்
பட்டாபிஷேகஞ்செய்து முடிசூட்டிவைத்தார்கள். அப்படி
வைத்தபின் தன் தந்தையினும் எண்மடங் கதிகமாய் மனுநீதி
வழுவாமல் இராஜீகஞ் செய்துவருநாளில், சில நாட்களுந்

குள், தந்தை யரசாளுகையிலிருந்த முதியோர்களாகிய மந்திரி
சேனாபதி புரோகிதன் இம்மூவரும் மரணகாலமடைய, அது
கண்ட சகத்திரானீகன் தனது ஆளுகைக்கு மந்திரி முதலிய
யாவரும் வேண்டியிருப்பதால் இறந்தவர்களது புதல்வராகிய
மூவர்களில் யூகை வல்லவனைத் தனக்கு மந்திரியாகவும் சது
ரங்கனைச் சேனாதிபதியாகவும் வசந்தனைப் புரோகித னாகவு
மமைத்து இரதகஜ துரகபதாதிகளென்னும் நால்வகைச்
சேனைகள்சூழ என்றிசையுங் கீர்த்தியோங்கத் தக்கதாய்ச்செங்
கோல் நடாத்திவருகையில், தேவேந்திரன் தெய்வலோகத்தில்
தனக்கா யேற்படுத்தியிருக்கின்ற நந்தாவனத்தில் நந்தவன
சிங்காரம் பார்க்கும்படியாய் சகத்திரானீகனைக் கூட்டிவரும்
படி தூதுவனுக்கு ஆக்ஞைசெய்ய, அவ்வாறே தூதுவர்
களும் பூலோகத்திற்குப்போய் சகத்திரானீகனைக் கண்டுரை
க்க, அதற்கவனுஞ் சந்தோஷித்தனாய் இரதமேறித் தெய்வ
லோகம்போய்ச்சேர்ந்து தேவேந்திரனைக்கண்டு வணங்கினன்,
தேவேந்திரனும் வந்தபுதல்வனுக்கு வேண்டிய வெகுமதிகளு
ஞ் செய்து நந்தவனங்களையெல்லாங் காண்பித்து அவன் தகப்
பன் சதானீகன் தேவரூபம் பெற்றிருப்பதையுங் காண்பித்தா
ன், அப்படி காட்டியமாத்திரத்தில் சகத்திரானீகன் மிகவுஞ்
சந்தோஷமடைந்து தகப்பனைக் கண்ணிறைக்கண்டு இந்தி
ரன் சபையிலிருக்கும்போது அச்சபையில் நடனஞ்செய்து
கொண்டிருக்கிற திலோத்தமையின்மேல் மோகங்கொள்ள,
அவளுமிவன்மீது மோகமுற, இக்குறிப்புகளையெல்லா முண
ர்ந்த தேவராஜன் குறுநகைசெய்து, ஏதோமாச்சரியமா யோர்
கதை சொல்லுவதுபோல முன்னடந்த சரித்திர மெல்லாந்
தெரியச்சொல்லி, உனக்கு மனைவியாகும்படியாய் அலம்புசை
யென்று மரம்பாஸ்த்ரீ அயோத்தியாபட்டணத்திலே, மிருகா
வதி யென்னும் பெயருடையவளாய்ப் பிறந்திருக்கின்றனள்,
அவளுடைய ரூபலாவண்யத்தைச் சேடனுஞ் செப்பமுடி
யாது, அப்படிப்பட்ட ரூபவதியை உனக்கு மனைவியாய்ப் பிர
மன்விதித் திருப்பதினாலே நீ பூலோகஞ்சென்று அவளை

மனைவி யாக்கிக்கொள்ளென்று உத்தரவு கொடுத்தனுப்ப,
அவ்வார்த்தையைக்கேட்ட சகத்திரானீகனுக்கு தேவேந்திர
னால் வர்ணித்துச் சொல்லப்பட்ட அலம்புசையென்னும் அர
ம்பாஸ்த்ரீயினது வனப்பின்கண்ணே சென்றமனத்தைத் திரு
ப்ப அசக்தனாய், அதிகாதலின்மீறி, எப்போது அவளைக்கூடு
வோமென ஏக்கங்கொண்டு தேவராஜனிடம் விடை பெற்று
தன் பட்டணத்துக்கு மீண்டுவருகையில், அங்குள்ள பூங்கா
வனத்தில், திலோத்தமை யென்னுந் தெய்வகன்னிகை நின்றி
ருந்தவளாய்ப் பூலோகத்திற்குச் செல்லுஞ் சகத்திரானீகனை
வழிமறித்துச் சொல்லுவாள், தேவரீர் இந்திரன் சபையிலே
நடித்துநின்ற என்மீது மோகங்கொள்ள யானுந் தங்கண்மீது
மோகமுற்றுச் சகியாதவளாய்க் காமநோயால் வருந்துகின்ற
மையால், சித்தமிரங்கி இப்பூங்காவனத்தில் என்னைக்கூடிச்
சுகித்தென்மீது அமர்செய்யுமவங்களைக் களைந்துக்கொளும்படி
யாய்க் கருணைசெய்வீரென்று கூறுந் திலோத்தமையினது
மொழியைத் திணைத்துணையேனுங் காதிற்கொள்ளாத வனாய்
எதிரிட்டும் பாராதவனாய்த் தன்பட்டணத்தைநோக்கி மிருகா
வதியின்மேல் மோகமாய் திரும்பிவிட்டான், அப்போது
திலோத்தமையானவள் அதிவிரகத்தால் மனமானது கொதிப்
பேறித் தன்சொல்லையுந் தானங்கொண்ட காதலையுந் தணிக்கா
மற் செல்லும்வேந்தனைநோக்கிக் கூறுவாள். வேந்தே, பெண்
ணாகிய யான் உன்மீது மால்கொண்டு தியங்கிச்சேரும்படியாக
விளம்பிக்கூறு மெனது வார்த்தையைக் கேளாமலும் என்முக
த்தைப் பாராமலும் போகின்றமையால், நீயும் உனது பெண்
சாதியுங்கூடிச் சுகித்துவாழ்கையில் அவள்முகத்தில் நீ விழி
யாமலும் உன்முகத்தில் அவள் விழியாமலும் பதினாலுவரு
டம் வரையிற் பிரிந்திருக்கக் கடவீர்களென்று சாபங்கொடுத்
தாள், அவ்வாறு கடுங்கோபத்தாற்கூறிய திலோத்தமையின்
சாபத்தையுங் கேளாதவனாய் வாயுவினுங்கொடிய வேகமாய்த்
தன் கௌசாம்பியபுரியென்னும் பட்டணத்தைச் சேர்ந்தான்.
அவ்வாறுசேர்ந்த சகத்திரானீகன் தன்மந்திரியாகிய யூகை வ

ல்லவனை யழைத்து அருகேவைத்துக்கொண்டு, தான்தெய்வ
லோகம்போயிருக்கையி லக்கு தேவராஜனாற்சொல்லப்பட்ட
அலம்புசையென்னும்பெண்ணானவள் அணைந்தாலல்லதெனது
ஆவிதரியாது,என்செய்வேன். பஞ்சபாணனது சமரினின்று
மெப்படியுய்வேன், எனது மதியூகியாகியமந்திரியேயென்று க
வலையுறுங்காவலனை மந்திரிபணிந்துகூறுவான்,அரசே? தங்க
ளுக்கு இந்திரனாற்சொல்லப்பட்ட பெண் எவ்வுலகவாசியோ
வறியோம் என்றுகூறிய மந்திரியைநோக்கி, அப்பா; இவ்வு
லகின்கண் எனதாருயிர்த் துணைபோன்ற பூசைவல்லவனே,
யான் காதல்கொண்டிருக்கும் அலம்புசை யென்று மரம்பை
யானவள் அயோத்தியாபட்டணத்தில் கோடிசந்திரலாவண்
யம்போன்றவதனமும், கரும்புயலையுங் காளகோடிவிஷத்தை
யும் அல்லையும் யானைக்கூட்டத்தையும் ஆலைவிழுதையும்
பழித்தகூந்தலும்,இந்திரதநுவையொத்தபுருவமும்,மானையுஞ்
சேல்மீனையும் ஒள்ளியவேலையும் நீலோற்பலத்தையும் பழித்த
கண்களும்,மகரத்தைப்பழிக்குஞ்செவிகளும்,எள்ளின்பூவைப்
போன்ற அழகியநாசியும்,கண்ணாடிபோன்றகன்னங்களும்,ப
வளத்துண்டையுங் கொவ்வைக்கனியையுமிகழ்ந்தஅதரமும்,
வலம்புரிச்சங்கம் போன்றகழுத்தும்,மூங்கிற்கணுவையொத்த
தோட்களும்,மேருவையுந் தங்கக்கிண்ணத்தையும் யானையி
னுடைய மத்தகத்தையும் தென்னங்குரும்பையையுங் கூவி
ளங்கனியையும் பம்பரத்தையும்பந்தையும் பூச்செண்டையுஞ்
புற்புதத்தையும் பழித்தகுசங்களும், நீர்ச்சுழியைப் போன்ற
வுந்திக்கமலமும், சிங்கத்தையுங் கொடிமின்னலையும் உடுக்
கையையும் பழித்திலகாநின்றஇடையும், பாம்பின்படம்போ
ன்ற வல்குலும்,கதலியைப்பழித்ததொடைகளும்,அலவனைப்
பழிக்கு முழந்தாளும், வராலினைப்போன்ற கெண்டைக்கா
ல்களும், செம்பஞ்சைப்போன்ற புறந்தாளும், தாமரைப்போ
ன்றபாதங்களும், சண்பகமலரைப்போன்ற தேகாந்தியும், பி
டியானையைப்போன்ற நடையும்படைத்து, மிருகாவதி யெ
ன்னும் அழகியபெயர்வாய்ந்து, என்மனதைக் கவர்ந்துபோ

ய்வைத்திருப்பதால் அம்மங்கையையான் மணமாலைசூட்டும்
படி பிரயத்னிப்பாயென்ன, அதுபோல் பூசைவல்லவனென்னு
மந்திரி வேந்தனிடம் விடைபெற்றுக்கொண்டு, தானுஞ் சில
பெரியோர்களாகிய பிராமணர்களுங்கூடி வாகனரூடராய்ப் பிர
யாணப்பட்டுக் காடுமலைவனம்வனந்தரங் கானாறுமுதலிய யா
வுங்கடந்து, அயோத்தியாபுரிசேர்ந்து அவ்வரண்மனைவாயிற்
காவலாளிகளிடந் தங்கள்வரவைத்தெரிவித்து, அரசன் ஆஞ்
ஞையின்மீது கொலுமண்டபஞ்சேர்ந்து, பெரியோர்களாகிய
பிராமணர் வேந்தனைக்கண்டாசி கூறியும் பூசைவல்லவனெனு
மந்திரிபணிந்தும் அங்குள்ளவாசனங்களி லாரோகணித்து
அரசனைநோக்கி, சகத்திரானீகனுடைய ரூபலாவண்ய சவுந்
தரிய குணாதிசயங்களையும் புஜபலபராக்கிரமங்களையும் குலவ
ரன் முறையாவுஞ் சாங்கோபாங்கமாய்த் தெரிவித்து, வேந்த
னைச் சம்மதிக்கும்படியாய்ச்செய்து முத்துச்சிவிகையி லேற்
றிச் சிலபடைகளோடுங் கௌசாம்பிய தேசத்துக்கழைத்து
வந்து நல்லசுபமுகூர்த்தத்தில் செய்முறையாதும் பிழையாது;
முப்பத்திரண்டு மேளவாத்தியங்களுந் தாமதாமென்று முழ
ங்க மிருகாவதியென்னு மணங்கைச் சகத்திரானீகனுக்குப்
பாணிக்கிரகணஞ்செய்து அவ்விருவரும் நிலாமணிமுற்றத்தி
லின்று இரதியும் மன்மதனும்போலும் மானுங் கலையும்போ
லும் அன்னமும் பேடும்போலுங் கூடி இன்பசுகங்களையநுப
வித்துக்கொண்டு அளவில்லாதபோக பாக்கியங்களோடு மரு
விக் குலாவிவாழ்ந்து வருநாளில்,பொன்போன்ற காந்தியைத்
தாங்கின்ற மிருகாவதியின்மேனி பூரணசந்திரனைப்போல் வெ
ளுத்தநிறமொடுத்து,மயிர்ச்சுவிம்மிப்பூரித்துவட்டமிட்டுத்த
ங்கக்கிண்ணத்தையொத்த தனதனத்தினது அஞ்சூரணிபோ
ன்றமுலைமுகங்கறுத்துப் புயல்போலொளிரவும்,கைத்தல்புளி
த்தல் கார்த்தல் உவர்த்தல் துவர்த்தல் தித்தித்தலென்னும் அ
றுசுவையில் புளித்தலையே நனிகாதல் கொள்ளும் பருவமாகி
யகாலமும் நெருங்கிக் கருப்பிணியாயிருக்குஞ் சங்கையை,நா
யகனாகிய சகத்திரானீகனறிந்து, தன்றனுகைக்குள்ளடங்கிய

தேசங்களுக்கெல்லாம் வரியிறைவேண்டாமென்று நிறுத்தி, அதுமுதல் அறநெறியினின்றும் ஆதுலர்க்குச்சாலை,ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி,இறைச்சோறு, ஐயம், இன்பண்டகல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், சுண்ணாம்பு, நோய்மருந்து, வண்ணான், நாவிதன், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி,விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம், இவ்வகையாகிய முப்பத்திரண்டு தருமங்களையும் யாவருமானந்திக்கும்படி இப்படிசெய்து சொர்னத்தியாகியாய் இன்னிசைக்குயில்போன்ற மிருகாவதியைக் கணப்போதெனினும் பிரியாமல் இன்பக்கடலுட்டாழ்ந்து, இனிது வாழ்ந்திருக்கையில் ஓர்நாள், கெர்ப்பவதியாகிய மிருகாவதி பூங்காவனத்துக்குச்சென்று ஓர் தடாகத்திலிறங்கிச் சலக்கிரீடை செய்யவேண்டுமென் றாவல்கொண்டு தன்மனாளனுக்கறிவிக்க,அதுபோல் வேந்தனுமப்பூங்காவனத்திலுள்ளவோர் பொய்கையில் திவ்யவாசம்பொருந்திய குசும்பாப் பொடியையுங் குங்குமங்களையுங்கரைத்து இளஞ்சூரியனைப்போற் பிரகாசிக்கும்படிச்செய்து அந்தப்புரத்துக்கும் பூங்காவனத்துக்கும் புட்பங்களைப்பரப்பி மெல்லியபட்டாடைகளையதன்மேல் விரித்துச் சேடியர்கள் நான்குபக்கமுஞ்சூழ்ந்து கைலாகுகொடுத்துவரவும், மயில்விசிறிவீசிப் பனிநீர்தெளிக்கத் தனது நாயகனுடனே பூங்காவனம்போய்ச்சேர்ந்து பொய்கையிலிறங்கித்தானும் தனதுமனாளனும் நிர்வாணிகளாய் ஜலத்தில்விளையாடுகையில், அப்பொய்கையிற் கொட்டிக்கலந்திருந்த குசும்பாப்பொடியுங் குங்குமமும் இவ்விருவர்களது தேகத்திலுமூறிச் சுவறியிருந்தமையால் பொன்போலிருந்ததேகம் செக்கர்வானம்போலும் வர்ன்னரேக்கைப்போலும் பிரகாசிக்க, சகத்திராணிகளைத் தடாகத்திலிடுத்துத் தான்மாத்திரந்தனிமையாய்க் கரையேறிநின்றாள். மிருகாவதியானவள் அக்காலை

யில் ஆகாயமார்க்கமாய் இரைவேண்டி வட்டமிட்டுக்கொண்டிருந்த யகடனென்னும் அண்டரண்டபட்சியானது மிருகாவதியினது சரீரத்தைமாமிசமென்று கருதியும் நமக்கின்று நல்லவுணவுகிடைத்ததென்றுந் தாழ்ந்து திடீரெனப் பாய்ந்து காலினாலெற்றி யிடுக்கிக்கொண்டு ஆகாயமார்க்கத்திற்பாய்ந்து உதயகிரியிலேகொண்டுபோய் அதன்சாரலிலிறங்கிப் பார்க்கும்போது,மனுஜன்மமான பெண்ணாயிருந்தமைகண்டு, அங்ஙனே விட்டுவிட்டுத் தன்னிச்சையாய்ப் பறந்துபோய் விட்டது. பின்னர் மிருகாவதி அகஸ்மாத்தாய் தனக்கு இன்னதெனத் தோன்றாமற் பட்சியினது காலிலிடுக்கப்பட்டு ஆகாயவீதியிலெழும்புகையில் மூர்ச்சைகொண்டிருந்தமையால் அப்பட்சி தன்னைவிட்டுநீங்கிய வோர்கடிகைப்போதுக்குள், அம்மூர்ச்சைதெளிந்து கண்விழித்துப்பார்த்துச்சித்தம்பிரமித்து,யாதுந்தோன்றாதவளாய், தன்கணவனையுஞ் சேடிகளையுஞ்ஜலக்கிரீடைசெய்த தடாகத்தையுங்காணாது, பருவதத்தின்மேல் காடுபுலி சிங்கமுதலிய மிருகக்கூட்டங்கள் வாசஞ்செய்யும்படியாகியதானமாய் பயங்கரமாகிய அடர்ந்தகாக்கள்சூழ்ந்துஞ் சூரியனது கிரணமுந்தோன்றாது இருப்பதுகண்டு, மிகவுஞ் சித்தாகராந்தியாய், நமதுநாயகர் ஏதோநினைவால் நம்மை வஞ்சிக்கக் கருதி இவ்வாறுசெய்தனரோ, கணப்போதேனும் பிரியாதவர் கானகத்தில் நம்மையெப்படிக்கைவிட்டார், அவர்சித்தத்துக்குப்பாபியாகிய யான் யாதுங்குறைசெய்திலேனே, தெய்வமே,இதற்கோயான் ஜலக்கிரீடைசெய்ய வாசைகொண்டேன், என்செய்கேன், எவ்விதமிவ்வனத்தினின்று மீளுவேன், ஓபிரமனே, இதுவும் நின்திருவுளச்செயலோ, வன்றிரமுயில்லாமல் மெய்யைக்கைகொண்டொழுகும் மிடிக்காளானேனே,தெய்வமே தெய்வமேயென்றும், பின்னும் நாம் இதுபரியந்தம் நாயகனுடன்கூடிவாழ்ந்த வாழ்வெல்லாஞ் சொப்பனம்போலிருக்கின்றதே, என் ஜென்மப்பிரகிருதியே யிப்படிதானோ, பிரமன் இக்கோலத்தோடுதா னம்மைச் சிருஷ்டித்தானோ, இல்லாவிடில் நான் ஜலக்கிரீடைசெய்தகுளமும் பூங்காவன

றும் கோட்டைக் கொத்தளமும் அரண்மனையும் நாயகனோடு
சுகித்துச் சல்லாபலீலை புரிந்திருந்தநிலாமணிமுற்ற முதலியயா
வுங் காணமற கானலின்நீர்போல் மறைந்துவிட்டதே, ஐயோ
என்கா லிற்பட்டதைக் கண்ணிற்பட்டதுபோலும் உடலும்
உயிரும்போலும் பாலும்நீரும்போலும் பூவுமணமும்போலு
ம் எள்ளும் நெய்போலும் கரும்புஞ் சுவையும்போலுங் கலந்
து வாழ்ந்தமணாளன் கானகத்திற்றனியாயும் வஸ்திரபஞ்சமா
யும் வஞ்சித்துவிட்டுப்போக யார்செய்தசற்பனையோ, அந்
தோ தெய்வமே, இக்கானகத்தில் ஒருவரையுங் காணேனே,
நாம்வாழ்ந்தபதியெத்தனை தூரமிருக்கின்றதோ, வீரகண்டா
மணி பொருந்திய பாதபத்மங்களையுடைய நமது நாயகனது
விசாலம் பொருந்தியமார்பும் இமாசலம்போன்ற திணிந்தபுய
ங்களும் பூரணசந்திரோதயம்போன்ற முகாரவிந்தமும் நா
னெப்போதுகாண்பேனோவென்று அழுதுகூக்குரலிட்டு முக
த்திலும் வாயிலும் மார்பிலுமறைந்து புலம்புகின்ற சத்தங்
கேட்டு, அவ்வனத்தில்வாசஞ்செய்கின்ற மிருகக்கூட்டங்க
ளும் பறவைக்கூட்டங்களும் நெருங்கிநின்றுபார்த்து, மறுப
டியு மோடிப்போய்விடும், இவ்வாறு அணியாய்வந்து பார்க்கும்
படியான மிருகங்களைக்கண்டு, நாம்இப்படித்துன்பப்படுவதை
ப்பார்க்கிலும் இம்மிருகங்களுக்கு இரையாகிவிடுவதே நலமெ
ன்று மனத்தை திடப்படுத்திக்கொண்டு, அம்மிருகங்களின்
அருகேயோடுவாள், அவைகள் ஐயறிவோடுங்கூடிய மிருகங்க
ளாக விருந்தபோதிலும் இவள்தேவகின்டமென்றும் இவளை
யாம் இச்சிக்கப்போகாதென்றுஞ் சிந்தித்துபயந்தோடும், இப்
படி மிருகவாதி தனது பிராணனைப்போக்குவதற் கெவ்வித
முமில்லாமல் பிரலாபித்துக்கொண்டிருக்கும்போது, அவ்வர
ணியத்தில் நிஷ்டையாய்த் தவஞ்செய்து கொண்டிருக்கும் ஓர்
முனிவருடையகுமாரன் இவள்பிரலாபிக்கு மோசையைக்கே
ட்டு, அவ்வோசையின்வழியே நாடிவந்து, மிருகாவதியைக்
கண்டு, இரக்கங்கொண்டு, அருட்கடலாகிய ஜமதக்கினிமுனிவ
ரிடமிவளைக்கொண்டுபோய் விடுவோமென்று அழைத்துக்

கொண்டுபோய் அவரிடத்தில்விட, அதுகண்ட ஜமதக்கினி
முனிவர் மிருகாவதியினுடைய சவிஸ்தாரங்களையெல்லாம் ஆதி
யோடந்தமாய் விசாரித்துத் தானுமறிந்தவராய் என்னைக்கிருத
வன்மாவாக நினையென்றுசொல்லி தன்பத்தினிமுதலிய ரிஷி
பத்தினிகளுடனேசேர்த்து ஆதரவுசெய்துவருகையில், மிரு
காவதியுந் தனதுவிதியைநினைந்து வாழ்ந்துவருகையில், கர்
ப்பநோயுற்று இருஷிபத்தினிகளினது கடாக்ஷ வீட்சணியத்
தால் யாதுங்குறைவில்லாமல் ஆண்குழந்தையைப்பெற, உட
னே உதயகிரிச்சாரலிற்பிறந்தமையால் இக்குழந்தைக்கு உதய
நன் என்னும்பெயர்தகுமென்று ஆகாயத்தில் ஒரு அசரீரிவா
க்குண்டாயிற்று, அப்படியேமுனிவர் இக்குழந்தைக்கு உத
யநனென்று நாமகரணஞ்செய்து வளர்த்துவருகையில், மூன்
றும் பிறைச்சந்திரன்போல் வளரும்பிள்ளைக்கு ஐந்துவயது
பூரணமாக, அப்போது முனிவர் சிறுவனுக்குச்சவுளவுபநயன
மும் வித்யாப்பியாசமும் சதுர்வேதங்களும் மந்திரப்பிரயோகங்
களும் பூரணமாகக்கடாக்ஷித்து உணரச்செய்து, பாதுகாத்து
வருகையில், உதயநனென்னுஞ் சிறுவன் அவ்வனத்தில் வா
ழும்படியாகிய மிருகங்களின்மீது வேட்டமாடிவருங்கோலத்
தைத் தாயானவள்கண்டு களிப்புறத் தக்கதாயிருந்தபோதிலுந்
தனது மணாளனைவிடுத்துத்தான் தனித்திருக்குந் துன்பத்தை
யேபெரிது பாராட்டிவருநாளி லோர்நாள், அவ்வனத்தில்
வாழுமோர்வேடன் ஒரு பாம்பைப்பிடித்துக்கொண்டு வருப
வனைக்கண்ட உதயநன் அவ்வேடனைநோக்கி, நீயேன் இந்தப்
பாம்பைப் பிடித்துக்கொண்டு போகிறாயென்றுவினவ, அதற்
கவன் சிறுவனைநோக்கி, அப்பா இதையான் பட்டணங்களிற்
கொண்டுபோய் ஆட்டிவைப்பேனாகில் என்ஜீவந விர்த்திக்கு
குறைவில்லாம விருக்குமென்றுசொல்ல, அதுகேட்ட உதய
நன் அதுபாவத்தொழிலாதலால் அதனைநீவனையில்விட்டுவிடு.
இந்தச்சடயத்தைக் கொடுக்கிறேனென்றுசொல்ல; அவன்
விட்டுவிட்டபிறகு, அன்னையாற்போடப்பட்டிருந்த இரத்தி
ன கடயத்தைக் கழற்றிக்கொடுத்தான், பின்னர் வேடன்கையி

ளின்றும் விடுபட்டநாகமானது உதயநனென்னும் இராஜ
குமாரனிடம் வந்துவணங்கி, வேந்தரிளங்கன்றே, உம்மால்
இன்றையதினம்யான் உயிர்பெற்றேனாதலால் உமக்கு யானெ
ன்ன பிரதியுபகாரஞ் செய்யப்போகின்றேன், நீர்தயைசெய்து
என்னுடன் வாருமென்று இனியவார்த்தைகள் சொல்லி
யழைத்துக்கொண்டுபோய் அவ்வனத்தில் இராஜரீகஞ்செய்து
கொண்டிருக்குந் தங்களுடைய நாகராஜன் முன்விடுத்து தன
க்குக்கிடைத்த வாபத்தினின்று மீட்டதையும் அவனதுகுணா
திசயங்களையுமறிவித்து நிற்க, அப்போது நாகராஜன் உதயந
னென்னு மிராஜகுமாரனது ரூபலாவண்ய சவுந்தரியங்களைக்
கண்டு சந்தோஷங்கொண்டு, கின்னரனென்னு நாகத்தைநோ
க்கி, கின்னரா,நான்சொன்னபடி நமதுகுமாரத்தியாகிய லளி
தை யென்பவளை இவ்விராஜகுமாரனுக்கு மணஞ்செய்துவை
க்க வேண்டுமென்றுசொல்ல, அதுபோல் அந்நாககன்னியை
மணஞ்செய்ய, உதயநனும்சந்தோஷித்தனாய் கலியாணஞ்செ
ய்துகொண்டு லளிதையுந் தானுமாய்க் கூடிவாழ்ந்து சுகசை
யோகங்களை யநுபவித்து வருநாளில், லளிதையென்னு
நாககன்னி கர்ப்பவுற்பத்தியா யோர்புத்திரனைப் பெற்றாள்.
பெற்றவுடனே நாககன்னியாக விருந்த லளிதை தேவகன்னி
கையானாள், அவ்வாறு உருவங்கொண்டபெண் உதயநனைநோ
க்கி, அரசே, நான் முன்பு வித்யாதரர்குலத்திலே உற்பவித்த
தேவகன்னி, என்பெயர் சுகன்டியென்பர், நான் ஒருரிஷிசாப
த்தினாலே நாககன்னிகையாய் பிறந்திருந்தேன், என் வயிற்றி
லே குழந்தை பிறந்தவுடனே சாபவிமோசனமாய் விடுமென்
று முன்னாந்த ரிஷியினிடத்திலே கேட்டிருந்தேன், இப்போ
து அப்படியே சாபவிமோசனமாகி விட்டது. இனியான்
தெய்வலோகம்போக வேண்டுமாகையால் உமது குமாரனை
நீர் ஒப்புக்கொள்ளுமென்று சொல்லித் தன் குமாரனுக்கு
சகலவியாதிகளுமெப்போது மணுகாதிருக்க ஓர் அமிர்தசஞ்
சீவிக் குளிகையும் தன்கையிலிருந்தவீணையும் ஒருகாலங்களி
லும்வாடாதநல்லிமாலையையுங்கொடுத்துப்புருஷனிடத்திலு

ம் மற்றுமங்குள்ள தந்தைமுதலியபாவரிடத்திலும்விடைபெ
ற்றுக்கொண்டு தெய்வலோகம் போய்ச்சேர்ந்தாள். அப்பால்
உதயநனென்னு மிராஜகுமாரன் தன்னுடைய குமாரனுக்கு
லளிதையாற் கொடுக்கப்பட்ட மூன்றுவஸ்துக்களோடுங் குமா
ரனை யழைத்துக்கொண்டு ரிஷியாசிரமத்திலிருக்குந் தனது
தாயாரிடம்வந்துசேர்ந்து நடந்தசவிஸ்தாரங்களையெல்லாமாதி
யோடந்தமாய்ச்சொல்லத் தாயாரான மிருகாவதிகேட்டு மிக
வுஞ்சந்தோஷமாயிருந்தாள். இப்படியிருக்கும்போது,முன்பு
தெய்வலோகத்தில் சகத்திராணிகனுக்குத் திலோத்தமையால்
நேரிட்டசாபத்தின் பிரமாணமாகிய பதினான்கு வருடத்துக்
குச் சமீபித்தபடியால் உதயகிரிச் சாரலிலிருக்கும் மிருகாவதி
யினது புதல்வனாற்கொடுக்கப்பட்ட இரத்தின வளையைவாங்
கிய வேடன், அவ்வளையை விற்பனைசெய்து ஜீவிப்போமெ
னக்கருதி, கிளைக்கிராமங்களிலுஞ் சிற்றூர்களிலுந் திரிந்தும்
விலைப்படாமையால் அதனைக் கௌசாம்பிய புரியென்னும்
பட்டணத்திற் கொண்டுபோய் அங்குள்ளவியாபாரிகளுக்குக்
காட்ட, அவ்வியாபாரிகள் இவ்விலையில்லா மணிகளிழைத்
தொளிராநின்ற வளையைப்பார்த்தால் நமது வேந்தனது அர
ண்மனைக்குரியது போலிருக்கின்றதேயென்று ஒருவருக்கொ
ருவர் பேசிக்கொண்டு,வளையோடுங் கொண்டுவந்த வேடுவனை
யழைத்துப்போய் இராஜசமுகத்தில் விடுத்தார்கள், அப்படி
யிருக்க:முன்னம் சரசக்லாபமயிலைப்போன்றமிருகாவதி ஜலக்
ரீடைசெய்த தடாகத்தினின்றுந் தன்னை அகஸ்மாத்தாய் மறை
மாய்ப்போன நாண்முதலிதுபரியந்தம் ஊணுறக்க மில்லாம
லும் இராஜரீகஞ்செய்யாமலும் வஸ்திரபூஷணங்களைத் தரியா
மலும் மஞ்சத்தின்மீது சயனிக்காமலும் தாம்பூலந் தரியாம
லும் மஞ்சனமாடாமலும் மந்திரிமுதலிய சுற்றத்தாரோடும்
பேசாமலும் பித்துக்கொண்டவனைப்போல் சரீரமுங்கறுத்து,
அழகுங்குன்றி, அல்லும்பகலும் ஓரேசிந்தையாய் அயர் வெ
ய்தி துக்கக்கடலி லழுந்தியிருந்த சகத்திராணிகன் வியாபாரி
களாற் கொண்டுபோய்வைத்த இரத்தினவளையைக்கண்டு தன்

மங்கையினது கைவளையென்றறிந்து, சொற்பனங்கண்டுவிழித்தவனைப்போலுந் திடுக்கிட்டெழுந்து, அங்குவைத்திருக்கும் இரத்தினவளையைக் கையிலெடுத்துக்கொண்டு, அதனைக்கண்சிமிட்டாமற்பார்த்து; தனதுமங்கையினது கரம்போலப் பாவித்து அடிக்கடி யவ்வளையை முத்தமிட்டுக் கண்ணிலொத்திக்கொண்டும் அடங்காமகிழ்ச்சி யுடையவனாய்ப் பெருமூச்செறிந்து, எதிரில் நிற்கும் வேடுவனைப்பார்த்து, இந்தவளை உனக்குக்கிடைத்த விதமெப்படியென்றுகேட்க, அப்போது வேடுவன் சொல்லுவான், சுவாமீ, யான் உதயகிரிச் சாரலில் வாசஞ்செய்யும் வேடுவனாதலால் ஓர்நாள் எனது ஜீவனவிர்த்தியின் பொருட்டு வேட்டைமாடச்சென்று அத்தினமி யாதும் கிடைக்காமையால் எனதுகண்ணுக்கு முன்தோன்றியோடிப்போய் வளையிற்புகுந்த நாகனைத்தொடர்ந்து அதிபிரயாசையோடும் பிடித்து கிராமங்களிற் கொண்டுபோயாட்டிவைத்தால் நெல் கேழ்வரகுமுதலிய தானியங்கள் கிடைக்குமேயென்று ஆவலோடுங்கொண்டு வருகையில், என்னெதிர்ப்பட்ட ஓர்ராஜகுமாரனென்னைப்பார்த்து, அப்பா, இதையேன் பிடித்துக்கொண்டு போகிறாய், பாவமாதலால் விட்டுவிடு, எனதுகைவளையைத் தருகிறேனென்று சொன்னமையால், யானுமதுபோல் விட்டுவிட்டேன், பின்பு அவர் சொன்னதுபோல் எனக்கிந்த வளையைக்கொடுத்துவிட்டுப் போய்விட்டமையால் இதைவிற்பனைசெய்து ஜீவிக்கலாமெனக்கொண்டுவந்தேன், மற்றியாதுமறியேன், அரசேயென்று தனதிருகரங்களையுஞ்சிரமேற்கூப்பித்தொழுதுநின்றான், அவ்வாய்மொழிகேட்ட வேந்தன்தனதுமந்திரியாகியயுகந்தராயணனையுஞ்சிலபெரியோர்களையும் அருகிலழைத்து வைத்துக்கொண்டு, கேளுங்கள் பெரியோர்களே, இவ்வேடுவன்சொல்லியவார்த்தை உண்மையெனத் தோற்றுகின்றது, ஏனெனில், எனதுமங்கை கெர்ப்பிணியாகவிருந்தது உண்மை, அவள்உயிர்பெற்றிருந்தால் புத்திரனைப் பெற்றிருப்பாள்; ஆயினும் உதயகிரிச் சாரல்வரையிலவன் சென்றமாயம்இன்னதென்றுதெரியாமையால்இவ்வேடு

வனைத்துணை கூட்டிக்கொண்டு போவோமாயின் யாவுந்தெரிந்துகொள்ளலாம், உங்களுடைய கருத்தியாது, அதனைவெளியிடுங்களென்றுகூறிய வேந்தனை மந்திரிமுதலிய யாவரும்நோக்கி, அரசே, தாங்கள்கூறியதேசரி, அப்படியேசென்றறிவோமென்ன, உடனே சிலசையின்யங்களோடும் அரசன் மந்திரி முதலியயாவரும் இரதாரூடராய் வேடுவனையுங் கூட்டிக்கொண்டு அன்று இரவுபோதுபோக்கி, மறுநாள் அருணோதயத்துக்கு முன்பிரயாணப்பட்டுத் தன்பதியைக்கடந்து, காடுமலைவனம் வனாந்திரங்களோடுங்கூடியிருக்கும் உதயகிரியைச் சேர்ந்து, வேடுவன் இராஜகுமாரனைச் சந்தித்த இடத்தைக்காட்டச்செய்து, அவ்விடமின்று நான்குதிசைகளிலுஞ் சுற்றிப்பார்த்து வரும்போது, ஓர் பூங்காவில் முனிவராசிரமங்களும்பன்னசாலைகளுமிருக்க, அப்பன்னசாலையில் அனேகம் இருடிபத்தினிகள் நடுவில்மதிபோற் பிரகாசித்துக் கொண்டிருக்குந் தனது நாயகியாகிய மிருகாவதியையும் இளஞ்சூரியனைப்போன்ற குமாரனையுங்கண்டு பூரித்துப்பொங்கி, ஆனந்தக்கடலுட்டோய்ந்தவனாய், திடீலென்று இரதத்தைவிட்டிழிந்து, கன்றைக்கண்ட காலியைப்போலோடித் தனதுநாயகியைக்கட்டியணைத்து முத்தமிட்டு விம்மி விம்மி யொருவர்க்கொருவர் பகிர்ந்துயரங்களை அவ்வாசிரமத்தி லெழுந்தருளியிருக்குஞ் சமதக்கினிமுதலியரிஷீசுவரர்களுமிருஷி பத்தினிகளுங்கண்டு ஆச்சரியங்கொண்டு, இதுவரையில் நம்முடையபன்னசாலையில் வாழ்ந்திருந்த மிருகாவதி யென்கிறபெண்ணை ஒரு ராஜனானவன் சதுரங்கதளத்துடனேவந்து நம்மையுங்காணாமல் என்னகாரணத்தாற் றயரப்படுகிறானென்று பன்னசாலையைவிட்டு நீங்கி, துணையாய்வந்தவர்களைக்கண்டு அவர்களுண்மந்திரியின்னானெனவறிந்து, இதென்னகாரணமென்றுவினவ, அப்போது மந்திரியானவன் முநிவர்களைவணங்கி, அதிவினயத்தோடும், கேளுங்கள் சுவாமிகளே, கௌசாம்பியதேசத்தையாளுகின்ற சகத்திராநீகனென்னும் வேந்தனிவர், அந்தமிருகாவதி யென்னும் பெண் இவருடையதேவியார், இவ்விருவரும்பட்டணத்

தில் வாழ்ந்துகொண்டிருக்கையில், கெர்ப்பவதியாயிருந்தகாலத்தில்பூங்காவனத்தில் தடாகத்திலிறங்கி நீராடிக்கொண்டிருக்க, அரசன்கண்டதேயன்றி, இதுபரியந்தம் எங்கெங்குந் தேடியுங்காணுது சிந்தை வருந்தியிருந்த வேந்தனுக்கு ஒரு வேடன் மூலமாயிங்கிருக்குஞ் செய்தியறிந்து வந்தனனென்று மந்திரி சொல்ல, அதுகேட்ட ஜமதக்கினிமுனிவர், அரசனைக் கிட்டவழைத்து உட்காரவைத்து தேறுதலைசெய்து, ஓய்வேந்தே, உமதுமனைவியாகிய மிருகாவதி குங்குமக்குழம்புதோய்த்த தடாகத்தில் நீராடிக்கரையேறி நிற்கையில், விகடனென்னும் அண்டரண்ட பட்சியானது மாமிசமென்று தூக்கிக்கொண்டுவந்து இவ்வுதயகிரியின்பேரில் விட்டு விட்டது. இவள்கெர்ப்பவதியாதலால் அடங்காத்துயரத்தோடும் பிரலாபிப்பதறிந்து யாம் எமது பத்தினியினிடம் ஒப்புச்சொல்லிப் பாதுகாக்கச்செய்தோம், உடனே குமாரன்பிறந்தான், அவனுக்கு உதயனென்று நாமகரணஞ்செய்து, பருவமறிந்துவித்தியாப்பியாசமுதலியவும் சதுர்வேதமு முணரச் செய்தோம் இதுதானிங்குநடந்தசவிஸ்தாரமாதலால் இதுபரியந்தம், வால்மீகர் தமதாசிரமத்தையடைந்தசீதாபிராட்டியையுமவள்குமாரர்களாகிய குசலவர்களையும் பாதுகாத்து ஸ்ரீராமனுக்கு ஒப்புவித்ததுபோல், எமது ஆசிரமத்தையடைந்த மிருகாவதியையும் அவள்புதல்வனாகிய உதயனையும் பாதுகாத்துவந்து ஸ்ரீராமனுக்குச் சமமாகிய சகத்திரானிக வேந்தனென்னும் நின்னிடம் ஒப்புவித்தோமாதலால், நீ யுனது தேவியையு மைந்தனையு மழைத்துக்கொண்டுபோய் சுகஜீவியாக விருக்கக்கடவையென்று அனேக ஆசிர்வாதங்கள்செய்து, தம்மிடத்திலிருக்கும் அரிதாகிய சிலபதார்த்தங்களையுங்கொடுத்து விடைகொடுக்க, சகத்திரானிகன், முனிவரைப்பணிந்து, தனதுமனைவியாகிய மிருகாவதியையுங் குமாரனாகிய உதயனையும் அவன் குமாரனையு முத்துச்சிவிகையி லேற்றிக்கொண்டு தான் ரதாரூடனாய் மந்திரிமுதலிய தளங்களைக்கூடிப் பிரயாணப்பட்டுக் கௌசாம்பிய பட்டணம்வந்துசேர்ந்து இராச்சியபரி

பாலனஞ்செய்து கொண்டிருந்தான். இவ்விதமாய் வேந்தன் மனைவிமக்களோடுங்கூடிச் சகலசந்தோஷங்களையு மநுபவித்து வருங்காலையில், தனது குமாரனாகிய உதயனனுக்கு நல்ல சுபமுகூர்த்தத்திற் பட்டாபிஷேகஞ் செய்துவைத்து, செங்கோன் முறைமையாவுந் தெளிவுறச்சொல்லி, சாமபேததானதண்டமென்னுஞ் சதுர்வித வுபாயங்களினும் வல்லவனாகிய மந்திரியையுமமைத்து, பின்னர்யுகந்தராயணன் வசந்தன் மனைவியாகிய மிருகாவதி என்னுமூவரோடுங்கூடி துறவடைந்து பட்டணம்விட்டுப் பிரயாணப்பட்டு திவ்ய க்ஷேத்திரங்களைக்கண்டு தெரிசித்து திவ்யதீர்த்தங்களாடி வருகிறபோது, சேதுவைச்சார்ந்த புல்லாரண்யமென்னும் க்ஷேத்திரத்தில் தேவிப்பட்டணத்திலே வயங்காநின்ற சக்கரதீர்த்தத்தில் மூழ்கினார்கள். அவ்வாறு அத்தீர்த்தத்திலாடியவுடனே, தேவதுந்துமிமுழங்கவும் தேவர்கள் மந்தாரம் பாரிஜாதமுதலிய மலர்களைமாரி போர்சலசலென்று வருஷிக்கவும் தாங்கள் முன்செய்த வினைப்போகங்களையெல்லா மொழித்துச் சாபமனைத்துந்தீர்ந்து பழயபடி தேவசொரூபம்பெற்று இராஜனாகிய சகத்திரானிகன் அஷ்டவசுக்களில் விதுமனாகவும், யுகந்தராயணனாகியமந்திரி மாலியவானாகவும், சேனைபதியாகிய சதுரங்கன் புட்பகந்தனாகவும், புரோகிதனாகிய வசந்தன் பலோற்கடனாகவும், மிருகாவதியென்னு மாசி அலம்புசையென்னுமரம்பை மாதாகவும் உருவம்பெற்று, பொன்னுலகத்திலவரவர்கள் தொழிலிற்பிரவேசித் திருந்தார்கள், ஆதலால் இத்தன்மையாகிய மகிமைபூண்ட சக்கரதீர்த்தம் தேவிபுரத்திலுண்டாயிருக்கின்றதென்று சூதமஹாரிஷிசொல்ல, நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்கள்கேட்டு மிகவுங்களிப்படைந்து பிரம்மானந்தபரிதராய் முனிவரைநோக்கி, சுவாமீ, செப்புதற்கரிய விச்சக்கரதீர்த்தம் விளங்கிக்கொண்டிருக்கும் பட்டணத்திற்கு தேவியினது நாமத்தாற்பெயர் பிரகாசிக்குங் காரணமியாதோ, அதனையும் அத்தீர்த்தத்தில்நாராய்ப் பிறந்தவர்கள் தீர்த்தமாடினால் அவர்கள் அடையும்படியாகிய பலனை

யுஞ் சிறியோர்களுக்குப் புலப்படும்படியாய் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று விரைந்துகேட்க, சூதமகாமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

வீ தாமச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

தேவிபுரச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, விண்முதல் ஐந்தாகியும், விமலமாகியும், அமலமாகியும், விளங்காநின்ற ஜகதீசனது கிருபாநோக்காலிலகும் காசிப மகாரிஷியினது தேவிமார்களாகிய திதியென்பவள்வயிற்றிலே பிறந்ததேவேந்திராதிதேவர்களும், அதிதியென்பவள்வயிற்றிலேபிறந்த இராட்சதர்களும் ஒருவருக்கொருவர் தொந்தயுத்தங்கள்செய்து போராடி இராட்சதர்களி யாவருமடிந்து விட்டதனாலே அதிதி யென்னப்பட்டவள் மிகுந்த விசனத்தினாற் சோபங்கொண்டுவாட்டோய்ந்து சகிக்கலாற்றாதவளாய்த் தனது குமாரத்தியை யழைத்து, அடியம்மணி, இனியாகிலுமுனது வயிற்றிலே கெர்ப்பமுண்டாகும்படியாய் வனத்திற்போயரிதாகிய தபஞ்செய்து வரம்வாங்கிவருவாய், மகளேயென்று சொல்ல, அதுகேட்ட அவளும்வணங்கி விடைபெற்றுக்கொண்டு வனத்துட் பிரவேசித்து, சுபாரிச முனியைநோக்கி, மகிஷரூபத்தோடுந் தபம்புரிந்தாள்; அப்போது சுபாரிச முனிவரானவ ரவளுக்குப் பிரசன்னமாகி, வாரும்பெண்ணே, சத்குணி, நீ செய்த தபத்தாலுன்பேரி லெனக்கு மிகவுஞ்சந்தோஷமாய் தெரிசனந்தந்தோம், இனி நீ விரும்பியவண்ண முன் வயிற்றிற்பிறக்கும் பிள்ளையானவன் சுத்தவீரனாகவும் அதிவீரபராக்கிரம சாலியாகவும் அநேகவரங்களைப் பெற்றவனாகவும் உன்னைப்போல் மகிஷரூபத்தோடும் பிறப்பானாதலால், அதுவரையினும் நீ என்னிடமிரு வென்றவளையுங் கூட்டிக் கொண்டுபோய்த் தானிருக்கும் பன்னசாலையில்

வைத்துக் கொண்டிருந்தார். இவ்வகையாய் சுபாரிசரிடத்திலே யிருக்கிறபோது, அவள் வயிற்றில் கெர்ப்பமுண்டாய் ஆலாகல விஷம் பிறந்ததுபோல மகிஷமுகத்தோடுங்கூடி யோர் பிள்ளைபிறந்தது, அப்பிள்ளைக்கு மகிஷாசுரனென்று பெயரிட்டு வளர்த்துவருகையி லப்பிள்ளையானவன் சகலவல்லமைகளு முண்டானவனாகவும் பராக்ரமசாலியாகவு மிருக்கிறபோது, முனபு தேவர்களோடு யுத்தஞ்செய்து ஜெயிக்கமாட்டாதவர்களாய் தப்பிப்பிழைத்து ஓடியொளித்திருந்த இராட்சதர்களில் விப்பிரசித்துவினுடைய குமாரன் வித்துத்துமாலி யென்பவன் மகாபராக்ரமசாலிகளாகிய சிலராட்சதப் படைகளோடுங்கூடி இந்தமகிஷாசுரனிடத்திலே சேர்ந்து; அவனைநோக்கிக் கூறுவார்கள், ஐயா, மகிஷாசுரனே, எங்களையும் எங்கள் முன்னோர்களாகிய சில ராட்சதர்களையும் அமராவதிக் கிறைவனாகிய தேவந்திரன் விஷ்ணு முதலாகிய தேவர்களெல்லா மெதிர்த்துப்போராடி நாசப்படுத்திய காலையில் நாங்கள் ஓடித்தப்பிப் பிழைத்தோம், எனசெய்வோம்; வேறுதுணையில்லாமற் றுன்பப்படுகிறோமென்று சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட மகிஷாசுரன் கடுஞ்சினமடைந்து; கண்களிற் றீயெழும்படிநோக்கி, பயப்படாதீர்கள், கணப்போதில் தேவர்களையெல்லாம் நாசப்படுத்துகிறேனென்றுசீறியெழுந்து, அவ்வரக்கர்களைக்கூட்டிப் பிரயாணப்படுத்திக்கொண்டு, தெய்வலோகத்தைச் சுற்றிவளைத்து; இந்திராதி தேவர்களுடனே தேவவருடம் நூறுவருடம்வரையில் தொந்தயுத்தஞ்செய்தான், அப்படியுத்தஞ் செய்கிறகாலையில் இந்திரன் பிரமன் விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாம் மகிஷாசுரனுக்கு முன்னின்று கிர்லபிக்கமாட்டாதவர்களாய், தங்கள் பதியை விடுத்து உத்தரபாகத்திலோங்குங் கயிலாசகிரியிற் சேர்ந்து, சந்திர ஜடாதரமூர்த்தியாகிய உமாமகேச னிடத்தில் முறையிட்டார், அம்முறைகேட்ட பரமசிவன்; ரவுத்ராகாரமாய்க்கோபங்கொண்டு, தனதுகோபாவேசமாகியதலை வடவா முகாக்கினியினுங் கோடிபங்கதிகப்படுத்தி, அதனையோர்

பெண்ணுருவின் முகமாகவும், மகாவிஷ்ணுவினது கோபத்
தீயை தேகமாகவும், இயமனது கோபத்தை உதடாகவும்,
பிரமனது கோபத்தைப் பாதங்களாகவும், கயிலாச கிரியை
யிரண்டு குசங்களாகவும், அருணனது கோபத்தை முழந்தாள்
களாகவும், அஷ்டவசுக்களைக் கரசாகைகளிலுள்ள நகங்க
ளாகவும், அஷ்டதிக்குப்பாலர்களை விரல்களாகவும், சந்திரனை
நாசியாகவும், வடவாமுகாக்கினியைக் கண்களாகவும், சண்ட
மாருதத்தைப் புருவமாகவும், இந்திராதிதேவர் களிடத்துண்
டாகிய கோபத்தியே சதுர்ப்புஜங்களும் அஷ்ட கரங்களுமாயு
தங்கள் பிரகாசிக்கும்படியாயும், அஷ்டதிசையுநடுங்கும்படி
பரஞ்சோதிவடிவாய் நின்றவளைக்கண்ட தேவர்முதலியாவரும்
தோத்திரஞ்செய்தார்கள், அவ்வாறு தோத்திரஞ்செய்ததுமல்
லாமல், அவரவர்களது மந்திரசக்திகளையும் ஆயுதங்களையுங்
கொடுக்க, அவைகளைப்பெற்றுக் கொண்டவளாய்க்கோபா வே
சத்தோடும் அண்டகடாகங்களும் நடுங்கும்படியாய் கெர்ச்ச
னை செய்து, விச்வசொரூபங்கொண்டு நிற்பவளுக்கு, பரம
சிவன் தனது மூவிலைவேற் சூலத்தைக்கொடுத்துச் சிங்கத்தை
வாகனமாகவும், பூதவேதபைசாச கணங்களைப்படையாகவும்
மாமிசாதிகளை பட்சணமாகவும், பாலை வனத்திலிருந்து மகி
ஷாசுரனைச் சங்கரித்துவரும்படி யநுஞ்செய்தனுப்ப, விடை
பெற்று, பூதவேதாளபைசாசக்கூட்டங்களுடனே சிங்கவாகன
த்திலேறிவருகிற துர்க்கையை, மகிஷாசுரன்முதலிய ராட்சதர்
கள்கண்டு, மகாகோபங்கொண்டு, அரிதாகிய சிலபதார்த்தங்
களையுங்கொடுத்து விடைகொடுக்க, சகத்திராணிகன், முநிவ
ராப்பணிந்து, தனதுமனைவியாகிய மிருகாவதியையுங் குமார
னாகிய உதயனனையும் அவன்குமாரனையுமுத்துச்சிவிகையிலே
ற்றிக்கொண்டுதான்ரதாரூடனாய் மந்திரிமுதலியதளங்களுடன்
மகாதுர்க்கையை வந்தெதிர்த்துச் சூழ்ந்துகொண்டார்கள், அப்
படி சூழ்ந்தவரக்கர்களைக்கண்டு, அண்டமுகடுந்துடுக்கிட, சமு
த்திரஜலமுங்கலங்கிச் சுவறும்படியாய் கெர்ஜித்துநின்றதுர்க்
கையின்மீது அரக்கர்கள் வில்லைவளைத்து அனேகமாயிரம்

பாணங்களைத் தண்டோபதண்டமாய் பிரயோகஞ் செய்தார்
கள், அதைக்கண்டதேவர்கள், தங்கள் வில்லைவளைத்துகுணத்
தொனிசெய்து ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம்
லட்சம் பத்துலட்சம் கோடி பத்துக்கோடி சங்கம் மகாசங்க
மென்பதாய்க் கணக்குமிதமில்லாமல் அளவிறந்தபாணங்களை
ஆகாயம் பூமி எங்கும் பாணமயமாய்ச்சிரப்பி இராட்சதக்கூட்
டங்களைக் கால்வேறு, கைவேறு, சிரம்வேறு, உடல்வேறா
கக்கண்டித்து, எங்கும் பிணமலைகளாகக் குவித்து, நாய் நரி
கழுகு கூளி பூதவேதாளபைசாசகணங்களுக்கு விருந்திட்டு,
இன்னமுண்டோ வரக்கர் சேனைகளெனச் சிங்கநாத வட்ட
காசஞ்செய்தார்கள், அதுகண்ட மகிஷாசுரன் எரிந்துவிழு
ந்து பற்களை நெறநெறவென்று கடித்துக் கண்களில் நெருப்
புப்பொறி குபீல்குபீலென்று சிந்தும்படியாய், வில்லை வளை
த்து நாணேற்றிக் குணத்தொனிகாட்டி, எஃகினாற் செய்து
விஷந்தோய்ந்திருக்கும்படியாகிய நாராசங்களை வில்லிற் சந்
தித்து, கர்ணபரியந்தமிழுத்து, தேவேந்திரன் பேரிலாயிரமும்
வருணன்பேரிலாயிரமும், வாயுவின்பேரிலாயிரமும், அஷ்ட
வசுக்கள் முதலியதேவர்கள்மீதும் ஆயிரமாயிரமாகத்தொடுத்
துச் சிங்காதஞ்செய்தான், அப்போது துர்க்கியானவள், மிக
வுங்கோபங்கொண்டு, தன்னைச்சூழ்ந்திருக்கும்பூதவேதாளபை
சாசங்களைத்தூண்ட, அவைகளாக்ரமித்துச் சண்டமாருதக்
காற்றைப்போலெழும்பி மயிடன்விடுத்த பாணங்களையெல்
லாங் குபீலெனப்பாய்ந்து கையினாற்பிடித்தும் முறித்தும்
இராக்கதர்கள்மேல்மோதி யதன்றியும் தங்கள் கையிலிருந்த
கதை சூலம் இருப்புலக்கை பிண்டி பாலங்களால் இராட்ச
தர் கூட்டங்களை அதாஹதப்படுத்திக், கைவேறு கால்வேறா
கச்செய்து, அவுணர்களைத் துண்டுதுண்டாய் சதைசதை யா
ய்ப் பெயர்த்தெறிந்து, அட்டகாசங்கள் செய்துகின்றன, அப்
போது ராட்சதப்படைகளெல்லாங் கோவென்றுகூக்குரலிட்
டுக்கொண்டுமகிடாசுரனைநோக்கி, ஓடிவருகிறபோது, அவனு
டைய மந்திரிகளாகிய மகாநாதன், அநேகபாதன், காவில்லன்,

சண்டன், மகோதரன், மகியுனன், கற்பகச்சூடன், மகோற்கடன், ஒற்றைக்கண்ணன், சுலோசனன் இவர்களெல்லாமொன்றாய்த்திரண்டு, தேவியைவந்து சிங்கத்தைநாய்கள் சுற்றிக்கொண்டதுபோற் சுற்றிக்கொண்டு, அவ்வரவர்கள் வில்லைவளைத்து, இடிமுழக்கம்போலப் பேரொலிகாட்டி, அஸ்திரங்களைச் சோனைமாரி போற்சிந்தினார்கள். அப்போது துர்க்கியானவள் கோபங்கொண்டு, வீரசிங்கம்போலார்ப்பரித்து, வில்லை வளைத்து, அண்டமுகடுஞ் செவிடுபடும்படியாய் குணத்தொனி செய்து, வச்சிராயுதத்துக்குச் சமானமான ஒருபிறை முகக்கணையை வில்லினிடமாகச்சந்தித்து, அபிமந்திரித்து, கர்ணபரியந்தமிழுத்துப் பிரயோகஞ்செய்தாள். அந்த அஸ்திரமானது மகிஷாசுரனுடைய சேனைகளிலே பிரவேசித்து, யானைகளிலே லட்சம் குதிரைகளிலே பத்துலட்சம் காலாள்களிலே சங்கஞ் சங்கமாய் மலைமலையாய்க் குவித்துவிட்டது, அப்போது மாயவனென்னப்பட்ட ஓர் ராக்கதன், அநேகஞ் சேனைகளோடுங்கூடியெதிர்த்து துர்க்கையின்பேரில் அளவிறந்த பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்ய, தேவியார் கோபங்கொண்டு, எரிமுகவாளியை வில்லினிடமாகச் சந்தித்து விட, அந்தபாணமானது ஜடஜடவென்னும் ஓசையுடனெங்கும் பொறிகளைச்சிந்தி, மாயவனதுமார்பிற்றைத்து, முதுகிலுருவிப்போக, அதனாலவன் இரத்தங்களைக் கக்கிக்கொண்டு பூமியின்மேற்சாய்ந்து உயிர்விட்டான், அதுகண்ட மகிஷாசுரன் அதிக விசனங்கொண்டு, தன்னண்டையிலிருக்குஞ் சண்டகோபனென்னும் ராட்சதனைப்பார்த்து, அடாசண்டகோபா, நமது மாயவனைக்கொன்ற இந்த துர்க்கியை நீ போயெதிர்த்துக் கணப்போதினிற் காலன்வசப்படுத்தி, வெற்றிமாலை தரித்து வரவேண்டுமென்றனுப்ப, அப்படியே சண்டகோபனும் மகா ஆக்ருஷத்தோடநேகராட்சதப்படைகளுடனேவந்து தேவியையெதிர்த்து, அநேகமாயிரம் பாணங்களை பிரயோகஞ்செய்ய, அப்போதுதேவியார், சண்டகோபன் விடுத்த அஸ்திரங்களையெல்லாமோர் சிலீமுகக்கணையால்நாசப்படுத்தி,

அவன் கைவில்லையுங் கண்டித்து, துவசத்தையும் வெட்டிச்சாய்த்துக் குதிரையையுங்கொன்று, இரதத்தையுஞ் செக்கை செக்கையாய்ப்பேர்த்தெறிந்து, மற்றொரு அர்த்த சந்திர பாணத்தினால் அவன்சிரத்தையுந் துணித்துச் சாய்த்தாள், அவ்வாறு சண்டகோபன் சாய்ந்தவுடனே, சித்ரபானு வென்னுமோ ராக்கன் கோபாவேசங்கொண்டு, கையிற் சக்கராயுதமெடுத்துச் சிங்கம்போற்பாய்ந்து, கரகரவென்று சுழற்றித் தேவியின்பேரில் விட்டெறிந்தான், அச்சக்கரமானது கிரிச்சிட்டுக்கொண்டு வரும்வேகத்தைக்கண்ட தேவி ஓர்பகழியை வில்லினிடமாகச் சந்தித்து, அவன்விட்டசக்கரத்தை வெட்டிச்சாய்த்து, மற்றொருபகழியா லவன்தலையையும் வெட்டித்தள்ளினாள், அப்போது பாடகனென்னப்பட்ட ராட்சதன் கண்டு, சினங்கொண்டு, தனதுகையிலிருந்த வில்லையும் வேலையுமெறிந்துவிட்டுத், தேரைவிட்டுக்குதித்து, தோள்தட்டித் தேவிமுன்னின்று மல்யுத்தஞ் செய்யும்படியாய் அறைகூவிநின்றான், அதுகண்ட துர்க்கியானவள், கோபச்சிரிப்புக்காட்டி, இடக்கையாலோங்கி அவன் தலையிற்புடைத்த மாத்திரத்தில் தலையிலிருந்த மூளையானது கலங்கிக்காதின்வழியாகவும் வாயின்வழியாகவுஞ்சிந்தி நாக்கைத்தொங்கவிட்டுக் கதறிப்பதறி மாய்ந்தான், அதைக்கண்ட அந்தகனென்னுமோ ராக்கன்வந்தெதிர்க்க, அவனையுமோர் கணையினாற் கொன்று இவ்வாறு மகிஷாசுரனுடைய இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனைகளையுங் கால்மாடு தலைமாடாகச்சாய்த்துப் பனிக்கூட்டத்தைவிலக்கி யெழும் பானுவைப் போல இருட்கூட்டம்போன்ற இராட்சதக்கடலினின்றும் தேவியானவள் சூரியனைப்போற் பிரகாசித்துக்கொண்டிருப்பதை மகிஷாசுரன்கண்டு, வடவாமுகாக்கினி போற் சீறியெழுந்து, காற்குளம்புகளினாலே பாதாளலோகம் வரையில் வெடிப்புறும்படியாய் வெட்டிப்பிளந்து, கொம்புகளையசைத்துப், புருவங்களை விதிர்த்து, கண்களில் அக்கினிப்பொறிகள் சிந்தும்படியா யுருட்டிப்பார்த்து, நீலகிரியைப்போலும் மேகக்

கூட்டம்போலும் இரண்டுகடைவாய்களினின்று மிரத்தங்கள்
கொப்பளித்துச் சிந்தும்படியாய் உதட்டைக்கடித்தும், முன்
கையைக்கடித்தும், வாலையுதறி யாகாயத்திற்கிளம்பியும்;யுகா
ந்தகால சமுத்திரம் புரண்டுவருவதுபோ லிராட்சதப் படை
யுடனே தேவியைவந்தெதிர்த்தான், அப்போது துர்க்கியான
வள், இனியிந்த மகிஷாசுரனைப் பூமியிலிருத்துவது அழகல்ல
வென்றுகருதி,நீலகிரியை ஆதிசேடன் சுற்றிவளைந்ததுபோல
நாகபாசத்தையெடுத்து மகிஷாசுரன்பேரில் வீசினாள், அந்த
நாகபாசமானது தேவியினது கரத்தினின்றும் வெளிப்பட்ட
தெப்படியிருந்ததென்றால்,ஆலாகாலவிடம்போலும் அந்தகார
விருளைப்போலும் சண்டமாருதம்போலும் அதிவேகத்தோ
டுங்கூடி, மகிஷாசுரனைச் சுற்றிவளைந்துக்கொள்ள, கட்டுண்டு
கண்பிதுங்கி, வாயிலேரத்தங்கள் குபீல் குபீலென்று சிந்த,
அம்மகிஷரூபத்தைநீக்கி, சிங்கவுருவமாகிப்பாய்ந்து, ஆக்ர
மித்து தேவியைவந்தெதிர்த்தான், அப்போதுதேவியார் அ
கோர ருத்ராகாரமாய் நரசிம்மாஸ்திரத்தைப் பிரயோகஞ்செ
ய்து, அச்சிங்கவுருவை யிருபிளவாகப் பிளந்தெறிந்தாள்,
பின்னும், மதங்கொண்ட யானையைப்போல் வந்தெதிர்த்து,
தேவியைச் சிங்கவாகனத்துடனே துதிக்கையாற் சுற்றித்
தூக்கினான், அப்போதுதேவியார்யானையாகிய மகிஷாசுரனது
துதிக்கையைச் சக்ராயுதத்தினலறுத்துத் தள்ளினாள், பின்
னும் மகிஷாசுரனாக்ரமித்து, ஆகாயத்திற்கிளம்பி, பூமியிலே
வாருகொண்டு குதித்து, மகிஷரூபத்தோடும் தேவிமுன்னின்
று ஆர்ப்பரித்தான், அதுகண்ட துர்க்கியானவள் பற்களைக்
கடித்து, வில்லினிடமாக வனேக பாணங்களைத் தொடுத்துப்
பிரயோகித்தாள், அதுகளையெல்லாம் மகிஷாசுரன் தனது
கொம்பினாற் றட்டிவிட்டு, பருவதங்களையும் விருட்சங்களை
யுங் கொம்பினாற் குத்திக்கிளப்பித் தூக்கிதேவியின்பேரிலெ
றிந்தான், அப்போது தேவியானவள் தனது தண்டத்தினாற்
றட்டித்தவிடுபொடிசெய்து காற்றிலேவிட்டு, மகிஷனைப்பா
ர்த்து, மகாவுக்ரத்தோடும், அடா,உனது ஜீவனைக் கணப்போ

தில் மடித்து தென்றிசைக் கடவுளாகிய எமபிரானுக்கு வாக
னமாக வனுப்புகிறேனென்று வீராவேசத்தோடுங் கையை
மேலே தூக்கி, மகிஷாசுரன் தலையிலே கோடைக் காலத்
திடிபோற் குத்தினாள். அக்குத்தினால் அசுரனுடைய க
பாலமானது கலங்கிக் கண்கள் தெறித்து தேகத்திலுள்ள
வெலும்பெல்லா முறிந்து நெக்குவிட்டு, உள்ளம் பதறி,
நிலைநிற்க மாட்டாமற் றென்றிசையைநோக்கி யோட்ட மெ
டுத்தான், அதுகண்டு, தேவியானவள், மிகவும் ஆக்ரமித்
து, குருகென்னும்பறவையை யிரைகொள்ளவெழுந்த கோ
வாகிய இராஜாளியைப்போற் றொடரச் சிங்கத்தையேவு கை
யில், அப்போது அசுரனானவன் ஓடுவதற்கசக்தனாய்; இனி
நம்மால் ஓடமுடியாதெனக்கருதித்தான் ஓடுந்திசைக்கு எதிரி
லிருந்தசேதுவுக்குச் சம்பந்தமாகவிருக்கும் சக்கரதீர்த்த மா
னது வெகுவிஸ்தாரமாய்ப் பத்துநாழிகைதூரம் பரப்பும்
ஆழமுமுள்ளதாயிருந்ததைக்கண்டு,குபீலென்றத்தடாகத்திற்
பாய்ந்து, அழுந்திவிட்டான், அப்போது பின் தொடர்ந்து
வந்த தேவியானவள், அசுரனைக்காணமற்றிகைத்து, எவ்வித
மாயையினாலோ மறைந்தானென்று யோசித்துக் கொண்டு,
வந்தவழியைப்பார்க்க வுத்தரமுகமாகத் திரும்பியந்த சக்கர
தீர்த்தக்கரையிலே நிற்கும்போது, மகிஷாசுரனித் தடாகத்தி
லொளித்திருக்கிறானென்று ஆகாயத்தில்அசரீரிதோன்றியது.
அதுகேட்டவுடனே, தன்னுடையவாகனமாகிய சிங்கத்தை
யேவ, அச்சிங்கமானது தடாகத்தில் வாய்வைத்துச் சலத்
தையெல்லாஞ் சேறுபடக் குடித்தமையால், அப்போது அசு
ரன் பதுங்குவதற்கிடமில்லாமல் வெளிப்பட்டான், உடனே
துர்க்கியானவள்கண்டு,விடப்படாதென்றுருத்ராகாரமாய்ஆக்
ரமித்துஎழும்பி, அண்டாண்டபட்சியானதுயானைகளின்மீது
பாய்ந்து காலினாலிடுக்குவதுபோல மகிஷாசுரன்மீதுபாய்ந்து
ஓர்கால் உடலத்திலும் ஓர்காற்சிரத்திலுமூன்றிச் சூலத்தினாற்
குத்திப்புரட்டி, கத்தியினால்வெட்டி, அவனது உடலத்தைக்
காலாலெற்றினமாத்திரத்தில், மகிஷாசுரன் யுகாந்தகாலப் பே

ரொலிபோ லிரைச்சலிட்டுக்கொண்டு, இரத்தங்களைக் குபீ
லென்று கக்கிக்கொண்டு, மரணமடைந்தான். அதுகண்ட
தேவியுந் தனதுவாளாயுதத்திஞலே அவனுடையவுடல்வேறு
கால்வேருக வெட்டியெறிந்து, தலையைக்காலால் மிதித்துக்
கொண்டு, ரவுத்ராகாரமாய்த் தனது தேகமனைத்துஞ் சிவந்து
செக்கர்வானம்போற் பிரகாசித்தாள், அதுகண்டதேவர்களெ
ல்லாம் ஆச்சரியங்கொண்டு மெத்தவுஞ் சந்தோஷத்தோடுங்
கற்பகமலர்களைத் தேவியின்மீது சோனைமாரிபோற் சலசல
வென்று வருஷித்தார்கள், அவ்வாறு வருஷித்ததன்றியும் தே
வர்களுக்கு இவ்வசுரன் மரணமடைந்தது எப்படியிருந்ததெ
ன்ருல், இரண்யாட்சதர்களைப்போ லொருகோடி பேர்கள்
இராவண கும்பகர்ணர்களைப்போ லொருகோடிபேர்கள் தாரு
காசுரனைப்போ லொருகோடிபேர்கள் மடிந்தால் எவ்வளவு
களிப்புண்டாகுமோ அதற்கு எண்மடங்கதிகமாகிய சந்தோ
ஷங்கொண்டு, தேவியைத்தோத்திரஞ்செய்து, ஆனந்தக்கூத்
தாடினார்கள், அதன்றியும்,பூதவேதாளபைசாசகணங்கள்முத
லியயாவும் மலையைப்போற் குவிந்திருக்கும் மகிஷா சுரனது
இரத்தமாமிசங்களைத்தின்று, இன்றுநமக்கு நல்லவிருந்தென்
று சொல்லிக்கூத்தாடின. லோகா லோகங்களிலுள்ள சகல
ஜீவாத்மாக்களுஞ் சந்தோஷமடைந்தார்கள், அப்போது தே
வர்களெல்லா மொன்ருய்க்கூடி மகிஷா சுரனைச் சங்கரித்த
மகாதேவிக்குச் சக்கரதீர்த்தக்கரையிலே ஆலயமும் பட்டண
மு முண்டாக்கி, அதிற்குடிகளையேற்றி, அதற்குதேவி பட்ட
ணமென்று பெயரளித்து, தேர்திருவிழா முதலிய யாவுமுண்
டாக்கி, மகிஷாசுரமர்த்தனியென்று பெயர்கொடுத்து, தேவி
யைப்பூசித்து வணங்கி யெங்களுக்கென்ன இடுக்கண்வந்த
போதினும் தீர்க்கவேண்டுமென்று வரப்பிரசாதமும்பெற்றுக்
கொண்டு, அவரவர்களுடைய லோகத்துக்குப்போய்ச் சேர்ந்தா
ர்கள், பின்னும் அன்றுமுதல், அப்பட்டணத்திலே யாதொரு
குறைவுமில்லாமல் சகலருக்குமிஷ்ட சித்திகளைத்தந்து வெற்
றியைத் தருவதுமல்லாமல் அச்சக்கரதீர்த்தமானது சிங்கங்

குடிக்கச் சுவறிப்போனமையால், தேவிதனது அருளால் அதி
லமுர்தம் பெருகச்செய்து, சகலருந்தீர்த்தமாடும்படி உபயோ
கப்படுத்தினபடியால் அதற்கு அமிர்ததீர்த்தமென்றும் பெயர்
கொடுத்து, அதில்மூழ்கினபேர்களுக்கு நினைத்த காரியங்க
ளெல்லாங் கைகூடிவரும்படியாய்ச் செய்தும், மோட்ச சாம்
பிராச்சியமுங்கொடுக்குந் தேவிப்பட்டணமுண்டான வர்த்த
மான மிப்படியென்றுந் தேவிபட்டணத்திற்ருன் ஸ்ரீராமசந்தி
ரன் திருவணைகட்டும்போது முன்னர் கணேசனையும் நவக்ர
ங்களையும் பூஜித்துச் சேதுபந்தனஞ்செய்ய வாரம்பித்தான்,
அப்போதந்த தேவதச்சனுகிய நளன் ஸ்ரீராமசந்திர சுவாமி
க்கு ஒருசிங்காசனம் செய்துகொடுத்து, அதிலே ஸ்ரீராமஸ்
வாமியை யெழுந்தருளி யிருக்கும்படிசெய்து, பின் ஐந்து
நாளைக்குட் சேதுவைக்கட்டி முடித்துச், சகல தேவதா சொ
ரூபமான வானரர்களும் ஸ்ரீராமச்சந்திரனது பிரசாதமுங்
கூடிய திருவணையினது தொடக்கத்துக்கு கிழ்ப்பாகத்திலே
ஸ்நானவிதியா யாத்திரை செய்யப்பட்டவர்கள், முதல்கணே
சனைப் பூசித்துப், பின்பு சேதுமூலத்தில் ஸ்நானஞ்செய்து,
க்ஷேத்திரபிண்ட முதலானதுங்கொடுத்துப், பிறகு சக்கரதீர்
த்தத்தில்மூழ்கி, அங்கும் க்ஷேத்திரபிண்ட முதலானதுகள்
செய்து, அந்தசேதுவுக்கு நாயகனுகிய ஸ்ரீராமச்சந்திரனைப்
பூசித்து,கிரமப்படி ஸ்நானஞ்செய்து, ஜபதபநியம நிட்டை
கள்நட்டிப்போர்களுடையசென்மாந்தரங்களிற்செய்தகன்மா
நுபவங்களும்நீங்கி, மோட்சத்தையடைவார்கள், அன்றியும்,
தர்மபுஷ்கரிணி யென்னுந் தீர்த்தத்துக்குச் சமானமானது
எந்தலோகத்திலுங்கிடையாது, உலகிலுள்ள சகலநதிகளிலு
ம் மூழ்கினபோதிலும், இத்தீர்த்தத்திலாடிய புண்ணிய பலத்
தில் பதினுறிலொருபங்குக்கீடாகாது, யாத்திரை செய்யப்பட்
டவர்கள் முன்பு நவபாஷாணமாகிய சேதுமூலத்தில் மூழ்கி,
அப்புறஞ் சக்கரதீர்த்தத்திலாடி, இவ்விரண்டிடங்களிலும்
க்ஷேத்ரபிண்டங்கொடுத்து, தர்ப்பணங்கள்செய்து, ஸ்ரீராம
னைப்பூசித்து, வணங்கி, அப்பால்தர்ப்பசயனத்திற்குப்போய்,

ளனுமேல் நியமிக்கப்பட்ட சிங்காசனத்தை தெரிசித்தவர்கள், நரகவேதனை யடையமாட்டார்களாதலால், இன்ன மதினுடைய மகிமைகளைக்கேளுங்கள், யாதெனில், அந்தச்சேதுவானது மோட்சமார்க்கத்துக்கு ஏதுவாகி, சீதாலட்சுமியினது இருதயகமலத்தை விகசிதஞ்செய்கிறதற்கு இளஞ்சூரியனைப்போல் விளங்கிக்கொண்டிருக்குமென்று சூதபுராணிகர் சொல்லி, மறுபடியுஞ்சொல்லுவார், கேளுங்கள் முனிவர்களே ; இத்தன்மைவாய்ந்த சேது மூலத்திலேவிளங்குஞ் சக்கர தீர்த்தத்திலே மூழ்கிய புண்ணியர், அதற்குதக்ஷிணபாகத்திலிருக்கும் வேதாளவரததீர்த்தம் ஆடவேண்டியவிதியாதலால், அத்தீர்த்தத்துக்கு உத்தரபாகத்தில் சக்கர தீர்த்தமும், தக்ஷிணபாரிசங்கந்தமாதன பருவதமும்விளங்கிக்கொண்டிருக்குமென்று சூதமுனிவர்சொல்ல, அதைக்கேட்டு ஆனந்தங்கொண்ட நைமிசாரண்யமுனிவர், சுவாமீ, அத்தீர்த்தத்துக்கு வேதாளதீர்த்தமென்று பெயர்வந்தகாரணத்தையும் அதன் மகிமையையும் அடியோங்களுக்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று, பணிந்துகேட்கச் சூதமகாமுனிவர்சொல்லத் தொடங்கினர்.

தேவிபுரச் சருக்கம்

முற்றுப்பெற்றது.

வேதாளவாதச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த சின்மயஸ்வரூப சாட்சாத்காரமாகிவிளங்குஞ்ஜகதீசன்,கயிலாசவாசன்,உமாமகேசன், பவநாசன்,தனது மங்கையாகிய பர்வதராஜகுமாரிக் குரைத்த கதையை யாம் உங்களுக்குரைக்கின்றோம், அதெப்படியென்றால், தண்டகாரண்யத்தில் வாசமாயிருக்குங் காளவமகாரிஷியானவர் பஞ்சாக்கினியிடைநின்று தபஞ்செய்துகொண்டிருக்குங்காலையில், அவர்புத்திரியாகிய காந்திமதியென்பவள்

அதிரூபலாவண்ய சவுந்தரியத்தோடேகூடியிருப்பாள், அவள் நித்தியபடியாய்த் தனது தாதையாகிய காளவமகாரிஷியின் தேவபூசைக்கு வேண்டிய தீர்த்தம் பத்திரம் புட்பம் சமித்து முதலாகியவைகளைக் குறையின்றிக் கொண்டுவந்து கொடுத்துப்பணிவிடைசெய்து கொண்டுவருவாள். அதுபோலொருநாள் வனத்திற்பிரவேசித்துப் பத்திரபுட்பமெடுத்துக்கொண்டிருக்கும்போது, காந்தர்வலோகத்திலேயிருந்து சுதரிசனன் சுகன்னன் என்னுமிரண்டு காந்தருவச் சிறுவர்கள் நவமணி வெயில்பரப்பி யிலகாநின்ற விமானத்தேறி ஆகாய வீதியிற் செல்பவர்கள் இப்பெண்ணினுடைய ரூபலாவண்ய சவுந்தரியத்தையும் அன்னப்பெடைபோன்ற நடையையுங் கண்டு மயங்கி, மூத்தவனாகிய சுதரிசனனென்னப்பட்டவன் விமானத்தைவிட்டு பூமியிலிறங்கி, அந்தப்பெண்ணிடத்தில்வந்து ஓ பெண்பாவாய், இவ்வனத்திலிருக்கும் நீயார், உன்தகப்பன் பெயரென்ன, சொல்லுவாயென்றுகேட்டான், அதற்கவளொன்றுஞ்சொல்லாமல் மவுனமாகவிருந்தும் அவ்வித்யாதரன் தூராக்ருதமாய், வாராய் ஓ பெண்கள்நாயகமே, எனக்கு உன் பேரில் மிகவும்மோகமாயிருப்பதால். நான் காந்தர்வலோகத்திலே விஞ்சையர்களுக்கரசனாகிய கோசானுடைய குமாரன், என்பெயர் சுதரிசனனென்று சொல்லுவார்கள்,யான் மன்மதனுடைய பாணக்கினியால்வெதும்பித் துன்பப்படுகின்றமையால் அதைத்தவிர்த்தாட்கொள்ளவேண்டுமென்று வெகுவாய் வருந்திப் பிரலாபமுற்றான். அதுகேட்ட அப்பாவை கூறுவாள், வாரும் சுதரிசனனே, நான் தண்டகாரண்யத்தில் தவஞ்செய்து கொண்டிருக்குங் காளவ மகாரிஷியினுடைய குமாரத்தி, என்பெயரோ காந்திமதியென்று சொல்லுவார்கள், யான் அவருடையபூசைக்குப் பத்திரம் புட்பம் குசை முதலானவைகள் கொண்டுபோய்க் கொடுக்கின்ற வழக்கமாதலால் இன்றைக்குவெகுநேரந்தாமதப்பட்டுவிட்டது. அவரது பூசாகாலத்துக்கு கணப்போது தாழ்க்குமாயின் கோபித்துச் சாபங்கொடுப்பாராதலால், அவ்வாறுடாக்கின்னே பேதை

யாகிய எனக்குகதியாது, ஆனதால் நீர் என் தகப்பனிடத்தி
லேவந்து என்னைக்கேட்டுக் கலியாணஞ்செய்துகொள்ளுமெ
ன்றுசொல்லிக் காளவிருக்கும் பன்னசாலையைநோக்கி நட
ந்தாள், அப்போது சுதரிசனனும் பின்தொடர்ந்து துராக்ருத
மாய் அவள்கூந்தலைப்பிடித்துத் தூக்கிக்கொண்டு போகும்
போது, காந்திமதி, கோவென்றலறிக் கூக்குரலிட, அவ்வோ
சையைக் காளவமகாரிஷிகேட்டு, பன்னசாலையைவிட்டோடி
வந்துதன்மகளைவிடுவித்துக் கோபாவேசத்துடனே சுதரிசன
னைப்பார்த்துச் சொல்லுவார், அடா பாதகனே, நீ மலமூத்திர
சுத்த மாமிசங்களுடனே கூடினபெண்பேரில் மோகமாய்க்
கிஞ்சித்தேனுமஞ்சாமல் பூதவேதாளங்களைப்போற் பற்றியிழு
த்து இம்சைசெய்ததனாலே நரனாகப்பிறந்து வறுமை யடை
ந்து பின்னர்வேதாளமாகவும் உன்னுடையதம்பி நரனாகவும்
இன்பதுன்பங்களை யநுபவித்து அப்பால் விஞ்சையர்க்குராஜ
னான விக்கினதிக வுதுக்களை நீங்கள்காணும்போது உங்களுக்
கு இச்சாபவிமோசனமா மென்றுசொல்லிச் சீடர்களுடனே
தன்மகளையு மழைத்துக்கொண்டு பன்னசாலையைப் போய்ச்
சேர்ந்தார், அப்பால்சுதரிசனனும் அவனுடைய தம்பியும்
மிகவுந்துன்பமடைந்து தங்களுடையலோகம்போய்ச்சேர்ந்து
இருவரும் பூமியிற்பிறக்க வேண்டியதற்கு யோசனைசெய்து
யமுனாதீரத்திலே கோவிந்தசாமியென்னும் பிராமணனுக்குப்
பிள்ளைகளாய், மூத்தவன் விசையதத்தனென்றும் இளையவன்
அசோகதத்தனென்றும்பிறந்துவளர்ந்து வருகிறபோது, அந்த
யமுனாதீரத்தில், மழையில்லாமற் பன்னிரண்டுவருடம்பஞ்ச
முண்டாய்ப் பிரஜைகள் துன்பத்தையடைந்து யாதுஞ்ஜீவன
த்துக் கிடமில்லாமல் இறந்தபேர்கள்தவிர மற்றவர்கள்திசை
க்கொருவரா யோடிப்போனார்கள். அப்போது கோவிந்தசாமி
யென்னும் பிராமணன் தனதுபெண்சாதி பிள்ளைகளையழைத்
துக்கொண்டு, காசிபட்டணத்துக் கருகேவரும்போது, சூரியா
ஸ்தமாகி விட்டபடியாலும் பசியின்கொடுமையினால் நடப்ப
தற்கு அசக்தர்களாய் மிகுந்த இளைப்போடும் கால்கள்பின்ன

விட, அவனுள்ள கபாலமாலாபரணன் என்னும் ஒருதபோத
னருடைய பன்னசாலையைக்கண்டு, அதிற்போய்ச்சேர்ந்து,
அங்கிருக்கு முனிவரைக்கண்டு, பணிந்து, தங்களதுகுறையினை
த்துஞ்சொல்ல, அம்முனிவர் இரக்கமுற்று, அவ்வேதியனை
நோக்கி, ஓய் பிராமணோத்தமா, உனதுதந்தை மெத்தவும்
நல்லவனென்று யாம்கேள்வியுற்றிருக்கின்றோம், உமக்கு ஈசு
வரன் பிள்ளைகளையுந் தாரித்திரத்தையுங் கொடுத்திருக்கிறார்,
உன்மூத்தமகனுக்கும் உனக்கும் பிரிவுண்டாகும், வினைப்
போகங்களை யநுபவிக்கவேண்டி யிருப்பதால் அநுபவித்தே
தீரவேண்டும். இத்தோப்பிடத்திலிருக்கும் உணவைப் புசி
த்துப் பசியாறுங்களென்று தந்த அன்னத்தைப் பெண்சாதி
பிள்ளைகளுடனேயுண்டு ஜலபானஞ்செய்து, அந்தமுனிவரிரு
ந்து தவஞ்செய்கிற ஆலமரத்தருகே ஒருபாழ்ங் கோயிலில்
சயனித்துக்கொண் டிருக்கையில், நடுராத்திரியில், மூத்தபிள்
ளை யாகிய விசையதத்தனென்பவனுக்கு, குளிருங் காச்சலு
முண்டாக, அதனால் சகிக்கலாற்றாத வருத்தனதாதையை
யெழுப்பி, இவ்வேளை நெருப்பெடுத்துவந்து விறகுகள்தேடி
நெகிடி போட்டாலொழிய வென்பிராணன் தரியாதென்று
சொல்லுவதைக் கேட்ட பிராமணன், புத்திரவாஞ்சையால்
அவ்வேளையில் எங்குந்தேடியுங் கிடைப்பதரிதாகவிருந்தமை
யால், எங்குங் கிடைக்கவில்லையே என்செய்வேன்சுதனே யெ
ன்று துயரங்கொள்ள, அப்போது விசையதத்த னென்னுஞ்
சிறுவன் பெருந்துன்பத்துக்குள்ளானவனாய்த் தனது தகப்ப
னைப்பார்த்து, நீர் பொய்சொல்லுகின்றீர், அதோ வெளிச்சம்
புலப்படுகின்றமையால் எவ்விதமேனும் போய்க்கொண்டு
வாருமென்றுசொல்ல, அதுகேட்டபிராமணன் அடாகுழந்
தாய், நீசொல்லுகிறது உண்மைதான், அதுசுடலைக்கனலாயத
லாலும் அங்கோர் சவம்வேகின்றமையாலும் அத்தீயைத்
தொடப்படாதெனவந்து விட்டேன், ஏனெனில், அப்புகை
நமது தேகத்திற்பட்டால் ஆயுளுஞ் ஜீரணமாவதோடும் வியா
திகளும் விசேஷப்படுமென்று வந்துவிட்டேனென்று சொ

ல்ல, அதுகேட்டவிசையதத்தன், அந்தோ நீ யென்னை யநியாயமாய்க்கொல்ல நினைக்கின்றீர், அச்சவஞ்சுடுந்தீயே இந்தவேளையி லென்னைக்காப்பாற்றும், போய்க்கொண்டுவாருமென்று சொல்ல, அதுகேட்டபிராமணன், மிகவுந் துன்பத்தோடும் புத்திரசோகத்தால் எழுந்து மசானத்தை நோக்கிப்போகையில் விசையதத்தனும் யானும் வருகிறேனென்று பிறகேசெல்ல, அப்போது பிராமணன், பிணம்வைத்தெரிகிற விடத்திற்போய் அந்தச்சவநெருப்பில் குளிர்காயச்செய்து, புதல்வனுக்கு இதஞ்செய்தபிறகு, அப்பிணத்தின் தலைமூளையில் அக்கினி பிடித்துப் பச்சைவர்ணமாகவும் நீலவர்ணமாகவும் பிரகாசந்தோன்றுகின்றதை விசையதத்தன்கண்டு, தகப்பனைப் பார்த்து, ஐயா இதுவென்ன, இப்படியாகப் பிரகாசிக்கின்றதென்றுகேட்க, அப்போது தந்தையானவன் புத்திரனைப்பார்த்து, அடாகுழந்தாய், அந்தப்பிணத்தினது தலையிலிருக்கும் மூளையில் அக்கினிபிடித்து எரிகின்றமையால் அவ்வாறு பிரகாசந் தோற்றுகிறதென்றுசொல்ல, அதுகேட்ட விசையதத்தனென்பவன், உடனேயொருகட்டையையெடுத்து அப்பிணத்தின்றலையிலேயடிக்க, மண்டையானதுதெறித்து அம்மூளையிற்கொஞ்சம் தன் உதட்டின்பேரிற்பட, அதனை வினைப்போகத்தினால் அதிபாவலோடும் நக்கிச் சுவையாயிருந்தமை யால் மறுபடியு மந்தமண்டையைக் கையிலெடுத்துக் கொண்டு அதிலிருந்தமூளை யனைத்தையுஞ்சாப்பிட, உடனே ஆகாயத்துக்கும் பூமிக்குமொன்றாய் நீலகிரிபோல சாத்திரமாகியவுருவங்கொண்டு, மூன்றாம்பிறையைப்போன்ற வக்கிரதந்தங்களும் சிவந்தமயிரும் உருண்டகண்களுமாய் வேதாளரூபத்தோடும் அண்டகடாகங்களெல்லா மதிரத்தக்கதாய் கெர்ச்சித்துப்பாய்ந்து, அவன்வெந்துகொண்டிருக்கும் பிணத்தைத்தூக்கிவாயிற்போட்டுக்கொண்டு அங்கிருந்ததனது தாதையாகிய பிராமணனையும் பட்சணஞ்செய்யநினைத்து, நெருங்கும்போது, ஆகாயத்திலேயவனைத் தொடாதேயென்று ஒரு அசரீரி யுண்டானமையால், அவ்வோசையைக்கேட்ட வுடனேபயந்து அக்கலச்

சென்று ஆகாயமார்க்கமாய்த்தாவி, அம்மயானத்திலுள்ள காளிகூளி பூதப்ரேத பசாசகணங்களுக்கு அரசன் மகிழும்படியான காணிக்கையாகி, கபாலபோடன் என்னும் பெயர்பூண்டு, ராத்திபூடணனென்கிற வேதாள ராஜனிடத்திலே போய்ச்சேர்ந்து, அவனுடைய சேனைகளுக்கெல்லாம் சேனாபதியா யிருந்தான்.

இப்படி யிருக்கும்போது அந்தவேதாளராஜனாகிய ராத்திபூடணன் சித்திரசேனனென்பவனால் மடிந்துவிட்டபடியால் இக்கபாலபோடன் அப்பட்டத்துக் குரியவனாகவிருந்து சஞ்சரித்துக் கொண்டிருக்கும்போது, முன்னாம் மயானத்திலிருந்த கோவிந்தசாமியென்னும் பிராமணன் தனது பிள்ளைக்கு நேரிட்டகாரணத்தைநோக்கி, மகாவியசனத்தோடும் அம்மயானத்தை விட்டுநீங்கித் தாங்களிறங்கியிருந்த பாழ்ங்கோயிலைச்சேர்ந்து, தனது பாரியாளிடத்திலும் இளையகுமாரனாகிய அசோகதத்தனிடத்திலும் நடந்த சவிஸ்தாரங்களை யாதியோடந்தமாய்ச் சொல்லிக்கொடுந் துன்பத்தோடுந் தக்கர்மங்களைத் தாங்களேதேறுதலை செய்துகொண்டு, அவணின்றும் பிரயாணப்பட்டுக் காசிபட்டணத்திற்சேர்ந்து, ஒருவருட காலம்வரையில் முஷ்டியெடுத்து ஜீவித்துக்கொண்டிருக்கையில், தனக்குநெடுநாள் நேசனாகவிருந்த சமுத்திரதத்தனென்னுமோர் செட்டியைக்கண்டு, தனக்கு நேரிட்ட துன்பங்களை யெல்லாம் அவனோடுசொல்லித் துன்பப்பட, அவனும் வியசனமடைந்து பிராமணனுக்குத் தேறுதலைசொல்லித், தன்னிடத்தில்வைத்து அன்ன வஸ்திரங் களுக்குக் குறைவில்லாமற் பாதுகாத்து வருகையில், அம்மறையவனுடைய இளையகுமாரனாகிய அசோகதத்தனென்பவன் தன் மரபுக்குரிய வேதசாஸ்திரபுராணங்களியாவு மோதியுணர்ந்ததன்றியும் க்ஷத்திரியதர்மத்துக்குரிய தனுர்வேதங்களையுங் கற்று மகாவல்லவனாய் ஒப்பொருவரில்லாதவனாகியும் யாவரும் பார்த்துச் சந்தோஷப்படும்படியாகிய வல்லமைபொருந்தியிருப்பதை யப்பட்டணத்துக்கிறைவனாகியவேந்தன்கேட்டுச்

சந்தோஷங்கொண்டு, அசோகதத்தனை வருவித்துப் பலவகையினு மவனைப்பரீட்சித்து, அவனது பராக்ரமத்துக்கு மெச்சி, வேண்டிய பரிசுகள்செய்து, தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கும்போது, தென்றிசையிலிருந்து ஒருமல்லன்வந்தான்; அவனைக்கண்டு, ராஜசபையிலுள்ள மல்லர்கள் அஞ்ச, அரசன் அசோகதத்தனைநோக்கி, இந்தமல்லனை வெல்வையானால் உனக்குவேண்டிய வற்றைத்தருவேன் என, அப்படியே அந்த மல்லனை ஒரு அறையால் கொன்றதைக்கண்டு, அரசன் இவனிடத்தில் சந்தோஷமிகுந்து இவனை தனக்கு உயிர்த்துணைவனாய் வைத்துக்கொண்டான். இப்படி யிருக்கையில் ஒருநாளிவ்விருவரும் வேடிக்கையார்த்தமா யிரண்டுகுதிரைகளின்பேரிலேறி வனத்தைநோக்கிச் சாரிமார்க்கமாய் வனத்துள் நெடுந்தூரங் குதிரைகளைவிடுத்துப் போதுபோய்விட்டதுகண்டு திரும்பிவருகையில், அவ்வனத்தில் இவ்வரசனது ஆஞ்ஞையினாற் கழுவேற்றப்பட்டிருக்கு மொருவன் எட்டுதினமாய் அக்கழுவினின்று மரணமாகாமற் பிராணாவஸ்தையநுபவித்து, நாவறட்சிகொண்டு, இன்னாரென் றிவர்களையறியாதவனாய், ஐயாபுண்ணியர்களே, பாபியாகியவெனக்கு இவ்வேளை ஜலந்தருவீர்களாகில் பெரும்புண்ணிய முண்டாமென்று கூறியதைக்கேட்ட அரசன், அசோகதத்தனைப்பார்த்து, அப்பா, இவன்படும் பிராணவேதனைக்கு இவ்வேளை ஜலந்தேடிக்கொடுப்பது புண்ணியமாதலாலும் ஜலஞ்சமீபத்திற்கிடைப்பது அரிதாயிருப்பதாலும் கொஞ்சம்பிரயாசை யெடுத்துக்கொண்டு ஜலமிருக்குமிடந் தேடிக்கொண்டுவந்து அவனருந்திய பின்னர்வந்துசேரக் கடவையென்றும், போது போய்விட்டமையால் நான்பட்டணம்போய்ச்சேருகிறேனென்றுஞ் சொல்லித்தான் குதிரையைவேகமாய் விட்டுக்கொண்டு பட்டணம்வந்து அரண்மனைசேர்ந்தான், பின்னர், அசோகதத்தனானவன் அரசனுத்தரவின்படியவ்வனமுழுதுஞ்சுற்றியோர்தடாகத்தைக்கண்டு, பாத்திரமில்லாமையா லக்கானகத்துள்ள தேக்கிலையைப்பறித்து, தொன்னைபோல்தைத்து, அதிற்சலத்தை

முக்குக்கொண்டு, குதிரையேறிக் கழுவை நாடிவருகையில், அக்கழுமரத்தினடியில் மிகவும் ரூபலாவண்யத்தோடுங் கூடியவோர் பெண்ணானவள் படுத்திருந்து இவன்வருதலைத் தன்னெழுந்திருக்க, அப்பெண்ணைநோக்கி, அசோகதத்தனானவன், ஓ பெண்பாவாய், நீ யார், நீ யிங்கிருப்பதற்குக்காரண மென்னவென்றுகேட்க, அதுகேட்ட அம்மாது, ஐயா, நான் இக்கழுவிலிருப்பவனது [illegible] வன் இக்கழுவினின்றும் பிராணன் விடுத்தவுடனே யானும் பிராணனைவிடுவதற்கு எண்ணங்கொண்டு எட்டுதினமாய் வந்து காத்திருக்கின்றேன், அவர்தாகவிடாயைத் தணிப்பதற்குக் கழுமரம் உயர்வாயிருப்பதால் யாதும் வகையில்லாமல் வருந்துகிறேனென்றுசொல்ல, அவ்வுரைகேட்ட அசோகதத்தன், இவள் உண்மையானவளென்று மதித்துத் தன்னிடமிருந்த ஜலத்தை யவளிடங்கொடுத்து இதனையுன்புருஷனுக்குக்கொடுத்து தாகத்தைத் தணிப்பாயென்றுசொல்ல, அதற்கவள், ஐயா, கழுமரம் உயர்வாயிருப்பதால் எவ்வாறு எட்டிக்கொடுப்பேனென்றுசொல்ல, அதற்கு அசோகதத்தன், ஓ பெண்பாவாய், நானிந்தக் கழுமரத்தடியி னிற்கின்றேன், நீ எனது தோளின்பேரிலேறி நின்றுகொண்டு உன்கணவனை ஜலமருந்தச் செய்வாயென்று சொல்ல, அதுபோ லவளுமிவன் றோளின்பேரி லேறிநின்று தனது கணவனுக்கு ஜலத்தைக் கொடுத்துக் கழுவிற்கிருக்கு மவனுடைய தேகத்தி லிருந்துபெருகு முதிரத்தை வாயினு லவளுறியும்போது, இதுவென்னவென்று அசோகதத்தன் அண்ணாந்துபார்க்கையில், அவள் இராட்சதவுருவங்கொண்டு கர்ச்சித்து ஆகாயவீதியிலெழும்பும்போது, அவளது காலினை கெட்டியாய்ப் பற்றியிருந்தவனாதலால் இவனுமாகாயத்திற்கூடவே கிளம்பியவன் காலிலிருந்த சிலம்புகளிலோர் காற்சிலம்பு விடுபட்டு இவன்கையிற்சிக்க, அச்சிலம்போடும் பூமியில் விழுவாய்குதித்து இம்மரத்தடியிற் படுத்திருந்தவளை யக்ஷியென்றறியாமல் மோசம்போனேனென் றுகருதி, மனதைத்தே

ற்றிக்கொண்டு குதிரைமேலேறி,சிலம்போடும்பட்டணம்போ
ய்ச்சேர்ந்து,தான்கொண்டுவந்த சிலம்பையரசனிடங் கொடுத்
து,நடந்தசவிஸ்தாரங்களை யாதியோடந்தமாய்ச்சொல்ல,அது
கேட்டஅரசன்,அசோகதத்தனுடையதயிரியபராக்ரமத்துக்கு
மெத்தவுஞ் சந்தோஷமடைந்து,தனதுபுத்திரியாகியமதனவேல
கை யென்பவளை யவனுக்குக்கொடுத்து விவாகஞ்செய்ய,
அதுபோலவனு மப்பெண்ணைமணந்து அவ்வரசனுக்கு மரு
மகனுகி வாழ்ந்துவருநாளில், ஒருநாள், அசோகதத்தனது
மாமனாகியவேந்தன், இவனுற்கொண்டுவந்துகொடுக்கப்பட்ட
பொற்சிலம்புக்கிணையான சிலம்புசம்பாதித்துத் தன்னுடைய
தேவிக்குக் கொடுக்கவேண்டுமென்று மாசையோடுங் கூடிச்
சொல்லிக்கொண்டிருக்கையில்,அதைக்கேட்ட அசோகதத்த
ன் யோசித்து,இதற்கிணையாகியசிலம்பைக்கொண்டு வருகிறே
னென்று பிரயாணப்பட்டுத் தாங்கள்முன்பு தங்களது சுதேச
த்தைவிட்டு பிரயாணமாகிவரும்போது தங்கியகோயிலைச் சார்
ந்த மயானத்திற்கு ரஜாமாத்திரியிற் போய்ச்சேர்ந்து,தனக்
குத்தெரிந்த மந்திரங்களைப் பிரயோகஞ்செய்து, டாகினிமுத
லாகிய பூதவேதாளங்களையும் பேய்பசாசங்களையும் வரவழை
க்க, அதனோடும் கழுமரத்தடியிலிருந்து இராட்சத வுருவத்
தோடும் ஓடிப்போன அரக்கியும்வந்துநிற்க, அவளைக்கண்ட
அசோகதத்தன் மந்திரபீஜங்களா லவளைக்கட்டிக்கொண்டு,
வாரும்பெண்ணே, நீ முன்னாலே யென்னைவிட்டுப் போகிற
போது தவறிப்போட்டுவிட்டுப்போன வுனதுசிலம்பில் ஒரு
சிலம்பு என்னிடத்திலிருப்பதால் மற்றொருசிலம்பையுங் கொ
டுப்பாயென்றுகேட்க, அதுகேட்ட அரக்கியுஞ் சந்தோஷ
மடைந்து, அவனுடைய சவுரியபராக்ரமங்களைக்கண்டு அதி
சயித்து, தன்னிடமிருந்த பொற்சிலம்பைக் கொடுத்ததோடும்
அவனது பராக்ரமத்துக்கு மெச்சிப்பொற்றாமரை மலரொன்
றையும், தன்னுடைய குமாரத்தியாகிய வித்துத்துப் பிரபை
யையுங் கொடுத்துப்போய் வாருமென்றுசொல்ல, அப்படியே
அசோகதத்தன் மகாசந்தோஷத்தோடுஞ் சிலம்பையெடுத்து

க்கொண்டு வித்துத்துப்பிரபையென்னும் பெண்ணுடனே
காசிபட்டணம் வந்துசேர்ந்து, அரசனைக்கண்டு, தான்போய்
வந்த சங்கதிகளை யாதியோடந்தமாய்ச் சொல்லிச் சிலம்பையு
மரசனிடங்கொடுத்துச் செலவுபெற்றுக்கொண்டு வித்துத்து
ப்பிரபை யென்பவளைத் தனதுபத்தினியாகிய மதனவேலை
யுடனேசேர்த்துச் சுகமாய்வாழ்ந்து வருநாளில், ஒருநாள்
வித்துத்துப்பிரபை யென்பவளும் அசோகதத்தனும் அம்ஸ
தூளிகாசயனத்திற் சயனித்துக்கொண்டிருக்கும்போது, அவ
ள் குழலிலேதரித்திருந்த பொற்றாமரை மலரைக்கண்டு ஆச்
சரியங்கொண்டு, அடி பெண்ணே, இந்தப்பொற்றாமரை மல
ருனக் கேதென்றுகேட்க, அதற்கு வித்துத்துப்பிரபை யான
வள், நாயகா, இம்மலர் இப்பட்டணத்துக் கருகாமையாயிருக்
கும் வனத்திற் கபாலபோடனென்னும் வேதாளத்தினது பூந்
தோட்டத்திற் பொய்கையிலே யுண்டாயிருக்கிற தென்றும்,
யாரோகொண்டுவந்து உன்மாமனாகிய வேந்தனுக்குக் கொ
டுத்ததாய் எங்களுக்குக் கொடுத்தனுப்பினரென்று சொல்ல,
அதுகேட்ட அசோகதத்தன், வேதாளமாவது பூந்தோட்டமா
வது பார்ப்போம் வருவாயென்று கூட்டிக்கொண்டு, அந்தப்
பட்டணங்கடந்து, வனத்திற்பிரவேசித்து, வேதாளம் வாழ்
ந்து வரும்வனத்திற் பூங்காவைக்கண்டு, அக்காவிலிருக்குந்
தடாகக்கரையின்மீது வந்துநின்றார்கள், அதுகண்ட அப்பூங்
காவின் காவலாளிகளாகிய பூதப்பிரேதகணங்கள் கோபங்
கொண்டு, கொல்லுவதற்குநெருங்கி யட்டகாசஞ் செய்வதை
க்கண்ட அசோகதத்தன் சிங்கம்போற்பாய்ந்து தன்னிடத்தி
லிருக்குஞ் சந்திராயுதத்தினால் அவைகளைச் சின்னபின்னங்
களாய் வெட்டிச்சிதைத்துத் தலைவிரிகோலமாய் நான்குதிக்
கிலு மோடும்படிசெய்ய, அப்போது அவைகள்மிகவு மச்சங்
கொண்டு ஓடித் தமது இறைவனாகிய கபாலபோடனிடத்தில்
முறையிட, அம்முறைகேட்ட வேதாளமுங் கோபாவேசங்
கொண்டு, கர்ச்சித்தாரவாரத்தோடும் அசோகதத்தனை யெடு
த்து விழுங்குவதற்குநெருங்கின அப்போது அசோகதத்தன்

மந்திரவாளை யுருவிக்கொண்டு வேதாளத்தைச் சின்னபின்னமாகும்படிவீசி, மயங்கச்செய்து கொல்லவேண்டு மென்று வாளையுருவி யோங்குகையில், அப்போது ஆகாயவீதியிற்செல்லும் விக்கினதநிக வுதுகனென்னும் விஞ்சையராசன் கண்டு, அடா, அசோகதத்தா, வேதாளத்தை வெட்டிக் கொல்லாதே யென்றான், அதுகேட்டவுடனே ஆகாயத்தை நோக்கையில், விஞ்சைய ராசனை விக்கினதநிக வுதுகனைக் கண்ணிறுக்கண்டான், அவ்வாறுகண்டவுடனே யிவன்சாபநீங்கித்தன்னினைவுண்டாகிப் பழயசொருபமுடையனாய்ச் சுகன்ன னென்னப்பட்டவனாய் விளங்கினான், அப்போது இந்தச்சுகன்னனைப்பார்த்து, வாரும்பிள்ளாய் சுகன்னனே, இந்தவேதாள சொருபம் பெற்றிருக்கப்பட்டவன் உனதுதமயனாகிய சுதரிசனனாதலால், உங்களுக்குக் காளவமகாரிஷியினுடைய சாபத்தால் இப்படி நேரிட்டிருந்தது, அதில் உனக்கு என்னைக்கண்டவுடனே சாபவிமோசனமாச்சுது, உனதுதமயன் சாபந்தீரவேண்டியிருப்பதால், ஆதியிற்பிரமதேவன் சனகாதியர்களுக்குச் சொல்லியிருந்ததை உனக்குநான் சொல்லுகிறேன் கேட்பாயாக, யாதெனில், ஸ்ரீராமசந்திரமூர்த்தியாற் கட்டப்பட்டு விளங்குஞ் சேதுவிற் சக்கரதீர்த்தத்திற்குத் தென்பாகத்திலே ஓர் புண்ணியதீர்த்தமிருக்கின்றது, அப்புண்ணியதீர்த்தத்திலே இவ்வேதாளத்தைக்கூட்டிக்கொண்டுபோய் தீர்த்தமாடும்படி செய்துவைத்தால் இதனுடைய சாபவிமோசன மாமென்றுசொல்ல, அதுகேட்ட சுகன்னனும் மந்திரசத்தியினால் வேதாளத்தை யழைத்துக்கொண்டு தென்றிசையைநோக்கிச் செல்லும்போது, விக்கினதநிகவுதுகனும் ஆகாயவீதியில் விமானத்தை விடுத்துக்கொண்டு தன்னுடைய லோகம் போய்ச்சேர்ந்தான், அக்காலையிற் சுகன்னனானவன் சக்கரதீர்த்தத்திற்குத் தென்பாலாகவுங் கந்தமாதனத்திற்கு வடபாலாகவுமிருக்கும் புண்யதீர்த்தக்கரைவந்து சேர்ந்தார்கள், அச்சமயத்தில், காற்றினால் அலைகளானவை அதிவேகமா யெழுந்து, அவற்றினின்றுந்திவலைகள் வேதாளத்தின்மீதுதெறிக்க, உடனே சாபநிவர்த்தியாய் வேதாளசொருபமாறிப் பழயசொருபத்தோடிருந்த சுதரிசனன் தம்பியாகிய சுகன்னனைக் கட்டிக்கொண்டான். இப்படியிருவரு மொருவரை யொருவர்கட்டித்தழுவி யானந்தங்கொண்டு அப்புண்ணியதீர்த்தத்திலே சங்கற்பவிதிப்படி நீராடித் திவ்ய சொருபத்தைப் பெற்றுக்கொண்டவர்களாய் அத்தீர்த்தத்திற்கு வேதாளவரததீர்த்தமென்று விளங்கக் கடவதென்றுபெயர்கொடுத்துப் பின்பிரண்டுபேரும் விமானத்தேறி, தேவர்கள் மலர்மாரி தூவத் தேவதுந்துமி முழங்க அப்ஸரஸ்திரீகள் நடனஞ்செய்யும்படியாய் காந்தர்வலோகம் போய்ச்சேர்ந்தார்கள், அன்றுமுதல், அத்தீர்த்தத்திற்கு வேதாளவரததீர்த்தமென்று பெயர்விளங்கிக்கொண்டிருப்பதன்றியும், அதில்முழ்கப்பட்ட பேர்களுக்கு, பூதப்பிரேதபசாசகணங்களின் உபத்திரவங்களிருந்தபோதினும் விலகுவதோடுமவர்கள் செய்தபாபங்களும் நிவர்த்தியாம், அதின் மகிமையை யளவிட்டுச் சொல்லப்போகாதென்று சூதமகாமுனிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யமுனிவர்கள் சந்தோஷமடைந்து, அம்முனிவரைநோக்கி, சுவாமீ, இன்ன மச்சேதுவின் மகிமைகளைச் சொல்லவேண்டுமென்று பணிந்து வினவ, சூதமாமுனிவர்சொல்லத் தொடங்கினார்.

வேதாளவரததீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

பாவநாசச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, இப்போது யாம்சொல்லிவந்த புண்ணியதீர்த்தங்கள் தவிர இன்னந்தீர்த்தங்களு மனேகமகிமைகளுங் கந்தமாதனபருவத்திலே விளங்கிக்கொண்டிருக்கும், அக்கந்தமாதன பருவதம் நாமிப்போதுசொல்லிவந்த வேதாளவரத தீர்த்தத்திற்கு தட்சணபாகமாயுங் கயிலாசபதியாகிய சாம்பமூர்த்திக்கு இருப்பிடமாகியும் விசுவகர்மாவால் நிருமிக்கப்பட்ட வேதா

ரண்யமுதலிய சிவஸ்தலங்களிலும் விஷ்ணுஸ்தலங்களிலும் சிரேஷ்டமாய்த் தென்கடல்சூழ்ந்ததாய் சகலதேவர்களும் நவகோடி சித்தர்களும் சித்தபுருஷர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னர கிம்புருட கருடகாந்தருவ சித்தவித்யாதரர்களும் அஷ்டவசுக்களும் ஒன்பது கோட்களும் வாசஞ்செய்துகொண்டிருக்கப்பட்டதாய் அநேகவளம் பொருந்தியிருக்கும் கந்தமாதனபருவதத்திலே, சந்திரஜடாதரமூர்த்தியாகிய பரமேசுவரன் பார்வதிசமேதராய் மகாவிஷ்ணு முதலியவர்களுடனே விளங்கிக் கொண்டிருப்பார், அக்கந்தமாதன பருவதத்தைக் கண்ணினாற்கண்ட புண்ணியர்களுக்கு நித்தியானந்தமோட்ச சாம்பிராச்சியங் கிடைப்பதன்றியும் பரஸ்திரீகமனத்தால்வந்த பாதகங்களும் சிசுஹத்தி பிரமகத்திகள் செய்தபாதகங்களும் மாதாபிதாகுருமுதலாகிய பெரியோர்களை நிந்தனைசெய்தபாதகங்களும் பரப்பிரம்மசொருபமாய் விளங்கப்பட்ட கந்தமாதனபருவதத்தை தெரிசித்தாலும் அவ்வெல்லையை மிதித்தாலும் அதிலுண்டாகிய காற்றினது பரிசம்பட்டாலும் மகாபுண்யசாலிகளாய் திவ்யசொருபங்களைப்பெற்று புண்யலோகங்களை அடைவார்கள், அக்கந்தமாதனத்திலே குடிகொண்டிருந்து வாழப்பட்ட நரஜென்மங்களும் மிருகஜாதிகளும் பட்சிசாதிகளுமாகியயாவும் தேவதாசொருபங்களைப்போலும், விருட்சங்களெல்லாங் கற்பக விருட்சங்களைப்போலும், தீர்த்தங்களெல்லாம் புண்யதீர்த்தங்களாகவும், அப்பருவதத்திலுள்ள மணல்களெல்லாஞ் சிவலிங்க சொருபங்களாகவும் விளங்கிக்கொண்டிருக்கும், அக்கந்தமாதன பருவதத்திலே வசிக்குந்தேவர்களைத் தெரிசித்தவர்கள் சக்கரதீர்த்தத்திலும் வேதாளவரததீர்த்தத்திலும் விதிப்படி மூழ்கி, பின்னர் அப்பருவதத்தின் எல்லையைக்கண்டவுடனே வணங்கிப்பூசித்து, அடியோங்கள் கடைத்தேறும்பொருட்டு யாத்திரைசெய்து வருகிறவர்களுக்கும் எங்களுடைய கால்கள் உன்மீதிற்படுகிற குற்றத்தைப்பொறுத்து ரட்சிக்கவேண்டுமென்று தோத்திரஞ்செய்து, பின்பு தங்களுடைய கால்

களிற் பாதுகையில்லாமல் கிழ்முகமாய்த்திரும்பி மெல்லநடந்து அக்கந்தமாதனத்திலே விளங்குகின்ற புண்ணியதீர்த்தங்களிலாடி, ஸ்ரீராமலிங்கத்தைதெரிசித்து, வருபவர்கள் ஒருகடுகளவு பிண்டமாகிலும் அக்கந்தமாதனபருவதத்தில் தங்களுடையபிதிர்களை நினைத்துத்தர்ப்பணஞ்செய்து தத்தம்பண்ணினால், அவர்கள் கற்பகோடிகாலம்வரையிலும் புண்ணியலோகத்திலே சுகானந்தத்தையடைவார்கள், அவ்வாறு செய்பவர்களுக்கு அதுமுதல் பிதிர்களில்லாதிருப்பதோடும் அவர்கள் வமிசத்தில் கோடிதலைமுறைவரையிற் சேர்ந்தபேர்களென்ன ஜென்மமெடுத்து மென்னபாபங்கள் செய்திருந்த போதிலும் அவர்களுக்கு எமதரிசனமுந் தெண்டனையும் கிட்டாமல்விலகிப்போம், இவ்விதமகிமைவாய்ந்த கந்தமாதனபருவதமானது ஸ்ரீராமமூர்த்தியின் வாக்கியப்படியே தெய்வத்தச்சனவன் அநுமார்முதலிய வானரவீரர்களைக்கொண்டு சேதுபந்தனஞ்செய்கிறபோது தென்சமுத்திரக்கரையோரமாய் சமுத்திரத்திலிருந்ததை ஸ்ரீராமமூர்த்திக்குத் தெரியப்படுத்தி, அவருடைய ஆக்கினைப்படி யதனைச் சேதுவின் மத்தியிலேவைத்து அணைகட்டினார்களாதலால் அச்சேதுவின் மத்தியில் விளங்குகிற கந்தமாதனமலையிலே அநேகங்கோடி தீர்த்தங்கள் விளங்குவதில் பாவநாசமென்றொருதீர்த்தமிருக்கின்றது, அத்தீர்த்தத்தில் முன்னொருகாலையில் இமயமலைச்சாரலில் பிரமவாசிரமமென்று விளங்கப்பட்டவனத்தில், சற்பக விருட்சங்களும், சண்பகமுதலியமரங்களும் பருவதங்களுஞ்செருங்கிச் சோலைகளாகாயத்தை யளாவவும் வண்டுகள் தேம்பாடவுஞ் சிங்காரத்தோடுங் கூடியிருக்கு மவ்வனத்தில் ருஷீசுவரான் முதலியதபோதனர்களும் பிரமசாரிகளும், வானப்ரஸ்தருஞ் சந்யாசிகளும் அடர்ந்து கூடியிருப்பவர்களிடத்திலே, திட்மதியென்று பெயரையுடைய ஒருசூத்திரன்சேர்ந்து அவர்களாலோதப்பட்ட வேதசாஸ்திரங்களைக்கேட்டு, அன்னவர்களைப்பணிந்து நமஸ்கரித்து, ஓ பெரியோர்களே, நீங்கள் செய்கிற கிரியைகளெல்லாம் யான்செய்யவேண்டு மென்று

மிகவு மாவலாயிருப்பதால், என்னை உமது தொண்டனுக்வடிமைப்படுத்தி, எனக்கு வேதங்களையோதிவைத்து, நீங்கள் நடாத்திவரும் யாகாதிகிர்த்தியங்களைப்போல் யானுமநுட்டிக்கக் கருணைசெய்யவேண்டுமென்று அவர்களைவேண்டுதல்செய்ய, அதற்கவர்கள், அச்சூத்திரனைநோக்கி, வாராய், துடமதியே, நீ சூத்திரனாகப்பிறந்து மாமிசாதிகளைப்புசித்து அநேக பாவங்களைச் செய்திருப்பதால், உனக்குயாகாதிகிர்த்தியங்கள் செய்யப்பட்ட வேதமந்திரங்களை யுபதேசஞ் செய்யப்படாததலால், நீ மநுசாஸ்திரவிதியின்படி நடக்கவேண்டிய சரிதையை யநுட்டியாமல் வேதயுக்தமான காரியங்களைக்கேட்கிறது சரியல்ல, மேலும், நன்மார்க்கத்திலேநடந்து, மேலானஜென்மமெடுத்தால், இக்காரியங்கள் கைகூடுமென்று பெரியோர்கள்சொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட துடமதியானவன், விசனமடைந்து, நாம் ஆசையோடுக் கேட்டகாரியம் கைகூடாமற் போய்விட்டதேயென்று நாணமுற்றுத்தலைகுனிந்து தனது கிருகத்திற்போய்ச்சேர்ந்து யோசனைசெய்து, மேலோராற்சொல்லிய சரிதைமார்க்கங்களில் நடக்கவேண்டுமென்று மனதை திடஞ்செய்துகொண்டவனாய், அதுமுதல் நந்தவனங்களைவைத்தும், தடாகங்கள்வெட்டியும், விரதங்களை யநுட்டித்தும், தலங்களைத்தெரிசித்தும், தீர்த்தயாத்திரைகள் செய்தும், பெரியோர்களுக் குபசாரம்செய்தும், புண்ணியமான காரியங்களுக்குவேண்டிய திரவியங்களைக்கொடுத்தும், சித்தபுருஷர்களுக்கு கந்தமூலபதார்த்தமுதலியவற்றை உதவியும், மார்க்கங்களில் சத்திரங்கள் மடங்கள்புதுக்கித் தண்ணீர்ப்பந்தர்களமைத்தும், வேதவிதியிற்கூறிய முப்பத்திரண்டறங்களையும் வழுவின்றிநடத்திவருங்காலையில், அம்மார்க்கத்திலெங்கோரும் வசத்துப்போக்காயிருக்கும் சுமதியென்னும் பிரமசாரிக்குவேண்டிய வுபசரிணைகள் யாதுங்குறைவின்றி விசுவாசத்துடனே நடத்திவருகையில், அவருக் கிவன்மீது பிரியமுண்டாகி நேசித்துவருகையில், ஒருநாள், துடமதியென்பவன், சுமதியென்பவ ரெழுந்தருளியிருக்கு மாசிரமத்துக்குப்போய் அவரைக்கண்டுபணிந்து, சுவாமி, அடியேனுக்கு நெடுநாளாய் ஓர்கருத்துண்டாயிருக்கின்றது, அதுயாதெனில், வேதவிதிப்படி யாகாதிகிர்த்தியங்கள் ஜெபதப ஹோமங்கள் முதலியயாவு மடிமையேசெய்யும்படி யெண்ணமிருப்பதால் அதற்குரிய வேதமந்திரமூலங்களைத் தமியேனுக்குச் சடாக்ஷிக்க வேண்டுமென்றுவினவ, அப்போது சுமதியென்பவர், அவன்மீது வைத்திருக்கும் பிரியத்தினாலே பிரம்மகுலத்திற்குரிய மந்திரதந்திரயோகங்களையெல்லாந்திடமாக அவனுக்கு போதிக்க, அவனுமுணர்ந்திருக்கையில், இச்செய்தியை இமயமலைச் சாரலிலெழுந்தருளியிருக்கும் பெரியோர்கள் கேள்வியுற்று, அச்சுமதியை யாவருந்தூஷிக்க, அதுமுதல் அவருக்குத் தேஜசுகுறைந்து வியாகூலத்தோடும் மரணமடைந்தார், அவ்வாறு மரணமடைந்தவர், யமகிங்கிலியர்களது தெண்டனைக் குட்பட்டு, இரவுராவாதி நரகங்களிலே கற்பகோடிகாலம் வரையிலுழன்று, பின்பு நாபராதியிற் சம்பந்தப்பட்ட புல்பூடு முதலியவிருட்சங்களாய் அநேகஜென்மமெடுத்து, அதனினின்றும் நீங்கி, கழுதையாகவும் பன்றியாகவும் நாயாகவும் பிறந்து, அதனினின்றும்நீங்கி, நீசனாகவுஞ் சூத்திரனாகவும் வைசியனாகவும் க்ஷத்திரியனாகவும்பிறந்து அநேகதுன்பங்களையெல்லா மநுபவித்து, தனது கன்மங்களைப்போக்கிப் பழையபடியே பிரமகுலத்திற் பிறந்திருக்கிறபோது, தனக்கு ஐந்துவயதிற் சவுளவுபநயனங்களும் வித்யாப்பியாசங்களும் பண்ணிக்கொண்டு, யாவுமுணர்ந்தவனாக விருக்கும்போது, ஒருநாள் தர்ப்பைசமித்து வேண்டியிருந்து வனத்துக்குப்போய் சேகரஞ் செய்துகொண்டுவருகிறபோது, அவனையோர் பிராமணப்பேய்பிடிக்க, அதனாலியாதுந் தோன்றாமல் பிரமைகொண்டு கண்கள்சுழலவிட்டு, நாத்தடுமாறிப் பிதற்றலுண்டாய் நானாவித சேட்டைகளுண்டாகியழுது கூக்குரலிட்டுத் தாவிக்குதித்து, நாளுக்கு நாளதிகரித்து, மூத்திரங்குடித்துப் பயித்தியங்கொண்டவனாய், அதிகதுன்பங்களை யநுபவித்துக் கொண்டு வருகையில், அவனைப்பயந்த தந்தையானவன் கண்டு,

மகாவியசனமடைந்து, துக்கசாகரத்தில்மூழ்கி, இந்தவினை
யை யெந்தவிதந் தீர்ப்போமென்றுகருதி, அவனைக் கூட்டிக்
கொண்டு யாத்திரைவாசியாய் சிவஸ்தலங்களையும் விஷ்ணு
ஸ்தலங்களையுந் தரிசித்துந் தீராததாய்த், தென்றிசையிலே
யோங்கும் பொதிகைமலைச் சாரில்வருகிறபோது;முன்னொ
ருகால் சமுத்திரத்தை உள்ளங்கையிலேந்திச் சாப்பிட்ட
அகத்தியமகாமுனியானவர் அவ்வனத்திலிருக்கக்கண்டு, அவரு
டைய பாதாரவிந்தங்களிலே வீழ்ந்துநமஸ்கரித்து, சுவாமி,
அடியேனுக்கு நெடுநாளாய்ப் பிள்ளையில்லாமல் அநேகவிர
தங்களை யநுட்டித்துப்பிறந்த இப்பிள்ளைக்கு எட்டுவயது
முதல் பயித்தியங்கொண்டு தீராமற்றுன்பத்தை யநுபவித்துக்
கொண்டு வருகின்றமையால், தேவரீர் க்ருபைசெய்து இது
நீங்கும்படி கடாக்ஷிக்கவேண்டுமென்று தோத்திரஞ்செய்ய,
அப்போது, அகத்தியமுனிவர் கருணையுள்ளவராய் ஞானதிரு
ஷ்டியாற்பார்த்து,வாரும்பிராமணா, இவனுடைய சரித்திரங்க
ளைப் பேசினாலும் மகாபாபம் வருமாதலாலும் இவனெடுத்த
ஜென்மங்களுங் கணக்குவழக்கில்லையாதலாலும் இவன்பாபங்
கள் நாசமாகவேண்டுமாதலாலும் அதற்கொருவகை சொல்
லுகிறோம், யாதெனில், சேதுவிலோங்கும் கந்தமாதனபருவ
தத்தருகில் வேதாளவரத தீர்த்தத்திற்கு ஈசான்யபாகத்தில்
ஓர் புண்ணியதீர்த்தமுண்டு, அப்புண்ணியதீர்த்தத்தில் இவ
னைக்கொண்டுபோய் ஸ்நாநம்பண்ணிவைத்தால் உடனே இவ
னுடையபாபங்கள் விமோசனமாய் இப்பயித்தியம் நீங்குமெ
ன்றுசொல்ல, அதுகேட்டபிராமணன், சந்தோஷமடைந்து,
முனிவரைப்பணிந்து, விடைபெற்றுக்கொண்டவனாய்ப், பிள்
ளையைக்கூட்டிக்கொண்டுசேதுவைச்சேர்ந்து;அங்கேயிருக்குங்
கந்தமாதனபருவதச்சாரலிலுள்ளபுண்ணியதீர்த்தங்களைக்கண்
டாச்சிரியமடைந்து, சங்கற்பவிதியின்படி பிள்ளையைமூழ்கச்
செய்து, தானும் நீராடியவுடனே, பாநுவைக்கண்டபனிபோ
லும் அனலைக்கண்ட குளிர்போலும் அப்பிள்ளையினது பாப
ங்களெல்லாம் நீங்கியிருந்தார்த்தனாய், சரியான மனத்தோடும்

தகப்பனைப்பார்த்துப்பணிந்து; ஓ பிதாவே, நாம் இங்குவந்த
தற்குக்காரண மியாதென்றுகேட்க,அதற்குத்தந்தையானவன்
மகாசந்தோஷத்தையடைந்து, நடந்தசவிஸ்தாரங்களை யெல்
லா மவனுக்குரைத்து, மூன்றுநாள்வரையில் அங்கிருந்து
தீர்த்தமாடி, நான்காநாட் பிரயாணப்பட்டுத் தனதிருப்பிடம்
வந்துசேர்ந்து, அளவிறந்தசெல்வத்தோடும் வாழ்ந்து,பின்னர்
ஞான சொரூபத்தையடைந்து மோட்சத்தை யடைந்தான்,
பின்பு இவனிடத்தில் வேதமந்திரங்களைக் கேட்டுணர்ந்த திட
மதியென்னுஞ்சூத்திரன், அதுமுதல் மகாவறுமைத் தசை
யையடைந்து உயிர்விட்டவனாய், அநேககற்பகோடிகாலமள
வும். இரவுரவாதி நரகவேதனைக்குள்ளாகி அநேககோடி
ஜென்மங்களிற்பிறந்து,அப்பால்கழுகுருவமாய்ப்பிறந்து பிண
முதலியமாம் சாதிகளைப் புசித்துக்கொண்டு திரிகிறபோது,
ஒருநாள் தானேசுயமாய்க் கந்தமாதனச் சாரிலேவிளங்கு
கின்ற புண்ணியதீர்த்தத்தில்வந்து தாகத்தினால் தண்ணீரரு
ந்தி, வெய்யிலின்றீட்சண்யத்தால், அப்புண்ணிய தீர்த்தத்தி
லே சிறகைவிரித்து, ஜலத்தை மேலெல்லாமிறைத்துக் கொ
ண்டு, அச்சலத்திற்றலையைத்தோய்த்து, மூக்கினாலே தண்ணீ
ரைக் கோதிவிளையாடுகிறபோது, அதினுடைய பாபங்களெல்
லாம்நாசமாய் முன்செய்திருந்த புண்ணிய விசேடத்தினால்
தேவசொரூபம்பெற்று, ஆடையாபரணாதிகளுடன் விளங்கி
னவனாய், தெய்வவிமானத்திலேறி, தேவர்கள் மலர்மாரிசிந்தி
தேவதுந்துபிமுழக்கவும், தேவகணங்கள் ஆலவட்டம் வீசிக்
குடைபிடித்துச் சாமரம்வீசிவரவும், அரம்பையூர்வசிதிலோ
த்தமை மேனகைமுதலிய அப்ஸரஸ்த்ரீகள் நடனஞ்செய்து
வரும்படியாயுந் தெய்வலோகம்போய்ச்சேர்ந்து,தேவபோகங்
களை யநுபவித்துக்கொண் டிருந்தான்.இவ்வாறு இவ்விரண்டு
பேர்களுடைய அளவிறந்தஜென்மங்கடோறுஞ்செய்த பாவங்
களையெல்லாம் நாசப்படுத்திய புண்ணியதீர்த்தத்திற்குப் பாவ
நாசமென்று அதுமுதற்பெயர்விளங்கிக் கொண்டிருக்கிறபடி
யால், அப்படிப்பட்ட புண்ணியதீர்த்தத்திலே தகாதகாரியஞ்

கள்செய்து அதனால் பாபிகளானபேர்களும் மூழ்கினால், உடனே யவர்கள்செய்தபாபங்கள் நாசமாய்ப் புண்ணியர்களாகி, திவ்யசொரூபத்தைப் பெறுவார்கள், அந்தீர்த்தத்திற்குக்கீழ்ப் பாரிசத்தில், சீதாதீர்த்தமென்று ஒரு தடாகமிருக்கின்றது, அத்தடாகத்தில் அமராவதிபட்டணத்துக் கிறைவனாகிய தேவேந்திரனது பிரமஹத்தி விமோசனமாயிருக்கிறதென்று சூதமாமுனிசொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்கள் சந்தோஷமடைந்து, சுவாமீ, தேவேந்திரனுக்கு பிரமஹத்தி சம்பவித்தவிதமும், சீதாதீர்த்தத்தினால் அவை விலகியபெருமையுந் தேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றுகேட்கச், சூதமுனிவர் கருணைகூர்ந்து அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்.

பாவநாசதீர்த்தச்சருக்கம்
முற்றுப் பெற்றது.

சீதாகுண்டச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, முன்னொருகாலத்தில், வைஜயந்தமென்னும் பட்டணத்திலே, கபாலபரணனென்னும் ஒருராக்ஷதன் பிரமதேவனைநோக்கித் தவஞ்செய்து அநேகவரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டவனாய், குணபலனென்னு மந்திரியுடனேயுமநேகராக்ஷதப் படைகளுடனேயு மரசாண்டுவருகையில், திக்குவிஜயஞ் செய்ய வேண்டுமென்றுகருதி, மனவலிகொண்டு, ரதகஜ துரக பதாதிகளுடனே யுத்தசந்நத்தனாய்ப் பிரயாணப்பட்டு அமராவதிபட்டணத்தைப் போய்வளைந்தான். அதுகண்டதேவராஜனும் யுத்தகோலங்கொண்டு, அனேகசேனைகளுடனே வந்து எதிர்த்து; இருதிறப்படைகளுங்கலந்து யுத்தஞ்செய்கிறபோது, கபாலபரணனுடைய மந்திரியாகிய குணபலனென்னும் பிராக்கதன், ஓர்தண்டத்தைக்கையிலேந்தி, இந்திரன் படையிற் சண்டமாருதம்போற்பாய்ந்து, கொக்கரித்துக் கதை,

யைக் ககரவென்று சுழற்றி இரதங்களையும் யானைகுதிரை சேனைகளையுஞ் சின்னாபின்னமாய்ச் சிதைத்து மோர்கணப்போதில் முப்பதுக்குரோணி சேனைகளையும் பெருங்காற்றிலகப்பட்ட பஞ்சுபோற்பறக்கவிடுத்துக் கியாவென்று சிங்காதஞ்செய்கையில், அப்படைவீரனாகிய வருணன்கண்டு மனம்வெதும்பி, ரவுத்திராகாரனாய்த்தனதுதேரைக் குணபலனன் மீதுசெலுத்தி வளைத்துக்கொண்டு, தனது வில்லினிடமாக அநேகமாயிர மெரிமுகக்கணைகளைச் சந்தித்துப் பிரயோகஞ்செய்து, அவன்கையிலிருந்த தண்டத்தைப்பொடிப்பொடியாய்ச்செய்து, ஓர் அர்த்தசந்திரபாணத்தா லவன்சிரத்தைவெட்டித்தள்ளி, அட்டகாசஞ்செய்து, சூலாலனது திகிரியைப்போலக் ககரவென்று இராக்ஷதசேனைக் கடலுட்புகுந்து திரிந்து நாசப்படுத்தும்போது, அவன்தம்பியாகிய கோரதிவத்திவென்பவன்கண்டு ஆலகாலம்போற் சீறியெழுந்து வருணனையெதிர்த்து வில்லைவளைத்து குணத்தொனிசெய்து சோனைமாரிபோல் அம்புகளைக்கணக்கில்லாமற் பிரயோகஞ்செய்து, வருணன் கைவில்லைக்கண்டித்துக் கண்ணை விழித்துப்பார்க்கவொட்டாமற் சகசஞ்சங்கமா யம்புகளைவாரியிறைக்கையில், அதுகண்ட வருணன் கோபதிப்தனாயெரிந்துவிழுந்து, ஓர்வாளாயுதத்தைக் கையிலேந்தித் தேரைவிட்டு பூமியிற்குதித்துக் கோரதீவத்தியின்பேரிற் சிங்கம்போற்பாய்ந்து, அவன்கரத்திலிருந்த வில்லைத்துணித்து, அவன்றலையையும் வெட்டி, அவனையமபுரத்துக்கனுப்பி, அரக்கர்சேனையிற் கொக்குத்திரளில் இராஜாளிபுகுந்ததுபோற்பாய்ந்து நான்குதிக்கிலுஞ் சுழன்று இராட்சதர்களைக் கால்வேறு தலைவேறு உடல்வேறாகக் கண்டித்து எங்கும் பிணக்காடாக்கிச் சிங்காதஞ் செய்கையில், அதுகண்ட அவன்தம்பிமார்களாகிய எரியூணனும் சவுணனும் வந்தெதிர்த்து யுத்தஞ்செய்ய, அவர்களிருவரையும் வருணன் வாளுக்கிரையாக்கி, ருத்திரமூர்த்தியைப்போற்கோபாவேசத்தோடு பிராக்கதர்களை நாசப்படுத்தும்போது, அதைக்கண்ட கபாலபரணன் சகிக்கமாட்டாதவனாய் வடவாமுகாக்

மினியைப்போலெழுந்துமேருவுக்குச்சமமாகியதனது இரதத்தை இந்திரன் சேனைகளின்மீதுசெலுத்திக் கோடைகாலத்திடிபோல் கர்ஜித்து, வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து, அவ்வில்லினிடமாகக் கணக்குமிதமில்லாமல் காளமுகியென்று மேகமானதெழுந்து வருஷிப்பதுபோல எங்கும் பாணமயமாகச்செய்து தேவசேனைகளைச் சின்னபின்னப்படுத்தி மலைமலையாய்க்குவித்து நூறு அக்குரோணி சேனைகளையும் பாழ்படுத்திப் பாற்கடலைக்கடைந்த மந்தரமலைபோற் பண்ணவர்கள் சேனையாகிய கடலைப்பங்கப்படச் சிதைத்துத் தனது வெற்றிச்சங்கத்தை வாயினிடமாகவைத்து அண்டகடாகங்களு மதிரும்படியாய்ப் பம்பாமென்று பூரித்தான்.

அப்போது அயிராணி கேள்வனாகிய இந்திரன்கண்டு அடங்காக்கோபங்கொண்டு அரக்கன்மேல்வெகுண்டு, பளாபளாவென்றுகூறி, ஆலாகலம்போற்சீறித் தனதுதேரைக்கபாலபாணன்மேற்றூண்டி வில்லைவளைத்து அவ்வில்லினிடமாக வச்சிராயுதத்துக்குச் சமமாகிய சிலீமுகக்கணைகளைக்கணக்குமிதமில்லாமற்றொடுத்து, கர்ணபரியந்தமிழுத்துப் பிரயோகித்துக் கபாலபாணனுடையதேரைத் தூளாய்க்காற்றிற்பறக்கவிடுத்து, கவசத்தைக்கழித்து, கைவில்லையுமொடித்துச் சாரதித்தலையைவெட்டிச் சண்டனென்னு மியமனுக்குக் காணிக்கையாகவனுப்பி, கியாவென்று சிங்காதஞ் செய்யும்போது, கபாலபாணன் கண்களினின்றும் நெருப்புப்பொறிகள் குபீல்குபீலென்று சிந்தும்படியாயுருட்டிவிழித்து, யுகாந்தகாலப்பேரொலிபோற்கர்ஜித்து, ஓர் சூலாயுதத்தையெடுத்து தேவேந்திரன் மார்பிற்பொருந்தும்படியாய் விட்டெறிந்தான், அதுகண்டதேவேந்திரன் தனதுவில்லினிடமாக வொருபிறைமுகக்கணையைச்சந்தித்து, அரக்கனெறிந்த சூலாயுதத்தை வெட்டித் தள்ளுகையில், உடனேயவன்வேறொரு தேரின்மீதேறித் தேவேந்திரனது சேனையிற்புகுந்து, வில்லினிடமாக அம்புக்கூட்டங்களைக் கும்பல் கும்பலாகச்சொரிந்து, தேர்கரிபரிகாலாள்களைத்தும்புதும்பாய்ப்பறக்கச்செய்ததுமன்றி இந்திரனை

யுந் தேரோடொரிக் கீழேயடித்தான், அப்படியடித்தளவில் அவனுடையதேர்பரி முதலியயாவுமொழிந்து, சாவுக்குச் சரியான மூர்ச்சையடைந்திருக்கையில் அதைக்கண்டதேவர்கள் உள்ளம்பதைத்து, அருகிற்சென்று, வேண்டிய சயித்யோபசாரங்களாற் றேற்றுகையி லவனுமூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து, அயிராவதமென்னு மியானையின்மீதேறிக், கபாலபாணனையெதிர்த்து, வில்லைவளைத்துக், காளமுகியென்னு மேகத்தைப்போற் பாணங்களைச் சங்கோபசங்கமாய்த் தொடுத்துக், கபாலபாணனது காசாரதிகளையாட வொட்டாமற்செய்து, கிரீடத்தையுடைத்து, வில்லையுமுறித்து, தேரைச் செக்கையாய்ப்பெயர்த்தெறிந்து, நூறுபாணத்தினாலே அவனுடைய மார்பைச் சல்லடைக்கண்ணாகத்துளைத்து பின்புவச்சிராயுதத்தால் அரக்கனது சிரமற்றுவிழும்படியாகச் செய்தமையால் தேவேந்திரனைப் பிரமஹத்திதோஷம் பற்றியதென்று சூதமாமுனிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்கள் ஆச்சரியமடைந்து, சூதனைநோக்கி, சுவாமி, இந்த கபாலபாணனென்கிற அரக்கனைவதஞ்செய்த இந்திரனைப்பிரமஹத்தி பற்றியதென்பது எப்படி, உலகின்கண் பிரம்மகுலசிரேஷ்டரையெல்லாம் வதைப்பதேதொழிலாகப்பெற்ற இராக்கதனைக் கொன்றவனுக்கு பிரம்மஹத்தி யெப்படியுண்டாம் மேலும் பசுவைக்கொன்ற புலியைக்கொல்லுபவனுக்குப் பசுவைக்கொன்றதோஷஞ் சம்பவித்ததென்பதுபோல், தேவரீர் சொல்லுவது எங்களுக்குப் புலப்படவில்லையேயென்று வினவ, அதற்குச் சூதமாமுனிவர், ஓ முனிவர்களே, இந்தரகசியம் நாம் சொல்லுகிறோம், கேளுங்கள், யாதெனில், விந்தாரண்யத்திலே திரிவக்கிரனென்னு மோர்ராக்ஷதன் சுசீலையென்னும் பெயர்பெற்ற அதிரூபலாவண்யத்தோடுங்கூடிய ஓர் அரக்கியைக் கூடிக்குலாவிச் சுகித்திருக்குங்காலையில், அவ்வரக்கி ஒருநாள், அவ்வாரண்யத்தில்தவஞ்செய்துகொண் டிருந்த சுசியென்னுமுனிவனது ஆசிரமத்துக்குவந்தாள், பிரமனுக்குச் சமானமாகிய அந்தமுனிவர் அவளைக்கண்டு மோகங்

கொண்டு, அடீ, பெண்ணே, இங்குநீதனித்துவந்த காரணமியாதென்றுகேட்க, அதற்கவள், சுவாமீ, அடியாள் திரிவக்கிரனென்னு பிராசுதனுடையமனைவி, என்பேர் சுசிலையென்றுசொல்லுவார்கள். அதலால், அடியாளுக்கு நெடுநாளாகப் புத்ரசந்தான மில்லாதுகண்டு எனதுமணாளனைக்கேட்கையில் அதற்கு என்மணாளன், ஓ பெண்பாவாய், இவ்வனத்தில் சுசியென்னும் ஓர் முனிவரிருக்கின்றார், அவரைப்போயடுத்து அவருடைய அருள்பெறுவையாகி லுனக்குப் புத்திரபாக்ய முண்டாமென்றுசொல்ல, அப்படியே பேதையாகியநான்தேவரீரைவந்து தெரிசித்தமையால், தேவரீர் திருவுளங்கனிந்து, அடியாளைக்கூடிச்சுகித்து, புத்திரபாக்ய மளிக்கவேண்டுமென்றுபணிய, அவ்வுரைகேட்டமுனிவர், சந்தோஷமடைந்து, அவ்வரக்கியாகிய சுசீலைக்குவேண்டிய வுணவுகளைக்கொடுத் தாதரித்துத் தனதுபன்னசாலையில் மூன்றுநாள்வரையி லவளைக்கூடிச் சுகித்து அவள்மனம்போலவேண்டிய இன்பங்களைக்கொடுத்து நாலாநா ளவ்வனிதையைநோக்கி, ஓ பெண் பாவாய், உனதுமனம்போல், இதுமுதல் உன்வயிற்றில் சருவுண்டாகி, மகாபுஜபெல பராக்ரமத்தோடுங் கபாலபாண னென்றொரு புத்திரன்பிறப்பான், அவன் பிரமனால் வேண்டியவரங்களைப்பெற்று இராஜரீகஞ்செய்துகொண்டு இந்திரனையன்றி மற்றதேவர்களியாவர்களாலுஞ் ஜெயிக்கமுடியாதவனு யிருப்பானென்றுசொல்லி, அவளைவிடைதந்தனுப்பிப் பின்பு பிரமகுல சிரேஷ்டராகிய சுசியென்னுமகாமுனிவர், ஸ்ரீகயிலாசபதியாகிய உமாமகேசனைத் தரிசிக்கவேண்டி வெள்ளியங்கிரிக்கெழுந்தருளினார், பின்பு சுசீலையும் முனிவரருளிய வண்ணங்கெர்ப்பமுற்று கபாலபாணனென்னும் பெயருடைய பிள்ளையைப்பெற, அவனும் யாதொரு குறைவின்றிவளர்ந்து, பிரமனை நோக்கித்தவஞ்செய்து, அப்பிரமனால்வேண்டிய வரப்பிரசாதங்களைப்பெற்று இராஜரீகஞ்செய்துகொண் டிருக்கும்போது, திக்குவிஜயஞ்செய்யவேண்டிப் புறப்பட்டு தேவேந்திரனை யெதிர்த்து சமர்செய்து தேவர்களையெல்லா மதப்படுத்

திப், பின்பு அவ்விந்திரனால் மரணமடைந்தான். இந்த அரக்கன் பிரமகுலோத்துங்கராகிய சுசியென்னும் மகாரிஷிக்குப் பிறந்தவனாதலால் இந்திரனைப்பிரமஹத்தி பிடித்ததென்று சூதமகாரிஷிசொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்ய முனிவர்கள் சந்தேகநிவர்த்தியாய்ச் சந்தோஷமடைந்தார்கள், அப்பால் கேளுங்கள் நைமிசாரண்யமுனிவர்களே, அமராவதிக்கிறைவனாகிய தேவேந்திரன் மிகவுந்துன்பமடைந்துபிரமனிடத்தில் முறையிட, அம்முறைகேட்டபிரமன், வாரும்தேவராஜனே, பூலோகத்திலோங்கும் பரதகண்டத்தில் ஸ்ரீராமமூர்த்தியாற் கட்டப்பட்டசேதுவிற் கந்தமாதன கிரிச்சாரில் பாவநாசன தீர்த்தத்திற்கு கீட்பாலாக ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் தேவியாகிய சீதாபிராட்டியாரால் உண்டாக்கப்பட்ட சீதைகுண்டமென்னும் பெயரையுடைய தீர்த்தத்திலே நீ போய்த்தீர்த்தமாடுவையாகில் உன்னைப்பற்றிய பிரமஹத்தி நீங்குமாதலாற் போய்வாவென்றுசொல்ல, அதைக்கேட்டதேவேந்திரன் பூலோகத்திற்குவந்து சேதுவைச்சார்ந்த கந்தமாதனத்தில் வயங்குஞ் சீதைகுண்டத்திற் சங்கற்பவிதியின்படி தீர்த்தமாடி, ஸ்ரீகயிலாசபதியாகிய உமாமகேசனைத் தெரிசித்துத், தன்னைப்பற்றிய பிரம்மஹத்திதோஷத்தை நிவர்த்திசெய்து கொண்டு, தனதுலோகம்போய்ச்சேர்ந்து, சுகமாயிருந்தான், அத்தன்மைவாய்ந்த சீதைகுண்டமானது, உண்டாகிய காரணமியாதென்றுவினவுவீராகில், முன்னர் சீதாபிராட்டியை இராவணன் கொண்டுபோய் அசோகவனத்தில் வைத்திருந்ததனாலே அத்தேவியினது கற்பை உலகத்திற்பிரசித்தப்படுத்தும்பொருட்டு இராவணனைப் புத்திரமித்ர பவுத்ராதிகளோடும் நாசப்படுத்தி தேவியைமீட்டுவருகையில் அக்கினிகுண்டமேற்படுத்தி யதிற்சீதாதேவியை முழுகச்செய்து, முழுகியபின், அதற்குச் சீதைகுண்டமென்று பெயர்கொடுத் திருப்பதால், அதில்மூழ்கினவர்கள் பாதகங்களெல்லாம் விமோசனமாய்ப் புண்ணியசென்மம்பெற்று அஷ்ட அயிசுவரியத்தோடும் விளங்கிக் கொண்டிருப்பார்கள், மேலுமச்சீதை குண்டத்திற்குச்

சமீபமாய் மங்கலதீர்த்தமென்றோர் தீர்த்தமிருக்கின்றது, அத்தீர்த்தத்தின்பெருமை இன்னதெனச்சொல்லி முடியாதென்று சூதமகாமுனிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்ய முனிவர்களாச்சரியமடைந்து, முனிவரைப்பணிந்து, சுவாமி; அடியோங்களுக்கு அத்தீர்த்தத்திற்குப் பெயர்வந்த காரணத்தை யின்னதெனத் தெரியப்படுத்த வேண்டுமென்று வினவ, சூதமுனிவர் திருவுளங்கனிந்து சொல்லத்தொடங்கினார்.

சீதாகுண்டச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

மங்கள தீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, உலகின்கண் ஓங்கும் சோமசூரியாக்கினியென்னு முக்குலத்தரசருள் சந்திரகுலசிகாமணியாகியும் சமிந்தவ மென்னும் பட்டணத்துக் கிறைவனாகியும் விளங்கு மனோசவ னென்னுஞ் சக்ரவர்த்தியானவன் சுமித்திரையென்னும் தேவியுடனேயும், சந்திரகாந்தனென்னுங் குமாரனுடனும், மந்திரிபிரதானிகள்முதலிய இரதகெஜதுரகபதாதிகளோடும், மநுநீதி தவறாமற் குடிகளிடத்தில் ஆறிலோர்கடமைபெற்றுத் திங்கள் மும்மாரிபெய்துவர, அளவிறந்தகீர்த்தியோடு மிராச்சிய பரிபாலனஞ்செய்துவருவதன்றியும், தன்னுடையநகரமானது சதாகாலமும் வேதியர்களா லோதப்பட்ட வேதபாராயண கோஷையுடன் யாகாதிகிர்த்தியங்கள் நடத்தி, தேவர்களுக் கவிர்ப்பாகங்கொடுக்கையில், அவை பெறும்படியாய்வந்து நிறைந்து வாசஞ்செய்துகொண்டு தங்களுடையபொன்னுலகவாழ்க்கை விரும்பாமல் மறந்திருக்குந்தேவர்களினேரையும், ஸ்ரீ கயிலாசபதியாகிய பரமசிவன், வைகுண்டவாசியாகிய மகாவிஷ்ணு, சிருட்டிகர்த்தாவாகியபிரமன், இம்மூவருந் தத்தம் பத்தினிகளோடும், அவ்வவர்களது தொழிலையும் பதியையு மறந்து, இப்பட்டணத்திலெங்கேயும் வாசஞ்செய்துகொ

ண்டிருக்கு மற்புதத்தோடுங் கூடியிருப்பதன்றியும், வேந்தன் கொடுக்கும் நித்தியசிராத்தங்களைப் பெறவேண்டிப் பிதுர் லோகத்தைமறந்துவந்து காத்துக்கொண்டிருக்கும் பிதுர்களுக்கும் முனிவரர்முதலிய தபோதனர்களுக்கு மிருப்பிடமாகிய அனந்தம் பூங்காவனங்களுஞ் சோலைகளுஞ்சூழ்ந்து, பாநுவின் கிரணத்தையுமறைத்து, இலகாநின்றபட்டணத்தை யரசாண்டுவருஞ் சக்ரவர்த்தியினது செங்கோற் பெருமையால், சந்திரசூரியர்களை இராகுகேதுவென்பவர்களுந் தீண்டுவதற்கு அச்சப்படும்படியாய் மனோசவனென்பவன், இராஜரீகஞ் செய்துகொண்டு வருகிறநாளையில், தேவாமிர்தத்துக்கொப்பாகிய தீம்பாலில், வேம்பின்றயிலங்கலந்ததுபோற் புராதன வினையது சக்ரவர்த்தியையணுக, அதனாற்றனது விவேகமழிந்தும் செங்கோன் முறைமையாவும்பிறழ்ந்து கொடுங் கோலாகியும், அநீதியிற் பிரவேசித்தும், வேதசாஸ்திரபுராணங்களை மறந்தும், யாகாதிகிர்த்தியங்களைநீக்கியும், அறங்களை நிறுத்தியும், பிராமணாளுக்கு விடப்பட்டிருக்குங் காணி பூமிகளை யவர்களிடத்தில் துராக்குருதமாய்க்கவர்ந்தும், சிவாலயவிஷ்ணுவாலய முதலிய தேவாலயங்களுக்குநடந்து வருந்திருவிழாக்களையும் நித்யகட்டளைப் பூசைகளையும் நிறுத்தியும், அவ்வாலயங்களிலுள்ளகடவுளர்க்குச் செய்தளித்திருக்கு மாடையாபரணங்களைக்கவர்ந்தும், குடிகளை துராக்குருதத்தாற் றுன்பப்படுத்தியும், யாவரும் நிந்திக்கும்படியரசாண்டுவருகையில், கோலபனென்னுமோரரசன், படையெடுத்து வந்தெதிர்த்துப் போர் செய்து, மனோசவனது ராச்சியத்தைப் பிடித்துக்கொள்ள, அதனால்மெத்தவுந் துன்பமடைந்து, தான்தன்பத்தினிகுமாரனுடன் வெளிப்பட்டுப் பட்டணத்துக்கருகே யிருக்குமோர் சோலையில் எட்டுநாள்வரையில் அன்னபானாதிகளின்றி யொளித்திருந்து மொருவரும்போ யெட்டிப்பாராமையால், மிகு துன்பத்தோடுமவணிருந்தும் பிரயாணப்பட்டு, தேசாந்திரிகளாய், ஓர் அந்தகாரமானகாட்டிற் பிரவேசித்து, வெய்யிலின் றீட்சண்யந் தாளாதவர்களாய், விடாய்ப்பட்டு கோபத்

தோடும் பிள்ளையானவன் தந்தையைநோக்கி, ஐயா, பசிநோயானது என்னைவருத்திக்கொல்லுகின்றதே, என்செய்வேன், எப்படிசகிப்பேனென்று சொல்ல, அவ்வுரைகேட்ட வேந்தன், திடுக்கிட்டு, மனதுகலங்கிப், பலவாறுநச்சிந்தித்து, இக்குறையை யாரிடத்திற்சொல்லி யாறுவோமென ஏக்கங்கொண்டு, தனதுதேவியாகிய சுமித்திரையைப்பார்த்து, ஓ பெண்பாவாய், நமதுகுமாரனுகிய சந்திரகாந்தனது பசியையெப்படி தணிப்போம், எங்கேபோவோம், யாம்செய்தவினையாதோ, பிரமன்நமக்கு இப்படியாய் விதித்துவிட்டான், அந்தோ, ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனைப்பணியாமலும் பக்திசெய்யாமலும் மறையவர்களுக்கீந்த மண்பொன்முதலிய விதிகளைப்பறித்துக் கொண்டதனாலன்றோ பெருந்துன்பத்துக்காளானோம், இதல்லாமலும் பசித்தோர்முகம்பார்த்து அன்னங்கொடுக்காதிருந்தேனோ, உருத்திராட்சமாலிகா பரணத்தோடுங்கூடிச் சிவசொரூபமாய்விளங்குஞ் சிவனடியார்களை சிந்தியாமல் நிந்தித்தேனோ, சிறைச்சோறுண்டு விடவொட்டாமற் றடுத்தேனோ, தேசாந்தரிகளுக் கிடங்கொடாமல் துரத்தினேனோ, சிறுபிள்ளைகளினது புனைவைப்பருந்த வொட்டாமற்றடுத்தேனோ, கோயில், குளம், நந்தவனமுதலியவைகளைப் பாழ்படச்செய்தேனோ, யாதோ உணர்கின்றேன், என்செய்வேன் தெய்வமே தெய்வமேயென்று வேந்தனன்மூர்ச்சித்து, பூமியிற்சாய்ந்து, பிரேதம்போலிருக்கும் மணாளனைக்கண்ட சுமித்திரையானவள், திடுக்கிட்டு, மெத்தவுங்கிலேசத்தோடும் பூமிமேற்சாய்ந்த தன்மணாளனதுமேனியிற் புழுதியடைந்திருப்பதைக்கண்டு, சகிக்கப்படாத துன்பங்கொண்டு, தங்களுக்கு வந்து சம்பவித்தவினைப் பகுதியையெண்ணி, என்பிராணநாயகனாகிய மகாமண்டலேசுவரா, சந்தனகளப கஸ்தூரி புழுகு ஜவ்வாதணிந்து மேருவுக்குச் சமமாய்ப்பிரகாசியாநின்றநினது தோளிலும் மார்பிலும் புழுதிபடர்ந்திருப்பதையான் காணுங்காலம் நேரிட்டதேயென்று உள்ளம்பதைத்துப், பண்டு யான் செய்தவினையோ, முண்டகனெயபிரமன் இவ்வாறு விதித்

தானோ என்றேங்கிப்பரதவித்து, அரசே, தேவரீர் என்னைவிட்டுப் பிரிந்துபோகவா எத்தனப்படுகிறீர், அந்தோ தாங்களடியாளை விட்டுப்பிரிந்தால் இமைப்போதேனு முயிரைவைத்திருப்பேனோ, வைத்திருக்கமாட்டேன், இதோ யானுங்கூட வருவேனென்று புலம்புவதைக்கேட்ட பிள்ளையானவன், தனதுதந்தை மூர்ச்சித்திருப்பதைக்கண்டு, மிகவும் வருத்தங்கொண்டு, ஆ எனதுதந்தையே, மிகுபந்தமோடும் பெற்றுவளர்த்துப் பாராட்டியவென்னைப் பரதவிக்கவிடுத்துப் போவதழகோ, ஐயோ, நான்பசிப்பிணியால் மெலிந்துவாடுகின்றேனென்று, உள்ளம்பதைத்துச் சோர்ந்தீரேயென்செய்வேன், சிறுவனுகிய யானிப்புவியினின்று மெவ்வாறுய்வேன், தாதையே தாதையேயென்று புலம்பிக்கொண்டிருக்கிறகாலையில், அம்மார்க்கத்தில் சந்திரசடாதரமூர்த்தியாகிய சிவபெருமானைப்போன்ற பராசரமகாமுனியென்பவர் விபூதிருத்ராட்சமாலிகா பரணராய் தண்டகமண்டலத்துடனேயத்தடத்தில் வருபவரிவர்களைக்கண்டு, கிருபாநோக்கத்தோடும், இவ்வனத்தில் ஆதரவின்றிப் பரதவித்துக்கொண்டிருக்கும் நீங்களாரென்று கேட்க, அம்முனிவரது கருணையாகிய நோக்கம்பட்ட மாத்திரத்தில் சுமித்திரையுமவள் சுதனுகிய சந்திரகாந்தனுஞ் சோபந்தீர்ந்து எழுந்திருந்து, பராசரமுனிவரது பாதபத்மங்களிலே விழுந்து நமஸ்கரித்துச் சொல்லுவார்கள், சுவாமி, நாங்களிருப்பது சமிந்தமாநகரம், அந்நகரத்தையரசாளு மனேசவனென்னும் பெயர்வாய்ந்து இவண்மூர்ச்சித்திருப்பவர் எனது நாயகர், இச்சிறுவன் என்குமாரன், இவனுக்குச்சந்திரகாந்தனென்றுபெயர், எளியாளைச்சுமித்திரையென்று சொல்லுவார்களாதலால் நாங்கள் இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருக்கையில் எங்களது பிராரத்தவினையால் கோலபனென்னும்வேந்தன் படையெடுத்துவந்து அமர்விளைத்து, தோற்கச்செய்து, இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டமையால், நாங்கள் பாரிகளைப்போல் நிர்ப்பாக்கியத்தோடும் அன்னபானதிகளுக்கு மேதுவில்லாமல் இவ்வனத்தில் வந்துகொண்

டிருக்கும்போது, குமாரன்பசிப் பிணியால் வருந்துவதைக் கேட்டவரசர் சகியாதவராய்த் தாமும் பசியால்மெலிந்து மூர்ச்சித்து நிலத்தின்மேற்சாய்ந்தனர், இதுபற்றி யெவ்வகையுமில்லாமற் பாதவிக்கின்றோமென் செய்வோம், சுவாமியென்று இரக்கத்தோடுங்கூறிய சுமித்திரையின் மொழியைக் கேட்ட பாராசரமுனிவர், வாராய்சுமித்திரையே, இவ்வகைத் துன்பங்களெல்லாஞ் சம்பவித்ததற்குக் காரணமியாதெனின், உனதுநாயகன் அரசுரிமையில் மதுநீதிக்குவிரோதமாய்நடக்தும் வாக்கினாலுஞ் சொல்லப்படாத கொடியகர்மாது பலங்களுக் குடன்பட்டமையால், அநுபவிக்கவேண்டிவந்தனவாதலால், நீங்கள்வினை துன்பப்படுவதில் என்னபிரயோசனமுண்டாம், இப்போது உனதுநாயகனை யெழுப்பித்தருகிறோம், வியசனமுறாதிருவென்றுகூறித், தமது கமண்டலத்திலுள்ள ஜலத்தை மனோசவன்பேரிற்றெளிக்க, உடனேமனோசவன் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து, எதிரில் சாம்பவமூர்த்தியைப்போற் சேவைதந்துநிற்கும்பாராசரரை,பக்தியையுந்தோடும்பணிந்து, சுவாமி, அடியேனது ஜென்மசாபல்யமாகுதென்று பலவாறுந்தோத்திரஞ்செய்து, தனக்கு நடந்த காரியங்களையெல்லா மாதியோடந்தமாய்ச்சொல்லி, இத்துன்பம் நீங்கும்படியாய்த் தேவரீர்கடாக்ஷித்தருளவேண்டுமென்று பணிந்துநிற்கும்வேந்தனைநோக்கிப், பாராசரமுனிவர்கூறுவார்.

கேளும் மனோசவனென்னும் வேந்தனே, இனியுனக்கு ஸ்ரீகயிலாசபதியாகிய சந்திரஜடாதர மூர்த்தியினருளால் உனது துன்பமியாவுநீங்கி யுன்சத்ருவாகிய கோலபனென்பவனையுஞ் செயித்துப்பழயபடி இராச்சியத்தைப் பெறவேண்டுமாயின், தென்றிசையில் ஸ்ரீராமமூர்த்தியாற் கட்டப்பட்ட சேதுவில் வயங்குங்கந்தமாதன பருவதச்சாரலில் சீதாகுண்டத்துக்குச்சமீபமாய் ஒருதிவ்யதீர்த்தமிருக்கின்றது, அத்தீர்த்தத்திலே நீயு முன்னுடையதேவியுங் குமாரனுமாய்ப்போய்த் தீர்த்தமாடிச் சங்கற்பவிதியின்படிச் சிரார்த்தமுதலிய யாவும் வழுவின்றிச்செய்து வருவாயேல் உனதுதுன்பங்களெல்லாம்

நீங்குமாதலால் யாமும்வருகின்றோம் வாருங்களென்று சொல்ல, மனோசவன் மிகவுஞ்சந்தோஷமடைந்து, அவ்வாறே முனிவரோடும் பிரயாணப்பட்டுக், காடுமலைவனம் வனாந்திரங்களெல்லாங்கடந்து, அநேகந் திவ்யக்ஷேத்திரங்களையுந் தரிசித்து, சேதுவிலோங்குங் கந்தமாதன பருவதச்சாரலிலிருக்கு மங்கலதீர்த்தக்கரையில்வந்து சேர்ந்தவர்களாய், அத்தீர்த்தத்தில் பாராசர மகாமுனியின் சொற்படி மூன்றுமாதம் வரையிற்றீர்த்தமாடி, சிரார்த்தங்கள்செய்து, ஸ்ரீராமமந்திரத்தை விடைவிடாமற்செபித்து வாசஞ்செய்து கொண்டிருக்கும்போது, அவ்வேந்தனது கிரீடமகரகுண்டலங்களும் உடைவாளும் வில்வேல்முதலியபடைகளும் பட்டத்துக்குதிரையும் இரதகெஜ துரகபதாதிகளும் மந்திரிகண் முதலியவர்களோடு சமஸ்தநிதிகளும் ஒன்றொன்றாய் மங்கலதீர்த்தத்திற் றோன்றிக் கரையேறுகையில், அதைக்கண்டவேந்தனும் அவனது பெண்டுபிள்ளைகளுஞ் சந்தோஷங்கொண்டவர்களாய், அருகேயிருக்கும் பாராசரமகாமுனிவரது பாதபத்மங்களைவணங்கி எங்களுக்கென்ன வுத்திரவென்றுகேட்க, அப்போது பாராசரர், ஆனந்தக்கடலுட்டோய்ந்து, அம்மங்கலதீர்த்தத்தில் வேந்தனுக் கபிஷேகஞ்செய்துவைத்து, தனது தபமகிமையால் தெய்வநாயகன்முதலிய சமஸ்ததேவர்களையுமழைத்து,அன்னவர்களாசிகூறிச் ஜெயவிஜயீபவ வென்றேதித் துந்துபிமுழக்கி,மலர்மாரி தூவி,அக்ஷதைதெளிக்கையில்,அரசனுக்கு முடிசூட்டி, இந்திராதி தேவர்களிடத்தி லநேகவரங்களும் ஆயுதவகைகளும் வாங்கியளித்து, தானுமாசீர்வதித்துத் தன்னுடைய நகரத்துக்குச்செல்லும்படியாய் விடைகொடுத்தனுப்ப, அதுபோலவே மனோசவன் தனதுதேவியோடுங் குமாரனோடும் பாராசரமுனியைப்பணிந்து, சதுரங்க தளத்துடனே பிரயாணப்பட்டுக், காடுமலைவனம் வனாந்திரங் காறு முதலியவைகளும் பதிகளுங்கடந்து, தமதுபட்டணம் வந்துசேர்ந்து, கோலபனென்னும் வேந்தனைஜெயித்துப் பழயபடி இராச்சிய பரிபாலனஞ்செய்து கொண்டிருந்தார்கள், இவனில்

வாயிருக்கையில், பாராசரமகாமுனிவர், அம்மங்கல தீர்த்தக்
கரையில் நெடுநாள்வரையிற் றவஞ்செய்து கொண்டிருந்து,
அப்பால் தெய்வலோகத்தை நாடிச்சென்றார், பின்னர் மனோ
சவனென்னும்வேந்தன் தனதுதேவியோடும் ஆயிரம்வருடம்
வரையில் ஆளுகையிலிருந்து, அப்பால், தனதுகுமாரனாகிய
சந்திரகாந்தனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்துவைத்து, இராச்
சிய பரிபாலனஞ்செய்யும்படியா யமர்த்திப், பின்னர் தானு
தன்தேவியும் பிரயாணப்பட்டுச் சேதுவைச்சார்ந்த கந்தமா
தன பருவதச்சாரலில்விளங்கும் மங்கலதீர்த்தத்தில் மூழ்கி
அந்தடாகக்கரையில் இருவருமிருந்து, ஸ்ரீகயிலாசபதியாகிய
பரமசிவத்தை இதயகமலத்திலிருத்தித் தவஞ்செய்துகொண்
டிருந்தார்கள், இப்படியாய்த்தவஞ்செய்து கொண்டிருக்குங்
காலையில், மனோசவனென்னும் வேந்தன் சடத்தைவிடுத்துச்
சாரூபத்தைப்பெற, அதுகண்ட அவன்தேவியாகியசுமித்திரை
யென்பவள் நாயகனைவிடுத்துத்தான் தனித்துவாழ்வதற்குமன
மில்லாதவளாய் தனது மணாளனது சடத்தோடுதானுஞ் சகக
மனஞ்செய்துகொள்ள யத்தனித்து, அத்தீர்த்தக் கரையில்
மங்கலத்துடனே அக்கினிப்பிரவேசமானபடியால் அப்புண்ய
தீர்த்தத்துக்கு அன்றுமுதல் மங்கலதீர்த்தமென்றுபெயர் விள
ங்கிக்கொண்டிருக்கின்றது, அம்மங்கலதீர்த்தத்தில் மூழ்கின
பேர்களுக்கு அஷ்டமங்கல யோகாதிசய விராச்சியபாக்க
ளும் நித்தியமங்களசுபகாமும்,உண்டாயிருப்பதால் அநேகம
கிமைகளோடுங் கூடியிருக்கின்றது,அத்தன்மைவாய்ந்த தீர்த்
தத்துக்குச்சமீபமாய், ஏகாந்தராமனென்று ஒருதலமும்; அத்
தலத்தில் அமுததீர்த்தமென்று ஒரு தீர்த்தமு முண்டென்று
சூதமுனிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்ய முனிவர்
கள், சந்தோஷமடைந்து, சுவாமி, அத்தலத்தினது பெருமை
யையும்; அதுவந்தகாரணத்தையும், அடியோங்களுக்குத்
திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்கச், சூதமகா
முனிவர் திருவுளங்கனிந்து சொல்லத் தொடங்கினார்.

மங்கல தீர்த்தச்சருக்கம்
முற்றுப் பெற்றது.

அமுததீர்த்தச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே,
நெடியகடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் விளங்கும் உத்தரபாகத்
தில் இலகாநின்ற இமயமலைச்சாரலில் சந்திரஜடாதர மூர்த்தி
யினது அநல் விழியினின்று மாறுபெறாதியாகவெழுந்த சிவ
சண்முகக் கடவுளாலுபதேசம்பெற்றுக் குறுமுனி யென்றுங்
குடமுனியென்றுங் கும்பமுனியென்றுங் கலசமுனியென்றும்
அங்குஷ்டமுனியென்றும் அகஸ்தியமுனியென்றுங் காரணப்
பெயரெய்தி தக்ஷிணபாகத்திற்பொதிகைமாமலையி லெழுந்தரு
ளியிருக்கும் மகாமுனிவர்க்கு சீஷனாகிய காரணமகாரிஷி
யென்பவர் சதுர்வேதமாறுசாஸ்திர மறுபத்து நான்குகலைக்கி
யான மதுவிக்கியான முதலியயாவுமுணர்ந்து காமக்குரோ
தாதி யறுவிதப்பகையுமகற்றிச் சுத்தசத்தவத்திற் பொருந்தி
ஸ்ரீகயிலாசபதியாகிய நீலகண்டக் கடவுளைத்தனது இதயகம
லத்திலிருத்தி யநேகநாள்வரையிற் பூசைபண்ணியும் வந்தித்
தும் சிவனடியார்களுக் கன்னங்கொடுத்தும் வேதபாராயணஞ்
செய்தும் மறைவிதியினின்றுந் தினைத்துணையேனும்பிழையாது
நித்தியசிராத்த அக்கினிஹோத்ர வேள்வி முதலியயாவும்
நடாத்தியும் ஈசுவரகடாக்ஷமுண்டாகிப் பிரமசொரூபம் பெ
ற்ற முத்திவீட்டைப்பெறுவதற் கேதுவில்லாமையால் அன்
ன பானாதிமுதலியவற்றையும் சருகுஜல பட்சணங்களையும்
வெறுத்து, தேகாபிமானத்தையறுத்து, மறைக்கும் வெய்யி
லுக்கு மெய்யாமற் பஞ்சாக்கினி இடைநின்று, ஆயிரவருடம்
வரையிற்றவஞ் செய்துவருகையில், ஜகதீசனாகிய பரமசிவன்
கருணாகரத்து முனிவர்காணும்படியாய் மான்மழுசதுர்ப்புஜகர
ளகண்ட திரிநேத்திரங்களோடும் பார்வதிசமேதராய் வெள்
ளிவிடையேறிப் பிரமன் விஷ்ணுதேவேந்திரன் முதலியதேவர்
களுஞ் சிவகணங்களும் புடைசூழத்தக்கதாய், காரணமகா
ரிஷிக்குப் பிரசன்னமானார், அவ்வாறு தரிசனந் தந்ததை
காரணமுனிவர்கண்டு, திடுமென்றெழுந்து, தனதிருகரங்களை

யுஞ் சிரத்தின்மேற்கூப்பி, மகாதேவசம்போ, சங்கரா, காள கண்ட திரிநேத்ரா, சந்திரஜடாதரா, சயம்பூ கங்காதரா, காம கோடிநாயகா, கௌரிமனோகரா, கருணாகடாக்ஷா, நிர்மலா, நிஷ்களானந்தா, பார்வதிசமேதா, பசுபதி, திரிபுராந்தகா, தீனதயாளா, சுடையேனைக்காத்தருள்வல்லநாயகா, பிரம்மாண்டநாயகா, அகிலபுவனகாரணா, ஹராஹராவெனத் தோத்திரஞ்செய்து, நிலத்தின்மேல் அஷ்டாங்க பஞ்சாங்க திரியாங்கராய்ப் பணிந்தெழுந்து, பக்திவிநயத்தோடுகைகட்டி, வாய்பொத்தி நிற்குமுனிவரைப்பார்த்து, வாருங்காரணமகாரிஷியே, நீர் செய்ததபத்துக்கு நாம்சந்துஷ்டியடைந்ததாக விருந்தபோதிலும் இப்போது உமக்குமுத்திவீடரிது, ஏனெனில், நீர் தெட்சணபாகத்தி லோங்குங் கந்தமாதனச்சார்பில் மங்கல தீர்த்தத்துக்குச்சமீபமாய் ஒருதிவ்யதீர்த்தமிருக்கின்றது, அத்தீர்த்தத்தில்மூழ்கி, அதின்கரையிலேவாசம் பண்ணிக்கொண்டிருந்தால் உமக்கும் பிரமசைதன்யமாகிய முத்திவீடு கிடைக்குமென்று திருவாய்மலர்ந்தருளி, உமாமகேசன் தேவகணங்களோடும் ஸ்ரீகயிலாயத்துக் கெழுந்தருளினார்.

கேளும் முனிவர்களே, அப்பால் நாரணமகாரிஷியும் ஜகதீசனாகிய உமாமகேசனது கட்டளையின்படி அவணின்றும் நீங்கிக் காடுமலைவனம்வனாந்தரங் கானாறுமுதலிய நதிகளும் பதிகளுந் திவ்யஸ்தலங்களுங்கடந்து சேதுவைக்கண்டு தரிசித்து அவ்விடத்திலகுங் கந்தமாதனபருவதச்சார்பில் வயங்கும் அமுததீர்த்தத்தில் மறைவிதிப்படிமூழ்கி அத்தீர்த்தக்கரையில் மூன்றுவருடகாலம்வரையில் நிஷ்டைசெய்துகொண்டிருக்கையில், பிரமசொரூபமாகிய ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்தசின்மய சொரூபசாட்சாத்காரமாகிய பரசிவத்திற்கலந்தமையால் அப்புண்யதீர்த்தத்துக்கு அன்றுமுதல் அமுததீர்த்தமென்று பெயர்விளங்கிக் கொண்டிருக்கிறதென்று சூதமகாரிஷிசொல்ல, அதுகேட்டநைமிசாரண்யர், பிரம்மானந்தபரிதராய், முனிவரைப்பணிந்து, சுவாமி, அத்தீர்த்தம் விளங்குமிடத்திற்கு ஏகாந்தராமமென்று பெயர்வந்த கா

ரணத்தையும் புலப்படுத்தவேண்டுமென்றுவினவ, சூதமுனிவர் கருணைகூர்ந்து, ஓ முனிவர்களே, அயோத்தியாபட்டணத்துக்கிறைவனாகிய தசரதமகாராஜன்குமாரனாகிய இராமமூர்த்தியினிடத்தில் இலங்கையினின்றும் அடைக்கலம் புகும்பொருட்டு விபீஷணன்வந்துசேர்ந்து, சேதுபந்தனஞ்செய்தபின்பேரில், தானும் தன்தம்பியாகிய இலட்சுமணனுஞ் சூரியகுமாரனாகிய சுக்ரீவனும் விபீஷணனும் மகாபலம்பொருந்திய அநுமானும் வானராதிகளுமாக வொருங்குகூடிச் சீதாதேவியைக்கொண்டுவர வேண்டியகாரியங்களைக்குறித்தும் இராவணனை ஜெயிக்கவேண்டிய காரியங்களைக்குறித்தும் ஏகாந்தமாயிருந்து யோசனைசெய்து கொண்டிருக்கும்போது, மகாமச்சங்கள் குதிகொண்டு விளங்காநின்றசமுத்திரம் ஆரவாரத்தோடு மிகச்சலிட்டிருந்தமையால், இரகசியமாகப்பேசும் வார்த்தையானது ஒருவர்சொல்லொருவருக்குக் கேளாதிருக்க, அப்போது ஸ்ரீராமனிடத்தில் இவ்விரைச்சலால் ஒன்றுங் கேட்கவில்லையென்று யாவருஞ்சொல்ல, அவ்வார்த்தையை ராமமூர்த்திகேட்டுக் கோபங்கொண்டு தனது இரண்டுபுருவங்களையும்நெரித்துச் சமிக்ஞையாய் சந்தடியடக்கும்படிகாட்ட, அக்கணமே சமுத்திரமானது அச்சங்கொண்டுராமமூர்த்தியினது ஆக்ஞையின்படியே கோஷமடங்கி யிருந்துவிட்டபடியால், அவ்விடத்திற்கு ஏகாந்தராமமென்று பெயர் விளங்கிக் கொண்டிருக்கின்றதோடும் அதற்குவடபாரிசத்தில் வில்லூன்றி யென்றுமோர் திவ்யதீர்த்தமு முண்டாதலால், இத்தன்மையான மகிமைபொருந்திய அமுததீர்த்தத்திலே நாரணரிஷியானவர் யோகஞ்செய்து அமிர்தங்களைப் புசித்து முத்தியடைந்ததினாலே அத்தீர்த்தத்திற்கு அமுத தீர்த்தமென்றும் முத்திதீர்த்தமென்றும் பெயர்விளங்குவதோடுங்கூடி, அதிற்றீர்த்தமாடி யங்ஙனம்வாசஞ் செய்பவர்களுக்கு சந்தேகமில்லாமல் மோட்சங்கிடைக்குமாதலால், கந்தமாதன பருவதத்திலே யுண்டாயிருக்கிறமகிமைகளைச் சொல்லி முடியாது, மேலும், இதைப்பார்க்கிலு மகாமகிமை

பொருந்திய பிரமகுண்டமென்றோர் தடாகமிருக்கின்றது
அத்தடாகத்தில் உண்டாயிருக்கின்ற மிர்த்திகையை யாரொ
ருவ ரெடுத்துக்கொண்டாலும் புசித்தாலுந் தீர்த்தமாடினு
ம் அவர்களை மகாபுண்யசாலிகளென்று சொல்லுவதல்லா
மலும் சதுர்வேதங்களையு முணர்ந்தோதவல்ல கோடிதேவ
பிராம்மணரை வதஞ்செய்தபாபிகளாயினும் அப்பாபமனை
தும் பெருங்காற்றிற் பஞ்சுபோற்பறந்துவிடுமென்று சுருதி
வாக்கியங்களாற் சொல்லப்பட்டிருக்கின்றதென்று, சூதமுனி
வர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யமுனிவர்கள், ஆன
ந்தபரவசராய், முனிவனைப்பணிந்து, சுவாமி, தேவரீர் திரு
வாய் மலர்ந்தருளியவண்ணம், அப்பிரமகுண்டத்திலே விள
ங்குகின்ற மிர்த்திகையை எடுத்துதரித்துக் கொண்டாலும்,
புசித்தாலும், அதிற்றீர்த்த மாடினாலுங் கோடி பிரம்மஹத்தி
தோஷங்களாயினும் நீங்குமென்று கூறியமகிமை அத்தடாக
த்துக் கெவ்வகையாயுண்டாகியதோ அதைத்திருவுளம் பற்ற
வேண்டுமென்று மிகுகாதலோடுங் கேட்க, அவர்கண்மீது
கருணைகூர்ந்து சூதமகாமுனிவர்சொல்லத் தொடங்கினர்.

அமுததீர்த்தச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

பிரமகுண்டச் சருக்கம்.

...கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே
...லத்தில் ஸ்ரீவைகுண்டவாசராகிய மகாவிஷ்ணு
...உந்திக்கமலத்தினின்று முதித்தபிரமனும் ஒரு
...ர் சகலாண்டங்களையும் படைத்தளிக்கவல்ல
...பெரியவன் நான்பெரியவன் என்று இறுமாப்
...ர்த்தையாடிக் கோபாவேசங் கொண்டவராய்
...ந்து இமாசலத்துக்கொப்பாகிய இரண்டுபெரு
...லும் இரண்டு சிங்கங்களைப்போலும் மும்
...இரண்டுயானைகளைப்போலும் உகாந்தகாலப்

பேரொலியைப்போற் கர்ச்சித்துத்தோள்கொட்டி தொந்தயுத்
தமுதலிய யுத்தங்கள்செய்து, ஒருவருக் கொருவர் தோல்வி
யின்றி நெடுநாள்வரையில் அமர்செய்துவருகையில், சமுத்
திரங்களும் வறண்டு, ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களு முதி
ர்ந்து, சூரியசந்திரருங்கதிமாறி, புவனத்திலுள்ள மன்னுயி
ரனைத்துங் கலங்கிப்பரதவித்து, உயிர்விடுவதைக்கண்ட தே
வேந்திராதிமுதலிய வும்பர்களனைவரும்பயந்து, ஈடுசெய்ய
மாட்டாதவர்களாய், ஸ்ரீகயிலாசபதியாகியபரமசிவத்தினிடஞ்
சென்று, சரணாகதியெனப்பணிந்து, தமதுகுறையைத் தெரி
விக்க, அதுகேட்டசந்திரஜடாதர மூர்த்தியாகிய பரசிவம்
கோபங்கொண்டு, காலாந்தருத்திரனைப்போற்சீறி, இவர்களது
மமதையைப் போக்கவேண்டுமென்று கருதியெழுந்து, அக்
கினி பருவதம்போலவுருவங்கொண்டு, யுத்தஞ்செய்து கொ
ண்டிருக்கு மிருவர்கள் மத்தியில்வந்துதோன்ற, அதுகண்ட
பிரமன் விஷ்ணு இவ்விருவரும் அச்சங் கொண்டவர்களாய்,
இதென்ன ஆச்சர்யமென்றுநிதானித்துத் தோற்றுதவர்களா
ய்ப், பின்னர் மகாவிஷ்ணுவானவர் பன்றியாக உருவங்கொ
ண்டு யானிவ்வனையினது அடியைக்கண்டு வருகிறேனென்
றும், பிரமன் அன்னவுருவங்கொண்டு முடியைக்கண்டு வரு
கிறேனென்றும் வாதஞ்செய்துகொண்டு, அவ்வாறே பன்றி
யாகிய மகாவிஷ்ணுவானவர் பாதாளபரியந்தந் தேடிச்சென்
றும் பிரமன் தான்கொண்ட அன்னப்பட்சி யுருவத்தோடும்
ஆகாயத்தைநோக்கிச்சென்றும் கற்பகோடிகாலம் வரையிற்
றேடுகையில், விஷ்ணுவானவர் தனதுகோரைகளால் பூமி
யைத் திட்டுதிட்டாகப் பெயர்த்தெறிந்து பாதாளம் வரையில்
கல்லிடைக் கன்களைப் போற்றுளைத்துப் புகுந்துபார்த்தும்,
அவ்வனையினுடைய அடியைக்காண்பதற்கு அரிதாய் தனது
கோரைகளாகிய தந்தங்களுங் காற்குளம்புகளுந்தேய்ந்து ஆற்
றப்படாததுயரத்தோடும் அக்கினிவடிவமாகிய சொருபத்தை
யின்னதென்று யோசிப்பதற்கே சக்தியற்றவராய் அதிகாண
த்தோடும் இவைபரமசிவத்தின் பெருமையென் றுணர்ந்து,

தான்கொண்ட மமதையிழந்து பூலோகத்துக்குவந்து ஆகாய வீதியினிற்குந்தேவேந்திராதி முதலியவும்பர்களைக் கண்டு கூறுவார்.

கேளுங்கள் தேவர்களே, யானும் பிரமனும் நீ யென்படைப்புக் குரியவனென்றும் நீ என்படைப்புக் குரியவனென்றும் ஒருவருக்கொருவர் போர்புரிந்திருக்கையில் அகண்மாத்தாய் எங்கள்மத்தியிலெழுந்த இவ்வக்கினி பருவதத்தைக் கண்டு ஆச்சரியமுற்று இதனது அடியையாகிலும் முடியையாகிலுங் கண்டுவந்தவனே பெரியவனென்றுபேசிச் சம்மதித்து அவ்வாறேயான் பன்றியாகவும் அவன் அன்னப்பட்சியாகவும் உருவங்கொண்டு பாதாளத்தையெல்லாங்கெல்லியும் அடியைக்காண்பதற்கரிதாய் இத்தன்மையாகிய துன்பத்தோடும் பூலோகம்போய்ச் சேருமளவும் இப்போர்தியில் உயிர்பொருந்துமோ பொருந்தாமலகலுமோ வெனவச்சங்கொண்டு பரமசிவத்தருளால் இங்ஙனம்வந்துசேர்ந்தேன், முடியைக்கண்டு வருகிறேனென்று சென்றபிரமன் என்னகதி யானானோ; யான்கொண்ட அகங்காரத்தால் கைர்தேன், இனிச்செய்யேன், என்செய்வேன், தேவர்களேயென்று சொல்லிக்கொண்டிருக்கையில், அன்னரூபங்கொண்டு முடியைக்கண்டு வருகிறேனெனச்சென்றபிரமன் மகாபராக்கிரமத்தோடும் அதிவேகமாய் ஆகாயவீதியிற்கிளம்பி பூலோகமுதல் தட்டுதட்டாவுருவிப்புகுந்தும் இனுக்கினுக்காய்ச்சோதித்தும் அகப்படாமையால் அக்கினிவடிவமாயிருக்கின்ற பருவதத்தின் பிரமாணத்தை யிவ்வளவென்றறியக் கூடாதவனாய் இறகுகளெல்லாமுதிர்ந்து கால்களைசந்தும் சிரம்வருந்தியும் பறப்பதற்கு வலியில்லாமல் மறுபடியும் பூலோகத்தைநோக்கி மகாதுன்பத்தோடும் தனதுமனத்தில் அடியைக்காணச்சென்றவிஷ்ணு யான்கண்டுவந்தே னென்றுசொல்ல, நான் முடியைக்காணவில்லையென்று சொல்லுவோமாகில் எம்மைத்தேவர்கள் முதலியயாவர்களுமதியாமற்போவதோடும் அவனுக்குப்பின்னுஞ்செல்வமுங்கீர்த்தியும் உண்டாகுமன்றோ, மேலும் நான்கண்டு

வந்தேனென்று பொய்யேனுஞ்சொல்லி மேம்பாடுபெறவேணுமென்றால் அதற்கோர் சாட்சிவேண்டுமாதலால் இதற்கென் செய்வோமென்று யோசனைசெய்து கொண்டுவருகிறபோது, ஆகாயத்திலிருந்து ஓர் தாழம்பூவானது வருவதுகண்டு அதனை மதித்துக்கொண்டு, வாராய் தாழம்பூவே, நீ யெங்கிருந்து வருகின்றாயென்றுகேட்க, அதுகேட்ட அப்பூவானது, கேளும் பிரமனே, யான் அநேககோடி கற்பகாலத்துக்குமுன் ஸ்ரீ கயிலாசபதியாகிய சாம்பசிவமூர்த்தியினது சடாடவியிலிருக்கும்போது, பூலோகத்தில் நீரும்மகாவிஷ்ணுவும் ஒருவருக்கொருவர் நீ பெரியவன் நான்பெரியவனென்று வாதமிட்டு யுத்தஞ்செய்ததின்பேரில் பூலோகமுதலியயாவும் நாசமுறக் கண்ட தேவர்களச்சங்கொண்டு சாம்பசிவமூர்த்தியிடம்வந்து பணிந்துமுறையிட, அம்முறைகேட்டவுடன் உங்களது கலகத்தை நிவர்த்திசெய்யவேண்டி அக்கினிமலையாக வடிவங்கொண்டு உங்களிருவர்மத்தியில் பூமியிற்குதிக்கையில், அவருடைய திருமுடியினின்றும் நழுவியயான் இதுவரையினும் நிலையில்லாமல் பெருந்துன்பத்தோடும் வருகின்றேன், இன்னம் பூமியைக்காண எத்தனைகாலஞ்செல்லுமோ தெரிகிலேன், யான்செய்தபாவத்தினால் பரமசிவனது முடியைவிட்டுப் பிரிந்து இப்படிபாதவிக்கின்றே னென்றுசொல்ல, அதுகேட்டபிரமன், மகாசந்தோஷங்கொண்டு, அப்புட்பத்தினிடத்தில் தங்களுக்குள் நடந்தகாரியங்களை யெல்லாஞ்சொல்லி, மிகபயத்தோடும், ஓ தாழம்பூவே, நீ யென்மீது தயைசெய்து எனக்கோருபகாரஞ் செய்வையாகில் அதனையெனது ஆயுளுள்ளளவும் மறவேன், உனக்கும் பெரும்புண்ணியமுண்டாம், அதுயாதெனில்; நான்தேவர்களிடத்தில் பரமேசுவரனுடைய திருமுடியைக்கண்டுவந்ததாய்ச் சொல்லுகின்றேன் அதுபோல் நீயும் இவர்வந்துகண்டது உண்மையென்றும் யானுமங்கிருந்துதான் வருகிறேனென்றுஞ் சொல்லுவாயேல், உனக்குமெத்தவுஞ் சுகிர்தமுண்டாமென்று மெத்தவும் உபசாரவார்த்தைகளாற்சொல்ல, அதுகேட்ட தாழம்பூவானது,

ஐயா, பிரமதேவனே, நீர், அஞ்சவேண்டாம், உமதுமனம்
போல் யான்சொல்லுகிறேனென ஒப்புக்கொண்டு, பிரமனுட
னேகூடி பூலோகத்திற்குவருகிறபோது, ஆகாயவீதியில், இந்
திராதிதேவர்களும் மகாவிஷ்ணுவுமிருப்பதுகண்டு, பிரமனு
னவன்,சந்தோஷத்தோடும்மகாவிஷ்ணுவின்முன்னின்றுஓய்
விஷ்ணுவே, நீரிந்த அக்கினிமலையினுடைய அடியைக்கண்டு
வந்தீரோவென்றுகேட்க, அப்போது திருமால் பிரமனைநோ
க்கி, ஓய் பிரமனே, நான்காணவில்லை, நீ யாவது முடியைக்
கண்டுவந்ததுண்டோ சொல்லெனக்கேட்க, அதற்குப்பிரம
ன், ஆம் நான் முடிகண்டுவந்தேன், அதற்குச்சாட்சிவேண்டு
மாயின் இத்தாழம்பூவைக் கேட்டறிந்து கொள்ளுமென்று
சொல்ல, அதற்குத்தாழம்பூவும் கண்டுவந்தது உண்மைதான்
யானும் அவர்முடியினின்றுங் கூடவேவந்தேனென்று சொல்
லியதைக்கேட்ட இந்திரன்முதலிய தேவர்களெல்லாம் ஆச்
சரியங் கொண்டிருக்கும்போது, அக்கினிவடிவாய்நின்ற மலை
யினின்றுமோர் அகண்டாகார ஜோதிபோற்றோன்றி மான்
மழு சதுர்ப்புஜ காளகண்ட திரிநேத்திரங்களோடும் ஸ்ரீகயி
லாச பதியாகிய சாம்பமூர்த்தி எழுந்து, பிரமனைநோக்கி
அடாபிரமனே,நீ என்னசொன்னாய்,இன்னொருதரஞ்சொல்லு
வாயென்று வீராவேசத்தோடுங்கேட்க, அவ்வுரைகேட்ட பிர
மனும் தாழம்பூவும் உள்ளம்நடுங்கி மெய்சோர்ந்து பிரதி
உத்தரஞ்சொல்லுவதற்கு நாவெழாதவர்களாய்த் தலைகுனிந்து
நிற்பதுகண்ட மகாவிஷ்ணுவும் இந்திராதிதேவர்களும் இதெ
ன்னகாரணமென்று பிரமித்துப் பார்த்துக்கொண்டிருக்கை
யில், சாம்பமூர்த்தியாகிய உமாமகேசனும் கூறுவார், ஓ
பிரமனே, நீ நம்முடைய முடியைக் கண்டுவந்தோ மென்று
இத்தேவசபையில் பொய்சாட்சி யேற்படுத்திக்கொண்டுவந்து
நின்றிந்தேனும் அச்சமில்லாமற் சாதித்தபடியால் இன்று
முதல் புவனத்தில் உனக்கு ஆலயமில்லாமலும் யாரும்வணங்
காமலும்போகக்கடவதென்று சாபங்கொடுத்ததோடுந் தா
ழம் பூவைப்பார்த்து, ஓ புட்பமே, நீ இப்பிரமன் வார்த்தை

யைக்கேட்டு பொய்சாட்சியாகவந்து சாதித்தமையாமல் இன்
று முதல் நமது கண்ணிற்படாமலுந் தேவர்களுக் குபயோக
மில்லாமலும் போகக்கடவையென்றுகூறி, பின் மகாவிஷ்ணு
வைப்பார்த்துச்சொல்லுவார்,வாரும் பரந்தாமா,நீர் இத்தேவ
சபையில் சத்தியமாய் உண்மையை வெளியிட்டமையால்
இப்புவனத்தில் நீர் மேன்மேலாகிய புகழும் பூஜிதமும்ஜெய
மும் மங்களாகாரமும்பெற்று வாழக்கடவீரென்று முகமலர்
ச்சியோடுங் கூறியதல்லாமலும், நாமேநீர்,நீரேநாம், என்றும்
விஷ்ணுவை காடாலிங்கனஞ்செய்து அநேகவுபசாரவார்த்தை
கள்சொல்லிக் கூட்டிக்கொண்டு தேவேந்திராதியர் புடைசூ
ழும்படியாய்க் கயிலாயத்துக் கெழுந்தருளும்போது,பிரமதே
வனும் மகாதுன்பங்கொண்டு சந்திரஜடாதர மூர்த்தியாகிய
பரமசிவத்தினது பாதபத்மங்களிற்பணிந்துஇருகரங்களாலுங்
கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு, சுவாமி, அறிவில்லியாகிய சிறி
யேன் செய்தகுற்றத்தைப்பொறுத்து சாபநிவர்த்திசெய்ய வே
ண்டுமென்று தோத்திரஞ்செய்ய, அப்போது பரமசிவங்
கருணைகூர்ந்து, வாராய் பிரமனே, உனக்கு நம்மால்நேரிட்ட
சாபநிவர்த்தியாக வேண்டுமாயின் பூலோகத்திலிலங்கும் பரத
கண்டத்தில் தெட்சணபாகத்தில் சேதுவிலோங்குங் கந்தமா
தன பருவதச்சாரலிலிருந்து யாகாதிகிர்த்தியங்கள்செய்து தே
வர்களுக்கு பூரணாகுதி செய்துவருவையேயாகில் இச்சாப
விமோசனமாகுமென்று திருவுளம்பற்ற, அதுகேட்ட பிர
மன் சந்தோஷங்கொண்டு, அவ்வாறே தேவர்கண்முதலிய
மகாரிஷிகளையும் சித்தபுருஷர்களையு மழைத்துக்கொண்டு
கந்தமாதனகிரிச் சாரலில்வந்துசேர்ந்து வேள்விக்குண்டமுத
லியவைகளை விதிப்படியமைத்து யாகாதிகளைச்செய்துமுடிக்
கையில்,பரமேசுவரன் விருஷபவாகனாரூடராயெழுந்தருளிப்
பிரமனுக்கு தெரிசனந்தந்து, அநேகவரங்களைக் கொடுத்து
இன்றுமுதல் உன்னைச்சுருதிவாக்ய ப்ரமாணங் களினாலே
பூசாகாள் வந்தனைவழிபாடு செய்யக்கடவதென்று திருவாய்
மலர்ந்தருளிப் பின்னும் தன்னுடையசாப விமோசனமாகும்

படி யாகஞ்செய்துகொண்டிருந்த ஓமகுண்ட சமனுகதிசெ
ய்து, அந்த இடத்தில் நிரம்பியதீர்த்தங்களிலே யாவரும் மூழ்
கி அவற்றிலுள்ள மிர்த்திகைமுதலான நீற்றையெல்லாமெடு
த்து தரித்துக்கொள்ளக் கடவதென்றும் இவ்வோமகுண்டம்
உன்னுடையநிமித்தம் உண்டாகியபடியால் இதுமுதலிதற்கு
பிரமகுண்டமென்று பெயர்விளங்கக்கடவதென்றும் இப்
பிரமகுண்டத்தில் மூழ்கினவர்களுக்குபேரின்பவீடுகிடைப்ப
தோடும இதில் உண்டாயிருக்கிற நீற்றை யாரொருவர் தரி
த்துக் கொள்ளுகின்றார்களோ அவர்கள் புண்ணியரென்றும்
தரியாதவர்கள் பாவிகளென்றுஞ் சொல்லியதோடும் சூரிய
சந்திராளுள்ளவரையில் மங்களகரமா யிருக்கக்கடவதென்று
சொல்லிச் சகலதேவர்களுடனேயும் சாம்பசிவமூர்த்தியான
வர் ஸ்ரீகயிலாசத்திற் கெழுந்தருளினார், ஆதலால் அதுமுதல்
அதற்கு பிரமதீர்த்தமென்று பெயர்வழங்கிவருகின்றதென்று
சூதமுனிவர்சொல்ல, நைமிசாரண்யர் சந்தோஷங் கொண்டு,
சுவாமி, கந்தமாதனத்தில் இத்தன்மையவாகிய மகிமைகளுண்
டா யிருக்கின்றதன்றோவென, அப்போது முனிவர், அவர்
தமைநோக்கி, ஓ முனிவர்களே, இப்பிரமகுண்டத்துக்குச்சமா
னமாகிய அநுமகுண்டமென்று ஒருபுண்ணிய தீர்த்தமிருக்
கின்றது, அதின்பெருமையைச் சொல்லுகிறேன் கேளுங்க
ளென்று நைமிசாரண்யருக்கு சூதமுனிவர் சொல்லத் தொ
டங்கினார்.

பிரமகுண்டச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

அநுமகுண்டச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே,
தசரதகுமாரனாகிய ஸ்ரீராமமூர்த்தியும், இலட்சுமணனும், விபீ
ஷணனும், சுக்கிரீவன் அநுமன்முதலிய வானரவீரரும், எழு
பத்திரண்டுவெள்ளம் வானரசேனைகளும் ஏகாந்தராமமென்

னும் ஸ்தானத்திலிருந்து ஆலோசித்துப்பின்னர் பிரயாணப்
பட்டு இலங்கையிற் பவளமாமலையிற் சேனைகளையிறக்கி இரா
வணாதிகளை யெதிர்த்துவதஞ்செய்து விபீஷணனுக்குப் பட்
டாபிஷேகஞ்செய்த பிரமஹத்திதோஷமானது இராமனைப்
பிடித்துக்கொண்டு சகிக்கப்படாததுன்பங்கள் நேரிட்டமை
யால், அதுநிவர்த்தியாகும்பொருட்டு மகாரிஷிகள் கூறியவண்
ணம் சேதுவின்மத்தியில் கந்தமாதனபருவதத்தில் சிவபூசை
செய்யவேண்டி யோசித்து, இலிங்கங் கொண்டுவரும்படியாய்
அநுமானை நர்மதாநதிக்கனுப்பிவைத்து, அதற்குரிய சாமக்
கிரிகளெல்லாஞ் சேகரஞ்செய்து, அநுமன்வரவை யெதிர்பா
ர்த்திருக்கையில், அப்போது இலிங்கப்பிரதிஷ்டைக்குரியஇல
க்கினம் நேரிட்டுத்தப்பிப்போகுதென்று கருதினவராய்ச் சீ
தா பிராட்டியினது கையினாற்பிடித்து விளையாடிக் கொண்டி
ருந்த மிர்த்திகையினாலே பார்த்திபலிங்கமாகச்சமைத்து, அத
னை ஸ்ரீராமன் பூசைசெய்ய, அப்போது ஸ்ரீ கயிலாசபதியாகிய
சாம்பமூர்த்தியானவர் இராமமூர்த்திக்கு தெரிசனந்தந்து வே
ண்டியவரங்களையுங்கொடுத்து கயிலாசத்திற் கெழுந்தருளிய
பின்பு, இலிங்கங்கொண்டுவரச்சென்ற அநுமாரானவர் நர்ம
தா தீரத்திலிருந்து அதிபிரயாசையோடும் இலிங்கத்தைக்
கொண்டுவந்து இராமமூர்த்தியினெதிர்நின்று வணங்கிநிற்க,
அவ்வநுமானைக்கண்ட இராமன், வாராய் அநுமானே, நீ வரு
வதற்குள் முகூர்த்தந்தப்பிப் போகிறதா யிருந்தமையால்
சீதையின்கையினாற் பிடித்திருந்த மிர்த்திகையிலே சிவபூசை
செய்து முடிந்தது, இப்போது நீ கொண்டுவந்த இலிங்கத்தை
நாம் பூசைசெய்திருக்குமிடத்தில் உத்தரபாரிசத்திலே பிரதி
ஷ்டைசெய்து உன்பெயர்விளங்கத்தக்கதாய் பூசைசெய்வா
யென்றுசொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட அநுமான் சகி
க்கப்படாததுன்பமுங் கோபமுங்கொண்டு முகம் வேறுபட்
டிருப்பதைக்கண்டராமன் அநேகவிதமாய்த் தேறுதலைசொல்
லியும் கேளாததுகண்டு, பின்னும் இரக்கத்தோடும், அப்பா
அநுமானே, உன்பெயராற் பிரதிஷ்டைசெய்த இலிங்கத்து

க்கு முதற்பூசையும் நிவேதனமும்நடந்தபின் நம்முடைய இலிங்கத்துக்கு நடக்கும்படியாய் கட்டளையிட்டோம், அதன்றியும் இவ்விரண்டினும் பரம்பரன் பேதமில்லாமல்விளங்கிக் கொண்டிருப்பார், அப்படியிருப்பதிலும் உன்னால் தாபிக்கப்பட்ட லிங்கத்தைச் சகலருந்தெரிசனஞ்செய்து பின்னர்யான் பூஜித்தலிங்கத்தை தெரிசித்தால் அவர்களுக்கு அநேகம்பலனுண்டாம், இதன்றியும் நீ தாபித்தலிங்கத்தை தெரிசியாமல் யான்பூஜித்ததைமாத்திரம் தெரிசிப்பவர்களுக்கு யாதொரு பலனுமுண்டாகமாட்டாது, ஆதலால் இதனை நீ உண்மையாகநம்பி யான்சொல்லியவண்ணம் முடிப்பாயென்று சொல்லியுங்கேளாது அநுமாரானவர் இராமமூர்த்தியைநோக்கி, சுவாமி,தேவரீர்பூஜித்த இலிங்கத்தைப் பிடுங்கியெறிந்து, அடியேன் கொண்டுவந்த இலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்யவேண்டுமென்றுசொல்ல,அக்கணமே இராமமூர்த்தி சிவசிவாவென்று செவியைப்புதைத்துக்கொண்டு,அநுமானைப்பார்த்து, வாரும் அநுமானே, சர்வாந்தரியாமியாகவுஞ் ஜகதீசனாகவுமிலங்குஞ் சிவபெருமானைப் பிடுங்கவும்வைக்கவுமுமக்குக்கூடுமோ, என்ன வார்த்தைசொல்லுகிறாய், சரியல்லவென்று சொல்லியுங் கேளாததுகண்டு, இராமமூர்த்திக்கு மனத்திற்கிஞ்சித்து வருத்தமுண்டாகி, அப்பா அநுமானே, யான்பூஜித்தலிங்கத்தைப் பிடுங்கிப்போடும்படியாகிய வல்லபமுனக்குண்டாயிருந்தால் அவ்வாறேசெய்யென்றுசொல்ல, அநுமான் அவ்வுரைக்குச் சம்மதங்கொண்டவனாய் விசுவரூபங்கொண்டு தனதுவாலை வளர்த்து இராமமூர்த்திபூஜித்த இலிங்கத்துக்கு மூன்றுசுற்றாய் வளையச்சுற்றி இறுக்கிப்பிடித்துக்கொண்டு தனதுபூர்ணவலிமையோடசைக்க,அணுவளவேனு மசையாததுகண்டு,மகாகோபங்கொண்டு,பின்னுங்கெட்டியாய் வாலினாலிறுக்கித் தனதிரண்டுகாலையும் பூமியின்மீதுவலிவாயூன்றி இருகரங்களாலும் வாலைப்பிடித்துக்கொண்டு மகாபராக்கிரமத்தோடும் ஆகாயவீதியில் விசைகொண்டெழும்புகையில், அநுமான் வாலானது அறுபட்டு அவ்விலிங்கத்திற்கு வடபாலாகக் கூப்

பிடு தூரத்தில் பூமியின்மேரில்வந்துவிழுந்தபோது அப்பூமியானது பத்தல்பத்தலாய்ப்பிளந்து பாதலமளவும்பள்ளமுண்டாகிஅவற்றில் நீர் ஊற்றுத்தோன்றியது; அதில்வீழ்ந்த அநுமானுடைய வாயினிடமாகவுஞ் செவியினிடமாகவும் பெருகிய உதிரமும்நீரும் ஒன்றுபட்டு அப்பள்ளமானது நிறைந்து பிரவாகம்போற் பெருகிவழியும்பள்ளத்திற் சாவுக்குச் சரியாகிய மூர்ச்சைகொண்டிருப்பதை இராமமூர்த்தி முதலியயாவருங்கண்டு வியாகுலங்கொண்டு சீதாபிராட்டியோடும் அநுமானைக்கிட்டிநெருங்கி, அந்தோ,பண்டியான் சொல்லியதைக் கேளாது மெலிந்தாயேயென விரக்கத்தோடும் அநுமானையெடுத்து, அம்மனும் சுவாமியுமாக அநுமானதுசரீரத்தைத் தடவிக்கொடுத்து, அவரதுசோபத்தைமாற்றி,அநேகவுபசாரவார்த்தைகளைச்சொல்லித் தேறுதலைசெய்து, தனது புதல்வனுக்கொப்பாகிய அநுமானுக்குற்ற விபத்தைநீக்கிய அப்பள்ளத்திற்கு குழந்தைகளுக்குவந்த துன்பத்தையும் குழந்தைகளில்லாதபேர்களுக்குக் குழந்தைகளுண்டாகும்படியாகிய பெருமையையும் அநேகபாபங்களும் இதில்மூழ்கியபேர்களுக்கு விலகக்கடவதென்று வாக்களித்ததோடும் அத்தடாகத்திற்கு அநுமகுண்டமென்று நாமஞ்சூட்டிப் போனமையால் அத்தன்மைவாய்ந்த அநுமகுண்டதீர்த்தமானது உலகத்திற்பெருமையோடிருக்குநாளில், கேகயதேசமாளப்பட்ட தருமசகன் என்னும்வேந்தன் நூறுபெண்களை விவாகஞ்செய்துகொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்துவருநாளில், தனக்குப் பிள்ளையில்லாததுகண்டு அநேகவிதநோன்புகளை யநுஷ்டித்தும், மறைவிதியிற் கூறியவண்ணம் முப்பத்திரண்டறங்களை வழுவின்றி நடாத்தியும் வருகையில் தனது மனைவியின் வயிற்றில் ஓர் பிள்ளையானது பிறக்க, வேந்தன் மிகவுஞ்சந்தோஷங்கொண்டு அப்புத்திரனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்த்து வருகையி லோர்நாள் அந்தப்புரத்தில் நவரத்னகசிதமாகிய தொட்டிலில் நித்திரைசெய்து கொண்டிருக்குங் குழந்

தையினதுகாலில் ஓர்தேள்கொட்ட, உடனே யக்குழந்தை வீறிட்டழுதவோசையைகேட்ட குழவியின்தாயாகிய பட்டமஹிஷியும் பாங்கியர்களுமாயோடிவந்து தொட்டிலைச்சூழ்ந்துகொண்டு, யாதுகாரணத்தால் அழுகிறதென்று பார்க்கையில், அத்தொட்டிலின் ஓர்புறத்தில், தேளிருக்கக்கண்டு, இத்தேளின் கொடுமையால் பிள்ளைக்கு உபத்திரவம்நேரிட்டதென்றறிந்தவர்களாய், சகிக்கமாட்டாமற்கதறுகின்ற அரும்புதல்வனது கோரத்தைக்கண்டயாவருங் கோவென்று வாய்விட்டலறுகையில், அவ்வோசையானது கொலுமண்டபத்திலநேக ராஜாக்கணெருங்கிப்பணிந்து நிற்கவும், நவமணிவெயிலெறிக்குஞ் சிங்காசனத்திலினிது வீற்றிருக்கும் அரசனதுசெவியிற்கேட்டளவில், திடுக்கிட்டு, அருகேயிருக்குமந்திரி முதலிய காரியர்களைநோக்கி, அந்தப்புரத்திலெழுந்த கூக்குரலினது காரணத்தை யின்னதென்றறிந்துவரும்படியாய் ஆஞ்ஞைசெய்ய, அவ்வாறேயவர்களந்தப் புரத்திற்கதிவேகமாய்ச்சென்று, விசாரணைசெய்கையில், சந்திரனென்னுங்குழந்தையைத் தேள்கொட்டியதாகச்சொல்ல, அதுகேட்டமந்திரிமுதலானோர் துன்பமடைந்து ஓடோடியும்வந்து, அரசனுக்குரைக்க, அரசன்கலங்கி; அங்குள்ள மணிமந்திரசித்திபெற்றவல்லவர்களையும் பூசுராள்முதலிய பெரியோர்களையு மழைத்துக்கொண்டு, அந்தப்புரஞ்சேர்ந்து, தொட்டிலிற்கதறுங்குழந்தையையுந் தன்மனைவியரும் தோழிப்பெண்களும் படுந்துயரத்தையுங்கண்டு சகிக்கலாற்றாதவனாய்த்தானுஞ் சலனமுற்றிருக்க, அதுகண்ட மணிமந்திரவல்லவர்கள் ஒவ்வொருவரும், தங்களுக்குத்தெரிந்த மூலிகைகளினாலும்மந்திர உச்சாடனங்களாலும்குழந்தையின் துன்பத்தைத்தணித்துவருகையில், வேந்தன் தன்னிடமிருக்கும் மறையவர்முதலான பெரியோர்களைப்பார்த்து, ஐயா நான் நூறுபெண்களைமணந்தும் நெடுநாட் பிள்ளையில்லாததைக்கண்டு பற்பலவிரதங்களை யநுட்டித்து ஸ்ரீ கயிலாசபதியினருளால் உண்டாகிய எனது அரும்புதல்வனுக்கு இப்படிப்பட்ட இடுக்கண்சம்பவித்தால், எவ்வாறுய

வேன், மேலும் எனக்கு விருத்தாப்யதிசையாதலாலும், வேறு பிள்ளையில்லாமையாலும், இவ்வொருகுழந்தைக்குயாதொரு தீங்கும்நேரிடாமற்கடவுள் அநுக்ரகிக்கப்படாதோ, பதகனாகியவென்மீது பரமசிவத்துக்குக் கருணையுண்டாக வில்லையே, அந்தோவென்று கவலையுற்றிருக்குங் காவலனைக்கண்ட பூவலராகிய பெரியோர்களும் பூசுரர்முதலிய பாவலர்களும், வாரும்வேந்தே, உமது இச்சையின்படி மணஞ்செய்த நூறு தேவிகளுக்குங் குழந்தைகளுண்டாகும்படியாயும் அவர்களுக்குயாதொரு தீங்குகளுறுகாதிருக்கும் படியாயும் எண்ணமிருந்தால், இவ்வுலகின்கண் தெட்சணபாகத்தில் ஸ்ரீராமமூர்த்தியால் கட்டப்பட்ட சேதுவிலோங்குங் கந்தமாதன பருவதச்சாரிலிலங்கும் அநுமகுண்டத்தைக்கண்டு தெரிசித்து அத்தீர்த்தத்தில் நீரும் உமதுதேவிமார்களும் நீராடி அதன்கரையில் புத்ரகாமேஷ்டியாகஞ்செய்துமுடித்தால், யாதுங் குறைவின்றிபுத்ரபாக்யமும்வேண்டியசம்பத்துகளுமுண்டாமென்றுகூற, அதுகேட்டதருமசகன் பிரம்மானந்தபரிதனாய், மிருகாதலோடும் பெரியோர்கூறியவண்ணம் தனதுகுழந்தை முதலியபேர்களையும், மந்திரிமுதலிய பேர்களையும், மறையோரும் வேதவாயினர்களையும், சேனை சயின்யங்களையுங்கூட்டித் தானும்ரதாருடனாய் பிரயாணப்பட்டு, தனது பட்டணத்தைவிடுத்துக், காடுமலைவனம் வனாந்தரங் காட்டாறு நதிகள்முதலியவைகளையுந் தலங்களையுங்கடந்து, சேதுவைச் சேர்ந்து, அவணோங்குங் கந்தமாதனபருவதச்சாரிலிற் அநுமகுண்டத்தைக் கண்டுதரிசித்து, அக்குண்டக்கரையில் தனது தேவிமார்களோடும் புத்திரன்முதலியபேர்களோடுமிறங்கி வேதவிதிப்படி யதிற்றீர்த்தமாடி, பின்பக்கரையில் புத்ரகாமேஷ்டி யாகஞ்செய்யவிரும்பிச், சித்திரைமாதத்தில் அநேகம் தேவப்பிரமணர் முன்னிலையில்யாகத்தை நியமப்படி நிறைவேற்றிப் பூரணாகுதிசெய்து, பிண்டசேடத்தைத்தனது நூறு தேவிமார்களுக்குங்கொடுத்து, அநுமகுண்டத்தை வலஞ்செ பின்புசாம்பசிவ மூர்த்தியையுந் தரிசனஞ்செய்து,

அவணின்றும் பிரயாணப்பட்டுத் தனதுபட்டணம் வந்துசேர்ந்து, இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருக்கும் நாளையில், யாகத்திற்பெரியோர்களாற் கொடுக்கப்பட்ட பிண்டத்தின் பெருமையால் அதேகர்ப்பமாகவிருந்து, பத்துத்திங்களும் பூரணமாய்முடிந்தபின், தருமசகன் தேவிமார்களாகிய நூறுஸ்த்ரீகளும் நூறுபிள்ளைகளைப்பெற்றார்கள், அதுகண்ட வேந்தன் மெத்தவுஞ்சந்தோஷமடைந்து அநேகம்பிராமணர்களுக்கும் பெரியோர்களுக்குங் கோதானபூதான கன்னிகாதானமுதலிய முப்பத்திரண்டுதருமங்களையுங் குறைவின்றிச் செய்து, தனதுபுத்திரர்களினுடைய பூரணசந்திரனைப்போன்ற முகாரவிந்தங்களைக்கண்டு, அடங்காக் காதல்கொண்டு, முதல்மனைவிக் கிரண்டுபுத்திரரும் மற்றவர்க் கொவ்வொரு புத்திரருமாக நூற்றொருகுழந்தைகளையும் நாளொருமேனியாய்வளர்த்து இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டு வருகிறபோது, பிள்ளைகள்மூன்றாம்பிறை போல்வளர்ந்து இராஜவர்க்கத்துக்குரிய சகலவித்தைகளிலும் வல்லவராய் உலாவிவருகையில், தருமசகன்கண்டு, பேரானந்தங்கொண்டு, அண்டையிலிருக்கும் நூற்றொருபிள்ளைகளுக்குந் தனது பண்டாரங்களையுந் தேசத்தையும் நூற்றொருபாகமாக்கிக் கொடுத்து, முதல்மனைவியின் முதற்பிள்ளையாகிய சந்திரனென்பவனுக்கு திவ்யமுகூர்த்தத்தில் முடிசூட்டிப் பட்டாபிஷேகஞ்செய்து, அவன்கையினாலநேக தானதருமங்கள்செய்வித்துப், பிள்ளைகளுக்குவேண்டிய நீதிவாக்கியங்களையுரைத்து, அன்னவரிடஞ் செலவுபெற்றுத்தானுந் தன்னுடையதேவிமார்கள் நூறுபேருமாய்ப் பிரயாணப்பட்டு, தெட்சணபாகத்தோங்குங் கந்தமாதனபருவதச்சாரலில், அருமகுண்டத்தைச்சேர்ந்து தரிசித்து, தீர்த்தமாடி, அத்தீர்த்தக்கரையில், ஸ்ரீ கயிலாசபதியாகிய பரமசிவத்தை யிதயகமலத்திலிருத்தி, தர்ப்பாசனத்திலிருந்து, சிலகாலந்தபசுசெய்து, பின்னர் வேந்தன், தேக வியோகமாக, அதுகண்ட அவனுடையதேவிமார்கள் நூறுபேரும் அரசனோடும் அக்கினிப்பிரவேசமாகியதைக் கேள்வி

யுற்ற சந்திரனென்பவன் தனதுதம்பிமார்களாகிய நூறுபேரோடும் மாதாபிதாக்களுக்குச் செய்யவேண்டியகிரியைகளைச் செய்துமுடித்து, அவர்களைவைகுண்டபதவிசேர்த்து, தனது மந்திரிமுதலியபேர்களோடுங் காரியர்களோடுங்கூடி மநுநீதி குறைவின்றி இராச்சியபரிபாலனஞ்செய்து கொண்டிருந்தானாதலால், அத்தன்மையாகிய மகிமைவாய்ந்த அருமகுண்டத்தின்பெருமையைச் சீர்தூக்கியாவராற் சொல்லிமுடியுமென்றுசொல்லியதைக்கேட்ட நைமிசாரண்யமுனிவர்கள், மெத்தவுஞ் சந்தோஷமடைந்து, சூதமுனிவரைப்பணிந்து, சுவாமி, தேவரீர் புன்மையோங்களாகிய வெங்களுக்கு இன்னமச்சேதுவிலுள்ள மகிமையைச்சொல்ல வேண்டுமென்று, பக்தியோடும் வினவியதைச் சூதமுனிவர்கேட்டுக், கருணைகூர்ந்து, ஓ முனிவர்களே, அகஸ்தியதீர்த்தமென்றோர் தீர்த்தமுண்டு, அதன்பெருமையைச் சொல்லுகிறோம், கேளுங்களென்று திருவாய்மலர்ந் தருளினார்.

அருமகுண்டச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

அகத்தியதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, பண்டோர்காலத்தில், ஜகதீசனது க்ருபாநோக்கத்தினாலுண்டாகிய இலவணம், இட்சு, சுரா, சற்பி, ததி, க்ஷீரம், சுத்தோதகமென்று சொல்லப்பட்ட எழுகடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் வயங்கும் பருவதங்களில் விந்தியகிரியென்னும் மலையானது ஸ்ரீ சந்திரஜடாதரமூர்த்தியினது வாமபாகத்திலொளிரும் உமாமகேஸ்வரிக்குத் தாயகமாகிய இமாசலத்துக்கொப்பாக வேண்டுமெனக்கருதி, ஆகாயமளாவியுயர்ந்து வட்டமிட்டுப்பரவிப் பூரித்து, தாபராதிமுதலிய வைகளுக்கும் விலங்கினங்களுக்குஞ் ஜீவர்களுக்கு மிடுக்கணைக்காட்டி, இறுமாப்புக்கொண்டிருக்குந்தன்மையை நீலகண்ட மூர்த்தியாகிய

பரம்பரனிருந்திருக்கும் பருவதராஜகுமாரியை மணஞ்செய்யவேண்டித்தம்முடன் ஸ்ரீ கயிலாச கிரியிலெழுந்தருளியிருக்கும் இரண்டாஞ்சங்கரனாகிய நந்திதேவர் பிருங்கிநாரதர் சப்தரிஷிகளாதி சிவகணங்களோடும் தேவேந்திராதி முப்பத்து முக்கோடிதேவர்களு நம்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கருடகாந்தர்வ சித்தவித்யாதரருத்ர காஷ்டவசுக்களோடும் விருஷப வாகனாரூடராய் பிரயாணப்பட்டுக் கயிலையினின்றும் வருகிறபோது, பரமேசுவரன் அகஸ்தியனைநினைந்து வருவித்து, அன்னவனைநோக்கி, வாருமகஸ்தியரே, இப்பூமியின்கண் விந்தியகிரியானது மேருவுக்கு நிகராகவேண்டுமெனக் கருதி வளர்ந்து ஜீவர்கள்முதலியயாவுக்கும் இடுக்கணைக் கொடுத்து கெர்வித்திருக்கின்றமையால் நீர்போய் அதனை கெர்வபங்கப்படுத்தி வரக்கடவீரென்றுதிருவாய்மலர்ந்தருள, அதுகேட்ட அகஸ்தியமுனிவர் சங்கரனைப்பணிந்து, சுவாமி, சடையனே தேவரீருடைய திருமணக்கோலத்தைக்கண்டு தரிசிக்க அநியாவரோடுங்கூடிவந்தவெனக்கு இவ்வாறு ஆஞ்ஞைதந்தது எளியேன் வினைப்பகுதியென்று துன்புறுகின்றேன், என் செய்வேனென்று வியாகுலத்தோடுஞ்சொல்ல, அதுகேட்ட சோமசுந்தரக்கடவுள் இரக்கமுற்று, ஓய் அகஸ்தியமுனிவரே, நீர் நம்முடைய மணக்கோலத்தைப் பார்வதியுடனே வேதாரண்ய மென்னுந்தலத்தில் தரிசிக்கலாமாதலால் நீர் போமென்றுகூற, அவ்வுரையைச் சிரமேற்கொண்ட அகஸ்தியர் பிரயாணப்பட்டு, ஆகாயத்திற்கும் பூமிக்குமொன்றாய் வளர்ந்து இறுமாப்புக் கொண்டிருக்கும் விந்தியகிரியின் சிகரத்தில் தனது கரத்தைவைத்தமாத்திரத்தில், அப்பருவதமானது நெறுநெறவென்றுநெறிந்து பூமியிற்றாழ்ந்து பூமியோடு பூமியாய்ப் போய்விட்டமையாலது கண்டவகஸ்தியர் சந்தோஷத்தையடைந்து, அவணின்றுப்நீங்கித் தென்றிசையை நோக்கிப் பிரயாணப்பட்டு சேதுவைச்சார்ந்த கந்தமாதன பருவதத்தைச்சேர்ந்து, அதன்மகிமையையுஞ் சேதுவினது மகிமையையுங்கண்டு, ஆனந்தங்கொண்டு, இங்ஙனம்நம்முடைய

பெயரால் ஓர் தடாகமுண்டுபண்ண வேண்டுமெனக்கருதி, அதுபோலோர்தடாகமுண்டுசெய்து, அத்தடாகக்கரையிற்றான் சிறிதுகாலந்தவஞ்செய்து கொண்டிருந்து அதிற்றீர்த்தமாடி, அதற்கநேகவரங்களைக்கொடுத்து, பின்பு பொதிகை மாமலையை நோக்கிச்சென்றார்.

கேளுங்கள் நைமிசாரண்ய முனிவர்களே, மகா தபோதனராகிய அகஸ்தியமுனிவரால் நியமிக்கப்பட்ட அத்தடாகத்திற்கு அன்றுமுதல் அகஸ்திய தீர்த்தமென்று பெயர்விளங்கிக் கொண்டிருக்கும். அத்தீர்த்தமானது அநேககோடிபாதகங்களைப் போக்குவதோடும், செல்வம், கல்வி, அழகு, ஆண்மை, பிள்ளைப்பேறு முதலிய இஷ்டகாமியங்களையும் மோக்ஷகாமியங்களையும் நினைத்து அதில்தீர்த்தமாடுபவர்களுக்கு அவரவர்களெண்ணப்படி யளித்துவரும்; அது எப்படியென்றால், வேதாரண்ய மென்னுந்தலத்தில் வசிக்கும் வேதவாயினராகிய மறையவருள், தீர்க்கதருமனென்றொருபிராமணனுண்டு, அப்பிராமணனுக்கு சுதரனென்னுமோர் புத்திரன் பிறந்து வளர்ந்துவருகையில், அப்புத்திரனுக்கு சவுள உபநயனமுதலியகருமங்களை விதிப்படிமுடித்துப் பிரமசரியத்திலே நின்றும் வழுவின்றி வேதபாராயணஞ் செய்துவருகையில் இன்னஞ்சாத்திரங்களை யறியவேண்டுமென்னும் விருப்பங்கொண்டு, உதங்கமாரிஷியிடஞ்சென்று அவரதுபாதபத்மங்களிற்பணிந்து, தனதுகருத்தைப் புலப்படுத்தி, அம்முனிவரது கருணையைப்பெற்று நான்குவேதமாறுசாஸ்திரம் பதினெண் புராணமுதலிய சாஸ்திரங்களனைத்தும் அறுபது வருடம் வரையிலிருந்து அன்னவரிடமோதியுணர்ந்து தெளிந்தவராய், பின்பு தன்னாற்கூடிய பதார்த்தங்களைக் காணிக்கையாக வைத்துப்பணிந்து, சுவாமி, அடியேன் இதுவரையினுந் தேவரீரது பாதபத்மங்களுக்கற்பிதமாகும் பணிசெய்து செப்பற்கரிய வாகமவேதபுராணங்களை புணர்ந்தேன், இனி, தங்களுடைய அநுக்கிரகத்தினால் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டில்லற தர்மத்திலிருக்கவேண்டுமென்று அபேட்சையிருக்

கின்றபடியால் அருள்செய்யவேண்டுமென்று பணிந்துநின்ற மாணவகனை உதங்கமாமுனிவர்கண்டு சந்தோஷங்கொண்டு கூறுவார், வாராய் பேரனென்னுமன்பனே, உன்னுடைய மனதின்படியே இல்லறத்திலிருக்கவேண்டுமாயின் உனக்குக் கலியாணஞ்செய்து கொள்ளுவதற்கு ஓர் வகைசொல்லுகின்றேம், அதுயாதெனில், ஸ்ரீராமமூர்த்தியாற் கட்டப்பட்டசேதுவிற் கந்தமாதனகிரிச்சாரிபில் உமாமகேசனது நுதல்விழியினின்றுமெழுந்த சண்முகக்கடவுளுக் கன்பராகியும் மகாதபோதனராகியு மிலங்கும் அகஸ்தியமாமுனிவரால் உண்டாக்கப்பட்டு அகஸ்தியதீர்த்தமென்று விளங்குமோர்தீர்த்த மிருக்கின்றது, அத்தீர்த்தம் இஷ்டகாமியங்களையும் மோக்ஷகாமியங்களையுங் கைகூட்டிவைக்குமாதலால் நீ அத்தீர்த்தத்துக்குப்போய் சங்கற்பவிதியின்படி திரிகாலமும் ஸ்நானஞ்செய்து வணங்கி, மூன்றுவருடம்வரையில் வருவாயாயில் முடிவிலத்தடாகத்தினின்றும் தேவராஜனுடைய அயிராவதமென்னும் வெள்ளையானையானது எழுந்து மகாபராக்கிரமத்தோடும் உன்னெதிரிற்பாய்வதுபோல் வருவதைக்கண்டும் நீபயப்படாமல் நிற்பாயேல் பின்னர் அந்தயானையானது உன்னைப்பணிந்து தலைகுனியும், அக்காலையிலதன் துதிக்கையைப்பற்றிக் காலேவழியாயேறி மத்தகத்தின்மீது தேவேந்திரனைப்போல் உட்கார்ந்து ஆனையைநடத்தினால் அப்போது மதுராபுரிக்கிறைவனான சுவாயனென்னும்வேந்தன் வேட்டையாடும் பொருட்டுக் கந்தமாதனகிரிச் சாரலில்வருபவன் உன்னைக்கண்டு வந்தனை வழிபாடு டனழைத்துக்கொண்டுபோய் தனதுகுமாரத்தியை உனக்குமணஞ்செய்து வைப்பானாதலாற் சுகஜீவியாய்ப்போய் வரக்கடவையென்று விடை கொடுத்ததைக்கேட்ட பேரன், முனிவரைப்பணிந்து, சுவாமி, தேவரீர்திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் அடியேன் அகஸ்தியதீர்த்தத்தினின்று வெளிப்படும் வெள்ளையானையின்மீதேறிச் செல்லுகையில் கந்தமாதனகிரிச்சாரலில் வேட்டையாடவரும்வேந்தன் தனது குமாரத்தியை எனக்குவிவாகம் பண்ணிக்கொடுக்குங் காரணத்தை

இன்னதெனத் தமியேனுக்கருள் செய்யவேண்டுமென்றுகேட்க, அதற்கு உதங்கமாமுனிவர் சீடனைப்பார்த்து, வாராய் பேரனே, அவ்வேந்தன் புதல்வியாகிய புண்யவதியென்பவள்தான் பிரவிடையாவதற்குமுன்னமே இவ்வுலகின்கண் ஆடகலோகத்துக் கிறைவனாகிய தேவராஜனைப்போல் யாரொருவர் வெள்ளையானையின்மீது ஏறிவருகின்றார்களோ அன்னவர்களையான் மணம்புரிவனேயன்றி யிதரர்களைக்கனவிலு நினையேனென்று பிரதிக்கினை செய்திருந்தவண்ணம் எவ்வாறு முடியுமென்று அவள்தந்தை பெருந்துன்பத்தோடும் புதல்விக்குச்சுயம்வரம் நாட்டாமலுங் கலியாணமுஞ்செய்யாமலும் இத்தொல்லை யெப்போது நிவர்த்தியாகுமோவென்று எதிர்பார்த்திருக்கையில், நாரதமகாமுனிவர் ஓர்நாள் அவ்வேந்தனிடஞ் செல்ல, அன்னவர் வரவுகண்டவேந்தன் சிங்காசனத்தை விட்டெழுந்து எதிர்சென்று முனிவரைப்பணிந்து, சோடசோபசாரத்தோடுமழைத்துக்கொண்டுபோய், நவரத்தினகசிதமாகிய சிங்காசனத்திலெழுந்தருளச்செய்து, க்ஷேமலாபங்களைப்பேசிக்கொண்டிருக்கையில், அரசன் தனதுகுமாரத்தி செய்திருக்கும் பிரதிக்கினையை நாரதருக்குரைக்க, அதுகேட்ட நாரதமகாமுனிவர், ஞானதிருஷ்டியினாற்பார்த்து, வாராய்வேந்தே, உனது புதல்வியாகிய புண்யவதியென்பவள் கருத்தின்படி கலியாணம் நடக்கவேண்டியதாய் பிரமகற்பனையிருப்பதால் அப்பெண்ணின் வாக்கிலவ்வாறுதித்தது, அதுபோலவே வெள்ளை யானையின்மீதேறிக்கொண்டு பேரனென்றொருபுருடன் வருவான், அவனை நீ கண்டு அழைத்துவந்து பாணிக்கிரகணஞ்செய்து கொடுக்கக்கடவாயென்றுகூறி, நாரதமகாமுனிவர் தெய்வலோகஞ்சென்றபின், வேந்தனுந்தனது கவலையொழிந்து எதிர்பார்த்திருப்பதால் நான்சொல்லியபடி நீ கந்தமாதனகிரிச்சாரலிருக்கு மகஸ்தியதீர்த்தக்கரையில் மூன்று வருடம் வரையிற்காத்திருந்தால் கைவல்யமாகும், போய்வாவென்று உத்தரந்தந்த உதங்கமகாரிஷியைப்பணிந்து, விடைபெற்றுக்கொண்டு, மகாசந்தோஷத்தோடும் பேரனென்பவன்

அவனின்றும் பிரயாணப்பட்டு, கந்தமாதன பருவதச்சாரலி லோங்கும் அகஸ்தியதீர்த்தத்தைக்கண்டுதரிசித்து, அத்தீர்த்தத்தில் திரிகாலங்களிலும் ஸ்நாநஞ்செய்தும் ஜபதபங்களை யநுஷ்டித்தும் மூன்றுவருடகாலம் வரையிற்காத்திருந்து அத்தீர்த்தத்தினின்றெழுந்த வெள்ளையானையின்மீது ஏறிநடத்துகையில், மதுராபுரிக்கிறைவனாகிய சுவாயனென்னும் வேந்தன்கண்டு திடுக்கிட்டு, அப்பால்தெளிந்து, நமக்குநாரதமகா முனிவர்சொன்னவாக்கியப்படி அமைந்தமையால் நமதுபுதல்வியினது சபதமும் இன்றுநிறைவேறிவிட்டதெனக்கருதிச் சந்தோஷங்கொண்டு, அயிராவதத்தின் முன்பாகவந்து அதின்மீதாரோகணித்துக் கொண்டிருக்கும் புண்ணியவடிவமாகிய வேதியனைக்கண்டு, வாரும்பிராமணா, நீரெங்கேபோகின்றீர், உமக்கு இந்தவெள்ளையானையேது, சொல்லுமென்று கேட்க, அப்போது தீபரன்சொல்லுவான், ஓ வேந்தே, யான் உதங்கமாமுனிவருடையசீடன், என்பெயர் தீபரனென்று சொல்லுவார்களாதலால் என்னைப்பயந்த தாதையாகிய தீர்க்கதருமனென்பவரிடத்திருந்தும் விடைபெற்று முனிவனாயித்திருந்த செய்திகளையெல்லாம் ஆதியோடந்தமாய் வேந்தனுக்குரைக்க, அதுகேட்டவேந்தன், புளகமுற்று, வாரும் பிரமகுலோத்துங்கரே, இதுமுதல் நாமுமக்கு மாமனாகவும் நீர் நமக்கு மருகராகவுமிருக்கவேண்டும். என்னுடைய குமாரத்தியை உமக்குப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுக்கிறேனாதலால் இதுவரையினும் பிரமசாரியாயிருந்தீர், இனிமேலெனது கருத்தின்படி மணஞ்செய்துகொண்டு இல்லறதர்மத்தில் வழுவின்றி சுகசந்தோஷத்தை யநுபவித்துக்கொண்டிருமென்று அநேகவுபசாரவார்த்தைகளைச்சொல்ல, அதுகேட்ட தீபரனுஞ்சந்தோஷமடைந்து, அயிராவதத்தை விட்டுக் கீழிறங்கி, அதற்குமகாபக்தி விநயத்தோடு அநேகவுபசாரங்கள்செய்து, ஓ அயிராவதமே, எனக்குக்கலியாணமாகுமளவும் நீயுஞ்சத்தடியாக விருந்துபோக வேண்டுமென்றுசொல்ல, அதுபோலவேயானையும் சம்மதித்துநின்றுவிட்

டது, அதின்பேரில் சுவாயனென்னும்வேந்தனும் தீபரனும் மற்றமந்திரி பிரதானிகளுமொருங்குசேர்ந்து ஆலோசனை செய்து, இந்தக்கந்தமாதனபருவதத்திற்றானே கலியாணஞ்செய்யவேண்டுமென்று தீர்மானித்து, தீபரனுடைய தாய்தந்தை முதலியவர்களை வேதாரண்யத்தினின்றும் வருவிக்கும்பொருட்டுத் திருமுகமெழுதி, சுதரிசனனென்கிற ஓர் பிராமணனிடத்திற் கொடுத்தனுப்ப, அவனும்வேந்தனிடத்தில் விடைபெற்றுக் காடுமலைவனம் வனாந்தரமியாவுங்கடந்து வேதாரண்யத்தைச்சேர்ந்து, தீர்த்தகருமனைக்கண்டு,திருமுகத்தைக் கொடுத்து நடந்தசவிஸ்தாரங்களை யெல்லாமறிவிக்க, அதுகேட்ட தீர்த்தகருமனுஞ் சந்தோஷத்தையடைந்து, பிராமணனைப்பார்த்து, சுவாமி, உம்மைக்கண்டு வெகுநாளாயின்றமையாற் பார்க்கும்படி மிகவபேட்சைகொண்டிருந்த வெனக்கு உமது தரிசனங்கிடைத்தது யான்செய்த பூஜாபலமெனக் கருதுகின்றேனாதலால், உமதுசேஷமலாபங்க ளென்னவென்று வினவ, அதற்கு சுதரிசனன், தேவரீருடைய ஆசீர்வாதத்தினால் யாதுங்குறைவின்றி உமதுசம்பந்தியாகிய சுவாயவேந்தனரண்மனைப் புரோகிதனாகவிருக்கிறேனென்ன, தீர்க்கதருமன்கேட்டுச் சந்தோஷமடைந்து, தனதுகுமாரன் கலியாணத்துக்காகவேண்டிய சாமக்கிரிகளைச் சேகரஞ்செய்துகொண்டு வேதாரண்யத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு, அதிதீவிரமாய்க் கந்தமாதனபருவதச்சாரலில் சுவாயவேந்தனுலமைத்திருக்கும் விடுதியில்வந்துசேர்ந்தார்கள், இவ்விதமாய் வந்த தந்தையைக்கண்ட தீபரன் நனிகாதலோடும் பிதாவின் பாதகமலங்களிலும் அன்னையினது பாதகமலங்களிலும்பணிந்து, பக்திவிநயத்தோடிருக்கிறவையில், தீர்த்தகருமன் புதல்வனது முகாரவிந்தத்தைக் கண்குளிரக்கண்டு, ஆனந்தங்கொண்டு, அடாசுதனே, பண்டு நீ எங்களைவிடுத்துவந்த பின்னர் நடந்தசங்கதியாதென்றுகேட்க, தீபரன் தான் ஊரைவிட்டு நீங்கியபின் நடந்தவையாவுமாதியோடந்தமாய்ச் சொல்லிநிற்கத், தாதையானவன், தனதுகுமாரன் கற்றுணர்ந்தவேதாகம

ங்களுக்குப் பேரானந்தங்கொண்டவனாய், மகனைக்கட்டியணைத்து முத்தமிட்டு சந்தோஷித்திருக்கையில், அவன் சுவசுரனென்னும் வேந்தன்வந்து தீர்த்தகருமனைக்கண்டு, நமஸ்கரித்து, அன்னவரிடமாசிபெற்று; பின்னரவர்களுடையக்ஷேமலாபங்களை யெல்லாம்விசாரித்து, மீபானுடைய குருவாகிய உதங்கமாமுனி முதலியபெரியோர்களையெல்லாம் வருவிக்கும் பொருட்டுத் திருமுகமனுப்ப, அதுபோலவரும் பிரயாணப்பட்டுத் தனதுசீடர்களுடனுஞ் சில பெரியோர்களுடனுஞ் சேதுவில்விளங்குந் தநுக்கோடியில் தீர்த்தமாடக் கருதிச்சங்கற்பவிதிப்படி சக்கரதீர்த்தமுதன்மற்ற தீர்த்தங்களெல்லாமாடி, பின் அகஸ்தியதீர்த்தத்திலே தீர்த்தமாடவேண்டுமென்று வருகையில், மீபானனவன் தனதுகுருவாகிய உதங்கமாமுனிவர் வரவுகண்டு, தாயைக்கண்டசேய்போற் சந்தோஷத்தோடுமெழுந்தெதிர்கொண்டோடி, அவருடைய பாதகமலங்களில் அஷ்டாங்க பஞ்சாங்க நியாயங்களாய்ப்பணிந்தெழுந்து, இரு கரங்களையுஞ் சிரத்தின்மேற்கூப்பி, அனந்தவிதங்களாற் ஸ்தோத்திரஞ்செய்து நிற்பதுகண்ட தீர்த்தகருமன்முதலிய வேந்தன் மந்திரி பிரதானிகளியாவருந் திகைத்தெழுந்து திரிகரண சுத்தியோடும் உதங்கமாமுனிவரைப்பணிந்து நிற்கையில், அதுகண்ட உதங்கர்யாவருக்கு மாசிகூறி யிருக்கச்செய்து, க்ஷேமலாபங்களைவிசாரித்து, பின்னடக்கவேண்டிய காரியங்களுக்கு எத்தனஞ்செய்வீர்களென்றுசொல்ல, அதுபோல் வேந்தனும் வேவுக்காரரைவருவித்து, அவர்களுக்கு வேண்டிய பரிசுகொடுத்து, மதுராபுரிக்குப்போய் தனதுகுமாரத்தியாகிய புண்யவதிமுதலியபெண்களை யெல்லாமழைத்து வரும்படியாய்த் திருமுகமுங்கொடுத்தனுப்ப, அதைப்பெற்றவேவுகர் கந்தமாதன பருவதத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு காடுமலைவனம் வனாந்தரங்களை யெல்லாங்காற்றினுமதி வேகமாய்ச்சென்று கடந்தவராய், மதுராபுரியைச்சேர்ந்து, இராஜ னரண்மனையிலந்தப் புரத்திலிருக்கும் இராஜபத்தினி முதலிய பெண்களுக்குத் தங்கள்வரவையறிவித்து; திருமுகத்தையுங்

கொடுக்க, அத்திருமுகத்தைவாசித்த இராஜபத்தினிகள் சந்தோஷமடைந்து, குமாரத்தியாகிய புண்யவதியினது பெருமையைக் கொண்டாடி, யாவரும்பிரயாணசித்தமாய், அளவிறந்தமுத்துச் சிவிகைகளினும் இரதங்களினு மேறிச்சர்வாடம்பரத்தோடும் பிரயாணப்பட்டு, அதிவிரைவோடுங் கந்தமாதன பருவதச்சாரலில் வந்திறங்கினார்கள். அதுகண்டவேந்தன்முதலியயாவருஞ் சந்தோஷமடைந்து; உடனே இமையாநாட்டுக்கிறைவனாகிய இந்திரன் வாழுங்கொலு மண்டபமும் இதற்கிணையோவென்று சொல்லத்தக்கதாய் வதுவை மண்டபஞ்சோடித்து, மகரதோரணங்கள்கட்டி, எங்குங்கொடிகள்நாட்டிப்பூரணகும்பங்களிறுத்தி, வாழை கமுகு பலா கூந்தற்பனை முதலிய சோலைகளை யுங்கட்டிச்சாருசாரமாய் முத்துக்குஞ் சங்களைத்தூக்கி, நவமணிவெயிலெறிக்கு மாசனங்களையணிபணியாய்ப்பரப்பி, எங்குஞ்சுகந்தமுலாவும் பனிநீர்களைத் தெளித்து, நல்லசுபமுகூர்த்தத்தில் மீபானுக்குமஞ்சன மாட்டி ஆடையாபரணங்களைப் பூட்டிச்சிங்காரஞ்செய்து, அதுபோலிராஜகுமாரத்தியையு மலங்கிருதஞ்செய்து, இருவரையு மணவறைப்பந்தலிலே அநேகமேளவாத்தியங்கள் முழங்கத் தோழிப்பெண்கள்புடை சூழ்ந்துசவரிவீசும்படியாயழைத்து வந்து, நவரத்தின பீடத்தினமீதுட்காரவைத்தார்கள், அதுகண்ட உதங்கமாமுனிவர் மிகுகளிப்போடும் வேதாகமங்களுணர்ந்த பெரியோர்களுடனே கலியாணச்சடங்கின்விதிமுறை வழுவாதுசெய்து, விநாயகமூர்த்தியை ஆவாகனப்படுத்தி, தாபதிபகிவேசனங்காட்டி, அயிராவதத்தைவருவித்து, அதற்குப்பூசைமுடித்துக்கீபானையதன்மீதாரோகணிக்கச்செய்து, பேரி, பூரி, தாரை, தவண்டை, மல்லரி, குடமுழா, கொம்பு, காளம், எக்காளம், சின்னங்களென்று முப்பத்திரண்டு வாத்தியங்களையும் பேரொலியோடு முழங்கச்செய்து; மீபானை மணக்கோலங்காட்டி, பந்தரிற்சேர்ந்து, வெள்ளையானையை விட்டிறங்கி நமஸ்கரித்து, மணவறையிலுட்கார்ந்தபின், வேதவாயினர்களாகிய பெரியோர்களால் ஓமகுண்டமூண்டு

பண்ணி, அதில் ஓமச்சமித்துகளாலே யக்கினிவளர்ப்பித்து, விதிப்படிநடத்தி வேந்தனுந்தனது குமாரத்தியை கீபரனுக்கு தாரைவார்த்துக் கொடுக்கும்படிசொல்ல, அதுபோல் ஆகாயவாணி பூமிதேவி அக்கினிசாட்சியாகவுந் தேவப்பிராமணாள் முன்னிலையில வேதபாராயணத்துடனே தாரைவார்த்துக் கொடுக்கும்போது, பூசுரான்முதலியபெரியோர்களி யாவரும் ஆசிகூற அட்சதையிறைக்கவுந் தேவதுந்துமி முழங்கவும் புண்யவதிக்கு கீபரனல் திருமங்கல்யதாரணஞ்செய்துவைத்து, அதன்பேரிற் செய்யவேண்டிய சடங்குகளியாவுங்குறைவின்றிநடத்திப், பின்னர்மங்கலவாழ்த்துமுதலியவுஞ்செய்து கலியாணமண்டபத்தினின்றும் இருவரையும்வேறே மண்டபத்திலிருக்கச்செய்து, பால்பழங்கொடுத்து, அதன்பேரில் திருமணத்திற்குவந்திருந்த உதங்கமுனிவராதி பெரியோர்கள் யாவருக்கும் முப்பழச்சற்கரையோடும் சட்சுவைப் பதார்த்தங்களோடும்விருந் தமுதுண்ணச்செய்து, பின்பு சந்தனபுட்ப தாம்பூலாதிகள்கொடுத்து, இவ்வாறு ஐந்துநாள் வரையிலு சடங்குகளியாவுஞ்செய்து, பின்னர் முனிவராதி பெரியோர்களுக்கும் பிராம்மணாளுக்கும்வேண்டிய மரியாதைகள் செய்து, அவரவர்களிருப்பிடம் போகும்படியாய் விடைகொடுத்து நமஸ்கரித்து நிற்கையில்,குருவாகியஉதங்கமாமுனிவர் தம்பதிகளை யாசீர்வதித்து, தனது சீடர்களுடனே இராஜனிடத்திலும் கீபரன்முதலிய யாவரிடத்தும் விடைபெற்று சேதுவிற்றீர்த்தமாடித்தமது ஆசிரமத்துக் கெழுந்தருளினார்கள், அதன்பேரில் தீர்த்தகருமன் தனதுகுமாரனை வேதாரண்யத்துக்கழைத்துக்கொண்டு போகக்கருதி வேந்தனிடத்திற்கூற, வேந்தன் சந்தோஷமடைந்து தன்மகளுக்குச்சீதனமாக இரதகஜதுரகபதாதிகளும் ஆடையாபரணங்களுந் தோழிப்பெண்களுங் கோடிபசும்பொன்னுங் கொடுத்ததுமன்றியில், அநேகபசுநிரைகளையும் ஏவலாளிகளையுங்கொடுத்து, சுகஜீவிகளாய்ப்போய் வரும்படிவிடைதர, அப்போது கீபரனுமவன் தேவியும் இராஜனையுந் தனதுதாயையும்பணிந்து, அவர்களா

லாசிபெற்று, இரதகஜ துரகபதாதிகளோடும் வேதாரண்யம் வந்துசேர்ந்தார்கள், அதன்பேரில் சுவாயனென்னும் வேந்தன் தனதுதேவிமார்களோடும் மந்திரிபிரதானிமுதலிய இரதகஜ துரகபதாதிகளோடும் பிரயாணப்பட்டு, மதுராபுரியைச் சேர்ந்து, இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தான். கேட்டீர்களோ முனிவர்களே, இப்படியாகவந்த அகஸ்தியதீர்த்தமானது அநேகமகிமையோடுங்கூடி இஷ்டகாமியமோக்ஷகாமியங்களையெல்லாமவரவர்களெண்ணப்படிநிறைவேற்றிக்கொண்டிருப்பதால் அத்தீர்த்தத்திலேமூழ்கிய புண்ணிய புருஷர்களுக்கு மூன்றுவருடத்தில் நினைத்தகாரியங்கள் கைகூடுமென்று சொல்ல, அதுகேட்ட நைமிசாரண்யவாசிகளாகியமுனிவர்கள் சந்தோஷமடைந்து, சூதமுனிவரைப்பார்த்து, சுவாமி, தேவரீர் திருவாய்மலர்ந்தருளிவருங் கந்தமாதனத்தின் பெருமையைக்கேட்கக் கேட்கப் புன்மையோங்களது செவியாகிய வாயினிடத்து தேவாமிர்த்தத்தை யருந்துவதுபோற் சுகாநந்தத்தைத் தருகின்றமையால் இன்னுமப்பருவதத்திலுள்ள தீர்த்தங்களின்பெருமையை எளியோங்களுய்யும்படி கருணை சுரக்கவேண்டுமென்றுபணிந்த முனிவரைப்பார்த்து, ஓ முனிவர்களே, அக்கந்தமாதனச்சாரலில் இராமதீர்த்தமென்றோர் தீர்த்தமுண்டு, அதன்மகிமையைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்.

அகஸ்தியதீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

இராமதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, தசரதகுமாரனாகிய ஸ்ரீராமமூர்த்தியு மிலக்குமணனும் அநுமன் சுக்ரீபன்முதலிய வானரவீரர்களுங்கூடி, இராவணகும்பகர்ணனோடு மளவிறந்த இராக்கசேனைகளை வதஞ்செய்து, இலங்கையை விபீஷணனுக்குப்பட்டங்கட்டி, சீதாபிராட்டி

யை மீட்டுக்கொண்டு, புட்பகவிமானத்தேறிவருகையில் இ
ராமமூர்த்தியை பிரம்மஹத்தி தோஷமணுக, அதனை நிவர்த்தி
செய்யவேண்டி, கந்தமாதனபருவதத்திற் சிவலிங்கபிரதிஷ்
டைசெய்து பூசைமுடித்துச் சாம்பசிவமூர்த்தியா லநேகவரப்
பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு, அயோத்தியா பட்டணத்
துக் கெழுந்தருளுகிறபோது, தன்பெயரால் இக்கந்தமாதன
பருவதத்தில் ஓர் தீர்த்தமுண்டுசெய்ய வேண்டுமெனக்கருதி,
அவ்வாறேயேற்படுத்தி, அநிற்ருனும்தம்பிமுதலிய வானர
வீரர்களுந் தீர்த்தமாடி, அத்தடாகத்துக்கு அநேகவரங்களைக்
கொடுத்து இராமதீர்த்தமென்று பெயர்கொடுத்து அயோத்தி
யாபுரிக்கெழுந்தருள, அதுமுதலக் தீர்த்தத்திலே நீராடிய
புண்ணிய புருஷர்களுக்கு நான்குவேதம் ஆறுசாஸ்திரம் பதி
னெண்புராண கலைகளியாவுஞ் சம்பூரணமாய்ப் பலிதமாவ
தோடுஞ் சரிதைகிரியை யோகஞானமென்னு நான்குநிலையுங்
கிடைக்குமென்பதற்கு யாதொருசந்தேகமுமில்லை, அதெப்
படியெனில், வேதகுலத்திலுற்பவித்த சுதீக்கணனென்றொரு
பிராமணன் எப்போதும் ஸ்ரீ வைகுண்டவாசராகிய ஸ்ரீ மந்
நாராயணமூர்த்தியைத்தனது இதயகமலத்திலிருத்தி தோத்தி
ரஞ்செய்து, கிரியையின்விதிப்படி பூசித்தும், யோகசாதனங்
கள்செய்தும், மகாவிஷ்ணுவினசொரூபத்தை தெரிசிக்கவே
ண்டுமென்று மபேட்சையோடும் பிரயாணப்பட்டு, கந்தமா
தன கிரிச்சாரலிலேவிளங்கும் இராமதீர்த்தத்தில் தீர்த்தமா
டி, அத்தடாகக்கரையிலேயிருந்து, இராமமந்திரத்தை இடை
விடாமற் ஜெபித்துக்கொண்டும் அத்தடாகத்தில் தீர்த்தமாடி
க்கொண்டும் நியமத்தோடு மிருக்குங்காலையில், அம்மறையவ
னுக்கு குருவினுடைய உபதேசமில்லாமல் தனக்குத்தானே
தன்னுடைய உபதேசமில்லாமல் தனக்குத்தானேதன்னுடை
அறிவை குருவாகப்பாவனைசெய்து ஸ்ரீ ராமனுடைய கிருபா
கடாக்ஷத்தினலே பிரம்மானந்த சொரூபத்தையடைந்து,வே
தாகமங்களெவற்றினுந்தேர்ந்து, ஞானஞாதுரு ஞேயங்க
ளையுங் குருவில்லாமலறிந்து, சடத்தோடுந் தேவலோகத்துக்

குப்போய் வரச்சித்திகளைப்பெற்று தேவர்களோடொப்பாய்
பிரம்மலோகம் விஷ்ணுலோகம்கயிலாசம் என்னு மிடங்களு
க்குச்சென்று, அங்குளமகிமைகளையெல்லாமறிந்து, அதனோ
டும், அணிமா, இலகிமா,கரிமா, முதலிய அஷ்டமாசித்திகளி
னுந்தேர்ந்து, பிரம்மானந்தத்தையடைந்து, பூலோகத்துக்கு
வந்து, காசிபட்டணத்தைநோக்கிப் போய்விட்டான். கேளு
ங்கள் முநிவர்களே, அம்மறையவன் கற்றுணராதவனுக விரு
ந்தும் அந்தராமதீர்த்தத்தில் தீர்த்தமாடிய பெருமையால்
அணிமாவாதி அஷ்டசித்திகளும் அஷ்டாங்கயோகமும் பெ
ற்று சச்சிதானந்த சொரூபத்தையடைந்து பேரின்பவாழ்வி
லே சுதீக்கணனென்னும் பிராம்மணோத்தமன் வாழ்ந்துகொ
ண்டிருந்தானுதலால், அவ்வண்ணமேன்மையான புகழையும்
புண்ணியத்தையு முடைத்தாயிருப்பதோடும், பாபவிமோச
னஞ் செய்யத்தக்கதாகவும் பாதாளலோகத்தையளாவி இஷ்ட
காமியமோட்சகாமியங்களையுந்தரத்தக்கதாய் ஸ்ரீராமனுடைய
பாதாரவிந்தத்தின் மகிமைகளைக் கொடுக்கப்பட்டதாய் விள
ங்கு மத்தடாகத்தினிடமாக ஸ்ரீராமன் சீதாசமேதனாய் எப்
போதும் வாசம்பண்ணிக்கொண்டிருப்பதோடு மத்தடாகத்
திற் குந்திமக்களாகிய பாண்டவர்களைவரில் தருமபுத்திரனுக்
குண்டான பாபமானது இத்தடாகத்தில்வந்து தீர்த்தமாடி
ஸ்ரீராமமூர்த்தியாற் பிரதிஷ்டைசெய்து வணங்கப்பட்ட இலி
ங்கமாகிய இராமநாதனைதெரிசித்துவணங்கித் தன்னுடைய
பாவங்களைப்பறக்கவடித்து, பிரம்மானந்தத்தோடும் அஸ்தின
புரம் போய்ச்சேர்ந்து, இராஜரீகம்பண்ணிக் கொண்டிருந்தா
னென்று சூதமகாமுநிவர் சொல்லியதைக்கேட்ட நைமிசா
ரண்யர் சந்தோஷமடைந்து, முநிவரைப்பணிந்து, சுவாமி,
பாண்டவர்களிலொருவராகிய தருமபுத்திரருக்குப்பாபம்வந்த
காரணத்தையும் அன்னவர்க்கு சம்பவித்தபாபந் தீரும்பொரு
ட்டு இராமதீர்த்தத்தில் தீர்த்தமாடும்படி உபதேசித்தவர்களை
யும் அடியோங்களுக்குத்தெரியும்படியாய் அநுக்ரகஞ்செய்ய
வேண்டுமென்றுபணிந்து வினவியமுநிவர்கள் மேற்கருணை

சுரந்து சூதமாமுனிவர்கூறுவார், கேளுங்கள், நைமிசாரண்ய
ரே, பஞ்சபாண்டவர்கள் அவர்களது புத்ரமித்ர களத்ராதிக
ளோடும்அநேகபோகபாக்கியங்களோடுங்கூடிவாழ்ந்துவருகை
யில், அவர்கள்தாயாதிகளாகிய துரியோதனாதியர்கள் வஞ்ச
மனத்தாற் பாண்டவரைவருவித்து மாயச்சூதாடி அவர்களு
டைய பதிநிதிமுதலியயாவு மபகரித்துப்பாரிகளாக்கிப் பன்
னிரண்டுவருடம் வனவாசமும் ஒருவருடமக்கியாதவாசமும்
நாட்டி லொருவரறியாம லதிரியும்படியாயனுப்பி, அவ்வாறு
அவர்கள் சஞ்சரித்துவந்தபின் பொருவருக்கொருவர்பாரதப்
போர்தொடங்கி யுத்தஞ்செய்துவருகையிற் பத்தாநாட்சண்டை
யில், துரியோதனாதியர்கள் மெத்தவுந்துன்பமடைந்து, பின்
னர் துரோணாசாரியருக்குச் சேனாபதிபட்டங்கட்டிப் பதி
னோராநாள்முதல் தொந்தயுத்தங்களாய் நடந்துகொண்டிருக்
கிறபோது பதினைந்தாநாள் துஷ்டத்துய்மனை துரோணரெதி
ர்த்து அமர்செய்து பாணங்களைச் சரமாரியாகவருஷித்து பா
ண்டவ சயின்னியங்களைச் சின்னாபின்னப்படுத்திக் தாக்கு
கிறபோது, சேனைகள்பயந்து நான்குதிக்கிலுஞ் சிதறியோடு
வதைக்கண்ட் அஷ்டத்துய்மன் மகாகோப தீப்தனாயெரிந்து
விழுந்து கவுரவசேனையென்னு மாட்டுத்திரளிற் பெரும்புலி
போற்பாய்ந்து பாணவருடம்பொழிந்து சின்னாபின்னப்படுத்
துகையில் அதுகண்ட அர்ச்சுனனு மவனுக்குத் துணையாய்க்
கலந்து இருவருஞ்சங்கோபசங்கமாய் பாணங்களை யாகாயம்
பூமியெங்கும் நிரப்பியதன்றியும், இரதத்தை துரோணாசாரி
யின்மீது தூண்டிச்சிலையாசிரியரையெதிர்த்து இரண்டுசிங்கங்
களைப்போலும் இரண்டுபருவதங்களைப்போலும் இரண்டுவட
வா முகாக்கினியைப்போலும் போர்புரிகையில், அண்டகடா
கங்களெல்லா மதிரத்தக்கதாகவுஞ் சமுத்திரஜலமுஞ் சுவறிப்
போகும்படியாயும் அர்ச்சுனனும் துரோணரும் விடுக்கும்
வாளிகளின் கொடுமையால் லோகாலோகங்களெல்லாந் தத்த
ளிப்பதைப் பொன்னுலகவாசிகளாகிய இந்திராதி தேவர்களி
யாவரு மந்தரவீதியினின்று பார்ப்பதற்குபயப் பிராந்தியுற்ற

வரா ய் நடுக்கங்கொண்டிருக்கையில், அர்ச்சுனராஜனைச்சோ
வடையச்செய்வதற்கு அசக்தராய், அவன்பக்கத்திலிருக்கும்
துஷ்டத்துய் மன்பேரிலெதிர்த்துபாணங்களைத்தூண்டி,நாலு
பாணங்களினாலவன் ரதத்திற்கட்டியிருக்குங் குதிரைகளைத்
துண்டித்து, இரண்டுபாணத்தினால் தேரையு முடைத்து,
ஒருபாணத்தினால் சாரதியைக்கண்டித்துக் கியாவென்றுசிங்க
நாதஞ்செய்தார், அதுகண்டவீமசேனன் தனது ரதத்தைத்
தூண்டி, துரோணருக்கு முன்கொண்டுவந்துநிறுத்தி, து
ரோணரைநோக்கி, வாருமையா, எமது ஆசிரியரே, பிரம்ம
குலத்திற் பிறந்தவர்களாகியும் வேதாகமங்களை யுணர்ந்தவர்
களாயு மிருக்கும்பெரியோர்கள் பிறருக்கிடர் செய்யமாட்டார்
கள் தாயாதிகளாயிருப்பவர்கள் புத்ரமித்ர களத்ராதிகளோடு
மொன்று கூடியிருப்பவர்களை வேறுபடுத்தவு மாட்டார்கள்,
உலகின்கண் சகிக்கப்படாததுன்பம் வந்தபோதினுந் தங்கள்
குலமுறைநின்றும் பிறழார்களாதலால் தேவரீர் அத்தன்மை
வாய்ந்தவராகவிருந்தும் மரபுக்குரியதொழிலைவிடுத்து க்ஷத்தி
ரியர்களுக்கொப்பாகக் கொலைபாதகங்களுக்கு முதன்மையா
யேற்பட்டு, இராஜரீகஞ்செய்யப்பட்ட அரசர்களையனியாயமா
யெதிர்த்து உயிர்வதைசெய்து எக்களிப்போடுமிருப்பது பிரா
மண தருமமல்லவே, மேலும் ஒருவருக்குப்பிறந்து மற்
றொருவருக்குப் பிள்ளையாய்ப்புகுந்து இப்படியனியாயஞ் செ
ய்வது நும்போலியர்களுக் கழகல்லவே, ஓ வேதகுலோத்துங்
கரே, வனசாரனுக்கொப்பாய் வில்லுமம்புங் கையிற்பிடித்து
ஜீவ இம்சைசெய்து அதனால்வயிறுவளர்ப்பது தகாதகாரிய
மன்றோ, தேவரீர்மறைவிதிப்படி யாகாதி கிர்த்தியங்களைச்
செய்யவும் வேதாகமங்களை மாணவருக்கோதிவைக்கவும் இக
பரசாதனத்துக் கேதுவாகிய பகவத்தியானஞ்செய்து உலகி
னரை உச்சீவிக்கச்செய்யும் நியமத்தை நாசப்படுத்தவோ ஏற்
பட்டீர், இதோ உமது முதுகின்பேரிலிருக்கும் அம்புக்கூடெ
ன்ன வேதசாஸ்திரங்களோ, கரத்தினிடமாகவிளங்குந் தநு
வென்ன ஓலையோ, வலக்கரத்திலோங்குஞ் சிலையென்ன எழு

த்தாணியோ, அந்தோ இப்படி ரணரங்கத்தினின்று கெஞ்சித்
தேனு மிரக்கமில்லாமல் வதஞ்செய்யும்படியாயுமக்கு உபதே
சித்தவர்யாவர், மேலும் பெறுதற்குரிய உமது புத்திரனுகிய
அசுவத்தாமன் யுத்தகளத்தில் மடிந்துபோயிருக்க அச்சலனத்
தையும் நினையாமல் யுத்தமுனையில்நிற்பது மெத்தவும் ஆச்சரி
யமாயிருப்பதோடுந் தங்களைப்போன்றவர்களைப்பார்த்து மதி
யேன் கேட்டுமறியேனென்று சொல்லியபீமனது வார்த்தையைக்
கேட்ட சிலையாசிரியர், அசுவத்தாமன் மடிந்தானென்பதை
யுன்னித்திகைத்துக் கரத்தினிடமாகவிருந்தவில்லைத்தரையில்
விடுத்து, ஒன்றுந்தோற்றுதவராய், பீமனுரையை யெவ்வாறு
நம்பலாமென்று யோசித்திருக்கையில், பீமசேனன் தனது
ரதத்தை துரோணருக்குப்பின்புறமாய்த்திருப்பி, சேனைக்கட
லுட்புகுந்து, இரதங்களை தும்சப்படுத்தியும், யானைக்கூட்டங்
களை கால்வேறு தலைவேறு உடல்வேறு துதிக்கைவேறாகத்து
ண்டித்தும், குதிரைகளை நாசப்படுத்தியும், காலாள்களைச்சண்
ட மாருதக்காற்றிலகப்பட்ட சருகுபோல் நான்குதிக்கு களி
லுஞ்சிதறி யோடச்செய்தும் அட்டகாசம் பண்ணிக்கொண்
டு, சக்ராகாரமாய் சுழன்று கொண்டிருக்கையில், பகதத்தன்
கண்டு, கோபாவேசங்கொண்டு, தன்னுடைய யானைப்படைக
ளோடும்வந்து பீமராஜனைமறித்துப் போர்புரியத் தொடங்கி,
பாணங்களைமாரி போற்பொழிய, அதுகண்டபீமன், பகதத்
தன்பேரி லெரிந்துவிழுந்து, சிங்கத்தைப்போற் கர்ச்சித்து,
வில்லினிடமாக அளவிறந்த திக்கணைகளைச்சந்தித்துப்பிரயோ
கஞ்செய்து, அவனுடைய யானைக்கூட்டங்களை தும்சப்படுத்
திக்கொண்டிருக்கும்போது, துரோணர் பீமன்வார்த்தையைக்
கேட்டு யுத்தஞ்செய்யாமல் திகைத்துக்கொண்டிருப்பதை கிரு
ஷ்ணமூர்த்திகண்டு, இதுநல்லசமயமென்று மனக்களிகொ
ண்டு, அர்ச்சுனனுடையரதத்தை தருமராஜன்ரதத்திற்குச் சமீ
பமாய்க் கொண்டுபோய்நிறுத்தி, தருமனைப்பார்த்து, ஓய்
தருமநந்தனு, இச்சமயம் நான்சொல்லும்வார்த்தையைத்தடுக்
காமல் துரோணரைப்பார்த்து அசுவத்தாமன் மரணமடைந்தா

னென்று சொல்லுவாயாகில், சிலையாசிரியனை வெற்றிபெற
லாம், மேலும் பீமன் அவ்வாறுசொல்லியதைக்கேட்டு நம்பு
வதற்கிடமில்லாமல் ஏதோ எப்படியோவென்று திகைத்திரு
ப்பதால் உனதுவார்த்தையை உண்மையென்றுநம்பி வில்லை
விட்டுவிடுவார், நமக்குஜெயமுண்டாமென்றுசொல்ல, அது
கேட்ட தருமநந்தனன், சிவசிவாவென்று செவியைப்புதை
த்து, ஐயோ இப்படிக்கெல்லாம்வருமென்று ஆதியிற்றெரிந்
திருந்தால் இந்தபாரதயுத்தத்திற்குத் தொடங்காமல் வனத்திற்
றனேயிருந்து விடலாமன்றோ, பொய்சொல்லியா, ராச்சிய
மாளவேண்டும், அப்படிக்கொத்த இராஜ்யங்கிடைத்தா லெ
ன்ன கிடைக்காமற் போயிற்றுனென்ன, ஓய் சுவாமி, இப்பே
ர்க்கொத்த அபவாதமான வார்த்தைசொல்ல வென்னால்முடி
யாதென்றுசொல்ல, அப்போது கிருஷ்ணமூர்த்தியானவர்கோ
பங்கொண்டு, ஓய் தருமநந்தனு, உங்களால் நான்பட்டபாடெ
ல்லாம் பாழாகிப்போய்விட்டது, அந்தோ நீங்கள் சவுக்கியத்
தை யடையவேண்டுமென்று நான் அநேகம் பொய்சொல்லி
யும் இதானைவஞ்சித்தும் தூதுசென்று சங்கடப்பட்டும் உங்
களோடு வனத்திற்றிரிந்தும் சாரத்யஞ்செய்தும் என்னபிர
யோசனமாச்சுது, நான்சொல்லியபடி ஒரு சொற்பகாரியத்
திற்கு உடன்படாமல் என்னால்முடியாதென்று சொன்னால்
எனக்காவதென்ன, இங்குயாருக்காகப் பாடுபடுகிறேன், யா
ருக்காகக் கெடுகிறேன், பளாபளா நன்றாயிருக்கிறது, உலகின்
கண் பொய்சொல்லாதவர்களார், சமயோசித மறிந்தல்லவோ
நடக்கவேண்டும், இப்படிசொல்லுவாயென்றறிந்தால் இந்த
வீண்காரியங்களுக்குப் பிரவேசிக்கமாட்டேன், இப்போதும்
எனக்கென்னவந்ததென்று மெத்தவுமனஸ்தாபங் கொண்ட
வரைப்போல் தேரைவிட்டுபூமியிற் குதித்துவிட்டார், அது
கண்ட தருமநந்தனன் திடுக்கிட்டு, மனதுகலங்கி, தானும்
பூமியிற்குதித்து, கிருஷ்ணமூர்த்தியை தழுவிப்பிடித்துக்கொ
ண்டு, அநேகவுபசாரவார்த்தைகளைச்சொல்லித் தேரின்மீதிரு
க்கச்செய்து, ஓய் ஜனார்த்தனு, வேதவேதாந்த மூர்த்தியாகிய

தேவரீர்தானே யிப்படிசெய்தால் இங்குயாங்கள்செய்வதாவ
தென்ன விருக்கின்றது, அடியேன்பொய்சொல்ல வேண்டு
மென்றுரைத்ததைக்கேட்ட எனதுசெவியும்மனமும் குழை
ந்து நடுக்கமுற்றதே, என்நாவினாலே பொய்யைச்சொல்லி
விட்டு உலகிலெப்படி பிராணனைவைத்திருப்பேன், சுவாமி,
பேதையே னிச்செய்கைக்குடன்படுவனேயாகில் புவனமுள்
ளளவும் நிந்தைக்காளாவதன்றியும் இகபரசாதனத்துக் கேது
வில்லாமற் போய்விடுவேனே என்செய்வேன் எவ்வணமுய்
வேன் என்று தருமநந்தனன் துக்கசாகரத்து ளமூழ்ந்திருப்ப
தை மாயவன்கண்டு, வாரும் தருமராஜனே, இஞ்சித்தேனு
மும்மிடத்தில் க்ஷத்திரியதன்மமில்லை, எவ்விதமேனும் எதிர்
த்தபகைவரைவெல்ல வேண்டுமாதலால் நீர் ஒன்றும்யோசிக்க
வேண்டாம் ஆயினும் நான் ஒருதந்திரஞ் சொல்லுகின்றேன்,
அதுயாதெனில் பீமசேனன் பகதத்தனுடைய யானைத்தளத்
திலே சிங்கத்தைப்போற்புகுந்து சர்வசங்கார மூர்த்தியைப்
போல் அதப்படுத்துகின்றானாதலால் அந்தயானைத்திரளுள்
முதன்மையாயிருக்கும் யானையின்பெயர் அசுவத்தாமமென்
று வழங்குகின்றபடியாலும் அதனை பீமசேனன் கொன்று
விட்டபடியாலும் நீர் துரோணாசாரிக்கு முன்னம்போய்நின்
று, அவரைப்பார்த்து, அசுவத்தாமாஹதா குஞ்சரமென்று
சொன்னால், யான்சங்கம் பூரிக்கிறேனென்றுசொல்ல, அது
கேட்டதருமநந்தனன் இதுவுமொரு தந்திரந்தானென்றுநினை
ந்து, தலைதூரதத்தை சிலைக்குருவின் முன்னங்கொண்டுபோக
யெத்தனிக்கையில், கிருஷ்ணமூர்த்திதருமன் தேரினின்றுங்
கீழேகுதித்து, அர்ச்சுனன் தேரிலேறிக்கொண்டுவரும்போது,
தருமராஜனை துரோணர்கண்டு, அப்பாதருமநந்தனா அசுவத்
தாமன் மடிந்தானென்று பீமன்சொன்னது வுண்மைதானா
வென்றுகேட்க, அதற்குத்தருமராஜன் ஆம்சுவாமி, கவுரவதள
த்திலே அசுவத்தாமன் பட்டானென்றுசொல்ல, அதுகேட்ட
துரோணர் புத்திரவாஞ்சையால் வில்லையெறிந்துவிட்டு மூர்ச்
சித்ததமூவணியின்மீதுசாய, அப்போதுதருமநந்தனர், சுவாமி,

பகதத்தனுடைய யானைத்திரளிற்றலைமைபூண்ட அசுவத்தாம
மென்னும் யானையல்லவோபட்டது, நீரேன்மூர்ச்சித்திரென்று
சொல்லுவதற்குள், கிருஷ்ணபகவான் துஷ்டத்துய்மனைச
கையால் சிரத்தைக்கண்டித்து விடுவென்றுகாட்ட, துஷ்டத்
துய்மனும் மூர்ச்சித்திருப்பவர்மீது ஒருசந்திரா யுதத்தைப்
பிரயோகஞ்செய்து சிரத்தைக்கண்டித்துக் கீழேசாய்த்தான்,
அக்காலையில் சிலையாசிரியனைக்கண்டித்த வாளியானது நம்மை
யாதுசெய்யுமோவென்று அச்சங்கொண்டு ஒளித்ததுபோல
சூரியன்மேற்றிசையிற் புகுந்தான், உடனே அஞ்ஞானிகளது
இதயம்போலக் காடாந்தகாரமாகிய விருள்மூடினமையால்
அவ்வேளையிற்பாண்டவர்கள் வெற்றிச்சங்கம்பிடித்து சந்தோ
ஷத்தோடும் பாசறைபோய்ச்சேர, அதுகண்ட கவுரவர்கள்
துரோணர்பட்டாரென்னுந் துன்பத்திலாழ்ந்து அவர்களும்
பாடிவீடுசேர்ந்தார்கள் இவ்வாறு, அன்றயதினமுடிந்து மறு
நான்முதற் கர்ணன் சல்லியன் துற்சாதனன் துரியோதனாதி
யரோடு பதினெட்டுநாள்வரையில் யுத்தஞ்செய்துபாண்டவர்
கள் ஜெயத்தையடைந்தவர்களாய் வெற்றிமாலைபூண்டு அஸ்தி
னபுரஞ்சேர்ந்து தருமநந்தனருக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய
வேண்டி யத்தனிக்கும்போது, சவுமியாசாரியார் தருமராஜ
னைப்பார்த்துக்கூறுவார், வாரும் தருமநந்தனா, பதினைந்தாநாள்
துரோணருடனே யுத்தஞ்செய்கிறபோது உமதுவாக்கிலேபிற
ந்தசொல்லினால் அவரிறந்தபடியினாலே அத்தோஷம் உமக்
குண்டாயிருப்பதுமன்றியில் துரோணருக்குமுன் நீர்கண்டது
போல் மாயப்படாேற்படுத்திச்சொன்ன பொய்வார்த்தையினா
ல் உயிர்நீங்கியதோஷம் உம்மைச்சார்ந்திருக்கப் பட்டாபிஷே
கஞ்செய்து கொள்வதுசரியல்லவாதலால் அந்ததோஷத்தை
நிவாரணஞ்செய்து பின்பு மகுடந்தரித்துக் கொள்ளவேண்டு
மென்று சவுமியர் சொல்லியதைக்கேட்ட தருமநந்தனர்மெ
த்தவுந் துன்பமடைந்து, தன்னுடைய தம்பிமார்களையுங் கிரு
ஷ்ணபகவானையும் வரவழைத்து, சவுமியர்கூறியதை யவர்
களுக்குரைத்து யோசித்துக்கொண்டிருக்கையில், அவன்வேத

வியாசமகாரிஷியானவர் வந்தார், அப்போது தருமர்முதலிய யாவருமெழுந்து வந்தனைவழிபாடுசெய்து ஆசனத்திருத்தி நடந்தகாரியங்களை யன்னவரோடுரைத்து பின்நடக்க வேண்டிய கட்டளையென்னவென்றுவினவ, அதற்குவேதவியாசர் சற்றுநேரம்யோசித்து நிட்டையிலிருந்து ஞானதிருஷ்டியினுற் பார்த்துச்சொல்லுவார், கேளுந்தருமநந்தனனே, நீர்செய்திருக்கும் பாவந்தீரவேண்டுமாயின் பாதகவிடநெட்சணபாகத்திற சேதுவின்மத்தியிலோங்குங் கந்தமாதனபருவதச்சாரலில் ஸ்ரீ ராமமூர்த்தியினாலுண்டாக்கப்பட்ட ராமதீர்த்தத்தில்தீர்த்தமாடிப்பின் இராமநாதனைத் தெரிசித்துவந்தால் பொய்வார்த்தைசொல்லிக்கலங்கச்செய்து குருவைக்கொன்றபாபமும் மற்ற எல்லாக்கர்மங்களும் நிவர்த்தியாவதோடும்நீர்நினைத்த இஷ்டகாமியத்தையும் மோட்சகாமியத்தையுந் தருமென்றுசொல்லி வியாசபகவான் செலவுபெற்றுக்கொள்ள, பின்தருமராஜன் மெத்தவுஞ் சந்தோஷமடைந்து, தனதுதம்பிமார்களுடனும் சவுமியர்முதலிய சிசையின்னியங்களுடனும் பிரயாணப்பட்டுக், காடுமலைவனம் வனாந்திரங் காறுநதி முதலிய வற்றையும் புண்ணியக்ஷேத்திரங்களையுந் தலங்களையுந் தெரிசித்துக்கடந்து, சேதுவைக்கண்டு, அதன்மத்தியில்விளங்குங் கந்தமாதன பருவதச்சாரலில் இராமதீர்த்தக்கரையில் வந்துசேர்ந்தார்கள், அப்படிசேர்ந்தபிறகு அந்தராமதீர்த்தத்தில் தருமநந்தனன்முதலியயாவரும் சவும்மியர் சொல்லியசங்கற்ப விதியின்படித் தீர்த்தமாடி, அநேககோதானபூதானகன்னிகாதானமுதலிய முப்பத்திரண்டறங்களையும் வழுவின்றிச்செய்து, ஸ்ரீ ராமநாதனையுந்தெரிசித்து, அந்திசந்தி இரண்டுவேளையினும் இராமமந்திரத்தை யிடைவிடாமற்செபித்துக்கொண்டு, இப்படி யொருமாதகாலம்வரையில் நடந்துவருகையிலோர்நாள், ஆகாயத்தினின்றும், ஓய் தருமராஜனே, நீர்சொல்லியபடாரியபாபம் உம்மைவிட்டுநீங்கியதென்று அசரீரியோத, அவ்வாய்மையைக்கேட்ட தருமராஜன்முதலிய யாவருங்கேட்டு சந்தோஷமடைந்து, தம்பிமாருடனும் ஸ்ரீ ராமநாதனுடைய

பாதபத்மங்களிற்பணிந்து, அநேகவிதமாய்த் தோத்திரங்கள் செய்து அவணின்றுந்திரும்பி அஸ்தினாபுரம்வந்து சேர்ந்து திவ்யமுகூர்த்தகாலத்தில் வியாசமகாமுனிவர்முதலிய பெரியோர்கள் முன்னிலையிற் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தாராதலால், அத்தன்மையாகிய மகிமைபொருந்திய இராமதீர்த்தத்தில்மூழ்கி ஸ்ரீராமமூர்த்தியையுஞ் சீதாதேவியம்மனையுந் தெரிசித்தால், அவர்களுக்கு வைகுண்டபதவிசித்தியாமாதலால், அத்தீர்த்தத்துக்குச்சமீபமாய் இலட்சுமணதீர்த்த மென்றோர்தீர்த்தமுண்டு, அத்தீர்த்தமும் இவ்வாறேமகிமையுற்றதென்று சூதமகாமுனிவர்கூறி யதைக்கேட்ட நைமிசாரண்யர், மெத்தவுஞ் சந்தோஷமடைந்து, முனிவனைப்பணிந்து, சுவாமி, தேவரீர் இப்போதுசொல்லிய இலட்சுமணதீர்த்தத்தின் பெருமையை அடியோங்களுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விநைவிப்பணிந்துநின்ற முனிவர்மேற்கருணைகூர்ந்து சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

இராமதீர்த்தச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

இலட்சுமணதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, இமையாநாட்டமொன்றுந் தேவர்களுக்கு இராக்கதராலுற்ற இடுக்கணைத்தவிர்த்தாட்கொள்ளவேண்டி ஸ்ரீவைகுண்டவாசனாகிய ஜகதீசன்கருணைகூர்ந்து இவ்வுலகின்கண் ஓங்கும்பரதகண்டத்தில் விளங்கும் அயோத்தியா பட்டணத்துக்கிறைவனாகிய தசரதமகாராஜனுக்குச் சுதனாகவந்தவதரித்து இராமமூர்த்தி யெனப்பெயர்பூண்டதன்றியுந் தனக்குத்துணைவனாக ஆதிசேடனை இலக்குமணனென்னுந் தம்பியாகவருவித்துக்கொண்டும், இலக்குமியைச் சீதாபிராட்டியென்னும் பெண்ணாய் ஜனிப்பித்து அன்னவளைமணந்தும், மூவரும்வனத்திற்

ப்ரவேசித்து, அம்மனை இராவணனற் சிறைவிடச்செய்து, வானரவீரர்களைக்கூட்டி இலங்கைக்குச் சேதுபந்தனஞ்செய்து, இராவணனதிராக்ஷதர்களையெல்லாம் வதஞ்செய்து, அம்மனதுசிறையைமீட்டு அவனின்றுந்திரும்புகாலையில், சேதுவின்மத்தியிற் கந்தமாதனபருவதத்தில் சிவலிங்கபிரதிஷ்டைசெய்துவணங்கியபின், இலட்சுமணனானவர் தனித்து சிவபூசைபண்ணக்கருதி ஸ்ரீராமநாதனுக்கு மேற்பாகத்தில் சிவலிங்கபிரதிஷ்டைசெய்து ஓர்தடாகமுண்டுபண்ணி; அத்தீர்த்தத்தினற் சுவாமிக்குத்திருமஞ்சனஞ்செய்து, கந்தபுட்ப தூபதீபங்களாற்பூசித்து நிவேதனங்காட்டிப்பணிந்து, பின், அத்தீர்த்தத்திற்கு இலட்சுமணதீர்த்தமென்று நாமகரணஞ்சாற்றிச்சென்றமையால் அதுமுதல் இலட்சுமணதீர்த்தமென்று வழங்கிவருவதனேடும் அதிற்றீர்த்தமாடியபேர்களுக்கு வேதாகமசாஸ்திரப்பயிற்சியும் தனகனகவஸ்து வாகனங்களும் புத்ரசம்பத்தும் தயாளகுணமும் அணிமாவாதியஷ்டசித்திகளும் அஷ்டாங்கயோகங்களும் அநுகூலப்படுவதோடும் பிரமசாரூபம்பெற்று, அகண்டபரிபூரண சச்சிதானந்த சின்மயஸ்வரூப சாட்சாத்காரமாகிய பரசிவத்தைக்கலப்பார்கள், மேலும் அத்தடாகத்தில் மூழ்கியதன்கணாமீதிருக்குஞ் சிவலிங்கப்பெருமானைப் பஞ்சசக்தியோடும் பூசித்துப்பணிந்தவர்கள் அகண்ட ஐசுவரியத்தைப் பெறுவதோடுஞ் சுத்தசத்துவத்திலிருந்து கிடைப்பதற்கரிய சாயுச்யமென்னு முத்திவீட்டையடைவாரதலா லத்தீர்த்தத்தில் வசுதேவதனயனாகவந்தவதரித்துக் கஞ்சனைக்கடிந்து காலிகளோடுமோடித்திரிந்துங் கருதற்கரிய லீலாவினோதங்களைப்புரிந்த கண்ணபிரானாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு நந்தன்மனையில் முன்னுதித்தோனாகிய பலராமன்றீர்த்தமாடி பிரம்மஹத்தி விமோசனமாயிற்றென்று சூதமாமுனிவர்கூறியதைக்கேட்ட நைமிசாரண்யவாசிகளாகியமுனிவர்கள் அதிகாதலோடுஞ் சூதமுனிவனைப்பணிந்து, சுவாமி, தேவரீர்கூறியவண்ணம் பலராமனுக்கு எவ்விதமாய் பிரம்மஹத்திபற்றியதோ அதனையடியோங்களுக்குத்திருவாய்

மலர்ந்தருள வேண்டுமென்றுவினவ முனிவர்சொல்லத் தொடங்கினர்.

கேளுங்கள் நைமிசாரண்யரே, குந்திமக்களாகியபாண்டவர்களுக்குங்கவுரவர்களுக்கும்பாரதயுத்தந்தொடங்குங்காலையில், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் பாண்டவர்பட்சத்தில் அர்ச்சுனனுக்குச் சாரதியாகவமைந்ததுகண்டபலராமர் தனது தம்பியாகிய கிருஷ்ணமூர்த்தியைவெறுத்து, இருதிறத்தாரோடும் வார்த்தையாடாமல் யாத்திரை செய்யக்கருதிப் பிரயாணப்பட்டு சிவஸ்தலங்களையும் விஷ்ணு ஸ்தலங்களையும் தெரிசித்துக்கொண்டு, கங்கை யமுனை கோதாவரி சிந்து காவேரி நர்மதாமுதலிய நதிகளிலாடியுந் திவ்விய க்ஷேத்திரங்களில் வாசஞ்செய்து மிருக்கிறகாலையில், நைமிசாரண்யத்தில் தீர்க்கசத்ரயாகஞ்செய்வதாய்க் கேள்வியுற்று அதனைப்பார்க்கவேண்டி, நைமிசாரண்யத்தை நோக்கிவருகையில், பலராமர் வருதலைக்கண்ட நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களெழுந்து எதிர்கொண்டுபோய் வந்தனைவழிபாடுசெய்தழைத்துவந்து, ஆசனத்திருத்தி, தோத்திரஞ் செய்துகொண்டிருக்கையில்அம்முனிவர்களுக்குள் தலைமைபூண்டுஅவர்களுக்கு வேதாகமசாஸ்திரரகஸ்யங்களை யுபதேசித்துக்கொண்டிருக்கும் சூதமாமுனியென்னு மியான்மாத்திரம் பலராமனைக்கண்டெழுந்திராமலும்வணங்காமலுமிருந்ததுகண்டு, இத்தனைபேருக்குள் இவனுக்குமாத்திரம் இந்தகெர்வம் எப்படி வந்ததென்றும் இவனை உலகில்வைக்கப்படாதென்றும் சங்கரித்து விடவேண்டுமென்றும் மனத்திலுன்னியமாத்திரத்தில் உடனே தனக்குமுன்பாக அநேகவனுவோடும் வரப்ரசாதத்தோடுங்கூடியமுசலருசிக்கலப்பைகாணப்பட்டது, அப்படித் தோன்றியமாத்திரத்தில் அதையெடுத்துக் கையிலேந்திக்கொண்டவராய் அதன்பிரயோகத்தினல் தெற்பாசனத்திலிருந்த புராணிகனுகிய என்னைக்கொன்றுவிட்டார், கொன்றமாத்திரத்தில் அங்குள்ளயாவருங்கண்டுதிடுக்கிட்டுமெய்ம்மறந்துநடுக்கத்தோடுமெழுந்து, பலராமருடைய பாதகமலங்களிற் பணி

ந்து நமஸ்கரித்து கைகளைக்கட்டிக்கொண்டு,சுவாமி,பலராமரே, தேவரீர துமகிமைதெரியாமல் சிறியோர்களாக விருக்கிறவர்கள்செய்தபிழையைபெரியோர்கள்பொறுத்தாட்கொள்ளக்கடனன்றோ, ஆதலால் தேவரீரேயிப்படிகோபஞ் செய்தால்வேதங்கள்நிலைகுலைந்துபோவதன்றியும் அண்டங்களும்வெடித்து சமுத்திரமுஞ்சுவறி சந்திரசூரியாளுக்கதிமாறி வியர்த்தமாய் விடுமாதலால் இப்பிள்ளையின்குற்றத்தைப் பொறுத்துரட்சிக்கவேண்டுமென்று முநிவர்கள் வணங்கித்தோத்திரஞ்செய்ய, அப்போதுபலராமர் கொண்டகோபந்தணிந்து கூறுவார்,வாருங்கள் மகாரிஷிகளே, உங்களுக்கெல்லாமிவர் பெரியவரென்றுயோசித்துப் புராணங்களைக் கேட்டுக்கொண்டிருப்பதேயன்றி நமக்கிவர்பெரியவரா,சத்தியவதிகுமாரராகியபராசரர்முதலாகியபேர்களும் நம்மைக்கண்டு உபசாரஞ்செய்யும்போது இவர் எம்மாத்திரமென்று பலராமர்சொல்லக்கேட்டமகாரிஷிகள் மறுபடியுமவரைவணங்கித் தோத்திரஞ்செய்து, சுவாமி, புராணகாலக்ஷேபஞ்செய்து கொண்டிருக்கிறகாலையில், அங்ஙனமேத்தன்மையானவர்வந்தபோதினும் பிரசங்கத்தைவிடுத்துஉபசரிக்கவேண்டுவதில்லையென்றுசுருதிவாக்கியங்களால்சொல்லப்பட்டிருக்கின்றபடியினாலேசூதரதையோசித்திருந்ததேயன்றி கெர்வித்திருந்தவரல்லவே,ஆயினுந்தேவரீரைக்கண்டு மதையோசித்திருக்கக் கூடாமையாதலால் இவர்செய்ததப்பிதத்திற்கு அடைந்ததெண்டனை போதுமானதால்பழையபடி எழுப்பித்தருவதன்றியும் இவ்வனத்தில் எங்களுக்கு இம்சையைக்கொடுத்துவரும் வில்வலாசுரனுடையகுமாரன் வற்கலாசுரனைச்செயஞ்செய்து எங்கள் துயரத்தைப்போக்கவேண்டுமென்று வினவியதுகேட்டபலராமர், கோபந்தணிந்து, குழந்தைகளாய் நமக்குவிளங்குகின்றநீங்கள் கருதியவண்ணமுடிப்பேமென்று யோகாநுக்ரகத்தினாலேயும் முநிவர்களது யாகாதிமகிமைகளினாலும் என்னையெழுப்பி எனக்கு வேண்டியவரங்களைக்கொடுத்துமுநிவர்களைப்பார்த்து, ஓ முநிவர்களே,இன்றையபோது துவாதசி திதியாதலாலும் இன்று

நம்மாற் சூதமுநிவர்வதஞ்செய்யப்பட்டு உங்களுக்குநடந்துவரும்புராணகாலக்ஷேபஞ் சூன்னியப்பட்டுப்போனமையாலுமிதுமுதல் உலகின்கண்வரும் பிரதிதிதிகடோறும் காலக்ஷேபமில்லாமல்புராண சூன்னியதிதியென்று விளங்கக்கடவதென்றுகட்டளையிட்டுச் சூதமாமுநிவர்முதலிய சகலத்தானோடும் தீர்க்கசத்திரயாகத்தை நடத்துகின்றவிநோதங்களைப்பார்த்துக்கொண்டிருந்தார், அப்படியிருக்கையில் வற்கலாசுரனென்பவன்பவரணையாகுமத்தினத்தில்முநிவர்களால்நடத்துந்தீர்க்கசத்திரயாக ஓமகுண்டத்தில் மலமூத்திரங்களும்மாமிசாதியென்புகளுங் கொண்டுவந்துசொரிந்தும், மதுக்குடங்களைப்போட்டுடைத்தும் தினங்களைச்சொரிந்தும் யாகசாலையில்இம்சைசெய்யும்போது, முநிவர்கள்கண்டுவெருண்டு, பலராமரிடத்திற்சொல்ல, பலராமர்கேட்டுக்கோபங்கொண்டு, ஆகாயத்தையேறிட்டுப் பார்க்கிறபோது, ஆகாயவீதியி னின்றும்வெளியெல்லாம் நெருக்கிமூடி கன்னங்கரேலென்று நீலபருவதத்தைப்போன்றதேகமும் செவ்வானம்போன்ற சடைகளும் கரத்திற்சூலாயுதமும்பிடித்து சத்தாடம்பரத்துடனேநிற்கும்வற்கலாசுரனைக்கண்டு, கோபாவேசங்கொண்டு, தனனுடையகரத்திலிருந்த கலப்பையைவற்கலாசுரன் கழுத்திலேமாட்டிக் கீழேதள்ளிக்கொண்டு வலதுகையிலேயிருந்த உலக்கையினாலே வொரேயடியாயடிக்க, அவ்வசுரன் வாயினாலுமூக்கினாலு மிரத்தங்களைக்கக்கிக்கொண்டு தேவேந்திரனாற்சிறகறுப்புண்டு விழுந்தபருவதங்களைப்போல வெத்திசையுமிரத்தங்கள்சொப்பளித்தோட வலறிவிழுந்து மரணமடைந்தான்,அப்போதுநைமிசாரண்ய முநிவர்களியாவருஞ் சந்தோஷமடைந்து,பலராமரைவணங்கித்தழுவிதீர்த்தமாடச்செய்துபட்டுவஸ்திரங்களைத்தரிக்கச்செய்து விபூதிருத்திராக்ஷ மாலிகாபரணங்களை யணிந்து தோத்திரஞ்செய்து, வாருமையாசுவாமி, பலராமரே, இத்தாக்ஷதன் பிரம்மபீஜத்துக்குரியவனாதலாலிவனைக்கொன்றபாபம் தீரும்படியாய்ப் புண்யநதிகளிலேபோய்த் தீர்த்தமாடிவரவேண்டுமென்று சொல்லியதைக்

கேட்டபலராமர், அப்படியேயாகட்டுமென்று நைமிசாரண்யரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, கோதாவரி, பிரயாகை, காவேரி, சரஸ்வதி, நர்மதா, துங்கபத்திராமுதலியநதிகளில் சங்கற்பவிதியின்படி ஸ்நானஞ்செய்து, அஸ்தினாபுரத்தைநோக்கிப் பிரயாணப்படுகிறபோது, அண்டகடாகங்களு மதிர்ந்துபோகும்படியாய்ச் சத்தாடம்பரஞ்செய்துகொண்டு நீலபர்வதம்போல பலராமருக்குமுன் மறித்துக்காட்டிப் பின்பக்கத்தில் ஆகாயம்வரையிலுயர்ந்து வற்கலாசுரனுடைய பிரமஹத்தி தொடர்ந்துபற்ற, அப்போதுபலராமர்கண்டுபயந்து, இதுவென்னகாரணமென்று யோசித்துநிற்கிறபோது, ஆகாயத்திலே, ஓ உரோகணிகுமாரா, பிரம்மகுலத்திலே யுற்பவித்தவற்கலாசுரனைக்கொன்றதோஷம் சிறிதுநீங்கியும் நீங்காமலுமிருக்கிறபடியினாலே அந்தபிரமஹத்தி உன்னைத் தொடர்ந்துபண்ணுகின்றதென்று அசரீரியுரைக்க, அவ்வார்த்தையை பலராமர் கேட்டுமறுபடியுந் தாருகாவனத்தைநோக்கிப் பிரயாணப்பட்டுப்போய் ரிஷிகளைக்கண்டு, இவ்வனத்தில் வற்கலாசுரனைக் கொன்றதோஷம் ஒருவருடமாய்ப் புண்யநதிகளிற்றீர்த்தமாடியும் திவ்யக்ஷேத்திரங்களிலேவாசம்பண்ணியும் என்னைவிட்டகலாதிருப்பது யாதுகாரணமென்று நடந்த வர்த்தமானங்களைச்சொல்ல, முநிவர்கள்கேட்டு யோசித்துச் சொல்லுவார், வாருமையா சுவாமிகளே, தேவரீர் மனதின்படியே இத்தோஷநிவாரணமாக வேண்டுமாயின் கந்தமாதனபருவதத்தில் ஸ்ரீராமசந்திரனுடைய சகோதரனாகிய இலட்சுமணன் இந்திரசித்தைசெயஞ்செய்து தன்னுடையதோஷந்தீரவேண்டி சிவபூசைசெய்து உண்டாக்கப்பட்டதடாகமாகிய இலட்சுமணதீர்த்தமென்று ஒருபுண்யதீர்த்தமிருக்கின்றது, அந்தீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்தமாத்திரத்தில் தோஷநிவர்த்தியாமென்றுமுநிவர்சொல்ல, பலராமர்கேட்டுச் சந்தோஷமடைந்து, அவணின்றும்பிரயாணப்பட்டு, காமேலவனம் வனாந்திரமுதலியயாவுங்கடந்து சேதுவிலேயோங்குங் கந்தமாதனகிரிச் சாரலிலே விளங்கும் இலட்சுமணதீர்த்தத்தில்வந்துவிதிப்படி ஸ்நானஞ்

செய்து, சந்தியாவந்தன நியமநிட்டைகளைமுடித்துக்கொண்டு, கோதும்பை எள்முதலியநவதானியங்களும் பொன் ஆடையாபரணமுதலியயாவும் பிராமணருக்குக்கொடுத்து, இலட்சுமணேசனை பிரதட்சணஞ்செய்து நமஸ்காரம்பண்ணி அபிஷேகமுதலியயாவுநடப்பித்து ஆராதனைசெய்து துதித்துநிற்கையில், ஆகாயத்தினின்றும், ஓ பலராமமூர்த்தியே, உன்னைப்பற்றியிருந்தபிரமஹத்திநிவர்த்தியாய்விட்டதென்று அசரீரிதோன்ற, அவ்வாய்மையைக்கேட்ட பலராமர் மெத்தவுஞ் சந்தோஷமடைந்து, துவாரகையைநோக்கிப் பிரயாணப்பட்டுப்போய்விட்டாரென்று சூதமகாமுநிவர்சொல்லியதை நைமிசாரண்யரிஷிகள்கேட்டு, சுவாமி, தேவரீர் சொல்லியயாவுங் கேட்டானந்தமடைந்தோம், ஆயினும் பலராமர் ஸ்ரீராமநாதனைத் தெரிசியாமல்வந்துவிட்ட காரணமியாதென்று வினவ, சூதமாமுநிவர், கேளுங்கள்நைமிசாரண்யரே, சேதுவின்மத்தியிலேவிளங்குந் தீர்த்தங்களாடப்போனபேர்கள், ஸ்ரீராமநாதனைத்தெரிசிக்காமலும் சேது தநுக்கோடியிலே மூழ்காமலும் வருகிறபேர்களுமுண்டோ, இலட்சுமணதீர்த்தத்தின் மகிமைகளைச்சொன்னோம் அல்லதுமற்றமகிமைகளை இக்கரையிலே சொல்லவில்லையாதலால் பலராமர் நித்யப்படியாய்ச் சேதுகோடிக்கரையில்மூழ்கி ஸ்ரீராமநாதனைத்தெரிசித்து விடைபெற்றுக்கொண்டு அஸ்தினாபுரமார்க்கமாய் துவாரகைக்குப்போய்விட்டாரென்று சூதமாமுநிவர்சொல்ல, முநிவர்கள்கேட்டுச் சந்தோஷமடைந்து, இன்னமந்தச்சேதுவில் விளங்கியதீர்த்த மகிமைகளைச் சொல்லவேண்டுமென்று வினவ, சூதமுநிவர் சொல்லத்தொடங்கினார்.

இலட்சுமணதீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

சடாதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, அயோத்தியா பட்டணத்தினின்றும் ஸ்ரீராமமூர்த்தியானவர் பிதுர்வாக்கியப்படி சீதாபிராட்டியோடும்இலட்சுமணப்பெருமாளோடும்பிரயாணப்பட்டு வனத்தைநோக்கிச்செல்கையில், அரசுக்குரியகிரீட மகரகுண்டலவாகுவலயமுதலியயாவும் நீக்கிச் சிகையைக்கோதிச் சடைமுடியாய் வகுத்துகட்டிக் கந்தமூலபலாதிகளைப்புசித்துச் சஞ்சரிக்கையில், தேவியைச்சிறைகொண்டுசென்ற இராவணனைவதஞ்செய்யுநிமித்தம் இலங்கைக்குச் சேதுபந்தனஞ்செய்து வானரப்படைகளோடுஞ்சென்று அன்னவனைக்கிளையோடுங்காய்ந்து சீதையின்சிறைமீட்டுத்திரும்பிக் கந்தமாதனகிரிச்சாரலில் வரும்போது, தனது சடாமகுடத்தில் இராவணாதிராட்சதர்களுடைய இரத்தமாமிசத்துளிகளடர்ந்திருக்குமெனக் கருதியவ்விடத்திலோர்தடாகமுண்டுபண்ணி யதிற்றீர்த்தமாடிச் சடைமுடிகளைச் சுத்திசெய்து அத்தீர்த்தத்திற்குச் சடாதீர்த்தமென்று நாமகரணஞ்செய்துசென்றமையால் அதுமுதல் அத்தீர்த்தத்தில் மூழ்குபவர்களது ஜனனஜராமூப்புங் காமக்குரோதாதி யறுவிதப்பகையும்நீங்குவதோடும் ஆணவகாமியமாயையென்னுமலங்களுமற்று, சரிதை கிரியை யோக ஞானங்களை யநுட்டித்து நித்யானந்தசொரூபராய் முத்திவீட்டைப்பெறுவார்கள். அத்தீர்த்தத்தில்மூழ்கிச் சித்திபெறவிருப்பமில்லாதவர்கள் தங்கள் உச்சிவெடிக்கும்படியாய் வேதாகமசாஸ்திரங்களைப் பாராயணஞ்செய்தும், பிரதமைசஷ்டி ஏகாதசி பிரதோஷம் அமாவாசை பவர்ணை சாந்திராயணவிரதங்களிருந்தும், வனங்களிலும் மலைநுழைவுகளிலும் ஜலத்தில்மூழ்கியிருந்தும், கந்தமூலங்கள்முதலிய சருகுஜலபட்சண வாயுபட்சணங்களைச் செய்தும், தலைகீழாகநின்றும், ஒற்றைக்காலில்நின்றும், மான்றோல் புலித்தோல் வெண்டுகில் இரத்தினக்கம்பளம் தருப்பைமுதலிய ஆசனங்களிலிருந்தும், பத்திரம் வீரம் குக்குடம் பங்க

யம் கோமுகமென்னும் அங்காதனஞ்செய்து உருத்திரமுகமாயிருந்தும், இயமநியமாதியஷ்டாங்கயோகங்களைச்செய்தும், பஞ்சாக்கினி இடைநின்றுதபஞ்செய்தும், முத்திபெறாமல் இராகத்வேஷங்களைப்பெற்று, பிறவிப்பிணியிலுழன்று திரிவார்கள், மேலும் ஒருநாளைச் சடாதீர்த்தத்தில் மூழ்கினால் அறுபதினாயிரம்வருடம் கோதாவரிதீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்தபலன்கிடைக்கும், நித்தியப்படி மூழ்கினவர்களுக்கு கங்கை யமுனை கோதாவரி சிந்து காவேரி நர்மதா துங்கபத்திரா பிரயாகைமுதலிய புண்ணியதீர்த்தங்களிலே ஆடியபலனுண்டாம், அன்றியுமச்சடாதீர்த்தத்தில் மூழ்கினபேர்களுக்கு அந்தக்கரணசுத்தியாய் அஞ்ஞானநிவர்த்தியாகி அபரோட்சஞானத்தையடைந்து சாயுச்சியமடைவதற்குச் சந்தேகமிராது, மேலும் இத்தன்மையாகிய மகிமையைப்பெற்றிலகு மச்சடாதீர்த்தத்தில் பண்டோர்காலத்தில் வேதவியாச மஹாரிஷியினுடைய குமாரர் சுகனென்பவர்வந்துமூழ்கி யந்தக்கரணசுத்தியாய் நித்தியானந்த சொரூபத்தைப்பெற்று விளங்கினார், அஃதெப்படி எனில், ஒருநாள் வேதவியாசரைச் சுகர்வந்துவணங்கி யநேகதோத்திரங்கள்செய்து, சுவாமி, வேதவேதாந்தமூர்த்தியே, அடியேன் அகண்டபரிபூரண சின்மயத்தை யடையவேண்டி அநேகதபங்களும் யாகாதிகர்மங்களும் தீர்த்தயாத்திரைகளும்செய்தும், வேதாகமசாஸ்திரபுராணங்களையறிந்தும், மனச்சந்தேகமகன்று சுத்தஞானமடையும் விதியைத்தெரியாமல் உள்ளக்கலக்கமுற்றிருக்கின்றபடியால் அதுநீங்கும்படி யோருபாயஞ்சொல்லவேண்டுமென்று பணிந்துநின்ற புத்திரனைப் பார்த்து, வேதவியாசர் கூறுவார், வாராய் சுதனே, தெட்சணபாகத்தில் ஸ்ரீராமமூர்த்தியாற்கட்டப்பட்ட சேதுவிலோங்கும் கந்தமாதனபருவதத்தில் சச்சிதானந்த சொரூபமாயுஞ் சடாதீர்த்தமென்று பெயருடையதாயும் விளங்குமோர்தீர்த்தமுண்டு. அத்தீர்த்தத்தில் நீபோய்மூழ்கி இராமமந்திரத்தை இடைவிடாமற்செபித்துக்கொண்டு, வருவாயாகில், உனது அந்தக்கரணசுத்திபெற்று பேரின்பத்தைச்சார்ந்த

புண்யலோகத்தையடைவாய், அது எப்படியெனில், முன்னொருகாலையில் உன்னைப்போலவே வருணராஜனுடையகுமாரன் பிருகுமாமுனியென்பவன் அந்தக்கரணசுத்தியாகவேண்டியதாய் தனதுதாதையினிடத்தில் மந்திரோபதேசம்பெற்றுக்கொள்ளவேண்டுமெனக்கருதி வணங்கும்போது, வருணராஜன் புத்திரன்மேற் கிருபைகூர்ந்து, வாராய் பிருகுவே, உனது அந்தக்கரணசுத்தியாக வேண்டியதற்கோருபாயஞ் சொல்லுகின்றேன் அஃதியாதெனில், உலகின்கண் வயங்கும் பரதகண்டதெட்சணபாகத்தில் சேதுமத்தியில் ஓங்குங் கந்தமாதனபருவதச்சாரலில் இராமலிங்கத்துக்கு வலப்பக்கத்தில் இராமலட்சுமணர்களால் உண்டாக்கப்பட்ட சடாதீர்த்தமென்றோர் தீர்த்தமுண்டு, அத்தீர்த்தத்தில் நீபோய்தீர்த்தமாடினால் உன்னது அஞ்ஞானமகன்று பிரமசைதன்யத்தை யடைவாயென்றுரைக்க, அதுபோற் பிருகுமாமுனிவன்சென்று தீர்த்தமாடி, காமக்குரோதாதி பகையைக்காய்ந்து நிர்மலசித்தராய் நித்தியானந்தசொரூபத்தையடைந்தார். இதுவுமல்லாமல் துர்வாசமகாரிஷியிப்படியே தீர்த்தமாடி இராமமந்திரத்தை யுச்சரித்து மகாவிஷ்ணு சொரூபத்தையடைந்து வைகுண்டபதவியைப் பெற்றிருக்கின்றபடியால் நீயும் அவ்வாறே சென்று மூழ்கிவரக்கடவையென்று வேதவியாசர்சொல்ல, அதுகேட்ட சுகரும் தாதையைப்பணிந்து விடைபெற்றுச்சென்று, தீர்த்தத்தில்மூழ்கி, இராமமந்திரத்தைஜெபித்து, அந்தக்கரணசுத்தியாய், மெய்ஞ்ஞானநிட்டையடைந்து பாப்ரம்மசொரூபத்தைக்கலந்தாராதலால், ஓ நைமிசாரண்யர்களே, நீங்களுமப்போற்சடாதீர்த்தத்தில்மூழ்குவீர்களாகில் உங்களைப்பற்றிய அஞ்ஞானமியாவுமகன்று காமதேனுசுரபிவடிவாய் தேவாமிர்தங்களைப் புசித்துப்பேரின்பத்தை யடைவீர்களென்றால் அத்தீர்த்தத்தின்பெருமையை யாவராற்சொல்லமுடியும், மேலுமத்தீர்த்தத்தில் பிதுர்களுக்குப்பிரீதியாய்த் திலதர்ப்பணதிவசமுதலானவைகள்செய்து பிண்டமளித்தால் ஒன்று கோடியாய் பிதுர்க்களுமானந்தாதி போகங்களை யநுபவிப்பார்க

ளென்று சூதமுனிவர்கூறியதைக்கேட்ட நைமிசாரண்யர் சந்தோஷசாகரத்தில்மூழ்கி, முனிவரைப்பணிந்து, சுவாமி, அடியோங்களுக்கு இன்னமக்கந்தமாதனத்தில் விளங்கும்மகிமைகளைத் திருவுளம்பற்றவேண்டுமென்றுவினவ, முனிவருளாங்கனிந்து, அன்னவரைநோக்கி, ஓ முனிவரரே, இலக்குமி தீர்த்தமென்றோர்தீர்த்தமுண்டு, அதன்பெருமையைச் சொல்லுகிறோம், கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்.

சடாதீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

இலக்குமிதீர்த்தச்சருக்கம்.

கேளுங்கள், நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, முன்னொருகாலத்தில் சர்வலோகசரண்யனாகவும், ஜகதீசனாகவும், சர்வாந்தரியாமியாகவும், சலசலோசனனாகவும்விளங்கும் வைகுண்டவாசனாகிய மகாவிஷ்ணுவுக்கும் அவரதுதேவியாகிய மகாலட்சுமிக்கும் ஊடல்விளைந்து ஒருவருக்கொருவர் கலகமிட்டு, இலக்குமிதேவியார் தனதுநாயகனைவிட்டு நீங்கி, உலகின்கண் சேதுவிலோங்குங் கந்தமாதனகிரிச்சாரலில் வசிக்கும் முனிவர்களிடம்வந்துசேர்ந்து, தனக்கோர் பன்னசாலைபுதுக்கிக்கொடுக்கும்படிகேட்க, அன்னவர்களதுபோலமைத்துக்கொடுத்தபன்னசாலையிலெழுந்தருளியிருக்கையில், நாரதமகாமுனிவரவண்விஜயஞ்செய்து, அம்மனைக்கண்டு பணிந்து கூறிச்சென்ற வண்ணமங்ஙனம் ஓர் தடாகமுண்டுபண்ணி, அத்தடாகக்கரையிற் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து, பிரதிதினமுந்தான் அத்தடாகத்தில்மூழ்கிச் சிவலிங்கத்துக்கபிஷேகஞ்செய்து, மூன்றுகாலமும் பூசித்து நிட்டைசெய்து கொண்டிருக்கிறநாளையில், மகாவிஷ்ணு வானவர் வருத்தமுற்று, தேவியை யெங்குந்தேடிக்காணாது, முடிவில் கந்தமாதனகிரிச்சாரலிற்கண்டு, மனக்களிகொண்டு, அம்மனுக்கநேகவுபசார வார்த்தைகளைச்சொல்லி யழைத்துக் கொண்டு

ஸ்ரீவைகுண்டத்துக் கெழுந்தருளும்போது, மகாலட்சுமிதன்
னுலேற்படுத்திய தடாகத்துக்குத்தன்பெயர் விளங்கும்படியா
கவும், அதில் ஸ்நாநஞ்செய்து இலிங்கத்தைதெரிசிப்பவர்களு
க்கு கலிப்படாணுகாமலும், அஷ்ட ஐசுவரியங்களுங் கை
கூடும்படி வரங்களைக்கொடுத்துச்சென்றமையால் அதுமுதல்
அத்தீர்த்தத்திற்கு இலட்சுமி தீர்த்தமென்றபெயர், அதில்
மூழ்கியபேர்கள் மேன்மையாகிய போகபாக்கியங்களும் அஷ்
டைசுவரியங்களும்பெற்றுச்சக்ராதிபதிகளாய்அரசாட்சிசெய்
துபரத்துக்கேதுவாகிய மோட்சத்தையுமடைவார்களாதலால்,
அதுபோல் நந்தியாவட்டமாலையையுடைய துரியோதனாதிக
ளும் பாண்டவர்களும் ஒருவருக்கொருவர் மனஸ்தாபப்பட்டு.
பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்திலிருக்கையில், அவர்கள்பிதா
வாகிய பாண்டுபூபதியை இந்திரசபைக்கு வரப்படாதென்று
தேவராஜன் நீக்கிவிட்டமையால் தேவர்களியாவருஞ் சந்தோ
ஷிக்கும்படியாய் இராஜசூயயாகஞ்செய்து நிறைவேற்றினால்
தேவசபையிற் சேர்த்துக்கொள்வார்களெனக்கருதி, நாரதரிட
ம் தன்புத்திரர்களுக்குச்சொல்லியனுப்ப, அதுபோல் நாரதர்
பூலோகத்துக்குவந்து, பாண்டவர்களுக்குரைக்க, அதுகேட்
ட பாண்டுமக்களாகிய ஐவர்களுந்துன்பமடைந்து, ஸ்ரீகிரு
ஷ்ணமூர்த்தியையழைத்துவந்து ஆலோசிக்கவிரும்பிச் சிலதூ
தர்களைவருவித்து நிருபமெழுதிக்கொடுத்து துவாரகைக்குப்
போய்அதிதீவிரமாயழைத்துவரும்படியாய் உத்தரவுசெய்தனு
ப்ப, அவர்களுங்களிப்புடன் பிரயாணப்பட்டுக் காற்றினுங்
கொடியவேகமாய் துவாரகையைச்சேர்ந்து, கிருஷ்ணபகவா
னைக்கண்டுபணிந்து, திருமுகத்தைக்கொடுக்க, அதைவாசித்
துணர்ந்தமாயவன், அவ்வாறே இரதாரூடராய்ப் பிரயாணப்
பட்டு இந்திரப்பிரஸ்த்தத்தை நோக்கிவருகையில், பரந்தாமன்
வரவுகண்டபாண்டவர்கள் பரிவோடுமெதிர்கொண்டு வந்து
வணங்கி, வந்தனைவழிபாடுசெய்து, அழைத்துக்கொண்டுபோ
ய், நவரத்தினகசிதமாகிய அரியாசனத்திலெழுந்தருளச் செய்
து, தங்கள்மனக்குறையை போதியபோது, அதுகேட்டவாம

னன், பாண்டவர்களைநோக்கிக்கூறுவார், ஓ பாண்டவர்களே,
உங்கள் தாதையாகியபாண்டுபூபதி சொல்லியனுப்பியது சரி
தான், ஏனெனில், அதிவீரபராக்ரமசாலிகளாய் ஒப்பொருவ
ரில்லாமல்விளங்கும் உங்களை அவர்புத்திரராய்ப் படைத்தும்
தேவசபைக்குப்போக யோக்யதையில்லாதிருப்பது அழகல்ல
வாதலால், இந்திரபதவியினு மதிகமாயிருக்க வேண்டுமாயின்
இராஜசூயயாகஞ் செய்தாற்றான்கிடைக்கும், மேலும் அந்த
யாகஞ்செய்வதற்கோவென்றால், வேள்விக்கு வரும்படியாகிய
பிராமணர்களில் ஒவ்வொருவருக்கும் இரதங்களிலொன்றும்
யானைகளிலொன்றும் குதிரைகளிலொன்றும் ஒரு கூடை
பசும்பொன்விழுக்காடு முன்னூற்றறுபதுநாள்வரையிற்கொ
டுத்துக்கொண்டு வரவேண்டுமாதலால் அப்படி கொடுப்பத
ற்கு உங்களிடத்தில் ஒன்றுமில்லாமையால் மகாவிஷ்ணுவின்
தேவியாகிய இலட்சுமியாகிலும் கருணைசெய்து இவண்வந்
திருப்பாளாயின் யாகத்தைநிறைவேறச் செய்யலாமென்று
கிருஷ்ணபகவான்கூறியதுகேட்ட தருமராஜன், வாரும் சுவா
மி, ஸ்ரீமந்நாராயணமூர்த்தியாகிய பகவானே பிரசன்னமாயெ
ழுந்தருளி யெங்களிடத்தில் விளையாடிக்கொண்டிருக்கிறபோ
து மகாலட்சுமிவந்து குடிகொள்வதா பெரிய காரியமென்று
தருமராஜன்சொல்ல, அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் சொ
ல்லுவார், வாரும் தருமநந்தனா, நீர்சொல்லுவது சரிதானா
யினும் உங்களிடத்திலே லட்சுமிபிரசன்னமாய் அநேகபாக்
கியங்கள்வந்தடைந்து இராஜசூயயாகம் நிறைவேறும்படியாய்
நாமொருபாயஞ்சொல்லுகின்றோம், அதுயாதெனில், தென்
றிசையிற் சேதுமத்தியிலேயாக்குங் கந்தமாதனகிரிச்சாரலிலே
இலட்சுமிதீர்த்தமென்றோர் தடாகமிருக்கின்றது; அத்தடாகத்
துக்கு நீங்கள்யாவரும் பிரயாணப்பட்டுப்போய் ஒருமண்ட
லப்போது வரையிலிருந்து பிரதிதினம் புநிதவாசாரநியமத்
தோடும் மூன்றுவேளையும் தீர்த்தமாடி தானதருமங்களைச் செ
ய்தால் அஷ்டலட்சுமிகளுங் கைவசப்படுவது மல்லாமலும்
திக்குவிஜயஞ்செய்து அளவிறந்ததிரவியங்களையும் இரதகஜ

துரகபதாதிகளையுஞ் சேகரஞ்செய்துகொண்டு பின்னர் இராஜசூயயாகத்துக் கெத்தனிப்போமென்று கூறிய கிருஷ்ணபகவான் வாய்மையைக்கேட்ட தருமராஜன்மெத்தவுஞ் சந்தோஷமடைந்து, புரோகிதனைவருவித்து, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் முன்னிலையில் பொருந்தினதினம்பார்த்துப் பாண்டவர்களைப் பிரயாணப்படுத்தி, அவர்களிடத்தில் செலவுபெற்றுக்கொண்டுபகவான் துவாரகைக்குச்செல்ல, அப்போது பாண்டவர்கள் சுபமுகூர்த்தத்தில் இரதகஜதுரக பதாதிகளோடும் இந்திரப்பிரஸ்தத்தைவிட்டு நீங்கிக்காடுமலைவனம்வனாந்தரம் கானாறுநதிகள் முதலியபதிகளையும் திவ்யக்ஷேத்திரங்களையுந் தெரிசித்துக்கடந்து, சேதுவைச்சேர்ந்து, கந்தமாதன பருவதச்சாரலில்விளங்கும் இலட்சுமிதீர்த்தக்கரையிலிறங்கி, பகவான் திருவாய்மலர்ந்தருளியதுபோல் ஒருமண்டலப்போதுவரையினும் உபவாசமாய்க் கந்தமூலபலாதிகளைப் புசித்து, திரிகாலமுந்தீர்த்தமாடி, நியமித்தோடும் நித்யபடியாய்பிராம்மணருக்கு கோதானபூதான கன்னிகாதான வஸ்திரதானமுதலிய முப்பத்திரண்டறங்களையும் விசேஷமாகநடத்தி, இராமநாதனை அந்திசந்திதரிசித்துத் தோத்திரஞ்செய்து, ஒரு மண்டலப்போது நிறைவேறியபின்னர், அக்கிரிச்சார்பிலுண்டாகிய தீர்த்தங்களிலெல்லாந் தீர்த்தமாடி, கடவுளைவணங்கி, இரதகஜதுரக பதாதிகளோடும் பிரயாணப்பட்டு இந்திரப்பிரஸ்தம்வந்துசேர்ந்து, துவாரகைக்குத்தெரிவித்து, ஸ்ரீகிருஷ்ண பகவானைவரவழைத்து, வேண்டிய உபசாரணைகள் செய்து, தாங்கள்தீர்த்தமாடிவந்ததை ஆதியோடந்தமாய்த் தெரிவிக்க, அதைக்கேட்ட கிருஷ்ணமூர்த்திமெத்தவுஞ் சந்தோஷமடைந்து, பின்பு பீமசேன அர்ச்சுன நகுலசகாதேவர்களோடும் சேனாபதிமுதலிய இரதகஜதுரக பதாதிகளோடும் திக்குவிஜயஞ்செய்துவரும்படியாய் பிரயாணப்படுத்திவிட்டு, சத்யபாமையோடும் இந்திரப் பிரஸ்தத்திலிருந்து யாகத்துக்குவேண்டிய சாமக்கிரிகளைச் சேகரஞ் செய்துகொண்டிருக்கையில், வீமசேனன் அர்ச்சுனன்நகுலசகாதேவர்க ளிந்

நால்வருஞ் சேனைசயின்யங்களோடும் பதினெண் பூமியிலுள்ள ராஜவர்க்கங்களையும் ஐம்பத்தாறுதேசத்து பொக்கிஷபண்டாரங்களையும் இரதகஜதுரகபதாதிகளையுந் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டு, இந்திரப்பிரஸ்தம்வந்துசேர்ந்து, அநேகமாயிரங்கோடிவெள்ளமாய் ஆனை குதிரைமுதலியவைகளும் அநேகங்கோடிபாரம் பசும்பொன்னும் இலங்கைவேந்தனாகிய விபீஷணனாற் கொடுக்கப்பட்ட அளவிறந்தநவமணிக்குவியல்களும் பொற்குவியல்களும் ஆடையாபரணாதிகளுஞ் சேர்ப்பிக்கவிடமில்லாமல் நிறைத்துவைத்ததை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுந் தருமராஜனுங்கண்டு சந்தோஷமடைந்து, நல்லசுபமுகூர்த்தத்தில் இராஜசூய யாகத்துக் காரம்பஞ் செய்து, திரௌபதைசமேதராய் தபோதனர் ருஷீசுவரர் முநீசுவரர்கள் முன்னிலையில் பந்துமித்ராதியர்கள் சந்தோஷிக்கும்படியாய் நித்யவுபவாசமாய் மூன்றுகாலமும் வேதாகமவிதிப்படி ஸ்நானஞ்செய்து, முன்னூற்றறுபதுநாள்வரையில் யாகத்தையநுட்டித்து, பூரணாகுதிசெய்து, தேவர்கள் சந்தோஷப்படும்படியாய்க்கொடுத்து, பிராமணாள் முதலியபெரியோர்களுக்கு ஒவ்வொருவருக்கும் இரதகஜதுரகமுதலியவைகளும், பசும்பொன்னும் ஆடையாபரணங்களுங்கொடுத்து திருப்திசெய்வித்து, யாகமுடிந்தபின்னர், இவர்கள் தந்தையாகிய பாண்டுபூபதியை பொன்னுலகத்தரசனாகிய இந்திராதிதேவர்களெதிர்கொண்டுபோய் அநேகசமித்யோபசாரங்களோடு மழைத்துவந்து தேவராஜனுக்கிணையாய் இந்திரநீலமரகதவெயில்பரப்புமரியாசனத்தில் உட்காரவைத்துக்கொண்டிருக்கையில், இங்ஙனம் தானம்வாங்கியபிராமணாள்முதலியபெரியோர்களியாவரும் பேரானந்தமுற்றுப் பாண்டவர்களைப்புகழ்ந்து விடைபெற்று அவர்களுடைய ஸ்தானங்களுக்குப் போய்ச்சேர்ந்தார்கள், பின்பு குந்திமக்களாகிய பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை யுள்ளன்போடும்புகழ்ந்து தோத்திரஞ்செய்து, துவாரகைக்கு அநுப்பி, தாங்கள் அஷ்டலட்சுமி கடாக்ஷம் பொருந்திவாழ்ந்திருந்தமையால் அத்தீர்த்தத்தின் பெருமை

யை யாவராற்சொல்லிமுடியுமென்று சூதமுநிவர்கூறியதைக்
கேட்ட முநிவர்கள்சந்தோஷங்கொண்டு, சுவாமி, பின்னுமங்
குளதீர்த்த மகிமைகளைச் சொல்லவேண்டுமென்று வினவ,
சூதர் உளங்களிகூர்ந்து, ஓ முநிவர்களே, அக்கினிதீர்த்தமெ
ன்று ஓர் தீர்த்தமுண்டு, அதன்பெருமையைச்சொல்லுகிறே
மென்று சொல்லத்தொடங்கினர்.

இலக்குமிதீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

அக்கினிதீர்த்தச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முநிவர்களே,
செப்புதற்கரிய சிறப்புற்றிலகுங் கந்தமாதனபருவதச்சாரலில்
தருமசொரூபமாயும் செல்வவடிவாயும்தபோதநாதிபுண்ணி
யர்களுக்குத் தாயகமாகியும் சமுத்திரக்கரையருகில் விளங்
காநின்ற அக்கினிதீர்த்தமென்றோர்தீர்த்தமுண்டு,அத்தீர்த்தத்
தில் மூழ்கியபேர்களுக்கு உண்டாகிய அஞ்ஞானக்களகன்று
தேஜோமயமாய் விளங்கும்படிசெய்யு மதன்பெருமையை
யாவராற் சொல்லப்படுமென்று சூதமகாமுநிவருரைத்த வாய்
மையைக்கேட்ட நைமிசாரண்யர் மிகவுஞ்சந்தோஷ மடை
ந்து, சுவாமி, தேவரீர் கூறியவண்ணமத்தீர்த்தம் செல்வவடி
வாயிருப்பதற்கு அக்கினிதீர்த்தமென்று பெயர்வந்த காரண
மியாதோ, அதனை அடியோங்களுக்குத்திருவாய்மலர்ந் தருள
வேண்டுமென்றுகேட்க, அதற்குக்கூறுவார், ஓ முநிவர்களே,
ஸ்ரீராமமூர்த்தியின்தேவியாகிய சீதாபிராட்டியை இலங்கை
வேந்தன்கொண்டுபோய் அசோகவனத்திற் சிறையிட்டிருந்த
போது அன்னவன்தம்பியாகிய விபீஷணனை இராமமூர்த்தி
யானவர் அடிமைகொண்டு இலங்கைக்குச் சேதுபந்தனஞ்
செய்து வானரவீரர்களோடுஞ் சேனைகளோடுஞ் சென்று
இராவணனதுபத்துமுடியும் பனங்கொத்துப்போல் அற்று
விழச்செய்து, அவ்விலங்கைக்கு விபீஷணனைப் பட்டாபி

ஷேகஞ்செய்து, அவணின்றுஞ் சீதாபிராட்டியோடும் மீண்டு,
கந்தமாதனகிரிச்சாரலில் வயங்கும்வனத்தில் வந்துசேர்ந்து,
உம்பராதி யிம்பர்களுக்குரிய வுளக்கலக்க நீங்கும்படியாய்
மனதில்நினைத்தும் இராமமூர்த்தியானவர் அக்கினிதேவனை
வரும்படியாய் நினைத்தமாத்திரத்தில், அக்கினிதேவன் தன்
னுடைய இச்சாசொரூபமாய் சிவந்ததேகத்துடனுஞ் சிவந்த
கண்களுடனும் வக்ரதந்தங்களுடனும் எழுநாவுடனும் சிவ
ந்த ஆடையாபரணங்களுடனும், சிவந்தவில்லும் அம்புங்
கொண்டு, நாற்றிசையு மக்கினிச்சுவாலையானது வீசும்படி
யாய் இராமமூர்த்தியின் முன்வந்துநிற்கும்போது, அவனைக்
கண்ட தசரதநயன் சந்தோஷத்தையடைந்து, சீதாபிராட்டி
யைப்பார்த்துக்கூறுவார்,வாரும் சனகனுக்கிருகண்மணிபோ
ல்விளங்கும் பெண்ணே, உனதுபதிவிரதாதன்மம் யாவருக்
கும் விளங்கும்படியாய் இந்த அக்கினியிலேமூழ்கிவரவேண்டு
மென்றுசொல்ல, அதுகேட்டதேவியார் மகாசந்தோஷத்தை
யடைந்து யானையைக்கண்ட சிங்கத்தைப்போலும் கலையைக்
கண்டபுலியைப்போலும் அக்கினியிற்பாய்ந்து நாற்றிசையு
மூலாவ, அதைதேவேந்திராதிமுநிவர்கள் முதலியயாவரும்
கண்டு அம்மனுடையகற்புக்கு ஆச்சரியமடைந்து பாரிஜாத
மந்தாரமுதலிய மலர்களைச்சோனை மாரிபோற்சலசலவென்று
வருஷிக்கும்படியாய்ச்செய்து தேவதுந்துபி முழக்கும்போ
து, அக்கினிபகவான் அம்மனது கற்பாகிய கடுங்கனலைத்
தான் தாங்கமாட்டாமல், தாயே, நினதுகுழந்தையாகிய என
க்கு தேகங்குழைந்துவெந்துநொந்துபோகின்றதே,என்செய்
வே னம்மணீ, கடையேனை யிவ்வேளைகாப்பாற்றி ரட்சிக்கும்
படிக்கருணைசெய்து வெளிப்படுவாய்தாயேயென்று துன்புறு
வதைக்கண்ட இராமசந்திரமூர்த்தி சந்தோஷத்தை யடைந்
திருக்க, அப்போது, அக்கினிதேவன் பயபக்தி விநயத்தோ
டும் சுவாமியின்பாதத்திற்பணிந்து கூறுவான், சுவாமி; இந்த
சீதாலட்சுமியினுடைய மகிமையை ஆயிரஞ்சிரமு மிரண்டா
யிரம் நாவும்படைத்த ஆதிசேடனுக்குஞ்சொல்ல வரிதென்

ருல் ஏழுசாவையுடைய நானெவ்வாறுசொல்லுவேன், மேலும், இந்தமகாலட்சுமியைப் பரிசோதிக்கவுங் கூடுமோ, சகலலோகங்களினும் விளங்கும்பெண்களுக்குட் சிரோமணியாயிருப்பதன்றியுந் தேவர்கண்முதலிய யாவருக்குந் நாயகமாயிருப்பவள், நரவுருவாயவதரித்து தேவரீருக்கு பாரியாகத் தோன்றிய மாயாசொரூபி, நித்யமங்கலகலியாணி, சகலஜனபரிபாலினி, ஜெகன்மோகினியே யிந்தவுருவங் கொண்டு சீதையென்னும் பெயர்பூண்டு இந்தயுகத்திலனந்த வற்புதங்களையெல்லாம் கடப்பிக்கும்பொருட்டு அவதரித்திருக்கு மம்மணியை, தேவரீர்பரிசோதிப்ப தெவ்வாறெனச் சொல்ல, அப்போது தேவேந்திரன் முதலியயாவருஞ் சந்தோஷமடைந்து, அம்மனை மேன்மேலும் புகழ்ந்தார்கள், அதுகண்ட இராமமூர்த்தி மனமகிழ்வுகொண்டு தனதுதேவியைக்கருணையோடும்நோக்கி, வாரும்பெண்ணேயென்றழைக்க, உடனே சீதாபிராட்டியார் தனதுகூந்தலிலேயணிந்திருந்த புட்பங்களெல்லாம் அன்றலர்ந்தபுட்பம்போற் பிரகாசிக்கும்படியாய் அக்கினியைவிட்டு வெளிப்பட்டு தனதுநாயகனாகிய இராமமூர்த்தியைப்பணிந்துநிற்கையில், அக்கினிதேவனுமகாலட்சுமியைச்சோதித்த பாபந்தீரும்படியாய்சமுத்திரத்திலேஸ்நாநஞ்செய்து இராமமூர்த்தியைவந்துவணங்க, அப்போது இராமர், வாருமக்கினி பகவானே, நீர் சமுத்திரத்தில் முழுகினமையால் அந்த இடத்துக்கு இன்றுமுதல் அக்கினி தீர்த்தமென்று சந்திர சூரியாளுள்ளவரையில் விளங்குவதோடும் மகாமகிமைகளைப்பெற்றும் எவ்வகைப்பாபிகள் வந்து தீர்த்தமாடிய போதிலும் அவர்களுடைய பாபங்களியாவுமகன்று புண்யதேகத்தைப்பெற்று சாலோகசாமீப சாரூப சாயுச்யமென்னும் பதவிகளைப் பெறுவதோடும், பெண்களாய்ப் பிறந்தவர்கள் கற்பும் மக்கட்பேறும்பெற்று பரிசுத்தராவ தன்றியும் அன்னவர்களைப்பற்றிய பிரமராக்ஷஸி முதலிய பேய் பிசாசுகளும் விலகிப்போகுமென்றும் வாக்களித்து, இராமமூர்த்தியானவர் சீதாபிராட்டி முதலியயாவரோடு மவணின்றெழுந்தருளிக் கந்தமாதனபருவதத்திற்சேர்ந்

திருந்தாரென்று சூதமுனிவர்சொல்ல, அதுகேட்ட நைமிசாரண்யர், சுவாமி, தேவரீர் பூதபிரேதபிசாசகணங்களும்விலகுமென்றுகூறியது எவ்வண்ணம், அதைத்திருவுளம் பற்றவேண்டுமென்று வினவியமுனிவரைப்பார்த்து, ஓ முனிவர்களே, இந்தபூலோகத்திலே பாடலிபுரமென் றோர்பட்டணமுண்டு, அந்தப்பட்டணத்திலேபசுமானென்னுமோர்செட்டியானவன் மிகவும் யோக்யதாபட்சமுடையவனாகவும்புத்திசாலியாகவும் வெள்ளி பொன்முதலியபல பலவியாபாரங்களினுங் கீர்த்தி வகித்தவனாகவும் இராஜசன்மான முடையவனாகவு மிருப்பனுக்கு இரத்தினவதியென்றும் சொர்ணவதியென்றும் குணவதியென்றும் பெயரையுடைய மூன்றுபத்தினிகளுண்டு, அம்மூன்றுபேர்களுள் மூத்தவளாகிய இரத்தினவதியென்பவளுக்கு சுவன்யனென்றும் டண்யனென்றும் சொரூபன்யனென்றும் மூன்றுபுத்திரர்களும், அவளுக்கிளையாளாகிய சொர்ணவதியென்பவளுக்கு சுகோசகனென்றும் கோசகனென்று மிரண்டுபிள்ளைகளும், அவளுக்கிளையாளாகிய குணவதியென்பவளுக்கு பன்னியனென்றும் கோசனனென்றும் துற்பன்னியனென்று மூன்றுபிள்ளைகளுமாக எட்டுப்பிள்ளைகள் பிறந்தமையால் அவர்களது தாய்மார்களுந் தந்தையு மிகவுங் களிப்போடு நாளொருமேனியாய்வளர்த்து மூன்றாம்பிறைச் சந்திரனைப்போலவளர்ந்து வரும்பிள்ளைகளுக்கு ஐந்துவயது பூரணமாகக்கண்டு, வித்யாரம்பஞ்செய்யக்கருதி, சுபமுகூர்த்தங்கொண்டு, பள்ளிக்கூடத்தில்வைத்து, கல்விப்பயிற்சிசெய்துவருகிறபோது, தம்முடையகுலாசார வித்தைகளையும்போதனைசெய்துவைத்துச்சமர்த்தராகும்படிசெய்து, சுவன்யன்முதலிய எட்டுப்பிள்ளைகளுந் தாய்தந்தையர்களும் சந்தோஷித்தர்களாய் வாழ்ந்துவருநாளில், அப்பிள்ளைகளினது சமர்த்துகளைத் தெரிந்ததந்தையானவன் வர்த்தகஞ்செய்யும்படியாய்ச் செய்யவேண்டுமென்று யோசிக்கும்போது, யாவருக்குமிளையவனாகிய துற்பன்னியனானவன் மிகவுஞ்சிறுவனாகவிருப்பதால் அறிவீனத்தால் துன்மார்க்கத்திற் பிரவேசித்து இளங்கன்றுபயமறியாதென்னுந்தன்மைபோல் பாம்

பின் குட்டியைப்போல் மனத்தில் விஷத்துக்கொப்பாகிய துர்ப்புத்தியைவகித்துக்கொண்டு, தன்னிச்சையாய்த்திரிந்து வருவதைநோக்கி யெவ்வாறிருந்ததெனில், அஷ்டதிக்குப்பாலர்களிலொருவனாகிய அந்தகனென்னும் எமன் எப்படி உலகினருக்குப்பயங்கரத்தைத்தாந்தக்கவனாகவிருப்பானோவதுபோலிச்சிறுவன்அப்பாடலிபுரத்தில்வாழும்பிராமணக்ஷத்திரியவைசிய சூத்திரரென்னு நான்குவருணத்தினும் தன்னைப்போன்ற சிறுவர்களையுந் தனக்கு ஒருவருட மிரண்டுவருடம் பெரியவர்களாகவிருக்கும் பிள்ளைகளையும்நேசித்து, அப்பாநேசரே, இவ்வூருக்குப் புறம்பாகவிருக்கும் ஏரிகளிலுங் குளங்களிலும் மடுக்களிலும் விசேஷமாய்த் தாமரை அல்லி நீலோற்பலஞ் செங்கழுநீர்முதலியபுட்பங்கள் அபரிமிதமாய் புட்பித்திருப்பதால்நாம்போய்ப்பறித்துவந்துவிளையாடுவோம்வாருங்களென்று கூட்டிக்கொண்டுபோய், ஊருக்குப்புறம்பாய் இரண்டுகாழிகைத் தூரத்திலிருக்குங் குளங்களிலேனு மடுக்களிலேனு மிழியச்செய்து ஜலத்துள்ளழுத்தி மிதித்துக்கொன்றுவிட்டு இதாரறியாமல்மவுனமாயிருந்தும் இதேதொழிலாய் அவ்வூரிலுள்ள சிறுவர்களைநாசப்படுத்திவருகையில், பிள்ளையை யிழந்தவர்களிச்சங்கதியைத்தெரிந்து கொள்ளமாட்டாமல் கூகூவென்றலறியும்வயிற்றிலறைந்துகொண்டும், ஐயோ, இப்போது தயிருஞ்சாதமுஞ்சாப்பிட்டு வெளியில்வந்தவனைக் காண்கிலனே, ஏன்செய்வோமென்பவர்கள்சிலரும்; இதோ பட்சணம்வாங்கி யுண்ணவேண்டுமென்று படாதபாடுபடுத்திக் காசுவாங்கி வந்தவனைக்கடைவீதியிலுங் காண்கிலோமேயென்பவர்கள்சிலரும், ஐயோ, அடியக்கச்சி, நேற்றையதினஞ் செய்து வைத்திருந்த பட்சணத்தைக்கொடுக்கச்சொல்லி வாங்கிவந்த மைந்தனைக்காண்கிலே மென்போர்கள் பலருமாய் இறைச்சலிடுதோடும், ஐயோ, காலன்தான்வந்து ஆவியைக் கொண்டுபோனபோதிலும் பட்டணமுழுதுந்தேடியும் உடலத்தையுங் காணேமேயென்பாரும்; அல்லதுபட்டணமோ விழுங்கிவிட்டதென்பாரும்; அடிதங்காய், இப்போது தா

னென்னொரு குழந்தைக்குத் தயிலமிட்டு மஞ்சனமாட்டி அதிற்புகையூட்டிவிடுத்த பிள்ளைமாயமானால் இக்கொள்ளைக்கென்செய்வேனென்பாரும்; ஐயோ, என்மகன் கடாவிளையாட்டுப்பார்த்துக்கொண்டு அரண்மனைவாயிலில்நின்றவன் இதற்குள் எங்குசென்றானென்று ஓடிப்போய்த்தேடுவாரும், சிலர் அரைக்கணமேனு மென்னைவிட்டுப்பிரியாதவன் இப்போதென்ன மாயமானானோவென்கண்மணியைக் காணேமேயென்பாரும், இவ்வாறு பற்பலவிதமாய்த் துன்பப்படுவதைக்கண்ட துற்பன்னியனென்பவன் இருபதுநாள் முப்பதுநாள்வரையி லசரப்போட்டுத்தானுமவர்களோடு கூடிக்கொண்டுபிள்ளைகளைத் தேடிவிசனமடைந்து மெத்தவுந்துன்பப்படுமவனைப்போலிருந்து, ஊரிற் சந்தடியடங்கியபின் மறுபடியுமவ்வாறுசெய்து ஒன்றுமறியாதவனைப் போலிருப்பான்; மேலுமிவன்றந்தையாகிய பசுமானென்பவன் திரவியவந்தனாகவும் பெரியவியாபாரியாகவுந் தயாள்குணமுடையவனாகவும் அரசனுக்கு கண்மணிபோலிருக்கின்றவனாகவு மிருப்பதுபற்றி அவனுடைய புத்திரன்பேரிற் சந்தேகிப்பதற்கிடமில்லாமல் அவரவர்கள் பிள்ளைகளைத்தேடிக்காணமை லழுவதுங்கருமஞ் செய்வதுமேதொழிலாய் அப்பட்டணமுழுமையும் புத்ரவிர்த்தியில்லாமல் நாளுக்குநாள் க்ஷீணப்பட்டு இழந்தயாவரு மரசனிடத்தில் ஓரேகூட்டமாய்ச்சேர்ந்து வருஞ்சங்கதிகளைச் சொல்லி, வயிற்றிலறைந்து கூக்குரலிட்டார்கள், அதுகேட்டவரசன் ஆச்சர்யமும் அடக்கப்படாததுன்பமுங்கொண்டு, உடனே காவலாளரைவருவித்து, அடா காவலாளிகளே, நமதுபட்டணத்திற்கிஞ்சித்தேனு மச்சமில்லாமல் பிள்ளைகளைப்பிடித்துக்கொண்டுபோகும்படியாகிய கள்ளரைப் பதிவிருந்துபார்த்துப்பிடித்துக்கொண்டு வாருங்களென்றுகட்டளையிட, அப்படியே அக்காவலாளிகள் அவர்களாற்கூடிய தந்திரங்கள்செய்தும் கள்ளனகப்படாததுயாதெனின், இக்கொடுமைக்குரிய துற்பன்னியனெனவன் குழந்தைகளோடு குழந்தையாய்க்கூடி விளையாடி யிழுத்துக்கொண்டுபோய்க் கொல்லுவதையோசி

யாமலு மவன்பேரிற்கலவரப்படாமலு மிருப்பதனால்மேலும்
மேலும்விர்த்திபட்டு மறுபடியும் பிள்ளைகளைப்பலிகொடுத்த
வர்கள் அரசன்கொலுமுகத்திற்போய்க் கூச்சலிட்டுழல்வதை
க்கண்டவேந்தன்மிகவும்பரிதாபங்கொண்டு அயர்வுற்றிருக்கை
யில், ஒருநாள், துற்பன்னியனானவன் அந்தப்பட்டணத்துப்
பிள்ளைகளிலே ஐந்துபிள்ளைகளைத் தாமரைப்பூப் பறித்துக்
கொண்டுவரலாம் வாருங்களென்று ஊருக்குப்புறம்பாயோங்
குங் காட்டிலேயழைத்துக்கொண்டுபோய் மெத்தவும் ஆழம்
பொருந்தியதாகவும் ஆம்பல்நெய்தல்கொட்டி முதலியபுட்பங்
கள் புட்பித்திருக்குமோர் மடுவில் இவ்வைந்து பிள்ளைகளையு
மிறங்கச்செய்து தானுங்கூடவிழிந்து கழுத்தளவுஜலவரையி
லவர்களைப்பற்றிக்கொண்டுபோய் ஒவ்வொருவராய்ச்சேற்றுள்
ளழுந்தும்படி மிதித்துத்துவைத்துவிட்டுத் தான்கரையேறிப்
பட்டணத்துக்கோடிவந்து ஒன்றுந்தெரியாதவனைப்போலிரு
க்கையில், சேற்றிலழுந்திய வச்சிறுவர்களுக் குயிர்நீங்காமல்
ஜலத்தைக்குடித்துத் திகைத்து ஒருவரையொருவர் பற்றியிழு
த்துத்தடுமாறிக் கடவுளின்னருளாற் கரையேறித்தங்கள் வீடு
வந்துசேருவதற்குத் தடந்தெரியாமல் அம்மடுக்கரையிற்றானே
கோவென்றழுதுகொண்டிருக்கும் ஓசையை வழிப்போக்கர்
அறிந்து, பாடலிபுரத்திற்போய்ச்சொல்ல, அச்சங்கதியைப்
பட்டணத்திலுள்ள யாவருங்கேட்டு, ஐயோ என்பிள்ளையெ
ன்று ஓடோடியும் போய்ப்பார்க்கையில், அப்பிள்ளைகள் தேக
மெல்லாஞ்சேருகவுஞ் ஜலமானது காதிலும் மூக்கிலும் வாய்
வழியிலுமேறிப் பெருமூச்செறிந்து வயிறுகளுப்பிப் பேசுவ
தற்கு மசக்தராயும் துற்பன்னியனது காலினால்மிதிபட்டிருக்
கும் வருத்தத்தோடு மெலிந்திருப்பதை யக்குழந்தைகளின்
தாய்தந்தைகள்கண்டு, துக்கமேற்கொண்டு, ஒருவாறுதேர்ந்து;
அடா, நீங்கள் இங்குவந்தவிதமென்ன, உங்களைக்கூட்டிவந்த
வர்யார், உங்களுக்கு உடம்பெல்லாஞ்சேருகியவிதமெப்படி,
சொல்லுங்களடா குழந்தைகாளென்றுகேட்க, அதற்கந்தப்
பிள்ளைகள் தத் தம் தாய்தந்தைகளோடு நடந்தசங்கதிகளை யா

றியோடந்தமாய்ச்சொல்ல, அவ்வார்த்தையையாவருங் கேட்
டுத்திடுக்கிட்டு, அடா அப்பா, இந்தசண்டாளச்செட்டிப்பய
லா, சதிசெய்து ஊரிலுள்ள பிள்ளைகளையெல்லாங் கொன்று
வருகிறானென்றுநடுங்கி மெய்சோர்ந்து பெருமூச்செறிந்து,
ஒன்றுந்தோற்றுதவராய், அவ்வைந்துபிள்ளைகளையு மெடுத்
துக்கொண்டு பட்டணம்வந்துசேர்ந்து, கொலுமுகத்துக்குப்
போய் வேந்தனிடத்தில் முறையிட்டார்கள், அவ்வாறுரைத்த
மொழியைக்கேட்டவேந்தன் திடுக்கிட்டு மனதுகலங்கிச் சிவ
சிவாவென்று செவிகளைப்புதைத்தும், இப்பாதகத்தை யெவ்
வகை தொலைப்போமென்று யோசித்தும்மந்திரிப்பிரதானிகளுட
னே யோசித்துப் பசுமானென்கிற செட்டியைக்கூட்டிவரும்
படியாய் தூதர்களையனுப்பிவைக்க, அதுபோலத்தூதர்களோ
டிப்போய்ச் செட்டிக்கறிக்கையிட்டளவிற் செட்டியானவன்
கேட்டுத் திகைத்தெழுந்திருந்து மிகுந்தபயத்தோடு அரசனை
வந்துவணங்க, அரசன்கண்டு, வாராய்பசுமானே, உனது
இளயகுமாரனாகிய துற்பன்னியனானவன் பிள்ளைகளைக்கொல்
லும் பெரும்பூதமாய் இதுவரையில்நமது பட்டணத்திலுள்ள
நான்குவருணத்தவர்களது பிள்ளைகளைநாசப்படுத்திவந்தது
மல்லாமல் இன்றயதினமைந்துபிள்ளைகளைக் கூட்டிக்கொ
ண்டு ஊருக்குப்புறம்பாயிருக்கு மடுக்கரைக்குப்போ யம்மடு
வி லவர்களைச்சேற்றிலழுத்திவிட்டு ஓடிவந்துவிட்டதாய்ப்
பிரசைகள்சொல்லுகின்றமையால் அதற்குநீ என்னசொல்லு
கிறாயென்றுகேட்கச் செட்டியானவன் சிந்தைகலங்கி, ஓ வே
ந்தே, யானென்செய்வேன், கடவுளெனக்கு இத்தன்மைபூண்ட
கொடும்பாவியாகிய பிள்ளையைக்கட்டளையிட்டிருக்கின்ற படி
யாலும் இராஜநீதிக்குவழுவில்லாமற் கொன்றவனைக்கொல்ல
வேண்டுமென்னுந் தன்மையின்படி தேவரீருக்குப் புண்ணிய
முண்டாகும்படியாய் அப்பாவியைக்கொலைசெய்யாமல் இச்
சீமை யெல்லையைக்கடந்துபோகும்படியாய் ஓட்டிவிடும்படி
உத்தரவுசெய்தால்கொன்றவனைக்கொல்லுங்கொலையென்னும்
வாக்கியம்போல, தானேகொலையுண்டு விடுவானாதலால் தா

யென்றுந் தமரென்றும் பெண்சாதிபிள்ளைகளென்றும் சிநேகிதரென்றும் பார்க்கப்படாததாலும், அப்படி ஒருவேளை அபிமானத்தால் யோசித்தாற்செங்கோல் கொடுங்கோலாய் இலட்சுமியும் விலகிச்செய்தபுண்ணியங்களும் பாழ்படுமாதலால் தேவரீர் எனது தாட்சண்ணியத்தை மனதிலேநினைத்தால் இச்சண்டாளன் செய்துவருங்கொடுமையினாலே இப்பட்டணமும்நாசமாய் என்குலத்துக்குங் கெடுதிசம்பவிக்குமென்றும், கொல்லாமல்தூரத்திவிடும்படியாய்ப் புத்திரவாஞ்சையாற்சொல்லுஞ் செட்டியைநோக்கி, அரசனானவன், ஐயா, செட்டியாரே, நீசொல்லியவண்ணம் உன்பிள்ளையைவிடலாமோவென்றுகேட்க, அதற்குசெட்டியானவன், மகாராஜனே, தேவரீர் கூறியமொழியை யடியேன்கேட்டவுடனே நானே யவனைக் கொல்லவேண்டுமாதலால் தமது சித்தம்போற்செய்துகொள்ளுமென்றுகூற, அப்போதரசன், அவ்விடமிருக்குந் தூதுவர்களைநோக்கி, அடா தூதர்களே, துற்பன்னனைக் கொண்டு வாருங்களென்றுகூற, உடனே தூதர்களோடிப்போய் துற்பன்னனைப்பிடித்துவந்து இராஜசமுகத்தில்விட, இராஜன் அக்கொடியவனைநோக்கி, அடா துற்பன்னா, நீ நடந்தகாரியங்களை ஒளியாமற்சொல்லடாவென்றுகேட்க, அப்போது துற்பன்னன் தான்நடத்திவந்தகாரியங்களையாதும் ஒளியாமல் வேந்தன்முன் உண்மையாய்க்கூற, அவ்வுரைகேட்ட அரசன் சினங்கொண்டவனாய் அங்குள்ளகொலைஞரைப்பார்த்து, அடா கொலைஞர்களே, இச்சண்டாளனை ஓர்கணப்போதினும்வையாமல் இவ்வெல்லைக்குப் புறம்பாய்க் கூட்டிக்கொண்டுபோய் இவ்வழிமறுபடியும் நோக்காமலிருக்கும்படியாய் தூரத்திவிட்டுவாருங்களென்றுகூற, அதுபோற்றலையாரிகளும் அரசனது உத்தரவின்படி அவ்வூரிலுள்ளஜனங்கள் காணும்படியாய் துற்பன்னனுடைய பிடரியைப்பற்றி முன்னும் பின்னுமாயிழுத்துத் தள்ளிக்கொண்டுபோகிறபோது, அப்பட்டணத்திலுள்ள ஜனங்களியாவருமவனைப்பார்த்து, மண்ணைவாரித்தூற்றி, என்பிள்ளையை அநியாயமாய்க்கொன்ற இச்சண்

டாளனை ஜாக்ரதையாய்க்கொண்டுபோங்க ளில்லாவிட்டால் உங்களையும் மோசம்பண்ணிவிட்டுவந்துவிடுவானென்பாரும், இவன் இதுபரியந்தஞ் செய்துவந்த விசித்ரமொருவருக்குந் தெரியாமலிருந்தபடியால் நாம்செய்தவூழ்வினையெல்லாங் கூடி இவ்வுருவாய்வந்து ஜனித்தானோவென்பாரும், ஐயோ, தருமசொரூபியாகிய பசுமானனுக்கு இக்கொடும்பாவிபிள்ளையாய்வந்துஜனித்தது அவனது பண்டைவினையோவென்பாரும், ஐயோ, இக்கொடும்பாவிக்கு இத்துற்புத்தியை யார்போதனை செய்தாரோவென்பாரும், அடியம்மா, இதோபிள்ளையைக்கொல்லும்பெரும்பூதம்வருகுதடியென்பாரும், இப்படிபலபலவிதமாய்ப்பேசியவரவர்கள்தத்தம்வீடுபோய்ச்சேருகையில், இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டே வருகிறதுற்பன்னியனைத் தூதர்கள்பட்டணத்துக்குப்புறம்பாய் இரண்டுகாதம்வழிக்கப்பாற்கொண்டுபோய் அத்திசையிலுள்ள காவலாளிகளுக்கு இவனுடைய சேதியைத்தெரிவித்து இவன் இத்திசைநோக்கிவராமல் சாக்ரதையாய் பாருங்களென்றுஞ்சொல்லி, துற்பன்னியனை விரட்டித்தூரத்திவிட்டு, அரசனிடத்தில்வந்துவணங்கிச்செய்தியையறிவித்து விட்டார்கள்.

அப்பால் துற்பன்னியனானவன் நெருப்பு எவ்விடத்திருந்தபோது மதன்குணத்தைக் காட்டுந்தன்மைபோல இராஜனது காவலாளிகளால் தன்னைத்தூரத்தியபின்னரவ்வனமெல்லாஞ்சுற்றிக்கொண்டு துலைதூரஞ்செல்லும்போது, மிகுதியும் பசியுண்டாகியதால் அவ்வனத்திலுள்ள காய்கனிகிழங்குகளைப்பறித்துத்தின்றும் இவ்வனத்திலெங்கேனும் பிள்ளைகளகப்படுமோவென்னு மெண்ணத்தோடும் அலைந்துதிரிகிறபோது, ஓர்நாள்வனத்துள் மலையடிவாரத்தில் தபசிகளாகிய பெரியோர்களிருக்கும்பன்னசாலையினிடம்போய் நிற்கையில், அம்முனிவர்களது பிள்ளைகளிற்சிலர்கூடி, பூசைக்குப்பத்திரபுட்பங்களைக்கொண்டுவரும்படியாய்ப்போகையில்; அப்பிள்ளைகளில் ஒருவனைகெட்டியாய் மற்கட்டாகப்பிடித்துக் கட்டிக்கொண்டுபோய் அவ்வனத்திலே யிருக்குங்குளத்தில் அமுத்தி

மிதித்துக்கொல்ல, உடனே அச்சிறுவனுடன் கூடிவந்த பிள்ளைகளி யாவருங்கண்டுபயந்து கோவென்றலறி யபயமிட்டுக்கொண்டோடிப்போய் தங்களுடைய ஆசிரமஞ்சேர்ந்து, இறந்துவிட்ட சிறுவனதுதந்தையாகிய உச்சிரவாகுமுனிவரிடத்திற்சொல்ல, அதுகேட்டமுனிவர் திடுக்கிட்டெழுந்து, குளக்கரைக் கோடிவந்துபார்க்கையில்; குழந்தைசேற்றிலழுந்தியுயிர்மாய்ந் திருப்பதைக்கண்டு, பெருந்துன்பங்கொண்டு, அடங்காக்கோபத்துடனே அங்கிருந்த துற்பன்னியனைப்பார்த்து, அடாசண்டாளா, நீ கிஞ்சித்தேனும் யோசியாமல் என் பிள்ளையை அனியாயமாய்க் கொன்றபடியால் நீ பெருந்துன்பத்துக்காளாகி அலகையாகக்கடவையென்று சாபங்கொடுக்க, அதுகேட்டதுற்பன்னியன் மனங்கலங்கிதயிரியமு மிழந்து அச்சமுற்றவனாய் தான்முன்செய்திருந்தகொலைகள் இவனைச்சூழ்ந்துவாதிக்க, அதனால்யாதுந்தோற்றாமல் வெறிகொண்டவன்போல் அக்காட்டில்வாழுங் காடி புலி சிங்கம் காட்டெருமைகளுக்கொப்பாய், அவைகளோடுஞ்சேர்ந்து சஞ்சரித்து, இரைமுதலியவும் ஜலபானமுங்கிடைக்காமல் அலைந்துதிரிகிறபோது, ஒருநாள் அவ்வனத்திற் சண்டமாருதம் போன்ற ஓர் சூறவளிக்காற்றும் அதனோடுமழையுமுண்டாகி ஊழிக்காலம்போல்மோத, அதனால் மரங்கள்முதலியவைகளும் மான்மரைமுதலிய விலங்கினங்களும் பெருங்காற்றிலகப்பட்ட சருகுபோற்கீழேமோதிவிழுந்து மழைவெள்ளத்தில் உருட்டிக்கொண்டுவருகையில்; துற்பன்னியனானவன் எவ்வகையுமில்லாமல் வெள்ளத்திலுருட்டிவரும் விருட்சங்களையும் கற்பாறைகளையும்பற்றித் துன்பமடைந்தும் காசானாதிகள் விலவிலத்தும் தேகங்குளிர்ந்தும் பசிப்பிணியான்மெலிந்தும் நான்குகாற்பாய்ச்சற்போற் றவழ்ந்துகொண்டு வருகையில், அவனதுபார்வைக்குமுன் அவ்வனத்திற் பர்வதாகாரம்போல் மும்மதங்கொண்டயானையானது இறந்துகிடப்பதைக் கண்டு சந்தோஷக்கொண்டு, அதனருகில்வந்து, அதன்வாயினிடத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கையில், அந்தயானையி

னது வாயானது கிழிபட்டிருந்தமையால் அது இவன்கண்ணுக்கு ஓர் மலைக்குகையைப்போற் றோன்றியதைக்கண்டு குளிர்வாடையைச் சகியாதவனாய் அவ்வழியாற் பிரவேசித்து வயிற்றில்நான்குபுறமும்போய் முட்டிப்பார்த்து, மறுபடியும் வெளியில்வருவதற்கு வழிதெரியாமல் தன்பல்லினாலேயானையினது குடல்களைக்கடித்தும், என்புகளைநொறுக்கியும், தோலைக்கடித்தும் ஒருபக்கத்தைப்பிறிக்கொண்டு வெளியில்வந்து பசிபொறுக்கமாட்டாமல் அந்தயானையினது வயிற்றிலிருந்து வழியும் நிணமுதலிய மாமிசங்களைத்தின்கையில், அவையிவனுக்குமெத்தவுஞ் சுவையாகவிருந்தமையால் அதனடியிலே உட்கார்ந்துகொண்டு, நாய் நரி மிருகங்களுக் கொப்பாய், தனதுகைகளாலும் வாயினாலும்பற்றி மாமிசத்தைப்பிடுங்கித் தின்று சந்தோஷித்துக்கொண்டிருக்கும்போது, மழையானது மேன்மேலும் யானையின்றுதிக்கையினின்று சொரிவதுபோல ஜலங்கொட்டுந்தன்மையாலும் சண்டமாருதமும்விசேஷித்ததனைக் கலந்தமையாலும் வெள்ளமானது ஆகாயத்திற்கும் பூமிக்குமொன்றா யிரைச்சலிட்டுவந்து யானையையுந் துற்பன்னியனையு முருட்டிக்கொண்டுபோய் சமுத்திரத்திற்சேர்க்க, அப்போது அச்சமுத்திரத்தில் அலைகள்விசேஷித் தெழுந்து ஆரவாரத்தோடு மோதுந்தன்மையால் அன்னபானாதிகளுக்குமயலாய் வெய்யிலிலுங் காற்றிலும் மழையிலும்நெருக்குண்டிருந்த துற்பன்னியன் அலைகளிற்சிக்கி மீளாதவனாய் உயிர்மாய்ந்தொழிந்தான்.

கேளுங்கள் முனிவர்களே, இவ்வுலகின்கண் ஒக்குமானவர்களுள் அவரவர்கள்செய்த நல்வினைதீவினையின்படி அவர்களுக்கு இகத்திற்றானே மூன்றுவருடம் மூன்றுமாதம் மூன்றுபட்சம் அல்லது மூன்றுவாரத்திற்குள்ளாகிலும் சுகதுக்கங்கள்சம்பவிக்குமென்னுஞ் சுருதிவாக்கியத்திற்சொல்லியபடி தப்பாமல் ஒரு பொய்யேனுஞ்சொல்லாத பசுமானென்கிறசெட்டிக்குப் பிள்ளையாய்ப்பிறந்த துற்பன்னியன்செய்த கொடுமையால் பசிப்பிணியாலும் சிசுஹத்தியினாலுங் காடு மலை

வனம் வனாந்திரமெல்லாந்திரிந்தும் முநிவராற் சாபநேர்ந்து காற்றினாலு மழையினாலும்மெலிந்தும், மிருகத்தோ டொப்பாய் மாமிசாதிகளைப்புசித்தும், வெள்ளத்தாற் சமுத்திரத்திற் சேர்க்கப்பட்டிறந்தவன் அலகைவடிவாய் வனங்களில் நூறாயிரங்கோடி கற்பகாலம்வரையில் ஓரிடத்திலுந்தங்காமற் சுழன்றுதிரிந்து பொதிகைமலைச்சாரலில் வருகிறபோது, ஒரு நாள் அகஸ்தியமகாமுநிவர் அங்குள ஓர்பொய்கையில்ஸ்நாநஞ் செய்து,ஜபதபநியமநிட்டைகளைமுடித்துக்கொண்டிருக்கையிலவரைக்கண்ட அலகைவடிவாகிய துற்பன்னியன் பசியின் கொடுமையாற்கொன்றுதின்னவேண்டுமென்றுகருதி,மகாவுக்ரத்தோடு மவர்மீதிற்பாய்ந்தெடுக்கமேவையில், அகஸ்தியர் கண்விழித்து ஏறிட்டுப்பார்க்கக், அம்மகாமுநிவரது பார்வையானது இவன்பேரிற்பட்டவுடனே அவனைப்பற்றியிருந்தகொடுமையிற்கிஞ்சித்துவிலகின்றது,அது, எப்படியிருந்ததெனில் உலகின்கண் மானவர்களைப்புணர்ந்த பாபங்களெல்லாம்பரிபூரணமாய் உணர்ந்தஞானிகளது விழிபடலூடுமென்னும்வாக்கியம்போல் அகன்றமாத்திரத்தில், துற்பன்னியனுக்கறிவு தோன்றி நற்குணத்துடனே அகஸ்தியமகாமுநிவரைப் பிரதட்சணஞ்செய்து சாஷ்டாங்கமாய்ப்பணிந்தெழுந்து நின்று தோத்திரஞ்செய்தான். அப்போது அகஸ்தியர் ஞானதிருஷ்டியினாற்பார்த்து,அவனது ஜென்மாநுபவங்களையுங்கன்மாநுபவங்களையுமறிந்து,அவன் துன்பத்தைநிவர்த்திசெய்யவேண்டுமென்று கருணைகூர்ந்து, தன்னுடையசீடர்களிலே சுதிக்கணனென்பவனையழைத்து, அப்பாசுதிக்கணா, நீ இந்தபாவியை கூட்டிக்கொண்டுபோய் கந்தமாதனகிரிச்சாரலிலேயோங்குஞ் சேதுமத்தியிலே சமுத்திரதீரத்தில் ஸ்ரீராமநாதனுக்குமுன்பாகவிளங்கும்அக்கினிதீர்த்தத்தில்சங்கற்பவிதியின்படிநீமுழ்கிபின்னர்அத்தீர்த்தத்தையள்ளிஅபிமந்திரித்துஇவன்தலையிற் புரோட்சித்து, அப்பாவியையுஞ்சங்கற்பவிதியின்படிமுழ்கச் செய்து வாவென்றுகட்டளையிட, அதுபோற் சுதிக்கணனும்

அலகையாயிருக்கும் துற்பன்னியனை யழைத்துக்கொண்டு போய், கந்தமாதந பர்வதத்தைச்சேர்ந்து அங்ஙனம் விளங்குகின்ற அக்கினிதீர்த்தத்திற்குப்போய் முன்பு தனது குருஸ்வாமிகள் விடையளித்தவண்ணம் அத்தீர்த்தத்தில் சங்கற்பவிதியின்படிதான் ஸ்நாநஞ்செய்து, பின்னர்த்தீர்த்தத்தைக்கையினாலள்ளி அபிமந்திரித்து துற்பன்னியனது சிரத்திற்புரோட்சித்து, அதன்பிறகுஅவனையும் சங்கற்பவிதியின்படி முழ்கச்செய்து, இராமமந்திரத்தை ஜெபிக்கும்போது,துற்பன்னியன்பேய் வடிவமாறிதேவசொரூபம்பெற்றுஞானோதயனாய் சந்தோஷமடைந்து மறுபடியும்அத்தீர்த்தத்தில் சங்கற்பவிதியின்படி முழ்க, அக்கணமே தெய்வலோகத்திலிருந்து விமானம்வர, அவ்விமானத்திலேறி, அரம்பா ஸ்த்ரீகள்நடிக்கவும், மேளவாத்தியங்கள் முழங்கும்படியாய், துற்பன்னியன் ஆடகலோகஞ்சேர்ந்து, ஆதிசேடனாலுஞ்சொல்லுதற்கரிய ஆனந்தவாழ்வை யநுபவித்திருந்தான். பின்பு அகஸ்திய மகாமுநிவரது சிடனாகிய சுதிக்கணன் அவணின்றும் பிரயாணப்பட்டு பொதிகையைச்சேர்ந்து அகஸ்தியரைக் கண்டுநமஸ்கரித்து, நடந்தகாரியங்களைச்சொல்ல, அவருங் கேட்டு சந்தோஷமடைந்தாராதலால், அத்தன்மையாகிய மகிமையைப்பெற்ற அக்கினிதீர்த்தத்திலே யாதாமொருவர்தீர்த்தமாடினாலும் அவடமிருந்து தானதருமங்களைச் செய்தாலும் பிதுற்களுக்குப் பிண்டமளித்தாலும் இரண்யசிரார்த்தஞ்செய்தாலும் அநேக அக்கினிஹோத்ரயாகாதி கிர்த்தியங்கள்செய்த பலனுண்டாய் புண்ணியலோகத்தையடைவார்களென்று சூதமாமுநிவர்சொல்ல, அதுகேட்ட நைமிசாரண்யர் அடக்கப்படாத ஆச்சரியமுஞ் சந்தோஷமுமடைந்து, சுவாமி, இதுவரையில் யாங்கள்கேட்டகதைகளைப்பார்க்கினும் இதுமெத்தவும்விசேஷகளிப்பைத்தந்தமையால்இன்னமக்கந்தமாதனத்தில் விளங்குமகிமைகளைத் தேவரீர்கிருபை செய்யவேண்டுமென்றுகேட்க, முநிவர் முகமலர்ச்சியோடு மன்னவரைநோக்கி, ஓ முநிவர்களே, சக்கரதீர்த்தமென்றோர் தீர்த்தமுண்டு

அதன்பெருமையைச் சொல்லுகிறோம், கேளுங்களென்று சொல்லத் தொடங்கினார்.

அக்கினி தீர்த்தச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சக்கர தீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, இவ்வுலகின்கண் பண்டோர்காலத்தில் வேதாகமசாஸ்திரப் பயிற்சியினும் அணிமாவாதியஷ்டசித்திகளினும் இயம நியமாதியோகங்களினும் வல்லதபோதனராய்விளங்கும் அஹிர்புத்தியென்னுமோர் முனிவர் தாம் அகண்டபரிபூரண சச்சிதானந்த சின்மயமாய்விளங்குஞ்சிவதன்யத்தைத்தரிசிக்க ஆவலுற்றவராகி அப்பொருளைநாடி நிஷ்டைசெய்யும்போது, தமக்கு அசுரர்களாலும் மற்றஜெந்துக்களாலும் யாதாமொரு இடர் சம்பவியாமலும் ஒருவேளைசம்பவித்தால் உடனே அவ்விடர் செய்த ஜெந்துக்களைச் சம்மாரஞ்செய்யும்படியாய் அநேகமகிமையும் வரங்களும்பெற்ற சக்கரத்தைப் பெற்றுக்கொண்டு கந்தமாதனச்சாரலில் ஓர் தடாகமுண்டுபண்ணி அத்தடாகக் கரையில் சக்கரத்தை நிறுத்தித்தாமும் அக்கரையிலிருந்து தபஞ்செய்து கொண்டிருக்கும்போது, யாதாமொரு இடர் நேருமாயினுடனே அவ்விடர் செய்தவர்களைச்சக்கரமானது சங்காரஞ்செய்து முனிவராலேற்படுத்திய தீர்த்தத்தில்மூழ்கி தடாகக்கரையில் காவல்செய்து கொண்டிருக்குந்தன்மையால் அந்ததீர்த்தத்திற்கு முநிதீர்த்தமென்றும் சக்கரதீர்த்தமென்றும் பெயர்வாய்ந்த அத்தீர்த்தத்தில், அநேககற்பகோடி காலமாய்ப்பற்றியிருந்த பிரம்மஹத்திதோஷங்களும் பூதவேதாள பைசாசகணங்களும் கூன் குருடு செவிடுமுதலிய குற்றங்களும், அநேககோடிபாவங்களும் நிவர்த்திசெய்துவிளங்கிக்கொண்டிருக்கும். அந்ததீர்த்தமானது ஒருகாலத்தில் சவிதாவென்னும் பெயர்கொண்ட ஓர் சூரியனுக்கு அற்றுப்போன இர

ண்டுகரங்களையும் பழையபடிவளரும்படிசெய்த மகிமைபொருந்தியதென்று சூதமகாமுனிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர் ஆச்சரியமடைந்து, முனிவனைநோக்கி, சுவாமி, சவிதாவென்னுஞ் சூரியனுக்கு என்னகாரணத்தால் கரங்களற்றனவோ, அதனை அடியோங்களுக்குத் தெரியும்படியாய்த்திருவுளம்பற்றவேண்டுமென்றுகேட்கச்சூதமுனிவர்சொல்லுவார், கேளுங்கள் நைமிசாரண்யரே, முன்போர்காலத்திலே உம்பர்களுக்கிறைவனாகிய தேவேந்திரன்முதலியயாவரும் இராட்சதர்களால் பெருந்துன்பத்தையடைந்துசகிக்கப்படாதவர்களாயும் பொன்னுலகத்தில் வாசஞ்செய்ய அச்சமுற்றவர்களாகியும் யாவருமொன்றாய்க் கூடித்திரண்டு, பிரமலோகம்போய்ச்சேர்ந்து பிரமனைக்கண்டுவணங்கித் தோத்திரஞ்செய்து, சுவாமி, நாங்கள் அசுரர்களால்துன்பமடைந்து எங்குமிருப்பதற்கிடமில்லாமல் வீணேமடிந்துபோகும்படி காலம்நேரிட்டதால் அத்துன்பம்நீங்கும்படியாக வோருபாயஞ்சொல்லி யெங்களை யீடேற்றவேண்டுமென்றுசொல்ல, அதுகேட்டபிரமதேவன், இந்திராதிதேவர்களுக் கபயாஸ்தங்கொடுத்துக் கூறுவார், வாருங்கள்தேவர்களே, அசுரர்களாலுண்டாகிய இந்த உபத்திரவம் நீங்கவேண்டுமாயின் சந்திரஜடாதரமூர்த்தியாய் விளங்கும்படியாகிய ஸ்ரீகயிலாசபதியைக்குறித்து ஒருயாகஞ்செய்தீர்களானால் அப்போது உங்கள்பேரில் அவருக்கநுக்கிரஹமுண்டாகி இந்த இடுக்கணைத்தவிர்ப்பார், நீங்களும் சுகமாய் வாழலாமென்றுசொல்ல, அதற்கு இந்திரன் பிரமதேவனைநோக்கி, சுவாமி, நாங்களவ்வாறு யாகஞ்செய்யத்தொடங்கினால் உடனே இராட்சதர்களறிந்து உக்ரத்தோடும்வந்து கவிந்து யாகத்தைபின்னப்படுத்தி விடுவார்களே, அதற்கென்னசெய்வோமென்றுகூற, அதைக்கேட்டபிரமன் நாலாவிதமும்யோசித்து, வாருந்தேவர்களே, நீங்கள்செய்யும் யாகத்தை விக்கினமில்லாமல் நிறைவேற்றுதற்கு பூலோகத்திலே சேதுமத்தியில்விளங்குங் கந்தமாதனகிரிச்சாரலில் சேர்ந்து, அரக்கர்நாசப்படும்படியாய் மாஹேசுரமென்னப்பட்டயாகத்

தை ஆரம்பித்துச்செய்வீர்களாகில், அந்த இடத்திற்கு அரக்
கர்கள் வருவதற்குபயப்படுவார்கள், ஏனெனில், அகிற்புத்த
ரென்னுமுனிவர் அவன்தபஞ்செய்யவேண்டித் தனக்கோ
ரிடரும்வாராமலிருக்க சுதரிசனரைக்குறித்து தபஞ்செய்து
சக்கரத்தைப்பெற்றுக்கொண்டு தாமதை தனக்கு காவலாக
வைத்துக்கொண்டு தபஞ்செய்துவருகின்றமையால் நீங்களவ்
விடம்போயிருந்து யாகஞ்செய்தால் நின்றவேறுமென்றுசொ
ல்ல, அதுகேட்டதேவேந்திரன், சுவாமி, அந்தசக்கரத்திற்கு
அவ்வளவுவலுவுயாதென்ன; அதற்குப்பிரமன், ஓ தேவராஜ
னே, மகாவிஷ்ணுவால் முனிவனுக்குக் கொடுத்திருப்பதால்
அந்த இடத்தில்வந்த இராட்சதர்கள் முதலியதுஷ்டர்களை
வதஞ்செய்யுந் தன்மையுண்டாயிருக்கின்றபடியால் நீங்களவ்
விடம்போய் நடத்துங்களென்றுகூறியதைக்கேட்ட இந்திரன்
முதலியாவரும் மகாசந்தோஷத்தையடைந்து பிரமதேவனை
வணங்கிவிடைபெற்று யாவருங்கந்தமாதனத்தில் வந்துசேர்
ந்து அகிற்புத்தரென்னு மகாரிஷியைக்கண்டு நமஸ்கரித்து
அநேகதோத்திரங்கள்செய்து அவருடைய பன்னசாலைக்குச்
சமீபமாய் யாகசாலை ஓமகுண்டம்யாகஸ்தம்பமுதலிய யாவு
மேற்படுத்தி, தங்களுடைய சத்துருக்களாகிய விராக்கதர்
நாசமடையவேண்டிமாஹேசுரமென்னும்யாகத்தைவேதோக்
தப்படி யாரம்பித்து இந்திரனையாகாதிபதியாக இருத்தி, ரித்
துவேசான் போதர் அதுபோதர் உங்காதர் பிரஷாதர் அத்வரி
முதலானபேர்களோடும் வியாழபகவான் இந்திரன்குமாரனா
கிய சயந்தன் விசுவாமித்திரன் எட்டாம்வசு குபேரன் அக்
கினி எமன் வருணன் வாயு சத்தியமகாரிஷி பாராசரர் அசு
வினிதேவதைகள்சந்திரன் புதன்அஷ்டவக்கிரன்சண்முகன்
ஆகிய பதினறுபேர்களும் நேமுகமாயிருந்து யாகத்துக்கு
சாட்சிதேவதையாக மகாவிஷ்ணுவை வைத்துக்கொண்டு,
யாகத்தையாரம்பித்துமந்திரவித்தாய் நடப்பித்துவருகிறபோ
து, அக்குண்டத்தினின்றும் பன்னிரண்டுகோடி சூரியர்கள்
உதயமானதுபோல் மஹேசுரனென்னுஞ் சுயம்பிரகாசமாய்

வந்துவிளங்கியது அவிற்பாகங்களைபானம்பண்ணி எழும்பித்
தேஜசுகள் ஜொலிக்கும்படியாய் தோன்றிப் பூரணாகுதிகொடு
க்கும்போது புரோடாசசேடத்தைஅந்தயாகத்துக்குரித்தாகிய
ரித்வேசான் முதலாகியபேர்களுக்கும் பாகஞ்செய்து எவரெவ
ர்களுக்கு எந்தெந்தபாகத்தைக் கொடுக்கவேண்டுமோ அவ்
விதிப்படி அத்துவரியாயிருந்து யாகத்திலே விளங்கப்பட்ட
அஷ்டவக்ரரானவர் அவரவர்களுக்குக் கொடுக்கிறபோது,
மகா உக்ரத்தோடும் பிரகாசத்தோடும் பார்ப்பதற்கு பயங்கர
மாயும் அநேகந்தேஜசுகளோடும் விளக்கும்படியாகிய பிராச்
சித்ரமென்னப்பட்ட பாகத்தை உருவாய் கையிற்கொடுக்கப்
படாதென்றுயோசித்தும், சவிதாவென்னப்பட்ட சூரியபக
வான் பிரம்மசொரூபமாய் விளக்கப்பட்டவரானபடியினால்
அவராலே யதனைத் தாங்கமுடியுமென்றுயோசித்து அப்பிரா
ச்சித்ரமென்னும் பங்கையெடுத்து சூரியபகவான்கையிற்கொ
டுக்க, அப்போது சவிதாவென்னுஞ்சூரியன் பக்திவிநயத்தோ
டும் அஞ்சலிசெய்துபின்பு இரண்டுகரங்களினாலும் வாங்கிய
வுடனே அந்தபிராச்சித்ரத்தினுடைய தேஜசினுக்ரமானது
காலாதிதமாயும் கொடூரமாயும் விளங்கினபடியால் அதைச்
சவிதாபோசியாமல் அவரவர்கள்பாகத்தை ஓமகுண்டத்தடியி
லிருந்துபுசிக்கயத்தனிக்கையில்,உடனே அச்சூரியனதுகரங்க
ளிரண்டுமற்று விழும்படியாகச்செய்து மகா உக்ரத்தோடும்
அப்பிராச்சித்ரமானது அவர்வாயிற்குதித்தது, அப்போதுசவி
தாவென்னுஞ் சூரியபகவானானவர் மிகவுந்துன்பமடைந்து
கோபத்துடனே இந்திரன்முதலிய தேவர்களைப்பார்த்துக்கூறு
வார், ஓ தேவர்களே, நீங்களியாவரும்பார்த்திருக்கும்படியாய்
என்னிருகரங்களும் அற்றுவிழுந்தமையால் யாவருங்கூடி
எனக்குக் கரங்களுண்டாகும்படிச்செய்யாவிடில் இந்தயாக
த்தை அழித்துப்போடுவேனென்று மிகவுங்கோபத்தோடுங்
கூறியதைக்கேட்ட தேவர்கள் இதற்கென்ன செய்வோமெ
ன்றுயோசித்து யாதுந்தோன்றாதவர்களாய் பிரமித்துமயங்கி
னார்கள், அக்காலையில் அந்தயாகத்தினிடமா யெழுந்தருளி

யிருக்கும் அஷ்டவக்ரமகாரிஷியானவர் கலக்கமுற்றிருக்குந் தேவர்களுக்குத் தேறுதலைசொல்லி, ஓ தேவர்களே, நான் சந்திரஜடாதாரமூர்த்தியாகிய பரமேசுவரனைநோக்கி அநேகமாகிய தபங்களும் சாந்திராயண முதலியவிரதங்களுந்தீர்த்தயாத்திரைகளுஞ் செய்திருக்கின்றேனாதலால் அக்காலையில் எனது தவப்பெருமையினாலே அழியாவரங்களைப்பெற்றும் பின்னுந் தபத்திலிருக்கும்போது கோடாநுகோடி பிரம்மாக்கள் பிறந்து பிறந்து இறந்தும் அவர்களுக்கெல்லாம் பெரியவனாகிய உலகேசனென்னும் பிரமனுடைய படைப்புக்குரியகாலத்தில் அன்னவன் சிருஷ்டிப்புக்குள்ளாகப்பட்ட சாமளாபுரமென்னும்பட்டணத்திலே பிரம்மகுலத்திலேயவதரித்த அரியானென்றொரு பிராமணன் வேதாகமங்களையுணர்ந்து யாவரும் உத்தமனெனச்சொல்லும்பெருமை பூண்டிருக்கையில், ஒருநாள் மகாரிஷிகளாகிய தபோதனர்களைக்கண்டு தெரிசிக்கவேண்டுமென்னு மாவலோடுந் தெண்டகாரணியத்தைநோக்கி வருகிறபோது, அவ்வனத்தில்வாழும் மான் மரை பன்றி முதலியமிருகங்களை வேட்டைமார்க்கத்திற்பிடித்து ஜீவித்துவரும்வேடர்கள்வேட்டமாடிக்கொண்டுவருகையிலோர்மிருகத்தைக்கண்டு அதன்மீது லட்சியம்வைத்து வில்லினிடமாகக் கூர்மைபொருந்திய ஒர்வாளியைச் சந்தித்து கர்ணபரியந்தமிழுத்துப் பிரயோகிக்கும்போது அவ்வில்லினிடமாயிருந்து விடுபட்ட பிறைமுகக்கணையானது ரீங்காரத்தோடும் அதிவேகமாய்வந்து வனத்திலெதிர்ப்பட்டு வரும்படியாகிய அரியானென்னும் பிராமணனது இரண்டுகால்களையுந் துணித்துப்பின்புறமுருகியோடிப்போகையிலப்போது பிராமணன் கடவுளைநினைந்து, ஆ, சிவமே, இப்படியும்வந்து நேருமோவென்று திடுலென்று மண்மேற்சாய்ந்து பிராணபாதையோடுங் கூக்குரலிட்டு அழுதான், அவ்வாறுகதறுகிற காலையில் அவ்வனத்துள் தபஞ்செய்து கொண்டிருக்கும் பெரியோர்கள் அவ்வோசையைக்கேட்டு ஏதென்றுவந்து பார்க்குமிடத்து இந்த அரியானென்னும் வேதியன் காலறுப்புண்டு கிடப்ப

தைப்பார்த்து அவனுக்குத் தேறுதலைசொல்லி தங்களிடமாகவிருந்த கமண்டலத்திலிருக்குஞ்சலத்தை மறையவன்மீது புரோட்சித்ததனால் அம்மறையவனுக்குண்டாகிய வலியையுந் துன்பத்தையும்நீக்கித் திடமுண்டாகும்படியாய்ச் செய்து கூறுவார்கள், வாரும்பிராமணா, நீ ஒன்றுக்கு மஞ்சவேண்டாம், உனக்குப்பழயபடி காலுண்டாகும்படி நாங்களோருபாயஞ் சொல்லுகின்றோம், அதுயாதெனில், இந்தபூலோகத்திலே தெட்சணபாகத்திலோங்குஞ் சேதுவின்மத்தியிற் கந்தமாதன பருவதச்சார்பில் சக்கரதீர்த்தமென்றுவழங்கும் முநிதீர்த்தமென்னுமோர் தடாகமுண்டு, அத்தடாகத்தில் நீ பிரயாசையெடுத்துக்கொண்டுபோய்மூழ்குவையேயாகில் உனது இரண்டுகாலும்பழையபடி உருக்கொள்வதன்றியுங்கிருதார்த்தனுவாயாதலால் விரைவிற்போகக் கடவையென்றுகூற, அம்மொழிகேட்டவேதியன் மெத்தவுஞ்சந்தோஷமடைந்து முநிவர்களைப்பணிந்து அன்னவர்களது ஆசீர்வாதமுங் கைக்கொண்டு, அவணின்றும் நான்குகாற்பாய்ச்சலாய்த் தவழ்ந்துகொண்டேபோய்த் தக்கவர்களாற்புகழுங் கந்தமாதனபருவதத்தைக்கண்டு தரிசித்து, அம்மலைச்சார்பிலோங்கும் சக்கரதீர்த்தக்கரையிற்சேர்ந்து அத்தீர்த்தத்திலே மறைவிதியின்படி தீர்த்தமாடிக் கரையேறியவுடனே பழயபடிதனதிரண்டு காலும் வளர்ந்து பொன்போற்றேக மிருக்கக்கண்டு மகாசந்தோஷங்கொண்டு, ஸ்ரீராமநாதனைப்பணிந்து, மிகுகாதலோடும் தண்டகாரண்யத்தைநோக்கி வாயுவினுங் கொடியவேகமாய்வந்துசேர்ந்து முநிவரர்கள்வசிக்கும் பன்னசாலைக்குப்போய்த் தனக்குபசாரனைசெய்தனுப்பிய தபோதனர்களைக்கண்டு திரிகரணசுத்தியோடும் அஷ்டாங்க பஞ்சாங்க கிரியாங்களுடன்பணிந்து எழுந்திருந்து நமஸ்கரித்து, தான்போய்வந்த காரியங்களைச் சொல்லி ஸ்தோத்திரஞ்செய்துநிற்கையில், அதுகண்ட ருஷிகளெங்கள் அரியானென்னு மறையவன்மீது மெத்தவுஞ்சந்தோஷமடைந்து ஆசீர்வாதமும் வேண்டியவரங்களுங் கொடுத்து, சஞ்சீவியாய் உனதுபதிக்குப்போய் வருவாயென்றனு

ப்ப, அவற்றையேற்றவேதியன் பிரயாணப்பட்டு தனதுபதியாகிய சாமளாபுரம்வந்துசேர்ந்தான், ஆதலால் இந்தசூரியபகவானையு மித்தீர்த்தத்தில் மூழ்கும்படியாய் நீங்களியாவரும் வாக்களித்து தீர்த்தமாடச்செய்தால் உடனே அவருக்கற்று விழுந்த இரண்டுகரங்களும் பழயபடி உண்டாகுமென்று அஷ்டவக்ர மகாரிஷிசொல்ல, அவ்வார்த்தையை அங்குள் மகாரிஷிகணங்களும்இந்திராதிதேவர்களுங்கேட்டுசந்தோஷப்பட்டு அதுபோலவே சவிதாவென்னுஞ் சூரியபகவானை அத்தடாகத்தில்மூழ்கும்படியாய் தேவர்கள்முதலியரிஷிகணங்கள் கூற, அவ்வாறேஅச்சூரியன் சங்கற்பவிதியின்படிதடாகத்திற் தீர்த்தமாட, உடனேயவரதிரண்டு கரங்களும் எப்போதும் போலவளர்ந்து ஆயிரத்தெட்டுமாற்றுள்ள பசும்பொன்னைப் போற்சொலிக்க, அதுகண்ட சகலதேவர்களும் முநிவர்களும் சந்தோஷமடைந்து, மாஹேசுரமென்னும் யாகத்தைப்பூர்ணாகுதிசெய்துகொண்டு, தெய்வலோகங் குடிபுகுந்திருக்கையில், அன்னவர் சத்துருக்களாகிய இராட்சதாள் நாசமடைந்தார்களாதலால், இப்பேர்க்கொத்த மகிமைதங்கிய சக்கரதீர்த்தத்தினுடைய பெருமையாவராற் சொல்லிமுடியு மென்று சூதமகாமுநிவர்சொல்ல, அதுகேட்டநைமிசாரண்யர்மெத்தவுமானந்தங்கொண்டு முநிவரைவணங்கி, சுவாமீ, தேவரீர் இன்னுமக்கந்தமாதனத்திலுள்ள மகிமைகளை அடியோங்களுக்குத்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றுவினவ, அதுகேட்ட சூதமுநிவர் மனமகிழ்வோடு மம்முநிவரைநோக்கி, ஓ முநிவர்களே, இன்னுஞ் சிவதீர்த்தமென்றோர் தீர்த்தமுண்டு அதன் பெருமையைச்சொல்லுகிறோம் கேளுங்களென்று சொல்லத் தொடங்கினர்.

சக்கரதீர்த்தச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

சிவதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள்நைமிசாரண்யவாசிகளே, தேவர்கள்முதலிய மூவருக்கும் மற்றயாவருக்கும் பந்தபாசத்தைப் போக்கிப் பண்ணுதற்கரிய பிரம்மானந்த பாசத்தைத்தாந்தருங் கந்தமாதனச்சார்பில் கருதுவதற்கரிய அண்டாண்ட பிரம்மாண்ட பகிரண்டங்களிலெங்கும் நால்வகையோனிஎழுவகைத்தோற்றம் எண்பத்துநான்கு நூறாயிரஞ்ஜீவ பேதங்களுக்குற்ற வினைப்பகுதியால்வருங்கலிப்பிணியாதி பவப்பிணியையும்பற்றறக்களைந்து தினைத்துணையேனும்நாடவொட்டாமலோட்டி, அகண்ட பரிபூரண சிவத்தைநாட்டவல்ல சிவதீர்த்தமென்றோர்தீர்த்தமுண்டு, அத்தீர்த்தத்திலே முன்னமோர்காலத்தில், நாயின் பிறாசோகணித்துலாவும் வயிரவமூர்த்திக்குப்பிடித்த மகா கொடிதாகிய பிரம்மஹத்தி விமோசனமா யிருப்பதோடும் அத்தீர்த்தமானது சந்திரஜடாதரமூர்த்தியாகிய ஸ்ரீகயிலாசபதியானவர்கந்தமாதனபருவதச்சார்பில்தன்னைப்பூசித்துவந்த பொதிகைமுநியென்னும் அகஸ்தியருக்குங் கௌதமருக்கும் இஷ்டசித்திகளைநிறைவேறும்படியாய் தமது சூலாயுதத்தினால் அத்தீர்த்தத்தை யுண்டாக்கிக் கொடுத்தமையால் அதற்கு சிவதீர்த்தமென்றுமகாரிஷிகளாலேபெயருண்டாகி விளங்குகின்றதென்றுசூதமுனிவர்சொல்ல, அதுகேட்டநைமிசாரண்யர்கள் மெத்தவுஞ் சந்தோஷமடைந்து, சுவாமி, நீலகண்டனாகிய பரமேசுவரனால்நிருமிக்கப்பட்ட தீர்த்தத்திலேவயிரவமூர்த்திக்கு பிரம்மஹத்திநீங்கிய தென்றுரைப்பதால் ருத்ராம்சையோடுக்கூடிய வயிரவருக்கு பிரம்மஹத்தி எந்தவிதமாய் வந்தணுகியதோ அதனைதேவரீர்திருவுளம்பற்ற வேண்டுமென்று வினவ, சூதமாமுநிவர்சொல்லுவார்; வாருங்கள்மகாரிஷிகளே, பண்டோர்காலத்திலே பாற்கடற்று யின்றோனாகிய மகாவிஷ்ணுவும், பதுமத்தனாகியபிரமனும் ஒருவருக்கொருவர்இந்திராதிதேவர்கள் முதலியயாவருமறியும்படியாய் பிரமனானவன் வைகுந்தவாசனாகிய மகாவிஷ்ணுவைப்பார்த்து, ஓ விண்டு

வே, இந்த அண்டசராசரங்களையெல்லாம் நிருமித்து அவற்
றில் ஜீவர்களை நால்வகைத் தோற்றத்திற்கும் இரட்சிப்புசெய்
யும்பொருட்டு உன்னையும் யான் சிருஷ்டித்திருப்பதால் என
து படைப்புக்குட்பட்ட நீ அதுபோல்நடத்திவருகிறாய், அப்
படியிருக்க இப்போது நீ கிஞ்சித்தேனும் யோசியாமல் பெரி
யவனென்று எப்படிசொல்லலாம், அந்தோ, சகலபுவனத்தை
யும்படைத்த என்னையன்றி வேறுதெய்வமும் உளதோ, ஆத
லால் நீ கொண்டமதியைவிட்டு விடுவாய் என்று ஓதியதைக்
கேட்ட ஜனார்த்தனன், அடாபிரமனே, இந்த அண்டபிண்ட
சராசரங்களையெல்லாம் நீயேநிருமித்ததென்றும் உன்னாலே
சகலலோகமும் விளங்கப்படுவதென்றும் உன்னையன்றிவேறு
சிருட்டிக்க வல்லவரில்லையென்றும் சொல்லுகிறாயன்றோ;
பளா பளா கெட்டிக்காரன், உன்னுடைய அவலமதிக்கு நா
னென்சொல்வேன், அடாபிரமனே, இந்தசகலபுவனங்களை
யும் சிருஷ்டிக்குந் தொழிலாளியாயேற்படும்பொருட்டு உன்
னை என்னுடைய உந்திக்கமலத்தில் ஜனிப்பிக்கச்செய்தது ம
ன்றியில் சகலலோகங்களையும் எனதுகெர்ப்பத்தில் வைத்து
ப்பாதுகாத்து ஏகசக்ராதிபதியா யிருக்குமென்னை யுணராம
ல் நீசொன்னவார்த்தையைப் பொறுத்தகாரணமியாதெனில்,
அந்தோ, நீ எனதுபிள்ளையாதலால் மன்னித்தேன் மன்னித்
தேனென்றுகூறி, ஒருவர்க்கொருவர் பின்னும் வாதமிட்டுக்
கொண்டிருக்கிறபோது, ஸ்ரீகயிலாசபதியாகிய உமாமகேசனு
லுண்டாக்கப்பட்ட இருக்காதி நான்குவேதங்களும் இவர்கள்
முன்வந்துநின்று, ஓ அரிபிரமர்களே கேளுங்கள், யாதெனி
ல், வீணாக உங்களுக்கு இந்ததர்ப்புத்தியும் இறுமாப்பும்
உண்டாயிற்று. சரியல்லவே, மகாமேன்மையுற்ற குணமாக
வும் அன்பர்களுடைய செவிக்கமிர்தமாகவும் அஞ்ஞானவிரு
ளையகற்றவெழுந்த அரியபிரகாசமாகவும் சகலகலைகளுக்குப்
பொருண்முடிவாகவும் மோனகுணநிதமாகவும் உலகின்கண்
ஒருவரால் அளப்பரியதாகவும் நான்குவேதங்களும் கோ
டாநுகோடி யுகங்கள்வரையிற் சொல்லிமுடியாதாகவும் இரு

க்கிற நிச்சயார்த்தத்தை உங்களிரண்டுபேருக்கும் நாங்கள்
சொல்லுகின்றோம், அஃதெப்படியென்றால், எங்களில் ஒரு
வேதவாக்யப் பிரமாணத்தை கோடாகோடி பங்குசெய்து அ
வற்றிலொரு பங்கெவ்வளவோ அவ்வளவு பொருளுக்குச்சம
மான மணுக்காகிய அஞ்ஞானபிராந்தாளுக்கு ஆசாரியா
ருபதேசஞ் செய்வார், அப்படி அணுப்பிரமாணமாகிய பொ
ருளை நிச்சயார்த்தமாய் லட்சணவிர்த்தியிலே வைத்து
பூசித்த அஞ்ஞானபிராந்தாள் ராகத்வேஷாதிகளை விட்டுவிட்
டு சுயம்பிரகாசத்தை யறிவார்களானால் நாங்களே பிரசித்தரு
நவாய்வந்திருந்து சொல்லுகிறவாக்கியங்களை நீங்கள் யூகமா
யறிந்துக்கொள்ளவேணும், அது எப்படியென்றால், மூன்றும்
பிறைச்சந்திரனைச் சடையிற்றரித்தவராகியும் ருஷபத்துவச
முடையவராகியுமோங்கும் பரமேசுவரனுடைய பாததாமரை
யிலணிந்திருக்கப்பட்ட பாதுகையானது சகலதேவர்களுடை
யமுடியிலும் உங்களுடையமுடியிலும் எங்கள்முடியிலும் இ
ருக்கின்றபடியால் நீங்களிரண்டுபேரும் உலகமெல்லாம் சிரு
ஷ்டிக்கிறேனென்றும் ரட்சிக்கிறேனென்றும் சொல்லிக்கொ
ள்வதெவ்விதம், சரியல்லவே, மேலும் சர்வலோகசரண்யனாக
வுந் தாணுவாகவும் பரம்பரனாகவுஞ் சம்புவாகவும் ஒப்புவ
மை யில்லாதவனாகவும் சுயம்பிரகாசமாகவும் வேண்டுதல்வே
ண்டாமை யிலாதவனாகவும் ஸ்ரீகயிலாசபதியாகவும் உங்களு
க்கு மெங்களுக்குங் காரணவஸ்துவாகவும் பார்வதியை வாம
பாகத்தி லுடையவனாகவும் ஒருவராலுங் காணப்படாதவனா
கவும் மலரின்மணத்தைப் போன்றவனாகவும் எங்களாற் றுதி
க்கப்பட்ட ஒருவனேசகலகாரணவஸ்துவாயிருக்க, அவனைம
றந்து நீங்களிரண்டுபேருமே இப்படி வாதம்பண்ணும்படியா
கிய அஞ்ஞானங்குடிகொண்டால் மற்றயாவரைத்தான் விட்ட
து; அன்றியும் முன்னைத் திரிபுரசம்மாரஞ்செய்யப்போம்போ
து, அந்தபரமசிவமானது மகாமேருவை வில்லாய்வளைத்து
வாசுகியை நாணாகப்பூட்டியதை நீங்கள் பார்க்கவில்லையோ,
அதைதெரியாமற் போனபோதிலும் மகாவிஷ்ணுவாகியநீயே

அவ்வில்லுக்கு அம்பாகி ஈசுவரனுடையகையிலே விளங்கவில்லையோ, அப்போது பிரமதேவனாகிய நீ இரதசாரதியாகவிருந்தபோது அப்பரமசிவத்தினுடைய பாதாரவிந்தம் உமதுபுயத்திற்படவில்லையோ, அவையிருக்கட்டும், ஐயா மகாவிஷ்ணுவே, உமதுகரத்திலிடமாக விளங்குஞ் சக்கரத்தை உமக்குயார் கொடுத்தது, எங்களையாருண்டு பண்ணியது, இப்போது எங்களை உம்மிடத்திலிருக்கும்படிசெய்தவர்யாவர் அதையாவது அறிந்துகொள்ளும், இதல்லாமலும்முன்னொருகாரணத்தினாலே அந்தபகவான்தாருகாவனத்து முநிவர்களது பக்தியைச் சோதிக்கப்போம்பொழுது, மோகினியுருவங்கொண்டுஅப்பெருமான்பின் றொடர்ந்தவர்யாவர்,இத்தன்மையாவுமறிந்திருந்தும் நான்அதிகாரியென்று சொல்லலாமா, இதுவல்லாமலும் பாற்கடலைக்கடையும்போது ஆதிசேடனுண்டாகிய விஷாக்கினியினால் சுவேதவர்ணமாகிய வுமது தேகம்கன்னங் கரேலென்று கறுத்துவிடும் படியாய்விடம் மண்டிவருகிறபோது அவ்விடத்தை யெடுத்துச்சாப்பிட்டுச் சகலதேவர் களையுமிரட்சித்து நீலகண்டனென்று காரணப் பெயரெய்தியவர்யாவர்,ஐயோ,சகலலோகங்களையுமிரட்சிக்கும்படியாய் நின்னையும், படைக்கும்படியாய்ப் பிரமனையும்,சங்காரத்துக்கு ருத்திரனையும் அமைத்துச் சூத்திரப்பாவையைப் போல உங்களை ஆட்டிக்கொண்டிருக்கும் வஸ்துவையோசியாது வீணேயேனிப்படி இறுமாப்புக்கொண்டலைகின்றீர்கள். அரிபிரமர் களேயென்று வேதங்கள் கன்னத்திலறைந்ததுபோற்கேட்க, அப்போது அரிபிரமர்கள் நகைசெய்து அஞ்ஞானத்தால் தங்களைக்கேட்ட தென்றுணராமல்வெகுளியோடும் வேதங்களைப்பார்த்துச் சொல்லுவார்கள், ஓ-மறைகளே, நீங்கள்சொன்னது சரிதான், ஆயினும் அப்பரமசிவன் மயானத்திலே குடியிருப்பதன்றியும்,பூதவேதாளபைசாசகணங்களோடுகூத்தாடியும்,என்புகளையும் எருக்கம்பூவையுமாலையாகவணிந்தும்,பசுமைநிறங்கொண்டபெண்களை இடையிலுந்தலையிலுஞ் சுமந்தும், மண்சுமந்து அடியுண்டும், இரந்துண்டும்

திரியப்பட்டவனைஎங்களோடு ஒருவனாய்க்கூட்டினது நன்மையல்லவே,மேலும்அவன் உங்களுக்குஎன்னநன்மைசெய்தான் நாங்களென்ன கொடுமைசெய்தோம் யாதுமில்லாமலிருக்க நீங்களேன் இப்படிபொய்வார்த்தை சொல்ல ஏற் பட்டீர்கள் என்று பிரமனும் மகாவிஷ்ணுவுங் கூறியதைக்கேட்ட வேதங்களானவை,அவர்களது வார்த்தைக்கு பதிலொன்றுஞ்சொல்லாமல்இதுவென்னவிபரீதத்தாக்கிடமோதெரியவில்லையென்று நினைந்துமவுனமாயிருக்க, மறுபடியும் அரிபிரமர்கள் பழையபடி வாதமிட்டுக் கொண்டிருக்க, அப்போது நான்குவேதத்தினதுமுடியினின்றும்ஓர்சுயம்பிரகாசமாகியஜோதியுண்டாகி வானத்தையளாவிநின்று அரிபிரமாகளைநோக்கி, அண்டங்களெல்லா மதிரத்தக்கதாய், ஓ-அரிபிரமாதிகளே, உங்களைப் போலும் விவேகிகளுண்டோ,ஏனெனில்,வேதவாக்கியங்களைக்கடந்து விபரீதபுத்தியினாலே பழையபடிவாதமிடுகின்றீர், பண்டோர்காலத்தில் கல்லாலின் நீழலிலினிது வீற்றிருந்து சனகாதிதபோதனர்களுக்கு அரியஞானபோதனைசெய்ததும்,மார்க்கண்டேயனைப்பற்றவந்த மறலியாகிய எமனையுதைத்ததும் கரும்பைவில்லாகக்கொண்டு கடிமணமுலாவு மலர்ப்பகழியால் ககனவாசிகளாகிய வுங்களையு மற்றசராசரங்களையுஞ் ஜெயங்கொண்டுலாவிய காமனென்னு மன்மதனை நெற்றிக்கண்ணால் நீறுபடச்செய்ததும், முப்புராதிசனை நகைசெய்தெரித்ததும்,கங்கையைச் சடையிற்றரித்ததும் கைலாசகிரியை வேருடன் செல்லியெடுக்கவந்த இராவணனைக் கால்விரலினாற் கடிந்திருத்தியதும்,சதுர்வேதங்களையுண்டாக்கினதும், கடலைவில்வாழ்ந்துகொண் டிருப்பதும், என்புகளை மாலையைப்போற்றரித்திருப்பதும்,எருக்கமாலையை யணிந்திருப்பதும், நீங்கள்தானோ, அப்பரசிவம் கூத்தாடிக் கோலங்களெல்லாம் உங்களுக்கேச்சா யிருக்கின்றபடியால் நீங்களிறந்தகாலையிற் சேருமிட மின்னதென்பதாய்ப் புலப்படவில்லையோ, அப்படியுங்களுக்குத் தோன்றாமற் போனபோதினும் புவனத்திலோங்குஞ் சகலவுயிர்களும் சைதன்யத்தி லெஃகெருங்காலத்தில் யிஞ்சி

யது பேய்ப்படைகளல்லவோ,மேலும் உங்களுடைய பாதாதி
கேசபரியந்தம் விளங்கிக்கொண்டிருப்பது என்பல்லவோ, அ
வ்வெலும்பல்லாமல் சரீரமுண்டாயிருக்கின்றதே, ஐயா, மகா
விஷ்ணுவே, நீர் எடுத்ததசாவதாரத்தில் மச்சாவதாரத்தினு
டைய எலும்பும் கூர்மாவதாரத்தினுடைய ஓடும் வராகாவதா
ரத்தினுடைய கொம்பும் நரசிம்மாவதாரத்தினுடைய நகமும்
யாவரணிந்திருப்பது,அவைதெரியாதோ, இவையல்லாமலும்
அப்பரமசிவத்தினுடைய வாமபாகத்தில் வீற்றிருக்கப்பட்ட
பார்வதியல்லவோ உம்மிடத்தில் இலட்சுமியாகவும் பிரமனி
டத்திற் சரஸ்வதியாகவும் உருத்திரனிடத்தில் உருத்ரியாகவு
ம் விளங்குவது, இதுவல்லாமலும் பூமியாதியாகவும் நாதவிந்
தாகவும் ஏகவுருவாயிருக்கப்பட்ட வஸ்துவிலே பிரம்மாண்ட
ங்களையெல்லாங்காட்டி ஒடுக்கப்படுத்திவருவது உங்களுக்கு
த்தெரியவில்லையோ, அந்தோ, இராகத்வேஷத்தால்மதிகெட்டி
ருக்கின்றீர்கள்இனியேனும்அம்மதியை அகலவிடுத்து ஏகமன
தாகவிருங்கள், இதல்லாமலும் ஆணாகவும் பெண்ணாகவும் அ
லியாகவும் வாசாமகோசரமாகவும் ரூபியாகவும் அரூபியாகவு
ம் வேதாகமங்களுக் களவுபடாத வற்புதசின்மயசோதியாய் வி
ளங்கும் பரம்பரனென்றறியுங்கள்,மேலும் அவ்வத்துவினிட
மோங்குந் திரிகுணத்தில் இராசதகுணத்தாற் பிரமனையும்
சத்துவகுணத்தால் உன்னையும் தாமதகுணத்தால் உருத்திர
னையும் சிருஷ்டித்தான் நிர்மலனாய் நடித்துக்கொண்டிரு
க்குமாதலால் அவ்வத்துவினது விளையாட்டொழிந்தால் யாவு
மகன்றதென்றறிக,இதன்றியும் அவ்வஸ்துவை ஆணுருவமெ
ன்றுநினைத்தாற் பெண்ணுருவாம், பெண்ணுருவமென்று நிந்
தித்தால் ஆணுருவாம்,அவ்வாறேயுஞ் சந்திரசடாதரமூர்த்
தியாகிய உமாமகேசனை அடியார்க்கெளியனை நாமும் நீங்களு
ம் நான்குவேதங்களும் இந்திராதி முப்பத்துமுக்கோடிதேவ
ர்களும் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளும் தும்புரு நாரதாதி
சப்தரிஷிகளு மஷ்டவசுக்களும் கின்னரகிம்புருட கெருட
காந்தர்வ சித்தவித்யாதர உரகராகாயவாசிகளும் போகபூமி

யரும் சிவகணங்களும் நாட்களுங் கோட்களும் வணங்கப்
பட்டவஸ்து ஒருவனிருக்க அவனைத்தோத்திரஞ்செய்தாவனை
ங்காமல் நீங்கள் இப்படி அமர்புரிவது சரியல்ல வாதலால்
இனியாகிலும் உங்கள்மனத்திலுண்டாகிய சந்தேகத்தையும்
ஆண்மையையும் விட்டுவிட்டு உங்களிருப்பிடம்போய்ச்சேரு
ங்களென்று அநேகமகிமைபொருந்திய அசரீரியுரைத்ததைக்
கேளாமற்பின்னும் விஷ்ணுவும்பிரமனும் நீ பெரியவன் நான்
பெரியவனென்று அண்டங்கள்செவிடுபடும்படியாய் உத்தண்
ட கெம்பீரத்துடனே தர்க்கமிட்டுக்கொண்டிருந்தது எப்படி
யிருந்ததென்றால், சென்மாந்தரங்களி லவரவர்கள் செய்த
பிழைகளையெல்லாம்பொறுத்து நல்வினைக்குத்தக்க நன்மை
யையும் பதவியையும்,தீவினைக்குத்தக்க தீமையையும் நரகத்
தையும் கொடுத்து, யோக ஞானவழிகளிலே சிறப்படச்செ
ய்து உண்மைபோதங்களையறிவித்துந் தெளிவில்லாத அஞ்
ஞானிகளொருக்காலுந் தெளியமாட்டார்க ளென்பதுபோல
வைகுந்தவாசனாகிய விண்டுவும் மரைமலர்த்தேவாகிய பிரம
னும் தமது அஞ்ஞானநீங்காதவர்களாய் தாங்கள்பற்றியதே
பற்றாகவிருக்கையில்உடனே அந்த இடத்திலிருந்துஆயிரங்
கோடி சூரியப்பிரகாசம்போல ஆகாசம் பூமியெல்லாம் நிறை
ந்து பத்துத்திசையும்பரவி எங்கணுஞ்சோதிமயமாய் உரு
வெளித்தோற்றமாக, அத்தோற்றத்தைக்கண்டு[illegible]இது
என்னகாரணத்தால் உண்டாயிற்றோவென்று திகைத்திருக்கை
யில்போமென்றெண்ணங் கொண்டிருக்கையில்,பிரமனதுமனந்
கலக்கமானது அந்தசோதியிற்கலந்த அவனுடைய முகமும்
அக்கினிசொரூபமாகி அந்த அக்கினிக்குள்ளே நீலகிரிபோல
ஓர்புருடனிருக்கக்கண்டு, உடனேவெகுளிமேற் கொண்டு,
அஞ்ஞானத்திலாழ்ந்து, மகாவிஷ்ணுவைநோக்கி, ஓ விஷ்ணு
வே,உம்முடைய அகந்தையினாலே என்னுடையதலைவாகும்
னதால் இந்த அக்கினியிலே எரிந்து பற்ற[illegible]
நேரிட்டதென்று எவ்வளவுந்தோற்றுமலும் மனமங்கலமாய
ங்களினாலே எண்ணப்படாதவனுயிருக்கும் பரமசிவன் விஷ்

னுவினுடனேகலந்து கற்பூரதீபம்போற்காணப்படுவதை அறியாதவனாய் அகங்கரித்துப்பேச, உடனே அவ்வக்கினிசொரூபமான பருவதத்தின் மத்தியிலேநின்ற பரமசிவத்திற்குக் கோபமுண்டாகி, காளவயிரவரென்றோர் சத்தமுண்டாகிச் சூலகபாலத்துடனேயும் சிங்கப்பல்லும் கோர மீசைகளும் சிவந்தசடைகளுமாகக் காளவயிரவனெழுந்து அண்டங்களெல்லா நடுங்கும்படியாய் வாயினிடத்தும் மூக்கினிடத்துங் கண்களிடத்தும் அக்கினிப்பொறிகள்குபிர்குபிரென்றுசிந்தத் தக்கதாய்நாசித்திடவெண்ணிக்குதித்தான், அப்படிக்குதித்த காலவயிரவனைப்பார்த்துபரமேசுவரன்கூறுவார், ஓ காளவயிரவா, நீ இந்தபிரமனை ஜெயஞ்செய்துவரக்கடவையென்றுசொல்ல, உடனே காளவயிரவனும் கோபாவேசங்கொண்டவனாய் பிரமனை வந்தெதிர்த்துப்போராடி ஒருவருக்கொருவர் தங்கள்கைத்தினிடமாயிருந்த ஆயுதங்களால் கெடுநாள்வரையிற் போராடிக்கொண்டிருக்கிறபோது, காளவயிரவர் மிகுங்கோபங்கொண்டு விசுவசொரூபத்தோடும் எங்கும்வயிரவ சொரூபமாய் சூலகபாலங்கையிற்கொண்டு நிற்பதைபிரமன் கண்டுபயந்து கலங்கி ஓடிப்போக எண்ணங்கொண்டு இடம்பார்க்கும்போது,பார்த்தவிடமெல்லாம் வயிரவசொரூபமாய்த்தோற்றுகிறதினாலே பின்னும்பயந்து ஆகாயமார்க்கத்தி லெழும்பியோடயத்தனிக்கையிலதுகண்டவயிரவர்மகாகோபங்கொண்டு அவன்சிரத்தில் நடுமையாகவிருப்பதை இரத்தவெள்ளம் பெருகும்படியாய் தனதுகைநகத்தாற்கிள்ளிவிட அதனாலே பிரமதேவனுடைய பிராணனொழிந்து பூமியின்மேற்சாய்ந்தான், அப்போது அதை மகாவிஷ்ணுவானவன்கண்டு திடுக்கிட்டு இதுவெல்லாம் பரமசிவத்தின்செயலால் நடந்ததென்றறிந்து தனது அஞ்ஞானத்தைநீக்கி அச்சத்தோடும்பரமசிவத்தைத் தோத்திரஞ்செய்ய, உடனே ஸ்ரீ கயிலாசபதியாகிய பரமசிவன் வெள்ளிவிடையின்மீது பார்வதிசமேதராய்க்கணத்திலெழுந்தருளிவந்து பூமியிலிருக்கும் பிரமதேவனை எழும்பும்படியாய்க் கருணைசெய்து பிரமனைப்பார்த்தபோது, உட

னே பிரமன் உயிர்பெற்றெழுந்து பரமசிவனைத் தோத்திரஞ்செய்து அவரதுபாததாமரையைச் சிரமேற்சூட்டி ஆனந்தக்கூத்தாடினான், இவ்வாறு வயிரவமூர்த்தியினதுகரத்தால்வதஞ்செய்யப்பட்டு பரசிவத்தினுடைய அருளால் மறுபடியுமுயிர்பெற்று தனது அஞ்ஞானநீக்கித் தோத்திரஞ்செய்தமையால் இப்படிகொடுமையான தண்டனைசெய்கிறதே ஞாயமென்றும் இவ்வாறல்லாமல் என்போலியர்களுக்கு வேதசாஸ்திரபுராணங்களை ஓதுவதிற் பிரயோசனமில்லையென்றும் பிரமனுனவன்கூறி உமாமகேசனைப் பலவாறாய்த்தோத்திரஞ் செய்கையில், அப்போதுவிடையூர் தியாகியபெருமான் புன்சிரிப்போடும் பிரமனையும் மகாவிஷ்ணுவையும் பார்த்துச்சொல்லுகிறார், வாருங்கள், அரிபிரமர்களே நீங்களிருவரும் வேதங்களாற் கூறப்பட்டமொழியையுங்கேளாமல் அதிக்கிரமித்துநடந்தமையால் துன்பத்துக்குள்ளாயினீர் இனிமேல் அச்சமுறாதீர்களென்று அபயாஸ்தங்கொடுத்துப் பின்புவயிரவனைப்பார்த்து சந்தோஷத்தையடைந்தவராகியும், ஓ வயிரவா, நீ இந்தபிரமனுடைய சிரத்தைக்கிள்ளி அச்சிரம் உனதுகரத்திலே ஒட்டிக்கொண்டிருக்கின்றமையாலும் அது இனியுன்னை மிகுந்த இம்சைபடுத்துமாதலாலும், அந்ததோஷநீங்கும்படியாய் ஓ ருபாயஞ்சொல்லுகின்றேம், அதாவதெனில், இந்தபிரமகபாலத்தை கையிலேயேந்தி உலகின்கண் ஒருவருடம்வரையில் ஐயமெடுத்துண்டுதிரிந்து,வருடமானபிறகு பூலோகத்திலுண்டான தீர்த்தமெல்லாமாடிப்பிறகு காசிக்குச் சென்று கங்கையில்தீர்த்தமாடினால் உன்னைப்பற்றிய பிரம்மஹத்தியில் நான்கிலோர்பாகம்விலகும்,மற்றமூன்றுபாகமும்விலகும்படியவணின்றும் பிரயாணப்பட்டு தென்றிசையிற் சேதுமத்தியிலோங்குங் கந்தமாதனகிரிச்சாரியில் நமது ஆலயத்துக்குமுன்பாக நம்மாலுண்டாக்கிய சிவதீர்த்தத்தில் மூழ்கினால் உடனே அந்தபிரம்மஹத்தி யுன்னைவிட்டுநீங்கிப்போம்,இதற்குச் சந்தேகமில்லையாதலால் பயப்படாமல்நாம்சொல்லியபடி செய்யக்கடவையென்று பரமேசுவரன் திருவாய்மலர்ந்தருளி.

அரிபிரமர் முதலியதேவர்கள் துதிக்கும்படியாய் கயிலாசகிரிக்கெழுந்தருளினார், அப்பாற்பிரமதேவனுடைய சிரங்கிளெப்பட்டு மறுபடியும் பரமசிவனால் உயிர்பெற்ற அந்தஸ்தானத்துக்குப் பிரமாபுரமென்னும் பெயர்விளங்கச்செய்து அவ்வாறுவழங்கி வருகின்றபடியாலும் அவ்விடமிருந்தவயிரவர் பிரமகபாலத்தைக் கையிலேந்தி அவணின்றும் பிரயாணப்பட்டுச் சகலலோகங்களிலேயும் பிரவேசித்துப் பிச்சையெடுத்துச்சாப்பிட்டுக்கொண்டு திரிகிறபோது, பிரம்மஹத்தியும் அவர்பின்னேதொடர்ந்து திரியப் பரமசிவத்தின் கட்டளைப்படி ஒருவருடமானபிறகு அதன்பேரில் பூலோகத்திலுள்ள தீர்த்தமியாவுமாடிப்பின்னர் காசிக்குச்சென்று கங்கையிற்றீர்த்தமாடும்போது நீலகண்டமூர்த்தியின் கட்டளைப்படி பிரம்மஹத்தியில் நான்கிலோர்பாகமகன்று மற்றமூன்றுபாகம் வயிரவரைப்பற்றிவாதிக்கும்போது வயிரவரும்பயந்துகெட்டு அதிஜாக்ரதையோடும் காசியைவிட்டுப் பிரயாணப்பட்டுத் தென்றிசையிலோங்குங் கந்தமாதனபருவதச்சாரலில் சிவதீர்த்தக்கரைவந்துசேர்ந்து அத்தீர்த்தத்திலமிழ்ந்தவுடனே வயிரவரைப்பற்றிய பிரம்மஹத்தியாவும் நீங்கினபடியால் தனது கரத்திலிடமாயிருந்த சூலகபாலத்துடனே ஸ்ரீ கயிலாசபதியைத் தோத்திரஞ்செய்ய, பரமேசுவரனும் விருஷபவாகனமீது பார்வதிசமேதராயெழுந்து வயிரவமூர்த்திக்குப் பிரசன்னமாய்ச்சொல்லுவார், வாராய் காளவயிரவனே, உன்னைப்பற்றியிருந்த பிரம்மஹத்தி நீங்கிவிட்டபடியினாலே நீ காசிக்குப்போய் அந்ததிவ்யக்ஷேத்திரத்திற்றானே இந்தபிரம கபாலத்தை ஒருபக்கம் ஸ்தாபனஞ்செய்து விடுவாயென்றுவிடையளித்துப் பரமசிவன்கயிலாசத்துக்கெழுந்தருளினார், அதன்பின் காளவயிரவர் மகாசந்தோஷத்துடனே கந்தமாதனகிரியினின்றும் நீங்கிகாசிபட்டணம்போய்ச்சேர்ந்து சந்திரஜடாதரமூர்த்தியினது ஆஞ்ஞையின்வண்ணந் தன்னிடமிருந்த பிரமகபாலத்தை அங்ஙனமோரிடத்தில் ஸ்தாபனஞ்செய்துவிட்டு ஓர் தடாகமுமுண்டுபண்ணிப் பின் அந்தவிடத்துக்கு பிரம

கபாலமென்றும் பிரமகபாலதீர்த்தமென்றும் நாமகரணஞ்செய்து தானும் அவ்விடத்திற்றானே வாசஞ்செய்துகொண்டிருந்தாராதலால் அந்தகாசிக்ஷேத்திரத்திலே ஓங்கும் பிரமகபாலதீர்த்தத்தில் யாவரேனுந்தத்தம் பிதுர்களுக்குப் பிண்டமளிப்பார்களாகில் அவரைப்பற்றிய பாபங்களியாவும் விலகுவதோடும் இகபரசாதனத்துக்கு மேதுவாவார்களென்றும், அப்பால் இந்தகந்தமாதனபருவதத்திலே விளங்குஞ் சங்கதீர்த்தமானது அநேககோடி பிரம்மஹத்திகளையெல்லாம் விமோசனஞ்செய்து மிகமகிமையோடு மிருக்கின்றதென்றும் சூதமகாமுனிவர்சொல்ல, அதுகேட்ட நைமிசாரண்யர்மெத்தவுஞ்சந்தோஷமடைந்து, சுவாமி, இன்னமப்பருவதச் சாரலிலோங்கும் புண்ணியதீர்த்தமகிமைகளைதேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று வினவச், சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

சிவதீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

சங்கதீர்த்தச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, வேதாகமங்களால் விளங்கப்பட்ட சேதுவின்மத்தியிலே இலகுங்கந்தமாதனகிரிச்சாரலில் பொன்னுலகவாசிகளாகியதேவர்களாலுமற்றமூவர்களாலுஞ் சாற்றுதற்கரியசங்கமாமுனிவென்றோர் முனிவர்தவஞ்செய்து கொண்டிருக்கிறபோது, அந்தபோதனரால் உண்டாக்கப்பட்ட தீர்த்தமாதலால் அதற்குச் சங்கதீர்த்தமென்று பெயர்வழங்குவதோடும் அந்தீர்த்தத்தில் யார் மூழ்கினாலும் அவர்கள் மாதா பிதா குரு தெய்வங்களை நிந்தனைசெய்த தோஷமும் செய்ந்நன்றி மறந்ததோஷமும் பஞ்சமாபாதகங்களுந்தொலைந்து புனிதராவார்கள்; அதெப்படியென்றால், முன்னொருகாலத்தில் வேதகுலத்திலுற்பவித்து வாசகாபனென்றுசொல்லப்பட்ட ஓர்-பூசுரன் குணசீலனாகவும் மா

தார் பிதுர்க்களினிடத்தில் அத்யந்தபிரீதி யுள்ளவனுகவும்
பிரம்மக்கியானமுடையவனுகவும் யோகவானுகவும் நர்மசொ
ரூபனுகவுமிருக்கு மவ்வேதியன் பிரமசர்யம் கிரகஸ்தம்
வானப்பிரஸ்தம் இவைகளிலே ஒழுக்கமாய்நடந்து அநேக
காலம் நிருவிகற்பசமாதியிலே அசைவறவிருந்து விட்டான்,
அவ்வாறிருக்கும்போது அவனுடைய சரீரத்திலே புற்றுவளர்
ந்துமூடிக்கொண்டு அப்புற்றிலேஅநேகம்புற்பூகெள்முளைத்து
பறவைகளுக்கிருப்பிடமாய் அப்பறவைகளின்எச்சத்தினின்று
தங்கிய வித்துகளாலே அநேகவிருட்சசாதிகளுண்டாய் வள
ர்ந்து ஆகாசத்தையளாவிக் கொண்டிருக்கையில், அவற்றின்
வேர்களில் மூடப்பட்ட புற்றுக்குள்ளே யோகத்திலிருக்கும்
வாசனுபமுநி யிருக்கதெப்படி யிருந்ததெனில், பலாமரத்தின்
வேரினின்றும் பூவுண்டாகிப் பின்னர் பிஞ்சாய் காயாய் பழ
மாய்க்கனிந்திருப்பதுபோலசரிகைகிரிகையோகங்களின்றும்
பருவங்கடந்து கனிந்த ஞானப்பழமாய் மதியமிர்தமுண்டு
சுகித்திருந்தார் அப்படியிருக்கும் வாசனுபனென்னுமுநிவர்
தன்னுடையசரீரத்திலே புற்பூமுதலிய விருட்சங்களுண்டா
யிருந்தும் தேகாபிமானமற்றுத் தன்னைமறந்து சச்சிதானந்த
மயமாய் விளங்கிக்கொண்டிருப்பதை ஆடகலோகத்திறைவ
ஞகிய தேவராஜனறிந்து சப்தமேகங்களையும் வருவித்து, ஓ
முகில்னங்காள்,பூலோகத்திற் றபஞ்செய்து கொண்டிருக்கும்
வாசனுபனுடைய தபத்தைநாமறியவேண்டி யிருப்பதால்
நீங்கள்போய் உங்களுடையவலுக் கொண்டவரையில் கோர
தாரையாய் மழை வருஷிபுக்கவென்று சொல்லியனுப்ப, அது
போல் அச்சசப்தமேகங்களும் மகாகெம்பீரத்துடனே ஆகாச
வீதியெங்குநிறைந்து இடைதெரியாமல் மறைத்துக்கருங்
கடலுடைந்ததுபோல அண்டகடாகங்களும் வெடிக்கும்படி
யாய்ச் சத்தாடம்பரஞ்செய்து அடிக்கடிமின்னலுங் கெற்சித
மும் இடைவிடாமற்செய்துகொண்டு இராப்பகலாய்கல்மாரி
போற்பிந்தும்போதும் புற்றுக்குள்ளேயிருக்கிற வாசனுபனு
க்கு எவ்வளவுந்தோற்றுமல் உயுக்தாங்கத்தில் அத்திரங்களைச்

சரமாரியாய் வருஷித்தபோதினும் அவைகளைத் தாங்குமிற
சுத்தவீரனுக்கொப்பாகவும்,தேவேந்திரனுலேவப்பட்ட அவர்
த்தமென்னுஞ்சேனைமாரிக்கு கிஞ்சித்தேனுமஞ்சாமல் தே
வேந்திரனைதன்னைப் புட்பங்களாலர்ச்சிப்பதுபோலும்,நீரிடி
நெருப்பிடி முதலியமேகங்களின் கெற்சிதமும் மின்னலும்
அன்னவன்செய்யுந் தோத்திரம்போற்கருதியவராய், வாசநாப
முநிவர் சமாதியோகத்திலசைவறவிருப்பதை இந்திரன்கண்டு
ஆச்சரியமடைந்து, மகாமேருவைப்போலசைவில்லாதிருக்
கும் வாசநாபனதுசரீரத்தை அசையும்படியாயும் நிட்டை
நீங்கும்படியாயுஞ் செய்யவேண்டுமென அதிப்பிரியங்கொண்ட
வனுய், வாயுபகவானை வருவித்துத்தனது கருத்தையுரைத்து
எவ்விதமேனும் அம்முநிவரனது நிட்டைகலையச் செய்யவே
ண்டுமென்றனுப்ப, அதுபோல் வாயுபகவானனவன் யுகாந்த
காலத்திலோங்கி எழுஞ்சண்டமாருதத்தினுங் கோடிபங்கு
அதிகமாய் மேருமுதலிய அஷ்டகுலபருவதங்களும் நடுங்கி
கலகலத்துப் போகத்தக்கதாக மாரியோடிகலந்து புவன
முழுதுங் காடாந்தகாரத்தைப்போற் கிட்டியடர்ந்து பேரிடி
யோடும் லோகத்திலுள்ள சமஸ்தஜீவராசிகளும் உயிரிழக்
கும்படியாய் வருஷிப்பதோடுஞ் சண்டமாருத வேகத்தால்
ஆகாசத்தையளாவித்தழைத்த விருட்சங்களையெல்லாம் வே
ரோடுகல்லிக்கிளப்பி பூமியையக்காணுமல் கொக்கைப்போற்
பறக்கும்படியாயும்,பருவதங்களைக்கிளப்பிப் பொடித்துக்காற்
றோடுகாற்றாய் சமுத்திரத்திற்கலந்து நீடிய ஆழியினது ஆழ
த்தை அடைத்துச்சேறுபடுத்தும்படியாயும்,இடிகளின்கொடு
மையால் லோகங்கள்பஸ்மீகரமாய்ப் போவதோடும் பாதாள
லோகம்வரையில் பத்தல்பத்தலாய் வெடிக்கும்படியாயுஞ்செ
ய்துவருங்கொடுமையால், வாசநாபமுநிவர்மீது வளர்ந்தோங்
கியவிருட்சங்களுமொழிந்து,புற்றுமிடிந்து,பதுமாசனத்தின்
சந்நிதிமுன்வைத்திருந்தகமண்டலமும் துகள்பட்டு அல்லோ
லகல்லோலப்படுத்துவதை அம்முநிவரது புண்ணியபலனு
னதுகூடித்திரண்டு தருமதேவதையாய் ஓர் எருமைக்கடா

வைப்போற் சொருபமெடுத்து அண்டமுகடுகளெல்லாம்பொ
டிபடும்படியாய்த் தனதுகொம்புகளையசைத்து வாலைச்சுழற்றி
வீசுந்தன்மையால் மேகக்கூட்டங்கலைந்து நடுங்கிகதிமாறி வா
னிடமிருக்கும் உரோமங்களுக்கு தவிலமிட்டதுபோற் கல
ந்துபோகவும், இடிகளை வாலினுற்றட்டிச் சுளுந்தின்பொறி
போற் திசாதிசைகளிற் சிந்தும்படியாய்ச்செய்து, வாசஙாப
முனிவர்மீது ஓர் இவலையேனுமனுகவொட்டாமல் தனதுவழி
ற்றின்கீழிருத்தி கெற்சனைசெய்து தருமதேவதையானவன் நிற்
பதைக்கண்டதேவேந்திரன் ஆச்சரியமடைந்து, இவன்றவத்
தையழிக்க நம்மால்முடியாதென்று காணமுற்றவனுய் மழை
பொழியாமலிருக்கும்படியாய் மேகங்களுக்குத்தரவு செய்ய,
அதுபோல் மழைநின்றுபோனதைக்கண்ட பகடியமானது
முனிவனைவிடுத்துப் பத்தடிதூரம்விலகிப்போம்போது,வெள்
ளங்களினுல் பூமியைப்பிளந்து சேறுபட்டிருக்கும் வெடிப்
புக்குள் எருமைக்கடாவாகவிருக்குந் தருமதேவதையினது
நாலுகாலுஞ்சிக்கிப்புதைந்துபெயர்ப்பதற்குவழுவில்லாமலிரு
க்க,வாசஙாபனென்னுமுனிவர் உடனே தற்செயலாய் நிட்டை
நீங்கிக் கண்ணைவிழித்துப்பார்த்து எங்கும்வெள்ளமயமாக
வும் பூமிகள்வெடிப்புண்டும் விருட்சங்களும் அருகேயிருந்த
பருவதங்களுமில்லாது திசாதிசையிற்போய்ப் படிந்திருப்ப
தை முனிவர்கண்டு ஆச்சரியங்கொண்டு, இதென்னகாரணம்,
சமனுபேரில் ஒருஇவலையேனும் படக்காணும்,உலகம் கீழது
மேலதாய்ப்புரண் டிருக்கின்றதேயென்று ஞானதிருஷ்டியாற்
பார்க்கையில்,தேவேந்திரனுல் நடந்ததீமையென்றும் அதற்கு
தருமதேவதையாதொரு இடருமுறுமல் தன்னைப்பாதுகாத்த
தென்றுந்தெளிந்து சுற்றிப்பார்க்கையில், பகடுருவங் கொண்
டிருக்குந் தருமதேவதையைக் கண்டெழுந்ததனருகே சென்
று தருமதேவதையின்மீது சந்தோஷமடைந்து,ஓ தருமதேவ
தையே,நீ யென்னை இரட்சித்தபண்பால் நீடூழி வாழக்கடவை
யென்றுசொல்லி, பின்புசிலதூரத்திற் சாய்ந்திருக்குமோர்
விருட்சத்தடியிற்போய்ச்சேர்ந்து பழயபடி தவம்புரிய மேவு

கையில், கண்ட தருமதேவதையானவன் மனம் வருந்தி நாம்
செய்தநன்றியையோசியாமலும்புதைபட்டிருக்கும்நம்மைவெ
ளிப்படுத்தாமலும்போய்விட்டானெனக்கருதியும் நாம்செய்த
கருமமென்றும் தன்னைத்தான்வெறுத்துக்கொண்டு அதிபிர
யாசையோடும் புதைபட்டிருந்த கால்களைப்பிடுங்கிக்கொண்டு
மெதுவாய்த் தேசவாதையோடும் மனமெலிந்துநடக்குஞ் செய்
கையைக்கண்டமுனிவர்,திடுக்கிட்டெழுந்திருந்து, தருமதேவ
தையினிடம் வந்து, ஓ தருமதேவதையே, பாவியாகியநான்
அஞ்ஞானத்தால் உனதுகால்புதைபட்டிருப்பதை யறியாமற்
போய்விட்டபடியால் எனது குற்றத்தைப் பொறுத்தாட்கொ
ள்ளுவாயென்று பலவாறுகத்தோத்திரஞ்செய்தும், அந்தோ,
நான்செய்தபாபத்துக் கென்சொல்லுவேன்; உலகின்கண் யா
ரொருவர் உபகாரஞ்செய்கின்றார்களோ அவர்களுக்கு அபகா
ரஞ்செய்பவர்கள் பிரம்மாவிஷ்ணுமுதலிய தேவர்களது கால
வளவுவரையில் ரவுரவாதிநரகத்துள் வீழ்ந்திக்கனாகாளுதி
வர்களாய் துன்பப்படவருமேயென்றும்,செய்நன்றி மறந்தவர்
களுக்கும்,வேதாந்தசாஸ்திரங்களை உபதேசஞ்செய்த குருவு
க்கும் மாதா பிதாவுக்கும் இக்கடன் நீர்க்கடன் முதலிய கிரி
யைகளைச்செய்யாத பாவிகளுக்கும் உண்டாயிருக்கிறபாதகம்
அவருடைய உயிரைமாய்த்துக்கொண்டாலொழிய வேறே
அதற்கோர் பரிகாரங்களுஞ்சொல்லவில்லையே, ஆதலால் நம்
முடைய உயிரைமாய்த்துக்கொள்வதே நமக்குப்பரிகாரமென்
றுநினைந்து, அதிதீவிரமாய் அவணின்றும்நீங்கி ஓர் பருவத
உச்சியிற்போய் தலைகீழாய் பூமியில்விழுந்து மரணமடைவோ
மென்று போகும்போது,தருமதேவதையான மகிஷம் கண்டு,
அக்கணமே தனதுசொருபத்தையெடுத்து வராகாடமினன்னு
முனிவனுக்கு முன்பாகவந்துநின்று,வாராய் வாசஙாபனென்னு
முனிவனே, நானே தருமதேவதை, நீயேன் இப்போது வீணு
ய்,செய்நன்றி மறந்தனையால் இவ்வுயிரை வைக்கப்படாதென்
று நினைந்துமடியப்போகின்றாய், வேண்டாம், உன்னையறியா
மல்வந்த அபசாரத்தைநீக்கிக்கொள்ளும்படியாய் நானொருபா

யஞ்சொல்லுகின்றேன், அதுயாதெனில், பரதகண்டத்தென்றிசையிற் சேதுமத்தியிலோங்கும் கந்தமாதனகிரிச் சார்பில் முன்னோர்காலத்தில் சங்கமாமுனி என்பவராலுண்டாகிய சங்க தீர்த்தமென்று ஓர் தீர்த்தமிருக்கின்றது, அத் தீர்த்தத்திலே நீபோய் மூழ்கி அங்கு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ ராமநாதனைத் தெரிசனஞ்செய்து வருவையேயாகில் உனதுபாவங்களெல்லாம் விமோசனமாமென்று தருமதேவதை சொல்ல, அவ்வுரைகேட்ட வாசநாபன் மகாசந்தோஷமடைந்து, நான் செய்த அபசாரங்களையெண்ணாமல் இப்போது எனக்கு உபகாரஞ்செய்தனையேயென்று பணிந்து அநேக உபசாரவார்த்தைசொல்ல, அதை தருமதேவதைகேட்டு மகிழ்ச்சியடைந்து, நான்யாருக்குந்தருண தருணங்களிலே உபகாரஞ்செய்வதே என்னுடைய உண்மையாதலால் நான்கூறியவண்ணம் கந்தமாதனகிரிச்சார்பிலேவிளங்குஞ் சங்கதீர்த்தத்துக்குப் போய் சங்கற்பவிதியின்படிமூழ்கிவாவெனச்சொல்ல, அவ்வார்த்தையின்படியே வாசநாபனென்னுமுனிவன் அவணின்றும் பிரயாணப்பட்டு தென்றிசையிலோங்குங் கந்தமாதனகிரிச்சார்பிலே விளங்குஞ் சங்கதீர்த்தத்தில்வந்து மூழ்கியவுடனே, நன்றிமறந்தபாதகம் அவனைவிட்டகன்று அந்தகந்தமாதனபருவதத்திற்றானே அனந்தகோடிகாலந் தவஞ்செய்துகொண்டிருந்து மோட்சசாம்பிராச்சியமாகிய முத்திவீட்டைப்பெற்றார். ஆதலால், அத்தீர்த்தத்தினுடையபெருமையை யாவராற்சொல்லிமுடியுமென்று சூதமாமுனிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர் மெத்தவுஞ்சந்தோஷமடைந்து, முனிவனைநோக்கி, சுவாமி இன்னம் அவ்வரைச்சார்பிலிருக்கும் தீர்த்தங்களின் மகிமையை அடியோங்களுக்குத் திருவுளம்பற்றவேண்டுமென்று கேட்க, சூதமுனிவர்சொல்லத் தொடங்கினார்.

சங்கதீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

முத்தீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, முன்னொருகாலத்திலே பிரமகுலத்தில் உற்பவித்து இரயுக்குவனென்றுபெயர்படைத்த ஓர்முடவன், ஒற்றைமாடுகட்டிய வண்டியில் ஏறிச்சஞ்சாரஞ்செய்துகொண்டிருப்பவன், கந்தமாதன பருவதச்சார்பிலே தவஞ்செய்துகொண்டு தனது அஞ்ஞானத்தைநீக்கி நிர்மலனாய் லோகத்திலுள்ள சகலதீர்த்தங்களினுமாட எண்ணமுற்றவனாயினுந் தன்னால்நடந்துபோவதற்குச் சத்தியில்லாமையால் தானிருந்த கந்தமாதனத்திற்றானே பஞ்சாக்கினிமத்தியில்நின்று அன்னபானாதிகளில்லாமல் சருகுஜலபட்சணங்கள்செய்துநிட்டைசெய்து வருபவனுக்கு தேகத்தில்வறட்சி கொண்டு, எங்கோமுஞ் சொறிந்துகொண்டேயிருக்குந்தன்மையால் இரத்தம்பெருகி வருவதை நகத்தினாலெடுத்துத்தெறித்தும், மனத்தைவேறுபடுத்தாமல் பிரமசொரூபத்தினின்றும் அகலாமல் தவஞ்செய்துவருபவன், கங்கை யமுனை கயை இம்மூன்றுநதிகளினுந் தீர்த்தமாட எண்ணங்கொண்டவனாய், தன்னிடத்திலிருக்குஞ் சிறியவண்டியானது நதிகளிலும் காடுமலைவனம் வனாந்தரங்களிலும் போகமாட்டாதே, என்செய்வோம்; அம்மூன்றுநதிகளையும் இவ்விடத்திற்றானே வருவித்துக்கொள்ள வேண்டுமென்று சுத்தசத்துவத்திலிருந்து தபஞ்செய்து சின்மயானந்த சொரூபத்தையடைந்து ஒருமந்திரத்தைஜெபித்து கங்கை யமுனை கயை என்னு மூன்றுதீர்த்தங்களையும் மனதிற்சிந்தித்தவுடனே அம்மூன்றுநதிகளும் பூமியைப்பிளந்துபாதாளலோகமார்க்கமாக கந்தமாதனகிரிச்சார்பிலே விளங்குமோர் பூஞ்சோலையிற் கீட்டிசையைநோக்கிக் கண்களைமூடித்தவஞ்செய்து கொண்டிருக்கும் இரயுக்குவனென்னுமுனிவனது தேகமெல்லாங் குளிரும்படியாய் அலைகளைவீசிச்சிதறி ஆடம்பரஞ்செய்து சொல்லும்; வாருமையா முனிசிகாமணியே, நாங்கள்மூவரும் உமது தவப்பெருமையாற் பிரயாணப்பட்டுவந்தோமாதலால் இனி

உமதுசித்தத்தின்படி நிறைவேற்றிக்கொள்ளுமென்று சொல்ல, அப்போது இரயுக்குவமுனிவன் கண்ணைவிழித்துப்பார்த்து நதிகளைக்கண்டு சந்தோஷமடைந்து, நனிகாதலோடும் அம்மூன்றுநதிகளுக்கும் அர்க்கியபாத்தியசோடச உபசாரங்களுஞ்செய்து மந்திரவித்தாய் மகாநிவேதனங்களுங் கொடுத்து அவற்றில் மூழ்கியெழுந்திருந்து சந்தியாவந்தன நியமநிட்டைகளியாவுமுடித்து கங்கை யமுனை கயை என்னு மூன்றுநதிகளையுந்தோத்திரஞ்செய்கையில், அம்மூன்றுநதிகளுஞ் சந்தோஷத்தையடைந்து, இரயுக்குவனைநோக்கி, ஓமுனிவனே, உமக்குவேண்டியகாரியமென்னவென்றுகேட்க, அதைகேட்ட முனிவன், ஓ தாய்மார்களே, நீங்கள் மூவரும் இவ்விடம்வாசஞ்செய்திருந்து என்னைப்போன்றபாபிகளுக்கு உங்களுடைய பரிசம்பட்டமாத்திரத்தில் அவர்களைப்பற்றியிருந்த கர்மமியாவுமகன்று புனிதராகும்படியாகிய வரந்தரவேண்டுந் தாய்மார்களேயென்றுவினவ, அதுகேட்ட மூன்றுநதிகளும் இரயுக்குவமுனிவன் தவப்பெருமைக்கு அஞ்சித் துடுக்காரவர்களாய் சந்தோஷமடைந்து, ஓ முனிசிகாமணியே, உமதுகருத்தின்படி நாங்கள்மூவரும் இவ்விடத்திலிருந்து எங்களிடத்தில் எவ்விதமாகியபாபிகள் வந்துதீர்த்தமாடியபோதும் அவர்கள்கருமமகன்று புண்ணியராக விளங்கக்கடவதொன்றுவாக்களித்து, பின்பு மாதுடவுருவங்கொண்டுவந்த மூன்றுபெண்களும் நதிகளில் மூழ்கிமறைந்தார்கள். அதுமுதல் அம்மூன்றுநதியினும் வந்துதீர்த்தமாடுகிறவர்களுக்கு அஞ்ஞானமுதலிய கருமங்களகன்று பிறவிநோய்க்கெட்டாதவர்களாய் சைதன்யத்திற்கலப்பார்களாதலால் செப்புதற்கரிய இரயுக்குவமகாமுனிவனது தபோமகிமையால் மூன்றுநதிகளையும்வருவித்து திரிகாலமும் அவற்றில் தீர்த்தமாடிச் செய்வினையாவுமுடித்து தவஞ்செய்துகொண்டுவருகிறபோது, நந்தனென்னும் ஓர்வேந்தனுடைய புத்திரனாகிய சானசுருதியென்பவன் மன்னுயிர்களைத் தன்னுயிர்போற்பாவித்துப் பாதுகாத்துவருவதோடுங் குடிகளிடத்தில் அறுதிலொருகடமைவாங்கி நீதிவழுவாது இராச்சியபரி

பாலனஞ்செய்துவருபவன் கந்தமானச்சாரலில்விளங்கும் கங்கை யமுனை கயை எனனு மூன்றுநதிகளிலுந் தீர்த்தமாடி தனது அஞ்ஞானத்தையகற்றி மெய்ஞ்ஞானத்தைப்பெற்று பிரமசொரூபத்தையடைந்தான், அது எப்படியெனில், இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருக்குஞ் சானசுருதியென்பவன் மகாதருமசிந்தியோடுஞ் சகலஜீவர்களுக்கு மாதரவாய்த் தன்னுடையராச்சியத்தில் அன்னசத்திரங்களமைத்து பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னு நான்கு வருணத்தவர்களுக்கும் கைத்தல் புளித்தல் கார்த்தல் உவர்த்தல் துவர்த்தல் தித்தித்தலென்னும் அறுசுவையோடுங் கூடியபதார்த்தங்களோடும் அன்னதானஞ்செய்துவருவதோடுந் தன்னுடைய தேசமுழுமையும் சிவாலய விஷ்ணுவாலயங்களில் பிரமோற்சவ நித்யோச்சவங்களும் நடாத்தியும் பூசுரர்களால் யாகாதி யெக்கியங்களும் வேதபாராயணங்களுஞ்செய்து நாடோறும் வேள்விச்சாலையிலிருந்து மறைவிதியிற்கூறிய தருமங்களில், ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டங்கள், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், சுண்ணம், நோய்மருந்து, வண்ணான், நாவிதன், கண்ணாடி, காதோலை, பெண்போகம், தலைக்கெண்ணை, கண்மருந்து, பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், விலைகொடுத்துயிர்காத்தலென்னு முப்பத்திரண்டு தருமங்களையும் வழுவறநடாத்திவருகிறபோது, தனது செங்கோலுக்குட்பட்ட தேசமுழுமையும் நான்குவருணத்தவர்களும் தத்தம் வீட்டில் அடுப்புமூட்டிப்பன்னிரண்டு வருடகாலமாகியும் அவரவர்களுக்கு யாதுங்குறைவில்லாமல் அன்னதானஞ்செய்துவருகையில், அவ்வரசனால் நடாத்திவருந்தருமமானது மூன்றுலோகத்திலும் மேம்பாடுகொண்டு எங்கும்வேந்தனது பெருமையைக் கொண்டாடும்படியாகிய புகழ்ச்சியைப்பூலோகவாசிகளும் தெய்வலோகத்தில்வசிக்கும் தேவேந்திராதி பெரியோர்களும் முனிவர்களும் ஆகாசவாணியும் பூமிதேவியும்

கண்டு அரசன்மிகுசந்தோஷமடைந் திருக்குநாளையில், சானசுருதியென்னும் வேந்தனுடைய நகரத்தை ஆடகலோக வாசிகளாகியதேவர்களும் தேடுதற்கரிய முனிவர்சித்தர்களும் கருடகாந்தர்வ சித்தவித்யாதரர்களும் பார்க்கவேண்டி ஆவல் கொண்டவர்களாய், அன்னப்பட்சியைப்போலுருவங்கொண்டு மண்டலத்துள்ள மன்னர்களினது மகுடமுடிகளை இடறத்தக்க வீரகண்டாமணிதரித்த கால்களையுடைய சானசுருதி வேந்தன்வாழும் பட்டணத்தின் பூங்காவனங்களி லோங்குந் தாமரைத்தடாகங்களில் வந்திறங்கி, அவற்றிற்புட்பித்திருக்கு மலர்த்தாதுக்களையருந்தி விளையாடிப் பகற்காலத்தைப்போக்கி, அன்று இராப்போதுவந்தகாலையில் அப்பட்டணத்தையாளுஞ் சானசுருதியென்னும்வேந்தன் வசந்தகாலமாதலாலும் பூர்ணோதயமாகியசந்திரன் பிரகாசமாயிருப்பதாலும் தான் பூங்காவனத்தில் ஆகாயத்தையளாவியோங்கும் மங்களவாசமாதலிற் பண்ணுதற்கரிய சந்திரகாந்தமணி மேடையில் தனதுபட்டத்துத்தேவியோடுஞ்சேர்ந்துபேசிக் கொண்டிருக்கையில், அப்பூங்காவனத்தில் அன்னவுருவங்கொண்டுவந்திருக்கும் ஆடகலோகவாசிகளாகியதேவர்கள் தமதுலோகத்தைச்சேரவேண்டி அப்பூங்காவனத் தடாகத்தினின்றும் நீங்கிக்ககனமார்க்கத்தி லெழும்பும்போது, வேந்தனைக்கண்டசிலபட்சிகள் தம்துகூட்டத்துக்குத் தலைமையாகவிருக்கும் இராஜபட்சியைநோக்கி, ஓ அரசே, இவ்வேந்தன் தயாளுவாதலால் இவனைச்சந்தித்துப்போவதே கருணையென்றுரைக்க, அவ்வார்த்தையைக்கேட்ட ராஜபட்சியாகிய இந்திரன் மன்னனுக்கு அநுக்கிரகஞ்செய்ய மனசில்நினைத்துப்பின்னுந் தன்னினங்களாகிய அன்னங்களைப்பார்த்துக் கூறுகின்றது, ஓ அன்னங்களே, என்னவார்த்தைசொன்னீர்கள், இவ்வேந்தன் என்னநற்குணத்தையுடையவன், என்னதவஞ்செய்தான், எந்தபெரியோர்களுக்கு உபகாரஞ்செய்தான், தான்மறுபிறப்பிற் சுகத்தையடையவேண்டிச் செய்யுந்தருமமேயன்றி மோட்சசாம்ராச்சியத்தை விரும்பவில்லையே, ஆதலால் இத்தன்மையவ

ய்ந்தவனையாம் எவ்வாறுசந்திப்பது, உணராமற்சொல்லுகின்றீர்களேயென்று இராஜபட்சிகூறியதன்றியும் பின்னுஞ்சொல்லும், ஓ இனங்களே, பூலோகத்திற்பிறந்து அஞ்ஞானநிவர்த்திசெய்து மனவாக்குக்கெட்டாத சுயஞ்சோதியாய் விளங்குஞ் ஜகதீசனதுபாதநீழலிற் குடிபுகவும், சிதாகாசத்தைக் கலக்கவும் எண்ணங்கொண்ட ஓர் புண்ணியபுருஷன் இவ்வுலகின்கண்ணேக்கும் பரதகண்டதெட்சணபாகத்தில் ஸ்ரீ ராமமூர்த்தியாற்கட்டப்பட்ட சேதுமத்தியிற் கந்தமாதனகிரிச்சார்பில் தவஞ்செய்துகொண்டிருக்கும் புண்ணியனை நம்போலியர் சந்திக்கலாம், அப்படி அவனைபிரயாசையோடு சந்தித்தபோதினும்பெயருண்டாம், அன்றியும் அவன் எவ்விதமானவனெனில், இரண்டுகாலுமில்லாதமுடவன், இரயுக்குவனென்னும் பெயர்படைத்தவன், முடவனாகவிருந்தும் கங்கை யமுனை கயை என்னுமூன்றுநதிகளையுந் தனதுதவப்பேற்றால்தானிருக்குங் கந்தமாதனகிரிச்சார்பில்வருவித்து, அவற்றில் தீர்த்தமாடி, அவைகளை அங்கிருந்து இன்னும்வந்து அத்தீர்த்தத்தில் மூழ்குபவர்களுக்கு இட்டசித்தியாகும்படியுங் கேட்டுக்கொண்டசாது, அன்னோனது தவத்திலே பதினாயிரத்திலோர்பங்கு மிவன்செய்தறியானே, ஆதலால் இவனையாம்சந்திக்கவேண்டியதில்லையென்று சொல்லி அசட்டைசெய்து யாவுமொருங்குசேர்ந்து தெய்வலோகம்போய்ச்சேர்ந்து தத்தம் சொரூபத்தையெடுத்து அவரவர்கள் இருப்பிடம்போய்ச்சேர்ந்தார்கள். பின்னர் இவ்விதமாய் அந்த அன்னப்புட்கள் கூறிச்சென்றவார்த்தையைக் கேட்டிருந்த சானசுருதிராஜன் வியாகுலங்கொண்டுசோர்ந்து துக்கக்கடலுள்மூழ்கிப் பெருமூச்செறிந்து யோசித்து, இவ்வன்னப்பட்சிகள் சொல்லிய இரயுக்குவ மாமுனியை நாம்போய்க்கண்டுசரணாகதியடைந்து அவராலே நாம்கதிபெறவேண்டுமல்லது இவ்விதமாய் நாம் செய்யுந்தருமங்களால் யாதும்பிரயோசனமில்லை, அந்தோ, ஆகாயத்தில் உலவும் பறவையினங்களுக்கு முதன்மைபூண்ட அன்னங்கள்சொல்லிச் சென்றவார்த்தையேசரியாம், ஏனெ

னில், நாமிதுபரியந்தஞ் செய்ததானத்தில் என்னதேடிக்கொ
ண்டோம், ஒன்றுமில்லையாதலால், மேலோர்களைக்கண்டு சே
வைசெய்து அவர்களுடைய அநுக்கிரகத்தைப்பெற்று அனித்ய
சரீரத்தை யெடுக்காமல் மோட்சசாம்பிராச்சியத்தை யடைய
வேண்டுமென்று இராப்போதெல்லாம் யோசித்திருந்தவனாய்,
அருணோதயமானவுடனே எழுந்து,காலைக்கடன்முதலியநியம
நிட்டைகளைமுடித்து,தேவேந்திரனதுஇரதசாரதியாகிய மாத
லிக்கிணையாகிய தனதுதேர்ப்பாகனை அழைத்துக்கூறுவான்;
வாராய் எனதுவலவனே,நீ சமரதத்திலேறி தெட்சணபாக
த்திலோங்குங் கந்தமாதனகிரிச் சார்புக்குப்போய் அவண்
விளங்கும் வனங்களிலேனுஞ் சோலைகளிலேனும் திரிநேத்
திரதாரியாகிய பரமசிவத்தை இதயகமலத்திலிருத்தித் தவஞ்
செய்துகொண்டிருக்கும் இரண்காலுமில்லாத முடவராகிய
ஓர் முனிவர் அவ்விடமிருப்பதும் இல்லாததுங்கண்டு, அப்படி
யிருப்பாராயின், அவரைக்கண்டு வணங்கிவார்த்தையாடி,அவ
ரது பெயரையுந்தெரிந்துகொண்டு,அதிவிரைவிலிவ்விடம்வந்து
சேருவாயென்று வேந்தன்கட்டளையிட்டதைக்கேட்ட தேர்ப்
பாகன்,அவ்வாறே இரதாரூடனாய்ப் பட்டணத்தைவிட்டுப் பிர
யாணப்பட்டு, காடு மலை வனம் வனாந்தரம் ஆறுமுதலிய
நதிகளும் பதிகளுந்திவ்யக்ஷேத்திரங்களுங்கடந்து, சேதுமத்
தியிலோங்குங் கந்தமாதனகிரிச்சாரலிற்சேர்ந்து, அவ்விடத்தி
லுள்ள வனங்களிலும் பூங்காவனங்களிலும் காவுகளிலும்
மலைநுழைவுகளிலும் தடாகக்கரைகளிலும் அரசன்சொல்லிய
அடையாளப்படி ஒருவனையுங்காணமல் துன்பமடைந்து
திரிந்து பார்த்துக்கொண்டுவருகிறபோது;அங்ஙனமோர்வண்
டியிலுட்கார்ந்துகொண்டு தீர்த்தமாடவேண்டிப் பிரயாணப்
பட்டுவருகிற இரயுக்குவனென்னு முனிவரைக்கண்டசாரதியான
வன் சந்தோஷமடைந்து, இரதத்தைவிட்டுக் கீழேயிறங்கி
மகாபக்திவிநயத்தோடும் முனிவரை அஷ்டாங்க பஞ்சாங்க
திரியாங்களாய்ப்பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்
கூப்பி அஞ்சலியஸ்தனாய், பலவாறாகத்தோத்திரஞ்செய்து

சுவாமீ, தேவரீரைத் தரிசித்தபோதே அடியேனைப்பற்றிய
கர்மமியாவுமகன்றன, ஆதலால் தேவர்சித்தங்கனிந்து நமது
நாமகரணத்தைப் புலப்படுத்தவேண்டுமென்றுகேட்க, அப்
போது முனிவர் வலவனைப்பார்த்து, அப்பா, எனதுபெயர்
இரயுக்குவனென்று சொல்லுவார்களென்று புன்சிரிப்புடனே
சொல்ல,அவ்வார்த்தையைச் சாரதியானவன்கேட்டு,சுவாமி,
மெத்தவுங்களிப்படைந்தேன், அடியேன்போய்வருகிறேனெ
ன்று விடைபெற்று, இரதமேறி, அவணின்றும் பிரயாணப்
பட்டு,வாயுவேகத்திலுங் கொடியவேகமாய்த்தேரைநடாத்திப்
பட்டணம்வந்துசேர்ந்து,தனதுஇராஜனைக்கண்டு,வணங்கித்,
தான்போய்வந்த சங்கதிகளியாவு மாதியோடந்தமாய்த்தெரி
விக்க, அதைக்கேட்ட வேந்தன் மெத்தவுஞ் சந்தோஷமடை
ந்து, முனிவரைக்கண்டு தரிசித்துகதிபெற வேண்டுமென்னுங்
காதல்கொண்டவனாய், இராச்சியமுதலிய பண்டிபண்டாரங்
களையெல்லாம்வெறுத்து அம்முனிவருக்கு காணிக்கையாக
காமதேனுவுக்கொப்பாகிய ஆயிரம்பசுக்களும் ஒருபாரந்தங்க
மும் நவரத்தினகசிதமாகிய ஓர்தேரும் திட்டப்படுத்திக்கொ
ண்டு, இராச்சியமுதலியயாவும்மந்திரிகள்வசப்படுத்திவிட்டு,
முனிவருக்குக்கொண்டுபோகுங் காணிக்கைவஸ்துக்களை முன்
னேநடத்தி, இராப்பகலாய் காடுமலை முதலியயாவுங் கடந்து
சேதுமத்தியிலோங்குங் கந்தமாதனகிரிச்சார்பில் கங்கையமு
னைகயை என்னுமூன்றுநதிகளும் விளங்குந் தீர்த்தக்கரை
யில் தவஞ்செய்து கொண்டிருக்கும் முனிவரைக் கண்டு,
இரதத்தை விட்டிறங்கி, தான்கொண்டுவந்த காணிக்கை
களை முனிவர்முன்னிருத்தி, அந்தரங்கபக்தியோடுஞ் சாஷ்
டாங்கமாய்ப்பணிந்து எழுந்துகைகட்டி யெதிர்நின்று,பலவா
றுகத் தோத்திரஞ்செய்து,சுவாமி, அடியேன் கொண்டுவந்த
காணிக்கைகள் அற்பமாயினுந்தேவரீர் திருவுளங் கனிந்து
ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும்;அடியேனையுமாட்கொள்ள
வேண்டுமென்றும், பக்திவிநயத்தோடுகூறிப் பணிந்துநிற்கும்
பார்த்திபனைக்கண்ட முனிவர் அகமகிழ்ந்து, முகமலர்ந்து, ஜக

பதியைப்பார்த்து, வாருமையாவேந்தே, இந்த அற்பமாகிய பதார்த்தத்தை யெனக்குத்தேடினாய், நித்தியமல்லவே, அநித்தியமாயிற்றே, மேலும் நாம் கனகக்கடலுட்டோய்ந் திருக்கின்றோம் அக்கடலில் ஓர் திவலைக்குமிணையில்லாதவிதனை விரும்பினாற் றுன்பந்தருமாதலால் யான்வேண்டேனென்று கூறியதைக் கேட்டவேந்தன், சுவாமீ, தேவரீர் நாயேனுக்கு கடாக்ஷிக்கும் நித்யானந்தவஸ்துவுக்கு அணுவிற்கோடிபங்கிலோர் பங்குக்குமிணையில்லாதாயினும் எளியேன் றந்தவையை ஒப்புக்கொண்டு இரட்சிக்கவேண்டுமென்றுவணங்கித்தோத்திரஞ்செய்ய, அப்போது இரயுக்குவர் மனமகிழ்ந்து, வேந்தன்கொண்டு வந்தகாணிக்கைகளை அவணெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராமநாதக்கடவுளுக்கு அர்ப்பிதஞ்செய்தவராய், வேந்தனைநோக்கி, ஓ வேந்தே, உலகின்கண் யாரொருவர் இல்லறதன்மத்திலிருக்கும்போது பாபபுண்ணியமென்று சொல்லப்பட்ட இரண்டையும்பினையாமற் பரிசுத்தமாகியமனத்தோடும் இருக்கின்றவர்களே புண்ணியராவர், மேலும் ஞானமோட்சத்தையும் பெறுவார்கள், ஆதலால் நீ அந்த இரண்டுகாரியத்திலு மிச்சையுடையவனாகவிருந்தும் நம்மைவந்தடுத்தமையால் இக்கந்தமாதனத்திலே விளங்கும் கங்கை யமுனை கயை என்னு மூன்று தீர்த்தங்களிலும்மூழ்கிவினையகன்று நிர்மலவஸ்துவை யடைவாயென்றுசொல்லி, வேந்தனுக்கு ஏகாட்சரத்தை யுபதேசித்தருளினார், உடனே சானசுருதிவேந்தன் மகாசந்தோஷத்தோடும் கங்கை யமுனை கயை யென்று சொல்லப்பட்ட மூன்றுநதிகளிலுந்தீர்த்தமாடி, அஞ்ஞானத்தைப்போக்கி, பிரபஞ்சவாழ்க்கையைச் சொற்பனம்போற் கண்டு தெளிந்தவனாய், நேமநிஷ்டையை முடித்துக்கொண்டு, தனதுகுருவாக எழுந்தருளியிருக்கும் இரயுக்குவமாமுனியைவணங்கி தோத்திரஞ்செய்து, அவருடனேதானுமிருந்து, அவர்கட்டளையின்படி மௌனமந்திரத்தை தியானஞ்செய்து, ஒருவராலுமடையப்படாத ஞானசாகரத்திலழுந்தி, பேரின்பத்தை யடைந்து கந்தமாதனத்திற்றானே வாசஞ்செய்துகொண்டிருந்து, பிரம

சொரூபத்தையடைந்தாராதலால் இத்தன்மையாகிய மகிமையைப்பெற்ற கங்கையமுனை கயை என்னு மூன்றுதீர்த்தத்துக்குச்சமீபமாய்க் கோடிதீர்த்தமிருக்கின்றது, அத்தீர்த்தத்தினது பெருமையைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதமகாமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

முத்திதீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

கோடிதீர்த்தச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, இவ்வுலகின்கண் ஓங்கும் இப்புண்ணியதீர்த்தமானது சிறப்போங்கிய கோசலதேசத்தை அரசாட்சிசெய்துவந்த தசரதமகாராஜகுமாரனாகிய ஸ்ரீராமசந்திரமூர்த்தியினது கரத்திலிடமாகவிளங்குங் கோதண்டமென்னும் விற்கோடியால் உண்டாக்கிய தீர்த்தமாதலால் கோடிதீர்த்தமென்று விளங்கப்பட்டு, புவனசராசரத்திலுள்ள புண்ணியராதி சகலத்தாருக்கும் உற்ற ஆகாமியசஞ்சித பிராரத்வவினைகளைப்போக்கிச் சகலலோகங்களும் புகழும்படியாய் இஷ்டகாமியங்களையும் மோட்சகாமியங்களையுங்கொடுத்து மகிமையோடிருக்கு மித்தீர்த்த மெவ்வாறுண்டாயிற்றெனில்; மிதிலாபுரிக்கிறைவனாகிய ஜனகமகாராஜனுக்குப் புத்திரியாகவாய்ந்த ஜானகியை இலங்கைவேந்தன் வஞ்சித்தெடுத்துக்கொண்டுபோய்ச் சிறையிட்டிருந்ததினால் அப்பதகனுடைய ரக்கப்பூமிகளை, பாணகோடிகிரணம்போலொக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியானவர் பற்றறக்காய்ந்து பஸ்மீகரப்படுத்தி அவணின்றுஞ் சீதாபிராட்டியுடன் கந்தமாதனகிரிச்சாரலில் சிவலிங்கபிரதிஷ்டைசெய்து அச்சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்யவேண்டிப் புநிதமாகிய தீர்த்தத்தின்பொருட்டுத் தன்னாற்பிரதிஷ்டை செய்திருந்த இராமலிங்கத்துக்கருகில் தனது கரத்திலிடமாக விளங்குங் கோதண்டமென்னும் வில்லை பூமியிலிருத்தி, பகீரதியெ

ன்னுங்கங்கையை அவன்வரும்படியாக தியானஞ்செய்து,
ஊன்றிய தனதுசிலைக்கோடியை எடுத்தமாத்திரத்தில் அவ்
வழியினின்றுங் கங்கையானவள் பாதாளவாகினியாய்ப் புறப்
பட்டு திவ்யவாசத்தோடும் வந்துபிரவேசித்தபோது, அதைக்
கண்ட இராமமூர்த்தி மெத்தவுஞ்சந்தோஷமடைந்து, உட
னே இராமலிங்கத்துக்கபிஷேகஞ்செய்து, அக்கடவுளால் அ
நேகவரங்களைப்பெற்று, அங்குளதீர்த்தமியாவற்றினுந் தனது
தேவிமுதலியயாவரோடுஞ் சேர்ந்துமூழ்கிச்,சகலவானர வீர
ரோடுஞ் சேனைகளோடும் பிரயாணப்பட்டு அயோத்தியா பட்
டணம்போய்ச்சேர்ந்து,பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு,தே
வியோடுங்கூடி இராஜரீகஞ்செய்துவந்தார், ஆதலால் அந்த
ராமமூர்த்தியினது விற்கோடியையூன்றி யுண்டாக்கிய தீர்த்த
மானது சொர்க்க மத்ய பாதாளமென்னு மூன்றுலோகங்
களும் புகழத்தக்கதாய் தீர்த்தமாடினவர்களது பிறவித்துன்
பத்தைநீக்கி முத்திவீட்டைத்தரும், இத்தீர்த்தத்தில் மூழ்கிய
பின் வேறேதீர்த்தத்தில் மூழ்குவார்களாகில் அவர்களுக்குயா
தும் பிரயோசநமிராதென்றுசொல்ல, அதுகேட்ட நைமிசா
ரண்யர்கள்ஆச்சரியமடைந்து,சூதமுநிவரைப்பார்த்து,சுவாமி,
தேவரீர் வியாசபகவானுடைய வாக்கியத்தின்படி பதினெண்
புராணங்களையுமறிந்தஎங்களைப்போன்றவர்களுக்குபோதித்து,
வருவதில்,தீர்த்தமகிமையென்றும்மூர்த்திமகிமையென்றுந்த
லமகிமையென்றுமூன்றுஞ்சொல்லிய இம்மூன்றிலொன்றுக்கொ
ன்று மேன்மையாய்ச்சொல்லிவந்து,இப்போதுசொல்லிய இக்
கோடிதீர்த்தத்தில் மூழ்கியவர்கள்பிறகுவேறே தீர்த்தமாடினு
ல்ஒருபிரயோசனத்தையு மடையமாட்டார்களென்று சொல்
லியதெவ்வாறெனக்கேட்க, அப்போதுசூதர்,முநிவரைப் பார்த்
து,ஓநைமிசாரண்யர்களே,நீவிரிப்போதுகேட்ட சங்கையான
துநற்சங்கையாகி இருப்பதால் அதைப்பற்றியான்மெத்தவுஞ்
சந்தோஷமடைந்தேன்,ஏனெனில், ஆதியில் எனக்கும் இச்
சங்கை உண்டாயிருந்து அச்சங்கையை நான் நாரதமகாமுநி
யால் அறிந்து உங்களுக்குச்சொல்லப்போகின்றதால் கியாபக

சத்தியோடுங் கேட்கக்கடவீர்களென்றுகூறிப் பின்னுஞ்சொ
ல்லுவார், கேளுங்கள்முநிவர்களே, இப்போது யான்சொல்
லப்போகும்படியாகிய கோடிதீர்த்தந்தவிர மற்றதீர்த்தங்களெ
ல்லாம் ஒவ்வொருமகிமைகளைப்பெற்று இஷ்டகாமியங்களை
அவரவர்கள் கருதியபடிகொடுப்பதோடும் மோக்ஷசாம்பிராச்
சியத்துக்கும் ஏதுசெய்பவைகளாகவிருக்கினும்; இக்கோடி
தீர்த்தமாத்திரஞ் சுயம்புவாய் பகீரதியான கங்காபவானியான
வள் தானேபிரத்யக்ஷமாய்ப் பாதாளவழியாய்வந்து குடிகொ
ண்டிருப்பதனாலே இந்ததீர்த்தம் அகண்டபரிபூரண சச்சிதா
னந்தசொரூபமாய் விளங்குகின்ற ஆகாசத்தின் அண்டமுகட்
டினின்று மிறங்கி மகாமேருவிற்பிரவேசித்துப் பரமசிவத்தி
னது சடாடவியிற்குடிகொண்டிருந்து ததும்பி நான்குபிரி
வாய் கிழக்கு வடக்கு மேற்குத்திசையிலே மூன்றுவகை நாம
தேயத்துடனே,சமுத்திரத்திலே விழுவதோடுந் தென்பாகத்
திலேபிரவேசித்த கங்கையானவள் பாகீரதியென்னும் பெய
ருடையதாய் காசிக்ஷேத்திரத்திலே மோக்ஷத்துக்கேதுவாய்
விளங்கிக்கொண்டிருந்த பாகீரதியை பாதாளவழியாய் ஸ்ரீராம
மூர்த்தியானவர்வருவித்து,அத்தீர்த்தத்தை மறுபடியுஞ் சிவத்
தினது சிரத்திற் குடிகொண்டிருக்கும்படியாய்ச் செய்வித்த
தோடும் தனதுகோதண்டமாகிய வில்லும் தன்னுடைய அஸ்
த்திரங்களும் அவற்றிற் சந்திக்கும்படியாய்ச் செய்தபண்பால்,
அக்கோடிதீர்த்தத்திலே தீர்த்தமாடிய ஜீவாத்மாக்களுக்கு
சித்தமாய்மோட்ச சாம்பிராச்சியங்கிடைப்பதோடும் அன்ன
வர் பூமியிலிருக்குமளவும் இஷ்டகாமியங்களையுந் தரவல்ல
தாதலால் இத்தீர்த்தத்தில்மூழ்கியபின் வேறேதீர்த்தத்தில்மூழ்
கப்படாதென உரைக்கலாயிற்று, மேலும் இப்பெருமைபொ
ருந்திய தீர்த்தந்தவிர மற்றதீர்த்தங்களோவெனில்,தீர்த்தமாடி
யவர்களுக்கு அநேகஜென்ம சுகிர்தபலவிசேட புண்யானந்த
போகபாக்கியங்களைத் தரும்பொருட்டு ஜென்மங்களை உண்
டாக்குமாதலால் மோட்சத்தைவிரும்பினபேர்கள் மறுபடி
யுந் தாழ்வடையவிரும்பார்கள். அப்படிவிரும்பி கோடிதீர்த்

தத்தில்மூழ்கி மறுபடியும் வேறேதீர்த்தத்தில்மூழ்கினாற்பிறவிநோயையநுபவித்துத்தீரவேண்டும், ஆதலால்இதையுணர்ந்த ராமமூர்த்தியானவர் முன்புமற்றதீர்த்தங்களிலெல்லா மூழ்கி முடிவிற் கோடிதீர்த்தத்தில்மூழ்கி அயோத்தியா பட்டணம் போய்ச்சேர்ந்தார், கேட்டீர்களோ மகாரிஷிகளே, மேலும் பூலோகத்திலே வசிப்பவர்கள் அவரவர்கள் கர்மாநுபவப்படி யாத்திரை செய்யப்பட்டபேர்கள் எத்தலத்திலாவது எந்த மூர்த்தியை எந்ததீர்த்தத்தைக்காணுகின்றார்களோ அவற்றில் உடனேஸ்நானஞ்செய்து வணங்கித்துதித்து வரவேண்டும், அவ்வாறுவருகிறபேர்கள் இந்தக்கோடிதீர்த்தத்திலே முழுகிவிட்டால் பிறகு அத்தலத்திலே வேறேயொரு தீர்த்தங்களிலும் மூழ்கப்படாது, ஆயினும் அவரவர்கள் காலதேசவர்த்தமானங்களைக்குறித்தும் நல்வினைதீவினையைக்குறித்தும் பிதுர் சிரார்த்த தேவபூஜாவிதிகளைக்குறித்தும் அந்தவிடத்திலே விளங்குகின்றதீர்த்தங்களிலே மூழ்கிக்கிரியைகளை நடப்பித்துப் பொழுதுபோக்கிக்கொண்டிருந்தாலும் அவரவர்களுடைய ஆயுள்முடிவிலேயாவது இந்தக்கோடிதீர்த்தத்தை தத்தம் ஆத்மாவுக்கு ஸ்நானபானமாகவேண்டியதாய் இத்தீர்த்தத்தைக் கமண்டலங்களிலேகொண்டுபோய் பத்திரப்படுத்தி வைத்திருப்பார்கள், ஏனெனில், அந்த பாகீரதியானவள்சதாகாலமும் ஸ்ரீராமலிங்கத்தினுடைய சந்நிதானத்திலே குடிகொண்டிருப்பதாலும் எப்போதுமப்பெருமானுடைய சடாடவியில் விளங்குவதாலும் காசிமகாக்ஷேத்திரத்தில் விளங்கும் பாகீரதியினுடைய பிரவாகத்தை பூலோகவாசினியாய்ப் புண்ணியபுருஷாளெடுத்துவந்து ஸ்ரீராமநாதனுக்கு அபிஷேகம்பண்ணினால் மகத்துவமிருப்பதினாலே நரஜன்மங்களாய்ப் பிறந்தவர்கள் அதைக்கொண்டுவந்து ஸ்ரீராமநாதனுக் கற்பிதஞ்செய்கிற கங்கையைப்பார்க்கிலும் சுயம்புவா யிருக்கின்ற கோடிதீர்த்தமானது அநேகக்கோடி விசேடமென் றறிந்து அதை எடுத்துக்கொண்டுபோய் வைத்திருப்பார்கள், மேலும் அந்தபகீரதியானவள் ஆத்மலாபத்துக்குடையவளா யிருப்ப

தால் அதினின்றும் ஓங்கியகோடிதீர்த்தத்தின் பெருமையை அளவிடப்போமோ, மேலும் பண்டோர்காலத்தில் யாதவகுலத்திலுற்பவித்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தனது அம்மானாகிய கஞ்சனைக்கொன்ற தோஷந்தீரவேண்டியதாய் இக்கோடிதீர்த்தத்தில் தீர்த்தமாடினாரென்று சூதமுநிவர் சொல்லியதைக்கேட்ட நைமிசாரண்யர்கள் சூதமுநியைநோக்கி, சுவாமீ, ஸ்ரீ கிருஷ்ணபகவானானவர் யாதுகாரணத்தால் அம்மானைக் கொன்றார், அப்படிகொன்றபோதிலும் அவருக்குதோஷமுண்டென்று விதித்தவர்யாவர், யாவருடையவாக்கியத்தைக்கேட்டு இக்காரியத்திற்பிரவேசித்தார், இவைகளையெல்லாந் தேவரீர் அடியோங்களறிந்து கொள்ளும்படியாய்த் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றுகேட்க, சூதமாமுநிவர் சொல்லத்தொடங்கினார்.

கேளுங்கள் மகாரிஷிகளே, வடமதுராபுரி என்னும்பட்டணத்தை அரசாட்சிசெய்துவந்த சூரசேனமகாராஜாவின் குமாரனாகிய வசுதேவனுக்கு உரோகணிதேவி என்றுந் தேவகிதேவி என்றும் இரண்டுபெண்களைக் கலியாணஞ்செய்து வசுதேவனோடும் இரதத்திலேற்றி ஊர்க்கோலங்காட்டு நிமித்தம் மைத்துனனாகிய கஞ்சன் சாரதியாகவமைந்து இரதத்தைநடாத்திவீதிப்பிரதட்சணமாய்வருகையில், அப்போது ஆகாசத்தினின்றும், ஓ கஞ்சமகாராஜனே, இவ்விருவர்கள்வயிற்றிற் பிறக்கும்பிள்ளைகளால் உனக்குமரணமுண்டாமென்று அசரீரிகூற, அவ்வாய்மையைக்கேட்டநாள் முதற் கஞ்சன் மெத்தவுந் துக்கசாகரத்துளாழ்ந்து, பின்னர் ரோகணிதேவி தேவகிதேவி வசுதேவன் இம்மூவரையும் வதஞ்செய்யவேண்டுமென்றுநினைத்து ஆரவாரஞ்செய்துவருகையில், வசுதேவனானவன் அக்கொள்கையைக்கண்டுகஞ்சனுக்குஅநேகவித உபசாரவார்த்தைகளைச்சொல்லி அவ்வெண்ணத்தைத்தடுத்து, அப்பா மைத்துனா, உனக்கு இவர்கள்வயிற்றிற்பிறக்கும்பிள்ளைகளால் மரணம்நேரிடுமென்று எண்ணமிருப்பதால், அப்படி பிறக்கும்பிள்ளைகளைவையாமல் உடனே கொன்றுவிடென்று கூறி

யதைக்கேட்டகஞ்சனும் அதுபோல் சம்மதித்து, அம்மூவ
ரையும் சிறைச்சாலையிலடைத்து காவலமைத்து, அவர்கள்
வயிற்றிற்பிள்ளைபிறந்தவுடனே எடுத்துவரச்சொல்லி தனது
மந்திரவாளால் இரண்டு துண்டாய்வீசியெறிந்திருப்பான்இவ்,
வாறு ஆறுபிள்ளைகளைக் கொன்றுவிட்டதின்பேரில், பிறந்து
பிறந்து வாளுக்கிரையாகுந் தனதுகுழந்தைகளினது சோபத்
தால் மெலிந்திருக்கும் வசுதேவனுடைய மனக்கவலையை
அகற்றவேண்டியதாயும் பூமிபாரந்தீர்க்கவேண்டியதாயும் ஸ்ரீ
வைகுந்தவாசராகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் ஆதிசே
டன் முதலியதேவர்களுடனும் வைகுந்தத்தை விட்டுப்புறப்
பட்டு அவர்கள் வயிற்றிற்ஜெனிக்கவேண்டியோசித்துதேவகி,
தேவிவயிற்றில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியும் ரோகணிவயிற்
றில்ஆதிசேடனும் வந்தவதரித்ததுமன்றித்தனதுகளையில் ஒன்
றையெழுப்பி ஆயர்பாடியில் நந்தகோபன்மனையில் அவன்
பத்தினியாகிய யசோதையம்மன்வயிற்றில் துர்க்கி என்னும்
பெண்ணுருவாய்பிறக்கச்செய்து,தான்பிறந்தவுடனேவசுதேவ
னுக்குச் சொற்பனமூலமாய் ரோகணிவயிற்றிற் பிறந்தபிள்ளை
யையும் தேவகி வயிற்றிற்பிறந்த பிள்ளையையு மெடுத்துக்
கொண்டுபோய் நந்தகோபனுடையவீட்டில் அச்சமயம் ய
சோதையம்மன் பெண்குழந்தையைப் பிரசவித்துப் பிறந்த
குழந்தையின்னதென்று தெரியாமற்சோபித் திருப்பாளாத
லால் அச்சமயத்தில் இவ்விரண்டு குழந்தைகளையும் அவளி
டத்தில்விட்டுவிட்டு அங்கனம் பிறந்திருக்கும் பெண்குழந்
தையை யெடுத்துவந்து இங்கேசேர்க்குமளவும் காவலாளிகள்
முதலியபதியிலுள்ளோர் யாவரும்மூர்ச்சித் திருப்பார்களாத
லால் அதுபோற்செய்யக்கடவையென்று நாராயணமூர்த்தி
சொல்லியவுடனே,வசுதேவன்விழித்துப்பார்த்து, பிள்ளைபிற
ந்து பேசாமலிருப்பதுகண்டு கடவுள்கட்டளையிட்டதுபோல்
சகலஜீவர்களுமுறங்கியிருக்க, அத்தருணத்திற் குழந்தைகளை
யேந்தி ஆயர்பாடியில் நந்தன்மனையில் யசோதைபெண்குழந்
தையைப்பெற்று ஒன்றுந்தோன்றாமல் சோபித்திருப்பது

கண்டு,தெய்வச்செயலென்று சந்தோஷங்கொண்டு,தான்கொ
ண்டுபோனபிள்ளைகளை அவளிடத்தில் விட்டு அங்குளபெண்
குழந்தையாகிய துர்க்கியையும் மற்றுமோர்பிள்ளையையுமெடு
த்துவந்து தேவகிதேவி உரோகணிதேவி யிவர்களிடத்தில்
விட்டபிறகு, யாவருக்குந்தெளிவுண்டாகிப்போதும் விடிந்த
வுடனே, இங்குற்ற இரண்டுகுழந்தைகளு மழக்கேட்ட கஞ்
சன் பிள்ளைகளைக்கொண்டுவரும்படியாய் காவலாளிகளுக்கறி
க்கையிட, அவர்களுமதுபோல் அப்பிள்ளைகளைக் கொண்டு
போய்க் கஞ்சனிடங்கொடுக்க, அவன்கிஞ்சித்தேனு மஞ்சா
மல் அப்பிள்ளைகளைக்கொண்டுபோய் ஓர் பாறையினிடமாக
நின்று பிள்ளைகளை உயரவெறிந்து வாளையோங்கும்போது,
ஒருபிள்ளை மாய்கையாய்மறையவும் மற்றோர் பெண்ணாகிய
துர்க்கியானவள் அஷ்டபுஜத்தோடும் மூவிலைவேற் சூலத்தோ
டும் அந்தரவீதியில்நின்று,அடாநிர்மூடனாகிய கஞ்சனே,உன்
னைக்கொல்லுவதற்கு இரண்டுபிள்ளைகள் வளருகின்றார்களாத
லால் சாக்கிரதையாக விரடா, மடிந்து போவாயென்றுகூறி
அந்தமார்க்கத்தில் மறைந்தாள். அவ்வாறு துர்க்கியானவள்சொ
ல்லி மறைந்தநாள்முதல் கஞ்சனானவன் நெடுங்கவலையுற்று
ஆயர்பாடியில் வளர்கின்றபிள்ளைகளைக் கொல்லவேண்டுமெ
ன்னுங்கருத்துடையவனாய் எதிர்பார்த்திருக்கையில், ஆயர்பா
டியில் நந்தகோபன் வீட்டில்வளரும்பிள்ளைகளில் பெரிய
பிள்ளைக்கு பலராமனென்றும் இளயபிள்ளைக்கு கிருஷ்ணனெ
ன்றும் நாமகரணஞ்செய்து வளர்த்துவருகிறபோது,கஞ்சனா
னவன் பூதகிமுதலியராக்ஷதர்களுக்கு அநேகதந்திரங்களைச்
சொல்லிக் கொன்றுவரும்படியாக வனுப்பிவைத்தும் அவர்
களால்முடியாமல் கிருஷ்ணன்கையினால்மடிந்தபின், ஆயர்கள்
அச்சமுற்று,அப்பிள்ளைகளை எடுத்துக்கொண்டு,கோகுலபிரு
ந்தாவனத்திற்போயிருக்கும்போது, ஆயர்களால் இந்திரனுக்
குச்செய்யும் பிரார்த்தனையைத்தடுத்து கோவர்த்தனத்துக்குச்
செய்யச்சொல்லி, அப்படியவர்களாற்செய்த பூசையையுந்தா
னே தேவதையாகவிருந்து ஒப்புக்கொண்டு, தேவேந்திரனுற்

பெய்வித்தசோனைமாரியை, கோவர்த்தனகிரியைக் குடையாக வெடுத்துப்பிடித்து ஏழுநாள்வரையில் ஆனிரைகளைக்காத்து, கோபஸ்த்ரீகளுடனே கூடிவிளையாடியும், அவர்கள்வஸ்திரங்களையபகரித்தும், அவர்கள் வீட்டிலுள்ள வெண்ணெய்த்தயிர்பால் முதலியவைகளைத்திருடியுண்டும், அநேகந்திருவிளையாட்டாகிய லீலாவிநோதங்களைச்செய்தும், காளிங்கனை கர்வபங்கப்படுத்தியு மிருக்கும்போது, கஞ்சனானவன் பலராமனையுங் கிருஷ்ணமூர்த்தியையுந் தன்பட்டணத்தில்வரவழைத்து சூதுமார்க்கமாய்க் கொல்லவேண்டுமென எண்ணங்கொண்டவனாய் அக்குரூரனென்னுமொருவனை பலராமகிருஷ்ணரிடந் தூதனுப்பி அழைத்துக்கொண்டு வரும்படியாய்ச், சொல்ல அவனும் அவணின்றும் பிரயாணப்பட்டு கோகுலபிருந்தாவனத்திலிருக்கும் பலராமகிருஷ்ணரைக்கண்டு பலபல வாய்த்தோத்திரஞ்செய்து கஞ்சன்சொல்லி யனுப்பியதைக்கூறி அழைக்கச்சம்மதித்தவர்களாய் பலராமகிருஷ்ணரிருவரும் இராஜபேட்டியைக்காணும் உடுமானங்களோடும் பிரயாணப்பட்டுமதுராபுரிவந்துசேர்ந்துஅப்பட்டணத்தைபலராமனுங் கிருஷ்ணமூர்த்தியுங் கோபாலர்களுடனே சுற்றிப்பார்த்துக்கொண்டு வேடிக்கையாய்வருகிறபோது, ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய அழகுகளையும் நடைநொடிபாவனைகளையும் அப்பட்டணத்திலுள்ள பெண்கள்கண்டு மயக்கத்தையடையும்படியாயும் வெகுகோலாகல கெம்பீரத்துடனே சிங்கக்குட்டிகளைப்போல்வருகிறபோது, கஞ்சனானவன் அநேகமல்ல ஜெட்டிகளையும் இரதகெஜதுரகபதாதிகளையும் அணியணியாய்விடுத்து வருபவர்களைக்கொல்லும்படியாயுத்தரவுசெய்தனுப்ப, அதுபோலவர்களும் வந்தெதிர்த்து கோரமாகிய சமர்விளைக்க, அதுகண்ட பலராமகிருஷ்ணரிருவருங்கோபித்து யுகாந்தகாலருத்திரனைப்போற்சீறி எதிர்த்தபடைவீரர்களையுஞ் சேனாசயின்யங்களையும்பாழ்படநூறி, ஜயவென்றுசிங்கநாதஞ்செய்து, கஞ்சனிருக்குங் கொலுமண்டபம்நோக்கிவருகிறபோது, கஞ்சன்கண்டு, குவலயாபீடமென்னும்யானைக்கு மதங்களூட்-

டிக்கொல்லும்படியாகியசைகைகளைச் சொல்லிவிடுக்க, அந்தயானையைக் கிருஷ்ணபகவான்கண்டுவெகுண்டு, இருதுண்டாகச்செய்து, அதன்தந்தங்களைப்பிடுங்கி கையிற்பிடித்துக்கொண்டு கிருஷ்ணபகவானானவர் கஞ்சனிருக்கும்படியாகிய சப்பிரமஞ்சத்தடியிற்போய் கஞ்சனது இரண்டுகாலையும்பற்றித் தூக்கிக்கரகரவென்று, சுழற்றிநிலத்திலேயறைந்து தன்கரத்திலிடமாயிருந்த யானைக்கொம்பினாலே தலைமண்டைசிதறும்படியாகவடித்துக்கொன்று, பின்னுமவனுக்குத் துணையாகவெழுந்த சூரர்களையும் சேனாசயின்யங்களையும் நாசப்படச்செய்து சர்வசங்காரமூர்த்தியைப் போற்செற்சித்து அட்டகாசஞ்செய்து யாவருமுடிந்தபின்னர் தமதுதந்தையாகிய வசுதேவனையும் தாய்மார்களாகிய ரோகணிதேவி தேவகிதேவியையும் சிறைச்சாலையினின்றும்நீக்கி, அவர்களுக்கு அநேக உபசாரஞ்செய்து, வடமதுராபுரியை கஞ்சன் தாதையாகிய உக்ரசேனனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்துவைத்து, சத்யபாமைமுதலிய கோபிகாஸ்த்ரீகளுடனேயுங் கோபாலர்களுடனேயும் ஆயர்பாடியிலும் மதுராபுரியிலுமாகவிருந்து, அநேக லீலாவிநோதங்களை நடப்பித்துக்கொண்டிருந்தார்.

கேட்டீர்களோ முனிவர்களே, இங்ஙன மிவ்வாறிருக்க, தெய்வலோகத்திலிருந்து பிரமதேவன்புதல்வனாகியநாரதமகாமுனிவர் கிருஷ்ணபகவானிடத்துக்கு வருகையில், அன்னவர்வரவைக்கண்டு, கிருஷ்ணமூர்த்தியானவர் நாரதருக்குவேண்டிய உபசாரணைகளைச்செய்து, ஐயா நாரதமகாமுனியே, யான் தங்களைக்காணும்படியாய் எண்ணியிருந்தவண்ணந் தேவரீர் இவடமெழுந்தருளினமையால் என்மனத்திலுள்ள கவலையை நிவர்த்திசெய்யவேண்டுவதென்னவெனில், என்னுடைய அம்மானாகிய கஞ்சனைக்கொன்றதோஷம் எனக்குண்டாயிருப்பதனாலே அதுதீரவேண்டியதற்கு ஓர்பரிகாரஞ்சொல்லவேண்டுமென்றுகேட்க, அவ்வார்த்தையைக்கேட்ட நாரதபகவான் முகமலர்ந்து, வாரும் சுவாமி, வேதவேதாந்தமூர்த்தியே, ஆதியாபரவஸ்துவாகியும் அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயக-

ராகியும், ஆதிமத்தியாந்தரகிதராயும், சின்மயானந்த சொரூபமாகியும், ஆண்பெண் அலியாகியும், சகலஜீவான்மாக்களிலுங் கலந்துநின்றதாகியும், என்போன்ற ஏழைகளுக் கெட்டாத வஸ்துவாகியும் ஒளிருந் தேவரீருக்கு, பாபமேது புண்ணியமேது, அடியேனுடைய மனதைச்சோதிக்கவோ இப்படிகேட்டகாரியம், சுவாமி, என்று நாரதர்சொல்ல, அதற்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறுவார், ஐயா நாரத மகாமுனிவரே, நாம் நரயோனியினிற்பிறந்து, நானாவிதசுகதுக்கங்களை யடைவதனாலே யான்கேட்டகாரியம் உண்மைதானென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான்சொல்ல, அதற்குநாரதர்சொல்லுவார், வாருமையா பகவானே, தேவரீர் வினவியவண்ணம் உமதுமாமனாகிய கஞ்சனைக் கொன்றதோஷம் நீங்கவேண்டுமாயின் தென்றிசையிற் சேதுமத்தியிலோங்குங் கந்தமாதனகிரிச்சார்பில் இதற்குமுன் தேவரீரெடுத்திருந்த ஸ்ரீ ராமாவதாரத்தில் இராமலிங்கப்பிரதிஷ்டைசெய்து பகீரதியான கங்கையைப் பாதாளவாகினியாய் வரவழைத்து சிவபெருமானுக் கபிஷேகஞ் செய்துவைத்த கோடிதீர்த்தமென்று ஒருதீர்த்தமிருக்கின்றது, அந்ததீர்த்தத்திலே, ராமனாய்ப்பிறந்து ராவணனைக்கொன்றபோது சம்பவித்த தோஷந்தீரவேண்டி அதிற்றீர்த்தமாடி அதுபரிகாரமானதால் இப்போது இந்தகிருஷ்ணாவதாரத்திலே கஞ்சனைக்கொன்ற தோஷம் நீரும்படியாய் அந்தக்கோடிதீர்த்தத்திலே போய் மூழ்கினால் தோஷவிமோசனமாகுமென்று நாரதர்சொல்லி, ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பிரம்மலோகத்தையடைந்தார், பின்புகிருஷ்ணமூர்த்தியும் நாரதர் வாக்கியப்படியேதமையனான பலராமனுடனும் இரதகஜதுரகபதாதிகளுடனும் பிரயாணப்பட்டு, சேதுவைச்சேர்ந்து, அதன் மத்தியிலோங்குங் கந்தமாதனகிரிச்சார்பிலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் வேதவிதிப்படி மூழ்கிப்பின்னர் கோடிதீர்த்தத்தில்மூழ்கி, அநேகதானதருமங்களைச்செய்து, ஸ்ரீ ராமநாதனை வணங்கிவிடைபெற்று, வடமதுராபுரிவந்துசேர்ந்து சுகமாயிருந்தார்களாதலால், இப்பேர்க்கொத்தமகிமை தங்கியதீர்

த்தத்துக்குச்சமீபமாய் சாத்தியாமிர்ததீர்த்தமென்றோர்தீர்த்த முண்டு, அதன்பெருமையோ அளவுபடுத்திச்சொல்ல ஆதிசேடனுக்கு மரிதாமென்று சூதமுனிவருரைத்ததைக் கேட்ட நைமிசாரணியர்கள், முனிவரைப்பணிந்து, சுவாமி, தேவரீர்திருவுளங்கனிந்து அடியோங்களுக்கு அத்தீர்த்தத்தின் பெருமையைச் சொல்லவேண்டுமென்று பணிந்துநின்ற முனிவர்களுக் கிரங்கிச் சூதமகாமுனிவர்சொல்லத் தொடங்கினார்.

கோடிதீர்த்தச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

சாத்தியாமிர்ததீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, தெட்சணபாகத்திற் சேதுமத்தியிலோங்குங் கந்தமாதனகிரிச் சார்பில் விளங்குஞ் சாத்தியாமிர்த தீர்த்தமென்றோர் தீர்த்த முண்டு, அத்தீர்த்தத்தில் மூழ்கினவர்களது பாபமனைத்தும் பருதிமுன் பனிபோல்விலகிப் போவதன்றியும், இகத்தில் அவர்கள்நினைத்தகாரியங்க ளெல்லாங்கைகூடி, யாகாதிக்கிரியைகள் செய்தபலனைக்கொடுத்து, பரத்துக்கேதுவாகிய ஞாஞேயத்தையுங் கொடுக்குமாதலால், அந்ததீர்த்தத்திலே புரூரவச்சக்கிரவர்த்தி யென்பவன் தீர்த்தமாடி, தனக்கு தும்புருமுனிவராற்கொடுக்கப்பட்ட சாபத்தைநிவர்த்திசெய்து கொண்டு, தெய்வலோகக்கணிகையருள் ஒருத்தியாகிய ஊர்வசி என்பவளைக்கூடிச் சுகபோகங்களை யநுபவித்துக் கொண்டிருந்தானென்று சூதமாமுனிவர்சொல்ல, அதுகேட்ட நைமிசாரண்யர்கள், முனிவரைநோக்கி, சுவாமீ, புரூரவச்சக்கிரவர்த்தி என்பவனுக்கு தும்புருமுனிவராற் சாபம்வந்தகாரணமும் தெய்வலோகக்கணிகைமாதாகிய ஊர்வசி என்பவள் பூலோகராஜனைச் சேர்ந்தவிதமுந் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டு மென்றுகேட்க, அப்போது சூதமுனிவர்சொல்லுவார், வாருங்கள் இருடிகளே, முன்னொருகாலத்திலே புரூரவனென்னுஞ் சக்கர

வர்த்தியானவன் மகாகுபேரசம்பத்தோடும் ரூபலாவண்ய சவுந்தரியத்தோடும் ஒப்பொருவரில்லாத பராக்ரமத்தோடும் மகாமண்டலேசுவரனாய்க் கோலோச்சி இனிதுவீற்றிருக்கும் நாளையில், தெய்வலோகத்தில் இந்திரன்சபையில் நடிக்கும் ஊர்வசி என்பவள் தேவர்களிலொருவனாகிய மித்திராவருணனென்பவனை இகழ்ந்துபேசினளென்று அவனுக்கு பூலோகமாந்தனைப்புணரும்படியாய் சாபம்நேரிட்டதால், அச்சாபத்தையநுபவித்து நிவர்த்திசெய்யக்கருதி, துன்பத்தையடைந்து, தெய்வலோகத்தினின்றும்நீங்கி, பூலோகத்தில் புரூரவச்சக்கரவர்த்தி யரசாட்சிசெய்துவரும் பட்டணத்தினருகிலிருக்கும் ஓர் சிங்காரவனமென்னுந் நந்தாவனத்திற்சேர்ந்து, சுரலயதாளவழுவின்றி வீணாகானம்பண்ணிக் கொண்டிருந்தாள், அவ்வாறு ஊர்வசியானவள் வீணையைமீட்டி வாசிக்கின்றநயகுணங்களின்மேல அவ்வனத்திற் பட்டமாங்களெல்லாந் தளிர்த்தும்பூத்தும் காய்த்தும் பழுத்துக்கனிந்தும், அவற்றினின்றுந் தேன்கள்சிந்தி யாறுபோற்பெருகவும், காட்டுப்புலி சிங்கங் காட்டானைமுதலிய மிருகங்களெல்லாம், அவைகளது வீராவேசத்தைவிடுத்து உறங்கிச் சுகானந்தத்தைக் கலந்திருக்கவும், பறவைச்சாதிகளெல்லாக் துவனிசெய்யாமல் ஓசையின்வழியிற் செவியைச்செலுத்தி பிரமித்திருக்கவும், ஊர்வனஜெந்துக்களும் பாம்புகள்முதலியயாவும் இன்னிசையைநாடித் தன்னிச்சையைவிடுத்துப் பொன்னைப்போன்ற படங்களைவிரித்துச் சென்னியைச்சாய்த்தாடவும், தாபராதிகளாகிய பாஷாணங்கள்முதலியவெல்லாம் நீராயுருகி ஓடும்படியாய் வாசித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில், அப்பட்டணத்தை யாளப்பட்ட புரூரவனென்னுஞ் சக்ரவர்த்தியானவன் தனித்து வேட்டமாடக்கருதி, தனதுகையில் வில்லும் வேலுங்கொண்டு, குதிரை ஏறிவேட்டமாடி, மீண்டும் அச்சிங்காரவனத்துட்பிரவேசித்து, அங்ஙனம் சிருஷ்டிகர்த்தாவின் தேவியாகிய சரஸ்வதியைப்போலும் இந்திரன்தேவியாகிய இந்திராணியைப்போலுஞ் சுந்தரமமைந்து இலகாநின்ற சித்திரப்பாவையைப்

போன்ற ஊர்வசியைக்கண்டு ஒன்றுந்தோற்றாதவனாய்த் திக்பிரமைகொண்டு, தனதுபுத்தியினாற் பிறகுபெண்ணென்றறிந்து, அப்பூவையை நாடியகண்கள் அனைக்கண்களாகச்சோர்ந்தும் நாவானதுவறண்டும் உளைகுளறியும் அனங்கன்கணைவலியை ஆற்றமாட்டாதவனாய் மோகக்கடலுட்டோய்ந்து, முன்பின்யோசியாமல் ஊர்வசியினது அருகிற்சேர்ந்து கூறுவான்; ஓ பஞ்சரத்தினின்றிலகும் அஞ்சுகம்போற்கொஞ்சுங்கிளியாகிய வஞ்சியர்நாயகமே, உனக்குத்தஞ்சம் தஞ்சம், இந்துகோடிகிரணம்போன்ற முகாரவிந்தத்தையுடைய இளங்குயிலே, கந்தர்ப்பனகணையால்வருந்திச்சிந்தையுழலும் என்னை இந்தவேளையிற் சந்தமுலாவும் உனது கனதனங்களைக்கொடுத்து விந்தையானாகிய நெடியோன்மகனை காணச்செய்யுங் கருணைசெய்வாய், நாயகமே, என்றுகூறிய நராதிபன்மேற்றானுங்காதல்கொண்டவளாய்க்கூறுவாள், வாராய் லோகாதிபனே, நான் ஆடகலோகத்திறைவனாகிய அமிராணிகேள்வனென்னுந் தேவராஜன்சபையில் நடிக்கும் அப்ஸரஸ்த்ரீகளில் ஒருத்தி, என்பெயர் ஊர்வசியென்று சொல்லுவார்கள், நீ பூலோகத்தில் உற்பவித்த நரஜன்மமாயிருப்பதாலும் என்மீது மோகங்கொண்டதாலும் என்கருத்தின்படிநடப்பதாய் பரவசஞ்செய்துகொடுப்பையேயாகில்உன்னைச்சேருவேன், இல்லாவிடிற்சேரேன், அதுயாதெனில், நான் இப்புவியின்கண் உன்னோடுகூடிச் சுகித்திருக்கவேண்டுமாயின், இந்தலோகத்துள்ள பசுவின்நெய் சற்கரை வாழை பலா மாங்கனிமுதலிய கனிவகைகள்தவிர மற்றவஸ்துக்களைப்புசியேன், ஆதலால் நீ எனக்கு மூன்றுகாரியங்களுக்கு உறுதிவார்த்தை செய்துகொடுத்தால் உன்னுடன்கூடிவாழ்வேன், இல்லாவிடில் என்னிருப்பிடம் போய்ச்சேருவேனென்றாள். அதுகேட்ட புரூரவவேந்தன், விரும்பெண்ணே, ஊர்வசியே, நீ என்னகேட்டபோதினும் அவ்வாறுபரவசஞ்செய்து தருவேனாதலால் உன்கருத்திலுள்ளதை வெளியிடுவாயென்றுசொல்ல, அப்போது ஊர்வசியானவள் புரூரவனைப்பார்த்து, ஓ வேந்தரே, நான் இவ்

வுலகின்கண் இருக்குமளவும் இரண்டு ஆட்டுக்கடாக்கள்வளா
த்துவர என்னங்கொண்டிருக்கிறேன், அப்படிவளர்த்து
வருகையில் அதையாரும் அபகரித்துக்கொண்டு போகாமற்
பதிலமாய்க்காத்துவரவேண்டும்,இதல்லாமலும் நீ எந்தக்கால
த்திலும் என்கண்ணுக்குமுன் வஸ்திரஹீனனாய்வந்து நிற்
கப்படாது, இதன்றியும் உனது உச்சிட்டத்தை நானருந்தும்
படியாய் செய்யத்தகாது, இந்தமூன்றுகாரியந்தான் என்மனதி
லிருப்பதாதலால் என்னசொல்லுகிறாயென்றுகேட்க, அதற்கு
வேந்தன் சம்மதித்துப்பாவசஞ்செய்து கொடுத்தவனாய், ஊர்
வசியை அழைத்துக்கொண்டு பட்டணம்வந்துசேர்ந்து, தன
து மந்திரியை அழைத்து,முத்திராமோதிரத்தைக்கொடுத்து
மநுநீதிதவறாமல்இராஜரீகஞ் செய்துவரும்படியாய்க்கட்டளை
யிட்டுப், பின்னர் தனதுபட்டணத்துக்கருகேயிருக்குஞ்சரஸ்
வதி நதிக்கரையிலோங்குஞ் சிங்காரவனத்தில் ஓர் நிலவறை
யமைத்து, அந்நிலவறையில் ஊர்வசியோடும்போய்ச்சேர்ந்து,
மகா உச்சாகத்தோடும் மோகக்கடலுண்மூழ்கி இரதிகேளி
களை நடாத்தியாதுங்குறையின்றி வாழ்ந்துவருகின்றபோது
ஆடகலோகப்பெண்ணாகிய ஊர்வசியானவள் தனதுமணாள
மீது நெடுங்காதல்கொண்டவளாய் தெய்வலோக வாழ்க்கை
யைமறந்து பூலோகமங்கையர்கட்கொப்பாய் மனமகிழ்வோ
டும் அனங்கனும்நாணித்தலைகுனியும்படியாய் இஷ்டபோக
களை யநுபவித்துவருகிறபோது, உம்பருலகிலுள்ளதேவர்க
ளியாவரும் ஊர்வசியைப்பிரிந்திருக்குந் தன்மையால் விர
தணியாதவர்களாய் வருத்தமுற்று, இவளை எவ்விதமேனு மி
கு வருவித்துக்கொள்ள வேண்டுமென்று யோசித்தவர்களா
அங்குள காந்தருவர்களில் விசுவாவசுவென்னு மொருவ
யழைத்து, ஓ விசுவாவசுவே, பூலோகத்தில் புரூரவச்சக்ர
த்தியினிடமாயிருக்கும் ஊர்வசியினிடம் நீசென்று அவ
எவ்விதமேனும் இங்கு அழைத்துவரக்கடவையென்று செ
ல்ல, அவ்வாய்மையைக்கேட்டகாந்தருவன், ஐயாதேவர்களே
உங்கள்கருத்தின்படியே பூலோகத்துக்குப்போய் புரூரவ

ந்தனிடமிருக்கும் ஊர்வசியை இமைகொட்டுவதற்கு முன்ன
மே இவண்கொண்டுவந்து சேர்ப்பேனென்று விருதுகூறியவ
னாய், அவணின்றும் புவியில் ஓங்கும் சரஸ்வதிநதிக்கரை
வந்துசேர்ந்து, சிங்காரவனமெனனுஞ் சயித்ராவனத்திலே
அமைத்திருக்கும் பளிக்குமாமணிமேடையிற் புரூரவவேந்த
னோடும் படுத்துக்கொண்டிருக்கும்ஊர்வசியினது ஆட்டுக்க
டாக்களிரண்டில் ஒன்றை இராத்திரி நடுஜாமவேளையில் தூக்
கிக்கொண்டு அந்தரமார்க்கமா யெழும்பும்போது, அக்கடா
வானதுபயந்து கூச்சலிடுகையில், அவ்வோசையைக்கேட்ட
ஊர்வசியானவள் விழித்துப்பார்த்து, தனதுகடாவைக் காணு
மையால், ஐயோ, கடாவையாரோபற்றிக்கொண்டுபோய்விட்
டார்களே என்செய்வேனென்று கோவென்றலறும்போது,
அச்சந்தடியைக்கேட்ட புரூரவவேந்தன் விழித்து திடுக்கிட்
டெழுந்து, அருகேயிரலாபித்துக் கொண்டிருக்குந்தனதுசாசி
யாகிய ஊர்வசியைக்கேட்குமுன்னமே, மறுபடியும் அந்த காந்
தருவனாகிய விசுவாவசு என்பவன் பூமியிலிறங்கிமற்றுமோர்
கடாவையும் பிடித்துக்கக்கத்திலிடுக்கிக்கொண்டு ஆகாயவீதி
யிலெழும்புகிறபோது, அக்கடாவும் இரைச்சலிட, அதைக்
கேட்ட ஊர்வசியானவள் அந்தோ யான் திக்கற்றவளா யிரு
ப்பதால் இரண்டையும் பிடித்துக்கொண்டுபோய் விட்டார்
களேயென்று மனம்பதைபதைத்து திடீலென்று மண்மேற்
சாய்ந்து சோபமடைந்தாள், அப்போது புரூரவச்சக்ரவர்த்தி
யானவன் மகாகோபத்துடனே அந்நிலாமணி மேடையின்
பக்கலில் ஓர் அறையில்வைத்திருந்த தனது உடைவாளையுங்
கேடயத்தையு மெடுத்துக்கொண்டு உக்ராவேசங்கொண்டு
யாதுந்தோன்றாமலோடிவரும்போது, தனது இடையிற்றரித்
திருந்தவஸ்திரமானது நழுவிப்பூமியில் விழுந்ததையறியாத
வனாய் கீர்வாணதேசமும் [illegible] க்கடாவைக் கவர்ந்துகொ
ண்டுபோகுங் கள்ளனாடாமெ [illegible] அதட்டிக்கொண்டே ஓடு
ம்போது, மிகவும் அந்தகாரமா [illegible] ய இருளடர்ந்திருப்பதால்
அவ்வேளையில் வேந்தன் தனித்தோ [illegible] டுகின்றானேயென்று ஊர்

வசியும் பின்றொடர்ந்தோட, அதுகண்ட விசுவாவசு என்னுங் காந்தருவன் ஓர் ஒளியையுண்டாக்கி அவ்வொளியினால் இருட்கூட்டத்தைநீக்கிப் பிரகாசத்தைக்கொடுக்கச்செய்தான், அவ்வாறு வெளிச்சமுண்டானபடியால் முன்னதாய் ஓடுகின்ற இராஜனுடைய நக்கினரூபத்தைக்கண்ட ஊர்வசியானவள் நாணமுற்றுத் தலைகுனிந்துநின்றுவிட, அப்போது. காந்தருவன் ஆட்டுக்கடாவிரண்டையுங்கொண்டு தேவலோகம்போய்ச்சேர்ந்தான், அப்படிசேர்ந்தவுடனே அவனாலுண்டாகியவொளியும்மறைந்து பழையபடி இருண் மூடினமையால் வேந்தனுக்கு ஆட்டுக்கடாவைக்கொண்டுபோனவன் புலப்படாமலும் வழியுந்தோன்றாமலும் அலைந்துகொண்டிருக்கையில், ஊர்வசியானவள், அரசன்வாய்மைதப்பிப்போய்விட்டதே,இனிநமக்கு இங்கென்னவேலையென்று வெறுத்தவளாய் தெய்வலோகத்தை நோக்கிப்போய்விட்டாள், அச்சமயத்தில் வேந்தனானவன் தன்னாற்கூடியமட்டும் ஆட்டுக்கடாவைக் களவுசெய்துகொண்டு போனஇருடனைத்தேடியுங் காணாதவனாய்த் திரும்பி இருளைத்துணையாகக்கொண்டு தனதுபள்ளியறைவந்துசேர்ந்து மஞ்சத்தின்மீதிலகும் அம்சதூளிகா சயனத்தில் ஆடகலோகப்பெண்ணாகிய ஊர்வசியைக்காணாமல் பின்னும் அங்குளமாடகூடங்களினும் பூஞ்சோலைகளினும் நதிக்கரையினும் அன்றிராமுழுதும் தான்நிர்வாணனாகவே தேடிக்கொண்டுதிரிகிறபோது, சூரியன் உதயமானான், அவ்வாறு சூரியனுதயமானபிறகு தான் நக்கினரூபமாக விருக்கிறோமென்றுந்தோன்றாமல் நனிசோகங்கொண்டுசேரசியைப்பிரிந்த துயரத்தாற் காமமதிகரித்தவனாய் ஊர் நாடுதேசமுதலியவிடங்களிலும் குகைகளிலுந்தேடித்திரிகிறபோது, ஓர் நாள் குருக்ஷேத்திரத்தில் ஓங்கும் பூஞ்சோலையில் வயங்குந்தாமரை ஓடையில் அநேகந்தோழிகளுடனே ஊர்வசியானவள்வந்து மஞ்சனமாடிக்கொண்டிருக்க, அவளைக்கண்ட புரூரவச்சக்ரவர்த்தியானவன் ஓடோடியும்வந்து, அடிமானே, இதுபரியந்தம் நீ என்னைப்பிரிந்து எங்கேபோனாயென்றுகேட்க, அப்

போது ஊர்வசியானவள் புரூரவன் நிர்வாணமாயிருப்பதுகண்டு நாணமுற்றவளாய், உடனே ஒருதிவ்ய வஸ்திரத்தையெடுத்து வேந்தன்மீதுபோர்க்க, அப்போதுபுரூரவன் வெட்கமுற்று, தான்கொண்டிருந்தமயக்கமியாவுந்தெளிந்து, அவளாற் போர்க்கப்பட்டவஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு கூறுவான், ஓ பொன்போலிலகும்பூவையே, பவளத்தைப் பழித்திலகும் நினதுகனிவாயும், கிள்ளையைப்பழிக்கு மொழியும், குயிலினோசையைப்போன்ற குரலும், அன்னம்பேடொத்த நடையையுங்கொண்டு இலகும் என்னாருயிர்த்துணையான நீ என்னைத் தனிவிடுத்தேகினால், என்செய்வேன்; எவ்வாறுய்வேன்; யானொருகுற்றமுஞ் செய்தறியேனேயென்று மிகுந்ததுயரத்தோடும் பரதவித்தோதும் வேந்தன் வாய்மையைக்கேட்ட ஊர்வசியானவள் கூறுவாள். வாருமையாவேந்தே, என்வீண் வார்த்தை பேசுகின்றீர், உமதுவாக்குப் பிசகிவிட்டதனாலே யான்வந்துவிட்டேன். ஆகலால்;இனிமேல் உமக்கும் நமக்கும் என்னவார்த்தையிருக்கின்றது, போம்போமென்று சொன்னாள். அப்போது இவர்களிருவரும் வாதித்துக்கொண்டிருப்பதை தோழிகளறிந்து, இதென்னகாரணமென்று அவர்கள் தலைவியாகிய ஊர்வசியைக்கேட்க, அதற்கு ஊர்வசியானவள் நடந்த வர்த்தமானங்களையெல்லாந் தோழிமார்களுக்காதியோடந்தமாயோத, அவைகளைக்கேட்ட பாங்கிகள் மிகவும்மனதிரக்கமுற்றுச் சொல்லுவார்கள். வாராயம்மா ஊர்வசியே, இவ்வேந்தனும் நீயும் அறுபதுவருடமாய்க் கூடியிருக்கும்போது அவர் உனக்கு யாதொருகுற்றமுஞ் செய்யவில்லையே, இராக்காலத்தில் நேர்ந்ததுன்பத்துக் கென்னசெய்யலாம், மேலும் அவர் உனதுபரிசத்தைநீங்கிச் சகியாதவராய் இடையிலிருந்த வஸ்திரம் நழுவியுந்தோன்றாமல் தன்னைத்தான்மறந்து நிர்வாணமாய் ஆயத்தப்பட்டு வந்தவர் இதுவரையினு மக்கோலத்துடனே திரிந்துழலுகின்றாரல்லாமல் வேறல்லவே-ஆதலால் இதன்றிவேறே ஏதேனுங் குற்றமிழைத்திருப்பரோ, அப்படியிருக்க,அவரைநீ எப்படிவஞ்சித்துவரலாம்,வந்தும் உன்னை

நினைந்துருகி ஊரெங்குமலைந்து தெய்வாதீனத்தால் இங்குனைக்கண்டுந் தடைசொலவது தருமமல்லவே, மகாபாதகமாச்சுதே, ஆனதால், இனியாகிலும் இந்தராஜனை நீ அங்கீகரிக்கவேண்டுமென்று அநேக உபசாரவார்த்தையோடுஞ் சொல்ல, அதைக்கேட்ட ஊர்வசியானவள், புன்சிரிப்புக்கொண்டு மனமிரங்கினவளாய் புரூரவனை நோக்கிக் கூறுவாள். வாரும் நாயகா, நான் இப்போது உம்மால் கெர்ப்பமாயிருப்பதால், அதுக்குப் பத்துதிங்களும் பூரணமாகியபிறகு நீரிவ்விடம்வந்தால் குழந்தையைப்பெற்று உமக்கேகொடுத்து உமது மனோபீஷ்டப்படி ஒருநாளைனு மும்மைச்சேருகிறேன், நீர் ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம் ; ஆதலால், உமது இராச்சியத்துக்குப் போய்ச் சிங்காசனத்தி லினிதாவீற்றிருந்து செங்கோனடாத்துமென்றுசொல்லி, அநேக உண்மைவார்த்தையோடும் உபசரணைசெய்து இராஜனுக்குச்செலவுதந்தாள், அதுகண்டவேந்தன் மகாசந்தோஷத்தையடைந்து, அவணின்றும் நீங்கித் தனதுபட்டணம் போய்ச்சேர்ந்து இராஜரீகஞ்செய்திருக்கையில் ஓடையில் தீர்த்த மாடிக்கொண்டிருந்த ஊர்வசி முதலிய யாவரும் அந்தகுருக்ஷேத்திரப் பூங்காவனத்துக்குந் தெய்வலோகத்துக்கும் வாசஞ்செய்துகொண்டிருக்கும்போது ஊர்வசிக்குப் பத்துதிங்களும் நிறைந்ததுகண்டபுரூரவவேந்தன் பட்டணத்திலிருந்து பிரயாணப்பட்டு குருக்ஷேத்திரம்வந்து சேர்கையில், அப்போது ஊர்வசியானவள் பிரசவவேதனையுற்று ஆயுதாவென்னுமோர் ஆண்குழந்தையைப்பெற்று இராஜனிடங்கொடுத்து, பிறகு தன்மனதுக்கு ரம்மியமாகிய நாளிலே ஓர் நாள் புரூரவவேந்தனோடுகூடிக் கலிலீலைகளைநடாத்திக்கொண்டிருக்கையில், மறுபடியும்ஊர்வசியானவள்ஐந்துபிள்ளைகளைக் கெர்ப்பமுற்று அன்றிராத்திரிப்போது நித்திரைதெளிந்தெழுந்திருந்தபோது, இராஜனானவன் இவளினி நம்மைவிட்டுப் பிரிந்துபோய் விடுவளென்று நினைந்து கொடுந்துன்பத்தி லாழ்ந்திருப்பதை ஊர்வசிகண்டு, வாரும்வேந்தனே, நீரிப்படி துன்பப்படுநிமித்தம் நான்பூலோகத்தில் வாசஞ்

செய்துகொண்டிருந்தால் தெய்வலோகத்தார் மிகவுஞ் சின்னஞ்சொல்லுவாராதலால், எங்களுடையலோகத்துக்கு உமக்கு வரும்படியாகிய திறமிருந்தால் எப்போதும் வரப்போக இருக்கலாம், அவ்வாறு நீர் தவஞ்செய்யவில்லையே, ஆதலால் உமக்குநான் அத்திறம் உண்டாகும்படியாய் ஓர் உபாயஞ் சொல்லுகின்றேன், அது யாதெனில், என்னைப்பயந்த தந்தையானவர் மிகவுஞ் ஜீவ காருண்யமுடையவராதலாலும் அவரைச்சிந்தித்துதபஞ்செய்தால் அப்போது அவருக்குக்கருணைசுரந்து தும்புராதிகளுடனே உனக்கு தெரிசனந்தந்து யானும்மைச்சேரும்படியான மார்க்கஞ்சொல்லுவார், அதன்பேரில் நீரும் நானும் கூடியிருக்கலாமென்று ஊர்வசி வேந்தனுக்குரைத்து தெய்வலோகத்தை நோக்கிப்போய்விட்டாள், அப்போது புரூரவச்சக்ரவர்த்தியானவன் மகாகளிப்புடையவனாய் தனதுபுத்திரனையெடுத்துக்கொண்டு பட்டணம்போய்ச்சேர்ந்து குழந்தையை அந்தப்புரத்திலிருக்குந் தேவிமார்களிடமனுப்பிப் பதிலமாய்ப் பாதுகாத்துவரும்படி திட்டஞ்செய்து பின்பு ஊர்வசிதனக்குரைத்தவண்ணம் அன்னவள் தந்தைமுதலிய தும்புருவைக்குறித்து அநேகவிதகோன்புகளும் நிட்டைகளும் மேலோர்கள்சொல்லிய வாக்கியப்படி உபாசனைசெய்தான், அப்படிசெய்துவருங்காலை, தும்புராதியோர்கள் இவன்தபத்திற் கிரங்கினவர்களாய் தெரிசனந்தந்து, ஓ அரசே, உனக்குவேண்டியவரமென்னவென்றுகேட்க, அதற்குவேந்தனவர்களைப்பணிந்து, சுவாமீ, எளியேன் உங்களுடையலோகத்துக்கு வரப்போக விருக்கும்படியாயும் ஊர்வசி என்னும் நடனப்பெண்ணையான்சேர்ந்து சுகிக்கும்படியாயும் கட்டளையிடவேண்டுமென்றுகேட்க, அதற்குத் தும்புராதியோர்கூறுவார்கள், வாரும்வேந்தனே, நீர் யாங்கள் வசிக்கும் பொன்னுலகத்துக்குப் போகவும் வரவும் ஊர்வசியென்னும் பெண்ணைச்சேரவும் எண்ணமிருக்குமாயின், யாகாதிகிர்த்தியங்களைச்செய்தால் அப்போது தேவர்களுக்கு மனமகிழ்ச்சியுண்டாகி நீர் நினைத்தகாரியங்களைக் கைகூடச்செய்வார்

கள், ஆதலால் அக்காரியம் நிறைவேறவேண்டும் பொருட்டு
நீர் இந்த அக்கினித்தாலியைக்கொண்டு சாஸ்த்திரவிதிப்படி
மூன்றுகூறாய் அக்கினியையெடுத்து யாகஞ் செய்வீராயின்
உமதுகருத்தின்படி உம்பருலகம் போகவும் வரவும் ஊர்வசி
யானவள் எப்போதும் உம்மைவிட்டு நீங்காமலிருக்கவும் சித்
தியாகுமென்றுசொல்லி, அக்கினித்தாலியையுங் கொடுத்துப்
பின்புதும்புராதிகள் ஆடகலோகம்போய்ச்சேர்ந்தார்கள், பின்
பு வேந்தனும் அந்த அக்கினித்தாலியைவாங்கிக்கொண்டு வன
த்தூடேவ்ருகிறபோது, தன்மனத்தில், அந்தோசசம், ஊர்வசி
யை விட்டுப்பிரிந்து சகிக்கப்படாததுன்பத்தோடும் மருட்
யும் அவளைச்சேரும்விதத்திற்கு தபஞ்செய்தும் இந்த அக்
கினித்தாலியையடைந்ததினால் என்னபிரயோசனம், இனி
இதனாலே தீ எடுத்துயாகஞ்செய்தால் தெய்வலோகத்திற்கு
போகவர இருக்கலாமென்றும் ஊர்வசியைச்சேரலா மெ
ன்றும் தும்புராதிகள்சொன்னதுவீணே யாகிவிட்டது, மேலு
நாம்பட்டபாடெல்லாம் இதற்குத்தானோவென்று நினைத்து
அத்தாலியைக்காட்டில் எறிந்துவிட்டுத் தன்னுடைய பட்டண
ணம்வந்து சேர்ந்தான், இவ்வாறு வந்துசேர்ந்த புரூர
வன் அன்றிராத்திரியெல்லாம் நித்திரையில்லாதவனாய் மனதில்
ஊர்வசியின் நயாத்தால் தவஞ்செய்து தும்புராதிகளிடத்திற்
பெற்றதாலியை அவள்கழுத்திற் கட்டியிருந்ததாலியென்று எண்ண
ணுமல் அசட்டைசெய்து வனத்திலெறிந்தது நல்லதல்லவே
என்று யோசித்தவனாய், எப்போது சூரியனுதிப்பானோவென்
று விழித்துக்கொண்டேயிருந்து, அருணோதயமான வுடனே
எழுந்து குதிரையின்மீதேறி அவ்வனத்துக்குப்போய்த் தாலி
யை யெறிந்தவிடமெங்குந்தேடிக்காணாமல் வருத்தத்தோடுபின்
வனத்தை உய்த்துநோக்கி, அங்குளவிருட்சங்களை குறிக்கொ
ள்கையில், நேற்றையதினம் இருந்தவிருட்சங்களுக்கதிகமாய்
இன்று ஓர் அரசமரமும் வன்னிமரமும் இருக்கின்றதினாலே
நாம் எறிந்துவிட்ட அக்கினித்தாலிதானே இந்த இரண்டு
விருட்சமாகியிருக்கின்றதென்று சிந்தித்து, பிறகு இந்த மரங்

களால் அக்கினியுண்டாக்கி யாகஞ்செய்வோமென்று நிடங்
கொண்டு பட்டணம்வந்துசேர்ந்து, பூசாரிகளையும் பெரியோர்
களையும்வருவித்து, வேதவிதிப்படி அந்த அரசமரத்திலும்
வன்னிமரத்திலும் அக்கினித்தாலியை உண்டுபண்ணி, அதை
இருபத்துநான்கு அங்குலப்பிரமாணஞ்செய்து, அதில்மூன்று
கூறாய் அக்கினியுண்டாக்கி, அந்த அக்கினியினாலே அளவில்
லாத யாகாதிகிர்த்தியங்களைச்செய்தான், அப்படி மேன்மை
பொருந்திய யாகங்களைச்செய்யும்போது, ஆடகலோகவாசிக
ளாகிய அமரர்களியாவரும் பிரசன்னமாய் யாககுண்டத்தி
னிடஞ்சேர, அவர்களைக்கண்ட புரூரவன்பணிந்து பலவாறு
ஸ்தோத்திரஞ்செய்யும்போது, தேவர்களவன் தோத்திரத்தி
லுகு மகிழ்ந்து, ஓய் வேந்தனே, உனக்கென்னவரம் வேண்டு
மென்றுகேட்க, அதற்குப்புரூரவன், சுவாமிகளே, எளியேனு
கிய யான் உங்களுடையலோகத்துக்குவரப்போகவும் அப்ஸர
ஸ்திரீகளிலொருத்தியாகிய ஊர்வசி என்பவள் என்னுடன்
தேவ இருக்கும்படியாகவும்வரம்வேண்டுமென்றுவினவ, அத்
திட்டத்தேவர்கள்சம்மதித்து உன்மனம்போல் நடக்கக்கடவை
யென்று விடைதந்ததன்றியும் அவ்வேந்தனைத் தமதுலோகத்
தின்புறத்துக்கூட்டவே அழைத்துக்கொண்டுபோய்,பொன்னுலகமெ
படிக்கும்புகழச்செய்து, பின்னர் உனது பட்டணத்துக்குப்போ
யிருருவாயென்றுசெலவுதந்தனுப்ப, அவ்வாறுநடவாதவனாய்,
புரூரவவேந்தன் ஊர்வசியிருக்குமிடம்போய் அவளைக்கண்டு
அவளுடன்சுகித்து தனதுகாதல்தணியும்படியாய் மனமகிழ்
ச்சியோடுந் தெய்வலோகத்திற்றானே வாசஞ்செய்துகொண்டு
தடையற்றபோகத்தோடும் வாழ்ந்திருந்தான், அப்படி இருக்
குங்காலையில்,தெய்வலோகத்திலே தேவேந்திரனுடையசபை
யிலே அரம்பை மேனகை திலோர்த்தமைமுதலிய நாட்டியப்
பெண்களெல்லாந் தனித்தனியாய் நாட்டியஞ்செய்து பின்பு
ஊர்வசியும்மேனகையுநின்று நடிக்கையில், பார்த்திருந்த தும்
புருநாரதாதி கருடகாந்தர்வ சித்தவித்யாதரர்களோடும் புரூர
வனும்பார்த்துக்கொண்டிருக்கையில்ஊர்வசியானவள்பரதசா

ஸ்திரவிதிப்படி நாட்டியஞ்செய்துவரும்போது, புரூரவவேந்தன் இமைகொட்டாது பார்த்திருப்பதுகண்ட ஊர்வசிக்குலய பேதப்பட்டுப்போனதனாலே அவர்கள் நாடகசாலைக்கு ஆசானாகவிளங்குந் தும்புருவானவர் கோபங்கொண்டு, இப்புரூரவவேந்தனாலன்றோ பேதப்பட்டதென்றுநினைந்து, கடுங்கோபத்தோடும் இந்த புரூரவவேந்தனும் ஊர்வசியுஞ்சேராமலிருக்கக்கடவதென்று சாபமிட்டார், அதுகேட்ட புரூரவன் திடுக்கிட்டுபயந்து, தேவராஜனைச் சரணாகதி யெனவடைந்து தோத்திரஞ்செய்து, சுவாமி தேவராஜனே, நானிந்த ஊர்வசியைச்சேரவேண்டுமென்று எத்தனையோ பிரயாசைகளடைந்து யாகாதிகளுந் தான தருமங்களுஞ் செய்து புண்ணியத்தையடைந்து அவளுடைய போகபாக்கியங்களை யநுபவித்துக்கொண்டு இருந்த எனக்கு இத்தன்மை பொருந்திய சாபம்நேரிட்டால் என்செய்வேன், எவ்வாறுய்வேன், ஆதலால் தேவரீர் இச்சாபத்தை விமோசனமாகும்படியாய்ச் செய்யவேண்டுமென்று பணிந்துநிற்க, அப்போது இந்திரன்கண்டு சிந்தைமகிழ்ந்து சொல்லுவான், வாரும் புரூரவவேந்தனே, இப்போது உனக்குநேரிட்ட சாபந்தீரவேண்டுமானால், பூலோகத்திலோங்கும் பாதகண்டத்தில் தெட்சணபாகத்தில் ஸ்ரீ ராமமூர்த்தியாற் கட்டப்பட்டசேதுவின்மத்தியில் வயங்குங் கந்தமாதனகிரிச்சார்பில் ஸ்ரீ ராமலிங்கத்துக்கு தெட்சணபாரிசத்திலே சாத்தியாமிர்த தீர்த்தமென்று ஓர் தீர்த்தமிருக்கின்றது, அத்தீர்த்தத்தை நாடிச்சென்று சங்கற்பவிதியின்படி அதில்மூழ்கிப்பின்பு ஸ்ரீ ராமநாதனை தெரிசனஞ்செய்தால் இச்சாபவிமோசன மாவதன்றியும் ஊர்வசியையுங் கூடிச் சுகித்திருப்பாயென்று தேவேந்திரன்சொல்ல, அவ்வார்த்தையைப் புரூரவராஜன்கேட்டு மெத்தவுஞ் சந்தோஷமடைந்து, உடனே பூலோகத்திலிறங்கித் தனதுபட்டணஞ்சேர்ந்து, இரதகஜதுரகபதாதிகளுடனே பிரயாணப்பட்டுப்போய்ச் சேதுமத்தியிற் கந்தமாதனச்சார்பில் விளங்குஞ் சாத்தியாமிர்தத்தீர்த்தத்தில் நாற்பத்தஞ்சுநாள் வரையிலிருந்து

வேதவிதியின்படி தீர்த்தமாடி, ஸ்ரீராமநாதனைதெரிசனஞ்செய்து கொண்டிருக்கிறபோது, ஆகாசத்தினின்றும், ஓ புரூரவவேந்தனே, நீபக்திவிநயத்தோடும் இந்தசாத்தியாமிர்ததீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து ஸ்ரீ ராமநாதனைதெரிசித்தபெருமையால் உனது சாபவிமோசனமாகி விட்டதென்று அசரீரியோத, அவ்வசரீரியைக் கேட்டவேந்தன் சந்தோஷமடைந்து, ஸ்ரீ ராமநாதனைப்பணிந்து விடைபெற்று அவணின்றும் நீங்கித் தேவலோகம்போய் ஊர்வசியைக்கலந்து சுகித்துவாழ்வதோடும் பூலோகத்திற்றனது இராச்சியத்தையும் அரசாட்சிசெய்துகொண்டிருந்தான், ஆதலால் இத்தன்மைவாய்ந்த சாத்தியாமிர்த தீர்த்தத்தினருகே சர்வதீர்த்தமென்றோர் புண்யதீர்த்தமிருக்கின்றது, அதன்பெருமையும் அளவிடப்படாதென்று சூதமுநிவர்சொல்ல, அதுகேட்ட நைமிசாரண்யர்கள், சுவாமி, தேவரீர் அடியோங்களுக்கு அத்தீர்த்தத்தின் பெருமையைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க, முநிவர்சொல்லத் தொடங்கினார்.

சாத்தியாமிர்த தீர்த்தச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சர்வதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முநிவர்களே, விண்ணாதி ஐந்தாகவும், அல்லவாகவும், விமலமாகவும், விளங்குஞ் ஜகதீசனது அருளாலுற்ற இவ்வுலகின்கண் ஓங்கும் நான்குவருணத்துள், வேதகுலத்திற்பிறவிக்குருடனாகவும், மறையோதும் நாலாயிரத்துநானூற்று நாற்பத்தெட்டு கவிகளுக்கும் நண்பனாகவும், ஞானதிசையுப்புக்குரிய கேவலத்தோடுஞ் ஜனித்து சுதரிசநனென்னும்பெயர்வாய்ந்த ஓர் பிராமணன், இப்புவியின்கணுள்ள தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நாநஞ்செய்யவேண்டுமென்னும் விருப்புற்றவனாய் எப்போதுஞ் சிந்தித்துக்

பதோடுந் திரிகாலமும் மனதிலே ஸ்ரீ ராமநாத
ப் பிரார்த்தனைசெய்தும் சிவனடியார்களுக்குத்
அன்னமளித்தும் கந்தமாதனத்திலே அநேகநாள்
வெய்யில் மழைமுதலியயாவுக்கும் அஞ்சாமற்பஞ்
டைநின்று தவஞ்செய்துகொண்டிருக்கிற போது,
பதியாகிய பரமசிவன் கருணைகூர்ந்து, மான்மழு
காளகண்ட திரிநேத்திர சந்திரஜடாதாரியாய், பார்
யும் முப்பத்துமுக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்
ஷிகள் தும்புருநாரதாதி கின்னரகிம்புருட கருடகா
த்தவித்யாதர ருகராகாயவாசிகள் போக பூமியர்
களும் புடைசூழ, வெள்விடையின் மீதெழு
தபஞ்செய்யும் பிராமணனுக்குமுன்னின்று, வாரும்
சுதரிசநனே, நீ நம்மை ஏறிட்டுப்பாரென்றுசுவாமி
திருவாய்மலர்ந்தருள, அப்போது அம்மறையவனு
ணுதயமாகி ஓர் ஜோதியைப்போற்றோன்ற, உடனே
விழித்துக்கடவுளைத் தரிசனஞ்செய்து ஆனந்தபரவச
கரங்களையுஞ்சென்னிமேற்கூப்பிக்கும்பிட்டுக்குதித்
தாடிப் பாடிப்பணிந்து, பரமசிவத்தினது பதாம்புயங்
அஷ்டாங்கபஞ்சாங்க திரியாங்கனுய்ப்பணிந்து எழுந்
ரணசுத்தியோடு, சங்கரா, சம்போ, ஜகதீசா, சர்வலோ
பா, தாணுவே, மங்கையோர்பாகா, அடியார்க்கெளியை
ஜோதியே, அநாதரக்ஷகா, அரவாபரணா, சந்திரஜடாதரா,
பரிபாலனா, பார்வதிசமேதா, திரிபுராந்தகா, சின்மயா
சாருபா, கருணாகரா, கடாக்ஷ வீக்ஷண்யா, தமியே
ந்த தாயுந்தந்தையுமாய் எழுந்தருளியாட் கொண்ட
, என்றுதோத்திரஞ்செய்யும்போது, உமாமகேசன்மன
து, உனக்கென்னவரம் வேண்டுமென்றுகேட்க, அப்
சுதரிசநன், மிகுபக்திவிநயத்தோடும், சுவாமி, அடியே
ாதிரை மூப்புகளினாலேயும், நோயினாலேயும் தளர்ந்த
ரியில், பிறவிக்குருடனாகவும் நடப்பதற்கேதுவில்லாத
ும் இருக்கும் எளியேனுக்கு, சகலதீர்த்தங்களையு மாட

வேண்டுமென்னும் அபேட்சையைக்கொண்டு தேவரீரைநோ
க்கித்தவஞ்செய்த வெனக்குத்திருவருள் கூர்ந்தமையால் எளி
யேன்கருத்தின்படித் தீர்த்தமாட அருள்செய்யவேண்டுமென்
றுகேட்க, கயிலாசபதியாகிய சாம்பமூர்த்தியும்மனமகிழ்ந்து,
வாராய் பிராமணோத்தமா, ஸ்ரீ ராமனால் உண்டாக்கப்பட்ட
சேது மத்தியிலோங்கும் இக்கந்தமாதனத்திற்றானே சகலதீர்
த்தங்களையும் வரவழைக்கிறோம் அதிற்றீர்த்தமாடுகிறாயாவெ
ன்றுகேட்க, அதற்குவேதியன், சுவாமி, மெத்தவும் பாக்ய
மென்று ஆனந்தபரவசனாய் தோத்திரஞ்செய்ய, உடனேபரம
சிவம்கிருபைகூர்ந்து அண்டசராசரங்களிலுள்ள சிவஸ்தல
விஷ்ணுஸ்தலமுதலிய திவ்யக்ஷேத்திரங்களையும் திவ்யதீர்த்
தங்களையும் திவ்யநதிகளையும் கந்தமாதனத்தில் தனக்குமுன்
வரும்படியாய் க்ஷணத்தமாத்திரத்தில் யாவும் பாதாளவாகினி
யாய் பிரயாணப்பட்டுவந்துசேர்ந்தன. அவ்வாறுவந்த பிரவா
கங்களையெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து நிற்கும்படியாயமைக்கத்
தமதுவெள்விடைக்கு உத்தரவுசெய்ய, உடனேருஷபவாகன
மும் தனது முன்னங்காற்குளம்புகளினாலே பூமியைக்கல்லிப்
பெரியதடாகம்போற் செய்துநிற்க, அதுகண்ட நீலகண்டன்
சுதரிசநனைப்பார்த்து, ஓ வேதியனே, நீ இத்தீர்த்தத்தின் மூழ்
கக்கடவை என்றுகூற, அப்போதுமறையவன் திரிகரணசுத்
தியோடும் அந்தசர்வதீர்த்தத்தைப் பிரதட்சணஞ்செய்துவேத
விதிப்படி அதில் மூழ்கி எழுந்திருந்தமாத்திரத்தில் நரை
திரை மூப்புமுதலியயாவும்நீங்கி தேகமானது பசும்பொன்
னைப்போற் பிரகாசிக்கவும், உலகினர்கள் மன்மதனோ மகா
விஷ்ணுவோ மான்மழுதரித்தோன் மதலையாகிய மயில்வீர
னோவென்று மதிக்கத்தக்கதாய் உருவங்கொண்டு, கரைமீது
வந்துசேர்ந்து விபூதி உருத்திராக்ஷந்தரித்துப் பரமசிவனை
சகஸ்ர நாமங்களாலுந் தோத்திரஞ்செய்ய, அப்போது சாம்
பமூர்த்தியானவர் சொல்லுவார், வாராய் சுதரிசநனே, நாம்
உனக்காக இந்த லோகா லோகங்களிலுண்டான சர்வதீர்த்த
ங்களையும் ஒன்றாய் இவ்விடவருவித்தமையால் இத்தீர்த்தத

துக்கு இன்றுமுதல் சர்வதீர்த்தமென்றும் மானததீர்த்தமெ
ன்றும், பெயர்விளங்குவதாகும் இதனை யாரொருவர் தரி
சித்தாலும், மூழ்கினாலும், அருந்தினாலும், அவர்களுக்கு
இகத்தில் போகபாக்கியங்களும், பரத்தில்மோட்சமுங் கை
வல்யமாம், இதன்றியும் அனந்தகோடி பாபங்களைச் செ
ய்தவராயினும் இத்தீர்த்தத்தின் பரிசம்பட்ட மாத்திரத்தில்
அப்பாவங்களெல்லாம் பானுமுன்பனிபோல்விலகி கிருதார்
த்தராவார்களென்று பரமசிவனானவர் வரமளித்தபோது
சுதரிசனனது தேகமானது இளஞ்சூரியனைப் போலிருப்பது
கண்டதேவர்கள் முதலியயாவரும் திகப்ரமைகொண்டு, இவ்
வேதியன் முன்னிருந்தவனல்ல இவன்யாரோ தெரியவில்லை
யென்று எண்ணத்தக்கதாயும் அல்லது இத்தீர்த்தத்தின்பெ
ருமையே இவ்வகையுற்றதோவென்று எண்ணத்தக்கதாயும்
மகிமைபொருந்திய தீர்த்தத்தையும் மறையவனையும் கண் இ
மையாமற்பார்த்து ஆச்சரியமடைந்திருக்கையில், அவ்வேளை
யிற் சந்திரஜடாதரமூர்த்தியாகிய உமாமகேசன் சுதரிசனனை
நோக்கி, ஓ பிராமணோத்தமா, நீ சதாகாலமும் இத்தீர்த்தத்
திற்றினமூழ்கி நம்மைப்பூசித்துக்கொண்டுவந்தால் முத்தி
வீடாகிய நமதுபதியைச்சேருவாயென்று விடையளித்துச்
சகலதேவர்களோடும் சிவகணங்களோடுங் கயிலாசத்துக்கெ
ழுந்தருளினார். அப்பால் சுதரிசனனானவன் அந்தகந்தமாதன
த்திலே வாசஞ்செய்துகொண்டு திரிகாலமும் சர்வதீர்த்தத்
தில் ஸ்நானஞ்செய்து அங்ஙனமெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ
ராமநாதனைப் பணிந்துவருகிறபோது, ஸ்ரீகயிலாசபதியினதரு
ளால் பெறுதற்கரிய அகண்டபரிபூரண சச்சிதானந்தமயமா
ய் சொருபத்தைக் கலந்தானதலால், அதுமுதல் உலகின்க
உள்ளனோதினை மூப்புக்குரியவர்கள் முதலியபஞ்சமா பா
ராயிருந்தபோதினும் அந்தசர்வதீர்த்தத்தை தரிசித்தாலும்
அதிற் றீர்த்தமாடினாலும் அந்நீரையருந்தினாலும் அவர்களு
டையபாவங்களெல்லாமகன்று அநேகயாகாதி கிருத்தியங்கள்
செய்தபலனைப்பெற்று வாலைப்பருவராய் மேலான புண்ணிய

லோகத்தைப்பெறுவார்கள். மேலும் இவ்வளவுமகிமைபொரு
ந்திய தீர்த்தத்தினோடுந் தனுக்கோடி என்னுமோர் புண்யதீர்த்
தமிருக்கின்றது, அதன்பெருமையைக்கூறுவது சேடனுக்கும்
அரிதாமென்று சூதமுனிவர்சொல்லியதைக்கேட்ட நைமிசா
ரண்யர்கள், சுவாமி, தேவரீர் அடியோங்களுக்கு அத்தீர்த்தத்
தின்பெருமையைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று
கேட்க, சூதமுனிவர்சொல்லத் தொடங்கினார்.

சர்வதீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

தநுக்கோடி தீர்த்தச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே,
இவ்வுலகின்கண் ஓங்கும் பரதகண்ட தெட்சண பாகத்தில்
ஸ்ரீ ராமமூர்த்தியினாற் கட்டப்பட்டசேதுவே தநுக்கோடியா
யுஞ் சமுத்திரரூபமாயும் பிரகாசித்து ஆகாயத்தையளாவிய
மதிள்சூழ்ந்த கோட்டையையுடைய இராவணாதிராக்ஷதர்களை
நொக்குநொக்காய்ப்பிளந்த தநுவினாலே உண்டாக்கப்பட்ட
இந்த தநுக்கோடியை யாதாமொருவர்நினைத்தாலும் கண்ணி
னாற்கண்டாலும் அதில்தீர்த்தமாடினாலும் அதினாலுண்டாகிய
காற்றின்பரிசம்பட்டாலும் அயற்றில் ஓர் திவலை தேகத்திற்
பட்டாலும் அவர்கள் யமபுரத்திலெங்கு மிருபத்தெட்டு நர
கங்களைக் கண்ணாற்பாரார்கள், இதன்றியும் லோகத்திற் பாவி
களாயிருப்பவர்களுள் ஸ்திரீகளுடைய சொத்துக்களையும்
பிள்ளைகளின்சொத்துக்களையும் அயலார்களுடையசொத்துக்
களையுந் திருடப்பட்ட பாதகர்களை எமன் தனது தூதவர்
களால் தமம் என்றுசொல்லப்பட்ட நரகத்திலாழ்த்தி துன்
பப்படச்செய்வான், வேதாகமங்களையுணர்ந்த வேதியர்களையும்
பெரியோர்களையும் ஆசாரியர்களையும் வஞ்சித்து அவர்களது
பொருள்களைக் கொள்ளைகொண்டவர்களை ரவுரவாதி நரகத்
தில்வீழ்த்தித்துன்பப்படச்செய்வான்; இதல்லாமலும்எவனொ

குருவன் தனதுபிள்ளைகளைவஞ்சித்து தான்மாத்திரம் பூரணமா
ய் புசித்து திரிகின்றானோ அவனை காடி புலி சிங்கமுதலிய
வைகளால் இம்சைப்படுத்தி மீளாநரகத்துக்காளாக்கி உலை
யச்செய்வான், இதல்லாமலும் காட்டிற்சஞ்சரிக்கப்பட்ட மிரு
கங்களையும் பறவைகளையும் எவனொருவன் அம்புமுதலியவ
ற்றால் நாசப்படுத்துகிறானோ அவனை எமபடாள் நடுங்கும்
படியாய்ப்பிடித்துப் பாசக்கயிற்றினாற்கட்டி இருப்புத்தண்
டங்களினாலே மண்டைதிறக்கும்படியாயடித்து கும்பிபாக
மென்றுசொல்லப்பட்ட நரகத்திற்றள்ளி அளவிறந்தகாலம்
வாதைப் படும்படியாய்ச் செய்வார்கள், வேதப்பிராமணனை
யும் தாய்தந்தையர்களையும் தமயன்முதலிய பெரியோர்களை
யும் மதியாமல் அவமானப்படுத்தி வைதவர்களை குண்டுகட்
டாகக்கட்டி சூரியகிரணந்தோய்ந்த பாலைநிலத்தில் உருட்டுவ
தன்றியும் அக்கினிவளர்த்தி அதினடுவிற் றூக்கிப்போட்டும்
வதைப்படுத்துவதோடுங் காலசூஸ்திரமென்னப்பட்ட நரகத்
திலேதள்ளி வதைப்பார்கள், இதல்லாமலும் கடவுளானியமிக்
கப்பட்ட வேதசாஸ்திரபுராணங்கள் ஒருவழியிருக்க தானொ
ரு வழியாய்ச் செல்லப்பட்டவனை அவனது பிராணாந்தியகால
த்தில் காலதூதர்கள் அவனதுகால்களிற் பழுதையைக்கட்டி
தடங்களினின்றும் மாறிமாறி இழுத்துக்கொண்டுபோய் வி
ஷாக்கினியென்று சொல்லப்பட்ட நரகத்திலேபோட்டு மிதிப்
பார்கள், இதல்லாமலும் மகாமண்டலேசுவரனாயினும் மகாரா
ஜனாயினும் அவனது மந்திரியாயினுங் காரியக்காரனாயினுந்
தனக்குக்கீழ்ப்பட்ட ஒருவன்மீது யாதொருகுற்றமில்லா திரு
ந்தும் அவனைதுராக்கிருதமாய்ப்பிடித்து இம்சைசெய்தால் அப்
பேர்க்கொத்த அதமனை எமகிங்கிலியர்கள் பிடித்துக்கொண்
டுபோய் இருப்பாலையிற்போட்டு ஆட்டிச்சாறுபிழிந்து பின்
னர் பன்றிமுகமென்னப்பட்ட நரகத்திற்றள்ளி நெடுங்காலம்
வருத்தப்படச்செய்வார்கள், மேலும் உலகின்கண்நடக்கப்பட்
ட காரியங்களையெல்லாங் கடவுள்செயலென்று நினைந்திருக்
கும் பெரியோர்களுக்கு தீங்குசெய்யும்பாவிகளை கூவமென்

று சொல்லப்பட்ட நரகத்திற்றள்ளி இரும்பைப் பாகுபோ
லுருக்கி அன்னவர்களது ரோமத்துவாரத்தின் வழியாய்க்
கரண்டிகளினால் அள்ளிவிடுத்து தேகத்துட்புகும்படிச்செய்
தும் அதனோடு ஈயங்களைக்காய்ச்சி நவத்துவாரங்களின் வழி
யாய் விடுத்துப்பெருந்துன்பப் படுத்துவார்கள், இன்னமும்
இப்புவியின்கண் இராஜர்களாகப் பிறந்தவர்களாயினும் பிரா
மணர்களாயினும் அவர்களுக்கு வேதவிதியில் நியமித்த
வண்ணம் யாகாதிகிர்த்தியங்களை நடத்தாமல் தத்தமக்குரிய
பாக்கியங்களைத் தாங்களேபுசித்துக் காலத்தைப் போக்குவார்
களாயின் அவர்களை எமபடாள் மலபாண்டமென்னும் நர
கத்திற்றள்ளி அவர்களுடைய மலங்களையும் மூத்திரங்களை
யும் அவர்களையே புசிக்கும்படியாய்ச்செய்து துன்பப்படுத்து
வார்கள், இதல்லாமலும் லோகத்திற்சனித்தமானவர்கள் தம
மோடொத்தவர்களைக் கலந்து போஜனகாலங்களிற் சமபந்தி
யாய்வைத்துக்கொண்டு சாப்பிடாமல் தாங்கள்மாத்திரந் தனி
யாயிருந்து அறுசுவைப்பதார்த்த அன்னங்களேனுந் தாலந்
தெங்குமுதலியதருக்களினது மதுக்களேனும் அருந்துவார்
களாயின், அன்னவர்களை கிருமிபூணமென்று சொல்லப்பட்ட
நரகத்திற்றள்ளி புழுவோடே புழுவாய்ப்போகும்படிசெய்தும்
அந்நரகில் வாழப்பட்டபெரும்புழுக்கள் இவர்களை விழுங்க
வும் துன்பப்படச்செய்வார்கள். இதல்லாமலும்லோகத்தில்
பிராமணருடைய சொத்துக்களையுந் தங்களோடொத்த
அயலாருடைய சொத்துக்களையும் துராக்கிருதத்தினாலாவது
சோரத்வத்தினாலாவது அபகரிப்பவர்களையும் அபகரிப்பவர்
களுக்கு உதவிசெய்பவர்களையும் தாதுக்குழியென்று சொல்
லப்பட்ட நரகத்திற்றள்ளி ஆலகாலவிடங்களை அவர்வாயில்
ஊற்றுவதல்லாமலுந் தீயினும் வீட்டிக்கருக்கி அந்நரகத்திற்
சஞ்சரித்துக்கொண் டிருக்கும் வேதாளங்களினது பற்களுக்
குப்பதமாய் நகட்டும்படிச்செய்வார்கள், இதன்றியும்புவியின்
மீது புருடராய் ஜனித்தவர்கள் தனக்கு மேலானகுலஸ்திரீ
களையாகிலும் இச்சையில்லாத ஸ்திரீகளையாகிலும் தான் இச்

னைகொண்டு பொருள்விரயத்தாலாவது இதரதந்திரங்களினாலாவது அவர்களுக்கு இச்சையுறும்படிச்செய்து புணர்ந்தாலும் அல்லது கீழ்மக்களைப்புணர்ந்தாலும் அப்போர்க்கொத்த பாவிகளையும் விதவஸ்த்ரீகளைச்சேரும் பாவிகளையும் காலதூதர்கள் கொண்டுபோய் இருப்புக் கம்பங்களை அக்கினியிற்காய்ச்சி அந்தஸ்த்ரீபுருஷரை அந்தக்கம்பங்களைக்கட்டியணைத்து முத்தமிடும்படியாய்ச்செய்வார்கள். லோகத்தில் ஓர்புருடனுக்குப் பத்தினியாகவமைந்த பெண்ணானவள் தன்மணாளனை எதிர்த்து வாதுசெய்தும் அவன்சொல்லுக் கிணங்காதும் தீங்கு நினைத்தும் அடங்காமற்றிரியும்பெண்களை காலதூதர்கள் கொண்டுபோய்க் கற்பாறையின்மீது படுக்கவைத்துக்கருக்கரிவாளினால் அவர்கள்தேகத்திலுள்ள மாமிசங்களையெல்லாம் அரிந்து குப்பலாகச்சேர்த்துப் பந்துபோற்றிரட்டித் தீயிற்போடுவார்கள், இதல்லாமலும் புருஷர்கள்தமக்கு இணங்காத கர்ப்பஸ்த்ரீகளைத் தொந்திரவுசெய்துபுணர்ந்து அதனாற் கர்ப்பத்திலுற்றசிசுக்களுக்கு நாசமுண்டாகும்படிச்செய்யும் பாவிகளையும்லோகத்தில் தனது இல்லறதர்மத்துக்குரிய புருஷனிருக்கப் பரபுருஷனையிச்சித்து அதனாலுண்டாகிய கருவைஅழிக்கும் கீலிகளாகிய கொடும்பாவிகளையும் பரபுருஷன் இச்சையால் தனது மணாளனைக்கொன்ற பாவிகளையும் புருஷன் ஆக்கினையைக்கடந்து தேர்திருவிழாமுதலிய வற்றிற்குப்போகும் பாவிகளையும் எமகிங்கிலியர்கள் பிடித்துக்கொண்டுபோய் ஆனைக்காலி விடறச்செய்தும் இருப்புத் தண்டங்களைக் கொண்டோங்கிப் பஞ்சுபஞ்சாய் நையவடித்துக்குழப்பி மலத்தோடேசேர்த்துப் புழுக்கவைப்பார்கள். இதல்லாமலும் யானைமுதல் எறும்பீறாக அடங்கிய உயிர்களை வாதைப்படுத்தினாலும் வதஞ்செய்தாலும் அவ்வாறு செய்கையிற் பார்த்திருந்தாலும் அவர்களுக்கு உதவிசெய்தாலும் அன்னவர்களை யமபடாள் கெக்கரிகொட்டி இழுத்துக்கொண்டுபோய் விடந்தோய்ந்த கழுவிலேற்றித் தொந்திரவு செய்வார்கள், இதல்லாமலும் லோகத்திற் புருஷர்களாயினும்

ஸ்த்ரீகளாயினும் பிள்ளைகளாயினும் மானவமானமில்லாமல் கெட்டநடத்தைகளிற்பிரவேசித்தும் மதுமாமிசாதிகளைப் புசித்தும் சூதாடியும் கொலைகளவுகள்செய்தும் மிருகங்களுக்கொப்பாகத்திரியப்பட்ட பாவிகளை அவர்களது பிராணாந்திய காலத்தில் காலதூதர்கள் பிடித்துக்கொண்டுபோய் மலமூத்திரங் கோழை சீ இரத்தமுதலியவைகள் நிரம்பியிருக்குங் குழிகளிற்றள்ளி வாதைப்படுத்துவதோடும் பயங்கரமாகிய பெருநரகங்களிலும் எமனுடைய கட்டளையின்படி வீட்டித்துன்பப்படுத்துவார்கள், இதன்றியும் வனங்களிற் சஞ்சரியாநின்ற மான்மரை முதலியவற்றையும் பறவைக்கூட்டங்களையும் வேட்டைமார்க்கத்தில் நாய்களையேவிக் கடிக்கச்செய்தும் கவண்கற்களாலும் அம்புகளாலும் உருண்டைவிற்களாலும் வதஞ்செய்தும் புசிக்கப்பட்டபாவிகளை பகட்டின்மீதேறி யுலாவாநின்றயமபடாள் பிடித்துவந்து இருப்புத் தண்டங்களாலடித்து என்புகளைநொறுக்குவதன்றியுந் துருவத்திலேற்றியாட்டியும் கழுவிலேற்றியுஞ் செக்கிற்போட்டுத்திருப்பியும் உரலிற்போட்டு இடித்தும் அம்மியிலிட்டரைத்தும் அவர்கள் உயிர் நீங்காமலிருக்கும்படியே தோலோடுதோலாகவுஞ் சதையோடு சதையாகவும் என்போடு என்பாகவும் கற்பகோடி காலம்வரையில் இம்சைசெய்து வருவார்கள், மேலும்புருடர்களாய் நற்குலத்திலுதித்தவர்கள் தமது பத்தினிகளையாவது இதரஸ்த்ரீகளையாவது தம்முடைய இந்திரியத்தை அருந்தும்படியாய்ச்செய்த பாவிகளைக்கொண்டுபோய் அவர்களுடைய காமநீரையேபுசிக்கச்செய்து அநேககோடிகாலம் ரவுரவாதி நரகத்திலழுந்தியிருக்கும்படிச்செய்வார்கள், இதல்லாமலும் வையத்தின்மீதோங்கும் வியாபாரிகளிடத்திற் பொருளைப்பெற்றுக்கொண்டு அதனைமறுபடியுமவர்களுக்குச் செலுத்தாமலும் அயலாருடைய இல்லங்களை அக்கினியினாற் கொளுத்தியும் விடங்களையூட்டியும் உயிர்களைநாசமுறச்செய்த மகாகொடும்பாவிகளை யமதூதாள் வச்சிரக்கொள்கையென்று சொல்லப்பட்ட நரகத்திற்றள்ளி நையவடித்துக் கொடுந்துன்பத்தைச்

செய்வார்கள், இன்னமும் சிவசொத்துக்களை மோசஞ்செய்தும் ஒருவரறியாமற்களவுசெய்துங் காலங்கழித்தலவும்பாவிகளை காலதூதர்கள்எப்போதும் மீளப்படாத காலசங்கடமென்னும் நரகமாகிய அக்கினிகுண்டத்திலேதள்ளி வாதைப்படுத்துவார்களாதலால் இவ்வாறு பாவங்களைச் செய்பவர்கள் அடையுந்துன்பங்களைச் செப்பவேண்டுமாயின் நெடுகாட்செல்லும், ஓ முநிவர்களே, பஞ்சமாபாதகர்களாயினும் மாதாபிதாக்களுக்குபிரார்த்தமுதலியவைகளைச்செய்யாதவராயினும் குரு இஷ்டர் வேதசாஸ்திரங்களை யுணர்ந்தவர்களுக்குத் தீங்கு செய்தவராயினும் அப்பேர்க்கொத்தவர்கள் ஸ்ரீ ராம தநுக்கோடியிலே தீர்த்தமாடுவராயின் அவர்கள் ஒருகாலத்திலும் மேற்கூறியநரகங்களைக்கண்ணிலும் பார்க்கமாட்டார்கள், எமதண்டனைக்கும் ஆளாகார்கள், அத்தன்மைபொருந்திய மகிமையைப்பெற்றுவிளங்குந் தநுக்கோடியிலே மூழ்கினபேர்களுக்கு மேலான அறிவுபொருந்துவதோடுஞ்சாலோக சாமீப சாரூப சாயுச்யபதங்களு மெளிதாய்க்கிடைக்கும்,அல்லாமலும் அன்னவர்களைப்பற்றிய ஊழ்வினையகலுவதோடும் அநேகவின்பங்களையும் பிராமணர்களுக்கு பாரம் பாரமாய் பசும்பொன்கொடுத்த பலனையும் ஆயிரங்கோதானஞ்செய்த பலனையும் கன்னிகாதானஞ் செய்தபலனையும் கொடுத்து, அவர்கள்வசத்திலுண்டாகிய பாதகங்களைத் துரத்திஇச்சையை சப்தசாகரத்துக் கப்புறம்விலகச்செய்து சுத்தநிர்மலராய்மனதைப் பிரகாசிக்கச்செய்து பரிசுத்தராக்கும், கேளுங்கள் முநிவர்களே, இக்கடல்சூழ்ந்த உலகின்கண்கோதண்ட மென்னும் நெடியவில்லையுடைய அதிவீரபராக்ரமசாலியாகிய ஸ்ரீ ராம மூர்த்தியால் உண்டாக்கப்பட்ட தநுக்கோடியிலே தீர்த்தமாடியபேர்களுக்கு இப்போது நாம்சொல்லியவண்ணம் துன்பமனைத்துநீங்கி இன்பத்தைத்தருவதற்குச் சந்தேகமில்லையென்று அக்கினியிலேவேகப்பட்ட இரும்பையெடுத்து எனது நாவின்மீது வைத்துக்கொண்டு சித்தமாய்ச் சொல்லுவேன், யான் சொல்லுமிதை உண்மையென்றுநம்பாமல் யாவரேனு

மிதுவீண்வார்த்தையென்று நினைப்பார்களாயின் அவர்கள் சாங்கரியமாயிலேஜெனித்து அதற்கிசைந்ததொழிலிற் பிரவேசித்துப் பெருந்துன்பத்தை யடைவார்கள், உண்மையென்று நம்பியபேர்கள் அவர்களது கருமத்தையும்போக்கி நல்லபாக்கியங்களைப்பெற்று மோட்சவீட்டையு மடைவார்களாதலால் இப்படிக்கொத்த தநுக்கோடியாகிய புண்ணியதீர்த்த மிருக்க வேறேதீர்த்தத்தை நாடிப்போகின்ற பேதைகளைப்போல ஒரு பயித்தியக்காரருமில்லை, அவர்களுடையவிவேகத்தைத் நாம் என்னசொல்லுவோம், முநிவர்களே, அந்ததநுக்கோடிக்குப் போய் அப்புண்ணியதீர்த்தத்தைக் கையினால் தொட்டாலும் கண்ணினாற்கண்டாலும் அதனைப்புகழ்ந்துபேசினாலும் மனதில் நினைத்தாலும் அவர்கள்பூமியில் மறுபடியுஞ் ஜெனனமெடார்கள். நைமிசாரண்யமென்று சூதமகாமுநிவர்சொல்ல,அதைக்கேட்டமுநிவர்கள் மெத்தவுஞ்சந்தோஷமடைந்து, சூதமாமுநியைநோக்கி, சுவாமி,தேவரீர்சொல்லிய சேதுவானது சமுத்திரசொரூபமா யிருக்கப்பட்ட புண்ணியதீர்த்தத்திற்கு தநுக்கோடி என்று பெயர்வந்தகாரணமியாது அதனைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்றுகேட்க, சூதமுநிவர் சொல்லுவார், கேளுங்கள்மகாரிஷிகளே, கோதண்டமென்னும்வில்லைக் கரத்திலேந்தி யிலகாநின்ற ஸ்ரீராமமூர்த்தியானவர் பத்துசிரங்களையும் இருபதுகரங்களையுமுடைய இராவணனைச்சங்காரஞ்செய்து பண்ணுதற்கரிய தசக்ரீவனென்னும்ராவணனுடைய பரிக்கப்பட்டிருந்த கிரீடத்தை விபீஷணனுடைய சிரத்திற்றரித்து பட்டாபிஷேகஞ்செய்து இலங்கைக்கு அரசனாக்கிச் சமுத்திரத்திற்கட்டியிருக்குஞ் சேதுமார்க்கத்தில்,சீதாதேவியோடுந் தனதுதம்பியாகிய இலட்சுமணன், அநுமான், சுக்ரீவன்முதலிய வானரவீரர்கள்யாவரும்புடைசூழ்ந்திறைஞ்சப்புட்பகவிமானத்திலேறிச் சந்திரசூரியாளும் விலகிநிற்கும்படியாய்கருடகாந்தர்வசித்தவித்யாதரர்கள்போற்றச்சேதுவைக்கடந்து கந்தமாதனத்திலிறங்கித் திருவிளையாடல்செய்ய வெண்ணியிருக்கையில், ஸ்ரீராமசந்திரனுடைய பாதபத்மங்களை

விபீஷணனானவன் பணிந்துகூறுவான். சுவாமி;வேதவேதாந்தமூர்த்தியே, தேவரீரிப்போது இராவணாதி ராட்சதர்களைக்கண்டிக்கும்பொருட்டு வானராதிவீரர்களாற் செய்யப்பட்ட இச்சேதுவை இவ்வாறே இருத்திச்சென்றால் இலங்கையில் உள்ள இராக்கதாளியாவரும் இம்மார்க்கத்தில் எங்கும் போக்குவரத்தாகவிருந்து உலகிலுள்ள ஜீவர்களை இம்சைசெய்வார்களாதலால் இச்சேதுவாகிய அணையை பேதிக்கவேண்டுமென்றுசொல்ல, அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் அவ்வாய்மையைக்கேட்டு மெய்தானென்று சிந்தித்து மனக்களிப்பினோடுந் தனதுகரத்தினிடமாக விளங்குங் கோதண்டமென்னும் வில்லினாலே நல்சர்ப்பத்தை கருடன் தன் கால்நகங்களினாற் றாக்கிக்கிழித்ததுபோலவும் முன்னர்இலங்கையில் இந்திரஜித்தினால் விடப்பட்ட நாகபாசத்தை கருடபகவான் பொடிபடச்செய்ததுபோலவும் கிழித்துச்சேதுவாகிய திருவணையைஉடைத்துப்போட்டார். அப்படி தநுவினுடைய கோடியினால் உடைக்கப்பட்ட சேதுவுக்கு தநுக்கோடியென்று ஓர்நாமம் விதிக்கப்பட்டதென்று சூதமாமுனிவர்சொல்லிப்பின்னுங் கூறுவார். ஓ-முனிவர்களே,இந்தமகிமைபொருந்திய தநுக்கோடியை தரிசித்தபேர்கள் பிறவிச்சாகரத்தைக் கடந்தவர்களாகவிருப்பதோடும் அவர்கள் பெறும்பேற்றை நம்மாற் சொல்லிமுடியாது, மேலும்அந்ததநுக்கோடியி லிறந்தபேர்களுக்குப் பிறவிநோய்நீங்கிப் புண்ணியசரீரம்பெற்றுப் பொன்னுலகவாழ்க்கையையடைந்து முடிவில்முத்திவீட்டையும்பெறுவார்கள், இதன்றியும், அச்சேதுவிலே விரதாதிகள், தானதருமங்கள் முதலானவற்றை நடப்பித்துவைத்த புண்ணியர்கள் குறித்த அட்டயோகங்களும், அட்டசித்திகளும், அட்டலட்சுமிகடாட்சங்களும்பெற்று மோட்சானந்தத்தையும் அநுபவிப்பார்கள், மேலும் ஸ்ரீராமமூர்த்தியானவர் தமது தநுக்கோடியினாற் கீறிக்காட்டிய குறிப்பானது பிரமலோகம், விஷ்ணுலோகம், சிவலோகமென்னும் மூன்றுலோகங்களுக்கும் போகுமார்க்கமென்றறியுங்கள், உலகின்கண் ஆவலோடுஞ் செய்யப்பட்ட

யாகாதி அக்கினி ஹோத்திரங்கள், தானதருமங்கள், மந்திராதிகள், விரதாதி முதலியவைகளிலே அநேககாலம் பழக்கஞ்செய்து அடையும் பலன்களையெல்லாம் மகாபாவிகளாயினும் இந்ததநுக்கோடியினது பரிசம்பட்டால் ஓர் இமைப்போதிற்பெறுவார்கள். ஆதலால் - இதன்பெருமையை நாமென்ன சொல்லப்போகின்றோம், மேலும்,கங்கை, யமுனை, சிந்து, காவேரி, கோதாவரி, பம்பை, சரஸ்வதிமுதலிய நதிகளுக்கு நியமநிட்டையோடும், விரதத்தோடும் போய்வருவதற்கு எண்ணமுற்றவர்கள் இந்ததநுக்கோடியிலே ஓர்பொழுது தீர்த்தமாடிவிட்டால், அவைகளுக்குப் போகவேண்டியதில்லை; அன்றியும், இஷ்டகாமியார்த்தங்களைத் தரத்தக்க இந்த தநுக்கோடியிலே மூழ்கினபேர்களும், கண்ணினாற்கண்டபேர்களும், பின்னர் - காசிக்குப்போய் இறக்கவேண்டுமென்கிற இச்சைகொள்ளவேண்டியதில்லை ; இதல்லாமலும், உலகில்வருங் கலிப்பிணியிற்சிக்கித் துன்பமடையுந் தரித்திரனானவன், இந்த தநுக்கோடியிலே, மூன்றுநாள் தீர்த்தமாடினால், அவனிடத்தில் அஷ்டலட்சுமிகள் வாசஞ்செய்வதோடும் அளகேசனை நிகர்த்தவனாயிருப்பான்,யாதாமொருவன் அதில் வேதியர்களுக்குத்தன்னாலியன்றமாத்திரந் தட்சணைதாம்பூலங்கொடுத்து மூழ்கத் திறமில்லாதவனாக விருந்தபோதினும், ஒருபோதேனுந் தன்னுடையகோரிக்கைகளை மனசி லுத்தேசித்துக்கொண்டு அந்தராமதநுக்கோடியில் மூழ்கினால், மறுபடியும் மூழ்குவதற்குள் அநேகபாக்கியங்களைப்பெற்று, கோடிகோடி தானதருமங்களைச்செய்யுந் திறமுடையவனாய் விளங்குவான். ஆதலால், பன்னுதற்கரிய தநுக்கோடியிலே முப்பத்து முக்கோடிதேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், அஷ்டவசுக்கள், கருடகாந்தர்வ சித்தவித்யாதர உரக ராகாய வாசிகள், போகபூமியர், நாட்கள், கோட்கள் சிவகணங்கள் புடைசூழும்படியாய் திரிமூர்த்திகளுந் தத்தந் தேவிமாரோடும் வாகனருடராய் விஜயஞ்செய்து தநுக்கோடியிற் சேர்ந்து ரமணியமாய் வீற்றிருந்து அச்சேதுவைப்பார்த்து கண்களித்தி

ருப்பதால், அவ்விடஞ்சென்ற யாவருந் திரும்பிவர மனமில்லாதவர்களாய், கரசரணாதிகளை யசைக்காமலும், வாய்பேசாமலும், சித்திரப்பாவைபோற் பசிதாக முதலியவைகளும், எண்ணங்களுமற்று ஞானசொருபத்தைத யடைந்தவர்களுக்கொப்பாய் பிரமானந்தக் கடலுட்டோய்ந்திருப்பார்கள். மேலும் உலகின்கண் ஓங்குஞ் ஜீவர்களில் ஒருவருக்கொருகாசேனும் கல்லாத உலுத்தனாயினும், அந்தநுக்கோடியை தரிசிப்பானாயின், அவன் தனக்கு சத்திராதியானவன் தன்னையணுகி தனது உயிரைத் தியாகமாய்க்கேட்டபோதினுங் கொடுக்கத்தக்க மனதை உண்டாக்குமாதலால், நைமிசாரண்யரே, ஓதுதற்கரிய அதன்மகிமையை யாமென்சொல்லுவோம். மேலும், சகலரிஷீசுவரர்களுக்கும், தேவர்களுக்கும், முத்தியைத் தாத்தக்கதாயும், அணிமாமுதலிய அஷ்டசித்திகளையும் அஷ்டாங்கயோகங்களையும், பரகாயப்பிரவேசங்களையும், இந்திராதிபோகங்களையும், சேசாவதான வித்தைகளை யெல்லாம் கொடுத்து அதனாற் களித்திருக்கின்றார்களேயன்றி வேறொருவிசேடத்தினால் அவர்களுக்கு மகிமைகிடைத்ததல்ல, இந்த ராமதநுக்கோடியின் கரையிலே யாதாமொருவர் பிதுர்தர்ப்பணம், சிராத்தம், பிண்டமுதலியவைகள் கொடுப்பார்களாகில், அப்பிதுர்க்களுக்கு யாதொருசிந்தையும்வேண்டியதில்லை, மறுபடியுமவனாலே வருடாந்தரங்களிற் கொடுக்கப்பட்ட பிண்டங்கள் அவர்களுக்கு மேலானகடனாகக் காத்துக்கொண்டிருப்பதோடும் அதனாலே மோட்சசாம்பிராச்சியத்தையடைந்து சின்மயானந்த சொரூபத்தைப் பெறுவார்கள். அவ்வாறு பெறுவதல்லாமலும் அக்குலத்தில் உண்டான இருபத்தொருகோடிஜென்மங்களிலுள்ள ஜனனமரண துக்கங்களும் இரவுரவாதிநரகங்களும் விட்டுநீங்கிப் புண்ணியபுருஷராய் அன்னவர்குலங்களியாவும் பவித்திரமடைந்து ஜன்மசாபல்யமாய் மேலானபுண்யலோகங்களையடைந்து எழுபத்தொரு கோடிசதுர்யுகம்வரையில் ஆனந்தாதிபோகங்களைத் தடையற அநுபவித்துக்கொண்டிருந்து பேரின்பத்தையடைவார்கள். மேலும்

அந்த தநுக்கோடிக் கரையிலே ஒருபிராமணனுக்கு ஒருவேளை அன்னங்கொடுத்தால் அப்படிகொடுத்தவனது, சனனமுதல், மரணபரியந்தம், பிரதிதினம் அன்னதானஞ்செய்துவந்தால் எவ்வளவு பலனோ, அவ்வளவு பலனைப்பெற்று, மேலான புண்யலோகத்தை யடைவான். இதல்லாமலும், அக்கரையில் நின்றும், வேதியர்களுக்கு யாதாமொருவன் பக்தியினயத்தோடும், காய்கறி பதார்த்தங்களேனுங் கந்தமூலபலாதிகளேனுங் கொடுப்பானாயின், அவன் யாகாதி கிரத்தியங்கள்செய்த பலனைப்பெறுவன். பின்னும், அதி ஆவலோடும், நல்ல புண்யகாலங்களில், அச்சேதுவில் தீர்த்தமாடியபேர்கள் அசுவமேதயாகம்பண்ணிய பலனைப்பெறுவார்கள். மேலும், அந்த தநுக்கோடியிலே மாகமாத சங்கிரமத்தில் தீர்த்தமாடப்பெற்றவர்கள் பெறும் பலனைக்கூறுவதற்கு யான் பாத்திரனல்ல. ஏனெனில், கும்பமதியிலாங்கும், புண்யதிதி நக்ஷத்திரங்களில் யாரொருவர் அச்சேதுவின் தநுக்கோடியில் தீர்த்தமாடுகின்றார்களோ, அவர்கள் பிரயாகை கங்கைமுதலான தீர்த்தங்களாடின பலன்களை அடைவதோடும், உள்ளபகாரியங்களெல்லாங் கைக்கூடி, சுவர்க்காதிபோகங்களைப் பெறுவார்களென்று, சுருதிவாக்கியப் பிரமாணங்களிலே சொல்லப்படுமாதலால், இரகுராமனுடைய கரத்தில்விளங்குந் தநுவினாலே உண்டான தநுக்கோடியில், யாரொருவர் கோபாவேசத்தோடுக்கூடியிருப்பவர்களாயினும், தீர்த்தமாடுவராகில், நக்ஷத்திர புண்யகாலத்தில் அந்த தநுக்கோடியைக் கண்ணினாற்கண்டவர்கள், பிரம்மஹத்தி முதலிய பாதகங்களுக்குரியவர்களாக இருந்தபோதினும், அதனைத் தரிசித்தபலனால், அப்பாதகங்களெல்லாம் அகன்று, பரிசுத்தராவார்கள். இதன்றியும், சிவராத்திரிப் புண்யகாலத்தில், யாதாமொருவர் நான்கு ஜாமமும், நித்திரை செய்யாமல் விழித்திருந்து, இந்திரியங்களையடக்கி இராகத்வேஷாதிகளில்லாமல் ஸ்ரீ ராமசந்திரனால் பூசிக்கப்பட்ட ஸ்ரீ ராமநாதனை அர்க்கியபாத்திய ஷோடசோபசாரங்களினாலே மனமகிழ்ச்சி

செய்து, அருணோதயத்திலே அந்த தநுக்கோடியில் தீர்த்தமாடி, தன்னுடைய நித்தியகருமங்களை விதிப்படி நடாத்தி, மறுபடியும், ஸ்ரீ ராமநாதனுக்கு அபிஷேக அலங்கார நிவேதனமுதலிய சோடச உபசாரங்களுஞ்செய்து, தோத்திரம் பண்ணி, அன்போடும் வணங்கிப்பணிந்து, தன்னாலியன்ற மாத்திரம், அன்னதானங், கோதானம், பூதானம், சொர்ன தானம், நெல், அரிசி, சர்க்கரை, கோதும்பை, திலம், நவதான்னியம், குடை, பாதரட்சை, முதலானதும், நீர்மோர், விசிறி, சந்தனம், புட்பம், இவையாவுந் திருப்தியடையும்படியாய்க்கொடுத்து, பின்னர் தாம் பாரணைசெய்து, அன்றுபகற்போதும், நித்திரைசெய்யாமல் புண்ணியகதைகளை சிரவணஞ் செய்துகொண்டிருந்து, பொழுதுபோக்கிய பேர்களுடைய புண்ணியத்தையும், இன்பத்தையும் அந்த இராமநாதனை அர்ப்பிதஞ் செய்துகொள்ளவேண்டுமேயன்றி, இவ்வுலகின்கண் அவர்கள் பெருமையை வேறொருவராற் சொல்லிமுடியுமோ. ஆதலால், இத்தன்மைபொருந்திய தநுக்கோடியில், என்ன வருத்தப்பட்டாவது ஆத்மலாபம் வேண்டி மூழ்கினபேர்களுக்கு முத்திவீட்டைச் சித்தமாய்க்கொடுத்து, சின்மயானந்த சொரூபமாக்கிவிடும், அதற்குச்சந்தேகமில்லை. இதல்லாமலும், படைப்புக்குரிய பிரம்மதேவனும், பாலிப்புக்குரிய விஷ்ணுவுஞ், சங்காரத்திற்குரிய உருத்திரனும், சுருதி கர்த்தாக்களுஞ் சிரேஷ்டமாய் விதித்திருக்கும் வண்ணம், அர்த்தோதய மகோதய புண்ணியகாலங்களில், அழகு பொருந்திய, அந்த தநுக்கோடியிலே தீர்த்தமாடினபேர்கள் மறுபடியும், பூமியில் தாய்வயிற்றினிடமாய் உதயமாகமாட்டார்கள். மேலும், வேதமந்திர விதிகளினாலே செய்யப்பட்ட யாகாதிபலன்களைக் கொடுப்பதன்றியும், சந்திரசூரியரை அரவந்தீண்டுங்காலமாகிய கிரகணகாலங்களிலாவது, ஆடிமாதம் சங்கிரம அமாவாசை பவரணை காலங்களிலாவது, தநுக்கோடியிலே மூழ்கினபேர்கள் அநேக பிரம்மஹத்தி செய்தவர்களாயினும், அவையாவும் விமோசனமாகி, அவர்களுடையும்

பெருமையை இரண்டாயிரம் நாவைப்படைத்த ஆதிசேடனுஞ் சொல்லமுடியாததாய் விளங்குவதோடும், அவர்களுக்கு ஆடையாபரணமுதலிய நவநிதிகளும், இராஜபோகங்களும், உண்டாகி மேன்மையுற்றிருப்பது மல்லாமல், நெடிய கடல்சூழ்ந்த பூமியிலுள்ள சகல தீர்த்தங்களுமாடிய புண்ணியபலன் கிடைக்கும், இதற்குச்சந்தேகமில்லை யாதலால், அன்னவர்கள் இப்புவியின்கணிருக்குமளவும், தமது இஷ்டகாமியங்களையநுபவித்து மறுமையிலே மோட்சசுகத்தையுஞ் சித்தமாயநுபவிப்பார்கள். ஆதலால், இவ்வளவு மகிமைபொருந்திய சேதுவின் மத்தியிலோங்கும் கந்தமாதனகிரிச்சார்பிலே விளங்கிய இராம தநுக்கோடியிலே திரிமூர்த்திகளும் வாசஞ்செய்துகொண்டிருப்பார்களாயின் யாம் என்சொல்லுவோம். இந்த தநுக்கோடியிலே சாக்ஷாத்து ஈசுவர சொரூபியாகிய அசுவத்தாமா தீர்த்தமாடி. வஞ்சனையாய் பஞ்ச சிசுக்களை வதஞ்செய்த பாதகத்தை போக்கிக்கொண்டானென்று சூத மகாமுனிவர் சொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட நைமிசாரண்யரிஷிகள் முனிவனைப்பணிந்து, சுவாமீ, அசுவத்தாமாவானவர் சிசுக்களை வதஞ்செய்த காரணமியாதோ அதனைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றுகேட்கச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

தநுக்கோடி தீர்த்தச் சருக்கம்

முற்றுப்பெற்றது.

அசுவத்தாமாச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகில் மறைவிதியிற்கூறுஞ் சதுர்யுகங்களில் மூன்றாவது யுகமாகிய துவாபரயுகத்தில், சோமசூரியாக்கினி என்னுமுக்குலவேந்தருள் சந்திரகுல சிகாமணியாய்விளங்கும் பாண்டுமகாராஜன் புத்திரர்களாகிய பாண்டவர்களும், அவர்கள் தாயாதிகளாகிய துரியோதனாதிகளும்,

இராச்சியபாரத்தைக்குறித்து ஒருவருக்கொருவர் துவேஷமாய் பாரதயுத்தத்திற் காரம்பஞ்செய்து, இருதிறத்தாரும் அநேக சேனைசமூகங்களோடுங்கூடிக் குருக்ஷேத்திரத்தில் அமர்விளைத்தபோது, அவ்வமரில் பத்தாநாட்சண்டையிலே வீஷ்மரும், பதினைந்தாநாட் சண்டையிலே துரோணரும், பதினேழாநாட் சண்டையிலே கர்ணமகாராஜனு மடிந்தபிறகு பதினெட்டாநாள் சல்லியன் முதலிய ரதகஜதுரகபதாதிகளெல்லாமடிந்து துரியோதனனுடனே வீமசேனனானவன் மற்போர்செய்யப்புகுந்து துரியோதனனுடைய தொடைமுறியும்படியாய்க் கதையினாலடித்துக் களத்தில்வீழும்படிசெய்து பாண்டவர்கள் தமது சேனைசமூகங்களுடனே பாடிவீடு போய்ச்சேர்ந்திருக்கையில், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் சாத்தகியுடனே பஞ்சபாண்டவர்களை யழைத்துக்கொண்டு ஓர் வனத்தைநோக்கிப்போகையில், அவ்வனமெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணபகவான் வருகிறதையறிந்து தளிர்த்தும், பூத்தும், காய்த்தும், மகா சிங்காரத்தோடும், விளங்கவும், அவ்வனத்தில் வாசஞ்செய்யப்பட்ட பறவைச்சாதிகள் முதலிய யாவும் தொழுது நிற்கும்படியாய்க் கண்ணனாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் சாத்தகி முதலியவர்களோடும் வேடிக்கையார்த்தமாய் வனவேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கையில, துரியோதனாதியைச்சார்ந்த கிருபர், கிருதவன்மா, அசுவத்தாமா, இம்மூவருங் கவுரவாதிகளது போர்க்களத்திலே தப்பியிருக்கின்றவராதலால், அவர்கள் அன்றிராத்திரிவேளையிற் கடுஞ்சினத்தோடும், அமர்க்களத்தில் தொடைமுறிந்து குற்றுயிரோடு கிடக்குந் துரியோதனனைக்கண்டு சகிக்கப்படாத துன்பங்கொண்டு நிற்கும்போது, அரவக்கொடியோனாகிய துரியன் அவர்களைக்கண்டு தாயைக்கண்ட சேய்போற் பரதவித்துக் கண்ணீராறாய்ப் பெருகும்படியாய்க்கதறி அசுவத்தாமாவைப் பார்த்து, ஐயா ஆரியர் புத்திரராகிய அசுவத்தாமரே, என் செய்வேன், பிராணவேதனைக்கு ஆளானேனென்று கண்ணீருகுத்துச் சொல்லியதைக்கேட்ட அசுவத்தாமா மனம்

பதைத்து; துரியனைநோக்கி, ஐயா, வேந்தே, பாண்டவர்கள் வஞ்சகமாய் உமது உயிர்நிலையைக்கேட்டறிந்து இவ்வாறு உமக்குத் துன்பத்தைக் கொடுத்தமையால் இப்போதேனும் நீர் எனக்குச் சேனைபதி பட்டங்கொடுத்தால் இக்கணத்திற்றானே பாண்டவர்களைந்துபேரையும், அவர்களுடைய இரதகஜதுரகபதாதிகளையும், பருதிமுன் பனிபோல் நாசப்படுத்திவருவேன்; அப்படியான் முடிக்காவிடில் யான்செய்த புண்ணியமனைத்தும் இழந்துவிடக்கடவேனென்று கூறிய உறுதிவார்த்தையைக்கேட்ட அரவகேதனன், வஞ்சகத்தையகற்றுதலனாய், கிருபாச்சாரியரைப்பார்த்து, ஐயா, நீரிந்த குரு குமாரருக்குப் பட்டங்கட்டுமென்றுசொல்ல, அவரும் அதுபோல் நடத்த, பின்பு அசுவத்தாமா துரியனிடம் விடைபெற்று, கிருபாச்சாரி, கிருதவன்மா, அசுவத்தாமா, இம்மூவரும் பாண்டவர்களிருக்கும் பாடிவீடுநோக்கி அருகேவருகிறபோது, அங்கனங்காவலாகவிருந்த சண்டகோவென்கிற பூதமானது வருபவர்களைக்கண்டு, ஆக்ரமித்து, கோடைக்காலத்திடிபோல கெற்சித்து, அண்டங்களெல்லாம் நடுங்கத்தக்கதாய், ஆரடா வருகிறவனென்று அதட்டி எழுந்தபோது, அவ்வோசையைக்கேட்ட அசுவத்தாமா முதலிய மூவரும், நடுநடுங்கிப்பயந்து நாவறண்டு மெய்சோர்ந்து யாதுந்தோற்றாதவர்களாய் அவணின்றும் ஓட்டமும் நடையுமாய் ஓடிவந்து ஓரிடத்திலிருந்துகொண்டு, அசுவத்தாமரானவர் ஐயோ, நாம் வீணே அரவக்கொடியோனிடத்தில் வீரவார்த்தை பேசிவந்தோமே, என்செய்வோமென்று பலவாறாகச் சிந்தித்து அவ்வனத்தைநோக்கி வருகிறபோது, அவ்விடத்தில் ஓர் பூஞ்சோலையைக்கண்டு, அப்பூஞ்சோலையில் போய்ச்சேர்ந்து, அங்குளதடாகத்தில் மூவருந் தமது கரசரணாதிகளைச் சுத்திசெய்து சந்தியாவந்தன முதலியவைகளை முடித்து நாவறட்சி தீரும்படியாய்த் தண்ணீரருந்தி அக்குளக்கரையிலிருக்குமோர் ஆலவிருட்சத்தடியிற்சேர்ந்து இருக்கிறபோது, பகற்காலங்களிற் சஞ்சரியாநின்ற காக்கைகள் யாவும் இரவு வந்தபோது

அம்மரத்திற்றங்கியிருந்தமையால் அதுகண்ட அவைகளின்
வயிரிகளாகிய கூகைகள் திரளாகக்கூடி நமது பகைவரை
முடிப்பதற்கு இதுதான் சமயமென்று அம்மரத்தைவந்து
சுற்றிக்கொண்டு அதிலுள்ள காகங்களைக்கொத்திச் சின்னபின்
னப்படுத்துகையில், அக்காகங்கள் இரவுகாலங்களிற் கண்தெ
ரியாதிருக்குஞ் ஜெந்துக்களாதலால் பறந்து ஓடிப்போவதற்
குஞ் சக்தியில்லாதவைகளாய் அக்கூகைகளினுற் சிரங்களறுந்
தும் செட்டைகள் முறிந்தும் உடற்பிளவுண்டும் கால்கள்
தறிந்தும் காலகதியைச் சிந்தித்தவைகளாய்க்கதறி நிலத்தில்
விழுகையில், அக்கொடுஞ் செய்கைகளைக்கண்டிருந்த குருபுத்
திரராகிய அசுவத்தாமா முதலிய மூவரும் நித்திரைமைகொ
ண்டு வெகுநேரம்வரையில் விழித்திருந்து நித்திரை வந்தமை
யினுற் கிருபாச்சாரியருங் கிருதவன்மாவுஞ் சற்றே கண்ணு
றக்கங்கொண்டபோது, மரத்தின்மீதிருந்து விழும்படியாகிய
காக்கைகளினது செட்டைகளையுஞ் சிரங்களையுங்கண்ட அசு
வத்தாமா தனது மனத்திலோர் எண்ணங்கொண்டு, நித்திரை
செய்பவர்களை எழுப்பிக்கூறுவார், ஐயா கிருபாச்சாரியரே,
பார்த்தீரா, இக்கூகைகள் தங்களுக்கு வயிரிகளாயிருக்குங்
காக்கைகளை இராக்காலங்களில் வந்துவளைத்துச் சின்னபின்
னமாய் எப்படி சங்காரஞ் செய்துபோட்டதோ அதுபோல
நாமுமிந்நமது பகைவராகிய பாண்டவர்களது பாடிவீட்டில்
இவ்விருட்டுவேளையிற்றானே பிரவேசித்து சகலரையுங்கொ
ன்று நிர்மூலப்படுத்திவருவோம் வாருங்களென்று அழைக்
கையில், அதுகண்ட கிருபாச்சாரியரும், கிருதவன்மாவும்,
அசுவத்தாமாவைப்பார்த்துக் கூறுவார்கள். வாருமையா அசு
வத்தாமரே, தருமமேஜெயமென்று படித்து நித்திரைசெய்யப்
பட்டபேர்களை வஞ்சித்துக் கொல்லுகிறது தருமமல்லவே,
சுத்தவீரரா யிருக்கப்பட்டவர்கள் தங்களுடைய எதிரிகள்
சயின்யத்தோடேயிருக்கையில் எதிர்த்து யுத்தஞ்செய்து வெற்
றிபெறுவார்களேயன்றி நித்திரைவேளையிற் கபடமாய்க்கொல்
லமாட்டார்களே, ஆதலால் நீர் சொல்லுகிறது சரியல்லவே

ன்றுசொல்ல, அதற்கு குருபுத்திரர் கூறுவார், வாருங்கள்
ரதிகாரே, நீங்கள் சொல்லுங்காரியம் நன்றாயிருக்கின்றது;
பாண்டவர்கள் குருக்ஷேத்திரமாகிய யுத்தபூமியில் அமர்
புரிந்ததெல்லாம், ஞாயப்படிதானே புரிந்தார்கள், அவர்கள்
செய்ததெல்லாஞ் சூதென்று தெரிந்திருந்தும், இப்படிச்
சொல்லுவது சரியோ, மேலும் எனது தந்தையாகிய துரோ
ணாசாரியாரை பாண்டவர்கள் கபடமாய் நான் ஜீவித்திருக்
கையிற்றானே யுத்தகளத்தி லிறந்துபோனனென்று தருமரு
டைய வாக்கினாலே சொல்லும்படிக் கற்பனை யேற்படுத்தி
அவரைப்புத்ரசோபத்தால் மயங்கி வில்லையெறிந்து நிராயுத
ராய் நிற்கும்போது அஸ்திரப்பிரயோகஞ் செய்யச்செய்து
கொன்றுபோட்டது தருமந்தானே, சொல்லுங்கள், இதல்லா
மலும், வீஷ்மாச்சாரியாரைப் பத்தாநாட் சண்டையிலே
பாட்டனென்றுங் குருவென்றும்பாராமல் அர்ச்சுனன் முத
லிய யாவருமெதிர்த்து வளைத்துக்கொண்டு சிகண்டியினாலே
கொல்லும்படியாய்ச் செய்வித்ததும் ஞாயந்தானே, பதினேழா
நாட்சண்டையிலே சயிந்தவனைக் கொல்லவேண்டி ஸ்ரீ கிரு
ஷ்ணமூர்த்தியானவர் அஸ்தமானமாகும் போதுபோற்றே
ன்றுநிமித்தந் தனது திகிரியை விடுத்து மறைத்து வெளிப்
படும்படியாய்ச்செய்து வில்லெடுக்காம னிராயுதனாய் நின்ற
வனை அர்ச்சுனனால் அஸ்திரப்பிரயோகஞ் செய்யச்செய்து
கொல்லுவித்ததும் ஞாயந்தானே, சொல்லுங்கள், இவைக
ளும் போதாமல் நமது இறைவனாகிய துரியோதனனை ஏகா
ங்கியாகவிருக்கின்றானென்றும், யோசியாமல் கபடமாய் ஸ்ரீ
கிருஷ்ணபகவானால் அவனுடைய உயிர்நிலையை சயிக்கினை
செய்து காட்டக்கண்டு வீமனானவன் தொடை இரண்டு முறி
யும்படியாய் அடித்துக் கிடத்திவிட்டது என்ன ஞாயம், அத
லால் இக்காரியங்களையெல்லாஞ் செவ்வையா யோசித்துப்பா
ராமல் கூறியவிதமெப்படி யிருக்கின்றதென்று அசுவத்தாமா
கேட்க, அதற்கு கிருபாசாரியர் சொல்லுவார், ஐயா அசுவத்
தாமரே, நீர் சொன்ன காரியங்களெல்லாம் உண்மையாயிருக்

தபோதினும், அவைகளெல்லாம் ரணரங்கபூமியில் எதிரியின் முன்பாக நடத்திய காரியங்களேயன்றி, ஒன்றுவது எதிரிகளுக்குத் தெரியாமல் அவர்கள் நடத்தவில்லையே, நீர் இராக்காலத்திலே பாசறையிற்படுத்து நித்திரை செய்யப்பட்டவர்களை கபடமாகக் கூகைகள் காக்கைகளை வஞ்சித்து நாசப்படுத்தியதுபோல நடத்தவேண்டுமென்று எண்ணங்கொண்டது நன்மையல்லவே, அப்பால் உம்முடைய இஷ்டமென்று கிருபாசாரியர் சொல்லியதைக்கேட்ட அசுவத்தாமா கோபாவேசங்கொண்டவனாய் எழுந்திருந்து, அங்குளபொய்கையில் ஸ்நானஞ்செய்து, நியமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு ஸ்ரீ கயிலாசபதியாகிய உமாமகேசனைநோக்கித்தியானஞ்செய்து மிருத்யுஞ்ஜெயமந்திரத்தை ஜெபிக்கையில், சந்திரஜடாதர மூர்த்தியினருளால் ஓர் மந்திரவாள் ஆகாசவீதியிலிருந்து இறங்கி, அசுவத்தாமாவினது கண்முன் தோன்ற, உடனே அவ்வாளைக் காத்திலேந்திக்கொண்டவராய் பாண்டவரிருக்கும் பாசறையைநோக்கி நடக்கையில், கிருதவன்மனும், கிருபாசாரியரும் கண்டெழுந்திருந்து பின்தொடரும்போது, அசுவத்தாமர் பாடிவீட்டின் வாயிலிற்போய்நின்று, கிருதவன்மாவையும், கிருபாச்சாரியரையும், அவ்வாயிலிற்றனே நிறுத்திவிட்டு, தனதுகரத்தி லொளிராநின்ற மந்திரவாளை வீசும்போது, அப்பாடிவீட்டைக்காத்திருந்த பூதமானது கண்டு திகைத்து அம்மந்திரவாளினுடைய வலிமையறிந்து, மெய்நடுங்கிப்பயந்து ஓடிப்போய்விட்டது, அதுகண்ட அசுவத்தாமர்பாசறைக்குட் பிரவேசித்து, பாண்டவர்களை நான்குபுறமும் பார்த்துத் தேடும்போது, துஷ்டத்துய்மனும், பாஞ்சாலதேசத்தரசனும், படைவீரரும் நித்திரைசெய்திருக்க, அவர்களைக்கண்ட அசுவத்தாமர், பாஞ்சாலதேசத்தரசனைக் காலினுலெட்டி யுதைத்தான். அப்படி யுதைத்தவுடனே நித்திரையிலிருக்கும் பாஞ்சாலத்திறைவனாகிய துருபதராஜன் திடுக்கென்றலறி எழுந்து குருபுத்திரனைக்கண்டு ஆயுதத்தப்படுமுன்னமே, அவனுடைய சிகையைப்

பற்றியிழுத்து பூமியிற்றள்ளி, தனது இரண்டு கால்களினும் புரட்டிப்புரட்டியுதைத்து பூமியோடு பூமியாய்த் தேய்த்துவிடுகையில், அவனுக்கருகேபடுத்து நித்திரை செய்துகொண்டிருந்த துஷ்டத்துய்மன் விழித்துத் தலையைத்தூக்கிப்பார்த்துக் கிளம்பும்போது, அசுவத்தாமா தனதுகரத்தினிடமாயிருந்த வில் நாணை அவன் கழுத்தில்மாட்டி இறுக்கி துஷ்டத்துய்மனை விழி பிதுங்கும்படியாய்ச்செய்து, ஒளிய வாளினாலே அவன் தலையையறுத்தெறிந்து, அட்டகாசஞ்செய்தவனாய், பின்னும், அப்படைவீட்டுக்குட் பிரவேசித்து, நித்திரை செய்துகொண்டிருக்கும் ரதிகளையெல்லாம் படுத்தபடுக்கையிற்றனே வாளினால் தலைவேறு உடல்வேறு செய்து, பின்பு பாஞ்சாலியின் புத்திரராகிய உதாமன்னியன் முதல் ஐந்துபேர்களையும், பாண்டவர்களென்று நினைந்து மந்திரவாளினாலே அவர்கள் தலையையறுத்து, ஐந்து தலைகளையும் கையினாற்றூக்கிப் பார்க்கிறபோது, பாஞ்சாலியினிடம் ஐவருக்கும் பிறந்தபிள்ளைகள் வேற்றுமையில்லாமல் பாண்டவர்களைப்போலவே உருவமும் நிறமும் பொருந்தியிருந்ததனால் அசுவத்தாமருக்கு வேற்றுமை தோற்றாமல் பாண்டவர்களென்றே நினைந்து இத்தலைகளைக் கொண்டுபோய் துரியனுக்குக் காட்டவேண்டுமென்று, எண்ணங்கொண்டவனாய், அப்பாசறையைவிட்டு நீங்கி வருகையில், அசுவத்தாமரால் கலக்கப்பட்டு பயந்து ஓடிவருகின்ற படைகளையெல்லாம், வாயில் காத்துக்கொண்டிருக்கும் கிருதவன்மனுங் கிருபாசாரியருங் கண்டுபிடித்துச் சிரங்களை உடைவாளினால் வெட்டியுருட்டிச் சர்வசங்காரமூர்த்தியைப்போல் சந்தோஷங்கொண்டிருக்க, அவர்களுடனே அசுவத்தாமருங் கலந்து, மூவருமாய் துரியோதனன் வீழ்ந்திருக்கும் யுத்தபூமியை நோக்கி நடக்கிறபோது, நாம் நல்லகாரியம் யோசித்தோம், பாண்டவர் பூண்டு இன்றோடே அற்றதென்று மனக்களிப்போடும் பேசிப் படுகளத்தைச்சேர்ந்து, அரவக்கொடியோனாகிய துரியோதனன் முன்னிலையில், அசுவத்தாமானவர் உப பாண்ட

வாளாகிய ஐவரது தலையையும்வைத்து, ஐயா துரியோதன
மகாராஜனே, நான் சொல்லியவண்ணம் பகைவரை முடித்து
இதோ இவருடைய சிரங்களையுங் கொண்டுவந்தேன் பாரு
மென்றுசொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட அரவக்கொடி
யோன்மனமகிழ்ச்சியடைந்தவனாய், இராப்போதைப்போக்கி,
அருணோதய மானவுடனே மிக அபேட்சையோடும், ஐவர்
சிரத்தையும் பார்க்கிறபோது, உபபாண்டவரென்றறிந்து,
அடாபாவிகாள், அந்தோ என்னுக்குத்தண்ணீர் இறைப்பதற்கும்
கூடப் பிள்ளைகளில்லாமற் செய்துவிட்டீர்களேயென்று மகா
வியசனத்தோடே துரியோதனனானவன் மரணத்தையடைந்
தான். அவ்வேதனையைக்கண்ட அசுவத்தாமர், கிருபாசாரி
யர், கிருதவன்மா, இம்மூவரும் நாம் பட்டபாடெல்லாம்
பாழாய்விட்டதே என்று பெருந்துன்பத்தை யடைந்தவர்க
ளாய், வனத்தைநோக்கித் தவத்துக்குப் போய்விட்டார்கள்.
அப்படிப்போனவர்களில், அசுவத்தாமாவானவர் சிசுவதை
பண்ணியிருப்பதனாலே மனதிலே பிரமையடைந்து, துக்க
சாகரத்தின்மூழ்கி, தண்டகாரணியத்திற் போகிறபோது, அவ்
வனத்திலே தவஞ்செய்துகொண்டிருந்த பெரியோர்கள், அசு
வத்தாமாவைக்கண்டு, அடாபாவி, நீ சிசுவதைசெய்த சண்
டாளனாதலால், எங்கள் முகத்தில் விழிக்கவுங்கூடாதே,
தூரப்போவென்றுசொல்ல, அதுகேட்ட அசுவத்தாமர் துக்
கமுற்று, அவ்விடம்நீங்கிக் காசிபட்டணத்தைச்சேர்ந்து,
அப்பட்டணத்து வீதியில் வருகிறபோது, அங்குள்ள பெரி
யோர் பிராம்மணரியாவரும் அசுவத்தாமாவைக் கண்டு,
அடா சண்டாளா, உனக்கெதிர்ப்பட்ட நாங்கள் பகீரதியில்
மூழ்கித்தவஞ்செய்து இக்கொடும்பாவத்தைத் தொலைக்கவே
ண்டுமேயென்று பாதவித்துக் கங்கைக்குப்போய் மூழ்கு
வதையெல்லாம் அசுவத்தாமர்கண்டு சகிக்கப்படாத துன்பத்
தையடைந்தவராய், அப்பட்டணத்தில் வாசஞ்செய்து, அதன்
மருங்குள்ளவனத்திற் பன்னசாலைபுகுந்து, அதில்வாசமாயிரு
க்கும் வியாசமகாரிஷியைக்கண்டு வணங்கித்தோத்திரஞ்செய்

கையில், வேதவியாசர் அசுவத்தாமரைப் பார்த்துக்கூறுவார்,
ஓ அசுவத்தாமனே, நீயிங்கு வருவதற்குக் காரணமியாது,
அந்தோ இராக்காலத்திற் பாண்டவர்களில்லாத பாசறையில்
நித்திரைசெய்துகொண்டிருந்தாரிகளையெல்லாம் அநீதமாய்க்
கொன்றதுமன்றியில், உபபாண்டவர்களாகிய சிசுக்களையும்
யோசியாமற்கொன்ற பாவியாதலால் உன்னோடு வார்த்தையா
டினாலும், உன்னைக்கண்டாலும், அந்த தோஷமானது நம்
போலியர்களுக்குஞ் சித்தமாய்க்கிடைக்குமாதலால் நீ நமது
ஆசிரமத்தைவிட்டு அகலப்போவாயென்று கடுஞ்சினத்தோ
டுங்கூறியதைக்கேட்ட அசுவத்தாமர் மனந்திடுக்கிட்டுப் பய
ந்து, உடம்பெல்லாம்வியர்த்து, ஒன்றுந்தோற்றாதவராய், வேத
வியாசனைப்பார்த்துச் சொல்லுவார், சுவாமி, கொடும்பாவியா
கியயான்தேவரீருடைய ஆசிரமத்தைநாடிச் சரணாகதியடைந்
தும், அங்கிகரியாமற்றள்ளிவிட்டால், என்னைக்கண்ட யாவ
ரும் நிந்திப்பார்களே, பிறகுயானடையுங்கதியாது மேலும்
தேவரீர் என்னை நீக்கிவிடுங்காலத்தில் சகல நீதிகளும் நீங்கிப்
போய்விடும், பசுக்கள் தத்தம் கன்றுகளைத்தேடா, சமுத்திர
முங்கட்டுக்குட்படாது, பறவைச்சாதிகளும் ஆகாயத்திற் சஞ்
சரியாதே, ஆனதால் சகலரும் நிந்திக்கும்படியாகிய இழி
வைத்தாங்கின்ற எனது வினையைப்போக்கி ஆட்கொள்ளா
மல், தேவரீரே இப்படி கோபித்தால், பாதகனாகியயான் என்
செய்வேன், எவ்வாறுய்வேனென்றுயாதொரு பற்றுமில்லாத
வனாய் அநேகவிதத்திற் றோத்திரஞ் செய்யும்போது, வே
தவியாசர் கருணைசுரந்து கூறுவார், வாரும் அசுவத்தாம
ரே, நீர் பிரமகுலத்திற்பிறந்தும் க்ஷத்திரிய தர்மவிர்த்தியிற்
பிரவேசமாய், மறுநீதிபுரண்டு யோசியாமல் படைமுகத்தை
யறியாத பாலர்களைப் பாண்டவர்களென்று எண்ணிப்பொரு
மையினாற்செய்த சிசுஹத்தியானது உன்னைவிட்டு நீங்கமாட்
டாதாயினும், நீ நம்மைவணங்கி யாதுங்கதியில்லையென்று
கூறியதனாலே நாம் அருள்செய்யலாயிற்று, யாதெனில், நெடி
யகடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் ஒங்கும், பாதகண்ட தெட்

சணபாகத்தில் கந்தமாதனகிரிச்சார்பில் சேதுரூபமாய் ராமதநுக்கோடி என்னும் பெயர்பூண்டிலங்குந் தீர்த்தத்தில் யாரொருவர் தீர்த்தமாடுகின்றார்களோ அவர்களை பூலோகமெல்லாந் துதிக்கும்படியாகிய கீர்த்தி அமைவதோடும் கொடும் பாதகங்களெல்லாம் விலகி மெத்தவும் புண்ணியசாலிகளாய்ச் செய்வதுமன்றியில், இராஜநீதியாலுற்ற துன்பங்களையும் அஞ்ஞானத்தையும்போக்கி மனதைச் சொற்காதிபுண்ணியலோகத்தை அடையும் எதுயாதோ அவற்றிற் சேர்த்து ஆனந்தத்தையும் சுயம்பிரகாசத்தையறியும்படியான விவேகத்தையும் தேவர்கள் புகழும்படியான மேன்மையையும், சாந்திமுதலிய தவநெறியையும்காட்டி, மநுமாந்தாதிகளிறந்தாலும் இறவாமலிருக்கும்படியாகிய சிரஞ்சீவி பட்டத்தைக்கொடுத்து வெற்றியைப் பொருந்தச்செய்யுமாதலால், அதன்மகிமையை ஒருவராலுஞ் சொல்லமுடியாது; அதெப்படியெனில், வாசாமகோசரமான சுயஞ்சொரூபமாய்விளங்கிக்கொண்டிருப்பதால் யாவருக்கும் அரிதேயாம்; ஆனபடியினாலே நீ அந்தராமதநுக்கோடியிலே ஒருமாதகாலம் வரையிற்போயிருந்து அதில்தீர்த்தமாடிவந்தால், நித்திரையிற் சிசுஹத்திசெய்த தோஷம் உன்னைவிட்டு நீங்குமென்று வேதவியாசமகாரிஷியானவர்சொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட அசுவத்தாமர்சந்தோஷமடைந்து வேதவியாசரை வணங்கிவிடைபெற்று, அவ்விடமிருந்து நீங்கித் தென்றிசையைநோக்கி நடந்து, சேதுவைச்சேர்ந்துதரிசித்து, வியாசபகவான் கூறியவண்ணம் முப்பதுநாள்வரையில் தநுக்கோடியிற் சங்கற்பவிதியின்படி நியமநிட்டையோடுதீர்த்தமாடி, ஸ்ரீராமசந்திரனாலே பூசித்துவணங்கப்பட்ட இராமலிங்கத்தை முப்பதுநாளுந் திரிகாலமும் பூசித்துவணங்கித் தோத்திரஞ்செய்து, தனதுஇருகண்களினின்றும் ஆனந்தபாஷ்பந் தாரைதாரையாய்ச்சிந்த உருகிக்கரைந்து சிவபெருமானைப்பணிந்து, நிற்கிறபோது, சிவபெருமானாகிய இராமநாதன்கருணைகூர்ந்து, முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், சப்தரிஷிகள், அஷ்டவசுக்கள்,

கருடகாந்தருவ சித்தவித்யாதரருரக ராகாயவாசிகள், போகபூமியர், நந்திதேவர், பிருங்கிமுதலிய சிவகணங்களெல்லாம்புடைசூழும்படியாய் உமாமகேசுவரியோடும்வெள்விடையின் மீதெழுந்தருளிக் ககனத்தின்கண் அசுவத்தாமாவுக்கு தரிசனமாகும்படியாய் ஆகாயவீதியிலே நிற்கிறபோது, அசுவத்தாமா கண்டு, பிரமானந்தங்கொண்டு, ஆனந்தக்கடலுட்டோய்ந்தவராய், உரைகுளறி, உடலம்வியர்க்கவும், மயிர்க்குச்செறியவும் சிரத்தின்மேற் றனதிருகரங்களையுங் கூப்பித் தோத்திரஞ்செய்கையில், சந்திரஜடாதரமூர்த்தியாகிய பரமசிவன் திருவுளங்கனிந்து, வாராய் அசுவத்தாமனே, நீஇராக்காலத்தில் நித்திரைசெய்துகொண்டிருந்த சிசுக்களை யோசியாமல் வதஞ்செய்ததோஷமானது இந்தராமதநுக்கோடியில் வியாசன் வாக்கியப்படி வந்துதீர்த்தமாடி நம்மைப்பூசித்துவந்தமையாற் பருதிமுன்பனிபோல விலகிப்போய்விட்டது, இனி உன்னிடத்தில்யாதொருபாதகமு மில்லையாதலால், உனக்கு வேண்டியவரமியாதோ அதனைக்கேளென்றுசொல்ல, அப்போது அசுவத்தாமரும், சுவாமி, வேத வேதாந்தமூர்த்தியே, அடியேன் தேவரீருடைய பாதபத்மங்களை எப்போது தரிசித்தேனோ அப்போதே எனது கருமங்களெல்லாம் விமோசனமானதன்றியில் சகலபாக்கியங்களையும் புண்ணியங்களையும்பெற்று முத்தியுங் கைகூடியதாயினும், சிறியேன் இனி இறவாமலுஞ் ஜெனனமெடாமலும், என்றுஞ் சிரஞ்சீவியாக இருக்கும்படியாயும், இடைவிடாமல் தேவரீருடைய பாதகமலங்களைப் பணிந்துகொண்டிருக்கும்படியாயும் அருள்செய்யவேண்டுமென்று அசுவத்தாமா கேட்க, அவ்வாறே சிவபெருமான் கட்டளையிட்டுக் கயிலாசத்துக் கெழுந்தருளினர்; அதுகண்ட அசுவத்தாமா பணிந்து, அவ்விடம்விட்டுப் பிரயாணப்பட்டுச் சகலபுண்ணியக்ஷேத்திரங்களையுந் தலங்களையுந் தரிசித்துக்கொண்டு வருகிறவழியில், அநேகம் பெரியோர்கள் பிராமணர்கள் யாவருங்கண்டுவணங்கி, உபசரிக்க, அசுவத்தாமாவானவர் அநேகரிஷி யாசிரமங்களுக்குச்சென்று அவர்களது ஆசிகளைப்பெற்று சுகஜீவியாய் வா

ழ்ந்திருந்தாரென்று சூதமுனிவர்சொல்ல, நைமிசாரண்ய முனிவர்கள் சந்தோஷமடைந்து, முனிவரைநோக்கி, சுவாமி, இன்னம் அந்ததநுக்கோடியில் யாரார்வந்து தீர்த்தமாடி முத்திபெற்றனரோ அவர்களைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்றுகேட்க, சூதமுனிவர் சந்தோஷங்கொண்டு சொல்லத்தொடங்கினர்.

அசுவத்தாமா சருக்கம்

முற்றுப்பெற்றது.

தருமகுத்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் ஓங்கும், முக்குலத்தரசருள் சந்திரகுலத்திலுற்பவித்த தருமகுத்தனென்னு பெயர்வாய்ந்த ஓரரசன், நீதிவழுவாமற் குடிகளிடத்தில் ஆயிலோர்கடமைபெற்று, மாதமும்மாரிபெய்து வரவும், மன்னர்கள் வணங்கிக் கப்பங்கட்டிவரவும், சிவாலய விஷ்ணுவாலயங்களுக்கு, அறுகாலபூசைகளும், பிரம்மோற்சவ நித்யோற்சவங்களுங் குறைவின்றி நடந்துவரவும், யாகாதி கிர்த்தியங்கள் செய்து, சதாகாலமும் தேவர்களுக்கவிர்ப்பாகங்கொடுத்துவரவும், மறைவிதியிற்புகலும், முப்பத்திரண்டறங்களையுங்குறைவின்றி நடாத்தி இரதகஜதுரகபதாதிகள் சூழும்படியாய் ஒன்னலருக்கிளையாது, உக்கிரவீர கேசரியைப்போல அசையாமணிகட்டி, அதிநூகிகளாகிய மந்திரிகளோடும், ஏகசக்ராதிபதியாய் தனது தேசத்தில் துற்செய்கைகளைக் கனவினுங்கருதாமலிருக்கும்படியாய் அரசுபுரிந்து வரும்படியாகிய நாளில், ஓர்நாள் வனவேட்டமாடக்கருதி, வேட்டமாடுங்கோலம்பூண்டு, குதிரையின்மீதேறிப் பதியைக்கடந்து வனத்தைநோக்கிவருகிறபோது, அவ்வனமானது சண்பகம், மந்தாரம், கோங்கு, புன்னை, தேவதாரி, பாரிஜாதம், அகில், சந்த

னம், கூவிளம், ஆத்தி, பலா முதலிய விருட்சங்களாற் செறிந்து படர்ந்து தளிர்த்தும், பூத்தும், காய்த்தும், பழுத்தும், அவற்றினின்றும் பெருகி அருவிபோற்பாயாநின்ற தேன்களை வண்டுகள் அருந்தி, ரீங்காரஞ்செய்யவும், பட்சிகள் களகளவென்று சப்தித்துச் சந்தோஷமடைந் துலாவவும், மான், மரை, கலை, கவரி, பன்றி, முட்பன்றி, கடம்பை, காடி; புலி, செந்நாய், காட்டெருமை, யானை, சிங்கமுதலிய விலங்கினங்களுக்குத் தாயகம்போலிலகாகின்ற வனத்தில், விலங்கினங்கள் ஒன்றுக்கொன்று விளையாடி, ஆரவாரஞ் செய்யுமோசையும், மயில்கள் முகிலினங்களைக்கண்டு சந்தோஷங்கொண்டு, தோகைகளைவிரித்து நடிக்கும்படியாகிய உன்னதங்களும், குயில்களினது இன்னோசையும், காடைகவுதாரிகளின் ஓசையும், கொக்குகள், பூஞ்சிட்டுகள், பந்திபந்தியாய்மரங்களில் ஊசலாடி ஒலிசெய்யவும், அங்கங்கு பன்னசாலைகள்புகுந்து பயமற்றிற் பெரியோர்கள், தபசிகள், முனிசிரேஷ்டர்கள், ஓமகுண்டங்களேற்படுத்தி வேள்வி செய்து, வேதபுராணங்கள் செய்யும் மறை முழக்கங்களும், புராணகாலக்ஷேபங்களுங்கூடி, வைபவத்துடனே விளங்கப்பட்ட வனத்திலே, தருமகுத்தன் வேட்டையாடி, அநேகஞ்செந்துக்களை வதைசெய்து திரிகிறபோது; சூரியன் அஸ்தமனத்தையடைய, அவ்வேளையில் தருமகுத்தராஜன், அவ்வனத்தினுள்ள ஓர் தடாகக்கரையிற்சேர்ந்து, கரசரணாதிகளைச் சுத்திசெய்து, சந்தியாவந்தனமுதலிய நியமநிட்டைகளை முடித்துக்கொண்டு, எங்கும் இருள் செறிந்தமையால், தனது பட்டணம்போய்ச்சேருவதற்குக் கூடாமையென்றறிந்தவனாய், அங்குள்ள விருட்சங்களில் மிகப்பருத்தும், ஆகாயத்தையளாவியுயர்ந்துந் தளிர்த்துமிராநின்ற, ஓர் விருட்சத்தைக்கண்டு, அதன்மீதேறி, விசாலமாயிருக்கும்படியாகிய ஓர் கிளையில் உட்கார்ந்து, கனிவர்க்கங்களை யருந்திக்கொண்டிருக்கையில், ஓர் காடியைச் சிங்கமானது கண்டு, மகா கோபத்தோடுமதனைக் கொல்லவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு துரத்

திக்கொண்டுவருகிறபோது அக்காடியானது, பயந்து நடுங்கி ஏங்கி யிளைத்து, ஓட்டமும் நடையுமாக ஓடிவந்து தருமகுத்தனிருக்கும் விருக்ஷத்தைப்பற்றி ஏறி, அங்குள்ள வேந்தனைக்கண்டு கூறுகின்றது, வாராய் மகாராஜனே, இவ்வனத்தில் எங்களுக்கெல்லாம் அரசனாயிருக்குஞ் சிங்கமானது, என்னைக்கொன்று பட்சிக்கவேண்டித் துரத்தினமையால், யான் பிராணபீதிகொண்டு ஓடிவந்து, இம்மரத்திலேறிக்கொண்டேன், அச்சிங்கமும் மரத்தடியில் வந்திருக்கின்றது, என்னைக்கண்டு நீ பயந்து நிலத்திற்குதிப்பாயாகில், சிங்கத்தினால் ஒருவேளை உனக்குத் துன்பம் நேரிடுமாதலால், இன்றிராப்போது நாமிருவரும் இம்மரத்தின்மீதிருந்து, காலத்தைப் போக்குவோமென்றுசொல்ல, அம்மொழியைக்கேட்ட வேந்தன் சந்தோஷமடைந்து, அப்படியேயாகட்டுமென்று சம்மதிப்பட்டிருக்கும்போது, வேந்தனுக்குக் கிஞ்சித்து நித்திரையுண்டாகி, திடுக்கென்று விழித்து, தேகம் நடுக்குற்றமையால், அதனைக் காடியானது அறிந்து, அரசனைப்பார்த்து, ஐயா அரசே, நீரிப்படி நித்திரைகொண்டு தப்பி விழுந்துவிட்டால், மரத்தடியில் இருக்கின்ற சிங்கமானது, உம்மைக் கொன்றுவிடும். ஆனபடியினாலே, என் மடியிலாவது படுத்துக்கொண்டு நித்திரைசெய்வீராகில், நான் அதி ஜாக்கிரதையாய் நித்திரைசெய்யாமல், பாதுகாக்கின்றேன், பின்பு உமக்கு நித்திரைதெளிந்தால், நான் சற்றுநேரம் நித்திரை செய்கின்றேன், நீர் அதுவரையில் விழித்திருந்து, என்னைக்காப்பாற்றுமென்றுசொல்ல, அதுகேட்ட வேந்தன், அப்படியே சம்மதித்தபடியால், காடியானது இராஜனைத் தன்மடியிலே படுத்துக்கொள்ளச்சொல்லித் தனது கரங்களாற்றட்டிக்கொடுத்து, அரசனை நித்திரை பண்ணும்படியாய்ச்செய்து, தான் மகா ஜாக்ரதையோடும், விழித்துக்கொண்டிருந்து பாதுகாத்துவரும்போது, கண்ட சிங்கமானது, காடியைப் பார்த்துச் சொல்லுகின்றது, வாராய் காடியே. உனது அவலமதிக்கு என்ன சொல்லுவேன், ஐயோ என்னைப்போன்ற பராக்கிரமர்

களையெல்லாம், வேட்டையாடிக்கொன்று ஜெயங்கொண்டிருக்கும்படியாகிய வேந்தனை அறியாமல், பேதைமதியால் மடியின்மீது வளர்த்திக்கொண்டு காத்துவருகின்றாயே, அவன் நித்திரை விழித்தவுடனே, உன்னை வாளினால்வெட்டி எறியப்போகின்றான், ஆதலால் அவனை நீ நம்புவது சரியல்ல, மேலும் எத்தனைநாள் நீ இம்மரத்தின்மீதிருந்தபோதினும், யான் உன்னைக்கொல்லாமல் விடப்போகிறதில்லை, உன்னுயிர் தப்பித்துக்கொள்ளவேண்டுமாயின், உன் மடியில்படுத்து நித்திரைசெய்யப்பட்ட வேந்தனை கீழேதள்ளிவிட்டால், நான் எடுத்துக்கொண்டுபோய்விடுகிறேன். நீயும் உயிர்தப்பி வாழ்வாயென்று, சிங்கமானது சொல்ல, அதைக்கேட்ட காடியானது, சிங்கத்தைப்பார்த்து, ஐயா எங்களிறைவனே, நீர் காட்டில் வாசஞ்செய்யும் என்னைப்போன்ற விலங்கினங்களுக்கெல்லாம், அரசனாயிருந்தும், இதுபாவம், இதுபுண்ணியமென்று யோசியாமல், கொடும்பாதகமாகிய, வார்த்தையைப் புகன்றீரே, இது நீதியோ, ஐயோ நம்பினபேரைக் கொலைசெய்வது நலமல்லவே, இரவுரவாதி நரகத்துக்கேதுவாகுமே, அப்படி நரகப்பிராப்தியாவதன்றியிலும், அத்துன்பமானது, அநேகங்கோடியாகாதி கிருத்தியங்கள் செய்தாலுமகலாதே, ஆதலால், இவ்வனத்திலே சஞ்சரிக்கப்பட்ட பெரியோர்கள் சொல்லியவண்ணம், பிரமஹத்தி முதலிய பாவங்களையெல்லாம் போக்குவதற்குப் பரிகாரஞ்சொல்லியிருக்கின்றார்கள், அடைக்கலம் புகுந்தவர்களை, அவலப்படுத்தியவர்கள், அடையுந் துன்பத்திற்குமாத்திரம் பரிகாரஞ் சொல்லவில்லையே, ஏனெனில், அவ்வாறு அவலப்படுத்திய பாதகமானது, மேருவுக்கும் பெரிதாய் அளவுபடாததாதலால், நீரதை வாயினாற் சொல்லுவதற்கு எப்படி உமது மனந்துணிந்ததோ அறியேன், ஆ, கெடுமதியையுடைய மிருகராஜனே, என்று, அதற்கு விடைகொடுத்திருக்கும்போது, அச்சமயத்தில், தருமகுத்தனென்னும் ராஜன், நித்திரை நீங்கி எழுந்து, காடியைப் பார்த்து, வாராய் என் மனதுக்கிசைந்த காடியே, இனி நீ

என் மடியிற்படுத்து, நித்திரை செய்யென்றுசொல்ல, கரடியும் அவ்வாறே, அரசன் மடியிற்படுத்து நித்திரைசெய்யும்போது, மரத்தடியிலிருந்த சிங்கமானது, வேந்தனைப்பார்த்து, வாராய் வேந்தே, இக்கரடியை நீ காப்பாற்றுவதனாலே, உனக்குண்டாகும் பிரயோசனமென்ன, ஐயோ உலகாதிபனாகவிருந்துங் காட்டிற்சஞ்சரியாநின்ற, துஷ்டமிருகங்களுக்கிடங்கொடுக்கலாமோ; இப்போது அக்கரடிக்கு நித்திரைகலைந்தவுடனே, உம்மைக்கொன்று பட்சிக்கப்போகின்றது, இதை நீர் உண்மையாய் நம்பும், மேலும், நீர் எத்தனைநாள் இம்மரத்தின்மீதிருந்தபோதிலும், உங்களிருவரையும், நான் கொன்று பட்சணஞ் செய்யாமல் விடப்போகிறதில்லை, ஆதலால் நீ பிழைக்கவேண்டுமாயின் யான் சொல்லுவதைக்கேள், அதாயாதெனில், இப்போது உமது மடியின்மீது நித்திரைசெய்யுங்கரடியைக் கீழேதள்ளிவிட்டால், யான் அதைக்கொன்று, பட்சணஞ் செய்துவிட்டுப் போய்விடுகிறேன். பிறகு நீர் உமது பட்டணம்போய்ச்சேர்ந்து, சுகஜீவியாய் வாழ்ந்துகொண்டிருக்கலாமென்று சொல்ல, அதைக்கேட்ட தருமகுத்தன் மேல்வரும் வினையை நிதானித்து யோசியாமல், சிங்கத்தினது வார்த்தையைச் சரியென்றெண்ணித் தனது மடியிற்படுத்து நித்திரை செய்துகொண்டிருக்குங் குற்றமற்ற கரடியைப்பிடித்துக் கீழே தள்ள, கரடியானது திடுக்கென்று விழித்துக் கீழேவிழுஞ்சமயத்தில், கால்களையும், கைகளையும் விரித்துப், பிராணபீதியோடும், முன்செய்த புண்ணியத்தால், நிலத்தில் விழாமல், அம்மரத்தைக் கெட்டியாய்ப்பிடித்துக் கிளையிற்றொற்றிக்கொண்டு, மனதை திடப்படுத்தி பின்பு தருமகுத்தனென்னும் அரசனைப்பார்த்து, புன்சிரிப்புக்கொண்டு, அடா வேந்தனே, என்னமதி படைத்தாய், நம்பினபேரை நழுவவிடுவது ஞாயமல்லவே, துஷ்டர்களுஞ் செய்யாத வேலையல்லவோ செய்தாய், உபகாரஞ்செய்தவர்களுக்கு அபகாரஞ்செய்யலாமோ, ஐயோ என்னைப்போன்ற புல்லறிவையுடைய விலங்கினங்களுக்கும், இந்த எண்ண

மிராதே, நீ நான்செய்த நன்றியை மறந்து, என்னைச்சிங்கத்துக்கிரையாக்கி, நீ உயிர்வாழ நினைத்தனையோ, மடமையோய், உனக்கு நற்கதி யுண்டாகுமோ, அடா பித்தனே, நீ என்னை யாரென்று எண்ணியிருக்கின்றாய், நான் இருக்கு மகாரிஷியின் வர்க்கத்தில் உற்பவித்த சானகாட்டமுநி என்று என்னைச்சொல்லுவார்கள். ஆதலால், நினைத்த வடிவங்கொண்டு, வனங்களிற் சஞ்சரிக்கும் வழக்கமாதலால், இன்று இக்கரடி உருவங்கொண்டு, இவ்வனத்தில் வருகிறபோது, இச்சிங்கமானது கண்டு, என்னைத் துரத்திக்கொண்டு வந்தபடியால், இம்மரத்திலேறி உன்னைக்கண்டேன், நீ என்னை யோசியாது, வஞ்ச மனத்தால், நான் உனக்குச்செய்த நன்றியையுமறந்து, என்னைச் சிங்கத்துக்கிரையாக்க நினைத்தனை, திருகூடமுடைய நீதான் அப்படி செய்தபோதிலும், நெஞ்சத்திற் குடிகொண்டிருக்கும் நீலகண்டமூர்த்தியாகிய, உமாமகேசரும், அப்படி செய்வாரோ, நன்றியற்றவனே, உலகுக்கெல்லாந் தாயகம்போல், ஜீவகாருண்யம்பொருந்தி, மநுநீதி பிறழாது செங்கோனடாத்திவரும்; நராதிபனென்று நம்பி மடியிற்படுத்து, நித்திரை செய்துகொண்டிருந்த என்னைச் சிங்கத்துக்கிரையாய் வஞ்சித்துத் தள்ளியபடியால், நீ பயித்தியம்பிடித்துக்கேவலனாய் திரியக்கடவையென்று சாபங்கொடுத்து, பின்னர் மரத்தடியிலிருக்குஞ் சிங்கத்தைப்பார்த்துக் கூறும், வாராய் சிங்கமே, நீ உன்னுடைய கதியை அறியாமல், என்னைக்கொன்று பட்சணஞ்செய்ய, ஆவலோடுந்துரத்திவந்தாயன்றோ, அந்தோ, நீ உன்னையாரென்றிருக்கின்றாய், அளகாபுரிக்கிறைவனாகிய, குபேரனுடைய பரம்பரையில் உற்பவித்து, பத்திரனென்னும், நாமம்பூண்டு, உனது தேவியோடும், இமயகிரிச்சாரலிலேயங்கு ஓர்தடாகத்தில், ஜலக்கிரீடைசெய்து விளையாடிக்கொண்டிருக்கும்போது, கவுதம மகாரிஷியானவர், வேள்விக்குரிய சமித்து, தர்ப்பை முதலியவைகளைக் கொய்யும்பொருட்டு, அவண் விஜயஞ்செய்ய, அவரைக்கண்டவுடனே, உன்தேவி நாணமுற்றவளாய்க்கரை

மேறி வஸ்திரமெடுத்துடுத்திக்கொள்ள, அதுகாலையில், நீயும் அவ்வாறு நடவாமல் அசட்டைசெய்து, நிருவாணனாய் நின்றபடியினாலே, அம்முனிவருக்குக் கோபம்பிறந்து, உன்னைமிருகமாகப்போகும்படியாய்ச் சாபங்கொடுத்தபடியால், நீ இப்படி சிங்கமாகப்பிறந்து, என்னைப்போன்றவர்களைத் துரத்திக்கொண்டு திரிகின்றாயென்று, கரடியானது சொல்ல, அதைக் கேட்ட சிங்கமானது, கரடியின்வாய்மையை உள்ளத்திலுன்னிப் பூர்வஞ்ஞானமுண்டாகி, உடனே அச்சிங்கவுருவத்தினின்றும்மாறிப் பழையபடி, பத்திரனென்னும் பெயரோடும், தேவரூபங்கொண்டு, கரடியாகிய முனிவனைப்பார்த்துக் கூறுவான், ஐயா, நான் தாங்கள் சொல்லியதுபோல, குபேரனுடைய மந்திரியாகவிருந்து, மேருவின்சாரலில், எனது தேவியோடுஞ் ஜலக்ரீடை செய்துகொண்டிருக்கையில், கவுதமருடைய சாபமெனக்குண்டாக, அதனாற்பயந்து, யான் அவரைவணங்கி, விமோசனமியாதென்றுகேட்க, அதற்கவர் திருவுளமிரங்கிச் சொன்னது யாதெனில், அப்பா, நீ சிங்கரூபமாய்க் காட்டிற்சஞ்சரிக்கும்போது, சானக்காட்டனென்பவர், கரடி உருவங்கொண்டு, வனத்தில்வரும்போது, நீ அவரைக் கண்டு துரத்திக்கொண்டுபோவாய், அப்போது, அவராலே உனக்கிந்தச்சாப விமோசனமாகுமென்று, சொல்லியிருந்தமையால், அதுபோற் றங்களைத்தரிசித்த எனக்கு, எல்லாப் பாக்கியமுங்கிடைத்ததென்று, கரடியுருவமாயிருக்கும், இருடியை வணங்கி, அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, அளகாபுரிபட்டணம்போய்ச்சேர்ந்தான், அப்பால், சானக்காட்டனென்னும் முனிவர், தனதிச்சையின்படி வனத்தைநோக்கிச் செல்ல, அப்போது, தருமகுத்தனென்பவன், முனிவர் சாபத்தால் வெறிகொண்டு, யாதுந்தோற்றாமல், பட்டணத்தை நோக்கிவருகிறபோது, அங்குள்ள மந்திரிபிரதானி முதலியவர்கள்கண்டு பயந்து, மிகவுந்துன்பத்தையடைந்து, தருமகுத்தனைப்பயந்த தகப்பனிடத்திற்சொல்ல, அவ்வார்த்தையைக் கேட்ட அவனும், துக்கசாகரத்துட்டோய்ந்து, அந்தோ

பெறுதற்கரிய நமது ஒருபிள்ளைக்கும், இப்படி, ஈசன் விதித்தானோ என்று சகிக்கமாட்டாதவனாய், பெருங்கவலையோடும், மந்திரிமுதலிய சில காரியக்காரர்களுடனே, குமாரனைக்கூட்டிக்கொண்டு, சயிமினி என்னுமகாரிஷியினிடத்திற்குப்போய், அவரைப்பணிந்து, ஆசிபெற்று, சுவாமி, எனது தவப்புத்திரனாகிய இவனுக்கு, அகஸ்மாத்தாய் பித்து பிடித்திருக்கவேண்டிய காரணம் யாதோ, அதனைத்தேவரீர் ஆய்ந்தறிந்தோதவேண்டுமென்றுகேட்க, அப்போது சயிமினியானவர், ஞானதிருஷ்டியாற்பார்த்து, நடந்த காரியங்களையெல்லாம், படிப்படியாய்ச்சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட சகலரும், பெருந்துன்பத்தையடைந்து, சுவாமி, இது தீரும்படியாய்த் தேவரீர் கடாட்சித்தருள வேண்டுமென்றுபணிந்து, வினவிநிற்கையில், சயிமினி முனியானவர் கருணைகூர்ந்து கூறுவார், வாருங்கள் காரியக்காரர்களே, உங்கள் இறைவனாகிய இவ்வரசன், வனத்திற்கு வேட்டமாடப்போனவிடத்தில், தேடிக்கொண்டபித்து தீரவேண்டுமாயின், ஒரு அவுஷதஞ்சொல்லுகின்றேன் கேளுங்கள், அது யாதெனில், இவ்வுலகின்கண் ஓங்கும், பரதகண்ட தெட்சணபாகத்தில், ஸ்ரீராமமூர்த்தியாற் கட்டப்பட்ட சேதுவென்னுந் தநுக்கோடியில், சங்கற்பவிதியின்படித் தீர்த்தமாடியபேர்களுக்கு, சகல பாபங்களும், நிவர்த்தியாவதன்றியும், பூதப்பிரேத பசாசடாகினி காளி கூளிகளால், வந்த துன்பமும், பிரமஹத்தி, சிசுஹத்தி, முதலிய தோஷங்களும் நீங்கி, நினைத்தகாரியங்களெல்லாங் கைகூடி, பேரின்பமுங் கூடுமாதலால், அவ்விடத்திற்கு உன்குமாரனைக் கூட்டிக்கொண்டுபோய் தீர்த்தமாடி, ஸ்ரீராமநாதனைப்பணிவாயேல், இச்சாப விமோசனமாமென்றுசொல்ல, அவ்வுரையைக்கேட்ட தருமகுத்தன் தந்தை முதலிய யாவரும், மெத்தவுஞ்சந்தோஷமடைந்து, மகாரிஷியை வணங்கி விடைபெற்று, தங்கள் பட்டணஞ்சேர்ந்து, இரதகஜதுரகபதாதிகளோடும், தருமகுத்தனை இரதத்திலேற்றி, அவன் தந்தை முதலியவர்களும், பிரயாணப்பட்டுக் காடு, மலை, வனம், வனாந்தரம், காறு, நதி

கள், பதிகள், திவ்யக்ஷேத்திரங்களெல்லாங்கடந்து, சேது
வைச்சேர்ந்து தரிசித்து, அவணிலகுந் தநுக்கோடியில், தரு
மகுத்தனை மூழ்கும்படியாகச்செய்தளவில், அவனைப்பிடித்தி
ருந்த பித்தானது, பருதி முன்பனிபோல்விலகிக் கிருதார்த்த
னாய் தனது கையினால் வேண்டிய பிராமணர்களுக்கு தான
தருமங்கள்செய்து, மூன்றுநாள்வரையில், சங்கற்பவிதியின்
படிமூழ்கி, மறைவிதியிற் கூறியவண்ணம், முப்பத்திரண்டற
ங்களையும், குறைவின்றி நடாத்தி, ஸ்ரீராமநாதனுக் கபிஷே
கஞ்செய்து பூசித்து, நிவேதனங்காட்டித் தோத்திரஞ்செய்து,
அக்கடவுளிடத்தில் விடைபெற்று, சேனைசயின்யங்கள் சூழத்
தக்கதாய், இரதமேறித் தனதுபட்டணம்வந்துசேர்ந்து, சமிமி
னிமகாரிஷியைக்கண்டு வணங்கினார்கள். அப்படி வணங்கிய
இராஜனை முனிவர் ஆசீர்வதித்து, சுகஜீவியாய் இராச்சியபாரஞ்
செய்துவரக்கடவையென்று விடைகொடுத்தனுப்ப, அவ்வி
டையை ஏற்ற வேந்தன் தன்னுடைய இராச்சியத்தை அர
சாண்டுவந்தான். கேட்டீரோ நைமிசாரண்யர்களே, இப்படி
யாய் அந்த ராமதநுக்கோடியிலே, உன்மத்தபிரமை, பயித்தி
யம், குமரகண்டமுசலகம், இவைகளெல்லாம் பஞ்சாய்ப்பற
ந்துவிடுமாதலால், இந்த தநுக்கோடியையன்றி வேறே தீர்த்
தத்தை விரும்புவது எப்படியாகுமெனில், பசுவின்பாலிருக்க
அதைக்குடியாமல், கள்ளிப்பாலைத்தேடிக் குடிக்கச்சென்றது
போலாகும். ஆதலால், இந்த தநுக்கோடியிலே அன்புடனே
தீர்த்தமாடியபேர்கள், சுயஞ்சோதிமயமான ஞானத்தையடை
ந்து, மகாதேஜசுடனே விளங்குவார்கள், இதன்றியும், இந்த
தநுக்கோடியைச் சிந்தித்துக்கொண்டு, வேறொரு தீர்த்தங்
கள், நதிகள், குளங்கள், கூபங்கள், முதலியவைகளில் மூன்
றுவிசை தநுக்கோடிசேதுவென்றுசொல்லி, பத்திவிநயத்தோ
டும், யாரொருவர் தீர்த்தமாடுகின்றார்களோ அவர்கள் தாம
ரைமலரில் வாசஞ்செய்யாநின்ற அயனைப்போன்ற வாழ்வும்,
ஆயுளும், இலட்சுமி கடாட்சமும், தவளமயமாய் அமுர்த
சீதள கிரணங்களையுடைய சந்திரனை சடாபாரத்தில் தரித்தி

ருக்கப்பட்ட பரமசிவனுடைய பாதாரவிந்தமுங் கிடைத்து,
ஆனந்தபோகங்களை யடைவார்களென்று சுருதிவாக்கியப்பிர
மாணங்களாலே சொல்லப்பட்டால், அந்த இராமதநுக்கோ
டியினுடைய மகிமையை யாராலே அளவிட்டுச்சொல்லக்கூ
டும். இத்தன்மை பொருந்திய தநுக்கோடியிலே, பராவசு
என்று சொல்லப்பட்ட ஒருவன், தனது தந்தையைக்கொன்று
அந்த தோஷத்தை தநுக்கோடியில்மூழ்கித் தீர்த்துக்கொண்
டானென்று சூதமகாரிஷியானவர் சொல்ல, அதைக்கேட்ட
நைமிசாரண்யர்கள் முனிவரைப்பணிந்து, சுவாமி, பராவசு என்
பவன் என்னகாரணத்தினால் தகப்பனைக்கொன்றான், என்ன
மரபிலே ஜனித்தவன், அவனுக்கு இம்மதி வந்தகாரணம்
யாதோ அதனைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்
கச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

தருமகுத்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

பராவசுச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே,
நெடியகடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் உத்தரதேசத்திலே பிரு
கத்துய்மனென்னு மோராசன் மகாமந்திரியோடும் இராஜரீக
ஞ் செய்துவரத்தக்கவன், சதாகாலமும் பூமண்டலத்திலுள்ள
திவ்யக்ஷேத்திரங்களிற்போய் யாகாதிகிர்த்தியங்களை இந்திரா
திதேவர்கள் மனமகிழும்படியாய்ச்செய்து, அநேக கீர்த்திக
ளோடும் விளங்கப்பட்ட வேந்தன், சிந்தையிலுன்னிய யாகங்
களெதுவோ அதனை மறைவிதிப்படி நிறைவேற்றும் வல்லவ
னாகியும் பிரம்மகுலசிரேஷ்டனாகியும், சகலசாஸ்திரங்களையு
முணர்ந்து விஞ்சைமந்திரத்தையே பாராயணஞ்செய்துவாத்
தக்க ரைப்பியனென்னும் பிராம்மணனுக்கு அருவாவசு எ
ன்றும், பராவசுஎன்றும், பெயரினையுடைய இரண்டுபிள்ளைக

ன்,தகப்பனைப்பார்க்கினும் எண்மணங் கதிகப்பட்டவல்லவரா
ய் மேன்மையடைந்து இராஜனால் நடத்தப்பட்ட யாகாதிகிர்த்
தியங்களை அவ்விருவருமே யிருந்துவழுவின்றி நடத்திவருங்
காலையில், பிருகத்துய்மனென்னும் வேந்தன், காசிபட்டணத்
தில் தீர்க்கசத்திர யாகஞ்செய்யக்கருதி, அருவாவசு, பராவசு
என்னு, மிருவர்களாலும், அதற்குவேண்டியசாமக்ரிகளை யறிந்
து, அவ்வாறே சேகரஞ்செய்து, அங்ஙனம்வரப்பட்ட முனிவ
ர்களுக்கும், பெரியோர்களுக்கும், பன்னசாலைகளைப்புதுக்கச்
செய்து, இராஜன் அருவாவசு, பராவசு என்பவர்களைப்பயந்த
தந்தையரோடும். மந்திரிபிரதானிமுதலிய சேனைசமினியங்க
ளோடும் பிரயாணப்பட்டு அவிடம்போய்ச்சேர்ந்து விதியின்
படி யாகசாலைமுதலிய யாவுமமைத்து இன்னம் லோகத்திலு
ள்ள பெரியோர்களை வருவிக்கவிரும்பித் தூதர்களையனுப்பி, க
வுதமர், அத்திரி, காசிபர், நாரதர், பராசரர், மார்க்கண்டர், பு
லத்தியர், பிருகு, வசிட்டர், சதானந்தர், வேதவியாசர், அகஸ்
தியர், கபிலர், சவுமியர், சாபாலிவிசுவாமித்திரர் முதலியபெரி
யோர்களை எல்லாம்வருவித்து, அவரவர்களுக்கு அர்க்கியபா
த்யாதி சோடசோபசாரங்களுஞ்செய்து, விடுதிகளி லெழுந்த
ருளப்பண்ணி, கந்தமூலபலாதிகளை அவர்கள்மனமகிழும்படி
பிரதிதினமுங் கொடுத்துவரும்படிக் காரியக்காரர்களுக்கு தி
ட்டப்படுத்தி,யாகத்தைதக்கண்டு தரிசிக்கவிருப்பங்கொண்டுவ
ந்த இராஜராஜாக்களுக்கும் அவர்கள் மந்திரிபிரதானிமுதலிய
காரியக்காரர்கள் பந்துவர்க்கத்தவர்களுக்குந்தக்கவிடுதிகள் வி
டுத்து, அவர்களுக்கு அறுசுவையுண்டியும் தாம்பூலமும் மன
மகிழும்படியாய் நடத்திவரத்திட்டப்படுத்தி,பிருகத்துய்மனெ
ன்னும்ராஜன் அருவாவசு, பராவசுவென்னும் இருவர்களால்
சுபமுகூர்த்தவேளையில் யாகத்தை ஆரம்பஞ்செய்து,நடத்திவ
ருங்காலையில், அவர்கள்செய்து வருங்கிரமங்களையும் மந்திரசக்
திகளையுங்கண்ட வசிட்டர்முதலிய பெரியோர்களியாவரும் இ
வ்விரு சிறுவர்களுக்கு மிஞ்சியவல்லவர்க ளொருவருமில்லை
யென்று சிரக்கம்பஞ்செய்துபுகழ்ந்து,பெரும்பாலும் ஆச்சரிய

மடைந்து யாகம்நடந்தேறி வருவதைப் பார்த்துக்கொண்டி
ருக்கும்போது, ஒருநாள் பராவசுஎன்பவன், கங்காநதிக்கரை
யிற் பன்னசாலை புதுக்கிக்கொண்டு அதில் வீற்றிருக்குந் தன
து தாய்தந்தையர்களிடம் விடியுமுன் னெழுந்துபோய்க் கங்
கையில்ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனமுதலிய நியமநிஷ்டை
களை முடித்துக்கொண்டு வருவோமென்று, யோசித்துப்படுத்
தவன் இராப்போதிற்றானே எழுந்து நித்திரா கலக்கத்துட
னே தனது தந்தையிருக்கும் பன்னசாலையை நோக்கிவருகை
யில், அப்பன்னசாலையிலே பராவசுஎன்பவன், தாதையாகிய
ரயிப்பியனென்னும் பிராமணன், ஓர்புலித்தோலைச் சரீரந்தெ
ரியாமற் போர்த்துக்கொண்டு இருப்பதை பின்னையானவன்க
ண்டு இதுவனமாகையால், நமது தாய்தந்தையரை அடித்துக்
கொல்லவன்றோ, இப்புலியானது வந்து காத்திருக்குதென்று
யோசித்துச் செவ்வையாய் நிதானியாமல் தன்கரத்திலிருந்த
தண்டத்தினால் மெல்லப் பதுங்கிப்போய்ப் புலியினதுபிடரி
யிலே ஓங்கி அடித்தான், அப்படி அடித்த உடனே புலித்தோ
லையணிந்திருந்த மூப்பனாகிய ரயிப்பியன், வாயினாலும், மூக்கி
னாலும் இரத்தங்களைக் கக்கிக்கொண்டு மரணத்தையடைந்தா
ன். அதுகண்டபராவசு அருகே போய்ப்பார்க்கும்போது தக
ப்பனென்றறிந்து அடித்துமோதிக் கீழேவிழுந்து புரண்டுபுர
ண்டழுது மூர்ச்சித்திருக்கையில், அவ்வோசையைக் கேட்ட
அவன்றாயானவள் ஓடிவந்து தனது மணாளனுக்குநேர்ந்த மர
ணத்தைக்கண்டு சகிக்கமாட்டாதவளாய் துன்பசாகரத்துள்ள
ழுந்திக் கதறிப்பரதவித்திருப்பதை இளையகுமாரனாகிய அரு
வாவசுவென்பவன் கேள்விப்பட்டு ஓடோடியும்வந்துபார்த்து
பெருந்துயரத்தோடும் அழுது பின்புமூவரும், மனதைத்தே
ற்றிக்கொண்டவர்களாய் தாதைக்குச்செய்யவேண்டிய கிரியை
யனைத்துஞ்செய்து சமாதியில்வைத்து திஷ்டிகளைச் சாஸ்திர
விதிப்படியே பரிகாரஞ்செய்து, இராஜனுடைய யாகத்தை நி
றைவேற்ற வேண்டியிருப்பதனாலே தனதுதம்பியைப்பார்த்து
க்கூறுவான். வாராய்தம்பி அருவாவசு, இப்போதுவேந்தனது

திர்க்கக்ஷத்திரியர்கள் துடங்கி நடந்துவருவதில் நமக்குச்சம்பவி
த்திருக்குந் தொல்லையோடும் யாகத்திற்பிரவேசிக்கப்படாது.
அப்படி பிரவேசியாமற்போனால் யாகத்துக்கும் பின்னம்நேரி
டும், நீ தனியாக நடத்துவதற்கு உன்னாற் சக்தியிராதாதலால்
தகப்பனைக்கொன்ற எனது தோஷத்தை நீ - ஏற்றுக்கொண்டு
அதுபரிகாரமாகும்படியாய் தவஞ் செய்துகொண்டிருந்தால்,
நான்வேந்தனுடைய யாகத்தை யாதுங்குறையின்றி நிறைவே
ற்றுகின்றேன். ஒருவேளை இச்செய்தி அரசனுக்குத்தெரிந்து
கேட்பானாகில், நீ கொன்றதாகச் சொல்லிவிடுகின்றேன், உன்
னைக்கேட்கில், நீயும் அப்படியே சொல்லிவிடுவாய், ஆதலால்
இதுவே நல்லயோசனையென்று சொல்ல, தம்பியானவன்
கேட்டு, தேவரீர் சித்தம்போல நடந்துகொள்ளுகிறேனென்று
சொல்லித் தனது அன்னையோடும், வனத்திற்றவஞ்செய்து
கொண்டிருந்தான், அப்படியிருக்கையில், பராவசு என்பவன்
கங்கையில் ஸ்நானஞ்செய்து, ஜெபதப நியமநிட்டைகளை
முடித்து, யாகசாலையிற்சேர்ந்து, ஓமத்துக்குரிய தொழிலிற்
பிரவேசித்திருக்கும்போது, இக்காரியங்களைக் கேள்வியுற்ற
வர்கள், இராஜனைப்பார்த்து, சுவாமி, இச்சிறுவன் தனது
தகப்பனைக்கொன்று, பிரம்மஹத்தியுடையவனாய் இருக்கின்
றமையால், இவனை இந்தயாகத்திலே வைக்கப்படாது, இந்தட்
சணமே, இவனின்று நீங்குவது உத்தமமென்றுசொல்ல,
அம்மொழியைக்கேட்டவேந்தன், இதென்ன காரணமென்று
சிந்தித்துப் பராவசுவைக்கேட்கையில், அப்போது பராவசு
வும், இராஜனைநோக்கி, ஐயா மகாராஜனே, எனது தந்தையை
நான் கொல்லவில்லை, தம்பி கொன்றமையால், அந்த தோஷம்
நீங்கும் தபத்திலிருக்கின்றானென்றுசொல்ல, அதைக்கேட்ட
வேந்தன், இதனைத் திரவிசாரிக்கவேண்டுமென்று, வேவுக்கா
ரர்களாலே, அருவாவசு வென்பவனைக் கூட்டிவரச்செய்து
நடந்த சவிஸ்தாரமியாதென்றுகேட்க, அப்போது அருவா
வசுவும், ஐயா மகாராஜனே, எனது தந்தையைத் தெரியா
மையினால், எனது தமையன் கொன்றுவிட்டபடியால், நான்

அப்பழியை ஏற்றுக்கொண்டு தவஞ்செய்கிறேனென்றுசொ
ல்ல, அதைக்கேட்ட வேந்தன், பராவசுவைக் குற்றமுடை
யவனென்று நிதானித்து, யாகசாலையைவிட்டு நீங்கும்படி
யாய்த் துரத்திக்கொண்டகாலையில், அதைக்கண்ட யாவரும்,
நிந்தித்துப் பராவசுவை வெறுத்துக்கொள்ள, அப்போது,
அருவாவசுவென்பவன் மெத்தவுங்கிலேசமடைந்து, இராஜ
னிடத்தில் தனக்கு விடைகேட்கும்போது, இராஜன் அருவா
வசுவைநோக்கி, அப்பா, உனது தந்தையைக்கொன்றபழி உன்
தமையனைச்சார்ந்ததேயன்றி, உனக்கு யாதுந்தோஷமில்லை,
போய்வாவென்றுசொல்ல, அதைக்கேட்ட இருவரும், யாக
சாலையைவிட்டு நீங்குவதற்குள், பராவசு என்பவனுக்கு பிரம்
மஹத்தியானது தொடர, அதைக்கண்ட அவன் தம்பியான
வன், அவனை விடாமல் கெட்டியாய்ப்பிடித்திழுத்துக்கொண்டு
வனத்திலிருக்கும் தாயினிடத்திற்கொண்டுபோய் விடுத்து,
அவனுக்குப்பற்றிய பிரம்மஹத்தி நீங்கும்படியாய் சூரியபக
வானைக்குறித்து தவஞ்செய்கையில், சூரியபகவானும் கருணை
கூர்ந்து, இந்திராதி தேவதைகளுடனே, அருவாவசு என்பவ
னுக்குப் பிரத்தியட்சமாய் தரிசனந்தந்து, வாராய் அருவா
வசுவே, நீ உனது தமையன்செய்த பிழையைப்பொறுத்து,
அவன்பொருட்டு நீ இழைத்த தவத்துக்குச் சந்தோஷமடைந்
தோமாதலால், உனக்குவேண்டிய வரத்தைப் பெற்றுக்கொள்
ளுவாயென்றுசொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட அருவாவசு
வென்பவன், மெத்தவுஞ்சந்தோஷமடைந்து, சுவாமி, சிறியே
னைப்பயந்த தந்தையானவர், உயிர்பெற்று எழுந்திருக்கும்படி
யாயும், அன்னவரைக்கொலைசெய்த, எனது தமையனைப்பற்
றிய பிரம்மஹத்திநீங்கிப் புநிதனாகும்படியாயுங் கருணைசெய்ய
வேண்டுமென்று, காக்கூப்பித் தோத்திரஞ்செய்து நிற்கும்
அருவாவசுவென்பவனைச் செஞ்சுடர்க்கிரணனாகிய, சூரியபக
வானும், இந்திரன் முதலிய தேவர்களுங்கண்டு கூறுவார்கள்,
வாரும்பிள்ளாய், அருவாவசுவே, நீ எங்களைக் கோரிக்கேட்ட
வரமானது, மெத்தவும் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது,

ஏனெனில், உலகின்கண் இறந்தவர்கள், அநேகநாளைக்குப் பிறகு உயிர்பெற்றுவரவும், கொலைசெய்தவன் ஒருவனிருக்க, மற்றொருவன் தபஞ்செய்து, கொலைஞனது பிரம்மஹத்தியைப் போக்கும்படியாய்க் கேட்பதும், வேடிக்கையாகவிருக்கின்றதாதலால், ஓ சிறுவனே, நீ எத்தனை தபஞ்செய்தபோதிலும், அவனைப்பிடித்த பிரம்மஹத்தியானது, நீங்கப்போகிறதில்லையென்று, சூரியபகவான் முதலிய தேவர்களியாவருஞ் சொல்ல, அதைக்கேட்ட, அருவாவசு சகிக்கப்படாத துன்பத்திலாழ்ந்தவனாய், தேவர்களைப்பார்த்து, மறுபடியுங்கூறுவான், சுவாமி, சிறியேன் எனது அன்னைபடுந்துயரத்தையும், அண்ணன்படுந் துயரத்தையுங்கண்டு, உயிர் கொண்டிருப்பதாய் தோற்றவில்லை யாதலால், எவ்வகையேனு மருள்செய்யவேண்டுமென்று, மிகப்பரிதாபப்படுகையில், அதுகண்ட தேவர்கள் கிருபைகூர்ந்து, அச்சிறுவனைநோக்கி, நீ மிகவுந்துன்பப்படுகின்றமையால், இப்புவியின்கணுள்ளதுக்குந் தென்றிசையிற் கந்தமாதனகிரிச்சாரலில், சேதுபந்தனத்தில், இராமதநுக்கோடியென்று, ஓர் புண்யதீர்த்தமிருக்கின்றது, அத்தீர்த்தத்திலே, உனது தாயையுந் தமையனையும் அழைத்துக்கொண்டுபோய், நாற்பத்தைந்துநாள் பரியந்தந் தீர்த்தமாடச்செய்து, அங்குள ஸ்ரீ ராமநாதனைப்பணிந்து பூசித்து, இவண் வருவீர்களாயின், உங்கள் தந்தையும் எழுந்திருப்பான், உனது தமையனைப்பற்றிய பிரம்மஹத்தியும் நீங்குமென்றுசொல்லி, சூரியபகவானாதி சகலதேவர்களும், விசும்பிடைமறைந்தார்கள். அதைக்கண்ட அருவாவசு என்பவன், மிகவுஞ்சந்தோஷங்கொண்டு, தாங்களிருக்கும் பன்னசாலைக்குவந்து தாய் தமையனோடு நடந்த சவிஸ்தாரங்களைச்சொல்லி, அவர்களைக் கூட்டிக்கொண்டு, காசிபட்டணத்தைவிட்டு நீங்கிக் காடு, மலை, வனம், வனாந்தரம், கானாறு, முதலியநதிகளையும், பதிகளையுந் திவ்யக்ஷேத்திரங்களையும்விடுத்து நீங்கிக்கந்தமாதனகிரிச்சாரிற்சேர்ந்து, சேதுவை தெரிசனஞ்செய்து, தேவர்கள் கூறியவண்ணம், ஸ்ரீராமதநுக்கோடியில், சங்கற்பவிதியின்

படி நாற்பத்தைந்துநாள்வரையில் தீர்த்தமாடி, இராமநாதனைப்பணிந்துவருகையில், உடனே, அங்கோர் அசரீரி உண்டாயிற்று, அதுயாதெனில், ஓ பராவசுவே, உன்னைப்பற்றியிருந்த பிரம்மஹத்தி, தோஷம், நீங்கி இருதார்த்தனாகிவிட்டாய், என்று ஒலித்த ஓசையைக்கேட்டு, மூவருஞ் சந்தோஷத்துடனே, அந்த ராமதநுக்கோடியில், தங்கள் மனமானது திருப்தியடையுமளவுந் தீர்த்தமாடி, அதைவணங்கி, இராமநாதன் சந்நிதிவந்து பிரதட்சணஞ்செய்து, இராமலிங்கத்தைத் தோத்திரம்பண்ணி, அக்கடவுளிடத்தில் விடைபெற்று மீண்டு, அதிதீவிரமாய்க் காசிபட்டணம்வந்துசேர்ந்து தங்களது தகப்பனை அடக்கஞ்செய்த சமாதிக்கருகாய் வருகிறபோது, அகாலமரணமாயிறந்த அவர்களது தாதை உயிர்பெற்றுச் சமாதியினின்றுமெழுந்து, பிள்ளைகளிரண்டுபேரையும், பெண்சாதியையுங்கண்டு, ஆனந்தங்கொண்டு, தழுவி முத்தமிட்டு, அடங்காமகிழ்ச்சியோடும், நடந்த சவிஸ்தாரங்களையெல்லாம், ஆதியோடந்தமாய் ஒருவருக்கொருவர் பேசித் தமது பட்டணம் வந்துசேர்ந்து, சுகஜீவிகளாய் வாழ்ந்திருந்தார்கள். ஆதலால், இத்தன்மையான மகிமைபொருந்திய தநுக்கோடியினது பெருமையை ஒருவராலுஞ் சொல்லிமுடியாது, இதன்றியும், சுராபானமுதலிய லாகிரிவஸ்துக்களை இச்சித்து, அதனால்வந்த பாதகங்களெல்லாம், அந்த தநுக்கோடியைக்கண்டவுடனே, புலியைக்கண்ட மான்போலும், இராஜாளியைக்கண்ட கொக்கைப்போலும், பருதியைக்கண்ட பனியைப்போலும், விலகிப்போவதோடும், அத்தீர்த்தத்தை தரிசித்தாலும், அப்படி தரிசித்துவந்தவர்களை மற்றவர்கள் கண்டு தரிசித்தாலும், அவர்களைப்புகழ்ந்தாலும், அச்சேதுவின் மகிமையை சொல்லிக்கொண்டிருந்தாலும், சொல்லிக்கொண்டிருப்பதை சிரவணஞ்செய்தாலும், அவர்கள் புண்ணியசாலிகளென்று பெரியோர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றபடியால், அந்த தநுக்கோடியிலே, முன்னொருகாலத்திலே, ஓர்நரியும், வானரமும் சிநேகிதஞ்செய்திருந்து, இந்த

திருக்கோடியில் தீர்த்தமாடி இவ்வுருபத்தைப் பெற்றார்களென்று, சூதமுனிவர் சொல்ல; அவ்வாய்மையைக்கேட்ட நைமிசாரண்ய முனிவர்கள், சூதமகாரிஷியைப்பணிந்து, சுவாமி, தேவரீர் அடியோங்களுக்கு அவைகளின் பெருமையைத்திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றுகேட்கச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

பராவசுச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

கவிசம்புச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண், நீர்வளம், நிலவளம், முதலிய நான்குவளமும் பொருந்தி இலகாநின்ற, ஓர் பட்டணத்திற்கருகாமையாய் வழங்கும் வனத்தில், நெடுநாளாய், நேசித்துவாநின்ற; ஓர் குரங்கும், நரியும், ஒன்றுக்கொன்று இணைபிரியாமல், நகமுஞ் சதையும் போலவும், பூவும் மணமும்போலவும், பொருந்தி விசுவாசித்துவருநாளில், ஓர் நாள் அப்பட்டணத்திற்குப் புறம்பாயிருக்குஞ் சுடலையிற்புதைத்திருந்த பிணத்தைதப்பற்றி யிழுத்துவந்து; இன்று நமக்கு நல்ல விருந்தாமேதென்று நனி இன்பத்தோடும், புசித்துக்கொண்டிருந்த நரியைக்கண்ட குரங்கானது, உய்த்து நோக்கிச் சிந்தித்துக்கூறுகின்றது, வாராய் எனது நற்றுணையாகிய நரியே, நீ என்னபாவஞ்செய்தனையோ அறியேன், அந்தோ, இந்த மயானத்திலிருக்கும், பிரேதங்களைப் பிடுங்கித்தின்பதே தொழிலாயுனக்கு லபித்திருக்கின்றது பற்றி, யான் மெத்தவுஞ்சஞ்சலப்படுகிறேனென்று கூறியதைக்கேட்ட, சம்புவானது சொல்லும், கேளாயெனது பிரியனாகிய குரங்கே, ஐயோ எனது கர்மாநுபவத்தை என்சொல்வேன், நண்பனே, நான் முந்திய ஜன்மத்தில் வேதாகமங்களை, யுணர்ந்தோருக்கும், பிராம்மண

குலத்திற்பிறந்து, தேவசன்மாவென்னும், பெயர் பூண்டு, குலவிதிப்படி வேதங்களை யுணர்ந்து வாழ்ந்து வருகிறபோது, ஓர் பிராமணனுக்கு, என்னிடமிருந்த ஒரு வஸ்துவைத்தருகிறேனென்று வாக்குத்தத்தஞ்செய்து, பின்பு தாமல் தப்பிவிட்டபடியால், அப்பாபத்தால் இப்படி சம்புவாய்ப்பிறந்து தாணியின்மீது பிணங்களைப் பிடுங்கித்தின்னுஞ் சண்டாளத்வம் லபித்ததெனவோதிப் பின்னும் கூறும், ஓ நேசனே, உலகின்கண் ஓங்கும் மாந்தருள், எக்குலத்தனாயினும், எவ்வனேனும், ஒருவனுக்குக் கொடுக்கிறேனென்று. ஆசைவார்த்தைசொல்லிப் பின்னர் கொடாமற்போவானாயின், அவன் இவ்வாறே ஜனித்து, என்போல் பிரேதங்களைப் பிடுங்கித்தின்று, உழலவேண்டுவது மன்றியில், பிறருக்குகொடாமல் தேடிவைத்த, அவன் பொருளும், நாசத்தையடைந்து, சர்ப்போற்பத்தியில்லாமற் கெட்டதுபோல, அவன் செய்யும் புண்ணியமனைத்தும், வியர்த்தப்படும். மேலும், ஓர் வேதப்பிராமணனுக்குச்சொன்ன வாக்கை யீடேற்றாமற்போனவர்களுடைய பாபமானது, நூறு அசுவமேதயாகங்கள் செய்தபோதினுந்தீராதென்று, வேதங்களாற் சொல்லப்படுமாயின் எனதுகர்மத்தை யெவ்வாறு நீக்கிக்கொள்ளுவேன், அந்தோ, கொடும்பாவியாகிய நான்தான், இப்படி ஜனித்தபோதினும், எனது நண்பனாகிய நீயுங் குரங்காகப்பிறந்து, பருவதங்களிலும், பற்பல விருட்சங்களிலுந்தாவிக் காயிலை பூ பிஞ்சுகளைக் கடித்துத்தின்று, காலத்தைக் கழிக்கின்றனையே, இதுவும், நீ செய்த கருமந்தானோ என்றுகேட்க, அதைக்கேட்ட குரங்கானது கூறும், வாராய் என் மனதுக்கிசைந்த சம்புவே, நான் முன்சென்மத்தில், நம்பியார்மரபிற் பிறந்திருந்த, விசுவாதனென்னும், வேதியனுக்குப் புத்திரனாகப்பிறந்து, வேதநாதனென்னும் பெயர்பூண்டு, குலவித்தியாவுமுணர்ந்து, கமலாலயத்தில் குருக்களாகவமர்ந்து, சிவபணி செய்துவருநாளில், தேவசன்மாவென்னும், பெயர்கொண்ட நீ என்னிடம்வந்து என்னை நேசித்துவருங்காலத்தில், ஓர் பிராமணன்வீட்டுக்

கொல்லையிலிருந்த காய்கறிபதார்த்தங்களைக்கண்டு காதல்கொ
ண்டு, அந்த பிராமணனைக் கேளாமலும், அவனுக்குத்தெரியா
மலுஞ் சோரத்தனமாய், அவன் கொல்லைச்சுவரேறிக்குதித்து
அங்குள பதார்த்தங்களை, அபகரித்துக்கொண்டுவந்து, சமை
த்து பட்சித்த பாபத்தால், இவ்வாறு குரங்காகப்பிறந்து, மலை
களிலுஞ் செடிகளிலுமேறிக் காய்கனிகளைத் தின்னும்படியா
ய்க் கஞ்சன்விதித்தானென்றுகலுழ்ந்ததல்லாமலும், பின்னும்
கூறும், கேளாய் நரியே, இவ்வையத்தின்மீது இலங்கும்,
எவர்களாயினும், இருக்காதிவேதங்களுக்குரிய இருபிறப்பாள
ருடைய சொத்துக்களை அபகரித்தால், இவ்வாறே ஜனித்துத்
துன்பப்படவேண்டும்; இதல்லாமலும், உலகத்தில் ஜீவர்களை
இரட்சிக்கும்பொருட்டுத் திருக்கோயில்கொண்டெழுந்தருளி
யிருக்குந் தேவர்களுக்கு நியமித்த சொத்துக்களை, அபகரித்
துப்புசித்தால், அவர்களது குலமுழுவதுங் கெடுவதோடும்,
கும்பி பாகமென்று சொல்லப்பட்ட நரகத்துக்கும், ஏதுவா
வார்கள். ஆதலால், சுக துக்கங்களை அறிந்த தூயவராகிய
பெரியோர்கள், ஒருவர்பேரிற் பொறாமையையடையார், புறங்
கூறார், பொருள்களை அபகரியார், பிராம்மணனுக்கு குறைவு
நினையார், அவர்கள் குற்றமிழைத்தபோதினும் பொறுப்பார்,
ஆதலால், நான் செய்த தீங்கினால் இப்படி குரங்காகப்பிறந்து,
உழலுகின்றேன், என்செய்வேனென்று துக்கசாகரத்துட்
டோய்ந்து, ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டு, இரை தண்ணீ
ரருந்தாமலும், அதுவே சிந்தனையாய், இருக்குங்காலையில்,
அம்மார்க்கத்தில், காவிகாம்பர ஜடாதாரியாய் விபூதிருத்தி
ராட்சந்தரித்து, தண்டுகமண்டலத்தோடும், பாதுகை தரித்து,
பரமசிவத்தை தியானஞ்செய்துகொண்டு, வியாக்ராஜினத்தோ
டும், சிந்துதீபனென்று சொல்லப்பட்ட, அகஸ்தியமாமுனி
வர் வரும்போது, அவனைக்கண்ட இச்சம்புவுங் குரங்கும்,
எழுந்து, ஓடோடியும்வந்து, முனிவரது பாதமலர்களிற்படி
ந்து நமஸ்காரஞ்செய்து, எழுந்து கைகளைக்கட்டி வாய்புதை
த்து நின்று சொல்லும்; சுவாமி, முனிநாதரே, அடியேங்கள்

கடைத்தேறும்படியாய்க் கிருபைசெய்து, இரட்சிக்கவேண்டு
மென்று மிகத்துன்பத்தோடுஞ்சொல்லித் தோத்திரஞ்செய்
யும்போது, சிந்துதீபரும், அவைகளின்மீது கருணைகூர்ந்து,
வாராய் கவிசம்புக்களே, உங்களிருவர்களுடைய,கர்மாநுபவ
ங்களை யறிந்துகொண்டோம், யாதெனில், நீங்களிருவரும்,
வேதியர்களுக்குச்செய்த குற்றத்தால், நரியாகவுங் குரங்காக
வுஞ் ஜனித்துக் காலத்தைக்கழிக்கின்றீர்கள். இப்போது, உங்
களுக்கு இந்தஜன்மம் நீங்கி, நற்சன்மம்பெறவேண்டுமாயின்,
நாமோருபாயஞ் சொல்லுகின்றோம், அதுயாதெனில், இந்த
பூலோகத்திலே, தெட்சணபாகத்திலோங்குங் கந்தமாதனகிரிச்
சாரில் வழங்குஞ்சேதுவில், தநுக்கோடி என்று ஓர் புண்
ணியதீர்த்தமிருக்கின்றது, அத்தீர்த்தம் மகா மகிமைபொருந்
தியதாதலால், அதில் நீங்களிருவரும்போய்த் தீர்த்தமாடினால்,
இச்சென்மம் நீங்குவதோடும், இதுவரையில் உங்களைப்பற்றி
யிருக்குஞ் சகல கருமங்களும், நாசப்பட்டுக் கிருதார்த்தராய்
விடுவீர்கள், அஃதெப்படி எனில், அந்த தநுக்கோடியிலே
முன்னொருகாலத்தில், சுமதி என்னும், ஓர் பிராமணன் சுரா
பானஞ்செய்தும், வனசர ஸ்த்ரீயைப்புணர்ந்தும், அவனு
டன்கூடி உணவுகொண்டும், தேடிய பாபங்களையெல்லாம்,
இந்த தநுக்கோடியிலே, எளிதாய் தீர்த்துக்கொண்டான். அது
எப்படியெனில், மாடதேசத்திலே, எசசு தேவனென்னும்
ஓர் பிராமணன், அரிபூசை, குருபூசையிலே, மகாபக்தியுடை
யவனாகியும், வேதாகமங்களையுணர்ந்து, அந்நெறிநின்றுந் தவ
றுமலிருக்கு மவனுக்கு, ஓர் புத்திரன்பிறந்து, சுமதி என்று
நாமம்பூண்டு வளர்ந்துவருபவன், அனங்காகமநூலைக்கற்று,
அதனாற் காமவெறிகொண்டு, தனது தாய்தந்தையர்களை, மதி
யாதவனாகியும், அவர்களது வார்த்தையைக்கேளாது, மீறி
நடப்பவனாகியும், துன்மார்க்கத்தன்மைபொருந்தி, தன்னிச்
சையாய்த் தாய்தந்தையர்களையுந் தானிருக்கும் பதியையும்
விட்டு நீங்கி, புற்கலமென்று சொல்லப்பட்ட தேசத்திற்
போய்ச்சேர்ந்து, பிராம்மண கருமங்களை யநுட்டியாமல் தன்

ஞேடொத்த இளைஞர்களோடும், ஸ்திரீவிஷயங்களில் ஆரம்
பித்து, மோகாந்தகாரனாய்த் திரிகிறபோது, அம்மார்க்கத்தில்,
ஓர்நாள் வனத்தில், வேடிக்கையார்த்தமாய்ப்போகையில், அவ்வி
டத்தில் அதிரூபலாவண்யத்தோடுங்கூடிய, ஓர் வேடுவஸ்தி
ரீயைக்கண்டு, காதல்கொண்டு, அவளைச் சிநேகஞ்செய்து,
நாளுக்குநாள் அவள்மீது மையல்மீறி, இருவரும் இணைபிரி
யாமல், இன்பலீலைகளை யநுபவித்துவருபவன், அவள் நிமித்
தம் பொருள்வேண்டி, களவுவிஷயத்திற் பிரவேசித்து, அகப்
பட்டவைகளைக் கொண்டுவந்து கொடுப்பதும், வனத்தில்
வேட்டமாடச்சென்று, பறவை முதலியவைகளைப் பிடித்துக்
கொன்று பட்சிப்பதும், தனது சாகியோடு, ஒரேபாத்திரத்
தில் உணவு கொள்வதும், மது முதலிய லாகிரி வஸ்துக்களை
உண்டு, வேடுவரோடு தானுமோர்வேடுவனாய்த் திரியுந்தொ
ழிலே மேற்கொண்டு திரிந்து, பிராம்மணியத்தை மறந்தவ
னாய்த் திரிகிறபோது, ஒருநாள் இச்சுமதி என்பவன், சில
வேடுவருடன்சேர்ந்து, அர்த்தராத்திரிப்போதில், அப்பட்ட
ணத்திலுள்ள, ஓர் பிராமணன்வீட்டிற் கன்னமிட்டுப்புகுந்து,
அங்குள்ளபொருள்களைக் கொள்ளைகொண்டு, அவ்வேதியனை
யுங்கொன்று, அதிக சந்தோஷத்தோடும், சுருண்டு நெரித்த
குழலும், செக்கர் வானம்போன்ற சிவந்த பற்களும், நீரு
ண்ட மேகம்போன்ற தேகத்தையுமுடைய, தனதுசாகியினது
இல்லத்திற்கு வருகிறபோது, நீலநிறம்போன்ற தேகமும்,
மூன்றாம்பிறையைப்போன்ற தந்தங்களும், சிவந்த மீசையும்,
கோரரூபமுமுடைய பிரம்மஹத்தியானது வந்து மறித்துக்
கொண்டு, அவனைப்போகவொட்டாமல், அநேக இம்சைகளை
செய்கிறபோது, சுமதி என்பவன் பிரமையடைந்து, யாதுந்
தோற்றாதவனாய், தன்னுடைய எண்ணங்களை மறந்து, ஊர்,
நாடு, தேசமுதலிய வனம், வனாந்தரங்களெல்லாந் திரிந்தலை
ந்து, அகஸ்மாத்தாய் தாய் தந்தையர்கள் வாழூர் தன்னுடைய
சுதேசம் வந்துசேர்ந்து, பெருந் துன்பத்தோடும் திரிகிற
போது, அவன் தந்தையான பிராம்மணன்கண்டு, தனது

பிள்ளையென்றறிந்து, புத்திரவாஞ்சையினாலே மகிழ்வுகொ
ண்டு நெருங்கி, அவனுக்குற்ற வினைப்பகுதியைத்தெரிந்து,
அந்தோ, அடா குழந்தாய், இவ்வினைக்கென்செய்வேனென்று
துக்கசாகரத்துட் டோய்ந்தவனாய், பின்னர் ஒருவாறு தேறி,
இவனைப்பற்றிய பிரமையை, எவ்விதத்தினாலாவது, நீக்க
வேண்டுமென்னும், எண்ணங்கொண்ட சுமதியின் தந்தையி
னது கருத்தையறிந்த, பிரம்மஹத்தியானது கூறும், வாராய்
பிராம்மணா, நீ இவனைப்பிள்ளை என்னும் பிரியத்தால், ஆத
ரவுசெய்யக் கருதுகின்றாய்; அக்காரியஞ்செய்வது சரியல்ல,
ஏனெனில், மகாபாவியாகிய இவனைப் பார்க்கவும்படாது,
பிராமணனைக்கொலைசெய்த தோஷமானது, இவனைவிட்டு நீங்
கத்தக்கதல்ல, அதன்றியும், இவன் பிராமணபீஜமாக விருந்
தும் கடைச்சாதியாகிய வேடிச்சியைச்சேர்ந்து, மதுபான
முதலிய லாகிரிவஸ்துக்களை யிச்சித்துக் களவுசெய்து காலத்
தைக்கழித்துவரு இவனுடைய துர்நடத்தைகளை ஒருவரா
லுஞ்சொல்லிமுடியாது, மேலும், இவன் தாய்தந்தையர்களது
வார்த்தையைக் கேளாமலும், அவர்களைப் போஷியாமலும்,
ஊரிற்கொள்ளையடித்து, வேடுவ ஸ்திரீயினிடங் கொடுத்து,
அவளுடன்கூடிச் சுகித்திருக்கும், இக்கொடும்பாவியைச்சேர்
ந்து, ஆதரவுசெய்துவந்தால், இவனாலே, உன்னையும், உனது
குடும்பத்தையும், நாசப்படுத்துவேனாதலால், வீணேநாசந்தே
டிக்கொள்ள வேண்டாம், யான் சொல்லுவதைச் செவ்வை
யாய்க்கவனித்துக் கடைத்தேறுவாயென்று கூறியதை பிராம்
மணன்கேட்டு, பளாபளா என்றிருக்கின்றது, ஓ பிரம்மஹத்
தியே, என்னவார்த்தைசொன்னாய், உனக்குபயந்துயான் பெற்
றபிள்ளையை இழப்பேனோ, இதோ உன்னை இமைப்போதிற்
றுரத்தும் விதந்தேடுகிறேன்பாரென்று பிராம்மணன்சொல்ல,
அவ்வார்த்தையைக்கேட்ட பிரம்மஹத்தியானது, உக்ரத்தோ
டும் பிராமணனைநோக்கி, அடாபித்தனே, குலமுறைதப்பிந
டந்த கொடும்பாதகனாகிய இவனைப்பிள்ளையென்று அபிமானி
த்துப் பெருந்துன்பத்தைத் தேடிக்கொண்டாய், இதோபார்,

என்னுடையபிரதாபத்தைக் காட்டுகிறேனென்று அவன்புதல்வனாகியசுமதியென்பவனை திடீரென்றுபூமியின்மீதுமோதிவிழுந்து, என்புகள் நெக்குவிடும்படி முருக்கிக் கண்கள் பிதுங்கித் துன்பப்படும்படியாய்த்தாக்கி யதை அவனைப்பயந்த தாய்தந்தையர்கள்கண்டு, சகிக்கமாட்டாமல் இருவரும் அடித்துமோதிக்கீழேவிழுந்து புரண்டு புரண்டழுது சோபமுற்றிருக்கும்போது, ஸ்ரீகயிலாசபதியாகிய சாம்பமூர்த்தியைப்போல் தூருவாசமகாரிஷியானவர், விபூதிருத்ராக்ஷமாலிகாபரணராய் அவ்வீதியி லெழுந்தருளக்கண்டு, சோபமுற்றிருக்குஞ் சுமதியினது தாய்தந்தையர்கள்கண்டு திடீரென் றெழுந்தோடிவந்து, அவருடைய பாதபத்மங்களிற்பணிந்து நமஸ்காரஞ்செய்து, அழைத்துவந்து, தமதுகிருகத்திலே தர்ப்பாசனமிட்டு ஆரோகணிக்கச்செய்து, இருவருமெதிர்நின்று கைகட்டி வாய்புதைத்துத் தங்களுடையபுத்திரனது நடத்தைகளியாவுமெடுத்தோதி, அவனைப்பற்றித் துன்புறுத்தும் பிரமஹத்தியைமாற்றும்படியாகிய மார்க்கத்தை அருளவேண்டுமென்று சரணாகதி யடைந்து நிற்பவர்களைக்கண்ட தூருவாசமகாரிஷியானவர் கூறுவார். கேளும், ஓய்பிராமணா, நீ-இத்தன்மைபொருந்திய துன்மார்க்கனை விரும்பித்துன்புறுகின்றது நன்மையல்லவே, துன்மார்க்கனாக விருப்பானாயின், அவன்பொருட்டு இம்சை எடுத்துக்கொண்டபோதிலுங் குற்றமில்லையென்றுசொல்ல, அதைக்கேட்ட பிராமணன், தூருவாசரைப்பணிந்து, சுவாமி, அடியேன் நெடுநாள் பிள்ளையில்லாமல் தபஞ்செய்துபெற்ற இவன் ஒருபிள்ளையன்றி, வேறுபிள்ளையில்லாமையாலும், எங்களுக்குப்பிறகு எள்ளுந்தண்ணீரு மிறைக்கும்படியாயும்இவன் ஒருவனாலே குலநாசப்படாமல் விர்த்தி யடையும்படியாயும், திருவுளங்கனிய வேண்டுமென்று மிகத்துயரத்தோடும்வணங்கிக்கேட்கும் அவர்களது பரிதாபத்துக்கிரங்கி, தூருவாசமகாரிஷியானவர், வாரும், ஓய்-பிராமணா, மூப்புப்பருவத்தையுடைய நீ மெத்தவுந் துன்பப்படுகின்றபடியால், யாம் ஒருவார்த்தைசொல்லுகின்றோம், அது யாதெனில், உன்குமா

ரன்செய்திருக்குங் காரியங்களையோசித்தால், இவன்செய்திருக்குங் கெட்டநடத்தைகளுக்குப் பரிகாரம் வேதவாக்கியங்களிலுஞ் சொல்லவில்லையாதலால், என்வாக்கியப்படி இப்பூவுலகின்கண் தெட்சணபாகத்திலோங்கும் கந்தமாதனகிரிச்சாரில் ஸ்ரீராமமூர்த்தியாற் கட்டப்பட்ட சேதுபந்தனத்தில் ஓங்குந்தநுக்கோடியில் உன்மகனைக் கூட்டிக்கொண்டுபோய் தீர்த்தமாடச்செய்வையேயாகில், அவனைப்பற்றிய பிரமஹத்தியானது நீங்கிப்போம், அது எப்படியெனில், ஒருகாலத்தில் துருவீதனென்னும் ஓர்வேதியன் தனதுஅன்னையின்மோகத்துக்குட்பட்டு அதனாற் சம்பவித்ததோஷத்தை அந்ததநுக்கோடியில்தீர்த்தமாடி நிவர்த்தி செய்துகொண்டமையால், மகிமை பொருந்திய அப்புண்ணியதீர்த்தத்துக்கு உன்புத்திரனைக்கூட்டிக்கொண்டுபோய்மூழ்கச்செய்வாயென்று மகாரிஷிசொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட எசகதேவனென்னும் பிராமணன், சுவாமி, தேவரீர் திருவாய்மலர்ந்த துருவீதனென்பவன் யாருடையபுத்திரன், அவனுக்கென்னகாரணத்தினால் மாதாவைப்புணர மனமுண்டாயிற்று, அவ்வாறுசெய்தவனுக்கு இந்த புண்ணியதீர்த்தத்தில் மூழ்கும்படியாய்ச் சொன்னவர்யாவர், அவைகளையெல்லாம் அடியேனுக் கருள்செய்ய வேண்டுமென்றுகேட்க, தூருவாசர்கூறுவார், கேளும் ஓய் பிராமணா, வைகைவளநாடென்று சொல்லப்பட்ட பாண்டிநாட்டில், பிரமகுலத்திலுற்பவித்து, இத்துமவாகனனென்னும் நாமகரணம்பெற்று, நான்குவேத ஆறுசாஸ்திரங்களையும் ஓதியுணர்ந்துவல்லவனாகிய ஓர்பிராமணன் அவனுடையவாலிபப்பருவத்தில், பொன்போன்ற தேககாந்தியும் சந்திரபிம்பத்தைப்போன்ற முகமும் தேவாமிர்தம்போன்ற இங்கித வார்த்தையுமுடைய வாகினியென்னும் ஓர்வனிதையைமணந்து கூடிச் சுகித்துவாழுநாளில், அம்மங்கையானவள் அவளதுபதினாறுவயதுக்குள் கெற்பமுற்று ஓர் ஆண்குழந்தையைப்பெற்று அக்குழந்தைக்குத் துருவீதனென்றுபெயரிட்டு வளர்த்துவருநாளில், அவள்மணாளனாகிய இத்துமவாகனனென்பவன் மரணமடைந்தபி

டியால், வாகினிஎன்பவள் மிகவுந்துன்பமடைந்து, குழந்தை
யுந் தாயுமாய்க் காலங்கழித்துவருகையில்,அந்நாட்டில் பன்
னிரண்டுவருடம் வரையில் மழையில்லாமற் பஞ்சமுண்டா
கிப் பாதவிக்கக் காலம்நேர்ந்தபடியால், மிகவும் பசிப்பிணியு
ற்றவர்களாய் மெத்தவும்மெலிந்து,இத்தேசத்தி லிருக்கப்படா
தென் றெண்ணங்கொண்டு, அநேகபிரஜைகளுக்கு ஆதாரமாயு
ம், தானியவகைகள் கூடியவரையிற் கிடைக்கத்தக்கதாயு மிரு
க்குங் கோகரணமென்று சொல்லப்பட்ட பட்டணத்திற்குத்
தனது பிள்ளையோடும் போய்ச்சேர்ந்து ஜீவித்துவருநாளில்,
பிள்ளையாகிய துருவீதனென்பவன் சமர்த்தனும், அதிரூப
சவுந்தரனும், பற்பலபாஷைகளையுணர்ந்து விடயானந்தப்
பருவமுற்றவனா யிருப்பதுகண்ட அவன்தாயாகிய வாகினி எ
ன்பவள், தருணியாதலால் பிள்ளையின்சவுந்தரியத்தைக்கண்டு
மோகங்கொண்டு,இச்சையைக் குறிப்புகளினுற்காட்ட, அதை
யறிந்தகுமாரனுந் தாயென்பதைமறந்து ஒருவருக்கொருவர்
சிநேகஞ்செய்து, காமவின்பத்தை நுகர்ந்திருந்தார்கள், இப்
படியிருக்குங்காலத்தில், இந்த துருவீதனென்பவன், பூர்வபுண்
ணியவசத்தாலுண்டான நல்லறிவினால், ஐயோ,நான் தாயைப்
புணர்ந்தபாவத்தை யெப்படிதொலைப்பேனென்று பரிதபித்து,
அங்கே யொருவனத்திலுள்ள முனிவர்கூட்டத்தையடைந்து,
தன் வரலாற்றைச் சொல்லியவுடனே, அதைக்கேட்ட முனிவர்
களெல்லாம், இந்தப்பாவியைக் கண்டாலும் பாவமென்று
கண்களைமூடிக்கொண்டும், இந்தச்செய்தியைக் கேட்டாலும்
பாவமென்று செவிகளை மூடிக்கொண்டிருந்தார்கள். இதை
க்கண்ட துருவீதன் மெய்கலங்கி, மெத்தவும் வியாகுலத்தை
யடைந்து, பின்னும், அம்முனிவர்களை வணங்கித் தோத்திரஞ்
செய்து, ஓ மாதவர்களே, வினைவலியால் தெரியாமல் நடத்
திய எனது குற்றத்தைப்போக்கி யருளவேண்டுமென்று சர
ண்புகுந்த என்னைச் சிதித்தாத்திறனல் வேறுகதியில்லையே,
அந்தோ, வீணே யான் கெட்டுப்போகின்றேன், என்செய்
வேன், சாகரமானது, ஜலதாரையில் வீழும் கீடத்தைத்தள்ளா

மல், அங்கீகரிக்குந்தன்மைபோற் சண்டாளனாகிய என்னைக்
கடைக்கணித்தாளாவிடில், தமியேன் எவ்வாறுய்வேனென்று
துக்கசாகரத்துட்டோய்ந்துகிற்குந் துருவீதனை, அம்முனிவர்க
ளுக்குள் ஒருவராகிய வேதவியாசர் நோக்கிப் புகலுவார்.
அடா பாதகனே, நீ உனது பாவத்தைப் போக்கவேண்டுமா
யின், யான் சொல்லுவதைக்கேள், யாதெனில், தசரதமகாரா
ஜன் புதல்வனாகிய, ஸ்ரீ ராமமூர்த்தியால் உண்டாக்கப்பட்ட
தநுக்கோடி என்னும், புண்ணிய தீர்த்தமானது, லோகத்தில்
வசிக்கும் மானவர்களினது பஞ்சமாபாதகங்களையும், செய்த
நன்றிமறந்த பாதகங்களையும், குருநிந்தைசெய்த பாதகங்களை
யும், சிநேகத்துரோகத்தால்வந்த பாதகங்களையும், பாரஸ்த்ரீக
மனத்தால்வந்த பாதகங்களையும், சிவாலய விஷ்ணுவாலயங்க
ளுக்குரிய சொத்துக்களை யிச்சித்ததால்வந்த பாதகங்களையும்,
வேதப்பிராம்மணருக்கு ஏதேனும் ஓர் வஸ்துவைத்தருகிறே
னென்றுசொல்லித்தராமல் வஞ்சித்ததனல் வந்தபாதகங்களை
யும், தாயையும், சகோதரிகளையும் இச்சித்துப்புணர்ந்ததனல்
வந்தபாதகங்களையும்,தமையன்பத்தினி,குருபத்தினி,சிநேகன்
பத்தினி, முதலியோர்களை இச்சித்ததால்வந்த பாதகங்களையும்
போக்கிப் புனிதனுக்கி, முத்திவீட்டைத்தருமென்று, சுருதி
வாக்கியங்களாற் சொல்லப்பட் டிருக்கின்றபடியால், யான்
சொல்லும் வண்ணம், நீயும், உனது தாயுமாகச் சேதுவுக்கு
ச்சென்று, அவண் இலகாநின்ற ஸ்ரீ ராமதநுக்கோடி என்
னும் புண்ணியதீர்த்தத்தில் தீர்த்தமாடி, இராமலிங்கத்தைப்
பணிந்து வருவீர்களாயின், உன்னைப்பற்றிய தோஷங்க ள
னைத்தும் பருதிமுன் பனிபோல்விலகிக் கிருதார்த்தனாவாய்,
போய்வரக்கடவை என்றுகூற, அவ்வாய்மையைக் கேட்ட
துருவீதன், மெய்ப்புளகங்கொண்டு, ஸ்ரீ வேதவியாசருடைய
பாததாமரையிற் பணிந்தெழுந்து, பலவாறாய்த் தோத்திரஞ்
செய்து, விடைபெற்று, மீண்டு, மெத்தவுஞ் சந்தோஷங்
கொண்டு, கோகரணம் வந்துசேர்ந்து, தனது அன்னையாகிய
வாகினியைக் கூட்டிக்கொண்டு, பட்டணத்தைவிட்டு நீங்கி

காடு, மலை, வனம், வனாந்தரம், காறு, முதலியவைகளையும், பதிகளையும், தலங்களையும், திவ்ய க்ஷேத்திரங்களையெல்லாங்கடந்து, கந்தமாதன பர்வதச்சார்பிலோங்குஞ் சேதுவைக்கண்டு, அங்ஙனமிலகுந் தநுக்கோடியைத் தெரிசித்துப் பின்பு, உத்தராயன புண்ணியகாலத்திற் சூரியன் மகரத்துக்கு வரும், அமாவாசைதினஞ் சூரியோதயவேளையிற் சங்கற்ப விதியின்படித் தாயும் பிள்ளையுமாய் தீர்த்தமாடி, இராமலிங்கத்தைப்பூசித்துப்பணிந்து, அவ்வாறு முப்பதுநாள்வரையில் தீர்த்தமாடி வருகிறபோது, ஆகாயத்தின்கண், ஓ துருவிதனே, நீ தாயை இச்சித்த தோஷம், நிவர்த்தியாகிவிட்டது, புநிதனாயென்று அசரீரியோத, அவ்வாய்மையைக்கேட்ட இருவரும், மகா சந்தோஷத்தையடைந்து, ஸ்ரீ ராமநாதனைப்பணிந்து, தோத்திரஞ்செய்து, விடைபெற்று, மறுபடியும், வேதவியாசர் எழுந்தருளியிருக்கும், வனத்துக்குவந்து, அம்முனிவருடைய பாதகமலங்களில் இருவரும்பணிந்து, தோத்திரஞ் செய்து, தநுக்கோடியிற் தீர்த்தமாடிவந்தோம், சுவாமி, என்றோத, அம்மொழியைக்கேட்ட வேதவியாசர், களிப்படைந்து, கூறுவார், வாராய் துருவிதனென்னும்புநிதனே, நீ எனது வாய்மையின்படி, தாயும் பிள்ளையுமாய், தநுக்கோடியில் மூழ்கியபோதே, உனதுபாபமனைத்தும், பரிகாரமானதோடும், எம்போலியர்களைக்கண்ட புண்ணியத்தால், விசேஷ கீர்த்தியும், அஷ்ட ஐசுவரியமும் பெறுவாயாதலால், நீ உனது தேசம்போய்ச்சேர்ந்து, மூதுணர்ந்தோர்களால் வேதாகமங்களையுணர்ந்து, வல்லவனாய், உனது குலத்தில் விவாகஞ் செய்துகொண்டு, மறைவிதி பிறழாது, தருமங்களை நடத்தி, ஸ்ரீ கயிலாசபதியாகிய பரமசிவத்தையும், மகாவிஷ்ணுவையும் பூஜித்து, சுகஜீவியாய் வாழ்ந்துவரக்கடவை, போய்வாவென்று விடைகொடுத்தனுப்ப, அவ்விடையை இருவருமேற்றுப்பணிந்து, அவ்விடத்தினின்றும், பிரயாணப்பட்டு, தங்கள் தேசம் வந்துசேர்ந்து, தன்குலத்திற் பெண்ணைவிசாரித்துக் கலியாணமுடித்து, மாபு நெறி தவறாமல் வேதசாஸ்

திரங்களை விசாரணைசெய்து, அம்முறைப்படி நடந்து, புத்ர மித்ர களத்ராதிகளுடனே வாழ்ந்துகொண்டிருக்கையில், துருவிதன் தாயானவள் பரமபதமடைந்தாள். அவ்வாறு அடைந்து, சிலகாலத்தின்பிறகு துருவிதனும், மோட்சசாம்பிராச்சியத்தை யடைந்தானாதலால், அத்தன்மையாகிய மகிமையுற்ற தநுக்கோடியிலே, நீ உனது புதல்வனைக்கூட்டிக் கொண்டுபோய் தீர்த்தமாடி வருவாயென்று, துருவாச மகாரிஷியானவர் சொல்ல, அந்தப்படியே, எசசுதேவன், தனது புத்திரனைக் கூட்டிக்கொண்டுபோய், சங்கற்ப விதியின்படி ஆறுமாதம் வரையிலிருந்து, அப்புண்ணிய தீர்த்தத்தில், மூழ்கிவருகிறபோது, ஆகாய வீதியினின்றும், ஓர் வாக்கு பிறந்தது. அது யாதெனில், ஓ எசசு தேவனே, உனது குமாரனைப்பற்றியிருந்த பிரமஹத்தியானது, தென்றிசைநோக்கி ஓடிப்போனதன்றியும், வேடுவஸ்த்ரீயைப்புணர்ந்த பாபமும், கொலை, களவு, கட்காமத்தால் வந்த பாபமும், இந்த புண்ணியதீர்த்தத்திற் கரைந்தோடிவிட்டபடியால், மகா புநிதனானென்று, அசரீரியோத, அம்மொழியைக்கேட்ட, எசசுதேவன், தனது குமாரனுடைய முகவிலாசத்தைக்கண்டு, சந்தோஷங்கொண்டு, தநுக்கோடியையும், ஸ்ரீ ராமநாதனையும் புகழ்ந்து தோத்திரஞ்செய்து, விடைபெற்றுத் தன்னுடைய பட்டணம் வந்துசேர்ந்து, தனது புதல்வனுக்கு விவாகமகோற்சவஞ் செய்துவைத்துச் சுகஜீவியாய் வாழ்ந்திருந்தானாதலால், நீங்களிரண்டுபேருந் தநுக்கோடியிலேபோய்த் தீர்த்தமாடினால், உங்களுடைய பாபங்களும் விலகி, இச்சன்மமு மொழியுமென்று, சிந்துதிப மகாமுனிவர் உரைத்துச்செல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட நரியுங் குரங்கும், மகா சந்தோஷத்தையடைந்து, அவ்வனத்திலிருந்து பிரயாணப்பட்டு, காடு, மலை, வனம், வனாந்தரங்களெல்லாங் கடந்து, சேதுவிலோங்குந் தநுக்கோடிக்கு வந்துசேர்ந்து, மிக உச்சாகத்துடனே, அத்தீர்த்தத்தில் வீழ்ந்து மூழ்கி, எழுந்திருக்கும்போது, அவ்விரண்டுஞ்செய்த பாபங்களெல்

லாம் நீங்கி, மேன்மையடைந்து, தேவரூபங்களைப்பெற்று, திவ்ய சொரூபமாய், மகாகுண்டல கேயூரமணி மாலைகளோடும், விபூதி, உருத்திராக்ஷமாலைகள், பிரகாசிக்கும்படியாய், ரம்பாஸ்திரீகள் சாமரையிரட்ட, அநேக கோலாகல திவ்ய நாதங்களுடனே, மகாமேருவைப்போற் பிரகாசிக்கப்பட்ட விமானமானது, ஆகாசவீதியினின்றுமிறங்க, தேவர்கள் மலர் மாரிசிந்த, அவ்விமானத்திலேறித் தெய்வலோகம்போய்ச் சேர்ந்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். கேட்டீர்களோ நைமிசாரண்யர்களே, நரியுங் குரங்கும், பெறுதற்கரிய புண்ணியத்தைப்பெற்று, அனந்த போகங்களை, அநுபவித்திருக்கும்படியாய் நேரிட்டது யாது காரணமெனில், ஸ்ரீ ராமசந்திரனுடைய அஸ்த விசேஷத்தினாலும், வரப்ரசாதம்பெற்று விளங்குஞ் சைதன்யசொரூப ராமதநுக்கோடி மகிமையை, ஆதிசேடனுக்குஞ் சொல்ல அரிதென்றால், மற்றயவராற் சொல்லக்கூடுமோ. இதல்லாமலும், அந்த தநுக்கோடியில், துராசாரனென்றொருவன், தீர்த்தமாடி, மோக்ஷசாம்ப்ராச்சியத்தையடைந்தானென்று முனிவர்சொல்ல, அவ்வார்த்தையைக் கேட்ட, நைமிசாரண்ய முனிவர்கள், முனிவரைப்பணிந்து, சுவாமி, அவன் யாவன், அவனுக்கு என்ன காரணத்தால் வினைப்போகம் நேர்ந்தது, எவ்வாறித்தீர்த்தத்தில்வந்து மூழ்கினன். அதை தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்கச் சூதமகாமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

கவிசம்புச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

துராசாரச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண், அலைகள் கொழித்தருவிபாய்ந்தொழுக்கும் சித்திரகூடத்தின்மேல், முகிலினங்கள் தவழ்ந்து விளையாடப்பட்ட வளம் பொருந்திய கவுதமி நதி தீரத்திலே, துராசாரனென்னுமோர் பிராம்மணன் தனது குலாசாரவிதியைச் சொற்பனத்திலும் நினையாதவனாய், எப்போதும் இழிவான காரியங்களிற் பிரவேசித்து, விஷமுந் தீயுங்கலந்ததுபோல், தன்னோடொத்தவர்களின் நட்புக்கொண்டு, பிராம்மண சங்கற்பத்தைமறந்து, தன்னுடன் சேர்ந்த நன்மார்க்கரையுந் தன்மார்க்கத்துக் கேதுவாக்குந்திறமுற்று, உலாவுங்காரணமியாதெனில், நான்குவேதங்களையுமுணர்ந்த, வேதாகமபுராண, சம்பன்ன, வைதிகப் பிராம்மணனாயிருந்தாலும், பதிதனுடன், ஒருநாட் சாவகாசஞ்செய்தால், ஒருபங்கும், இரண்டுநாட் சாவகாசஞ்செய்தால், இரண்டுபங்கும், மூன்றுநாட் சாவகாசஞ்செய்தால், மூன்றுபங்கும், நான்குநாட் சாவகாசஞ்செய்தால், நான்கு பங்குமாக, இவன் புண்ணியமனைத்தும் வியர்த்தப்பட்டு, அவனைப்போல இவனும், பதிதனாகிவிடுவானென வேதங்கள் முறையிடுகின்றபடியால், அத்தன்மைபொருந்திய, துர் நடத்தையும், துற்சாவகாசமும், மிகுதியும் விளங்குவதனாலே, அவனை ஓர் வேதாளமானது பிடித்துக்கொண்டு, அநேகநாள்வரையில், இராப்போதிலிருந்தவிடத்தில், பகற்போதிலில்லாமலும், பகற்போதிலிருந்தவிடத்தில், இராப்போதிலில்லாமலுஞ்செய்வதோடும், முட்களிற்கொண்டுபோய்விடுத்தும், கற்களிற்கொண்டுபோய்மோதியும், மலமூத்திரங்களை யருந்தச்செய்தும், தண்ணீர்கண்ட இடங்களிலெல்லாங் கொண்டுபோய் அமுத்தியும், இப்படி நானாவித உபத்திரவஞ்செய்துவருகிறபோது, ஒருநாள் அவன் முற்செய்த புண்ணிய பலத்தினால், அவனை வேதாளமானது தன்மீது ஏற்றிக்கொண்டு, தென்றிசையிற் சமுத்திரக்கரையோரமாய் வருகிறபோது, ஸ்ரீ ராமமூர்த்தியாற் புதுக்கப்பட்ட, சேதுபந்தனத்திலேயாங்குந் தநுக்கோடி என்னும், புண்ணிய தீர்த்தத்தைக்கண்டு, இதுவும், மற்றஜலங்களைப்போன்றதுதானென எண்ணங்கொண்டு, துராசாரனை அதில் தோய்த்து, ஒருசாமபரியந்தம் அமுத்திக் கொண்டிருக்கும்போது, அவ்வேதாளத்துக்கு அகஸ்மாத்தாய் ஏதோ ஓர் துன்

பழுண்டாகி, துராசாரனை விட்டுவிட்டுக் கோவென்றலறிக் கூக்குரலிட்டுக்கொண்டு, திரும்பிப்பாராமல் ஓடிப்போய்விட்டது, அவ்வாறு வேதாளம் ஓடினவுடனே, துராசாரன் அப்புண்ணியதீர்த்தத்தில், மூழ்கியபெருமையினாலே, அவனுடைய அஞ்ஞானங்களெல்லா மகன்று, தெளிவுபிறந்து, அலைகளை யெறியாநின்ற கவுதமிநதி தீரத்திலிருந்த நாம், இப்போது சமுத்திரக்கரை யோரத்திலிருப்பதற்குக் காரணமியாதென்று யோசித்துக்கொண்டு நிற்கும்போது, மகா உத்தமகுணத்தையுடையயோக நிஷ்டாபரராகவும், சத்திய ஞான பரிபூரணராகவும், சகல வேதசாஸ்த்திர வாக்ய குணசீலராகவும், விளங்கும் தத்தாத்ரேயரென்பவர், வலம்புரிச்சங்கினங்களும், இடம்புரிச்சங்கினங்களுந்தவழ்ந்து விளையாடாநின்ற, தநுக்கோடியில் தீர்த்தமாடவேண்டுமென்று யெண்ணத்தோடும், அவண் வருகையில், அவரைக்கண்ட துராசாரன்பணிந்து தோத்திரஞ்செய்து, கைகட்டி வாய்புதைத்து நின்று கூறுவான், சுவாமி, அடியேன், கவுதமிநதிக்கரை யோரத்திலிருப்பவன், அகஸ்மாத்தாய் இந்த சமுத்திரக்கரையிலிருப்பது எனக்கு ஒன்றுந்தோற்றுமையால், தேவரீர் அடிமை இவ்விடம் வந்தவிதத்தையருள் செய்யவேண்டுமென்றுகேட்க, அவ்வார்த்தையைக்கேட்ட, தத்தாத்ரேயர், கருணையோடும், துராசாரனைநோக்கிப் புகலுவார், ஓய், பிராமணா, நீ பிரம்மகுலத்திற்பிறந்து, இதுவரையிலும், பிரம்மக்கியானமில்லாமல், இழிகுலத்தோரைச்சேர்ந்து திரிந்தபடியினாலே, உன்னையோர் வேதாளமானது பிடித்துக்கொண்டு, நானாவித துன்பங்களுக்காளாக்கி, இந்த தநுக்கோடியினது மகிமையை அறியாமல், உன்னை இங்குக்கொண்டுவந்து, இப்புண்ணியதீர்த்தத்தில் அழுத்துகிறபோது, இந்த தநுக்கோடியிலுள்ள, வடவாமுகாக்கினியானது, வேதாளத்தைக் கொளுத்தித் துன்பப்படுத்தியபடியினாலே, அவ்வேதாளம் பயந்து, நன்மார்க்கத்தையுணர்ந்து, ஓடிப்போய்விட்டது. ஆதலால், இப்போது, உன்னிடமிருந்த துன்பங்களெல்லாமகன்று, பரிசுத்தனாய் விளங்குகின்றதல்

லாமலும், உன்னைப்பற்றியிருந்த வேதாளமானது, மூந்திய ஜன்மத்தில், பிராம்மணனாகப் பிறந்திருக்கும்போது, சூரியன், கன்னியாராசியிற் பிரவேசிக்கச் சந்திரன், கலை குறைந்துவரும் பட்சம், மாளயபட்சமாதலால், அப்புண்ணியகாலத்தில், தன் மாதா பிதாக்களைக்குறித்தும், பிதுர் தேவர்களைக்குறித்தும், அவர்கள் சந்தோஷிக்கும்படியாய் மாளைய சிரார்த்தம், அக்கினிஹோத்திரங்கள் செய்யாமலிருந்த மூடத்தன்மையினாலே, அந்த பிதுர்தேவர்கள், அவனை வேதாளமாய்ப் போகக்கடவதென்று சாபங்கொடுக்க, அதுமுதல் அவன் நாசமடைந்து வேதாளமாகப்பிறந்து, உலகின்கண் அலைந்து திரிகையில், உன்னைக்கண்டுபிடித்து பலபல துன்பங்களைச்செய்து, இந்த தநுக்கோடியில்வந்து மூழ்கினபலத்தினாலே, உன்னை இவ்வனம்விட்டு, தேவசொரூபம்பெற்று, தெய்வலோகத்திலிருந்துவந்த புட்பகவிமானத்திலேறி, பரமபதம்போய்ச் சேர்ந்தானாதலால், இந்த பூமண்டலத்தின்கண் எவர்களாயினும், எத்தேவர்களாயினும், பிறந்திருந்தால், கன்னிமாதத்தில் மாதாபிதாக்களுக்கு எவ்விதமேனும், மாளைய சிரார்த்தம் நடத்தவேண்டும். அப்படி நடத்தாத பாவிகள், இப்படியே நாசமடைந்து, வேதாளமாகப்பிறந்து, சந்திர சூரியர்களுள்ளளவும், அலைந்து துன்பப்படுவார்கள், அதற்குச்சந்தேகமிராது, அந்தக்கன்னிமாதத்தில், பிதுர்தேவர்களுக்குறித்தாய், உத்தமராகிய பிராம்மணர்களுக்கு, போஜனஞ்செய்யும்படி, கொடுக்கப்பட்ட புண்ணியவான்கள், சொற்கலோகத்தையடைவார்கள். அப்படி செய்யாதவர்கள், உன்னைப்பற்றி யலைத்துக்கொண்டிருந்த வேதாளமாய்ப்பிறந்து திரிவார்கள், இதல்லாமலும், இந்த மாளையபட்ச சிரார்த்தங்களைக் கன்னிமாதமுதல், விருச்சிகமாதம் வரையினும், செய்யவேண்டியகாளாய்விதித்திருப்பதினாலும்; புரட்டாசிமாதஅமரபட்ச பிரதமைமுதல், அமாவாசை பரியந்தம், முக்கியதினங்களாய் விளங்கப்பட்ட பிரதமையில், மாளையஞ்செய்தபேர்களை அக்கினிபகவான், முதலிய தேவர்களெல்லாஞ் சந்தோ

ஷப்பட்டு, தங்களுடைய லோகத்தில் சுத்த சிலராய் விளங்கும்படி செய்துகொள்ளுவார்கள். அப்படி செய்யாத பாவிகளை, அவர்கள் பாக்கியங்களையெல்லாமழித்து, பிதுர் தேவதைகளாலே, ஓர் கற்பகோடிகாலம்வரையில், மீளாத்துன்பத்துக்கேதுவாகும்படியாகிய சாபத்தைக்கொடுப்பார்கள். அதில் இரண்டாவது, மாளயத்தைப் பிதுர்தேவதைகள் சந்தோஷிக்கும்படியாய், நடத்திவைப்பார்களாகில், அவர்களை திரிநேத்திரதாரியாகிய, சாம்பமூர்த்தி எழுந்தருளியிருக்கும், ஸ்ரீ கயிலாசகிரியிலே, எப்போதும், விளங்கச்செய்வார்கள். அப்படி செய்யாதபேர்களை, உமாமகேசனது, ஆஞ்ஞையின்வண்ணம், யமகிங்கிலியர்களாலே வாதைப்படச்செய்து, நரகத்திற்கிடத்துவார்கள். மூன்றாந்திதியாகிய திரிதிகை தினத்தில், மாளயத்தை நடத்தி, அதனால் பிதுர் தேவதைகள் மனமகிழ்ச்சியடைந்தால், அவர்கள் ஈசுவர கடாக்ஷம் பெற்று, நவநிதிகளுடனே வாழ்ந்திருந்து, முடிவில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், என்னும், இம் மூவர்களுக்குரிய பதங்களையும்பெற்று, மூவாயிரம் வருடம் வரையில் சந்தோஷத்தோடிருப்பார்கள். அப்படி நடத்தாதவர்களுக்கு, அவர்களுடைய மனமானது வெதும்பவும், கிடைத்திருந்த பாக்கியங்கள் நாசப்படவும், சாபங்கொடுப்பார்கள். நாலாந்திதியாகிய, சதுர்த்தி தினம், மாளயஞ்செய்து, பிராம்மணருடைய மனங்களிக்கும்படியாய்ச் செய்தவர்கள், கன்னமதம், கபோலமதம், பீஜமதமென்னு மும்மதம் பொழியத்தக்க யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளினது, அருளைக்கமுற்று, போகபாக்கியங்களையும்,புத்ரமித்ரகளத்ராதிகளோடும் வாழத்தக்க பெருமையையுமடைவதோடும், அவர்கள்மீது பிதுர்தேவதைகள்,இருபதினாயிரங்கோடிகற்பகாலம்வரையும் மகிழ்ச்சியடைவார்கள். அவ்வாறு செய்யாதவர்கள், சண்டகோலாகலமென்று சொல்லப்பட்ட நரகத்திற்கிடந்தலைவார்கள். ஐந்தாவது, பஞ்சமியில் மாளயஞ்செய்தவர்கள், தங்களுடைய இல்லத்தில், மகாலட்சுமியானவள் எப்போதும்

வாசஞ்செய்யவும், சகலபோகபாக்கியங்களையெல்லாம்பெற்று, சந்திரசூரியாளுள்ளவரையிலும், நெடியகீர்த்திபொருந்தி, ஐம்பதினாயிரம் வருடம்வரையில், அவர்களுடைய சந்ததியார், குறைவின்றி வாழும்படியாய், பிதுர்தேவதைகள் வாக்களிப்பார்கள், அப்படிசெய்யாதவர்கள், மூத்தாளென்னும் மூதேவியினதுநட்புக்கொண்டு, மனக்கலக்கத்தோடும், பெருந்துன்பத்தையடைவார்கள், சஷ்டிதினத்தில், மாளயஞ்செய்தபேர்கள், ஸ்ரீகயிலாசபதியாகிய, பரமசிவத்தினது, நுதல்விழியினின்றும், ஆறுபொறியாகவெழுந்த, சண்முகக்கடவுளினது, கிருபையினால், அஷ்டஐசுவரியமும்பெற்று, முடிவில் அக்கடவுளினது பதத்தைப்பெற்று வாழ்வார்கள். அவ்வாறுசெய்யாதவர்கள், எரி குமி, என்னப்பட்ட நரகத்துக்காளாக விருப்பதோடும், அன்னவர்களுக்கு உற்பவிக்குங் குழந்தைகளை எல்லாம், சுப்பிரமணியக்கடவுள், நசிக்கச்செய்வதல்லாமலும், பூமியில்,அநேகவிததுன்பங்களையடைந்து, பிதுர்தேவதைகளாற் சாபங்கொடுக்கப்படுவார்கள், சப்தமியில், மாளயஞ்செய்தபேர்கள், சூரியபகவானுடையகிருபையினாற் போகபாக்கியங்களும், புத்ரமித்ரகளத்ராதிகளும்பெருகி, சகலநோய்களுமணுகாமல், புஜபலபராக்ரமராயுந்தருமபரிபாலனராயும் மேன்மையான பாக்கியங்களைப்படைத்து வாழ்வதோடும், பிதுர்தேவதைகள், எழுபதினாயிரம்வருடம்வரையில் திருப்தியடைவார்கள், அப்படி நடக்காதவர்கள், க்ஷயரோகத்தை யடைந்து, அதனாலேதேகமிளைத்து, மாளும்படியாய், பிதுர்தேவதைகளாலே சாபமுற்று, இரவுரவாதி நரகங்களையடைவார்கள். அஷ்டமியில், மாளயஞ்செய்தபேர்களுக்கு அஷ்டமூர்த்தியின்கிருபையினால், பிருத்ராக்களடையாமல், புண்ணியலோகமுதற் பதினன்குலோகத்திலுள்ள பொருள்களையும் எளிதாகப்பெற்று, வாழும்படியாய், ஆயிரவருடம்வரையில், அவர்களுடைய பிதுர்தேவதைகள், சந்தோஷத்தையடைவார்கள். அப்படி நடத்தாதவர்கள், கோழைமல மூத்திரமாகிய, துன்பசாகரத்திலாழ்ந்து கரையேறமாட்டாமல், நட்சத்திரங்

களும், சந்திரனுமுள்ள வரைக்கும், வைதரணியிலமுந்தி,
நாசத்தையடைவார்கள், நவமிதினத்தில், மாளையம்நடத்தின
பேர்களுக்கு, மாயாசத்தியாகிய தற்கையினுடைய கிருபை
யினால், குமரகண்டம், குருத்திரம், வேதாளமுதலியபேய்,
சயரோகம், இப்போக்கொத்த வினையாவுமணுகாமல்,சுகஜீவர்
களாயிருப்பதோடும், முப்பதினாயிரவருடம்வரையில், அவர்
களுடைய பிதுர்தேவதைகள், சந்தோஷத்தை யடைவார்கள்.
அப்படிசெய்யாதவர்கள், மேற்சொல்லியநோய்களுக்குரியவர்
களாகி, நாசமடைவதன்றியும், மீளாநரகங்களுக்கும் ஏதுவா
வர்கள், தசமிதினத்தில், மாளையஞ்செய்தபேர்களுக்கு, சந்திர
பகவானுடையகிருபையினாலே,அவர்கள், இட்டபயிரெல்லாம்
விளைந்து, சகலதான்னியங்களுமபிவிர்த்தியாய், லட்சுமிகடா
க்ஷமுண்டாகும்படியாய், ஆயிரம்வருடம்வரையில், அவர்கள்
பிதுர்தேவதைகள், சந்தோஷத்தையடைவார்கள், அப்படி
நடத்திவையாதவர்கள், தங்களுடையதேஜசும், ஆயுசும்,வேளா
ண்மையும், கீர்த்தியும், புகழும், நாசமாய்ப்போகும்படியாய்ப்
பிதுர்தேவதைகளாலே சாபம்நேர்ந்து, இரவுரவாதிநரகத்தை
யடைவார்கள். ஏகாதசிதினத்தில், மாளையஞ்செய்தபேர்கள்,
பரமேசுவரனுடைய கிருபையினால், அவர்களைப்பற்றிய பிரம்
மஹத்தி தோஷங்களெல்லாம் நிவாரணமாகி, அநேகம்யாகாதி
கிர்த்தியங்கள்செய்த பலனைப்பெற்று, நூறாயிரம் வருடம்
வரையில் தங்கள் பிதுர்தேவதைகளாற் சந்தோஷத்தையடை
வார்கள். அவ்வண்ணமிழையாதவர்கள்,மேற்கூறியபலன்களை
எல்லாமிழந்து, நரகமேகதியாகவிருப்பார்கள். துவாதசிதினத்
தில், மாளையஞ்செய்தபேர்கள், மகாலட்சுமி சமேதரான, ஸ்ரீ
மந்நாராயணமூர்த்தியின் கிருபையைப்பெற்று, சதாகாலமும்,
சரஸ்வதியும், இலட்சுமியும் தாண்டவஞ்செய்யும் படியாயும்,
சகலஜீவராசிகளுந்தங்களை வாழ்த்தும்படியாயும், சகலநோய்
களும் நிவாரணமாய், பாக்கியசம்பன்னராய், புத்ரமித்ரகளத்
ராதிகளுடனேயிருக்க, பிதுர்தேவதைகளும், மனமகிழ்ச்சி
யடைந்து, இலட்சம்வருடம்வரையில், ஆனந்தபோகங்களை

அநுபவிப்பார்கள், அவ்வாறு, அத்திதியிற்செய்யாதபேர்கள்,
பூதவேதாளபசாசகணங்களாலும்,குமரகண்டமுதலியவியாதி
களாலும், துன்பப்பட்டு, நரகமேதங்களுக்கு சொந்தபூமியாக
விருந்து, நலிவார்கள். திரயோதசிதினத்தில், மாளையஞ்செய்
வாராயின், அவர்கள், ஸ்ரீவைகுந்தநாதன் புத்திரனாகிய, பஞ்ச
பாணனுடைய அருளால், குங்குமகதம்ப களபகஸ்தூரிக
ளென்னும், வாசனைத்திரவியங்களோடும், அதிரூபலாவண்ய
முடைய அநேகம்ஸ்த்ரீகளோடும், மன்மதனைப்போல போக
பாக்கியங்களை அநுபவிக்கும்படி, பிதுர்தேவதைகள் கோரிச்
சந்தோஷத்தை யடைவார்கள். அவ்வாறு நடவாதவர்கள்,
உருவங்கள் குலைந்து, புத்திரபாக்கியங்களுமற்று தனகனக
வஸ்து வாகனங்களுக்கும் அயல்கி நாசத்தையடைந்து,
எத்தனைஜன்மமெடுத்தபோதினும், ஈடேறாமல், நாசத்தை
யடைவார்கள், சதுர்த்தசிதினம், மாளையபட்சம், செய்வாரா
யின், அவர்கள் ஸ்ரீபரமேசுவரனுடைய அருளினால், வேண்
டியபாக்கியங்களை யெல்லாம்பெற்று,நூறிறுதயாராய்,பெறுதற்
கரியமோட்ச வீட்டையடைவார்கள். அவ்வாறு செய்யாதவர்
கள், அவர்கள் ஜன்மங்கடோறும், கொலை, களவு, கள்,
காமம், வஞ்சனை, சூது, பொய், முதலிய துர்க்காரியங்களுக்
கெல்லாந் தலைமைபூண்டவர்களாய், நீசஸ்த்ரீகளைச் சேர்ந்து,
வேண்டாதபோகங்களை நுகர்ந்து, ஆயிரம்யாகங்களைக்கெடுத்
த தோஷத்துக்குரியவர்களாய், நூறுகோடிவருடந்தீராதகுஷ்
டவியாதியினால் வலியிலகப்பட்டும், அவர்கள்செய்த பாபங்களுக்குப் பரிகார
மில்லாமல், செய்யாமற் ஜெனித்தபாதகங்களும், உண்ணும
துற்றபழிகளும், அவர்களுக்கே யுண்டாகும்படியாய் பிதுர்க்
களினுடைய சாபம்நேர்ந்து, வாக்கினாலும் மனத்தினாலும்
அளவுபடுத்தப்படாத நரகத்தை யடைவார்கள். அமாவாசை
யில் மாளையஞ்செய்து, பிராம்மணர்களும், பிதுர்தேவதைகளுஞ்
சந்தோஷப்படும்படியாய், அன்னமிட்டு,தட்சணை தாம்பூலங்
கள் தளர்ச்சியில்லாமற்கொடுத்து மகிழ்வுறச்செய்தவர்கள்,
ஸ்ரீகயிலாசபதியாகிய சாம்பமூர்த்தியின் கருணைபெற்று மகி

ழ்வதோடும், அவர்கள்பிதிர்கள் அடையு மகிழ்வைச்சொல்லிமுடியாது, அதிலும்,சமுத்திரதீர்த்திலாயினும், நதிக்கரையிலாயினும்,பருவதங்களிலாயினும், புண்யக்ஷேத்திரங்களிலாயினும்சென்று மாளையஞ்செய்வார்களாயின் அவர்களுடையபிதுர்க்கள் மெத்தவுஞ் சந்தோஷத்தையடைந்து, பிரம்மஹத்திமுதலிய பஞ்சமாபாதகங்களும், நிவாரணமாகி, யாகாதிகிர்த்தியங்கள், எக்கியங்கள், அளவுபடாத தானதருமங்கள், செய்தபலன் கிடைப்பதன்றியும், ஞானமும்கைகூடும், அப்படி அமாவாசையிற் செய்யாமல் மவுட்டமாயிருந்துவிட்டவர்கள், எவர்களோ, அவர்களுடைய பிதுர்க்களியாவரும், பிரமலோகமடைந்திருந்தாலும், அவர்களை யாதொரு தயைதாட்சண்யமில்லாமற் பிடித்துக்கொண்டுபோய் எமகிங்கிலியர்களாலேஇரவுரவாதிநரகங்களிலே தள்ளுவதல்லாமலும், அவர்பரம்பரையிலுள்ளயாவருக்கும், பிள்ளைகளற்றுநாசமடையவும், கொள்ளியற்றுப்போகவும், கருக்களழியவும்,நோய்கள்மேலிடவும்,இரவுரவாதி நரகங்களும்வாய்க்கும், இதல்லாமலும் கன்னிமாதமுழுவதும், நித்தியப்படியாய் பிதுர்க்களைக்குறித்து ஓர் பிராம்மணனுக்கு அரிசிகாய்கறி பதார்த்தங்கள் கொடுத்தாலும், தேவதைகளுக்கு அபிஷேகமுதலிய நிவேதனங்கள் பிதுர்க்கள்பேரற் செய்தாலும், மஹேசுரபூசைசெய்தாலும், அவர்புத்ரமித்ர களத்ராதிகளுடனே வாழ்ந்துசுகிப்பார், இதல்லாமலும், அந்தபுரட்டாசிமாதங்களில் அபரபட்சசப்தமி, துவாதசிக்கு முன்னும், அஷ்டமி திரயோதசிக்குப்பின்னும், மூன்றுபிராம்மணருக்கு அன்னங்கொடுத்தால், அவர்களுக்குப் பெரும்புண்ணியங்களுண்டாகி வாழ்ந்திருப்பார்கள். அவ்வாறுநடத்தும் மாளயங்களில் லோபமில்லாமல் தன்னுடையசக்திக்கிணங்க கொடுப்பதிலும், பால், பழம், சர்க்கரை, வெல்லம், எள்ளு, கோதும்பை, பருப்புமுதலியவைகளைத் தளர்வில்லாமல் பிராம்மணருக்குக் கொடுக்கவேண்டும். அப்படி கொடுக்கும் பதார்த்தங்களில், தங்கள்மனமறிய எச்சிலுறும்வைகளை இச்சியாம விருப்பதாகப்பார்த்துக்கொடுத்துச்சாப்

டும்படியாய்ச்செய்தபுண்ணியர்களை,பிரம்மா,விஷ்ணு,ருத்திரனென்னுந் திரிமூர்த்திகளும், பிதுர்தேவதைகளும், சந்தோஷத்தையடைந்து வாழ்த்துவதோடும், சொற்கமத்ய பாதாளமென்னு மூன்றுலோகத் துள்ளவர்களுஞ் சந்தோஷத்தையடைவார்கள். மேலும், அக்கன்னிமாதத்தில் தாய்தந்தையர்வழியிலுண்டானவர்களைக்குறித்து, தங்களாலியன்றமாத்திரம், அன்னம்சட்சுவைபதார்த்தத்தோடு தெட்சணை தாம்பூலங்கொடுத்து, அக்கினிஹோத்திரஞ்செய்து மாளயங்கொடுத்தபேர்களுக்கு உண்டாகத்தக்க புண்ணியத்தைச் சொல்லவேண்டுவதில்லை, மேலும் அம்மாளயஞ்செய்வதற்கு மைந்தர்களிலாவிடின், தன்னுடைய பத்தாவைக்குறித்து அக் கைம்பெண்ணுகவிருப்பவள் மாளயஞ்செய்யலாம், அவ்வாறுசெய்தால் தெட்சணைகொடுக்காமற் செய்யவேண்டும், மீறித் தெரியாமற்கொடுத்துவிடுவளாயின், அவள்செய்திருந்த தருமமனைத்தும் வியர்த்தப்பட்டு, மாபுமொழிந்து, பிரம்மஹத்தி தோஷங்களுண்டாகி, இரவுரவாதி நரகத்துக்கேதுவாம். அக்கன்னிமாதமுழுவதும் செய்யவேண்டிய மாளயங்களைச்செய்யாமல், இருந்துவிடுவாராயின் அவர்கள்முற்சொல்லிய கருமங்களுக்கு பாத்திராவார்களென்பதை நிச்சயமாகஎண்ணவேண்டும், செய்தவர்களுக்கோவெனில், அநேக சுகிர்தங்களும், மோட்சங்களுங் கைவல்லியமாம், ஆகலால் மாதாபிதாக்க ளிறந்ததிதிகளிலே அகத்தியஞ்செய்யவேண்டும், செய்யாமல் அசந்தர்ப்பம் நேரிடுமாயின், கடையாய்வரும் அமாவாசைத் தினமாவது, அகத்தியம் நடத்திவைக்கவேண்டும். அப்படியும் நடத்துவதற்கு ஏதுவற்ற தாரித்திராகவிருந்தால், விசிட்டாத்வித விசாரணையுடைய பெரியோர்களான பிராமணரிடத்திலாவது, பொருள்கேட்டு வாங்கிநடத்தலாம், அவர்கள் கொடாதபட்சத்தில், நல்லநிதியையுடைய க்ஷத்திரியரிடத்திற் பொருளேற்றுநடத்தலாம், அவர்களு மில்லையென்று சொல்லுவாராயின் வாணிபஞ் செய்யப்பட்ட வைசியரிடத்திற்பெற்று நடத்தலாம், அன்னவருங் கொடாவிடில், மேழிச்செல்வத்துக்குரிய

வேளாளரிடத்திற்பெற்று நடத்தலாம், இவ்வகையாவரு மியாமற்போவாராயின், மாளயசிரார்த்தத்தைக்குறித்து அன்றைய தினம் நல்லகோக்களுக்குத் தன்னாலியன்றமாத்திரம் உணவுகள் கொடுக்கவேண்டும். அவ்வாறுமில்லாவிடில் காடி,புலி,சிங்கம், காட்டானைமுதலிய விலங்கினங்கள் சஞ்சரிக்கும்படியாகிய காட்டகத்திற்குச்சென்று தன் மரபிலுண்டாகிய பிதுர்தேவதைகளையும், அந்தேவதைகளையும் நினைந்து, ஓ பிதுர்தேவதைகளே, பாபியாகியயான், உங்களுக்கு இன்றையதினம் மாளயங்கொடுப்பதற்கு எதுவில்லாதவனாகவும், ஏற்கப்போன இடங்களிலுங் கிடைப்பதரிதாகவு மிருப்பதால், என்செய்வேன், எவ்வாறுய்வேன் என்று, தனது உண்மைவிளங்கும்படியாய், இருகண்களினின்றும் தண்ணீர்தாரை தாரையாய்பெருக, இருகரங்களாலும் வயிற்றிலும் முகத்திலுமறைந்து துக்கசாகரத்துட் டோய்ந்தானென்றால், அப்பிதுர்தேவதைகள் யாவுமொருங்குகூடிநோக்கி, அந்தோ,என்செய்வானென இரக்கமுற்றுச் சந்தோஷங்களுண்டாகி அநேக மாயிரங்கோடி பிராம்மணாள் மகிழும்படியாய் மாளயசிரார்த்தஞ்செய்த சந்தோஷத்தையடைந்து அவனுக்கு, அநேகம்வரங்களைக்கொடுத்துப்போவார்கள்,அவ்வணஞ்செய்யப்பட்ட மாளயசிரார்த்த மாதங்களிலே துன்பத்தைத்தாநின்ற சூதகமுதலிய இடையூறுகள்உண்டாயின் அன்றையதினம் நல்லதலங்களுக்குப்போய் அஸ்தமிக்குமளவும் அவணிருந்து வேதாகமங்களையுணர்ந்த பிராம்மணருக்கு போஜனஞ்செய்து வைக்கவேண்டும், அவ்வாறுநடத்தாமற் கேவலமானவர்களுக்குச் செய்துவைத்தால் அதனைச்செய்துவைத்தவர்களுக்கு கீனமுண்டாகுமாதலால் அத்தினத்தில் பிதா பிரபிதா,மகாப்பிரபிதா,மாதா,மகாமாதா, பிரபிதாமாதா,இவ்வாறுபேர்களுக்கும் பிண்டங்கள்செய்து, அதனோடு தருமபிண்டமுஞ் செய்யவேண்டும். அதில் முன்சொன்ன ஆறுபேருக்கும் ஆறுபேர்களும் இரண்டுமரபுக்கு இரண்டுவிசுவதேவரும் ஒரு விஷ்ணுவுமாகிய ஒன்பதுபேர் க

ளுக்குஞ் சட்சுவைபோஜனஞ் செய்து வைக்கவேண்டும். அப்படி செய்வதற்கில்லாதவர்கள் மாதாவின்கால்வழிக்கு ஒருவரும் பிதாவின்கால்வழிக்கொருவரும் விசுவதேவரிருவருக்கொருவரும் மகாவிஷ்ணுவுக் கொருவரும் ஆகிய நாலுபேர்களுக்காவது உணவுசெய்துவைக்கவேண்டும்,இதுபோல் மாளயத்தை நிறைவேற்றுவானாயின் அவன் அநேகயாகாதிகிர்த்தியங்கள்,அக்கினிஹோத்திரங்கள்,சாந்திராயண விரதமுதலிய[illegible] தருமங்கள், தீர்த்தயாத்திரைகள் செய்தபலனோடும்பெரியோர்களை தெரிசித்தபலனும் வேதமந்திரபாராயணங்கள் இதிகாசமுதலியபுண்ணியகதைகளைக் கேட்டபலனைப் பெற்று பிரம்மலோகம்விஷ்ணுலோகமென்னுமிவ்விரண்டுலோகவாழ்வையும் பெறுவார்கள், மேலும் நித்தியகரும மாகிய இந்தமாளயசிரார்த்தத்தால் இஷ்டகாமிய போகபாக்கியங்களைப் பெறும்படியாய் அவர்களுடையபிதுர்தேவதைகள் ஆசிகூறுவதோடும் பூதப்பிரேதபசாச கணங்களியாவும் அப்புண்ணியரைக் கண்டாற் காதவழிவிலகிப்போம்,ஆதலால் இந்த மாளயசிரார்த்தவிதிகளை வசிஷ்டர்வாக்கியப்படி தசரதமகாராஜன்செய்து ஸ்ரீமந்நாராயணன் முதலியநான்கு பிள்ளைகளைப்பெற்று அநேக மேன்மைகளையடைந்தார், நளச்சக்கரவர்த்தியும் தனது மங்கையாகிய தமயந்திதேவியைநீங்கி, சகிக்கப்படாத துன்பத்தையநுபவிக்கும்போதும் அயோத்தியாபட்டணத்திலே தான் சேவகாவிர்த்திசெய்துகொண்டு வருகிறபோதும் தான்செய்யவேண்டிய மாளயசிரார்த்தத்தைத்தவறும[illegible]டத்திவந்தபடியினாலே மறுபடியுந் தனதுமங்கையைக்கூடி அநேகபோகபாக்கியங்களோடும் இராச்சியபரிபாலனஞ்செய்துவந்தான், இதல்லாமலும் அரிச்சந்திரமகாராஜனிடத்தில் விசுவாமித்திரனவன் வஞ்சத்தினால் இராச்சியத்தைப்பறித்துக்கொண்டு அவன் பெண்பிள்ளையோடும் வனத்துக்கனுப்புகையில்அப்போது அவ்வேந்தன் மனைவியைக்காசிபட்டணத்தில் விலைப்படுத்தியும் தான் புலையனுக்கடிமைப்பட்டும் பிள்ளையைப்பறிகொடுத்தும் பற்பலதுன்பங்களுக் குரியவனாகவிருந்த காலையில் மாளயசி

ராத்தங்களைத் தவறாமல் நடத்திவந்தபலனாற் பழயபடி இராச்சியத்தைப்பெற்று சுகித்துக்கொண் டிருந்தார்; இதல்லாமலும் தசரதகுமாரனாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் தன்னுபத்தினியோடும் தம்பியாகிய இலட்சுமணனோடுஞ் சித்திரகூடபருவதத்திலே யிருந்து பிதாவுக்குப் பதினான்குவருடமுங்காலங்களிற்றவறாமல் மாஸியசிராத்தங்களை நடத்திவந்ததனாலே இராவணராட்சதனை ஜெயங்கொண்டு சீதையின் சிறைவிடுத்து அயோத்தியா பட்டணம்வந்து சேர்ந்து பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்துவந்தார். இதல்லாமலும் குந்திமக்களாகிய ஐவர்களும் தமதுபத்தினியாகிய துரோபதையோடும் பன்னிரண்டுவருடம் வரையில் வனத்திற்றிரிகிறபோது மாஸியசிராத்தங்களைத்தவறாமல் நடத்திவந்தமையினாலே அவர்கள் தாயாதிகளாகிய துரியோதனாதிகளை எல்லாமுடித்து அஸ்தினாபுரியைப் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார்கள். இதுவுமல்லாமல் கௌதமர் அத்திரி வசிஷ்டர் பரத்வாசர் வேதவியாசர் பிருகு ஆங்கீரச அஷ்டவக்கிரர் மிருகண்டேயர் காசிபர்முதலான இருடிகளும் முனிவர்களும் தபோதனர்களும் இந்த மாஸியசிராத்தங்களை விதித்தகாலங்களில் தத்தம் தேவிமார்களுடனே தவறாமல் நடத்திப் பிதுர் தேவதைகளிடத்தும் அதிதேவதைகளிடத்தும் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதமகிமைகளினாலே அணிமாவாதி அஷ்டசித்திகளும் அஷ்டாங்கயோகங்களும் பரகாயப்பிரவேசங்களும் ககனமார்க்கத்திற் செல்லுந்தன்மையும் பெற்று ஆனந்த போகங்களைக்கடந்து மோட்சசாம்பிராச்சியத்தையடைந்திருக்கிறார்கள். இவ்வாறு ஜீவன்முத்தரானபேர்களும் மாஸியசிராத்தங்களைத்தவறாமல் நடத்துவராயின் மற்றபேர்கள் எப்படி நடத்திவைக்கவேண்டும், ஆதலால் மறைவிதியிலோதுங் கன்னிமாதங்களில் மாஸியங்கொடாததனால் குச்சரதேசத்தில் வாழ்ந்துகொண்டிருந்த பரத்வாசனென்னும் பெயரினையுடைய பிராமணனது குமாரன் வேதநாதனென்பவன் வேதாளசொரூபங்கொண்டு இதுவரையினும் உன்னைப்

பிடித்து துன்பப்படுத்திக்கொண் டிருந்து, உன்னை விட்டு நீங்கி, அவன் மோட்சத்தை யடைந்தபடியால், இப்போது உன்னுடைய துன்பம் நீங்கிவிட்டதன்றியும், உன்னைப்புநிதனாக்கியபடியால், நீ இதுமுதற் கன்னிமாதங்களிலே, மாஸியந்தவறாமல், செவ்வையாய் நடத்திக்கொண்டு வருவாயேல், அநேக செல்வங்களை யநுபவிப்பாய்; இத்தன்மையுடைய பூதவேதாளங்களும், உன்னை அணுகமாட்டாது, போய்வரக்கடவையென்று தத்தாத்திரேயரும், துராசாரனுக்கு விடைகொடுத்துச் சென்றபிறகு, தான் தநுக்கோடியிலே தீர்த்தமாடி, விபூதி, ருத்திராட்சந்தரித்துக்கொண்டு, ஸ்ரீ ராமநாதனைவணங்கித் தோத்திரஞ்செய்து, தன்னுடைய பட்டணம் வந்துசேர்ந்து வாழ்ந்துகொண்டிருந்தான், கேட்டீர்களோ, நைமிசாரணியர்களே, பின்னர் தனது பட்டணத்திற்சேர்ந்து, சுகித்திராநின்ற துராசாரன், தத்தாத்திரேயர் வாய்மையின்படி, வேதப்பிராமணன் முதலிய பெரியோர்களுக்கு தனது பிதுர்க்களைக்குறித்து, மாஸிய சிராத்தங்களைத் தவறாமல் நடத்திவைத்து, அதனாலே அநேக போகபாக்கியங்களைப் பெற்று வாழ்ந்து, தநுக்கோடியிலே ஸ்நாநஞ்செய்தபலத்தால் மோட்சவீட்டையடைந்தான். ஆதலால், ஓ முனிவர்களே, இந்த தநுக்கோடியிலே மாஸியஞ்செய்யாத பாபங்களையும், சூத்திரனுக்குச் சிவலிங்கபூசையால்வந்த பாபங்களையும், சிவசொரூபத்தை விஷ்ணு சொரூபமாய்ச்செய்தவர்களுக்கு நேர்ந்த பாபத்தையும், தேவர்களையும், தேவப்பிராமணர் முதலிய பெரியோர்களையும், தாய்தந்தையர்களையும், நிந்தனைசெய்து, அதனாற் சம்பவித்த பாபங்களையும், தன் மரபினர்களுடைய சொத்துக்களையபகரித்து ஜீவனஞ்செய்து, அதனாற் சம்பவித்த தோஷங்களையும், குருபத்தினி, தமயன் பத்தினிகளை இச்சித்ததனால்வந்த தோஷங்களையும், செய்நன்றி மறந்த தோஷங்களையும், தான் எதிர்ச்சவாரிசெய்த குதிரையையும், தான் வாசித்த சாஸ்திரங்களையும், தேவரூபச்சிலைகளையும், தடாகங்களையும், தருமாலயங்களையும், பிறருக்கு

விற்பனை செய்ததால் வந்த தோஷங்களையும், வேதசாஸ்திரப் பரிகாரங்களிலுந் தீரப்படாத பாவங்களெல்லாம், இந்த தநுக்கோடியைக்கண்டவுடனே, பஞ்சபஞ்சாய்த் தூள்தூளாய் சிதறிப் பறந்துபோய்விடுமாதலால், முனிவர்களே, அந்த ராம தநுக்கோடியிலே, இத்தன்மை பொருந்திய மகிமைகள், கோடாநுகோடியாய் விளங்கிக்கொண்டிருப்பதோடும், உலகின்கண்ணுறைங்குஞ் சகல முனிவர்களும், சித்தர்களும், யோகீசுவரர் முதலிய தேவர்களுஞ் சக்ரவர்த்திகளும், மகாராஜாக்களும், பிரயாணப்பட்டுவந்துசேர்ந்து, தநுக்கோடியில் இடங்கிடைப்பதரிதாய், நெருங்கித் தீர்த்தமாடுவார்களாயின், யாம் அதன் பெருமையை என்னவென்று சொல்லப்போகின்றோம். ஆதலால், அச்சேதுவுக் கருகாயோங்குங் கந்தமாதனச்சாரலில் வயங்குஞ் சக்கரதீர்த்தமுதலாக, இருபத்து நான்கு தீர்த்தம், தநுக்கோடிவரையில் மேன்மைபொருந்தி விளங்குவதோடும், அதற்கு மேற்பாலாகச் சேதுவிலே பாலோடை என்று ஓர் புண்ணிய தீர்த்தமிருக்கின்றதென்று சூதமுனிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர்கள் முனிவரைப்பணிந்து, சுவாமி, தேவரீர் அத்தீர்த்தம் வந்த காரணத்தை அடியோங்களுக்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று வினவ, சூதமகாமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

அராசாரச் சருக்கம்

முற்றுப்பெற்றது.

பாலோடைச் சருக்கம்.

கேளுங்கள், நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, முன்னர் மகிஷாசுரனைச் சம்மாரஞ்செய்த தேவியானவள், குடிகொண்டிருந்த தேவிபட்டணத்துக்கு மேற்பாலாய் சேதுவில் புல்லாரண்யமென்றோர் வனமிருக்கின்றது, அவ்வாரண்யத்திலே, ஸ்ரீ ராமமூர்த்தியானவர் தெற்பசயனஞ் செய்தரு

ளிலே, அவ்விடத்தில் ஓர் ஆலயமும், புல்லக்கிராமமென்று ஓர் க்ஷேத்திரமும், விளங்கிக்கொண்டிருப்பதால் அந்த க்ஷேத்திரத்திற் கீகுண்டமென்று சொல்லப்பட்ட பாலோடையென்னும், ஓர் புண்ணிய தீர்த்தம் உண்டு, அத்தீர்த்தத்தைக் கண்ணினாற்கண்டாலும், அத்தீர்த்தத்திலோர் திவலை மானவர்கள்மீது பட்டாலும், அதனைப் புகழ்ந்து பேசினாலும், அன்னவர்களுக்கு அஞ்ஞானங்களெல்லாமகன்று, அவர்கள் கருதிய இஷ்டபோகபாக்கியங்களும், அநேக யாகாதி கிர்த்தியங்கள் செய்தபலனும், உண்டாமென்று சூதமாமுனிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்ய முனிவர்கள், சந்தோஷமடைந்து, சுவாமி, அப்பாலோடை என்னுந் தீர்த்தத்திற்கு என்னகாரணத்தால் அவ்வளவு மகிமையுண்டானதோ அதனைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க, சூத முனிவர் கூறுவார், கேளுங்கள் முனிவர்களே, முற்காலத்திலே உற்கலனென்று சொல்லப்பட்ட ஓர் வேதமுனிவருடைய அநுக்கிரகத்தினாலே விளங்கப்பட்டது, அஃதெப்படி எனில், வேதாகம சாஸ்திரங்களையெல்லாங் கரைகண்டவராகியும், மகா தபத்தை யுடையவராகியுமிருக்கும், முற்கலமுனிவர், தென் சமுத்திரக்கரையிற் புல்லாரண்யமென்று வழங்கும் க்ஷேத்திரத்திற்கு வந்து, நிர்மலமான மனத்தையுடையவராய், மகாவிஷ்ணுவைநோக்கி அரிதாகிய தபமும், யாகமுஞ் செய்யும்போது, ஸ்ரீ வைகுந்தவாசராகிய மகாவிஷ்ணுவானவர் சந்தோஷத்தையடைந்து, தேவர்களெல்லாம் புடைசூழ இலட்சுமி சமேதராய் கெருடவாசனத்திலெழுந்தருளி, முற்கலமகாமுனிவருக்குத் தெரிசனந்தந்தார். அப்போது முற்கல மகாமுனிவர், ஸ்ரீ வைகுந்தநாதனைக்கண்டு கண்களித்து, மிகு பக்தி விநயத்தோடும், வேதவாக்கியங்களாலுஞ் சகஸ்ர நாமங்களுந் தோத்திரஞ்செய்து, கைகொட்டி, ஆனந்தக்கூத்தாடி, அஷ்டாங்க பஞ்சாங்க கிரியாக்காராய், ஸ்ரீமந்நாராயண மூர்த்தியினது பாதகமலங்களிற் பணிந்து, நமஸ்கரித்து, கண்களினும், ஆனந்தபாஷ்பமானது தாரைதாரையாய்ச்சிந்த மகா

உற்சாகத்துடனே ஸ்மரணைசெய்து நிற்கையில், மகாவிஷ்ணுவானவர் கிருபாநோக்கத்தோடும், முனிவரைநோக்கிக்கூறுவார். வாராய், முற்கலமகாரிஷியே, நீயும் நம்மைவேண்டி, அருமையாகிய தபங்களையுஞ்செய்தமையால், யாம் சந்தோஷமடைந்து, உம்முடையயாகத்தில் அவிர்ப்பாகம்பெறவேண்டி வந்தோமென்றுசொல்ல, அவ்வுரையைக்கேட்ட முற்கலமுனிவர், ஆனந்தசாகரத்துட்டோய்ந்தவராய்க் கூத்தாடி, அண்டசராசரங்களையெல்லாம் உண்ட அழகிய வாயினாலே அவிர்ப்பாகமுண்ணவேண்டுமென்று சொன்ன வாக்கியத்தை நினைந்து நினைந்து, ஆனந்தத்தை யடைந்தவராய், அம்புராசி என்று சொல்லுந் திவ்யான்னங்களும், பதார்த்தங்களும், மகாவிஷ்ணு முதலிய தேவர்களெல்லாமகிழும்படியாய் பக்குவஞ்செய்தமர்த்தி, மறுபடியுந் தோத்திர வசனமாய், சுவாமி, வேத வேதாந்தமூர்த்தியே, தேவரீருடைய அருளினால் எனது தேவியும், யானும், கிருதார்த்தராகிவிட்டோம், நாங்கள் இப்புல்லாரண்ய க்ஷேத்திரத்திலிருந்து செய்த தபமும், ஈடேறியதால், மகா யோகிகளாகிய மார்க்கண்டேர், பிரகலாதர் முதலிய சித்தபுருஷாள், பரமபாகவதாள், இவர்களுடைய இருதயமும், அடியேனுடைய யாகசாலையும், ஒத்திருக்கும்படியாய்த் திருவுளங்கொண்டு ஆட்கொள்ளவந்ததே போதும் போதுமென்று, பாரிஜாத, செண்பக, மந்தாரமுதலிய புட்பங்களினாலே அர்ச்சனைசெய்து, பின்னர் சுகந்தமுலாவுஞ் சந்தன களப கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களைக்கொண்டு, பாதாதிகேசபரியந்தம், மகாவிஷ்ணுவுக்குத் திமிர்ந்து, யாகத்திற் குற்றமற்றதாய் விளங்கும், அவிர்ப்பாகமளித்து, முற்கலமகாமுனிவர் உபசாரஞ்செய்ய, அப்போது மகாவிஷ்ணுவானவர் மாவலிச்சக்ரவர்த்தியினிடம், மூன்றடிமண்கேட்டுத்தாரையேற்ற கரங்களினாலே அவிர்ப்பாகத்தைதவாரியுண்டு மகிழ்வடைந்தார், அவ்வாறு ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் முற்கலமுனிவர்நிமித்தம் அவிர்ப்பாகமுதலிய உணவுகளையுட்கொள்ளுவதைச் சகலதேவர்களும் பெரி

யோர்களுங்கண்டு ஆனந்தத்தையடைந்தார்கள், அப்போதுமகாவிஷ்ணுவானவர் சகல அண்டபிண்ட சராசரங்களும் அவற்றிலடங்கிய உயிர்களும் திருப்தியடையும்படியாய் உணவுகொண்டருளிச்சந்தோஷமடைந்துகூறுவார், வாராய்முற்கலமகாரிஷியே, உமது விஷயத்தில் யாம் மிகவுந்திருப்தியடைந்தமையால் இனி உமக்கு வேண்டியதைக்கேளுமென்று சொல்ல, அப்போது முற்கலமுனிவர்ஜகதீசனைநோக்கி, சுவாமி, கல்லைப்பெண்ணாக்கிய தேவரீரதுபதாம்புயங்கள் அடியேன்செய்தயாகசாலையை மிதித்ததேபெரும்பாக்கியமன்றோ, இன்னம்வேறேயான் என்ன விரும்பப்போகின்றேன், ஆயினும் இன்னம் நாயேனுக்குளோர் ஆசையிருக்கின்றது, அதுயாதெனில, சூரியோதயமுதல் அஸ்தமிக்குமளவும் அஸ்தமனமுதற் சூரியோதயமளவும் இடைவிடாமல் தேவரீரைக்குறித்து வேதங்களாற்கூறப்பட்டக்ஷீரயாகம் பண்ணவேண்டுமென்று, எளியேன் சிந்தையிலுத்தேசித்தவண்ணம் அதற்குத் தளர்வில்லாமற் பால் கொடுப்பதற்குப்பசுக்களும் அவைகளுக்குப்பாலுங் குறைவின்றிப் பெருகவேண்டியதாய் எண்ணமிருப்பதால் அவை யீடேறச்செய்யவேண்டுமென்று கேட்க, அதற்கு வைகுந்தநாதன் சந்தோஷத்தையடைந்து, தெய்வலோக விசுவகர்மனை வரும்படியாய்ச் சிந்தையில்நினைத்தார், அப்படிநினைத்த மாத்திரத்தில், உடனே விசுவகர்மன் அதையறிந்து, அக்கணமே தெய்வலோகத்தினின்றும் நீங்கிப்புல்லாரண்யம் வந்துசேர்ந்து ஸ்ரீவைகுந்தநாதனைக்கண்டுவணங்கினன். வணங்கின விசுவகர்மனைப்பார்த்து, விஷ்ணுவானவர், ஓ விசுவகர்மனே, இவன் பரிசுத்தமாயிருக்கும்படியாய் கற்களினாற் படிகள் பரப்பி, உன்னதமாயிருக்கத்தக்க ஓர் தடாகம் உண்டுபண்ணித்தருவாயென்று கட்டளையிட, அதுபோல் விசுவகர்மனுந் தடாகத்தைக்கட்டி முடித்தான். அதைப் பன்னகசயனன்கண்டு சந்தோஷங்கொண்டு, பொன்னுலகத்தில் வசிக்குஞ் சுரபி என்னும் பசுவை வரும்படியாய் நினைத்தமாத்திரத்தில், அச்சுரபியும் அதுபோல் வந்துசேர்ந்து மகாவிஷ்ணுவைக்கண்டு

வணங்கித் தோத்திரஞ்செய்கையில், விஷ்ணுவானவர் சுரபியைப்பார்த்து, வாராய் சுரபியே, இப்புநிதராகிய முற்கல மகாரிஷியானவர், க்ஷீரயாகஞ்செய்யக் கருதியதால், அந்த யாகம் நிறைவேறுமளவும், நீ அந்தி சந்தி இரண்டுவேளையினும், இத்தடாகத்தைப் பாலினாலே நிரப்பி வைக்கக்கடவையென்று உத்தரவுகொடுக்க, அவ்வாறே சுரபியும், அத்தடாகம் நிறையும்படியாய் தனது மடியிலே விளங்குகின்ற ஓர் முலையினாலே பால் நிரம்பும்படியாய்ச்செய்ய, அதைக்கண்ட மகாவிஷ்ணுவுஞ் சந்தோஷத்தையடைந்து, இதுவுமென்னைக் குறித்துச்செய்கின்ற யாகமானபடியினாலே, எப்போதும் இம்முநிவரிடமிருந்து, இத்தடாகத்தை நிரப்பிக்கொண்டிருக்கக் கடவையென்று கட்டளையிட்டு, பின்னர், முற்கலமகாமுநிவனைநோக்கிச் சொல்லுவார், வாராய் முற்கலனே, உமக்கு இந்தச்சுரபியானது எப்போதும், குறைவின்றிப் பால்கொடுத்துவரும்படியாயும், இத்தடாகம் நம்முடைய திருப்பாற்கடலுக்குச் சமானமாய் விளங்கிக்கொண்டிருக்குமாதலால், இதுமுதல் இத்தடாகத்தில், தீர்த்தமாடும்பேர்களுக்கு அவர்களைப்பற்றிய அஞ்ஞானமியாவுமகலச்செய்து, நமது லோகத்தைத்தருவதோடும், இதற்குக் குண்டமென்றும், பாலோடை என்றும், பெயர் விளங்கிக்கொண்டிருக்கும். மேலும், நீ இதில் ஒங்கும் பாலினாலே நினைத்த யாகங்களைமுடித்து, பின்னர் நம்முடன்வந்து கலந்திருக்கக்கடவையென்றுவாக்களித்து, தேவர்களோடும், மகாவிஷ்ணுவானவர் ஸ்ரீ வைகுந்தத்திற்கு எழுந்தருளினார், அதுமுதற் சுரபியானது, விஷ்ணுவின் உத்தரவின்படி தளர்வில்லாமல், தடாகத்தைப் பாலால் நிரப்பிக்கொண்டிருக்க, முற்கலமுநியும், அப்புல்லாரண்ய க்ஷேத்திரத்திலே வாசஞ்செய்துகொண்டிருக்கையில், ஒருநாள் அவருடைய தேகத்தை பாம்பானது, தனது சட்டையை மாற்றினதுபோல மாற்றி எறிந்துபோட்டு, தனதுதேவியுந்தானுமாய் விஷ்ணுசொரூபம்பெற்று ஸ்ரீ வைகுந்தவாழ்வைச் சேர்ந்தார். கேட்டீர்களோ நைமிசாரண்

யர்களே, இப்பேற்கொத்த மகிமைபொருந்திய பாலோடையின் பெருமையை, யாவராற்சொல்லி முடியுமாதலால், அப்புண்ணிய தீர்த்தமாடின பேர்களுக்கு, அநேக புண்ணியங்கள், யாகாதிகிர்த்தியங்கள் செய்தபலன் கிடைப்பதோடும், ஸ்ரீமகாவிஷ்ணுவினது பாதகமலங்களும் சொந்தமாம், ஆதலால், முன்னொருகாலத்தில் இந்தப் பாலோடையிற் கத்துருவென்று சொல்லப்பட்டவள் தீர்த்தமாடித் தனது பெருந்துன்பங்களைப் போக்கினளென்று சூதமாமுநிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர்கள், சுவாமி அக்கத்துருவென்பவள் யார், அவளுக்கு என்னவிதமாய்த்துன்பஞ் சம்பவித்தன, அவைகளையெல்லாம், அடியோங்களுக்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று கேட்கச், சூதமுநிவர் அம்முநிவர்கள், வினவியவைக்குச் சிந்தைமகிழ்ந்துகூறுவார்.

பாலோடைச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

கத்துருச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முநிவர்களே, மறைவிதிபிறகூறும், கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் கலியுகமென்னும் நான்குயுகத்தில், முதல்யுகமாகிய கிரேதாயுகத்தில், சிருஷ்டிகர்த்தாவாய் விளங்கும் பிரமனுக்கு கத்துருவென்றும்வினதையென்றும், இரண்டுபெண்களுண்டு. அப்பெண்களை, காசிபமகாரிஷி, என்பவருக்குப், பாணிக்கிரகணஞ் செய்து கொடுத்திருந்ததில், மூத்தவளாகிய கத்துருவென்பவள்வயிற்றில், அனந்தன், வாசுகி, தக்ஷகன்முதலிய அஷ்டமாநாகங்களும், இளையவளாகிய, வினதை, என்பவள், வயிற்றில் கருடன், அருணன், கரடி, கிளி, கூகை, மான்முதலிய, சத்துருக்களாகிய ஜெந்துக்களும்பிறந்து, பாதாளலோகத்திலும், பூலோகத்திலும் வாசஞ்செய்துகொண்டிருந்தன, அப்படி இரு

க்கையில் கத்துருவும்வினதையும் அந்தரங்கமாய், இல்லத்தி லிருந்து வாழ்ந்துவருநாளில், ஒருநாளிரண்டுபேரும், மாலைப் போதில், வேடிக்கையார்த்தமாய் பூங்காவனத்திற்குப்போய், சுகந்தமுலாவும், மலர்களைப்பறித்து விளையாடிக்கொண்டிருக் கையில், தெய்வலோகத்தினின்றும், தேவராஜனுடைய, உச் சைச் சிரவாவென்னும், புரவியானது, அவ்வனத்துக்குநே ராய், அந்தரமார்க்கத்திற் பறந்துபோகிறபோது, அதைக்க ண்ட, கத்துருவென்பவள், வினதையைநோக்கி, அடிதங்காய் அதோ ககனத்தின் கண் பறந்துபோகும்படியாகிய, குதிரை யின் வால் கறுப்போ வெள்ளையோ வென்றுகேட்க, அதற்கு வினதையானவள்தனதுதமக்கையை நோக்கி, அடி அக்கச்சி, அப்புரவிக்கு வால்சுத்த வெண்மையா யிருக்குதென்றாள், அதற்குக் கத்துருவாகிய மூத்தாள், அடி தங்காய், நீ சொல் லுவது, அபத்தம், அதற்கு வால், கறுப்பென்றாள், இப் படி ஒருவருக்கொருவர் தர்க்கஞ்செய்து பின்பு தங்களுக் குள் உண்மையைச் சொன்னவர்களுக்குப், பொய் சொன் னவர்கள், அடிமையாகிறதென்று, சபதஞ் செய்துகொண் டவர்களாய், தங்கள் வீடுபோய்ச் சேர்ந்திருக்கையில், கத் துரு வென்பவள், தங்கைக்குத் தெரியாமல், இரகசிய மாய், தனது,பிள்ளைகளாகிய, அனந்தன், வாசுகி என்னும் பா ம்புகளை வருவித்து, தங்களிரண்டுபேருக்குள், நடந்திருக்கிற சபதவார்த்தையைத் தெரியப்படுத்தி, அப்புரவியின்வாலை உ ங்களுடைய விஷத்தினாற் கறுப்பாகச்செய்து வைக்கவேண் டுமென்று தாயானவள்சொல்ல, அதைக்கேட்ட நாகங்கள் கோபித்து தாயைநோக்கி, ஓ-அம்மணி, நீ தேவஸ்த்ரீயாயிரு ந்து பொய்வார்த்தை சொன்னதுமன்றியில், எங்களையும் அ தற் குடன்படச்சொன்னது தகுதியல்லவேஎன்று மறுத்துச் சொல்ல, உடனே அந்நாகங்களின் தாயாகிய கத்துருவென்ப வளுக்குக் கோபம்பிறந்து, அவைகளைப்பார்த்து, நீங்கள் என் பிள்ளைகளாயிருந்தும் என்வாக்கைப் பழுதவரும்படியாய்ச் செய்ததனாலே நீங்களியாவரும் இதற்கு நான்காவதா யுகமாகி

யகலியுகத்திற் பரிக்ஷித்து மகாராஜனாற்செய்யப்பட்ட சர்ப்ப யாகத்தில் நாசப்படக் கடவீர்களென்று சபித்தாள், அச்சா பத்தை ஏற்றவைகளிற் கார்க்கோடகனென்னும் பாம்பானது பயந்து தாயைநோக்கி, ஓ-அம்மணி, யான் உன் மனம்போற் செய்துவைக்கிறே னென்றுசொல்ல, அதைக்கேட்ட தாயான வள் அந்நாகத்தைநோக்கி, நீ - அவ்வாறு செய்வையேயாகில், அந்தயாகத்தினின்றும் நாசப்படாமல் உயிர்பெறக்கடவையெ ன்று வாழ்த்தினாள். அவ்வாழ்த்துதலைப்பெற்ற கார்க்கோடக னென்னுஞ் சர்ப்பமானது தெய்வலோகத்திற்குப்போய் அங் குள்ள புரவியைக்கண்டு சிநேகித்து, அதினுடைய வாலைமா த்திரந் தனதுவிஷத்தினாற் கறுப்பாகும்படிச்செய்து, பிறகு அவணின்றும் மீண்டு தனதுதாயாகிய கத்துருவென்பவளிட த்தில் வந்துசொல்லிச் சந்தோஷிக்கச்செய்து, தனது இருப்பி டமாகிய பாதாளலோகம்போய்ச் சேர்ந்தது, அப்பால் கத்து ருவென்பவள், தனதுதங்கையாகிய வினதையை அழைத்து; வாராய் தங்கையே, நாமிருவருஞ் செய்திருந்தசபதத்தின்படி. தெய்வப்புரவியினுடைய வாலைப்பரிக்ஷிக்க வேண்டியிருப்ப தால், அதனோடும் சிந்தாமணியையும், மகாலட்சுமியையும், அயிராவதத்தையும்,சந்திரனையும்,உச்சைச்சிரவா வென்னும் அப்புரவியையும், பாற்கடலுக்குப்போய்ப் பார்த்துவருவோ மென்று வினதையை அழைத்துக்கொண்டு க்ஷீராப்தியினிட ம்வந்துசேர்ந்து, அங்கே உலாவிக்கொண்டிருந்த தெய்வப்புர வியைப் பார்க்கும்போது, அதன்வால் கறுப்பாயிருக்கக்கண் டு,வினதையை, சபதத்தின்படி கத்துருவென்பவள், அடிமை ப்படுத்திக்கொள்ள, அதுபோல் அவளுஞ்சம்மதித்து அடி மைப்பணி செய்துவருகையில், அவள்புதல்வனாகிய கருடன் தபஸ்திலிருந்தும்மீண்டு, மகா உத்தண்ட கெம்பீர சவுரியபரா க்கிரமத்துடனே சகலருங்கண்டு துதிக்கும்படியாய் வருகை யில், தனது சொருபத்தை ஒடுக்கிக்கொண்டு தாயாகிய வின தையையும், பெரியதாயாகிய கத்துருவையுங்கண்டு வணங்கி னான், அவ்வாறு வணங்கியபோது, கத்துருவென்பவள் மன

தில். வினதை நமக்கு அடிமைத்தொழில் செய்வதால் அவளுடைய பிள்ளைகளும் நமக்கு அடிமைகளாகவேண்டுமல்லவோவென்று யோசித்தவளாய் கருடனைப்பார்த்துச்சொல்லுவாள், அடா கருடனே, நீ-எனது பிள்ளைகளாகிய சர்ப்பங்களை உனது பிடரியிற்றூக்கிக்கொண்டுபோய்ச் சகலலோகங்களையுங் காண்பித்து வருவாயென்றுசொல்ல, அதுகேட்ட கருடன் நமதுபெரியதாய், தனதுபிள்ளைகளுக்கு உலகங்களைக் காட்டும்படியாய் விருப்பத்தோடுங் கூறியவார்த்தையென்று மனதில் வஞ்சகம்வையாமல், அவ்வாறே சர்ப்பங்களை எல்லாந்தனது பிடரியிற் றூக்கிக்கொண்டுபோய் சகலலோகங்களையுங் காண்பித்துக்கொண்டு வருகிறபோது, சூரியமண்டலத்திற் சூரியனுடைய வெப்பத்தினாலே அங்காகங்கள் சகிக்கமாட்டாமல் அவதிப்படுவதை கருடனானவன்பார்த்து, தேவராஜனைச்சிந்திக்க, அஃதுணர்ந்த இந்திரன், சித்திரசேனனென்னு மேகத்தையழைத்து மழைபெய்யும்படியாய்க் கட்டளையிட, அதுபோல் மழைத்துளிகளை மேகமானதுபெய்துவர, அப்போது அங்காகங்களுக்குத் தாப சோபங்களெல்லாந்தீர்ந்து பழையபடி கெம்பீரத்தையடைந்து இருக்கையில், கருடன் சர்ப்பங்களைக்கொண்டுவந்து தனது பெரியதாயாராகிய கத்துருவென்பவளிடத்தில்விட, அவளும் தனதுபிள்ளைகளைப்பார்த்துமகா சந்தோஷத்தை யடைந்தவளாய்ப் பின்னுஞ்சொல்லுவாள். அடாகருடனே, நான் தேவலோகமுதலியவைகளைப் பார்க்கவேண்டி இருப்பதனாலே உனதுதாயாகிய வினதையின்பேரிலேறிக்கொள்ளுகின்றேன், நீ - இன்னொருவிசை சர்ப்பங்களை எடுத்து உன்தோளிற் போட்டுக்கொண்டு வருவாயென்று சொல்ல, அதைக்கேட்ட கருடன் இதென்ன இவள்கிஞ்சித்தேனு மிரக்கமில்லாமல் அடிமைத்திறம்போற் பேசுகின்றாள், இதுயாதுகாரணமென்று தனதுதாயைக்கேட்க, அதற்கு அவன்தாயாகிய வினதையும் கருடனைப்பார்த்து, அப்பாபுத்திரனே, நாங்களிரண்டுபேருந் தெய்வலோகப்புரவியாகிய உச்சைச்சிரவாவென்னும் புரவியானது ஆகாயத்தில்வரக்கண்டு

அதன்வால் நான்வெண்மை என்றுசொன்னேன், உனதுபெரியதாய், கருநிறமுடையதென்றாள், அதன்மீது ஒருவர்க்கொருவர் தர்க்கங்கள்நேரிட்டுத் தோற்றவர்கள் ஜெயித்தவர்களுக்கு அடிமைத்தொழில் செய்கிறதென்று சபதம்பண்ணி அப்புரவியைப் பரிக்ஷிக்கும்படியாய்ப் போய்ப்பார்த்தபோது கறுப்பாகவிருந்தமையால், தோல்வியடைந்த யான், அடிமைசெய்து வருகின்றேனென்றுசொல்லி, வியாகுலப்பட்டாள், அவ்வுரைகேட்டு கருடனுந்துன்பமடைந்து, கோபித்துநிற்பதைக்கண்ட வினதைகூறுவாள், வாராய் அப்பாபுத்திரனே, இனி நாம்அழுது ஆவதென்ன, ஆனபடியினால், நீ-உனதுபெரியதாயாரையும், அவளுடைய பிள்ளைகளையும்நோக்கி, ஓர் வார்த்தை கேட்பாயாக, அதுயாதெனில், நானும் எனதுதாயும் உங்களுக்கு அடிமைப்பட்டுப் பணிவிடைசெய்து வருவதால், எங்களுக்கு ஓர்குறையுமில்லை, ஆயினும், இந்தசபதவார்த்தைக்கு எப்போது விமோசனகாலமென்று நீயாய் கேட்பதுபோலக் கேட்டுவருவாயென்று சொல்லியனுப்ப, அவ்வாறே கருடனுஞ்சம்மதித்து, கத்துரு முதலிய சர்ப்பங்களைநோக்கி, ஓ அம்மணி, என் தாயானவள் செய்த வாக்குவாதந் தப்பிவிட்டபடியால், நாங்கள் உங்களுக்கு அடிமைத்தொழில் செய்கின்றோம், இதற்கு விமோசனம் எப்போதென்று கருடன் கேட்க, அதற்கு கத்துருவானவள் கருடனைப்பார்த்து, அடா, கருடனே, பாற்கடலிற் கடைந்தெடுத்த தேவாமிர்தத்தை நீ கொண்டுவந்து எனக்கும், என் பிள்ளைகளுக்குங் கொடுப்பாயாகில், அத்தினமே இச்சபதம் நீங்கி, எப்போதும்போல் வாழ்ந்திருக்கலாமென்று சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட கருடன், அப்படியே யாகட்டுமென்று, கத்துருவினிடத்தில் விடைபெற்றுத் தனது தாயாகிய வினதையினிடம் வந்து, கத்துருவினது அபிப்பிராயத்தை யறிவித்து, யான் போய் அமிர்தங்கொண்டுவந்து கொடுத்து, அடிமைத்தொழிலை நீக்குகிறேனென்றுசொல்லித் தனது தாயாரிடத்தில், ஓ அம்மணி, நான் பெரியதாயின் பிள்ளைகளாகிய விஷ

ஜெந்துக்களை எடுத்துக்கொண்டு, லோகா லோகங்களெல்லாம்போய்த் திரிந்துவந்தமையால், தேகமானது வருந்தி, மெத்தவும் பசியாயிருப்பதால்; என் பசியடங்கும்படியாய் உணவு எங்கேயிருக்கின்றது சொல்லுவாயென்று கேட்க, அதற்கு வினதையானவள் கூறுவாள், அப்பா புத்திரனே, நீ போகும்படியாகிய வழியில், சமுத்திரக்கரைக் கருகாமையாகவிருக்கும் ஆரண்யத்தில், ஸ்த்ரீகளும், புருஷர்களுமாய்க் கூடி வாழ்ந்துகொண்டிருக்கும், பாபிகளாகிய வேடுவர்களில், ஒரு பிராமணன், ஓர் வேடிச்சியைக்கூடிச் சுகித்துக்கொண்டிருப்பதால், அவ்வேதியன் பாதகனாயினும், பிரமதேஜசோடுங் கூடியவனாதலால், அவனைமாத்திரம் நீக்கி, மற்றவர்களையெல்லாங்கொன்று, உன்பசி நோயைத் தணிப்பாயென்று வினதையானவள் சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட கருடன் சந்தோஷத்தை யடைந்து, தாயினிடம் விடைபெற்று, விசுவரூபங்கொண்டு, மகா பராக்ரமத்துடனே ஆகாயவீதியிற்கிளம்பி வருகிறபோது, அன்னைசொன்ன உரையின்படி, அவ்வாரண்யத்திலே அநேகங் கோடானகோடி ராட்சதாள், பெரியோர்களாகிய தபோதனர்களை யெல்லாம், இமிசை செய்த தோஷத்தால், வேடுவராக ஜனித்து, அக்கானகத்தில் வாசஞ்செய்து வருவதால், அவர்களைக்கண்ட கருடன், வடவாமுகாக்கினியைப்போற் சீறி எழுந்து, தனது கால்களிலுள்ள கூர்மை பொருந்திய நகத்தினாலும், மூக்கினாலும், செட்டைகளினாலுந்தாக்கி மோதியும், பத்தல் பத்தலாய்ப் பிளந்தும், மூக்கினாற் கொத்தியும், செட்டைகளிலுள்ள காற்றினால், திசர் திசைகளிற் போய்விழச்செய்தும், கால் வேறு, கை வேறு, உடல் வேறு, தலை வேறாகச்செய்தும், பிடித்து விழுங்குகிறபோது, தனது அன்னை உரைத்த பிராமணனையும், அடையாளந் தெரியாமல் விழுங்கும்போது, கருடனுடைய கண்டத்தில், அக்கினிச்சுவாலையாய் பிரம்மதேஜசு சொலித்தமையால், உடனே இதென்ன காரணமென்று பயந்து, விழுங்கியதைக் கக்கியமாத்திரத்தில், பிராம்மணன் உயிரோடிருந்தமையால், கருடனைக்கண்டு அச்சங்கொண்டு, நடுங்கிக்கூறுவான். ஐயா கருடனே, நான் ஒரு வேடுவ ஸ்த்ரீயைச்சேர்ந்து, வாழ்ந்திருந்தேனாதலால், இப்போது என்னை இரட்சித்ததுபோல, அவளையும் ரட்சிக்க வேண்டுமென்று பணிந்து கேட்க, அப்போது கருடன் கருணைகூர்ந்து, அந்த பிராம்மணனை நோக்கி, ஓய் பிராம்மணா, நீ உனது பிராம்மணீகந்தப்பி, எவ்வாறு நடந்தபோதினும், பிரம்மதேஜசு பொருந்தி யிருக்கின்றபடியால், நீயும் உனது ஸ்த்ரீயும், ஓடிப்போய்விடுங்களென்றுகூற, அவ்வுரையைக்கேட்ட பிரம்மணன் சந்தோஷத்தையடைந்து, அப்படியே தானும், தனது நேசியாகிய வேடிச்சியும், ஓடிப்போய்விட்டார்கள். அப்போது பிராமணனைக் கருடனானவன் தூக்கிக் கண்டம்வரையில் விழுங்கிக் கக்கினபடியால், தனக்கு சிரமுதற் கண்டம்வரையில், பிரம்மதேஜசு பொருந்தி, தவளநிறமாய் வெளுத்தது. பின்பு அங்குள வேடர்களை எல்லாம், சங்காரஞ்செய்து, பதினாயிரம், இருபதினாயிரம், முப்பதினாயிரமென்றும், அளவிறந்தபேர்களை அழித்து பட்சணம்பண்ணி, அதாஹுதப்படுத்தி, அக்கணமே அவணின்றுந் தனது தந்தையாகிய காசிபர் தபஞ்செய்து கொண்டிருக்கும், வனத்துக்கு வந்துசேர்ந்து, தாதையைக்கண்டு நமஸ்காரஞ்செய்து, தங்களுக்குள் நடந்திருக்கும் வர்த்தமானங்களையும், இப்போது தான்வந்த காரியத்தையும் சொல்லியதல்லாமலும், தனது பசியின்பொருட்டு வழியில் வேடுவரைக் கொன்று தின்றதையும் புலப்படுத்தி, இன்னம் எனது பசி தணியாதிருப்பதாற் பசிநோய் தணியும்படியாய் அநுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று கேட்க, அப்போது காசிபர் கருடன் கூறியதைக்கேட்டு மனமகிழ்ச்சிகொண்டு சொல்லுவார், அடா புத்ரனே, நீ போகும் மார்க்கத்திலே, மகா விசாலம்பொருந்தியதாகவும், பார்ப்பதற்கு பயங்கரமாகவும், சமுத்திரத்தைப்போல விளம்பமென்னும் பெயருள்ள ஓர் தடாகமிருக்கின்றது, அத்தடாகத்தில் விபாவசுவென்னுமோர் பிராம்மணன்

தனது தம்பியாகிய சுப்பிரதீகனென்பவனோடு பொருள்விஷயத்தைப்பற்றி, ஒருவருக்கொருவர் விகாதம் னேரிட்டு அடித்துக்கொண்டும், கோபமடங்காமல் ஒருவரையொருவர் சபித்ததின்பேரில், அவர்களில் விபாவசுவென்னும் பெரியவன் மூன்றுயோசனை உயரமும், பத்துயோசனை நீளமுமாகிய ஆமையாகவும், இளையவன் ஆறுயோசனை உயரமும், பன்னிரண்டுயோசனை நீளமுள்ள யானையாகவும், பிறந்து ஆமையானது குளத்திலும், யானையானது வனத்திலுமிருந்து, ஓர் நாள் ஜலம் அருந்தும்பொருட்டு, குளத்துக்குவந்த தம்பியானையை ஆமையாகவிருக்குந் தமயன் முன்கொண்டிருந்த மற்சரத்தை விடாமல் ஜலத்துக்குவந்த யானையைப் பிடித்துவிடாமற் போராடிக் கொண்டிருக்கின்றபடியால் அவர்களையெடுத்து பட்சணஞ்செய்து உன் பசிநோயைத் தணிப்பாயென்று தந்தை சொல்ல, அதைக்கேட்ட கருடன் மகாசந்தோஷத்தையடைந்து, தந்தையைவணங்கி விடைபெற்று, ஆகாயவீதியில் எழும்பி, மகா உச்சாகத்தோடும் வருகிறபோது, விளம்பமென்னும் பொய்கையில் தனது தந்தை உரைத்தவண்ணம் யானையும், ஆமையும், ஒன்றுக்கொன்று இழுத்துக்கொண்டிருப்பதைக்கண்டு கருடனானவன் பூமியிற்றாழ்ந்து தனது இரண்டுகால்விரலால் யானையையும், ஆமையையு மிடுக்கித்தூக்கி மறுபடியும் ஆகாயவீதியிற்கிளம்பி அதை வைத்து பட்சணஞ்செய்வதற்கு இடங்கிடைக்காமற் தேடிக்கொண்டுவரும்படியாகிய மார்க்கத்தில், அநேகங்கிளைகளோடும், விழுதுகளோடுந்தழைத்து, நூறுயோசனை உயரமும், நூற்றைம்பதுயோசனை விஸ்தாரமுமுள்ள ஓர் ஆலவிருட்சமானது, உரோகணி என்னும் நாமதேயத்துடன் வளர்ந்திருப்பதைக்கண்டு, இவ்விருட்சத்தின்மீதிறங்கி இதை பட்சணஞ்செய்வோமென் றெண்ணங்கொண்டவனாய், மெதுவாய் அம்மரத்தின்மீது இறங்கும்போது, அம்மரத்தின் கிளைகள் கருடனையும், அவனாற்கொண்டுவரப்பட்ட வஸ்துக்களையுஞ் சுமக்கமாட்டாமல், முறிந்து நிலத்தின்மேற் சாயும்

போது, அக்கிளைகளிலே வாலகில்யரென்னு முனீசுவரர்கள் தலைகீழாய் நின்று நிஷ்டைசெய்து, தேகாபிமானமற்றுத் தம்மைமறந்திருப்பதை கருடன் கண்டு, திடுக்கிட்டு, அடடா இந்த கிளைகள் நிலத்தின்பேரில் விழுமாயின், அதிற்றொங்கும் முனிவர்களுக்கு அபாயம்வந்து சம்பவிக்குமே, பிறகு என்செய்வோமென்று; சிந்தித்து, அக்கிளைகள் பூமியிற்சாயாமுன்னம், நூற்றைம்பதின்காத விஸ்தாரமுள்ள; அதனைத் தனதுமூக்கினால் தூக்கிப்பின்பு, யானையையும், ஆமையையுந் தன்னிரண்டு காலினாலு மெற்றிக்கொண்டு, ஆகாயவீதியிலெழும்பி, வருகையில், அவன்தந்தையாகிய, காசிபமகாரிஷியானவர்கண்டு, அடா சுதனே, நீ ஏந்திவரும், ஆலங்கிளையிலிருக்கும் முனிவர்களுக்கு, அபாயம்வராதபடி அதோஇருக்கும் இரண்டுபருவதங்களுக்கு மத்தியிற்கொண்டுபோய்வையென்று சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட கருடன், அவ்வாறே கொண்டுபோய், மகாவிசாலம்பொருந்திய, அவ்விரண்டு பருவதங்களுக்கும் மத்தியில் தூக்குச்சட்டம் போட்டதுபோல வைத்துவிட்டு, அப்பர்வதத்தின்சிகரத்தில்தான்கொண்டுவந்த பட்சணங்களைவைத்துக்கொண்டு, பூரணமாய்ப்புசித்தபின்பு, அவணின்றுங்கிளம்பி, மகாஉற்சாகத்தோடுஞ் சிறகுகளைவீசிக் கொண்டு வருகிறபோது, தெய்வலோகத்தில், உற்பாதமான சில அவசகுனங்கள் காணப்பட்டமையால், அதுகண்டதேவராஜன், இஃதென்னகாரணமென்றுசிந்தித்து, வியாழபகவானையழைத்து, ஐயா, சுவாமிகளே, ஒருக்காலுமில்லாத இந்தஅவசகுனங்கள் இன்றுகாணும் காரணமியாதென்று கேட்க, அதற்கு வியாழபகவான் கூறுவார், கேளுமையா தேவராஜனே, முன்னமோர்காலத்திலே, காசிபமகாரிஷியானவர், யாகம்பண்ணவேண்டி, இந்திராதி தேவர்களையும், முனீசுவரர்களையும், இருடியர்களையும், கந்தர்வகின்னரர்களை எல்லாம்வரவழைத்து, யாகத்துக்குண்டானசாமான்களைக்கொண்டு வரும்படியாய்; அவரவர்களைத்தனித்தனியே அனுப்பிவைக்கையில், அப்போது ஒருஅக்குஷ்டப் பிரமாணமாய் விளங்கப்பட்ட

வாலகில்யமகாரிஷிகள் அத்தேவர்களுடன்கூடித்தாமும்சமுத்துகளொடித்துப் பெரிதான சுமையைக் கட்டித் தலையிலே வைத்துக்கொண்டு வருகிறபோது, அம்மார்க்கத்திலோர் மாட்டின்குளம்படிபதிந்து, அதிற்ஜலம்நின்றிருப்பதனால், அதிலே வாலகில்லியர் இடறிவிழுந்து, சுமையோர் புறஞ்சாயத்தாம் அக்குளம்படியில் நின்றஜலத்தில், அழுந்தி எழுந்திருக்க மாட்டாமல், தவித்துக்கொண்டிருப்பதை நீ கண்டு நகைக்க, அப்போது அம்முநிவருக்குக் கோபம்பிறந்து, இந்தயாகத்துக்குரிய காசிபருடைய பிள்ளைகளால் நீங்களெல்லாந் துன்பப்படக்கடவீர்களென்று சபித்தார். அவ்வாறு சபித்ததுபோல காசிபர்வயிற்றில் பிறந்திருந்த கருடனானவர், கத்துரு வினதைவினிமித்தம். இங்ஙனமிருக்குந்தேவாமிர்தத்தைக்கொண்டு போகவேண்டியதாய், வருகின்ற கருடனாலே, உங்களுக்குத் துன்பமுண்டாகப் போகின்றபடியால், துற்சகுனங்கள்காணப்படுகின்றதென்று, சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட தேவராஜன் மகாபயமடைந்து, அக்கினிபகவான்முதலாகிய அஷ்டதிக்குப் பாலகாளையுந் தேவர்களையும்பார்த்துக் கூறுவான், ஓ, தேவர்களே, காசிபமகாரிஷியினுடைய பிள்ளையாகிய கருடனானவன், தேவாமிர்தத்தைக்கொண்டு போகவருகின்றபடியினாலே, நீங்கள் ஆயுதபாணிகளாய் நின்று அவனை இவிடம் வரவொட்டாமற் றுரத்தி, ஜெயங்கொள்ளுவீர்களென்று சொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட தேவர்கள், அவரவர்களுக்குரிய சத்தி, கட்கம், தோமரம், பிண்டிபாலம், பாசம், அங்குசம், தண்டம், வில், வேல், முதலிய ஆயுதங்களை எல்லாமெடுத்து, மகா உக்ரத்தோடும், தேவாமிர்த மிருக்குமிடம் போய்ச்சேர்ந்து, அதனை எறும்புமொய்த்துக் கொண்டவை போல, அமிர்தத்தைச் சுற்றிக்கொண்டு, மகாஜாக்கிரதையோடு மிருக்கையில், கருடனானவன் மகாவுக்ரத்தோடும், வருகிற வேகத்தால், பர்வதங்கள்முதலிய வெல்லாந்தலைகீழாகச் சாய்ந்து, திசாதிசைகளிற்போய்விழவும், நட்சத்திரங்களுதிரவும், லோகா லோகங்க ளெல்லாங் கிடு கிடென்று தத்தளிக்கவும்

தெய்வலோகம் வந்துசேர்ந்தான், அவ்விதமாய்வந்த கருடனுடைய உருவத்தைக்கண்ட, இந்திராதி தேவர்களெல்லாஞ் சிந்தாகுலராய் எப்படியாமோ வென்றுசிந்தித்து, அவரவர்கள் ஆயுதங்களோடும், அமர்செய்ய வெதிர்த்தார்கள். அப்படி எதிர்த்த தேவர்களுடனே கருடனானவன், உக்கிரத்தோடுந் தனது செட்டைகளையுதறிக் கிளம்பிப்பாய்ந்து, கால்நகங்களினாலும், மூக்கினாலும், செட்டைகளினாலும், தேவர்கள் எறிந்த ஆயுதங்களைப் பொடித்து, அவர்களையுங் கால்வேறு கைவேறு, உடல்வேறு, சிரம்வேறாகச்சின்னபின்னப்படுத்தி செட்டையில் உண்டாகிய காற்றினால் திசாதிசையிற்போய் விழும்படியாய்ச் செய்கிறபோது, ஈரேழுபதினான்குலோகத்திலுள்ளயாவரும்,ஒருதட்டிலிருந்து, ஓர்தட்டில்மாற,சொர்க்க, மத்யபாதாளமென்னுமூன்று லோகங்களுங் கீழ்மேலாய்ப்புரள, அஷ்டதிக்குகளுங்காற்றாடியைப்போற்பறக்கச்சிறகிலுள்ள காற்றின்விசையினால், அல்லோலகல்லோலப் படுகிறபோது, அதைக்கண்டதேவர்கள் தயிரியம்விடாமல், அவரவர்கள்விற்களைவளைத்து, நாண்பூட்டி, வில்லினிடமாய் அனேகங்கூர்மை பொருந்திய வாளிகளைக் கணக்குமிதமில்லாமற் றொடுத்து, பாணவருஷம் பொழிகையில்,வினதையின் குமாரனாகியகருடபகவான்கண்டு, அவர்கள்விடுத்த பாணங்களையெல்லாம், தனதுசெட்டைகளாலடித்துப் பொடிபொடியாய்த் தரையிற்படியும்படிச்செய்து,பின்னுங்காற்றினால்பூமியிலே,தூளிபடலமெழும்பி, ஆகாசவீதியையுந் தேவர்களுடைய கண்களையும், சமுத்திரஜலத்தையும், வறட்டிச்சேறுபடுத்தி, அஷ்டகெஜங்களும் வாய்விட்டலறவும், அஷ்டமாநாகங்களும், விஷங்களைக் கக்கித்துன்புறவும், ஆதிசேடன் தோள்சாய்க்கவும், பயங்கரமாகியபோர்செய்யும்போது,பன்னிரண்டுகோடிசூரியர்களும், இரண்டுகோடி அசுவினி தேவதைகளும், எட்டுகோடி வயிரவர்களும்,பதினொருகோடிருத்திரரும் ஏகோபித்து ஒன்றாய்த்திரண்டு, சமுத்திரம்போல் கருடபகவானை வந்துவளைத்து, தங்கள்தங்கள் விற்களைவளைத்து, காளமுகி என்னும், மேகத்

தைப்போற் பாணமழை சொரிந்தார்கள். அப்படி பாணப்பிரயோகஞ்செய்யுந் தேவர்களைக்கண்ட கருடபகவானானவர், வீரபத்திரன், ஆயிரமுகங்கொண்டு, தக்கனுடையவேள்வியை தகர்க்கப் பிரவேசித்ததுபோல், அக்கினிப்பொறிகள் குபீர் குபீரென்றுபறக்கும்படியாய்கற்ஜித்து அட்டகாசஞ்செய்து, தாழ்ந்துநெருங்கும்போது, கருடபகவானுடைய கோபாக்கினியையுஞ் சிறகினால் ஓங்குங்காற்றையுந் தேவர்கள்கண்டு பயந்து, எதிர்நிற்க மாட்டாதவர்களாய், சிங்கத்தைக்கண்ட யானைகளைப்போலுஞ்சூரியனைக்கண்டபனிக்கூட்டம்போலும் அவரவர்களுடைய சவுரியபராக்ரமங்களெல்லாமொழிந்து, பலதிக்கிலுஞ்சிதறி ஓடிப்போகையில், அப்போது, கருடன் மகா உற்சாகத்தோடும், அங்குள்ள அமிர்தகலசத்தையெடுக்கும் பொருட்டு நெருங்குகையில் எவ்வாறிருந்ததெனில், ஸ்ரீவைகுந்தவாசனாகிய, மகாவிஷ்ணுவின் கரத்திலிருக்கும், சுதரிசனனென்னுஞ்சக்கிரியைப்போல், கோடிசூரியப்பிரகாசமாய், மகா உக்ரத்தோடும், நெருங்கிஅக்கலசத்தைக்கண்டு, அதில் காளகோடிவிஷம்பொருந்திய, சர்ப்பவுருவத்தோடு இரண்டுராட்சதான், அந்தஅமிர்தத்தைப்புசித்துக்கொண்டிருப்பதைக்கண்டு, கருடபகவான் கோபங்கொண்டு, தனதுவிசுவ ரூபத்தையொடுக்கிச் சிறியஉருவமாய், சிறகுகளிரண்டையுங் கூட்டிக் கீழேதாழ்ந்து, தன்னுடையமூக்கினால், அந்த இரண்டுசர்ப்பங்களையும் தூக்கிக்கால்நகத்தினால் உளன்றிப்பிளந்து, அவைகளின் உயிரைவாங்கி, அவ்விரண்டையும் புசித்து, மகாபராக்கிரமத்தோடும், அக்கலசத்துக்குச் செய்திருந்த கவசங்களை எல்லாம், வேறுவேறாக்கி, கெம்பீரத்தோடும், அவ்வமிர்தகலசத்தைகாலினாலெடுத்துத் தூக்கிக்கொண்டு, ஆகாயத்திற்கிளம்பி வருகிறபோது, திருப்பாக்கடலில் சயனஞ்செய்துக்கொண்டிருக்கும், ஸ்ரீ வைகுந்தவாஸராகிய மகாவிஷ்ணுவானவரறிந்து, தான் சயனித்துக்கொண்டிருந்த சயனத்தினின்றும் நீங்கி, கருடபகவானுக் கெதிரில் வந்து நின்று, அவருடைய உருவத்தையும், புஜபலபராக்ரமத்தையுங்கண்டு சந்தோஷங்கொ

ண்டு, உனக்குவேண்டிய வரத்தைக்கேள் தருகிறேமென்று சொல்ல, அவ்வார்த்தையைக் கருடபகவான்கேட்டுச் சந்தோஷங்கொண்டவனாய், ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைத் தோத்திரஞ்செய்து கூறுவான், சுவாமி, தேவரீர் சதாகாலமும் அடியேன்பேரில் எழுந்தருளி வாசஞ்செய்துகொண்டிருக்கவேண்டுமென்று கேட்க, அதற்கு பகவான் திருவுளமகிழ்ந்து, அப்படியே கொடுத்தோம், நீயும் நமக்கு அதுபோல் வாக்குத்தத்தஞ்செய்வாயென்று கேட்க, அதற்குக் கருடபகவான், சுவாமியை அந்தக்கரண சுத்தியோடும் நோக்கி, சுவாமி; அடியேன் தேவரீரது பாதப்பணியினின்றும் அகலாது, வாகனமாகவும், துவசமாகவும், இருப்பேனென்றுசொல்ல, மகாவிஷ்ணுவானவர் மெத்தவுந் திருப்தியடைந்து, பின்னுங் கருடனுக்கு அநேக வரப்பிரசாதங்களைக்கொடுத்துப் போய்வருவாயென்று விடை கொடுக்க, அவ்விடையையேற்ற கருடன், ஸ்ரீ வைகுந்தநாதனை வணங்கி, அவணின்று ஆகாயவீதியிற் கிளம்பி, தேவாமிர்தத்தைக்கொண்டு போகும்போது, முன்னங் கருடபகவானால் அடிபட்டு மெலிந்து ஓடிப்போன தேவர்களால் அறிந்த தேவராஜன், மகா சினங்கொண்டு, தனது வச்சிராயுதத்தோடுங் கருடனைவந்து மறித்து, அடா தேவர்களுக்கென்று நியமித்துவைத்த அமிர்தத்தை நீ கொண்டுபோக வல்லவனோ என்று, அதட்டிக் கெருடபகவான் மீது தனது வச்சிராயுதத்தைப் பிரயோகஞ்செய்தான், அது கண்ட கருடன், தேவேந்திரனாற் பிரயோகஞ்செய்யப்பட்ட வச்சிராயுதத்தை தனது சிறகுகளினாற் றட்டிவிட்டுப் புன்சிரிப்போடுந் தேவேந்திரனைப்பார்த்துக் கூறுவான், ஓய் தேவராஜனே, நீ உனது வச்சிராயுதத்தை என்பேரிற் பிரயோகித்தும், பிரயோசனமில்லாமற் போய்விட்டதே, வீணிலேன் பிரயாசைப்படுகிறாயென்று சிரித்துக்கூறி, அதிவேகத்தோடுந் தனது இருப்பிடம் நோக்கிச்செல்ல, அதுகண்ட வாசவன் மாற்சரியத்தையடைந்து, இவன் மகா பராக்ரமனாதலால், இவனை ஜெயிக்கமுடியாதெனக் கருதியும், மறுபடியும்

தனது வச்சிராயுதத்திற்கு வேண்டிய மந்திரசத்தியைக்கொடுத்து, அவனுடைய சிறகை வெட்டிச்சாய்த்து வரக்கடவையென்று பிரயோகித்தான். அப்படி பிரயோகித்த வச்சிராயுதமானது, மகா உக்ரத்தோடும், திசாதிசைகளெல்லாம், நடுங்கும்படியாய் ஜொலித்துக்கொண்டுவரும் வேகத்தைக்கண்ட கருடபகவான், புன்சிரிப்போடும், தனது செட்டையால் வச்சிராயுதத்தை வந்த திசை தெரியாமற் போய்விழும்படியாய் தட்டிப்போட்டு, அங்கெதிர்த்த தேவர்களெல்லாமறிய, ஓர் வார்த்தை சொல்லுவான். ஓய் தேவராஜனே, உன்னைப்போல் அநேகமாயிரம் இந்திரர்கள் வந்தெதிர்த்து, அவரவர்களுக்குரிய வச்சிராயுதங்களையெல்லாம், பிரயோகஞ்செய்தாலும், ஓர் இமைப்போதில் அவைகளைப்பொடித்துக் காற்றிற் பறக்கச்செய்யும் வல்லபமெனக்குண்டாயிருப்பதால், நீயேன் வீணிற் பிரயாசை எடுத்துக்கொண்டு அவமானப்பட்டுப் போகின்றாய், அந்தோ, உனது பதிக்குப்போய்ச் சேருவாயென்றுசொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட இந்திரன் கூறுவான், வாருமையா கருடபகவானே, நாங்கள் பிரயாசையடைந்து சம்பாதித்த அமிர்தத்தை நீ கொண்டுபோய் இதராளுக்கு கொடுப்பாயாகில், அவர்கள் அதை உண்டு, நரை, திரை, மூப்பு, முதலியயாவும் நீங்கி, அதிக வலுவைப்பெற்று எங்களை மதியாமல் வந்தெதிர்த்து துன்பப் படுத்துவார்களன்றோ, அதனால், உனக்கு வரும் பிரயோசனமென்ன இருக்கின்றது, ஒன்றுமில்லையே, ஆதலால், நீ அதைக்கொண்டு போகாமல், எங்களிடங் கொடுத்துப்போவாயென்றுசொல்ல, அதைக்கேட்ட உவணமூர்த்தியானவர் சந்தோஷங்கொண்டு, உம்பர்நாதனைப்பார்த்துக் கூறுவார், வாருமையா தேவராஜனே, எனது தாய்மார்களிருவரும் ஒருவருக்கொருவர் சபதவார்த்தைகள்பேசி அவ்வாறு நடந்து வருவதால், அவை தீரவேண்டி எனது பெரியதாயாகிய கத்துருவென்பவள், தனது பிள்ளைகளாகிய அனந்தன், வாசுகி, தக்கன், சங்கன், குளிகன், பதுமன், மகா பதுமன், கார்க்கோடகனென்னும், எட்டு

பிள்ளைகளுக்கும் தேவாமிர்தத்தைக் கொண்டுவந்து கொடுத்தால், எங்கள் அடிமையை நீக்குகிறேனென்று கூறியிருப்பதால் அவை தீரவேண்டி யான் கொண்டுபோவதற்கு நீ மெத்தவும் வருத்தப்படுகின்றபடியால், நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேளும், அது யாதெனில், லோகத்திற் சற்பங்களுக்குரிய விஷாக்கினியைப்பற்றி, எனக்கு கிஞ்சித்து அச்சமுளதாதலால், அது இதுமுதல் தீரவேண்டி என்னைக் கண்ட சற்பங்களுக்கெல்லாம் வலுவழிந்து, விஷமுங்கெட்டு, நிற்ஜீவனாய்ப்போகும்படியாய் ஓர் வரந்தருவையாகில், அதைப்பெற்ற யான் எனது பெரியதாயின் உரைப்படி, இந்த அமிர்தத்தைக் கொண்டுபோய் அவர்கள் முன்னிலையில் வைத்துவிடுகின்றேன், நீ என்னுடன் மாயவுருவங்கொண்டு வந்திருந்து, அமிர்தத்தை அவர்கள் அருந்தாமுன் கொண்டுவந்துவிடுவாயென்று சொல்ல, அதைக்கேட்ட இமையவர் வேந்தன் சந்தோஷத்தையடைந்து, ஐயா கருடபகவானே, நீ கோரியவண்ணம் வரமளித்தேன், ஆதலால், இதுமுதல் உனக்கு சற்பங்களால் யாதொரு துன்பமும் நேரிடாமல், சுகஜீவியாய் வாழக்கடவையென்று கூறிப் பின்பு தான் வாயு சொருபமாய் கருடபகவான் பின்செல்ல, உவணமூர்த்தியாய் கருடபகவான் மகா உற்சாகத்தோடும், ஆகாயவீதியிற்கிளம்பித் தனது பெரியதாயாகிய கத்துருவினது அண்டையை வந்து சேர்ந்து, பெரிய தாயையும், அவளுடைய பிள்ளைகளையும் பார்த்து, ஓ அம்மணி, உனது வாக்கியத்தின்படி இதோ தேவாமிர்தங் கொண்டுவந்தேனாதலால், ஒப்புக்கொள்ளுவாயென்று தற்பையைத் தரையிற்பரப்பி, அதன்மீது தான் கொண்டுவந்த அமிர்தகலசத்தைவைத்தான். அப்படி வைத்த அமிர்தகலசத்தைக்கண்ட கத்துருவும், அவள் பிள்ளைகளுஞ் சந்தோஷத்தையடைந்து, கருடனைப்பார்த்து கூறுவார்கள், வாராயப்பா, நீ எங்கள் எண்ணத்தின்படியாய் மெத்தவும் பிரயாசை எடுத்துக்கொண்டு, பெறுதற்கரிய தேவாமிர்தத்தைக் கொண்டுவந்து கொடுத்தபடியால், இன்று முதல் நீயும்

உனது தாயாகிய வினதையும், அடிமைப்பணி நீங்கி, உங்களிச்சையின்படி வாழ்ந்துகொண்டிருக்களென்று விடைகொடுத்தனுப்பிப் பின் கத்துருவானவள் தனது பிள்ளைகளாகிய சற்பங்களை நோக்கி, அப்பா பிள்ளைகளே, உங்களுடைய கூட்டத்தார், எங்கெங்கு சஞ்சரிக்கின்றார்களோ அவர்களை எல்லாம் வரவழைத்து, யாவரும் இவ்வமிர்தத்தைப் பருந்து புசியுங்களென்றுசொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட நாகங்கள், அவரவர்கள் பந்துக்களையும், புத்ரமித்ரகளத்திராதிகளையெல்லாம், அழைத்து வரும்படியாய்ச் செல்லும்போது, கருடபகவான் அவர்களைப்பார்த்து, ஓ சற்பங்களே, உங்களையும், உங்கள் தாயாரையும், இதுமுதல் உங்கள் தாதையாகிய காசிபர் தனது பணிவிடைக்கு விரும்பாமல் வெறுத்து நீக்கக்கடவதென்று சபித்துவிட்டுத் தானும் தனது தாயாகிய வினதையும், தமது இல்லம்போய்ச் சேர்ந்தார்கள். அக்காலையில், இவைகளை எல்லாம், வாயு உருவமாயிருந்து பார்த்துக்கொண்டிருந்த இந்திரன், இதுதான் சமயமென்று அவ்வமிர்தகலசத்தை மாயையால், ஒருவருமறியாமலெடுத்துக்கொண்டு அந்தர்த்தானமாகப் போய்விட்டான். அப்படி இருக்கும்போது, வற்கங்களைக் கூட்டிவரச்சென்ற சற்பங்கள், பூலோகத்திலே புற்றுகளினிடத்திலும், மரப் பொந்துகளினிடத்திலும், முட்செடிகளினிடத்திலும், மலைகளிடத்திலும், குகைகளிடத்துஞ் சஞ்சாரஞ்செய்துகொண்டிருந்த சற்பங்களையெல்லாமழைத்துக்கொண்டுவந்து தேவாமிர்தத்தை பார்க்கிறபோது காணாமையினால், எங்குந்தேடிப்பார்த்து, மகாவியாகுலத்தையடைந்து, அந்த தேவாமிர்தத்தை கொண்டு வந்து வைக்கும்போதும், அதைக்கவர்ந்துகொண்டு போகும்போதும், அதனடியிற் பரப்பியிருந்த தருப்பையின் பேரிற் றுளித்துளியாய்ச் சிந்தியிருப்பதைக்கண்ட சற்பங்கள், அதை அடர்ந்து, தந்தம் நாக்குகளினாலே அவ்வமிர்தத்தை நக்குகிறபோது, அத்தருப்பைப் புல்லினுடைய கருக்குகள் நாவுகளிற்றுக்கி, நாவுகள் இருபிளவாய் பிளந்துபோக, அதைக்

கண்ட சற்பங்களெல்லாம் பயந்து, நடுநடுங்கி ஓடிப்போய் விட்டன, ஆதலால், அதுமுதல், ஓ முனிவர்களே, உலகின்கண் உள்ள சற்பங்களுக்கு, நாக்கு இருபிளவாக இருப்பதோடும், அவ்வமிர்தம் தருப்பையின்மீது சிந்தினமையால், அத்தருப்பைக்கு புனிதமும், மகிமையும் உண்டானது, கருடனும் தபஞ்செய்யப்போக, அதுகண்ட வினதையானவள், தனது பர்த்தாவாகிய காசிபரிடத்துக்குவந்துசேர, கத்துருவென்பவளும், அதுபோலவே வந்தாள். அப்படி வந்தவர்களைக்கண்ட காசிபருக்கு அப்போது, கத்துருவுக்கு கருடனால் நேர்ந்திருக்குஞ் சாபத்தினது தன்மையால், தேகமனைத்தும் அக்கினி சுவாலைபோற் கொதித்துப்பொங்கிப் புழுக்கத்துடனே தனது மூத்த பாரியாளாகிய கத்துருவைப்பார்த்து, அடி பெண்ணே, நீயும், உனது தங்கையும், ஒரு தாய்வயிற்றிற் பிறந்தவர்களாகவிருந்தும், உடன் பிறந்தாளென்றும், இளையாளென்றும், கிஞ்சித்தேனும் இரக்கமில்லாமல், அநீதமாய்ப் பொய் வார்த்தையொன்று ஏற்படுத்தி, உன் கொடுமைக்குத் தக்கதாய், உன்வயிற்றிற்பிறந்த பாம்புகளாலே அவ்வார்த்தையை நிறைவேறச்செய்து, வினதையை அடிமைகொண்டபடியால், மகா வஞ்சகியாகிய நீ என்கண்முன் வரவேண்டாம், போய்விடுவாயென்று கடிந்து கூறியதைக்கேட்ட கத்துருவானவள், பயந்து நடுங்கிக் கருத்தழிந்து, யாதுந்தோற்றுதவளாய் காசிபருடைய பாதகமலங்களில் வீழ்ந்து, நமஸ்கரித்து, அநேக தோத்திரஞ்செய்து, அடியாள் செய்த பிழையைப் பொறுத்தாட்கொள்ளவேண்டுமென்று வணங்க, அதைக்கண்ட காசிபர், கத்துருவைப்பார்த்து, அடி பெண்ணே, நீ இளையாளை அடிமைத்தொழில் புரியவைத்ததோடும், இந்திராதி முதலிய யாவருக்கும், இம்சைகளைக்கொடுத்து, அநேக முயிர்களை மடியும்படியாய்ச் செய்ததனாலே உனக்குப் பெருந்துன்பமாகிய இரவுரவாதி நரகங்கிடைக்கும். ஆதலால், அத்துன்பத்துக்குரிய உன்னுடன் நாம் கூடியிருக்கலாகாது, இதல்லாமலும், இப்போது நீ மெத்தவும் பரிதாபப்படுகின்ற

படியால், உனக்கு வேறே சாபங்கொடாமல் மன்னித்தேன், என் கண்முன் வாராமற் போய்விடுகிறதே உத்தமமென்று கூறினர். அதைக்கேட்ட இளையாளாகிய விநதையென்பவள், காசிபருடைய பாதகமலங்களிற் பணிந்து, சுவாமி, என்னுயிர்த்துணையாகிய தேவரீர், அடியாட்களின்மீது இவ்வாறு கோபித்தால், பின்பு எங்களுக்கு கதியென்ன இருக்கின்றது. ஏதோ எனது தமக்கையானவள் தெரியாமையாற்செய்த குற்றத்தை தேவரீர், திருவுளங்களித்து, பொறுத்தருளவேண்டுமென்று பணிந்து, விற்பனத்தைக்கண்ட காசிபர் கருணைகூர்ந்து, மனக்களிப்போடும் விநதையைநோக்கி கூறுவார். வாராய் பெண்ணே விநதாய், உனது தமக்கையாகிய கத்துருவானவள் உனக்குச்செய்த கொடுமையெல்லாம், பொறுத்தது மன்றியில், அவளைவேண்டி இவ்வளவு இரக்கப்படுகின்றபடியால் அவளுக்கு இப்போது நேர்ந்திருக்குந்தோஷம் யாவும், அகன்றுவன்றே நம்முடன் சேர்ந்திருக்கலாமென்றுசொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட விநதையானவள், சுவாமி, அவளைப்பற்றியிருக்குந்தோஷங்கள் தீரும்படியாய், தேவரீர் பரிகாரஞ்செய்யவேண்டுமென்றுகேட்க, அப்போது காசிபர் வாராய் பெண்ணே விநதாய், உனது தமக்கையைப்பற்றிய தோஷங்கள் தீரவேண்டுமாயின், பூலோகத்திலோங்கும் பாதகண்டமென்றும், பாலோடை என்றுஞ்சொல்லப்பட்ட ஓர் புண்ணியதீர்த்தமிருக்கின்றது, அப்புண்ணிய தீர்த்தத்துக்குப் போய் சங்கற்பவிதியின்படி கத்துருவானவள் தீர்த்தமாடுவாளாயின், அவள் செய்த கொடுமைகளெல்லாமகன்று கிருதார்த்தையாவளென்றுகூற, அதைக்கேட்ட கத்துருவென்பவள், சந்தோஷமுற்றவளாய் பர்த்தாவினிடத்தில் விடைபெற்று அவ்வாறேபோய் தீர்த்தமாடி வருகிறேனென்று பிரயாணப்படும்போது, ஆகாயத்திலிருந்தும், ஓ கத்துருவே நீ உன் பிள்ளைகளாகிய சர்ப்பங்களோடுஞ்சென்று, அப்பாலோடையில் தீர்த்தமாடினால், உன்னைப்பற்றியவினை நீங்குமென்று அசரீரியோத, அவ்வாய்மையைக்கேட்ட கத்துருவும்; அது

போல் தனது பிள்ளைகளை அழைத்துக்கொண்டு, புல்லாரண்ய க்ஷேத்திரம்போய்ச்சேர்ந்து, அவளங்கும் பாலோடையில் தீர்த்தமாடி எழுந்திருக்கையில், மறுபடியும், ஆகாயத்தினின்றும், ஓ கத்துருவே, நீயும், உனது பிள்ளைகளும், இப்புண்ணியதீர்த்தத்தில்வந்து மூழ்கினமையால், உங்களுடைய பாபங்களெல்லாம் நீங்கிப் புநிதரானீர்களென்று, அசரீரிகூற, அதைக்கேட்ட கத்துரு சந்தோஷமடைந்து, பிள்ளைகளோடும், அவ்விடமிருந்து பிரயாணப்பட்டுக் காசிபரிடம் வந்துசேர்ந்து, விநதையோடும், காசிபருக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்துக்கொண்டிருந்தாள். கேட்டீர்களோ நைமிசாரண்ய முனிவர்களே, இப்பேற்கொத்த மகிமைபொருந்திய பாலோடையின் பெருமையை யாவராற் சொல்ல முடியும். இதல்லாமலும், அச்சேதுவில் கவிதீர்த்தமென்றோர் புண்ணியதீர்த்தமிருக்கின்றது என்று சூதமுனிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர்கள், முனிவரைப்பணிந்து, சுவாமி, தேவரீர் அடியோங்களுக்கு அந்த கவிதீர்த்தத்தின் பெருமையைத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

கத்துருச் சருக்கம்

முற்றுப்பெற்றது.

கவிதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, பாதகண்ட தெட்சணபாகத்திலோங்கும் கந்தமாதனகிரிச்சாரலில் வானரங்களால் உண்டாக்கப்பட்ட கவிதீர்த்தமென்றோர் புண்ணியதீர்த்தமுண்டு, அத்தீர்த்தமானது ஸ்ரீராமச்சந்திரனும் வானராதிகளும் இலங்கையில் இராவணாதிராட்சதர்களை எல்லாஞ்சங்காரஞ்செய்து விபீஷணனுக்குப்பட்டங்கட்டியபின்னர் சேதுமார்க்கமாய்க் கந்தமாதனத்துக்குவந்து இவி

ங்கப்பிரதிஷ்டைசெய்து அவ்விலிங்கத்தின்முன்னிலையில் வானரங்களெல்லாங்கூடி ஓர் தடாகம் உண்டுபண்ணி அதற்கு வரப்பிரசாதகட்டளை இடவேண்டுமென்று ஸ்ரீராமமூர்த்தியை வணங்கித் தோத்திரஞ்செய்யும்போது, ராமச்சந்திரன் சந்தோஷங்கொண்டு சகலவானரங்களுடனும் சகலதேவர்களுடனும் சகலமுநீசுவரான்முதலிய தபோதனர்களுடனும் அத்தடாகக்கரையில்வந்துசேர்ந்து கவிக்கூட்டங்களைப்பார்த்துக் கூறுவார், வாருங்கள் வானரங்களே, இந்ததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யப்பட்டபேர்களுக்கு கங்கை யமுனை சரஸ்வதிமுதலிய புண்ணியதீர்த்தங்கள் ஆடினபலனும், நான்குவேதம் ஆறுசாஸ்திரம் பதினெண்புராணங்களை அறிந்தபலனும், பார்வதிசமேதனாகிய பரமசிவனையும் மகாவிஷ்ணுவையும் பிரமதேவனையும் பூசித்தபலனும், அநேகந்தபங்கள் சாந்திராயனங்கள் விரதங்கள் ஹோமங்கள் யாகங்கள் யக்கியங்கள் பண்ணியபலனும், அநேக தானதருமங்கள் பண்ணினபலனும் கிடைக்கக்கடவதென்று வரமளித்தவராய்த் தான் தனதுதேவிமுதலியவர்களுடனே சங்கற்பவிதியின்படித்தீர்த்தமாடுகையில், சகலவானராதிகளும் பிரமதேவர்முதலியவர்களும் கருடகாந்தருவ சித்தவித்யாதாருரக ராகாயவாசிகள்போகபூமியர் சாரணர் அத்திரி பிருகுகௌதமர் கண்ணுவர் கௌசிகர்வியாசர் பராசர் சனகர் நாரதர் முதலான சகலத்திராளும் அக்கவிதீர்த்தத்திற் சங்கற்பவிதியின்படிமூழ்கி சந்தியாவந்தனமுதலிய நியமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு சகலருஞ் சந்தோஷத்துடனே ஸ்ரீராமமூர்த்திமனமகிழும்படியாய் அத்தடாகத்துக்காசிர்வதித்தார்கள், இப்படி அநேகவரப்பிரசாதங்களைப் பெற்று விளங்கப்பட்ட அத்தீர்த்தத்தில்முழுகினபேர்களது எத்தன்மைபொருந்திய பாவங்களையுந்தொலைத்து மேலான புண்ணியத்தைத்தருவதோடும் இஷ்டபோகங்களை யநுபவித்து புத்ரமித்ரகளத்ராதிகளுடனே வாழ்ந்துகொண்டிருந்து முடிவில் புண்யலோகத்தைப் பெறுவார்களாதலால், அப்பேற்கொத்தமகிமைபொருந்திய அக் கவிதீர்த்தத்திலே ஒரு காலத்

தில் ஆடகலோகத்திலிருக்கும் அரம்பையானவள் விசுவாமித்திரருடையசாபத்தினாற் கல்லாயிருந்தவள் இக் கவிதீர்த்தத்தில் முழுகியபெருமையினாற் சாபவிமோசனமாகிப் பழையபடி தெய்வலோகத்தைச்சேர்ந்துசுகமாய் வாழ்ந்துவந்தாளென்று சூதமுநிவர்சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யமுநிவர்கள் முநிவரைப்பார்த்து, சுவாமி, அந்த அரம்பைக்கு என்னகாரணத்தால்விசுவாமித்திரர்சாபங்கிடைத்ததும்பிறகு அவள் கவிதீர்த்தத்தில் மூழ்கும்படியாய்நேரிட்டதும் அடியோங்களுக்கு ஆதியோடந்தமாய்த் தெரியப்படுத்தவேண்டுமென்று வினவிப்பணிந்த முநிவர்கள்மேற் கிருபையுள்ளவராய் சொல்லத்தொடங்கினார், கேளுங்கள், நைமிசாரண்யர்களே, குசிகர்குலத்திற் காதியர்வமிசத்திற்பிறந்த விசுவாமித்திராஜனென்பவன் மகாபுஜபலபராக்ரமசாலியாகவும் இரதகஜதுரகபதாதிகள்சூழும்படியாய் இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருக்கிறநாளையில், ஒருநாள், சகலசயினியங்களுஞ் சூழும்படியாய் தனது பட்டணத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு தண்டகாரண்யத்துக்குப்போய் நானாவித மிருகங்களின்மீது வேட்டையாடிச் சூரியவெப்பத்தால்மெலிந்து தாபசோபத்தோடும் வருகிறபோது, அவ்வனத்திற்றபஞ்செய்துகொண்டிருந்த அருந்ததிசமேதராகிய வசிஷ்டமகாரிஷியானவர்கண்டு, கௌசிகராஜன்முதலியசயினியங்களுக்கெல்லாம் தெய்வலோகத்துக்காமதேநுவைவருவித்து ஓர்சணப்போதில் அறுசுவையுண்டியும் கந்தபுட்பதாம்பூலாதிகளுங்கொடுத்து மனமகிழும்படியாய்ச் செய்கையில், அக்காமதேநுவினது பெருமையைக்கண்ட விசுவாமித்திரவேந்தன், அதன்மீது இச்சைகொண்டு, வசிஷ்டரை நோக்கி, இக்காமதேநுவை எனக்குநல்கவேண்டுமென்றுகேட்க, அதற்கு வசிஷ்டர் இராஜனை நோக்கி, ஓ வேந்தனே, இது தெய்வலோகத்துப்பசுவாதலால் இதைநாம்பூசிப்பதற்குப்பாத்திரமேயல்லாமல் ஒருவருக்குக்கொடுக்கப் பாத்திரமல்லவே யென்றுசொல்ல, அதற்குவிசுவாமித்திரவேந்தன் அக்காமதேநுவின்மீது நனிகாதலுற்றவனாய் தனது படையிலுள்ளவர்

களை அநேகனைவிடுவித்து பலவத்காரமாய்ப்பிடி
தேசத்துக்குக்கொண்டுவரும்படியாய்க்கட்டளையி
ல் இராஜனால் ஏவப்பட்டபேர்கள் காமதேநுவை
ற்றிக்கொண்டு கால் மீறவொட்டாமல் நெருங்கி
போகும்போது, வதிஷ்டர்கண்டு வியாகுலத்தை
ஸ்ரீகயிலாசபதியாகிய உமாமகேசனைச்சிந்திக்கையி
மே பரமேசுவரன் பிநாகமென்னும் வில்லிற்சந்
பிரம்மாஸ்திரத்தை ஏவுகையில், அவ்வஸ்திரமா
உக்ரத்தோடும்வெளிப்பட்டுவந்து காமதேநுவை
ந்துபிடிப்பதற்குமேவியபேர்களை எல்லாஞ்சர்வசு
ய்கிறபோது, அதைக்கண்டகோசிகராஜன், இவ்வ
மும் இந்தவதிஷ்டனால்வந்ததன்றோவென்று கோ
டவனாய் தனதுசயின்யங்களுடனே வதிஷ்டனா
த்துக்கொண்டு அநேக அஸ்திரசஸ்திரங்களைப்
செய்து வதிஷ்டனையுங் காமதேநுவையுங்கைப்பி
க்கவேண்டுமென்று அமர்செய்யும்போது, வசிஷ்
செய்யப்போய் கன்மம்வந்துவாய்ந்ததே என்று
ராய் அவர்கள்பிரயோகஞ்செய்யும்பாணங்களை எ
ப்படுத்தும்படியாய்த் தன்னுடையயோகதண்டத்
துத் தனக்குமுன்பாகநிறுத்திவிட்டு தான்நிஷ்டை
க்கையில், அப்போது விசுவாமித்திரன்முதலிய ர
ருந் தங்கள்தங்கள் வில்லைவளைத்துநாணேற்றி சம
மாய் அநேகம் அஸ்திரங்களைவாரிவாரி சேனைம
த, அவ்வஸ்திரங்களெல்லாம் வதிஷ்டர்நிறுத்திவை
தண்டத்தைப்பிரதட்சணஞ்செய்து நமஸ்கரித்து
தின்முன் அசைவற்று நிற்கின்றதேயன்றி அப்
வல்லமையற்றிருப்பதைக்கண்டகோசிகராஜன, அ
வல்லபமும் நமதுசேனாசயின்யத்தின்திறமும் ஓர்
சன்னியாசியின்முன்செல்ல மாட்டாமற்போய் வ
ன்று மிகவும் நாணமுற்றவனாய் கூறுவான், இந்த
கிய பிராம்மண சன்னியாசியானவன் தனது ஒரு

டுத்துநிறுத்திவைத்த யோகதண்டனாலே நாம்தொடுத்த அஸ்
திரங்களெல்லாம் நாசத்தை அடையுமாயின் இனிநம்மால்
அக் காமதேநுவைக்கைவசப்படுத்துவது அரிது ஆதலால்
நாம் இந்தவதிஷ்டனைப்போல்தவஞ்செய்து வல்லவனானால்
பின்பு காமதேநுவைக்கைவசப்படுத்திக் கொள்ளலாமென்று
யோசித்தவனாய் தன்னுடைய ராஜரீகத்துக்கு மந்திரிபிரதானி
களை நியமித்துத்தன்னுடன்வந்திருந்த சயினியங்களை பட்ட
ணம்போய்சேரும்படியாக வனுப்பிவிட்டு, தவவேடம்பூண்டு
தான் பிரம்மகுல சிரேஷ்டனாகவேண்டியதாய் கீட்டிசையை
நோக்கிச் சூரியனைப்பார்த்துக்கொண்டே அநேககாலந்தபஞ்
செய்தும், பின்னர் தென்றிசையைநோக்கிச் சிலகாலந்தபஞ்
செய்தும், பின்பு மேற்றிசையைநோக்கிச் சிலகாலமிருந்தும்,
அப்பால் பிராம்மணருக்குரித்தாகிய உத்தரதிசையில் கவுசிக
நதிக்கரையில் தேவர்களுங்கண்டு அதிசயிக்கும்படியாய் ஐம்
புலாதிகளையுமடக்கி நவத்துவாரங்களையுமடைத்து இராகத்வே
ஷாதிகளைப்போக்கி விருப்பும்வெறுப்புமற்று வாதியையடக்கி
ஆனி ஆடிமாதங்களிற் பஞ்சாக்கினிமத்தியிலேயும் ஆவணி
புரட்டாசி இரண்டிலும் மழைகளிலிருந்தும் மாசிபங்குனி
மாதத்திற் குளிர்ந்தஜலத்திடைநின்றும் மற்றமாதங்களில் வெ
யிலிலும் தேகத்தின்மீதுயாதொருகவசனையுமின்றி கருங்கல்
லைப்போல் அசைவறநின்று சங்கற்பவிகற்பங்களற்று சித்ர
தீபத்தைப்போல தேவவருடங்களிலே ஆயிரம்வருடம்வரை
யில்உத்தரதிசையைநோக்கித் தபஞ்செய்துகொண்டிருந்தான்,
அப்படி இருக்கிறபோது இவன்செய்யுந் தபத்தின்திறத்தை
தேவராஜனாகிய இந்திரன் அறிந்து உடனே தனது சபையில்
நாட்டியஞ்செய்யப்பட்ட அரம்பையைவருவித்து, ஓ பெண்
பாவாய், பூலோகத்திலோர்குல் கவுசிகநதிதீரத்திலே விசுவா
மித்திராஜன் அரிதாகியத ... செய்துகொண்டிருக்கிற படியா
ல், நீ அவனைசென்று ... தபத்தை அழித்துவருவாயென்று
சொல்ல, அப்போது அரம்பைகூறுவாள், சுவாமி, அவ்வேந்
தன் மகாகொடிதாகியதபத்தையுடையவனாதலால் என்னால்

அதற்கு விகற்பந்தேடமுடியுமோ,வீணேயான்துன்பத்துக்காளாவேன், என்றால் முடியமாட்டாதென்றுசொல்ல, அதைக்கேட்ட இந்திரன்,அவனுக்கு இதமுண்டாகும்வார்த்தைகளைச்சொன்னதோடும் அவனுக்குச்சகாயமாய் மன்மதனையுங்கூட்டியனுப்ப, அதன்பேரில் அரம்பையானவள் தேவராஜனிடம்விடைபெற்று பூலோகத்திற் கவுசிகநதிதீரத்திலே தபஞ்செய்துகொண்டிருக்கும் விசுவாமித்திரருக்குமுன்பாகவந்துநின்று, இன்னிசையினோடும் அநேககீதங்களைப் பாடியும் வீணாகானஞ்செய்தும் நிற்கையில், அச்சமயத்தில் மன்மதனானவன் முல்லை அசோகு முழுநீலஞ் சூதம் முளரி என்னுந்தன்னுடைய பஞ்சபாணங்களையுங் கருப்புவில்லினிடமாகச்சந்தித்து விசுவாமித்திரர்மீதுபிரயோகஞ்செய்யும்போது,விசுவாமித்திரருடையதேகமெல்லாம் மெழுகுபோலுருகிக்கரைந்து மனமானதுகலைந்து நிட்டைநீங்கி இதென்னகாரணமோ தெரியவில்லையென்று கண்களைவிழித்துப்பார்க்கிறபோது,அரம்பையானவள் நிற்பதைக்கண்டு, இவளாலன்றோ இக்காரணம் விளைந்ததென்றறிந்து,கோபங்கொண்டு,அடி பாதகி, நீ எனது நிட்டையைக் கெடுக்கநேர்ந்தமையாற் கல்லாய்ப்போகக்கடவையென்று சபித்தான், அதுகண்ட மன்மதனானவன் நமக்கு என்னகேடுசம்பவிக்குமோவென்றுமெய்நடுங்கி அருபியாய்மறைந்து ஓடிப்போய்விட்டான்; அக்காலையில் சாபத்தை ஏற்ற தெய்வகணிகையானவள் விசுவாமித்ரவேந்தனது பாதகமலத்திற்பணிந்து தோத்திரஞ்செய்து, சுவாமி, தெரியாமையாற்செய்த அடியாளது குற்றத்தைப் பொறுத்தாண்டு இச்சாபவிமோசனஞ் செய்யவேண்டுமென்றுகேட்கும் அரம்பையினது பரிதாபத்தைக்கண்ட விசுவாமித்திரன்,சற்றேகிருபைகூர்ந்துகூறுவான், வாராய் அரம்பைமாதே, நமதுசாபத்தின்படி நீ பதினாயிரம்வருடம்வரையிற் கருங்கல்லாகவிருந்து,பின்பு ஓர் பிராம்மணனால் இச்சாபவிமோசனமாய்தெய்வலோகம்போய்ச்சேருவாயென்றுசொல்ல, அப்போது அரம்பையுங் கற்சிலையாய் நின்றாள்;இப்படி விசுவாமித்திரருடைய

சாபத்தினாலே அரம்பையானவள்கருங்கல்லாயிருக்க, அப்போது விசுவாமித்திரர் மகாமேன்மைபொருந்திய தபத்தினால் மெத்தவும்மகிமைகளைப்பெற்று வசிஷ்டர்முதலிய சகலரிஷிகளுந் தன்னைப்பிரம்மரிஷி என்றுசொல்லும்படியாய் தெய்வலோகத்திலுள்ள காமதேநுமுதலியநவநிதிகளுந்தனக்கு ஆற்பமாய்க்கிடைக்கும்படி மகிமைபெற்றிருந்தார், அப்படியிருக்கிறகாலத்திலே, அநேகநாளைக்குப்பிறகு அகஸ்தியமகாரிஷியினுடைய மாணாக்கராகிய சுவேதனென்று சொல்லப்பட்டவர் உமாமகேசனைச்சிந்தித்து மோட்சசாம்பிராச்சியத்தில் இச்சையைவைத்து கௌதமநதிதீரத்திலே தபஞ்செய்துகொண்டிருக்கிறகாலையில், அங்காரகை என்னும் ஓர் அரக்கியானவள் நீலகிரியைப்போன்ற காத்திரமாகியரூபமும் கோடைகாலத்திடிபோன்ற கெர்ஜனைமுழக்கத்தோடும் வந்து சுவேதனென்னும் பிராம்மணன்தபஞ்செய்யுமிடத்தில் மலமூத்திரங்களைக்கொண்டுவந்துசொரிந்தும், மதுமாமிசங்களைக் கொணர்ந்துசொரிந்தும், சுவேதனுடையதிருமேனி எல்லாம் அகோரசின்னங்களை யடையும்படியாய்ச்செய்தும், தபத்தைவிட்டோடும்படியானவிகாதங்களைச்செய்தாள், அப்போது சுவேதன்மிகக்கொதித்தெழுந்து கண்களைவிழித்து எதிட்டுப்பார்க்கிறபோது அவ்விடத்தில்கோரரூபத்தோடும் நிற்கின்ற அரக்கியைக்கண்டு மகா உக்ரத்துடனே அச்சிலையைப்பிடுங்கி மந்திரப்பிரயோகஞ்செய்து அங்காரகை என்னும் அரக்கியைக்கொல்லக்கடவையென்று எறிந்தான். அப்போது, அக்கற்சிலையானது புறப்பட்டு அங்காரகையைத் துரத்துகிறபோது அவளும் பயந்து, இக்கற்சிலைக்குத் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று தென்றிசை நோக்கி ஓடினாள். அவள் அப்படி ஓடியுங் கற்சிலையானது விடாமல் துரத்திக்கொண்டு, வேகத்துடனே, காடு, மலை, வனம், வனாந்தரங்களிலோடியும், விடாமல் துரத்திவருகிறபோது, அவ்வரக்கியானவள் தென்றிசையிலோங்குஞ் சேதுமத்தியில் விளங்காநின்ற கவிதீர்த்தத்துக்கு சமீ[illegible]மாய்ப்போகையில், சிலையானது விடாமற் றொடருவதைக்

கண்ட அரக்கியானவள், அக்கவி தீர்த்தத்திலே அடித்து மோதி விழுந்தாள். அப்படி விழுந்ததைக் கற்சிலையாகிய அரம்பை கண்டு, அங்கீரினின்றும், இராக்கதஸ்த்ரீ எழும்புவதற்குள்ளாக குபீலென்று அவள்பேரில்விழுந்து, மண்டைசிதறும்படியாய் நொறுக்கி, அவள் பிராணனை வாங்கிவிட்டது. அப்போது அரம்பையாகிய கற்சிலையும், அந்த கவிதீர்த்தத்தில் மூழ்கவே, பழயபடி அரம்பாஸ்த்ரீ யாகினாள். கேட்டீர்களோ முனிவர்களே, இவ்வாறு பதினாயிரம் வருடம் வரையிற் கோசிகராகிய விசுவாமித்திரருடைய சாபத்தினாலே, சிலையாகவிருந்த அரம்பை, அகஸ்தியருடைய மாணாக்கராகிய சுவேதமாமுனியினாலே அங்காரகை என்னும், இராக்கத ஸ்த்ரீயையுங்கொன்று, பழயபடி தேவதாசொரூபம் பெற்றாளென்கிற செய்தியைத் தேவர்களாலறிந்து, அரம்பையின்மீதிருக்கும் மோகத்தினாலே மகா சந்தோஷத்துடனே, அப்ஸர ஸ்திரிகளோடும், அரம்பைக்கு வேண்டிய ஆடையாபரணங்களுங் கொண்டுவந்து கொடுத்து, உபசரித்து உடுத்திக்கொள்ளும்படியாகச்செய்து, இந்திரவிமானத்திலேற்றிக்கொண்டு, தேவர்கள் துந்துபி முழக்கிப் புட்பமாரி சிந்த, ஸ்ரீ ராமநாதனை தெரிசித்துப்பணிந்து, விடைபெற்றவர்களாய், தெய்வலோகம் போய்ச்சேர்ந்தார்கள். பின்பு, அங்காரகை என்னும் அரக்கியானவள், அரம்பாஸ்த்ரீகளில் குருதாசி என்னும் பெயருடையவளாகவிருந்து, அகஸ்தியருடைய சாபத்தினாலே அரக்கியாகி அலைந்தவளாதலால், அவளுக்கு அகஸ்தியர் முன் சொல்லியிருந்த வாக்கியத்தின்படி தமது மாணாக்கரான சுவேதமுனியின் தபத்துக்கு இடையூறு செய்து, அது நிமித்தங் கவிதீர்த்தத்தில்விழுந்து மடிந்து, பழயபடி குருதாசி என்னும் பெயருடனே, தெய்வலோகம் போய்ச்சேர்ந்தாள். ஆதலால், அக்கவிதீர்த்தத்தின் பெருமை யாவராற் சொல்லிமுடியும், இதல்லாமலும், அச்சேதுவின் சந்நிதியிலோங்குங் கந்தமாதனச்சாரியில், காயத்திரி, சரசுவதி, என்னும், இரண்டு தீர்த்தங்களிருக்கின்றன, அத்தீர்த்

தங்கள் அநேக புண்ணியபலன்களையும், மோட்ச சாம்ராச்சியத்தையுங் கொடுப்பதோடும், அவைகளைப் புகழ்ந்துபேசப்பட்டவர்களுக்குண்டான பாபங்களை விமோசனஞ்செய்துக்கொண்டிருக்கின்றனவென்று சூதமுனிவர் சொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட நைமிசாரண்யர்கள், சுவாமி, தேவரீர் அடியோங்களுக்கு அத்தீர்த்தங்கள் உண்டாகிய விதமும், அவற்றின் பெருமையும், ஆதியோடந்தமாய்க் கூறவேண்டுமென்று கேட்கச் சூதமாமுனிவர் ரிஷிகளின்மீது கருணையுண்டானவராய்ச் சொல்லத்தொடங்கினார்.

கவிதீர்த்தச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

காயத்திரி சரசுவதி தீர்த்தச்சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, ஸ்ரீ வைகுந்தவாசராகிய மகாவிஷ்ணுவினது உந்திக்கமலத்தில் உற்பவித்த பிரமதேவன், தன்னுடைய சிருஷ்டியினால், ஓர் வாக்கு என்னும் பெண்ணைப்படைத்து, அவளது ரூபலாவண்ய சவுந்தரியத்தைக்கண்டு, அவளைச் சேரவேண்டுமென்று மோகங்கொண்டு அவளைப்பற்றி யிழுக்கையில், அவ்வனிதையானவள் மிகவும் நாணமுற்றவளாய், ஐயா, தேவரீரால், நான் சிருஷ்டிக்கப்பட்டதால் நான் தங்களுக்குப் பெண்முறையன்றோ, ஆதலால், காமவெறி மீறி, என்னைத் தொடுவது அழகல்லவே என்று கூற, அவ்வார்த்தையைக் கிஞ்சித்தேனுங் கேளாதவனாய் மறுபடியும், அவளைப்பற்றி இழுக்கும்போது, அவள் மான் உருவங்கொண்டு, காட்டகத்தில் ஓடினாள். அதைக்கண்ட பிரமன், உடனே கலையைப்போல் வடிவங்கொண்டு, அம்மானைத்தொடர்ந்து துரத்தும்போது, அவ்வாக்கினியானவள் அவ்வுருவத்தினின்றும் நீங்கி அன்னவடிவங்கொண்டு உயர வெழும்புகையில், அதைக்

கண்ட பிரமனும், அன்னமாக உருவங்கொண்டு, தானும் ஆகாயவீதியிலெழும்பித்தொடர்ந்தான். இப்படி வாக்கினியானவளும், பிரமனும், எறும்புமுதல் யானையிறுக ரூபங்களெல்லாம் மாறி மாறி எடுத்துத் திரிகிறபோது, வாக்கினியானவள் மெத்தவுந் துன்பமடைந்து, சகிக்கமாட்டாதவளாய் வாய்விட்டுக் கோவென்றலறிக்கொண்டே ஓடித்திரியப் பின்னும், பிரமதேவனுக்கு மோக விகாரமடங்காமல், வாக்கினியைத் துரத்திக்கொண்டு திரிவதை சகல தேவர்களுங்கண்டு கைகொட்டிச்சிரித்து, ஒருவரையொருவர்பார்த்துச் சொல்லுவார்கள். ஓ தேவர்களே, இந்த பிரமதேவரானவர், சகல ஜீவான்மாக்களையும், படைக்கத்தக்கராக இருந்தும், இப்படி மோக விகாரங்கொண்டு, தன் படைப்புக்குள் அகப்பட்ட பெண்ணை வேண்டி மையல்கொண்டலைந்தால், மற்ற யாவர்தான் ஞாயமாய் நடக்கப்போகின்றார்கள். இப்படியுங் கதி தப்பி நடப்பதுண்டோவென்று கெக்கரி கொட்டி நகைக்கும் ஓசையானது, ஸ்ரீ கயிலாசபதியாகிய உமாமகேசன் செவியிற் புகுந்தமாத்திரத்தில், அப்பரமசிவன் புன் சிரிப்புக் கொண்டு, தான் ஓர் வேடுவனைப்போற் சமைந்து, கையில் வில்லு மம்புமெடுத்து வருகிறபோது, அவர்களிரண்டுபேரும், பறவைகளுருவங்கொண்டு கானகத்திற் றுரத்திக்கொண்டு திரிவதைக்கண்டு, அவர்கள் வரும்படியாகிய மார்க்கத்தில் வந்து மறித்து, வில்லினிடமாக ஓர் கிலையைப்பூட்டி கர்ன்னபரியந்தமிழுத்து, இருவர்பேரிலும் பிரயோகஞ்செய்தார். அவ்வாறு பரமசிவத்தாற் பிரயோகஞ்செய்யப்பட்ட வாளியானது, பினுகமென்னும் வில்லினிடத்திருந்தும், அதிவேகத்தோடும் வெளிப்பட்டு பிரமதேவனுடைய உயிரைக் கவர்ந்ததோடும், பேதையாகிய வாக்கினி என்பவளது தேகத்தையும், இரண்டு பிளவாக்கி எறிந்து, பரமசிவத்தினது அம்பருத்தூணியில் வந்துசேர்ந்தது. அப்போது கலை ரூபமாயிருந்த பிரமனும், சுயரூபத்தோடும் நிலத்திற்சாய்ந்து மரணத்தையடைந்தான். அவனுடைய தேஜசும் பிரமத்தை

யடைந்திருந்தது, அக்காலையிற் பரமேசுவரனாகிய வேடனும், பிரமன் பூமியிற்சாய்ந்தவுடனே, மான்மழு சதுர்ப்புஜ காளகண்ட திரிநேத்திர சந்திர ஜடாதாரியாய் தேவர்களெல்லாங் கண்டு மகிழ்ந்து தோத்திரஞ்செய்யும்படியாய் நின்றார். அவ்வாறு நின்ற கயிலாசபதியானவர் தேவர்களை நோக்கி, ஓ தேவர்களே, இன்றையதினம் ஆதிரைநாளானபடியினாலும், நீங்களியாவரும், நம்மைப் பூசித்தபடியினாலும், இதுபோல் எக்காலமும், இத்தினத்தில் நம்மைப்பூசித்து வணங்கினால், உங்களுக்குச் சகல காமியங்களுஞ் சித்தியாகுமென்று வரமளித்துக் கயிலாசத்துக்கெழுந்தருளினார். அதுகண்ட தேவர்களெல்லா மனமகிழ்ச்சியோடுந் தங்களுலகம்போய்ச் சேர்ந்திருக்கையில், பிரமதேவன் மரணமடைந்த செய்தியை அவன் தேவிமாராகிய காயத்ரியுஞ் சரஸ்வதியுமறிந்து, மகாதுக்கத்தோடுந் தாங்கள் புருஷனை இழந்து, கைம்பெண்களாக விருப்பதுபற்றித் தங்களுக்குத்தாங்களே, ஐயோ, மகாவிஷ்ணுவும் இலட்சுமி தேவியுமாகவும், இந்திரனும் அயிராணியுமாகவும், பரமேசுவரனும் பார்வதியுமாகவும்; சந்துஷ்டியாய் வாழ்ந்துவர, நாம்தானே பாவிகளானோம், தெய்வமே, இப்படியும், நடப்பதுண்டோவென்று தங்களுக்குத் தாங்களே நொந்துகொண்டு, பதுமாசனத்தையுடைய நமது மணாளனைப் பழையபடி எக்காலையிற் காண்போமென்று சிந்தித்தவர்களாய், அதற்காக வேண்டிய எண்ணங்களை முடித்துக்கொண்டு, சகல லோகங்களுக்கும், மேன்மையான மகிமையைப் பெற்றதாயும் விளங்குங் கந்தமாதன பருவதச்சாரலிற் போய்ச்சேர்ந்து, ஸ்ரீ கைலாசபதியை நோக்கி, அநேக நோன்புகளை யநுஷ்டித்தும், அவண் தங்கள் பெயரினால் இரண்டு தடாகங்களையுண்டுபண்ணி, அத்தடாகத்திலே இரண்டுபேருமாய்த் திரிகாலமுந்தீர்த்தமாடி நியமநிட்டைகளை முடித்தும், உவர்ப்பில்லாமல் ஓர் போது உணவு கொண்டும், காமக்குரோதமுதலிய அறுவிதப்பகைகளையு நீக்கி, பஞ்சாட்சரத்தை இடைவிடாமல் தியானித்துக்கொண்டு, ஸ்ரீ பர

மேசுவரனுடைய பாதாரவிந்தத்தை மனத்திலே இடைவிடாமலிருத்திக்கொண்டு, அக்கந்தமாதனகிரிச்சார்பில், அநேக காலந் தபஞ்செய்து வந்தார்கள், அப்படி இருக்கிறபோது, சந்திர ஜடாதர மூர்த்தியாகிய பரமசிவன், அப்பாவையர்களின்மீது கருணை யுண்டானவராய் கயிலாசத்தினின்றும், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், அஷ்டவசுக்கள், கருட காந்தர்வ சித்த வித்யாதர நாகராகாயவாசிகள் போக பூமியர் முதலிய சிவகணங்கள் புடைசூழும்படி பார்வதி சமேதராய் வெள்விடைமீதேறிக் கந்தமாதனச்சார்பில் தபஞ்செய்துக்கொண்டிருக்கும், காயத்ரி, சரஸ்வதி, என்னுமிருவர்களுக்குந் தெரிசனந்தந்தார். அப்போது காயத்ரியும், சரஸ்வதியும், பரமேசுவரனைக்கண்டு சந்தோஷ சாகரத்தாட்டோய்ந்தவர்களாய், அர்க்கிய பாத்ய சோடசோபசாரத்தோடும் பூஜித்து, நிலத்திற் பணிந்தெழுந்து நமஸ்கரித்து, அண்ட சராசரங்களையெல்லாம், ஈன்றளித்தழிக்கின்ற பரமேசுவரியை வாமபாகத்தில்வைத்து விளங்கப்பட்ட கருணைப்பிரவாக நிதியை சுருதி வாக்கியங்களாலே தோத்திரஞ்செய்து, வணங்கிப்பரவசமடைந்து, ஆனந்தக்கூத்தாடினார்கள். அப்போது உமாமகேசன் அன்னவர்களின்மீது உள்ளமகிழ்ந்தவராய், உங்களுக்குவேண்டியவரம் யாதென்று கேட்க, அவ்விருவர்களும், சுவாமி, இதற்கு முன்னொருகாலத்தில் தேவரீருடைய பாதகமலத்தையுந்திருமுடியையும் காணவேண்டுமென்று எங்கள்நாயகனும் இலக்குமி சமேதராய் மகாவிஷ்ணுவும், அன்னமாகவும், பன்றியாகவும் ஜனித்து எத்தனையோகாலமலைந்துங் காணாதபரஞ்சோதி சொரூபமானது அடியோங்கள்பொருட்டாய், தரிசனந்தந்தும் அப்புனைத்தானறியாத செயலுமுண்டோவென்றும், கூறினவர்களாய் மறுபடியுங் கூறுவார்கள், சுவாமி, தேவரீர் பதாம்புயத்துக்கோர் விண்ணப்பஞ்செய்து கொள்ளுகின்றோம், அதுயாதெனில், தங்களைக்கண்டயாவரும் மனவெறுப்புக்கொண்டு எங்கள் முகத்தில்விழிக்கப்படாதென்று, தூறிக்கொள்ளுகின்ற

மையால் எங்களுடையநாயகனை எழுப்பித்தரவேண்டுமென்று அநேகவிதமாய்த் தோத்திரஞ்செய்தார்கள் அப்போது சாம்பமூர்த்தியுங் கருணைகூர்ந்து பிரமனுடைய உடலத்தையுஞ் சிரத்தையும் எடுத்துவாருங்களென்று சிவகணங்களுக்கு விடைகொடுக்க, அவ்வாறே அவர்கள்போய்க்கொண்டு வந்தவையைப் பரமசிவன் தனதுகரத்தினால்வாங்கி உடலையுஞ் சிரத்தையுமொன்றுகப்பொருத்திக் காயத்ரியுஞ் சரஸ்வதியுங் காணும்படியாய் பிரமனைப்பார்த்து, ஓ பிரமனே, எழுந்திருக்கக்கடவை என்று திருவாய்மலர்ந்தருளிய மாத்திரத்தில் அவன் உடலிற் பிரமதேஜசுவந்துபொருந்தி தூங்கிவிழித்தவன்போல் கெட்டுயிர்ப்புக்கொண்டெழுந்து,சென்னிமேற் கரங்களைக்கூப்பி, சுவாமி, அடியேன் புல்லறிவினால் அதர்மமாய் நடத்திய பெரும்பிழையைப் பொறுத்தாட்சிக்கவேண்டுமென்று பாதப்புணையிற்படிந்து அநேகதோத்திரங்களைச் செய்யும்போது, பரசிவமாகிய மகேசன் கருணையோடும் நோக்கி, வாராய்பிரமனே,இனிமேலாயினும் நீ இத்தன்மைபொருந்திய கவனத்தைநினையாதே இவ்வாறு இன்னமெவர் செய்தபோதினும் அவர்களைநாம் சங்காரஞ்செய்வோமென்றும் ஓதி சரஸ்வதியைப்பார்த்துச்சொல்லுவார்,வாராய்சரஸ்வதியே,காயத்ரியே,நீங்களிருவரும் உங்களுடையநாயகனோடும் பிரமலோகம் போய்ச்சேர்ந்து வாழ்ந்துவரக்கடவீர்களென்று திருவாய்மலர்ந்து பின்னுங்கூறுவார், ஓ பாவையர்களே, நீங்களிருவரும் இக்கந்தமாதனச் சார்பிலுண்டாக்கி மூழ்கிக்கொண்டிருந்த இவ்விரண்டுதீர்த்தமும் உங்கள்பெயரால், விளங்கக்கடவதென்றும் இதிற்றீர்த்தமாடப்பட்டபெண்பால்கள் நித்யசுபமாங்கல்யத்துடனே அநேககாலம்வாழக்கடவர்களென்றும் ஆண்பாலா யிருப்பவர்களது சகலதோஷங்களும் நிவர்த்தியாய் நித்யானந்த மோக்ஷத்தைப் பெறுவார்களென்றும் வரங்களைக் கொடுத்து சகலதேவர்களோடும் ஸ்ரீகயிலாசத்துக்கெழுந்தருளினார். அதைக்கண்டபிரமதேவன் தனதுதேவி [illegible]டனே கூடிச் சத்தியலோகம்போய்ச்சேர்ந்தார் ஆதலால் ஓ முனி

வர்களே இவ்வாறு காயத்திரி என்றுஞ் சரஸ்வதி என்றும்
பெயர்வாய்ந்து விளங்கும் மகிமைபொருந்திய தீர்த்தங்களி
லே காசிபனென்னுஞ் மகாதபோதனனாகிய ஓர் பிராம்மணன்
இப்புண்ணியதீர்த்தங்களில்வந்து தீர்த்தமாடி அவன்செய்த
பாதகங்களையெல்லாமகற்றிப் புநிதனானனென்றுசொல்ல,அவ்
வாய்மையைக்கேட்ட நைமிசாரண்யர்கள், சுவாமீ, தேவரீர்
இப்போது உரைத்த காசிபனென்பவர்யார், அவருக்குதோஷங்
கள்வந்து சம்பவித்தகாரணமியாது,அவைகளையெல்லாம்அடி
யோங்களுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றுகேட்க
ச்சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

காயத்ரிசரஸ்வதி தீர்த்தச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

காசிபச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே
பாண்டவகுலத்தி லுற்பவித்த வாளபிமன்னன் குமாரனாகிய
பரிக்ஷித்து மகாராஜன் சிறுவனாக இருக்கும்போது ஓர் நாள்
தமதுபட்டணத்துக்கருகாமையாகவிருக்கும் வனத்தில்வேட்
டமாடச்சென்றவன் அவ்வனத்தில் சமீகனென்னும் பெயரை
யுடைய ஓர் மகாரிஷியானவர் தபஞ்செய்து கொண்டிருக்கை
யில் அவர்மகிமையறியாத இச்சிறுவன் தனதுவேட்டைமார்க்
கத்திலகப்பட்ட ஓர் மிருகத்தைவதஞ்செய்து அவ்விருடியின்
ஆசிரமத்திற் கொண்டுவந்துசேர்ந்து அத்தபசியை நோக்கி,
அடா பிராம்மணா, நீ ஏன் விருதாவிலே அன்னபானாதிகளை
மறந்துங் கண்ணைத்திறவாமலும் வயிற்றை எக்கிக்கொண்டு
துன்புற்றிருக்கின்றாய்,இந்தமிருகத்தையாகிலும் புசித்துப்பசி
நோய் தணியென்றுசொல்ல,அப்போது அம்முனிவர் ஐம்புலா
திகளையும் அம்புவிவாதனையையும் அடக்கித் தன்னைமறந்து
அகண்டபரிபூரண சச்சிதானந்த பரப்பிரம்ம சைதன்னியத்
தில், லயப்பட்டு இருப்பதால் யாதுந்தோற்றாதவராய் இருந்த

நனாலே மறுபடியும் அப்பரிக்ஷித்தென்பவன் விளையாட்டு
புத்தியால் அவன் உயிர்நீங்கி இருந்த ஓர் பாம்பை எடுத்து
வந்து அம்முனிவர்கழுத்தில் மாலையைப்போற்போட்டுத் தன
து பதிக்குப்போய்ச்சேர்ந்தான், அங்ஙனமவ்வாறிருக்கையில்
அக்கோலத்தைக்கண்ட கிரீசனென்னும் ஓர் தபசியானவன்
அம்முனிவரதுகுமாரனாகிய சிருங்கிமாமுனியிடத்திற்சொல்ல,
அதற்கவன்கோபங்கொண்டு அதிவேகத்துடன் தகப்பனிடம்
வந்துபார்க்கும்போது அப்படியே இருப்பதுகண்டு இவ்வாறு
செய்தவனானென ஞானதிருஷ்டியினாற்பார்க்கும்போது பரி
க்ஷித்தென்றறிந்து மகா உக்ரத்தோடும் எனது தந்தையைக்
கிஞ்சித்தேனுஞ் சிந்தியாமல் இக்கோலஞ்செய்தவன் காற்கோ
டகனென்னும்பாம்பினால் மரணமடையக் கடவனென்று
சாபங்கொடுத்தான், அச்செய்தியைகிட்டையிலிருந்த அவன்
றந்தையாகிய முனிவனறிந்து கண்விழித்துப்பார்த்து, அடா
சிருங்கியே, என்னவேலைசெய்தாய், அந்தோ அவன் நீழலிற்
குடியிருந்துங் கிஞ்சித்தேனும் பொறுமையில்லாமல் அநீத
மாய் சாபத்தைக்கொடுத்தனையே,தருமமல்லவே ஐயோ,உன்
னைப்போற் கோபத்தைப் பொருளாய்க்கொண்டவர்கள் எவ்
வகையாய் நன்மையைப்பெறுவார்கள், கோபத்தினாலன்றோ
பிறப்பிறப்புமுதலிய துன்பங்கள்சம்பவிக்கும், இதை நீ அறி
யாமற் சிறுபிள்ளைபுத்தியாய் சபித்தனையே என்று மனவருத்த
முற்றவராய் தன்னுடையமாணாக்கர்களில் ஒருவனாகிய கௌர
மாமுகனிடத்தில் நடந்தசவிஸ்தாரங்களை எல்லாந்தெரிவித்
துப் பரிக்ஷித்துராஜனுக்கறிவிக்கும்படியாய்ச்சொல்ல, அது
போல அம்முனிவன் பரிக்ஷித்துராஜனைக்கண்டு தனது குருவா
னவர்கூறிய சங்கதிகளைச்சொல்ல,அதைக்கேட்ட பரிக்ஷித்து
வானவன் சிறுபிள்ளையாதலால் யாதுந்தோற்றாதவனாக விருந்
தான், அப்படி இருக்கையில் அதன்பின் சிறிதுநாள்கழித்து
இவன் இராஜரீகஞ்செய்துகொண்டிருக்கும்போது அங்குள
பெரியோர்களிடத்தில் தனதுகாலபலனைவிசாரணை செய்கை
யில் இராகுகேது தோஷங்கள்போதாதெனவறிந்து, அந்தோ

ஷஞ் சம்பவிக்குங்காலத்திலே உவரி என்னுஞ் சமுத்திரமத்தியில் ஒற்றைக்காலின்மீது மண்டபம்புதுக்கி அம்மண்டபத்திற் றன்னொண்டியாகவிருந்தும் அதைச்சுற்றிலும்தனதுமந்திரி பிரதானிமுதலியபடைவீரர்களைச்சர்ப்பமுதலிய விஷசெந்துக்கள் உட்பிரவேசிக்க வண்ணங்காக்கும்படியாய்க் காவலமைத்துக்காத்தும் வருகையில் விதியை விலக்கொணாதென்னுமொழிபோல் கார்க்கோடகனென்னும்பாம்பானது சிருங்கியின் கட்டளைப்படி பரிக்ஷித்துராஜனைத்தீண்டவேண்டி பிராம்மண சொரூபமாய்ப் பிரயாணப்பட்டுவருகிறபோது விஞ்சைமந்திரத்தையுணர்ந்தவல்லவனாகியும் எங்கும்பிரசித்தனாகியு மிருக்குங் காசிபனென்னும் ஓர்பிராம்மணன் பரிக்ஷித்துராஜனைக் காணவேண்டுமென்றுவருகிறபோது காசிபனைப் பிராம்மண உருவங்கொண்டு ஏகுங் கார்க்கோடகன்கண்டு, சுவாமி, எங்கு போகின்றீரென்றுகேட்க, அதற்கு காசிபன் கூறுவான், ஐயா, நான்பரிக்ஷித்து மகாராஜனை விஷந்தீண்டப் போகுதென்று சமுத்திரமத்தியில் வீடுகட்டிக்கொண்டிருப்பதால் அவ்வேந்தனை ஒருவேளை சர்ப்பந்தீண்டி உயிரிழந்து பிரேதமாயிருந்தபோதினும் அப்பிரேதத்திலே எனதுவல்லமையினாலே ஜீவனைவருவித்து எழுப்பி அவனிடத்திற் பரிசுபெற்றுக்கொண்டு போக எண்ணங்கொண்டு வந்தேனென்றுசொல்ல, அவ்வார்த்தையைக்கார்க்கோடகன்கேட்டு நகைசெய்து, அடாபயித்தியங்கொண்டபிராம்மணா, என்னவார்த்தைசொன்னாய், அந்தகார்க்கோடகன் தீண்டுவானாயின் உன்னைப்போன்றவன் நூறுவருடம்வரையிற்கற்ற மந்திரங்களைக்கொண்டு ஓதியபோதிலும், அவ்விடத்தையிறக்கும் வல்லபமுளதோவென்று கூறியதல்லாமலும், பின்னும் கூறுவான். ஓ பிராம்மணா, அவ்வேந்தனைத்தீண்ட எத்தனித்திருக்குங் கார்க்கோடகனென்பவன் நான்தான், எனது சொரூபத்தைப்பாரென்று தன் சொரூபத்தையுங்காட்டி, பின்பு அவனுக்குறுந் துன்பத்தை நீக்கி [illegible]கொடுப்பது நிச்சயமாயின், யான் ஒரு வார்த்தைசொல்லுகிறேன்கேள். அது யாதெனில், அதோ நமக்கெதிரிற்

றளிர்த்தும், பூத்தும், காய்த்தும், பழுத்துமிராநின்ற மாமரத்தை நான் தீண்டி எனது விஷாக்கினியினால் பஸ்மீகரப்படுத்திவிடுகின்றேன், பின்பு அதனை நீ உனக்கு வல்லபமிருந்தால், பழையபடி தளிர்த்திருக்கச்செய்வையேயாகில் பரிக்ஷித்தை எழுப்புவாயென நம்புவேனென்று கார்க்கோடகனாகிய பிராமணன் சொல்ல, அதற்குக்காசிபன், நான் அப்படியே செய்கின்றேன், உனது திறத்தைக்காட்டென்று கூற உடனே கார்க்கோடகன், தன்னுடைய சொரூபத்தை எடுத்து மகா கோபாக்கினியோடும், அம் மாமரத்தருகேசென்று அதன் வேரைத் தனது வாயினாற்பற்றிக் கடித்தமாத்திரத்தில், அம்மரமானது திக்கென்றெரிந்து சாம்பலாகி விழுந்தது; அதைக்கண்ட காசிபனென்னும் பிராமணன் உடனே தனக்கு கைவல்யமாயிருக்கும், விஞ்சை மந்திரத்தையோதிப் பழையபடி தளிர்த்திருக்கும்படியாய்ச்செய்தான். அப்போது, அதனைக் கார்க்கோடகன் பயந்தவனாய், அவனுடைய பாதார விந்தத்திற் பணிந்து நமஸ்கரித்து எழுந்து கூறுவான், வாருமையா சுவாமி, கேவலனாகிய நான் அந்த பரிக்ஷித்து ராஜனைக்கடித்து அதனாலவன் மரணத்தையடைந்தாலும், அவன் பிரேதத்தைக்கொண்டுபோய்க் கட்டையின்மீது வைத்துக்கொளுத்திச் சாம்பலாக்கினாலுந் தேவரீர் எழுப்பித்தருவீரென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை ஆதலால், தாங்கள் அவ்வாறு செய்வீர்களாயின், மகாரிஷியினது வாக்கும், என்னுடைய திறமுங்கெட்டுப்போம், அப்படி கெடாமலிருக்க நீர் எங்களை வேண்டி ஓர் காரியஞ்செய்யவேண்டும், அது யாதெனில், நீர் அந்த பரிக்ஷித்துவுக்குப் பிராணபிட்சைகொடுத்து அவனிடம் பெறும்படியாகிய பரிசினும், பதின்மடங் கதிகமாய்த் தருகிறேன், தேவரீர் அதனைப்பெற்றுக்கொண்டு, இப்படியே வந்தவழி போய்விட்டால் மெத்தவுஞ் சகுனமாமென்றுசொல்லித் தன்னிடமிருந்த நாகரத்தினத்தைக்கக்கி அவ்வேதியன் கையிற்கொடுக்க, அதை ஏற்ற காசிபனென்னும் பிராமணன் மகா சந்தோஷத்துடனே திரும்பிப்பாராமல் போய்விட்டது

எப்படி இருந்ததென்றால், பொருண்மீதவா வுற்றோன் புண்ணியம் வேண்டாமென்னுந் தன்மைக்கிணங்க அவ்வேதியன் சென்றவுடனே, காற்கோடகனெனவன்வந்த காசிபனென்னும், பிராமணனால் பரிக்ஷித்து ராஜனிருக்கும் இடமும் அறிந்து கொண்டவனாய், அவ்விடத்தினின்றே தனது உருவத்தை மாற்றித் தெய்வீகம்பொருந்திய ஓர் எலுமிச்சம்பழம்போல உருவங்கொண்டு, குபீலென்று ஆகாயவீதியிலெழும்பிக் கடலில்வீழ்ந்து, மிதந்துகொண்டிருக்கிறபோது அதைக்கண்ட காவலாளிகள் ஜலத்திற் குதித்தெடுத்துக்கொண்டுபோய் பரிக்ஷித்து ராஜனிடத்திற்கொடுக்க, அதைக்கண்ட வேந்தன் மகா அபேட்சையோடும், இவ்வளவு காத்திரமுங் காந்தியுமுள்ள பழத்தை யான் இதுவரையிற் கண்டதில்லையென்று சந்தோஷத்துடனே கரத்தினால் வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டான். அப்படி ஒற்றிய உடனே எலுமிச்சம்பழமாக இருந்தகாற்கோடகனென்னும் பாம்பானது சீறிப்பரிக்ஷித்தைக் கடித்து மறுபடியும், வேந்தன் கரத்தினின்றுங் கீழேவிழுந்து, கடலிற் குதித்தோடிப்போய்விட்டது, அக்காலையிற் பரிக்ஷித்து ராஜனுக்கு விஷந்தலைக்கேறித் துண்ணென வீழ்ந்து மரணமடைந்தான். அக்காலையில், அவனைச்சுற்றிக் காவலாகவிருந்த யாவருங்கண்டு, அபயமிட்டுக் கோவென்றலறி மகா துக்கத்தோடும், அவன் புதல்வனாகிய ஜெனமேஜெய ராஜனிடம்வந்து, நடந்த சவிஸ்தாரங்களைச்சொல்லி துக்கித்தபோது அவனும் அவ்வார்த்தையைக்கேட்டு அபயமிட்டலறி மகா துக்காக்ராந்தனாய் ஓடிவந்து, தனது தந்தையைக்கண்டு திடீரென்று பாதத்தடியில்வீழ்ந்து பதறிக்கதறி மூர்ச்சித்து, அங்குள்ளவர்களால் ஒருவாறு தேறி எழுந்து பெருந்துன்பத்தோடும், கடலினின்றும் பட்டணத்திற்குக் கொண்டுவந்து, செய்விதி யாவுமுடித்து தகனஞ்செய்து, கர்மக்கிரியைகள் யாவும் வழுவற நடத்தி, பின்பு தான் அவ்வரசுக்குரியவனாய்ப் பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு, இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருக்கிறநாளையில், ஓர் நாள் பரிக்ஷித்தை எழுப்ப

வேண்டிச்சென்ற இக்காசிபன் சத்துருவாகிய காற்கோடகனிடத்தில் நாகரத்தினத்தைப் பெற்றுக்கொண்டு அவ்வரசனை நாசப்படச்செய்துவிட்டு வந்தானென்றும்மூரில்வதந்திஉண்டானதால் அந்நிந்தைவார்த்தையை அவனுடைய புத்ரமித்ர களத்திராதிகளுஞ் சுற்றத்தாரும் பெரியோர்களும் மூகீசுவராள் முதலியதபோதனர்களும் இராஜாராஜாக்களுங்கேட்டுத் துன்புற்றவர்களாய் இச்சண்டாளனைக்கண்ணினாலும் பார்க்கப்படாதென்றுயாவரும் நிந்திக்கத்தலைப்பட்டார்கள், அக்காலையில் அந் நிந்தையைக்கேட்ட காசிபன் ஒருவர்முகத்தில் விழிப்பதற்கு நாணமுற்றவனாய் மனஞ்சலித்து சகிக்கப்படாத துன்பத்தையடைந்து பிரமைகொண்டுதிரிகிறபோது, ஓர் நாள் சாகுல்யனென்னும் ஒரு தபோதனரைக்கண்டு அவருடைய பாதகமலங்களிற்பணிந்து தோத்திரஞ்செய்து, சுவாமி, அடியேன் பிரமஹத்திமுதலிய ஓர்பாபஞ்செய்தறியாமலிருக்க என்னைக்கண்டயாவரும் மஹாசண்டாளன், இவனைப்பார்க்கவும்படாதென்று நிந்திப்பதோடும் என்வற்றத்தவரும் என்னை நீக்கிவிட்டார்கள், என்செய்வேனென்று துன்பத்தோடும் வணங்கிநின்றவனைப்பார்த்து, சாகுல்யமாமுனிவர் ஓர் முகூர்த்தகாலம்வரையில் நிருவிகற்பசமாதியிலிருந்து, பிறகு அந்நிட்டையினின்றும்நீங்கி காசிபனைப்பார்த்துக்கூறுவார், வாராய் பிராம்மணா, உன்னிடத்திலே ஒருகாரணமுமில்லாமல் வீணே உன்னைநிந்திக்கமாட்டார்கள் ஆதலால் பரிக்ஷித்து ராஜனை விஷந்தீண்டுங்காலையில் எழுப்புகிறேனென்றுபோய் அவனைக் கொல்லும்பொருட்டாய்வந்த காற்கோடகனென்னுஞ்சர்ப்பத்தினிடத்தில் நாகரத்தினத்தைப்பெற்றுக்கொண்டு கொடியசண்டாளர்களுக்குங்கடையாய், போனவழியேதிரும்பிவந்துவிட்டபடியால் அக்கொலையானது உன்னைப்பற்றியலைக்கின்றதென்றறிவாய், இதல்லாமலும் உலகத்திற் பஞ்சமாபாதகஞ்செய்தபேர்கள், கன்னிகைகளை விற்பனைசெய்தபேர்கள், தனது குதிரையை விற்பனைசெய்யும்பேர்கள், செய்நன்றிமறந்தபேர்கள், ஒருவருக்குவிஷந்தீண்ட அவ்விஷத்தை மாற்றத்தக்கவல்

லபமிருந்தும் அவற்றிற் பிரவேசியாமல் வஞ்சித்துவந்தபேர்கள், ஒருகாலங்களிலும் ஈடேறமாட்டாமல் துன்பத்தையநுபவிப்பதோடும் இரவுரவாதிநரகத்துக் கேதுவாவார்களென்று சுருதிவாக்கியங்களிற்சொல்லியிருப்பதை உணர்ந்திலையோ, பதகனே, இல்லாமலும் இவ்வுலகத்திலுள்ள நான்கு வர்ணாசிரமங்களில் எவர்களுக்கேனும் ஆபத்துநேரிட்டால் அவ்வாபத்தின்பொருட்டு எந்தவஸ்துவைக்கேட்டபோதிலுங் கொடுத்து இரட்சிக்கவேண்டுமென்று சுசர்முதலியபெரியோர்களாலே நீகேட்டிருந்தும் அவ்வாக்கியத்தைமறந்து உலகையாளும்வேந்தனுக்கு கேடுநினைந்தமையால் அப்பெரும்பழியானது உன்னைத்தொடர்ந்து சகலராலும் நிந்திக்கப்படுகிறுயென்று சாகுல்யமகாமுனிவர்சொல்ல, அதைக்கேட்டகாசிபன் மகாவியாகுலத்தை யடைந்து முனிவரைப்பணிந்து, சுவாமி, அறிவிலியேன்செய்த இப்பாதகந்தீரும்படியாய் ஓர் உபாயஞ் சொல்லவேண்டுமென்று தோத்திரஞ்செய்ய, அதைக்கேட்ட சாகுல்யமாமுனிவர்கூறுவார், வாரும்பிராம்மணா, நீ செய்திருக்கும் பாபந்தீரவேண்டுமாயின், நாம், ஓர் உபாயஞ்சொல்லுகின்றோம், அதுயாதெனில், இந்தபூலோகத்திலே தென்றிசையிலோங்குங் கந்தமாதனகிரிச்சாரலில் ஸ்ரீராமநாதனுக்குமுன்பாக காயத்ரி என்றுஞ் சாஸ்வதி என்றும் இரண்டுதீர்த்தங்களுண்டு, அத்தீர்த்தத்திலே நீபோய் சங்கற்பவிதியின்படி மூழ்குவையேயாகில் உனதுபாபவிமோசனமாகி இப்பழிவார்த்தையும் நீங்கிவிடுமென்று சாகுல்யர்சொல்ல, அவ்வாய்மையைக்கேட்ட காசிபன் முனிவரைப்பணிந்து விடைபெற்றுத் தானிருக்கும் பதியைவிட்டுப்பிரயாணப்பட்டு அதிதீவிரமாய்க் கந்தமாதனபருவதம்போய்ச்சேர்ந்து சாகுல்யர்சொல்லிய தீர்த்தங்களைக்கண்டுபணிந்து அத்தீர்த்தத்திலே சங்கற்பவிதியின்படிதீர்த்தமாடி அங்குள ஸ்ரீராமநாதனைவணங்கித் தோத்திரஞ்செய்துவருகையில், ஓர்நாள் காசிபன் தீர்த்தமாடிக்கொண்டு நிற்கிறவேளையிலே காயத்ரியுஞ் சரசுவதியும் இரண்டு பிராம்மணப்பெண்களாய் உருவங்கொண்டு காசிபனுக்கெதி

ரில்வந்துநின்று, ஓய்பிராம்மணா, நீ செய்ததோஷங்களெல்லாம் நமதுபரிசம்பட்டமாத்திரத்தில் விலகிப்போய் விட்டபடியால் இனி உனக்கு வேண்டியவரத்தைக்கேட்பையேயாகில் தருகிறோமென்றுகூற, அவ்வார்த்தையைக்கேட்ட காசிபன் பிரமாநந்தபரிதனாய் அவ்விருவரையுந்தோத்திரஞ்செய்து, அம்மா தாய்மார்களே, அடியேன் இம்பருலகத்திலும் உம்பருலகத்திலுமோங்கும் வேதாகமசாஸ்திரபுராணகலைகளில் ஒப்பொருவருமில்லாதவனாகவிருக்கவும், இனி இவ்வுலகின்கண் இருக்குமளவும் அதர்மகுணத்தைநீக்கி தருமகுணத்தோடு இருக்கும்படியாகவும், உலகிலுள்ளயாவரும் என்னைப்புகழும்படியாகவும் இம்மூன்றுவரமுங் கடாக்ஷித் தருளவேண்டுமென்று காசிபர்கேட்க, அதற்கு அவ்வாறே காயத்ரியம்மனுஞ் சாஸ்வதியம்மனுங் கருணைசெய்தவர்களாய்த் தங்களுடைய லோகத்துக்கெழுந்தருளியபின், காசிபன் மறுபடியும் காயத்ரி சாஸ்வதிமுதலிய தீர்த்தங்களிலுஞ் சேதுதநுக்கோடியிலும்மூழ்கி ஸ்ரீராமநாதனைவணங்கிவிடைபெற்று அவணிருந்தும் மீண்டு தனது சுதேசம்வந்துசேர்ந்து சகலத்திராளும் புகழும்படியாய் வாழ்ந்துகொண்டிருந்தான், கேட்டீர்களோ மகாரிஷிகளே, இப்படியாய் அக்கந்தமாதனத்திலே விளங்குங் காயத்ரி சாஸ்வதி என்னுந்தீர்த்தங்களின்பெருமை யாவராற்சொல்லிமுடியும்; இதல்லாமலும் இன்னும் அச்சேதுவின் மத்தியிலே கோடானுகோடிதீர்த்தங்கள் பற்பலவிதங்களாய் மகாமகிமை பொருந்தியதாவும் அற்புதமுள்ளதாகவும் விளங்கும் இருணமோசனமென்னும்பெயருடைய ஓர் புண்ணிய தீர்த்தமுண்டு, அப்புண்ணியதீர்த்தத்தில் மூழ்கினபேர்களுக்கு முக்கடன்களும் விமோசனமாம், அவ்வாறு மூன்று இருணங்களும் விமோசனமாகின்றபடியினாலே இருணவிமோசனமென்னும் பெயரினையுடையதாய் விளங்குகின்றது, இதல்லாமலும் மற்றதீர்த்தங்களும் அப்படியே ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருமகிமைபொருந்தி ஒவ்வொருகாரணநிமித்தமாய் விளங்குவதால் அக்கந்தமாதனகிரியில் உண்டாயிருக்கும் மகிமை

களென்னவென்றுசொல்லப்போகின்றோம்,மேலும்அப்புண்ணியமலைச்சாரில் கண்ட இடங்களெல்லாந் தீர்த்தங்களாகவும் இலிங்கங்களாகவும் இருத்தலால்அதற்கொப்பாகிய பூமி எங்குங்கிடையாதெனச் சொல்லுவோம், என்று சூதமுநிவர் சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட நைமிசாரணியர்கள் சந்தோஷமடைந்து, சுவாமி, அந்த இருண விமோசனத்திலே மூன்றுவித இருணந்தீருமென்று சொன்னவிதமும் மற்ற பல தீர்த்தங்களின் மகிமையும் அடியோங்களுக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்றுகேட்க, சூதமுநிவர் சொல்லத் தொடங்கினார்.

காசிபச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

பலதீர்த்தச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முநிவர்களே, நெடியகடல் சூழ்ந்த இவ்வுலகின்கண் கருமபூமியிலே ஜனனமெடுத்தபேர்களுக்கு மூவகைக்கடனுண்டு,அவையாவையெனில்,தபசிகள்கடன் தேவர்கள்கடன் பிதுற்கள்கடனென்னும் இம்மூன்றில் வேதசாஸ்திர விசாரணைகள்செய்யாதவன் தபசிகடனுடையோனாகும், யாகாதிகிர்த்தியங்கள்செய்யாதவன் தேவர்கடனுடையோனாகும், பிள்ளைப்பேறில்லாதவன் பிதுற்கடனுடையோனாகும், இவ்வகைப்பட்ட முக்கடன்களும் கற்பகோடிகாலஞ்சென்றாலும்தீர்க்கப்படாததாகஇருக்குமாதலால் அத்தன்மைகொண்டவர்களும் இத்தீர்த்தத்திலேவந்து சங்கற்பவிதிப்படிமூழ்குவாராயின் அவர்களுக்கு உடனே அந்த மூன்றுகடன்களும் விமோசனமாகுமென்று வேதங்களால் முறையிடப் படுகின்றபடியால் அத்தீர்த்தத்துக்கு இருண விமோசனமென்று பெயர்விளங்குகின்றது, இந்த இருண விமோசனத்திலே பிரமசரியவகை இரண்டிலும் யாகாதிகள் செய்யாமல் மகாதாரித்திரராய் இருந்தாலும் அவர்கள்வந்து

மூழ்கியவுடனே குபேரசம்பத்துடையவர்களாய் விளங்குவார்கள், ஆனபடியினாலே சகலத்தாரும் அந்த இருணவிமோசனத்திலே தீர்த்தமாடினால் நாம்சொல்லிய மூன்றுவித இருணமுந்தீர்ந்து பின்சேதுதநுக்கோடியில் மூழ்கி ஸ்ரீராமநாதனையும் வணங்கிவருவார்கள், இதல்லாமலும் பஞ்சபாண்டவாள் இராஜசூயயாகஞ் செய்யவேண்டி அதற்குமுன்பாக இக்கந்தமாதனத்திலே இலட்சுமிதீர்த்தமாடவந்தபோது அவர்களால் உண்டாக்கப்பட்ட பாண்டவதீர்த்தமென்னும் ஓர் தீர்த்தம் விளங்கிக்கொண்டிருக்கின்றது, அத்தீர்த்தம்பதினாயிரந் தீர்த்தத்துக்கும் மேலானதீர்த்தமாய் பலன்களைத் தருவதுமன்றியில் அத்தீர்த்தத்திலே பன்னிரண்டுசூரியசந்திரரும் அஷ்டவசுக்களும் பதினொருகோடி ருத்ராதிதேவர்களும் நித்தியப்படியாய்நீங்காமலிருந்து அதிற்றீர்த்தமாடி தேவபூசைகள்நடத்திப் பின் தேவர்களும் பிதுற்களும் மனிதர்களாலே சந்தோஷிக்கும்படியாய்த் தாங்களவிடமிருந்து அற்கியமும் அவிற்பாகமும்பெறுவதனாலே அந்ததீர்த்தக்கரையிலே பிராம்மணபோஜனஞ்செய்துவைத்தால் கோடானுகோடிபுண்ணியமுண்டாகும், இதல்லாமலும் உலகத்திற்பிறந்தவர்களில் கடைக்குடியிற் பிறந்தவராயினும் அத்தீர்த்தத்தில்வந்து மூழ்குவார்களாகில் அவர்கள் மேலானகுலத்திற்பிறப்பதோடும் எமதண்டனையுமற்று கங்காஸ்நாநஞ்செய்தபலனுமுண்டாகும், இதல்லாமலும் முன்னொருகாலத்தில் தேவர்களெல்லாங்கூடி மஹேசுரயாகஞ் செய்யவந்தபோது அந்தகந்தமாதனச் சாரிலே அவர்களால் உண்டாக்கப்பட்ட தேவதீர்த்தமென்றோர்தீர்த்தமுண்டு, அத்தீர்த்தத்திலேமூழ்கும் புண்ணியபுருஷர்களுடையபாபங்களெல்லாஞ் சுழற்காற்றிலகப்பட்ட பஞ்சுபோற்பறந்தோடுவதோடும் திவ்யதேஜசும் மேலானபோகபாக்கியங்களும் கிடைப்பதல்லாமலும் தேவர்களில் மகாவிஷ்ணுவானவர் எப்படி மேன்மையுற்றிருக்கின்றனரோ அதுபோல் பூலோகதீர்த்தங்களிலே இதுதெய்வீகம்பொருந்திய தீர்த்தமாதலால் இதில் மூழ்கினபேர்களுக்கும் அவண்வாசஞ்செய்தபேர்களுக்கும்

தானதருமஞ்செய்தபேர்களுக்கும்அசுவமேதபலனைக் கொடு
க்கும், தபசிகட்கும் தேவர்கட்கும் பிதுர்களுக்கும் மனமகி
ழ்ச்சியை உண்டாக்கி வைகுந்தபதத்தைக்கொடுக்கும், இதன்
றியும் ஒருவாரம்வரையில் அதில்வாசஞ் செய்வார்களாகில்
அவர்கள் மறுபடியுந் தாய்வயிற்றில்ஜனிக்கும் பிறவிநோயை
அனுபவியார்கள், ஆதலால் அதன்பெருமை அளவிறந்ததாக இரு
ப்பதால் ஒருவராலுஞ்சொல்லிமுடியாது, இதல்லாமலும்வாலி
யின் சகோதரனாகிய சுக்ரீபனென்பவனால் உண்டாக்கப்பட்ட
ஓர்தீர்த்தமுண்டு, அத்தீர்த்தத்தில் மூழ்கியபேர்கள் அவன்
தந்தையாகிய சூரியனதுலோகத்தைப்பெறுவார், ஆயிரங்கோ
தானஞ் செய்தபலனும் அசுவமேதயாகஞ் செய்தபலனும்
பெற்று அத்தீர்த்தத்தை மனதில் தியானஞ் செய்தவர்
கள் வேதாகமங்களையோதி யுணர்ந்தபலனைப் பெறுவார்கள்,
உலகத்தில் உற்ற மனிதர்களுக்கு வாய்த்த,பிரம்மஹத்தி முத
லிய தோஷங்கள் தீரவேண்டுமாயின், அத்தீர்த்தக்கரையில்,
உபவாசமாயிருந்து தீர்த்தமாடினால், உடனே விலகிப்போம்.
மேலும் அத்தீர்த்தத்தில், பிதுர்களைக்குறித்து தர்ப்பணஞ்
செய்தால், அநேகம் யாகாதி கிர்த்தியஞ்செய்த பலனும்,
நரமேத யாகஞ்செய்த பலனும் பெற்றுப் பேரின்பத்தை
யடைவார்கள். இதன்றியும், நளனாலே உண்டாக்கப்பட்ட
நளதீர்த்தமென்றோர் தீர்த்தமுண்டு, அத்தீர்த்தத்தில் மூன்று
நாள் உபவாசமிருந்து, தேவர்களையும், பிதுர்களையும் நினை
ந்து, ஆராதனைசெய்து தீர்த்தமாடினால், யாகாதிகள் செய்த
பலனும், கோடானுகோடி புண்ணியஞ்செய்த பலனும்,
பெறுவதோடும், அவர்கள் பிறவி நோயுமொழிந்து, சூரியப்
பிரபைபோல் விளங்குவார்கள். இதனோடும், நீலனென்பவ
னால் உண்டாக்கப்பட்ட நீலதீர்த்தமென்றோர் தீர்த்தமுண்டு,
அத்தீர்த்தத்தில்மூழ்கியபேர்களுக்குசொர்ன்னயாகஞ்செய்த
பலன் கிடைப்பதோடும், அக்கினி லோகத்தையடைவார்கள்.
இதல்லாமலும், வானர வீரர்களுள், பசுக்கண்ணனென்பவ
னால் உண்டாக்கப்பட்ட ஓர் தீர்த்தமுண்டு, அதில் தீர்த்தமா
டியபேர்கள், திக்கு விஜயஞ்செய்த பலன் கிடைப்பதோடும்,

தெய்வலோகத்தையடைந்து கற்பகவிருட்ச நிழலில் வாழ்ந்து
கொண்டிருப்பார்கள். இதனோடும், அக்கந்தமாதனச்சாரலில்
அங்கத தீர்த்தமென்றும், கயன் தீர்த்தமென்றும், சாம்பவ
தீர்த்தமென்றும், நளன் தீர்த்தமென்றும், பனச தீர்த்தமெ
ன்றும், கவைய தீர்த்தமென்றும், குமுத தீர்த்தமென்றும்,
அமுத தீர்த்தமென்றும், தேவர்களாலும், வானர வீரர்களா
லும், உண்டாக்கப்பட்ட தீர்த்தங்கள் அனந்தம் உண்டு,அத்
தீர்த்தங்கள் தம்மிடத்தில் மூழ்கியபேர்களுக்கு வேண்டிய
பலன்களைக் கொடுப்பதோடும்,அநேக மகிமைகளையும் உண்
டாக்கும். இதல்லாமலும், பிரமனுடைய பவுத்திரனாகிய
விபீஷணனால் உண்டாக்கப்பட்ட விபீஷண தீர்த்தமென்
றோர் தீர்த்தமுண்டு, அத்தீர்த்தத்தில் மூழ்கியபேர்களினு
டைய பழிபாவங்களையுந் தாரித்திரத்தையும் போக்குவது
மல்லாமல், ஞானமுங் கல்வியும்பெற்று வைகுந்த வாழ்வை
யடைவார்கள். பின்னும் அவ்விபீஷணனுடைய மந்திரிமார்
களாகிய நாலுபேர்களும் வீரம், வீரகேதனம், காரணம்,
நாரணீயமென்னும், நான்குபேர்கள், பேரால் மகா மகிமை
யோடு விளங்கும், அத்தீர்த்தங்களில் மூழ்கியபேர்களுக்கு
புத்தியும், யோசனையுமுண்டாவதோடும், பெரும் புண்ணியங்
களும், பேரின்பமுங் கிடைக்கும். கேட்டீர்களோ நைமிசா
ரண்யர்களே, மகா மகிமைபொருந்திய ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி
யானவர், கங்கையைச் சடையிற்றரித்திராநின்ற சாம்பசிவ
மூர்த்தியை அந்தகந்தமாதனச்சாரலில் பிரதிஷ்டை செய்து,
பூசித்தபடியினாலே அவண் அநேகங்கோடி தீர்த்தங்கள், தம
க்குத்தாமே நிகராய் விளங்கிக்கொண்டிருக்கும். இதல்லாம
லும், அச்சேதுவிலே ஒருநாள் தீர்த்தமாடியபேர்களுக்கு பதி
னாயிரங்கோடிவிசை கங்கை, பிரயாகை, யமுனை, முதலிய
தீர்த்தங்களாடிய பலனும், சிவாலய, விஷ்ணுவாலய, பிரம்மா
லய முதலிய தேவாலயங்களைச் சேவித்த பலனும் பெறுவார்
கள், மேலும், அக்கந்தமாதனத்தில் பொன்னுலக வாசிகளா
கிய தேவர்களும், பிரம்ம ருத்திரர்களும், தும்புரு, நாரத,

கெருட காந்தர்வ, சித்த வித்யாதர ருரகாகாய வாசிகள் போக பூமியரும், ஸ்ரீ ராமனுடைய கட்டளையின்படி சதாகாலம் வாசஞ்செய்து, நித்யப்படி தீர்த்தமாடி, ஸ்ரீ ராமநாதனைப் பூசித்து வணங்கி வருவார்கள். இவ்வளவு மகிமைபொருந்திய சேது முதலிய தீர்த்தங்களெல்லாம், அக்கந்தமாதன கிரிச்சார்பில் பொருந்தியிருக்கும் பெருமையில், ஆயிரத்திலோர்பாகம் உங்களுக்குச் சொன்னேனாதலால், அதன் பெருமையைப் பூரணமாய்ச் சொல்லவேண்டுமாயின், சொல்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும், ஆயுள் போதாமையாக இருக்கும். இத்தன்மையாகிய தீர்த்தங்கள் விளங்கப்பட்ட கந்தமாதன பருவதத்திலே இலங்கும், மூர்த்தி மகிமையைச் சொல்லவேண்டுமாயின், அளவுபடாதாதலால் நாம் என்னவென்று சொல்லப்போகின்றோமென்று சூதமகாமுனிவர் சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட நைமிசாரண்யர்கள், சுவாமி; தேவரீர் அக்கந்தமாதனத்தில் விளங்கும்; மூர்த்தி மகிமைகளையும், அடியோங்களுக்குச் சொல்லவேண்டுமென்றுகேட்க, அதைக்கேட்ட முனிவர் உளமகிழ்ந்து, ஸ்ரீ ராமநாதனுடைய மகிமையைச் சொல்லத்தொடங்கினார்.

பலதீர்த்தச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

இராமநாதச் சருக்கம்.

கேளுங்கள், நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண், கோசலதேசத் திராஜகுமாரனாகிய ஸ்ரீ ராமசந்திரன், தனது தம்பியோடும், சீதாதேவி சமேதனாய் வானராதிகளோடும் கந்தமாதனத்திற் பிரதிஷ்டை செய்திருக்கும் திரிநேத்ரதாரியாகிய ஸ்ரீ ராமநாதனை தரிசித்தபேர்கள், மேலான ஞானானந்தத்தை யடைவதோடும், கிரேதாயுகத்திற் பத்துவருடகாலமும், திரேதாயுகத்

தில் ஒருவருடகாலமும், துவாபரயுகத்தில் ஒருமாத காலமும், கலியுகத்தில் ஒருவாரதினமுந் தெரிசித்தால், அவரவர்கள் நன்மை தீமைக்குத் தக்கபலன் கிடைக்குமென்று வேதங்களாலே சொல்லப்பட்டிருப்பதாலும், ஸ்ரீ ராமநாதனை தரிசிக்கும் பலன், ஒன்று கோடியாய் இமைப்போதில், அநேக புண்ணிய பலன்களைக்கொடுக்கும். மேலும், தேவ மாதவ பிதுற் புண்ணியதீர்த்த சொரூபங் கோடி கொண்டதாய் விளங்கிய ஸ்ரீ ராமநாதனை ஒருபோது, இரண்டுபோது, மூன்றுபோது, அல்லது க்ஷணப்போதாவது அன்போடும் மனங்குவிந்து வணங்குபவனெவனோ, அவன் என்ன பாபியாகவிருந்தாலும், அவன் நற்குலத்திற் பிறந்து, சுத்த ஞானியாய்ப் பிரம சொரூபத்தையறிந்து, அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபமே தானாய் விளங்குவான். மேலும், யுத்தாங்கத்துக்கிளையாத, ஸ்ரீ ராமசந்திரனாலே பூசிக்கப்பட்ட ஸ்ரீ ராமநாதனை அற்சித்து,வணங்கப்பட்டபேர்கள் தேவ சொரூபம் பெறுவார்களல்லது, மாநிடராக ஜனியார்கள். இத்தன்மை பொருந்திய ராமநாதக்கடவுளை அற்சித்து வணங்காதபேர்கள், பிறவிச்சாகரத்தில் மூழ்கி, முத்தியாங் கரையைக்காணமல் துன்பத்தை யடைவார்கள். இதல்லாமலும், அக்கந்தமாதனத்தில் விளங்கும், இராமநாதனை திரிகரணத்தோடுந் தியானித்து வணங்கப்பட்டவர்களைக்கண்டு, அவர்களுடைய பெருமையை எழுதி வைத்துக்கொண்டு வாசித்து வருபவன் மகா புண்ணியத்தைப்பெற்று வாழ்வான். அப்படிச் செய்யாதவன், லோகத்திற் கூன், குருடு, செவிடு, சப்பாணியாகப்பிறந்து தாரித்திரத்தை யநுபவிப்பதோடும், பெண்சாதி பிள்ளை பாக்கியமற்றவனாய் பசாசு, வேதாளங்கள் பிடித்து, அறிவழிந்து துத்தி என்னும் நரகத்தை யடைந்து துன்பப்படுவான். மேலும், ஸ்ரீ ராமநாதனுடைய பாதாரவிந்தங்களை யாரொருவர் சிந்தித்து வணங்குகின்றார்களோ, அவர்கள் ஆயிரம் பிரம்மஹத்தி செய்திருந்தாலும், அவைகளெல்லாம் நாசப்படுவதல்லாமலும், அழகுள்ளவர்களாயும், பாக்ய சம்

பன்னராயும், நற்குலத்திற்பிறந்து மேலோர்களைச்சார்ந்து எமலோகத்தை அறியாதவர்களாய் வாழ்ந்து, முடிவிற் பரமபதத்தைப் பெறுவார்கள். பின்னும், அந்த ராமலிங்கத்தைக் கண்ணிலுற் கண்டபேர்களையும், கண்டு வணங்கியபேர்களையும், சகலரும் புகழ்வதோடும், கங்கை, யமுனை, பிரயாகை, முதலிய புண்ணிய நதிகளிலாடின பலனும்பெற்று, மாதிடப்பிறவியொழிந்து தேவ சொரூபம் பெற்று, பிரம்மா, விஷ்ணு, முதலிய தேவர்களால் புகழத்தக்கதாகவிருந்தால், அந்த ராமநாதனுடைய மகிமையை நாம் என்னவென்று சொல்லப்போகின்றோமாதலால், அவ்விலிங்கத்தை எந்த எதுவிலாவது மனதிற் சிந்தித்துப் புகழ்ந்தவர்களினது கொடுமையான பாதகங்களெல்லாம், அக்கினியிற் பிரவேசித்த விறகு போலெரிந்து சாம்பலாய்க் காற்றோடு காற்றாய்ப் பறந்து போய்விடும். இதல்லாமலும், அஷ்டமூர்த்தி சொரூபமாய் விளங்கபபட்ட ஸ்ரீ ராமநாதனை நினைத்தவனைப்போதேனு மனத்தில் அன்போடும், வாய் குளறும்படியாகவும், கண்களில் ஆனந்தக்கண்ணீர் சொரியத்தக்கதாகவும், சிந்தித்து அவர் பதாம்புயங்களைக் கைவருந்தும்படியாய் அர்ச்சனைசெய்து ஆனந்தக்கூத்தாடியபேர்களும், இராமலிங்க சொரூபத்தையாவது அல்லது ஸ்ரீ ராமனுடைய அவயவ கரசரணாதிகளை அவரவர்களுடைய ஜீவனுடனே தன்மயமாகும்படி பக்தி சிரத்தையோடும், யார் வணங்குகின்றார்களோ அவர்களும், பேரின்பமென்னுஞ் சாகரத்தில் ஆனந்தாமிர்தங்களைப் புசித்து, நித்யானந்த சொரூபத்தை யடைந்து சின்மயானந்தப்பொருளாய் விளங்குவார்களே யன்றி, இப்பிரபஞ்சமென்னுஞ் சமுகத்தை யடையமாட்டார்கள். இதல்லாமலும், லோகத்தில் மூடராயிருக்கப்பட்ட பேர்களும், ஸ்ரீ ராமசந்திரனுடைய தரிசனஞ்செய்தால், அவர்கள் மகா அழகு பொருந்திய சாந்த குணத்தையும், அஷ்டமாசித்தியையும், அஷ்டாங்கயோகத்தையும், பிரம்ம ஞானத்தையும்பெற்று வாழ்வார்கள். மேலும், மோட்ச ஞானம் ஒருவருக்கு வரவேண்டுமா

யின் சிரவணமனனாதித் தியாசனங்களினாலும், வேதாந்த பாஷ்ய பாடங்களினாலும், துறவாசிரமத்தை யடைந்தபேர்களுக்கு சித்திக்குந் தூறவுமல்லாமல், ஆசிரம பேதங்களுமில்லாமலிருந்தால் எந்த வருணத்தோர்களுக்கும், ஸ்ரீ ராமநாதனுடைய தரிசன பலத்தினால், பிறவிச்சாகரத்தை யொழித்து மோக்ஷவீட்டைக் கொடுக்குமானால், அதன் மகிமைகளை நாம் எவ்வாறு அளவிட்டுச் சொல்லப்போகின்றோம். மேலும் ஓ முனிவர்களே, அத்தலத்திலே வாசஞ்செய்கின்ற யானைமுதலெறும்பீறாகிய சகல ஜீவராசிகளுக்கும், மாநிடர்களுக்கும், சொற்கலோகவாசிகளாகிய தேவர்களுக்கும், ஏற்றமுங்குறைவுமில்லாமற் சரியாகவே வாழ்ந்து வருவார்கள். மேலும், அக்கந்தமாதனத்தில் ஓங்கும், ஸ்ரீ ராமநாதனை யாவொருவர் வணங்குகின்றார்களோ அவர்கள் அக்கடவுளினது கடாக்ஷம் பெற்று இகத்திலும் வினைகளுக்கு பயப்படாதவர்களாகியும், எத்தன்மைபொருந்திய பாபங்கள் செய்தபோதினும், பருதிமுன் பனிபோல் விலகிப்போவதோடும், அவர்களுக்கு வேதங்களை புணர்ந்த பிராம்மணரும், முனிவர்களும், சித்தர்களும், சரியாகமாட்டார்கள். மூன்றும்பிறையைச் சடாமகுடத்தில்தரித்திருக்கப்பட்ட ஸ்ரீராமநாதனைதரிசித்து வணங்கப்பட்டபேர்களை கண்ணினாற்கண்டபேர்களுக்கு அவர்கள்செய்தபாதகங்களெல்லாம் இமை நோத்தில்நாசத்தையடையுமென்று பெரியோர்கள்சொல்லியிருக்கின்றார்களாதலால் அதுபோல் ஸ்ரீராமநாதனுடைய குற்றமற்றபாதார விந்தங்களை வணங்கித்துதிப்பதற்கு, கொடுத்துவையாதபேர்கள் நான்குவேதங்களையு முணர்ந்திருந்தாலும் நூறு அசுவமேதயாகங்கள்செய்திருந்தாலும் சந்திரவட்டக்குடை நீழலிலிருந்துகடல்சூழ்ந்த உலகை எல்லாம்வேறொரு மன்னனுமில்லாது தானே அரசசெய்யத்தக்கவர்களாக விருந்தாலும் பொன்னுலகவாழ்க்கைக்குப் பாத்திரராகமாட்டார்கள், அந்த ராமநாதனைவணங்கித் துதிக்கப்பட்டபேர்கள் லோகத்தில் கல்வியைக்கல்லாமற் கடையாகியதொழிலிற் பிரவேசிப்பவ

ஞயினும் அவனே ஆளுகைக்குரியவனாய் தெய்வலோகத்துக்
கருகனாய் விளங்கப்பட்டு நாளுக்குநாளுயர்வுபொருந்திச்சக்ர
வர்த்தியாவான். மேலும், அத்தலத்திலே அன்புடனேவாசம்
பண்ணிக்கொண் டிருப்பவரியாரும் மான்மழுசதுற்புஜ காள
கண்ட திரிநேத்திரமுடையவராய் மூன்றாம்பிறைச் சந்திரனை
யும், கங்கையையும், உருத்திராக்கத்தையும், கொன்றையை
யும், வில்வத்தையும், அறுகையுஞ் சிரத்திலணிந்திருக்கப்
பட்டவராயும், ஐந்து முகங்களையுடையவராயும், விளங்கும்
ஸ்ரீ ராமநாதனைப்போலே யுருவம்பெற்று வாழ்வார்களேயன்றி
வேறு ரூபமாக இரார்கள். பின்னும் அந்த ராமநாதன் விளங்
கப்பட்ட ஸ்தலத்துக்குப்போய் தரிசித்துவந்தபேர்களுக்கு
அசுவமேதயாகம்பண்ணின பலன் கிடைக்கும், அந்த ராம
லிங்கத்தினுடைய பூசைக்கு நல்ல பரிமளம் பொருந்தி, வி
தம் விதமா யிருக்கும்படியாகிய புட்பங்களையும், இரசவஸ்
துக்களையும், காய்கனிகளையுங் கொடுப்பவர்கள்பேரில் மிருதி
யும், கிருபைவைத்து ஸ்ரீ ராமநாதன் இரட்சிப்பார். இதல்லா
மலும், அச்சேது தநுக்கோடியிலே பெரியோர்கள் வணங்
கும்படியாய் விளங்கும், ஸ்ரீ ராமநாதன் மனமகிழும்படியாய்
அவர் சந்நிதானத்திலே, ஓர் பிராமணனுக்கு ஒருபிடி யன்
னங்கொடுத்தால், அவர்களுக்கு அநேகவிதமான ஜனனத்தில்
பூமி முழுவதும் தானஞ்செய்த பலனைக்கொடுக்கும்.
மேலும், அந்த ராமநாதக்கடவுளை அற்சித்து, நாவினாற்ஸ்தோத்
திரஞ்செய்யும்படியாயும், வணங்கும்படியாயும், சேதுவுக்குப்
போகக்கூடாதவர்கள் தாங்களிருக்குமிடத்திலே யிருந்தாவது
ஸ்ரீ ராமநாதனைப்போற் பாவித்து வணங்கித் தோத்திரஞ்செய்
தால் அவர்கள் சேதுவுக்குப்போய் தீர்த்தமாடிய பலன் சித்த
மாய்ப்பெறுவர். இஃதன்றியும், ஸ்ரீ ராமமூர்த்தியினாற் பூசிக்
கப்பட்ட காளகண்ட மூர்த்தியை நினைத்து வணங்கப்பட்ட
பேர்களே, மகா சிறப்புடையோர்கள். அப்படி வணங்காதவர்
கள், ஒருக்காலங்களிலும் நல்ல கதியை யடையமாட்டார்கள்.
லோகத்தில் எக்கருமத்தையாவது எப்புண்ணியத்தையாவது

எந்தயாகத்தையாவது இகமொன்றில்லாமற் செய்திருந்தாலும்,
அவர்கள் ஸ்ரீ ராமனை மனதில் நினையாதவர்களாகவும், வணங்
காதவர்களாகவுமிருப்பாராகில், அவர்களுக்கு ஆயிரம் பிரம்
மஹத்தி செய்த தோஷங்களுண்டாம் இரவுரவாதி நரகங்கள்
சித்தமாய்க் கிடைக்குமென்பதாம், மேலும், வேதசாஸ்திர
புராணங்கள், யாகாதி எக்கியங்கள், தானதருமங்களாலே
உண்டாக்கப்பட்ட பலன்களுக்குப் பிரயாசிப்பதைப்பார்க்கி
லும், இராமநாதனுடைய பாதாரவிந்தத்தை தரிசனஞ்செய்
தால், அப்பலன்களெல்லாம் ஓர் இமைப்போதிற் பெற்று,
குற்றமற்ற சைவகுலத்திலே பிறந்து மேலான கதியையடை
வார்கள். பின்னும், அந்தராமநாதனை இரண்டு நாழிகையா
வது அன்புடனே தியானஞ்செய்திடுவோனாகில், அவனுடைய
கோத்திர சூத்திரங்களினாலே இருபத்தொருகோடி தலைமுறை
யிலுண்டான புத்ரமித்ர களத்ராதி பந்து ஜனங்களுடைய
தோஷங்களுந்தீர்ந்து, அவரெல்லாருஞ் சிவலோகஞ் சேருவார்க
ளென்றும், ஸ்ரீ ராமமூர்த்தியினுடைய வரப்பிரசாதமுண்
டாகியிருக்கின்றது. அன்றியும், அந்த ராமலிங்கத்தை ஒரு
நாளையில் ஒருபோதேனும், பத்தியோடு தரிசித்தபேர்கள், இக
த்திலுங் குறைமற்ற போகபாக்கியங்களைப் பெற்றிருந்து பரத்
திலும், மேலான சாயுச்யபதவியிலே ஸ்ரீ ராமநாதனுடைய
சொரூபமே முடிவாய்ப்பெற்று விளங்குவார்கள். சூரிய உத
யத்திலே ஸ்ரீ ராமநாதனை தரிசித்தால், அவர்கள் செய்த பாவ
ங்களெல்லாம் பறந்துபோம். மத்தியான காலங்களில் தரிசித்
தால், ஜென்ம ஜென்மங்களிலே செய்த வினையெல்லாம் பறந்
துபோம். மாலைப்போதில் தரிசித்தால், மனத்திலுண்டாகிய
அஞ்ஞானங்களெல்லாமகன்று, அநேகங்கீர்த்திகளுண்டாகி
ஜென்மங்கடோறுஞ்செய்த பாபமாகிய இருண்மலையை ஸ்ரீ
ராமநாதனுடைய பாதப்புணையின் பெருமையாகிய வச்சிரா
யுதமானது பொடிப்பொடியாய் தகர்த்துத் தூளாக்கி எறிந்து
விடும். இந்த ராமநாதனுடைய பாதாரவிந்த தெரிசனத்தி
னாலே போகாத பாபங்கள்; மற்ற எந்த புண்ணியத்தினாலும்

போகமாட்டாது. கோடி புண்ணியங்களைத் தரத்தக்க ஸ்ரீ ராமதநுக்கோடியிலே தீர்த்தமாடி ராமநாதனை வணங்காதபேர், கெங்கா ஸ்நாநத்திற்குப் போனபோதினும், பலன் கிட்டாதாகையால், அப்பேறுகொத்த கெங்கா ஸ்நாநத்திற்குப் போகப்பட்டவர்கள், ராமதநுக்கோடியிலே மூழ்கி, ராமநாதனைவணங்கி விடைபெற்றுக்கொண்டு கங்கைக்குப்போனால், பலன் ஒன்று கோடியாய் விளங்கப்படும். ஆதலால் கேளுங்கள் முநிவர்களே, இப்போது நாம் கூறியவண்ணம், கங்கைக்குப் போய்வந்து ராமநாதனை வணங்காதபேர்கள், அவர்கள் தந்தைக்குப் பிறந்தவர்களல்ல. அருணோதயத்தி லெழுந்தவுடனே, ஸ்ரீ ராமநாதா, ராமநாதா, ராமநாதாவென்று மூன்றுவிசை சொன்னபேர்களுடைய பாபங்களெல்லாம், நாளுக்குநாள் அகன்றுபோவதன்றியும், அவர்களுடைய பவப்பிணியுமொழிந்து, அவர்கள் வாய்மொழியானது சூரியனைப்போற் பிரகாசிப்பதோடும், அன்னவர் ஆன்மா பிரியுங்காலையில், இராமநாதாவென்று சொன்னால், அவ்வான்மா மறுபடியுஞ் ஜனனத்துக் கேதுவாகாமல் தேவசொரூபம்பெற்று விளங்கப்படும். உலகின்கண் ஜனித்தவர்கள், யாவராகவிருந்தபோதினும், இராமநாதப்பிரபு, மகாதேவா, கிருபாநிதி, அகண்டபரிபூரணா, லோகரக்ஷகா, உலக நாதா, சந்திர சடாதரா, சதாசிவா, நீலகண்டா, சங்கரா, சயம்பு, எனச்சொல்லப்பட்ட பேர்களினுடைய பாபங்களெல்லாம், பரிகாரமாய்த் துன்பமகன்று, இன்பமுண்டாகி மேன்மையை யடைந்து வாழ்வார்கள். இராமநாதனுடைய ஆலயத்திருப்பணி செய்யமுயலுவாராயின், அவர்களுடைய சுற்றத்தைச்சார்ந்த கோடி ஜென்மம் வரையிற் கயிலாயத்தை யடைவார்கள். ஸ்ரீ ராமநாதனுடைய ஆலயத்தைச் சாந்தினாற் கட்டி முடித்தபேர்கள் பிரமலோகத்தைப் பெறுவார்கள். பளிங்குக் கற்களினால் மண்டபமிழைத்தபேர்கள், சொர்ன்ன விமானத்திலேறிச்சென்று கயிலை வாழ்வைப்பெறுவார்கள். ஸ்ரீ ராமநாதனுடைய திருப்பணி மண்டபத்துள் வெள்ளியினாற் சிங்காசன

மமைத்தபேர்கள், சாம்பவ மூர்த்தியைப்போல சொரூபம் பெற்று மகிழ்ச்சியடைந்திருப்பார்கள். பொன்னினாலும், தங்கத்தினாலும், கடவுளுக்குரிய சப்பரமஞ்சங்கள், விமானங்கள், ஸ்தூபிகள், செய்துவைத்தபேர்கள், அச்சிவக்கொழுந்தோடுங் கலந்திருப்பார்கள். இராமநாதனுக்கு வேண்டிய பாத்திரங்கள், தவலைச்செம்புகள், குத்துவிளக்குகள், தாம்பாளங்கள், தூபதீபக்கால்கள், கற்பூரத்தட்டுகள், குடை, பீலி, ஆலவட்டம், சாமரை, குஞ்சம், பாவாடை, ஆடையாபரணம், ஆனை குதிரை, ஒட்டகம், சிவிகை, கண்டிகை முதலிய கயிங்கரியங்கள் செய்த பேர்களை ஸ்ரீ ராமநாதன் தன்னுடைய சொரூபத்திலே நின்று விடுபட்டவர்களென்றும், நனி காதலோடுங் கருணைசெய்தாட்கொள்ளுவார். இதல்லாமலும், அந்த ராமநாதனுக்கு திரிகாலமும், அபிஷேகம், ஆராதனை, நிவேதனம், ஆடல் பாடல், திருவிழா செய்துவைத்தபேர்கள், பூலோகத்திலே குபேரனைப்போல் வாழ்ந்து, முடிவிற் கயிலாயவாழ்வைப் பெற்றிருப்பார்கள். இதல்லாமலும், அந்த இராமநாதனுக்கு அபிஷேகஞ்செய்கிற காலத்தில் உருத்திர நமகசமகமென்னு மந்திரத்தைச் செபித்தவர்கள் ஒருகாலங்களிலும் நரகத்தை யடையமாட்டார்கள். அந்த ராமநாதனுடைய அபிஷேகத்துக்குப் பால், தயிர், பஞ்சகவ்யம், பழவற்கம், ரசவற்கம், கொடுத்து அபிஷேகஞ்செய்துவைக்கப்பட்டவர்கள் பெறுகிறபேற்றைச் சொல்லுகின்றோம். யாதெனில், பாலபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், அவர்கள் இருபத்தொரு தலைமுறை வரையில், புத்ரமித்ர களத்திராதி வற்கத்தோடும், தேவ சொரூபத்தைப்பெற்று கயிலாயத்தில் வாழ்வார்கள். தயிர் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், அவர்கள் கற்பகோடி காலங்களிலெடுத்த ஜென்மங்களிலடைந்த தீங்குகளெல்லாம் அகன்று, சங்கு சக்கரத்தையுடைய ஸ்ரீமந் நாராயணன் பதியாகிய வைகுந்தத்திலே வாழ்ந்திருப்பார்கள். நெய்யினால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், கற்பகோடி காலம்வரையிலெடுத்த ஜென்மங்களினது

பாபங்களெல்லாம் விமோசனமாகி தெய்வலோகத்தை யடைவார்கள். தேனினால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், பிரம்மலோகத்தையடைந்து வாழ்வார்கள். எண்ணெயினால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், குபேரனுடைய அளகாபுரியைச்சேர்ந்து வாழ்ந்திருப்பார்கள். கருப்பஞ் சாற்றினால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், வருணனுடைய லோகத்தை யடைந்திருப்பார்கள். கனிவற்கங்களால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், பிதுர்லோகமடைந்து வாழ்ந்திருப்பார்கள். சம்பா அன்னங்களினால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், சாயுச்ய பதவியை யடைந்து வாழ்ந்திருப்பார்கள். கற்பூரவாசனை, கட்டிய சந்தனக்குழம்பினால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், காந்தர்வலோகமடைந்து வாழ்ந்திருப்பார்கள். ரசவற்கங்களினால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், இந்திரனுடைய பதியைச்சேர்ந்து வாழ்ந்திருப்பார்கள். பாதிரி, புன்னை, அலரி, செங்கழுநீர் முதலிய புட்பவாசனைகள், கட்டிய ஜலத்தினால் அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், அவர்களுடைய குற்றங்களெல்லாம் அகன்று, சிவலோகபதவியைப்பெற்று வாழ்வார்கள். திவ்யமான ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வெற்றிலைப் பாக்குகள், நிவேதித்து, கற்பூர வாசனை கட்டிய ஜலங்களாலே அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், அக்கினிலோகஞ்சேர்ந்து வாழ்வார்கள். பித்தளையினாற் குடஞ்செய்துகொடுத்து, அதனால் ஜலமெடுத்து அபிஷேகஞ் செய்துவைத்தபேர்கள், இலட்சுமி கடாட்சம் பெற்று, பூமியிலே வாழ்ந்திருப்பார்கள். அபிஷேகத்துக்கு தாம்பரத்தினாற் குடஞ்செய்து கொடுத்தபேர்கள், தெய்வலோகத்தை யடைவார்கள். வெள்ளிக்குடங் கொடுத்தபேர்கள், சிவலோகத்தை யடைவார்கள். தங்கக்குடம் கொடுத்தபேர்கள், வைகுந்தத்தைப்பெறுவார்கள். இதல்லாமலும், ஸ்ரீ ராமநாதனுக்கு நிவேதனமாகும்பொருட்டு, பாற்பசு கொடுத்தபேர்கள், அசுவமேதயாகஞ்செய்த பலனைப்பெற்று, பரசிவ சொரூபமாய் சிவலோகத்தை யடைந்திருப்பார்கள். எப்

போதும், இராமநாதனை தரிசித்து, இராமதநுக்கோடியில் தீர்த்தமாடப்பட்டவர்கள், இதர தேசங்களிற் சென்ற காலையில், எந்த ஜலங்களில் தீர்த்தமாடினாலும், இராமநாதாவென்று மஞ்சனமாடினால், சேதுஸ்நானஞ்செய்த பலன் பெறுவார்கள். ஸ்ரீ ராமநாதனுடைய ஆலயத்திற் சிலப்பட்ட பணிகளை நடத்திவைப்பார்களாகில், அவர் செய்துவைத்த செலவுக்குப் பதின்மடங்கதிகமாய்ப் பொருளைப்படைத்துச் சுகித்திருப்பார்கள். ஸ்ரீ ராமநாதனுக்கு தீபப்பணி செய்தபேர்கள், மனத்துள்ள அஞ்ஞானங்களகன்று சுஞ்ஞானிகளாய் வாழ்வார்கள். சற்கரை, பருப்பு, அரிசி, வெல்லம், பருப்பு, எண்ணெய், கண்ணாடி, சாமனை கொடுக்கப்பட்டபேர்கள், செய்த பாபங்களெல்லாமகன்று, இரதகெஜ துரகபதாதிகளையுடைய வேந்தர்களாகப்பிறந்து, போக பாக்யங்களைப்பெற்று முடிவிற் சிவலோகத்தை யடைவார்கள், ஸ்ரீ ராமநாதனாலயத்துக்கு முரசு முதலிய வாத்தியக்கருவிகள் வாங்கி யளித்தபேர்கள், இராஜபோகத்தைப்பெற்று வாழ்ந்து, முடிவிற் சிவலோகத்தையடைவார்கள். ஸ்ரீ ராமநாதனைப் பூசிக்கவும், வணங்கவும், தோத்திரஞ்செய்யவும், ஆசைப்படுவோர்களாயின் அவர்களுக்கு சம்பவித்த இடுக்கண்களெல்லாமகன்று, ஆனந்த போகபாக்கியங்களை எழுபத்தொருகோடி சதுர்யுகம் வரையில் அநுபவித்திருந்து, முடிவிற் பேரின்பத்தைப்பெற்றுச் சைதன்ய சொருபமாய் விளங்குவார்கள். மராமரங்களேழும், ஓரம்பினால் ஊடுருவச்செய்த, ஸ்ரீ ராமச்சந்திரனாற் பூசிக்கப்பட்ட இராமநாதனுக்கு பூசை நிவேதனத்துக்குத் தகுந்த கிராம பூமிகள்விடுத்து, அன்பினால் அவரடிமைப்பணி செய்யப்பட்டபேர்கள் சாயுச்சியபதத்தை யடைந்து, சிவசொருபமாகி என்றைக்கும், ஸ்ரீ ராமநாதனைப்போல விளங்குவார்கள். சொற்க, மத்ய, பாதாளமென்னு மூன்றினும், இராமநாதனுக்கு மேலான தெய்வமும், கந்தமாதனத்துக்கு மேலானபுண்ணிய க்ஷேத்திரமும், சேது தநுக்கோடிக்கு மேலான தீர்த்தமும், இல்லை என்று சுருதி வாக்யப் பிரமாணங்களி

னாலே சொல்லப்பட்டிருக்கின்றபடியால், அந்த ராமநாதனுக்
கற்பிதமாய் கொடுக்கப்பட்ட புண்ணியத்துக்கு மேலான புண்
ணியங் கிடையாதென்றும், மேலோர்கள் கூறுவார்கள், இத
ன்றியும், ஸ்ரீ ராமநாதனுடைய சந்நிதானத்தை திருவலகிட்டு
மெழுகி, நந்தவனங்கள் வைத்து, புட்பங்களெடுத்து மாலை
கள் தொடுத்துச் சாத்தித்தோத்திரஞ் செய்யப்பட்ட அன்பர்
களை, ஸ்ரீ ராமநாதனே புகழ்ந்துகொண்டாடி அவர்கள் பெரு
மையைச் சொல்லவேண்டுமேயல்லது, நம்மாற் சொல்ல
முடியாது. இதன்றியும், பூலோகத்தில் ஜனித்த மானிடரான
வர்கள், இந்திரியங் கெட்டுப்போகுமுன்னே, தேகத்தில் நரை
யுண்டாகி, மனங்கலங்கித் தலை நடுக்குற்று, கண் பஞ்சடை
ந்து, கப மேலிட்டு, காலன்வந்து கிட்டுமுன்னமே வீண்
காலங்கழிக்காமல், ஸ்ரீ ராமநாதனுடைய பணியைக்குறித்தும்,
தரிசனத்தைக்குறித்தும், அவாவுற்று ஆகம புராணங்களால்
ஸ்ரீ ராமநாதனைத்தொழுது வணங்கித் தோத்திரஞ்செய்வாரா
யின், அவர்களை அந்த ராமன், தன்னுடைய அற்புத சின்மய
மதுர சாம்பிராச்சிய வைபவமோகானந்த சுசிர்த பல விசேட
காருண்ய கருணாநிதி பிரசாத மகிமை யுடையவர்களாய்ச்
செய்வாரென்று சூதமாமுனிவர் சொல்ல, அதைக்கேட்ட
நைமிசாரண்ய முனிவர்கள், தங்கள்கண்களினின்றும், ஆனந்த
பாஷ்பந் தாரை தாரையாய்ப்பொழிய இருகரங்களையுஞ் சிர
மேற்கூப்பி அவரவர்களிருந்த ஸ்தானத்திற்றானே சமாதி
நிஷ்டராய், ஸ்ரீ ராமநாதனுடைய சரணார விந்தங்களை நினை
ந்து ஆனந்தக்கூத்தாடினார்கள்.

இராமநாதச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

இராமன் அருச்சனைச்சருக்கம்.

இவ்வாறு ஸ்ரீராமன்தனுடையமகிமைகளைக்கேட்ட நை
மிசாரண்ய மகாரிஷிகளியாவருஞ் சந்தோஷசாகரத்தாட்டோ
ய்ந்தவர்களாய்சூதமகாமுனிவரைநோக்கிக்கூறுவார்கள்,சுவாமி,
தேவரீருடைய பெருமையை அடியோங்களென்னசொல்லப்
போகின்றோம், வேதங்களின்முடிவை யறிந்துணர்ந்து அதன்
உண்மைகளைத் தெரிந்துகொண்டதும் பலபலவேதாகம புரா
ணங்களை அறிந்திருப்பதும், கல்விக்கடலுள் நீந்தித்திரிவதும்
தேவரீரை அன்றி வேறொருவரையாங்கள் கண்டதுமில்லை கே
ட்டதுமில்லை, வேறொருவரைநிகராகச் சொல்லவுங்கூடாது
ஆதலால், ஸ்ரீவேதவியாசமகாரிஷியினுடைய கிருபையை
மென்மேலும்பெற்றுச் சகலகேள்விகளையும் உணர்ந்திருக்கப்
பட்ட தேவரீருடையவாக்கினாற் சேதுமான்மியங்களைக்கேட்
டறிந்த எங்களுக்கு வேறே ஒன்றுந்தேவையில்லை, சகலசாம்
பிராச்சிய யோகஷாந்தங்களுங் கைகூடிய தாகையால் எளி
யோங்கள் ஓர் விண்ணப்பஞ்செய்கின்றோம், அதுயாதெனில்
அண்டசராசரத்தின்கண் ஓதுதற்கரிய ஸ்ரீராமநாதக்கடவுளை
தசரதகுமாரனாகிய ஸ்ரீராம சந்திரமூர்த்தியானவர் எவ்வண்
ணம் பூசைசெய்தனரோ, அதனை எங்களுக்குச்சொல்ல வே
ண்டுமென்று நைமிசாரண்யர்கள் கேட்க, அதைக்கேட்ட,
சூதமகாமுனிவர்கூறுவார், கேளுங்கள் மகாரிஷிகளே, ஸ்ரீராம
சந்திரரானவர் வானராதிகளுடனே பிரயாணப்பட்டுப்போய்
தெற்பசயனஞ்செய்திருந்து முன்சொல்லியிருக்கின்றதுபோ
ல், நளன்முதலிய வானரவீரர்களோடும் சேதுபந்தனஞ்செ
ய்து ஸ்வேதகிரியிற் பாளையமிறங்கி இராவணாதிகளுடனே எதி
ர்த்து யுத்தஞ்செய்து ஜெயித்துச் சீதாபிராட்டியோடும் புட்ப
கவிமானத்தேறி வருகிறபோது விபீஷணனுக்கு இலங்கை
யைப் பட்டாபிஷேகஞ்செய்து அழைத்துக்கொண்டு வான
ராதிகளோடுங் கந்தமாதனத்திற்சேர்ந்ததநுக்கோடி உண்டு
பண்ணி அக்கந்தமாதனக் கிரிச்சாரிற் றபஞ்செய்துகொண்

டிருந்த, தபோதனர்களியாவரும் ஸ்ரீராமசந்திரன் நமதுதுன்பங்கள்தீரும்படியாய் இராவணசம்மாரஞ்செய்துவந்தாரென்னுஞ்செய்திகேட்டு மகாசந்தோஷத்துடனே அவரவர்கள் பத்தினிமார்களோடுஞ் சீடர்களோடுந்தனித்தனியே பிரயாணப்பட்டுவந்து ஸ்ரீராமசந்திரனைக்கண்டு ஆசிகூறிப்புகழ, அதற்கு ஸ்ரீராமசந்திரன் ஆனந்தமுற்றவராய் தன்னைக்கண்ட முனிவர்களுக்கெல்லாம் அர்க்கியபாத்தியமளித் துபசாரஞ்செய்து தெற்பாசனங்களில் எழுந்தருளப்பண்ணி ஏகாந்தமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறபோது ஸ்ரீராமசந்திரன் அவ்விருடிகளைப்பார்த்து ஒருவார்த்தைசொல்லுவார், வாருங்கள், தபசிரேஷ்டர்களே, உங்களுடையதபோபலத்தினால் இராவணனை நிராகரித்து நாம் சம்மாரஞ்செய்துவந்தபோதினும் உங்களுடையவாக்குப் பிரசாதத்தைப்பெறவேண்டி ஓர்காரியஞ்சொல்லுகின்றேம் அதைச் செவ்வையாயோசித்து அதன் உண்மையை அறிந்துரைக்கவேண்டும், யாதெனில் கேளுங்கள், ஓ முனிவர்களே, இலங்கைவேந்தனாகிய இராவணனைக் கொன்றதோஷம் என்னைவிட்டுநீக்கும்படியாய் ஒருபரிகாரஞ்சொல்லவேண்டுமென்றுகேட்க, அதைக்கேட்ட முனிவர்கள் சந்தோஷத்தையடைந்தவர்களாய் செவ்வையா யோசித்துச் சொல்லுவார்கள், வாருமையா, இராமசந்திரமூர்த்தியே, தேவரீருக்குத் தெரியாதவையொன்றில்லையாயினும் எங்களை ஒருபொருட்டாக எண்ணிக்கேட்டபடியினாலே சொல்லுகின்றேம், யாதெனில், தாங்கள் பூலோகத்திலே வந்துபிறந்து இராஜரீகத்துக்குட்பட்டிருப்பதினும் க்ஷத்திரியதருமப்படிக்கு தங்களுக்குண்டான தோஷம்போகவேண்டுமாயின் இந்தகந்தமாதனத்திலே வேதவிதியின்படிச் சிவபூசைபண்ணினால் சகலதோஷங்களும் நிவாரணமாய்மோட்சானந்தத்தைக் கொடுக்குமாதலால் அதுபோற்றுங்கள்செய்வீர்களாகில் அதைக்கண்டு தரிசித்தபேர்களுக்கு காசிமகாக்ஷேத்திரத்திலேகோடாநுகோடி லிங்கப்பிரதிஷ்டைசெய்தபலன் உண்டாகும், அதன்றியும் தேவரீராற்பூசிக்கப்பட்ட லிங்கத்தின்மகிமையினாலே இந்த

இடத்துக்கு எப்போதும் இராமீச்சரமென்றும் பெயர்விளங்கிக்கொண்டே இருக்குமாதலால் தேவரீர் அதிதீவிரத்தோடும் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்ய ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அவ்வார்த்தையைக்கேட்ட இராமசந்திரன் மனமகிழ்ச்சியோடுங் கூறுவார், வாருங்கள் மகாரிஷிகளே, உங்கள் வாக்கியப்படி சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்வதற்கு பொருந்தியதினமாய் ஓர் தினம்பார்த்துச் சொல்லுங்களென்று கேட்க, அகஸ்தியர்முதலிய முனிவர்களெல்லாஞ் சந்தோஷமடைந்து ஸ்ரீராமசந்திரனாலே இக்கந்தமாதனச்சாரலில் சிவலிங்கப்பிரதிஷ்டை உண்டாகுமாயின் அத்தேவனை நாமனைவருங்கண்டு தரிசிக்கலாமென்று விருப்பத்தோடுஞ் சகலருங் கூடிச் சாஸ்திரபுராணங்களை ஆய்ந்துபார்த்துச் சொல்லுவார்கள், ஐயா, ராமமூர்த்தியே, ஆனிமாத சுக்லபட்ச புதன்கிழமை அஸ்தநட்சத்திர தசமிதிதியும் விதிபாதயோகமுங்கூடிய சுபதினத்தில் அருணோதயவேளையாகும் விருஷபலக்கினத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்ய தேவரீருக்குப்பொருந்திய தினமாக இருக்கின்றதென்றுசொன்னார்கள். அவ்வார்த்தையைக்கேட்ட ராமசந்திரன்சந்தோஷத்தை அடைந்து உடனே அநுமானை அழைத்துச்சொல்லுவார், வாரும் அநுமானே, நீர் இதுவரையிலுஞ்செய்த வுபகாரங்களெல்லாம் பெரிதல்ல, நாளை உதயகாலபூசைக்கு ஆகும்படியாய் சிவலிங்கங்கொண்டு வரவேண்டுமாதலால் அதிதீவிரத்தோடும் பூலோககயிலாசமாகிய காசிமகாக்ஷேத்திரத்தையடைந்து இலிங்கங்கொண்டுவாருமென்று விடைகொடுத்தனுப்பி, பின் சிவப்ரதிஷ்டைக்காகவேண்டிய . சாமக்கிரியைகளைக் குறைவில்லாமல் அதிசாக்ரதையோடுஞ் சேகரஞ்செய்துகொண் டிருக்கையில் அநுமானானவர் இராமசந்திரனிடத்தில்விடைபெற்று சகலத்ராளுங்காணும்படியாய் கந்தமாதனத்திலேநின்று விசுவரூபங்கொண்டு ஆகாசமார்க்கத்திலெழும்பிப் பின்னும்பூமியிற்றாழ்ந்து லாகுகொண்டு பாய்ந்து பூலோககயிலாசமாகிய காசிமகாக்ஷேத்திரத்தையடைந்து கெங்கையில் ஸ்நாநம்பண்ணி தெற்

யையைக்கீழேபரப்பி, அவ்வாசனத்திருந்து இந்திரியங்களை
யடக்கி, இடைகலை பின்கலைசுழிமுனையைக்கூட்டி நிருவிகற்ப
நிட்டை பொருந்தியிருந்து ஈஸ்வரப்பிரசாதங்களைப் பெற்று
இலிங்கங்கொண்டு வருமுன்னுதாக ருஷீஸ்வரர்களா லமை
த்தமுகூர்த்தம் சமீபித்துவிட்டதனாலே ஸ்ரீராமசந்திரனும்,
அநுமார்வரவில்லையேயென்று வரும்வழியைநோக்கிச் சிந்தித்
துக்கொண்டிருக்க, அச்சமயத்தில் சீதாலட்சுமியானவள் மிர்
த்திகையான மணலைக்கையினாற்குவித்து இலிங்கம்போற்
செய்து விளையாடிக்கொண்டிருக்கிறபோது அதைசகலமுனீஸ்
வரானும் ருஷீஸ்வரானுங்காண அவர்கள்கண்களுக்கு அவ்
விலிங்கமானது தெய்வீகமாய்த்தோன்ற, சகலரும் ஸ்ரீராமசந்
திரனிடத்தில்வந்து சொல்லுவார்கள், சுவாமி, அநுமாரான
வர் வருவதற்குள் முகூர்த்தவேளைதப்பிப்போகின்றதாக இரு
ப்பதால், மகாலட்சுமியாகியசீதாதேவியார் தமதுகரத்தினால்
மிர்த்திகையான மணலைக்குவித்து இலிங்கம்போற் செய்து
விளையாடிக்கொண் டிருப்பதைப்பார்த்தால் அவற்றில் தெய்
வீகம் விளங்குகின்றபடியினால் மிகவுஞ்சிலாக்கியமாயிருக்கும்
அவ்விலிங்கத்தையே தேவரீர்பூசிக்கவேண்டியதென்று முனி
வர்கள் சொல்ல, அதைக்கேட்ட இராமசந்திரன் சந்தோஷத்
தையடைந்து எல்லாம்பிரம்மமய மென்றறிந்துகொண்டவ
ராய் தாமுஞ் சீதாபிராட்டியும் இளையபெருமாளுந் தீர்த்தமா
டி நியமநிஷ்டைகளைமுடித்து விபூதிருத்திராக்ஷங்களைத்தரித்
துக்கொண்டவர்களாய் சீதையினாற் குவிக்கப்பட்ட மகா
லிங்கசொருபத்துக் கருகாமையாகவிருந்து சிவபூசைக்குண்
டான சாமக்கிரியைகளும், பத்திரபுட்பங்களுமெடுத்து ஸ்ரீரா
மசந்திரமூர்த்தியானவர் சாந்தபதத்தைப்பொருந்தி அவ்விலி
ங்கத்துக்குத் தென்பாரிசத்திலே வியாக்ராஜினமுதலிய ஆசன
த்தின்பேரில் வடக்குமுகமாயிருந்து பூஜாஸ்தானத்தைத் திக்
குபந்தனம்பண்ணி, அவகுண்டனமுதலிய தேனுமுத்திரை
மகாமுத்திரையுங்கொடுத்து, இடைபிங்கலைநாடி இரண்டும்
இரண்டுகாற்பெருவிரலிலே நின்றுநிமிர்ந்து மூலாதாரத்தளவு

மிரண்டுருபமாயிருந்து மேற்சுழுமுனையுடனேகூடி ஏகமாய்
பிரம்மரந்திரமளவும்போயிருப்பதை இருதயகண்டத்தாலும்
மூலம்புருவமத்தி பிரமாந்திரம் இந்தஸ்தானங்களிலே இடை
பிங்கலையினாலேகூடி யொத்திருக்கும்படியாகவும் அந்த இரு
தயமுதல் ஐந்துதானங்களிலேயும், தாமரையரும்பு கீழ்நோ
க்கி இருப்பதில் உள்ளும் புறமும்பொருந்தியிருக்கிற பரம
வியோமரூபினி என்னுஞ் சத்தியையுடைத்தானதாயிருக்குஞ்
சுழிமுனைநாடியை தியானம்பண்ணி, அதின்அடியிலே ஊங்கா
ரஞ்ஜொலிக்கும்படியாய்ச்செய்து, வாயுவைக்கும்பித்து ரேசி
யினாலேவிடுத்து, மீளவும்வாயுவைமேல்நோக்கி சோபிகா
முத்திரையினாலே கீழேநோக்கி இருக்கிறதாமரையரும்புமேல்
நோக்கியலர்ந்த தாகப்பாவித்து, சாந்தாசமயமாய் இதயசம்
படிதனை ஊங்காரத்தினுடைய நிகையிலே பீஜவிந்துவைய்
ஊங்காரசிகாரீதத்தனைய் புரியட்டகதேகத்திலேநின்றும் விட
ப்பட்டவனாய் சூக்குமரூபனாய் நிராமயனாக ஆத்துமாவை
தியானம்பண்ணி,வாயுவைக்கும்பித்துமேலெழும்பிச் சங்கார
முத்திரையினாலே பிரமாந்திரத்தியாக்கிரமமாக உச்சரித்
துக்கொண்டு ஆத்துமாவைமீளவும் தேகந்திருந்தியோகங்க
ளைப்புசிக்கிறவனாக சங்காரமுத்திரையினாலே கொண்டுபோய்
துவாதசாந்தத்தினாற் சிவனிடத்திலேயோசித்துப்பின்பு பிராத
லோமதாரணத்தினாலே இதயம் கண்டம் நாசு மூலம் புரு
வமத்தி பிரம்மாந்திரத்தலை முப்பத்தாறையும் தோற்றமொ
டுக்கஞ்செய்து, அவைகளிலே சத்தபரிசத்தை பிரம்மாவினிட
த்திலும் இரசத்தை விஷ்ணுவினிடத்திலும் ரூபத்தையுங் கந்
தத்தையும் உருத்திரனிடத்திலும் மனதையும் விந்தையுஞ்
சதாசிவனிடத்திலும் யோசித்துச் சூக்கும தேகத்தைச் சுத்தி
பண்ணினவராய் பின்பு தூலதேகத்தை சுத்திசெய்யும்படி
பிருதிவிமண்டலம் நாற்கோணமாய் பொன்னிறமாய்க்கடின
குணமாய் லவ்வென்னுமக்ஷரமாய் நிவர்த்திகலையாய் சத்தி
யோசாத மந்திரமாய் அதிதேவதைபிரம்மாவாய் ஆயுதம் வச்
சிரமாய் கெந்தாதி ஐந்துகுணத்தையுமுடைத்தா யிருக்கிற

பிருதிவியைப் பூரககும்பகஞ்செய்து மேனோக்கியுச்சரித்துச்
சுத்தமுதலானஐந்துகுணத்தையும் போக்கிச்சோதனைசெய்து,
பின்பு அப்புமண்டலமானது உயர்ந்தசந்திராகாரமாய் வெள்
ளைநிறமாய் நெகிழ்ந்தகுணத்தையுடைத்தா யிருக்கின்றதாய்
யவ் வென்னும் அக்ஷரமுடையதாய் தேவதை பிரம்மா வாய்
ஆயுதம்வச்சிரமாய் பிரதிஷ்டாகலையாய் வாமதேவ மந்திரமா
ய் அதிதேவதைவஸ்துவாய் ஆயுதந் தாமரையாய்ப்பூரககும்ப
கம்பண்ணி மேல்நோக்கியுச்சரித்து, ரசாதிமுதலிய நான்கு
குணத்தையும்போக்கிச் சோதனைசெய்து,பின்புதேயுமண்டல
மானது மூன்றுகோணமாய் சிவந்தநிறமாய் வெப்பமானகுண
த்தை யுடைத்தாயிருக்கின்றதாய் ரவ் வென்னும் அட்சர
முடையதாய் வித்யாகலையாய் அகோரமந்திரமாய் அதிதேவ
தை உருத்திரனாய் ஆயுதஞ் சுவகத்திகமாய் ரூபாதிமூன்று
குணத்தையுமுடைத்தாயிருக்கிற தேயுவைப் பூரக கும்பகம்
பண்ணி மேல்நோக்கி உச்சரித்து ரூபாதிமுதலான மூன்று
குணத்தையும்போக்கிச்சோதனைசெய்து,பின்பு வாய்வுமண்ட
லமானது அறுகோணமாய் கறுப்புநிறமாய் தண்மையான
குணமுடையதாய் யவ் வென்னும் அட்சரமாய் சாந்திகலை
யாய் தற்புருஷமந்திரமாய் அதிதேவதை மஹேசுரனாய் ஆயு
தம் அறுபுள்ளியாய் பரிசாதி இரண்டு குணத்தையுடைத்தா
யிருக்கிற வாயுவைப்பூரகம்பகஞ்செய்து மேல்நோக்கி, உச்ச
ரித்துப் பரிசாதி இருகுணத்தையும் போக்கிச் சோதனைசெ
ய்து, பின்பு ஆகாசமானது வட்டமாய்ப் படிகநிறம்போற் பூர
ணகுணமாய் ஸவ் வென்னு மட்சரமாய் சாந்திதாகலையாய்
ஈசானமந்திரமாய் அதிதேவதை சதாசிவமாய் ஆயுதமமுத
விந்துவாய் சத்தகுணமொன்றும் உடைத்தாயிருக்கின்ற ஆ
காசத்தைப்பூரக கும்பகம்பண்ணி மேல்நோக்கி யுச்சரித்து
சத்தகுணமொன்றையும் போக்கிச்சோதனைசெய்து, ஆகாசத்
தை சத்தியினால் மறைக்கப்பட்டதாய்ப்பாவனைசெய்து, இவ்
விதந் தன்னுடைய தேகத்தைச்சோதித்துச் சர்வசூன்னிய
மானபின்பு பிரமரந்திரயாமத்திலே நின்றுவீழாநின்ற அமிர்த

தாரையினாலே தன்னுடைய சரீரமுழுதும், நாடிகளிலே
அமிர்தத்தைக்கொண்டுவந்து தேகமுழுதும் நனைத்து, இதய
பாமாசனத்தில் கன்னிகையிலே நான்கு கலையுடனே பிரண
வத்தினாலே பிரமன் முதலிய ஐந்துபேர்களிடத்தும்போய்
அடங்கியிருக்கின்ற புரியட்டகதேகத்தைக் கொண்டுவந்து
அந்த தேகத்தின் துவாத சாந்தத்திலே, பிஜரூபமாய் சிவமாக
இருக்கிற ஆத்மாவை ஆரம மந்திர பூரகத்தினாலே சிருஷ்டிக்
கிரமமாக சங்கார முத்திரையினாலே கொண்டுவந்து சேர்த்து
மந்திரத்தினாலுச்சரித்து, சிவன் சத்தியினாம் கலக்கப்பட்டி
ருக்கிற விந்துவினிடத்தினின்றும், பெருகாநின்ற அமிர்தத்தி
னாலே அந்த ஆத்மாவை அபிஷேகம் பண்ணினவராய், தூல
தேகசுத்தி செய்துகொண்டு, பின்பு நாபிகந்தத்திலே எட்டங்
குலமான தூரத்தையுடைத்தாய், எட்டிதழ்களுடனே கூடிய
வெண்டாமரைப் புட்பம்போலிருக்கிற இதயாசனத்திலே
சோதிமயமாக இருக்கின்ற இலிங்கத்தில், துவாதசாந்தத்தி
லிருக்கிற சிவனை யாவாகனம்பண்ணிச் சகல மந்திர தந்தி
ரங்களுடனே அபிஷேக நிவேதன சோடச உபசாரத்து
டனே பூசையும், பகிர் முகார்க்கிய முடிவாக மானத பூசையா
கப் பண்ணினவராய், மந்திரங்களினாலே தானத்தையும்,
திக்கு பந்தனம், அவகுண்டனம், தேனு முத்திரை, மகா
முத்திரையுங்கொடுத்து, பூஜாஸ்தானத்தை சுத்தி செய்து,
விந்துஸ்தானத்திலே நின்றும், பெருகாநின்ற அமிர்தமாகுஞ்
சுத்த ஜலத்தினாலே பூரித்து, மந்திரங்களினாலே அற்சித்து,
அபிமந்திரித்து, திக்கு பந்தனம், அவகுண்டனம், தேனு முத்
திரை மகா முத்திரையுங்கொடுத்து அந்த அற்கிய ஜலத்தி
னாலே தன்னையும் புரோட்சித்துக்கொண்டு பூசையுங் காண்
டத்ரவியங்களையும் புரோட்சித்து திருமஞ்சன கு
பந்தனம், அவ குண்டனம், தேனு முத்திரை,
யையுங்கொடுத்து, திவ்விய சுத்தி பண்ணிக் கொண்டவராய்
தன்னுடைய ஆசனத்தை மந்திரத்தினாலே பூசித்து, லலா
டத்திலே சந்தனமிட்டு, மந்திரத்தினால் அற்சனை செய்து,

மூலமந்திரத்தைத் துவாதசாந்தமளவாகவும், பஞ்சப்பிரம்ம மந்திரத்தை பிரம்மரந்திர மளவாகவும், சடங்களை விந்துபரியந்தமாகவும், மந்திரசுத்திசெய்து பின்பு சீதாவட்சுமிகையினாலே நியமிக்கப்பட்டவராகவிருக்குஞ் சிவலிங்கத்திலே அஷ்ட புஷ்பபஞ்சரத்திற் சுத்த ஜலம்பண்ணி எண்ணைக்காப்பு, மஞ்சட்காப்பு, நெல்லிக்காப்பு, பஞ்சாமிர்தம், பஞ்சகவ்யம், பசுவின் நெய், இளநீர், வில்வக்குழம்பு, பச்சை கற்பூரம், பால், தயிர், தேன், சற்கரை, கருப்பஞ்சாறு, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், முதலிய பழவற்கங்கள், ரசவற்கங்கள், இவைகளினாலே மந்திர விதியாய் அபிஷேகம்பண்ணி, இடை இடையே சுத்த ஜலமான கோடி தீர்த்தமும், அபிஷேகம்பண்ணி அஷ்ட புட்பமுந்தீபமும் அற்றியமுங்கொடுத்து, பின் சுத்தஜல வபிஷேகஞ்செய்து, மறுபடியும், சுத்த ஜலங்களினாலே ஒருதரம், சகஸ்ரரவிந்த சந்தனக்குழம்பு வரையிலும், விதிப்படி அபிஷேகம்பண்ணி ஆசமனற்கியங் கொடுத்துப் பின்பு சுத்த ஜலத்தாலபிஷேகஞ் செய்து, உயர்ந்த பரிவட்டம், பீதாம்பரங்கள் சாத்தி, அப்பால் மகா கணபதியையும் தியானித்துப் பூஜித்து, சன்னிதான அற்கியங்கள்கொடுத்துப் பிரார்த்தித்துக்கொண்டு, பீடத்துக்குக்கீழே பிரம்ம சிலைக்கு நடுவே கூரும சிலையிலே ஆதாரசத்தியைப் பூஜித்து, பிரம்மசிலைக்கு மேலே அனந்தாசனத்தை தியானம்பண்ணிப் பூஜித்து, அதன்மேல் நான்கு யுகமும், வெள்ளை, சிகப்பு, மஞ்சள், கறுப்பு நிறமாயும், ஒன்றுக்கொன்று பின்பார்த்த பார்வையாயும், தியானம்பண்ணி அதற்குமேற் சட்டமும், அப்படியே தியானித்து, அவ்வாறு தியானித்த சிங்கக்காலின்மேற் சடரூபமாகத் தியானம்பண்ணிப்பூஜித்து, அதற்குமேல் ஈசான்யதிக்கிலே வெள்ளை நிறமாய் சுத்த சொரூபமாக ஊர்த்தச்சதனத்தை தியானம்பண்ணிப் பூஜித்து அதின் நடுவிலும், மேலிலும், மாணிக்க நிறமான கிழங்கும், பவழம்போன்ற முளையும், நீலநிறமான நாளமும், வெள்ளி நிறமான ஸ்தனங்களும், சொர்ன்ன நிற

மான கேசரமும், அதன் நுனியை முத்தைப்போலுந் தியானம்பண்ணி கிரமமாய் மந்திரத்தினாலே தியானித்துப் பூசித்து, அதினடுவே ஒட்டவைத்த பொன்னிறமான விதைகளையுடைத்தாயிருக்கின்ற கன்னிகையை தியானித்துப் பூஜித்து, பின்பு எட்டுத்திக்கிலுள்ள எட்டிதழிலும், வாமாதிகளாவிருக்கின்ற எட்டுச் சத்திகளையும், கன்னிகை ஈசான்யத்திலே மனோன்மணியையும், தியானித்துப் பூஜித்து, தளத்தின் நுனி வட்டத்திலே சூரிய மண்டலம், சந்திர மண்டலம், அக்கினி மண்டலம், சத்தி மண்டலம், முதலானதுகளையும், அதற்குரிய அதி தேவதைகளையும், தியானித்துப் பூஜித்து, அதன்மேல் ஆதாரசத்தி முதலாய், குடிலாசத்தி பரியந்தம், வியாபகமாய், மந்திரவித்தாய், சிவாசனத்தை யோசித்துப் பூஜித்து, சிவமூர்த்தியைத் தெரிசனமாய் தெண்டாகாரமாய் தியானம்பண்ணிப் பூஜித்து, கையை முஷ்டியாகப்பிடித்து, சுவாமியினுடைய சிரம், முகம், இதயம், நாபி, முழங்கால்களிலே மந்திரங்களினாலே கிரமமாய் தெண்டபத்ரியாயம் பண்ணி, ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாத்தையம், கிரமப்படி அந்தந்த திக்கிலே முண்டபந் தினியாசம்பண்ணி யோகபீடத்தைப் பூஜித்து, ஆதாரசத்தி முதலாய், குடிலாசத்தி பரியந்தம், வியாபகமாயிருக்கிற மந்திர சிங்காசனத்திலே பரமாசனத்தில் முன்சொன்ன மகாலிங்க சொரூபமாயிலங்குபவராயும், சுத்த படிகநிறமாயும், முப்பத்திரண்டு லட்சணங்களையுமுடைத்தானவராய் ஐந்து முகமும், அம்முகக்கடோறும், ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி சொரூபமாயும், விசாலமாயிருக்கின்ற திரிநேத்திரத்தையு முடைத்தானவராய், ஞான சந்திரகலையோடுங் கூடி இருப்பவரா[illegible]ங்களும், ஐந்து வருணமாயிருப்பவராய், நாக[illegible]ந்தராயும், அர்த்த சந்[illegible] ஜடாமகுடராயும், பத்துகரங்களை யுடையவராயும், வ[illegible] மோங்கு மைக்குகரத்திலும், சுத்தி, சுத்தி, சூலம், கட்[illegible]கம், வரதமும், இடக்கர மைந்திலும், டமருகம், மாதளம்ப

மூம், நாகம், செபவடம், நீலோற்பலமுமுடையவராகவும், தியானஞ்செய்து, இலிங்க பாவனையை விடுத்து வித்தியாதேகமாய்ப் பாவித்து, அஞ்சலியஸ்தத்தினாலே இலிங்கத்தில் பிரம்மரந்திராந்த வியாபகப்பிரசாதமாக உச்சரித்து, பின்னின்சரூகம் அஞ்சலிக்குள்ளே யோசித்துத் தியானித்து பஞ்சமுகத்திலும் நேத்திரங்கொடுத்துப் புட்பங்களினாலே கைகளை நிறைத்து அஞ்சலி பண்ணிக்கொண்டு மூலமந்திரத்தினால் துவாதசாந்தமளவாக உச்சரித்து, சமனாந்தமான பாச சலத்தைக் கடந்துபோய், நிஷ்களமாய், சர்வ காரணமாய், வியாபகமாய், நித்தியவாதிதமாய், ஞானாநந்த சொரூபப்பிரகாசமாய் தியானம் பண்ணி நிருஷ்டிக்கிரமமாக விந்துஸ்தானமளவாக கொண்டுவந்து அதில் நின்று அஞ்சலிக்குள்ளே அநேககோடி சந்திரப்பிரகாசம்போல எழுந்தருளச்செய்து, ரேசித்து விந்துநாதசொரூபமாய் இலக்ஷியமாகவிருக்கின்றமூர்த்தியிலே ஆவாகன முத்திரையினாலே மந்திரத்தினால், ஆவாகனஸ்தாபனம், சந்நிதான சந்நிரோதனம்பண்ணிச் சுவாகாந்தம் விஞ்ஞாபனஞ்செய்து அநுக்கிரகம்பெற்றவராய் அர்க்கியங்கொடுத்து, இருகரங்களையுஞ் சிரத்தின்மீது வியாசம்பண்ணி நாகத்தில் மகாமுஷ்டிகரமாய்ச்செய்து, திக்கு பந்தனம், அவகுண்டனம், தேனு முத்திரை, மகா முத்திரை, கோகர்ண முத்திரை, இலிங்க முத்திரை, நமஸ்கார முத்திரை என்னும், பஞ்ச முத்திரையுங் கொடுத்து, அந்தந்தஸ்தானங்களிலே அர்க்கிய பாத்தியங்களளித்து, மந்திர விதியாய் அறுகு, அக்ஷதை புட்பஞ்சாத்தி தூபதீபங்கொடுத்து, பின்னும், ஆசமனார்க்கியங்கொடுத்துச்சாத்திப் புட்பத்தைக்கழித்து மறு புட்பஞ்சாத்தி, எண்ணெய்க்காப்பு முதலிய அபிஷேக திரவியங்களை மனதிலே பாவித்து அபிஷேகம் பண்ணினதாக ஒரு புட்பத்தை விசேஷார்க்கியத்திலேதோய்த்து, ஒரு துளி மூலமந்திரத்தினால் இலிங்கத்துக்கபிஷேகம்பண்ணி மெல்லிய பரிவட்டத்தினாலே திருப்பொன்னுடைசாத்தி, மந்திரத்தினால் ஓர் புட்பஞ்சாத்தி, மந்திரான்னம் நெய்வேதனம்பண்ணி சங்

தனம், அக்ஷதை, அறுகு, தாமரைப்பூச்சாத்தி, பொன்னினரைநாண், கௌபீனமேகலை, உபவீதம், குண்டலம், ஆபரணம், விசித்ர வஸ்திரங்கள், கிரீட கேயூரமணியாபரணங்கள், தண்டை கிண்கிணி வண்டயஞ் சிலம்புகள், முதலிய ஆடையாபரண பூஷணாதிகளை மனதிலே பாவித்துச்சாத்தி மூன்றுதரம் மந்திரத்தினாலே புஷ்பாஞ்சலிசெய்து புஷ்பஞ்சாத்தி, கொன்றைமாலை முதலிய திவ்யபுஷ்பாலங்கிருதஞ்செய்து, மணிநாதத்தொனிகள்செய்து மனோத முத்திரையுங்கொடுத்து, ஸாயங்கம் பூசித்து அர்ச்சித்து போகாங்கத்தைப் பூசிக்கும்படியாய் ஈசானமுதல், சத்தியோசாதம் வரையிலும், நேத்திர முதற்கவசம் வரையிலும், மந்திரங்களினாலே போகாங்கம் பூசித்து அர்க்கியங்கொடுத்து, ஈசானத்துக்கு தேனு முத்திரையும், தற்புருஷத்துக்குப் பாமமுத்திரையும், அகோரத்துக்கு திரிசூல முத்திரையும், வாமதேவத்துக்கு மகா முத்திரையும், சத்தியோசாதத்துக்குச் சருக்கு முத்திரையுங்கொடுத்து, மற்ற அங்கங்களுக்கு நமஸ்கார முத்திரையுங்கொடுத்து, புஷ்பாஞ்சலிதிரையஞ்சாத்தி மகா முத்திரையுங்கொடுத்து, பஞ்ச பிரம்மங்களும், இதய முதலிய அங்கங்களும், சிவனுடனே கூடியிருக்கிறவர்களாகப் பாவித்து தீபதூப முதலாய சோடச உபசாரங்களுஞ்செய்து, ஆசமனார்க்கியங் கொடுத்து, திவ்யான்னங்களும், சித்திரான்னங்களும், பால், பழம், சர்க்கரை, நெய், பலகாரங்களும், நானாவிதமான கறிவர்க்கங்களும், வாசனை பொருந்திய ஜலமும் படைத்து கிரிசுத்தி சுத்திபண்ணி அர்க்கிய ஜலத்தினாலே புரோக்ஷித்து, மந்திரத்தினால் அபிமந்திரித்து, திக்கு பந்தனம், அவகுண்டனம், தேனு முத்திரையுங்கொடுத்து திவ்ய முத்திரையைத் தெரிசிப்பித்து, கௌரிகையினால் நிவேதித்து பாவனைசெய்து தற்புருஷ முகத்திலே நிவேதித்து, ஆசமனார்க்கியங்கொடுத்து, சோடச உபசாரங்களுஞ்செய்து, அஞ்சலி புட்பஞ்சாத்தி கற்பூரதீபங்கொடுத்து, அனந்தங்களாலே தோத்திரம் பண்ணப்பட்டு, சந்துஷ்டியாயிருக்கின்றவராகச்

சிவனைத் தியானம்பண்ணி, மூலத்தினாலே புட்பாஞ்சலித் திரையஞ்சாத்தி மகா முத்திரை பஞ்ச முத்திரையுங்கொடுத்து, ஜெபவட்சதை ரிரிக்ஷணாதி சுத்திபண்ணி அபிமந்திரித்து, இடதுகரத்திலே புட்பங்களை வைத்துக்கொண்டு ஜெபமாலையினாலே நூற்றெட்டுரு ஜெபித்து, புட்பத்தை வலது கரத்தில்வாங்கி அர்க்கிய ஜலத்துடனே மந்திர பூர்வகமாய்ச் சாத்தி போகாங்களுக்குந் தனித்தனியே மந்திரத்தினாற் பத்துரு ஜெபித்துச்சாத்தி, சுவாமிக்கு அக்கினி திக்கிலே சுடுத்தாசனம் பூசித்து, அதிற் சிவகுருவை ஆசனத்தினாலே ஆவாகனாதி ஜெபாந்தமாகப் பூஜித்து தோத்திரம்பண்ணிப் பின்பு, சுவாமிக்கு மேற்புறத்திலே யோகபீடம், வித்தியாபீடம், பூஜித்து அர்க்கியமுங்கொடுத்து, சுவாமிக்குப் புட்பாஞ்சலித் திரையமாக நாமகரணம், இராமநாதவென்று சாத்தி, அநேக வேதமந்திர சுருதிவாக்யப் பிரமாணங்களாலே தோத்திரங்களுடனே சீதாதேவியார் பின்றொடர்ந்து வரும்படியாயும், தான் இலட்சுமணருடனே எழுந்திருந்து சகல தேவரிஷிகளும், தபோதனாதிகளும் புடைசூழ்ந்துவர ஸ்ரீ ராமநாதனை முப்பிரதட்சணஞ்செய்து, மகா அன்போடும் பூமியிலே வீழ்ந்து, அஷ்டாங்க பஞ்சாங்கத்துடனே நமஸ்காரஞ்செய்து எழுந்திருந்து, சிரத்தின்மேல் கரங்களைக்கூப்பிக்கொண்டு ஆனந்தக்கூத்தாடி, தேகமயிர்க்குச்செறிய, வாய் குளற, கண்ணீர் ததும்பி மலையருவிபோற் றாரைதாரையாய்ப் பெருக, அடிக்கடி கைகளைக்கொட்டி யாதுந்தோற்றாமல், எங்குஞ் சுபம்பிரகாசமாய் மகா ஆனந்தத்துடனே அன்பு பெருகி நிற்கும்போது, அந்த ராமலிங்கத்திலே யிருந்து கோடிசூரியப் பிரகாசம்போல் ஓர் தேஜசுதோன்றி அதனோடும், மான்மழு சதுற்புஜ காளகண்ட திரிநேத்திர சந்திர கெங்காதர ஜடாதாரியாயும், மகரகேயூர குண்டல மணி மகுடதாரியாயும், ஆடையாபரண பூஷணாலங்கிருத அர்த்த நாரியாகாரயும், அரவாபரணகங்கண உருத்திராக்ஷ விபூதி தாரியாயும், மச்ச என்பு, கூர்மத்தின் ஓடு, வராகத்தின்

கொம்பு, நரசிங்கத்தின் நகங்கள், புலியுடை, ஆனையுரி, பிரமகபாலம், முதலிய பக்தாளுடைய சிரமாலை, வில்வக் குழை, துளசிமாலை, விருஷபவாகனத்தின்மீது பார்வதி சமேதராய் முப்பத்துமுக்கோடி தேவர்களும், சித்த, கின்னரர், காந்தருவர், கணநாதர், சிவபத்தர்களும் புடை சூழும்படியாய்எழுந்தருளி, ஸ்ரீ ராமசந்திரனைப்பார்த்து, வாரும் இராமசந்திராவென்றவுடனே, பிரமஹத்தியானது காற்றோடுகொடியத்துலையப்பரமேஸ்வரன்கூறுவார். நீரிந்தகந்தமாதனத்திலே சேதுதனுக்கோடி தீர்த்தமாடி நம்மையும்விதிப்படி பூஜித்தமையினால் உம்முடைய பாபங்களெல்லாம் நீங்கிவிட்டது, இனிமேல் பூலோகத்திலே சேதுதனுக்கோடி தீர்த்தங்களை விதிப்படியாடி நம்மைப்பூஜித்து வணங்கிய பேர்களினுடைய சகலபாபங்களும் விமோசனமாகி நம்முடையபதங்களைப்பெற்று மோட்சத்தையடைந்து பிரம்மானந்தத்தை யநுபவிக்கக் கடவார்களென்றும் வரக்களித்துப் பின்னுங்கூறுவார், இராமசந்திரனே, நம்மை இந்தகந்தமாதனத்திலே யாரொருவர் உம்மைப்போற் பூஜிப்பார்களோ, அவர்களுக்கு அநேகவரப் பிரசாதங்களும் இஷ்டகாம்மியமோட்சகாம்மியங்களும் பிரம்மானந்தமும் பெருகிவாழக் கடவர்களென்றும் வாக்களித்துப் பின்பு அந்த இராமலிங்கத்திற்றனே, அத்தேஜசுடனே ஆயிக்யமாய் எழுந்தருளி இருந்தார். இப்படி இராமநாதன் தெரிசனந்தந்து வரப்பிரசாதங்கள் அளித்ததைக் கண்டிருந்தசகலதேவரிஷிகளும் ரிஷீசுவரர்களும் முநீஸ்வரர்களும் தபசிகளும், விபீஷணன் சுக்ரீபன்முதலியவானராதிகளும், அவரவர்தனித்தனியே மிருத்திகைகளை வர்ணித்து வேதாகமப் பிரகாரம் தப்பாமற்சிவபூஜைசெய்துமுடித்து அநேகதோத்திரங்கள்செய்து, ஆனந்தக்கூத்தாடினார்கள். அப்போது ஸ்ரீ ராமசந்திரன் முதலானபேர்களெல்லாம், அப்படியே தோத்திரங்கள்செய்து ஆனந்தக்கூத்தாடினார்கள். அப்போது ஸ்ரீராம சந்திரன்முதலானபேர்களெல்லாம், அப்படியே தோத்திரஞ் செய்துகொண்டிருந்தார்கள். கேட்டீர்களோ முனிவர்களே,

இவ்வாறிருக்கையிற் கயிலாசபதியைப்போன்ற காசிமகாக்ஷேத்திரத்திற்குச்சென்று இலிங்கங்கொண்டுவரச்சென்ற, அநுமாரும் ஈசுவரப்பிரசாதமாய் இரண்டு லிங்கங்களைக்கொண்டு மகாஜாக்ரதையோடும் விசுவசொரூபங்கொண்டு கந்தமாதனத்திற்குதித்து ஸ்ரீ ராமசந்திரனையும், சீதாதேவியையும்,லட்சுமணனையுஞ் சுக்ரீவனையுங்கண்டுநமஸ்கரித்து பார்க்கும்போது, சிவபூசைநடந்தேறித் தோத்திரஞ்செய்து கொண்டிருப்பதைக்கண்டு வியசனங்கொண்டு பெருமூச்செறிந்துகூறுவார். சுவாமி, இராமசந்திரமூர்த்தியே, நான் வீணே நெடுந்தூரம்போய் இலிங்கங்கொண்டுவந்தும் பிரயோசனப்படாமல் போயிற்றே என்று கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரியவிடுத்து, தேவரீருக்கு இந்தமனதுண்டாகியவிதம்யாதோ அறியேன், அந்தோ நான் இந்தஜன்மத்திலே இராகத்வேஷங்களுடனே கூடிக்கொண்டு ஊன்றின்றும்பெருகிட்டாய் இன்பதுன்பங்களையறியாதமூடபுத்திக்குச்சரியாய்நடந்து,தேவர் இராட்சதர் மனிதர்களாலே இம்மைதனையடைந்து பிரயாசிக்கும்படியாய் எனது தாய்தந்தையர்கள் என்னைப்பயந்து வளர்த்துப் பரிபாலனஞ்செய்துவந்தவர்களாயினும் இவ்வைத்துன்பத்துக்கிடமாய்க் கரைகாணமல் அலைந்துதிரிந்த என்னை, தேவரீர்தடுத்தாட்கொண்டு நான்பட்ட சிரமத்தை யெல்லாந்தீர்த்து [illegible] கிருபைசெய்து அநேகஞ்சே, அநேகங்கீர்த்திகளைப்பெற்று சுத்தவீரத்துவத்தோடும் விளங்கும் என்னைப்பெற்றபிள்ளையைப்போல, ஆதரித்துக்கொண்டுவந்திருக்க, இப்போது, அடியேன், என்னகுற்றஞ் செய்தேன் தேவரீராயினுஞ் சீதாபிராட்டியின்பொருட்டு இவ்வளவு பிரயாசையடைந்தும் சுக்ரீபர் விபீஷணர்முதலிய வானரவீரர்களியாவரும் ருக்ஷவர்கள் சுகமாய்ப்பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு வாழவேண்டுமென்றும் தேவரீரின் ஏவற்பணி செய்துவந்துவருகிறார்கள். அடியேன், என்னகாரணத்தால் இதுவரையில் பணிசெய்துவந்தேன், மேலும், இவடத்தில் சகலதேவர்களும்,முநீஸ்வரரும் வானராதிகளுஞ் சுத்தவீரர்

களுமாகிய கோடானுகோடிபேர்களிருக்க அவர்களையெல்லாம் விடுத்து என்னைப்போய்ச் சிவலிங்கங் கொண்டுவரச்சொல்லி யான்கொண்டுவந்தபிறகு அதனை உபயோகப்படுத்தாமல் என்னை அவமானப்படுத்தவோ நான் கயிலாசம்வரைக்கும்போய்ச் சருகாகத்தேகத்தையுலர்த்தி நிஷ்டைசெய்து வரப்பிரசாதத்தினால் நான் இலிங்கங்கொண்டு வருவதற்குள்ளாக மணலைக் குவித்து என்ன அவசரநிமித்தமாய்ப் பூசையைமுடித்தீர்கள், ஆயினும், மகாலிங்கசொரூபத்தை முன்செய்த தபோபலத்தினால் பூசைசெய்யும்படியானநன்மையும் புண்ணியமும்பெற்றிருக்கவேண்டும். அவ்வாறுபுண்ணியங்கள் செய்யாதபேர்களுக்கு ஒருபோதுங்கிட்டாதென்று சுருதிவாக்கியஞ் சொல்லியிருப்பது என்னளவிலே பலித்ததென்றுமிகவுந் துன்பத்தையடைந்தவராய் பின்னுஞ்சொல்லுவார், தேவரீர், இப்படி நினைத்து அடியேனைக்கைவிட்டபோதே, இனி என்னகதி இருக்கின்றது;யான்செய்தபாபமே இப்படிவந்துசம்பவித்தது போலுமிருக்கின்றதென்றும் தேவரீருக்கு ஊழியஞ்செய்த உடலை வைத்திருக்கப்படாதென்றும் உயிரைமாய்த்தாலொழிய இத்துன்பந் தீராதென்றும் அநுமார் ஏங்கி யேங்கி நெடுமூச்செறிந்து என்னமாய்முடிந்தது நம்முடைய சுத்தவீரத்தன்மையென்று வாய்விட்டலறி, ஸ்ரீ ராமசந்திரனுடைய பாதாரவிந்தத்திலேவிழுந்து அடித்துமோதி, என்பழியை ஏற்றுக்கொள்ளுமென்று கூக்குரலிட்டார், அப்போது ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியுங்கருணையோடு அநுமாரைக்கட்டி யணைத்தெடுத்து அவர்மேற்பட்டிருக்கிற தூசுகளைத்துடைத்து முதுகைத்தடவிக்கொடுத்துச் சொல்லுவார், வாராய் அநுமானே, யான் என்னுடையநிலையையும் என்னையன்றி நின்னைப்போன்றவர்களினது நிலையையும் அறிவேன். அஃதெப்படியெனில், உலகின்கண் ஆன்மகோடிகளுடைய உயிர்களெல்லாம் ஒன்றேயல்லாமல் இரண்டில்லையே அதுபோல் உள்ளதை உள்ளதாய்ப்பார்க்கிறபோது நீ வேறுநான் வேறாகமாட்டாது, ஆதலால் பிறப்பதும் இறப்பதும் முன்செய்த கன்மாநுபவப்படி

யொடக்கும், அவ்வினைக்கீடாய் நன்மைதீமைகளும் நரகசொ
ர்க்கமுங்கிடைக்கும், இவ்வளவுகாரியங்களும் நடத்தும்பொரு
ட்டு சைதன்யமே சாக்ஷிமாத்திரமாயிருந்து நானாவிதரூபமான
பேதாபேதங்களெல்லாம் மனக்கட்டேயன்றிவேறில்லை. இதல்
லாமலும் நீ என்றும் நானென்றும் பேதமுண்டோ, நான்செ
ய்தது நீ செய்ததல்லவோ, நீ செய்தது நான்செய்ததல்லவோ,
எங்குஞ்சுயம்பிரகாசமாயுஞ்சுயஞ்சோதியாயும் ஆண்பெண்ண
லியல்லாமலும் ஆதியந்தமில்லாமலும் விளங்கிக்கொண்டிருப்
பதுவே ஆத்துமசொரூபமாக்கும், அப்படிக்கொத்த ஆத்தும
சொரூபமே நீயாய் தானவனாய்ப்பார்த்து விளங்காமல் அகங்
காரமுறுவதுசரியல்ல, ஆதலால் தருமத்தைமனதிலேசிந்தனை
செய்து சாவகாசத்தையும் இந்திரியாதிகாட்டங்களையும் பொ
றாமையையுந் தவிர்த்துச்செவ்வையா யோசித்துப்பார்த்தால்
சகலதேவர்களுந்துதிசெய்யப்பட்ட கர்த்தனுடையபாதாரவிந்
தத்திலேவந்தனைசெய்து வணங்கிதோத்திரஞ்செய்து உள்ளு
ம்புறமுமாய் ஒன்றாய் நிறைந்து அறிவேசொரூபமாய் விளங்
கப்பட்ட பிரமமேநிச்சயவஸ்துவாகவும் மற்றவை எல்லாம்
பொய்யாகவும் ஞுசற்பனை உண்டாகிறபோது, சயிதன்யத்
தின் அருள் உண்டாகும் அப்படியல்லாமல் இராகத்வேஷங்
களினால் தேவர்மாக்கள் விலங்கு புள் ஊர்வாழ்வன நீர்வாழ்
வன தாவரமென்னும் கோடாநுகோடிஜென்மங்களாய்ப் பிற
ந்து வகைதெரியாமற்சகலருங் கெட்டுப்போகின்றார்கள். அப்
படி எடுத்தநாற்றவுடலத்தை சந்தனகளபங்களால் மறைக்க
வேண்டி இருக்கின்றது, பின்னும் நெய்பால் தயிர் சர்க்கரை
இவைகளைச் சாப்பிட்டாலும் அதற்குத் தார்க்கந்தமுண்டாவது
மின்றும் இத்தேகத்துக்கு ஆடையாபரணாதிகளை நிறைத்து
அழகு செய்யாமற்போனால் மல ஜலக் கோளை மாம்சஞ் சீ
இரத்தங்களானது இச்சடத்தினுடைய துவாரத்துக்கு துவா
ரம்மயிர்க்கால்களின்வழியாய்ப் பெருகிக்கொண்டேயிருக்கும்
அத்தன்மைபொருந்திய இப்புழுக்கூட்டைச் சுதந்தரமாயெ
ண்ணி நீநானென்னும் வேற்றுமைசெய்யவேண்டுமோ, அப்

படி ஊறப்பட்ட நாதவிந்துகள்கூடி ஓர்புழுக்கூடாகவெடுத்த
நமக்கு என்னபேதமிருக்கின்றது, இவ்வணம் அடையும் இன்
பதுன்பம் யாராலே எண்ணக்கூடும்.

இவ்வித அவமானத்தினாலே மானமென்பதைப் போக்
கடித்தபேர்களுக்குப் பிறப் பிறப்புக்களில்லை, இதன்றியும்
இந்தப்பிறப்பிலே இடும்பையும் பொய்யும் விடுமாயின் இன்
பதுன்பமும் போய்விடும், ஆதலால், இப்படியே சகல உயி
ர்களும் பிறந்துபிறந்து அழியும், உன்னைப்போல் விவேகமுள்
ளபேர்கள் இடும்பையாகிய கோபத்தைப் பொருளென்றெ
ண்ணுவார்களோ, பின்னும் கண்ணில்லாத அந்தகன்மார்க்கத்
திற்போகும்போது, அம்மார்க்கத்திலிருக்குங் குழியையறியா
மல் விழுவானாயின் மறுபடியும் அம்மார்க்கத்தை யுன்னுவா
னோ, அதுபோல் இந்தமானத்தினாலே உண்டாகிற இன்ப
துன்பம்நீங்கிவிட்டால், எப்போதுஞ் சுகத்தையநுபவிக்கலா
ம், பின்னும் வேதாந்தங்களினாற்சொல்லப்பட்ட ஞானத்தை
யறிந்துபார்த்தால் அதில்மூன்றுவாக்கியங்களுக்குள்ளே சகல
மும் ஒடுங்கியிருக்கும், அப்படிக்கொத்தவாக்கியம் எப்படி
கிடைக்குமெனின், ஓர் வீட்டில் தீப்பிடித்து நான்குபக்கமுஞ்
சுற்றிவளைத்துக்கொண்டு எரிகிறபோது அவ்வீட்டுக்குடைய
வன் அவற்றிலுள்ளவஸ்துக்களை எடுக்கத்தோன்றாமற் சகலத்
தையும் வெறுத்துத் திரும்பிப்பாராமல் எப்படிச்செல்வனோ,
அதுபோல் தன்னுடைய அஞ்ஞானவீட்டிலே ஞானத்தீயான
துபற்றி எரிந்து அதனாற்சகலபண்டபதார்த்தம் பெண்டு பிள்
ளைகள் தனகனகவஸ்துவாகனங்களையும்வெறுத்து, திரும்பிப்
பாராமல் வந்து குருசன்னிதானத்திலேதொண்டுசெய்து அவ
ருடைய கிருபாகடாக்ஷத்தினாலே, அறிந்துக்கொண்டால் அவ்
வுண்மையானது ஒன்றாய்த்தெரியப்படும், அப்படிக்கல்லாமல்
இடும்பையான செருவத்தைமனதில் வைத்தபேர்களுக்கு அந்
தப்பிரமையானது இப்படியேவாதிக்கும், அப்படிக்கொத்த
வாதனைகளுண்டாகி ஞானமழிந்துபோய் யாதொருபுண்ணிய
மு மடையாமல் உணவருந்தி உறங்கிவிழிக்கின்ற பேர்களுக்

காகவே காலனொருவனையுண்டாக்கி யிருக்கின்றது, மேலும் நாம்காண்பனவெல்லாம் அழியும், உயர்வெல்லாந்தாழும், தாழ்வெல்லாம் உயரும்; பழுத்தமரமானது எப்போதும் உதிர்ந்து கொண்டே இருக்கும், அதுபோற் பிறந்தசரீரம் இறப்பதே வழக்கமாயிருப்பதனாலே, இச்சரீரம்நிலையல்ல, அழிந்த சரீரம்வரமாட்டாது, சென்றநாட்களும் வரமாட்டாது, பின்னும் தான் அழியாமலிருக்கவெண்ணி, அடவியிலும் குகைமுதலிய இடங்களிற்போய் ஒளித்தாலும் ஆகாசமார்க்கமாய்ப் பறந்தாலும் ஆடகலோகம்போயிருந்தாலும் அலைகடலில் ஒளித்தாலும் பிறப்பிறப்பு ஒற்றுமையானதனாலே ஓர் நிமைப்போது கூடவுந்தப்பாமற் காலன்வந்து கொண்டுபோய்விடுவான், இதல்லாமலும் உலகிற்ஜனித்த எச்சடத்திலும் உயிர்வந்து கூடுகிறதும் பிரிகிறதும் எப்படி இருக்கிறதென்றால்; சமுத்திரத்திலோர் துறையில் நாவாய்கள் தோணிகள் கூடியிருந்து அப்பால் அவரவர்கள் நினைத்த இடங்களுக்குக் கொண்டுபோய் விடுகிறதுபோலும், வழிப்போக்கரானபேர்கள் இராவுகாலங்களில் ஓர் இடத்திற்கூடியிருந்து விடிந்தவுடனே, அவரவர்கள் எவ்வேறுமார்க்கங்கொண்டு பிரிந்துபோய்விடுவார்களோவதுபோலும், காலனானவன் கைப்பற்றவந்தகாலையில் அவரவர் பெண்சாதிபிள்ளைகளும் தாய்தகப்பன்முதலிய சுற்றத்தார் யாவரும், அப்படியேபிரிந்துபோவார்களாதலால், அப்படிச் செல்லாமல் ஒன்றாயிருக்கும்படியாய் நிறுத்துவதற்கு வேறே மருந்தும் மந்திரமுந் தெய்வங்களுங் கிடையாமையாலும் இறந்தபேர்கள்மறுபடியும் முன்ஜனித்ததாயின் வயிற்றிலேதானே எல்லோரும்பிறந்துவளர்ந்து இருக்கவு மாட்டார்களாதலால் முன்ஜென்மத்திலே அவரவர்செய்த கர்மானுபவப்படியே பிறந்துவளர்ந்துவரும் பிறப்பிறப்பென்னுந் துன்பம்வந்த வகையாதெனில், சூரியப்பிரகாசத்துக்குமுன்னே அந்தகாரம் தோன்றியதுபோல ஆத்மாவுக்கு இல்லறதுக்கந்தோன்றி இருக்கின்றது, அவை எதனாற்றோன்றியதென்றால், கருமத்தினாலேதன்னிடத்தில்தோணபட்டது அன்றியுக்கருமமேன்வந்த

தென்னில், காமக்குரோதங்களால் உண்டாயிற்று, காமக்குரோதமேன்வந்ததென்னில், அவமானத்தினால்வந்தது, அவமானமெவ்வகைவந்ததென்னில்; அவிவேகத்தினால் வந்தது, அவிவேகமெத்தன்மையாய் வந்ததென்னில், அக்கியானத்தினால் வந்தது, அக்கியானம் என்னவகையாய் வந்ததென்னில் தன்னைமறந்ததனாலே சம்பவித்ததானபடியால் ஞானமென்னும் அறிவினால் அக்யானத்தையும் அபிமானத்தையும்போக்கினால் அவனுடையாகாதிகள்கெட்டு, நீயே நானென்றும் நானே நீயென்றும் சொல்வதுதெளியும், அப்படி தெளிந்து பார்ப்பையேயாகில், இந்த காலதேச வர்த்தமானமெல்லாம், ஒன்றாய்ச் சுயம்பிரகாசமாய் வேறுபாடில்லாமல் தோற்றப்படும். அதை விட்டுவிட்டு நீயுந் ஆங்காரத்தினாலே உன்னை மறந்து இவ்வகைத் துன்பத்தையடைகின்றது என்ன காரணம். மேலும் யாவும், ஒரேமயமாய் விளங்குவதால் நீ நானென்று இரண்டில்லை. ஆதலால், இவை எல்லாம் பிராந்தியினாலே உண்டாக்கப்பட்டது மனத்தின் வேற்றுமையேயன்றி வேறல்ல. ஆதலால் யான் உனக்கு வஞ்சகம் நினைந்து, அவமானப்படுத்தவில்லை. மேலும், ருஷீஸ்வரராளால் சிவலிங்கப்பிரதிஷ்டைக்கு நியமித்த முகூர்த்தம் தப்பிப்போகின்றதா யிருந்தமையாலும், நீ வருவதற்குக் காலந்தாழ்த்தமையாலும், இவன் சீதையின் கையினாற்பிடித்து விளையாடிய மிருத்திகையானது இலிங்கம்போலுந் தெய்வீகம் விளங்கியிருப்பதைக்கண்ட யாவரும் அதனையே பூஜிக்கும்படியாய்ச் சொன்னதால் அவ்வாறே நானும், முகூர்த்தவேளை தப்பிப் போகின்றதாக விருக்குதென்று பூஜை பண்ணியதேயன்றி வேறில்லை. அப்படி இருக்க நீ இதனை யோசியாமல் வியாகுலப்படுவதும், கோபிப்பதும், தகுதியல்ல. ஆதலால், நீ மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டு கயிலாசத்திலிருந்து கொணர்ந்த இலிங்கத்தை உன்னுடைய பெயரால் பிரதிஷ்டைசெய்து வணங்குவையேயாகில் உன்னைப்பற்றிய பாபங்களெல்லாம் நீங்கும்படியாய் சாம்பமூர்த்தியின் கிருபையெ

ற்று, பூலோகத்திலே சகலத்தாரும் உன்னுற் பிரதிஷ்டை
செய்த அநுமலிங்கத்துக்கு முன் வணங்கிப் பின்பு நம்மாற்
பிரதிஷ்டை செய்யப்பட்ட இராமலிங்கத்தை வணங்குவார்க
ளாயின், அவர்களுக்குச் சகல பாபங்களும், சகல தோஷங்க
ளும், பூதவேதாள பசாச கணங்களும் விலகி இஷ்டகாமியங்
களைத் தருவதன்றியும், மோக்ஷாநந்தமும்பெற்று வாழ்க்கட
வர்களென்று கூறிப் பின்னும் கூறுவார். ஓ அநுமானே, உன்
னுற்கொண்டுவரப்பட்ட அநுமலிங்கத்தையும், இராமலிங்கத்
தையும், துதி செய்யப்பட்ட புண்ணியசாலிகளுக்கு எக்கியங்
கள், யாகங்கள், அநேக தான தருமங்கள், தல தரிசனங்கள்,
இவை யாவும் வேண்டியதில்லை. ஆதலால், இந்த கந்தமா
தனத்திலே யான் சீதை, இலட்சுமணன், முதலியபேர்களோ
டும், பூசை செய்திருக்குஞ் சிவலிங்கத்திலே பரமேஸ்வரன்
நிறைந்து விளங்குவதினும், உன்னுற் பிரதிஷ்டை செய்யப்
பட்ட சிவலிங்கத்திலே பரமேஸ்வரன் பிரதானமாய் விளங்
கக்கடவனென்றும், ஸ்ரீ ராமசந்திரன் வரமளித்ததல்லாமலும்,
பின்னும் சொல்லுவார். வாரும் அநுமானே, உன்னுடைய
துன்பங்களெல்லாந் திரும்படியாய் நீ கயிலாயத்திலிருந்து
கொண்டுவந்த சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து வணங்கு
வையேயாகில், அப்படி வணங்கிய அநுமேசனையும், நம்மாற்
பூசிக்கப்பட்ட இராமேசனையும், ஆயிரம் யோசனை தூரத்திலி
ருந்து நினைக்கப்பட்ட பேர்களுக்கும், அநேக புண்ணியங்க
ளுண்டாகி அஞ்ஞான முதலிய பாசங்களெல்லாம் அற்று
பரமபதத்தை அடைவார்களென்று ஸ்ரீ ராமசந்திரன் திரு
வாய்மலர்ந்து, அநுமானை இலிங்கப்பிரதிஷ்டை செய்யும்படி
யாய்ச்சொல்ல, அப்போது மாருதி கூறுவார். சுவாமி, இராம
சந்திர மூர்த்தியே, தேவரீர் பூஜித்த இலிங்கத்தைப்பெயர்த்
தெறிந்துவிட்டு அடியேன் கொண்டுவந்திருக்கும் மகாலிங்
கத்தை உம்முடைய கையினுற் பிரதிஷ்டை செய்யவேண்டு
மென்றுசொல்ல, அதைக்கேட்ட இராமசந்திரன், வாராய்
அநுமானே, இப்போது என்னுற் பிரதிஷ்டை செய்திருக்கும்

இலிங்கத்தை பேதிக்கப்படாது. ஏனெனில், அது பாதாள
பரியந்தம் தட்டு தட்டாய் வேருன்றி யெங்கும் வியாபித்தி
ருக்குமாதலால் உன்னுல் அசைக்கப்படாது. மேலும், முன்
னொருகாலத்தில் இச்சிவலிங்கமானது அக்கினி மலையாகவிரு
ந்தபோது அதினுடைய அடியைக்கண்டாலும், மகமேரு
முதலிய அஷ்டகுல பருவதங்களினது அடிமுடிகளை மாறி
மாறிப் பிடுங்கிவைத்துக் கயிறுகத்திரித்தாலும், இவ்விலிங்
கத்தை மாத்திரம், சற்றேனும் அசைக்கப்படாது. மேலும்,
அப்படி உனக்கு அதிக பெலனிருக்குமாயின் நாம் செய்த
சிவலிங்கப் பிரதிஷ்டையை பெடுத்தெறிந்துபோட்டு நீ கொண்டு
வந்திருக்குஞ் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யென்று
ஸ்ரீ ராமசந்திரன் சொல்ல, அதைக்கேட்ட வாயு குமாரன்
மகா பூரிப்போடும், அவ்விலிங்கத்தை நோக்கி, இந்த மிருத்தி
கையான மணலைப் பெயர்த்தெறிவது எனக்கோர் பெரிய
காரியமோவென்று தாவிக்குதித்து, அங்குள சகல தேவர்க
ளும், ருஷீஸ்வரர்களும், முனீஸ்வரர்களும், யாவருங் காணும்
படியாய் குபிலெனப்பாய்ந்து இராமலிங்கத்தைப் பிடித்தசை
த்தார். அவ்வாறசைத்ததற்கு இலிங்கமானது அசைவில்லா
தது கண்டு பின்னும் மிருத்திகையான இம்மணலுக்கு
இவ்வளவு வலுவுளதோவென்று அநுமானவர் தனது பஞ்ச
பூதங்களையு மடக்கிச் சுவாசபந்தனஞ்செய்து மகா பலத்தோ
டும், பலத்ரமும் அசைத்துப்பார்த்தார். அப்படி அசைத்
தும், இராமலிங்கமானது அணுவளவும் அசையாமலிருப்
பது கண்டு ஆங்காரங்கொண்டு, வாலை முறுக்கிப் பற்களை
கெறகெறவென்று கடித்து வாலிற் கட்டியிருக்கும் மணியா
னது கணகணவென்று சத்தாடம்பரஞ்செய்யத் தலைக்குமேல்
ஆகாசவெளியைப்பார்க்க வாலை நீட்டிக்கொண்டு மகா கரு
வத்தோடும், இராமலிங்கத்தைப் பிடித்தசைத்தாரப்போ
தும் அசையாதது கண்டு, மகிமையறியாதவராய் மலையைப்
போலும், மரத்தைப்போலுமெண்ணி, இந்த மிருத்திகையான
மண்ணிலிங்கத்துக்கு இவ்வளவு வலுவாவென்றும் விசவசே

ரூபங்கொண்டவராய் இரண்டு கரங்களையும் பூமியிலூன்றி வாலினால் இராமலிங்கத்தைச் சுற்றி இறுக்கி மகா கோபாவேசத்தோடும், பூரண வலுவைக்கொண்டு ஆகாசவீதியில் வாழும் சூரிய சந்திராள் நட்சத்திரங்கள் முதலிய உம்பர்களியாவருந் திடுக்கிட்டு நடுங்கும்படியாய் லாகுசெய்து காலிரண்டையு முயரத்தூக்கி வெகு பராக்கிரமத்தோடும் விசைகொண்டு அசைக்கிறபோது, பூமி யந்தர சொர்க்கமென்று மூன்று லோகமும், அஷ்ட திக்குகளும், அண்ட சராசரங்களும், அஷ்டகுல பருவதங்களும், சப்த சாகரங்களும், எறும்பு முதல் யானை யீறாகும் எண்பத்துநான்கு நூறாயிரந் ஜீவகோடிகளும் அசைவுகொண்டு அல்லோலகல்லோலமாய்ச் சுழன்றதேயன்றி, ஸ்ரீ ராமசந்திரனாற் பூசித்த இலிங்கமானது அசையாததுகண்டு, ஒன்றும் தோற்றாதவராய்ப் பின்னும் வாலை முறுக்கி இறுக்கி விசைகொண்டு அசைக்கும்போது அநுமாருடைய வாலானது நீண்டு நைந்து இளகிப் பலமென்று அறுந்துவிட்டது. அப்படி அறுந்தவுடனே அவ்விராமலிங்கத்தின் வடபாரிசத்திலே கூக்குரலிட்டுத் தலைகுத்தாகக் கரணம்போட்டு விழுந்தார். அவை எப்படி இருந்ததென்றால், முன்னொரு காலத்தில் வாயுபகவானுடைய பெலத்துக்குட்பட்ட ஆதிசேடன் மகா மேருவின் கொடு முடியைப் பெயர்த்தெறிந்தானென்னுந் தன்மைக்கிணங்க தானுமோர் கொடு முடியைப்போல் அலறிக்கொண்டு விழுந்தமாத்திரத்தில், வாயினாலும், மூக்கினாலும், இரத்தங்கள் குபீர் குபீரென்று பெருக, எலும்புகளெல்லாம் நொறுங்கிக் கண் விழி பிதுங்கி, விழுந்த அதிர்ச்சியினால் மண்டையுடைந்து பூமியானது பெலத்வாரம்போற் பள்ளப்பட்டுத் தண்ணீருற்றுவரையிலும் பேதித்து, அதிலூறிய ஜலமும், இரத்தமும், ஒன்றாய்ச் சேருடிச் சமுத்திரத்தில் பிரவாகம்போய்ச்சேர, அப்போது அநுமாரானவர் தலைக்குப்புற்று நாக்கை நீட்டிக்கொண்டு மூர்ச்சையோடும், பூமியின்பேரில் அசைவற்றிருப்பதை தேவர் முதலிய ருஷீஸ்வரான், முநீஸ்வரான், வானராதிகளியாவ

ருங்கண்டு ஆச்சரியங்கொண்டு, ஸ்ரீ ராமசந்திரனுடைய அன்பையும், ஸ்ரீ ராமநாதனுடைய கிருபானந்தப் பெருக்கையு நினைத்து புகழ்ந்துகொண்டாடி நின்றவர்களாய், ஸ்ரீ ராமலிங்கத்தின்பேரிற் பாதிவாலில் சுற்றியிருக்கப் பாதிவால் அறுப்புண்டதோடுங் கூப்பிட்டு தூரத்திற்போய் விழுந்து மூர்ச்சித்திருக்கும் அநுமாரைக் கண்டு நடுங்கி வெறுத்து யாவருஞ் சகிக்க மாட்டாதவர்களாய்த் துன்பக்கடலுட்டோய்ந்திருப்பதை இராமசந்திரன் கண்டு, மிகவும் பதறிக் கண்ணீர் தாரை தாரையாய் விடுத்துக் கதறும்போது, இலட்சுமணரானவர் வயிற்றிலும், வாயிலுமறைந்துக்கொண்டு புலம்ப, சீதாதேவியுங் கோவென்றலறிப் பூமியின்மேற் சாய்ந்து புரண்டுபுரண்டழுது, ஐயோ பாழுந் தெய்வமேயென்று, வாய்விட்டலறி தன்னுடைய இரண்டு கரங்களாலும், அநுமாருடைய அங்கத்தை இரத்தவெள்ளத்தினின்றுந் தடவியெடுத்தாள். அவ்வாறு அம்மனைவள் எடுத்துப் பார்க்கும்போது, அநுமாரானவர் நைந்து குழைந்து சுருண்டிருப்பதைக்கண்ட வானராதி முதலிய யாவரும், ஐயையோவென்று அபயமிட்டு முகத்திலறைந்து கோவென்றழுதார்கள். அது கண்ட இராமமூர்த்தியும், அநுமாரைத் தோளோடே சேர்த்தணைத்துக்கொண்டு இக்கண்றாவியைப் பார்க்கவா இருந்தோமென்றும், மாருதியின் தலையைத்தாங்கி தனது மடியின்பேரில் உட்காரவைத்தபோது அம்முடியானது நிற்கமாட்டாமற் சோர்ந்து சாய்வதைக்கண்ட சீதாதேவியானவள் அடித்து மோதி விழுந்து எழுந்திருந்து தனது இருகரங்களாலும், அநுமாருடைய தலையைத் தாங்கிக்கொள்ள, ஸ்ரீ ராமசந்திரன் முதலிய யாவரும், அநுமாருடைய தேகத்திற் படிந்திருக்கும் தூசுகளையும், இரத்தங்களையும் துடைத்து, ஆ எங்கள் தெய்வமே என்றும், எங்களையனே என்றும், எங்கள் கண்மணியே என்றும், துக்கித்துக்கூவி, அந்தோ, பம்பை யாற்றங்கரையில் எங்களை நட்புக்கொண்ட நாள் முதல், சுக்ரீபன் முதலிய வானராதிகளை எல்லாஞ்

சேர்ப்பித்துவைத்து உனது தாயாகிய அஞ்சனா தேவியையும், தந்தையாகிய வாயு பகவானையுமறந்து, எங்களைச்சதமென்றெண்ணியிருந்து, எங்களெண்ணப்படி நடந்துவந்த உன்னை எப்போது காண்போம். ஐயோ, உனது வாய் திறந்தோர் வார்த்தை பேசாயோ, கண்ணைத்திறந்து பாராயோ, எங்கள் பொருட்டாய் நைந்து மெலிந்தனையே, மகேந்திரகிரியினின்று மெழுந்த நினது கால்களும், இலங்கணியைச் சம்மாரஞ்செய்து திருவாழியைக் கொண்டுபோய்க்கொடுத்த கரங்களும், இலங்கையைச் சுட்டுச் சாம்பலாக்கிய வாலும், அசோகவனத்தில் பஞ்ச சேனாபதிகள் முதலிய இராக்ஷத வீரர்களை வெற்றிகொண்ட புஜபல பராக்ரமங்களும், எங்கேயடக்கினாய், அப்பனே, எனதாருயிர்த்துணையாகிய நீ மூர்ச்சித்திருப்பதைப்பார்த்து சகிக்கவுங் காலமாயிற்றே என்று பின்னுங் கூறுவார். ஆ எனது செல்வமே, விபீஷணனை அடைக்கலங்கொள்ளும்படியாய் அநேக நீதி வாக்கியங்களை எடுத்தோதிய விவேகசாலியாகிய உனக்கு எவ்வளவுந்தோற்றுமல் இப்படி அலுத்துள்ளாய் அயர்ந்தனையே யென்றும், நான் இராவணனைச் சங்காரஞ்செய்து வெற்றி மாலை பூண்டது நின்வலுவாலன்றி வேறில்லையே என்றும், ஐயோ என்னிரு கண்மணி போன்ற உன்னை இவ்விடத்தில் பலிகொடுத்துவிட்டு அயோத்தியாபுரிக்குப்போய் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு அரசாட்சி செய்து வாழவும் மனமெழுமோ, அநுமானே, எங்களை அயோத்தியாபுரியில் தம்பிமார் தாயாருடனே கொண்டுபோய்சேர்த்துப் பார்க்காமல் இப்படி நாங்கள் பாதவிக்கப் பார்க்கின்றனையே யென்றும், ஸ்ரீ ராமசந்திரன் புலம்பிக் கண்ணீராறுபோற் பெருகவும், அது கண்ட சீதாதேவி முதலியபேர்களும், அழுது புலம்புங் கண்ணீரும், அநுமார் தேகத்தில் விழுந்து தேகத்தின் மயிர்க்கால்தோறும் புகுந்து அதனால் அவர் அடைந்த தாபசோபங்கள் தீர்ந்து உடம்பில் வலுவு பொருந்தி அசைவுண்டாகிக் கண்களை விழித்துப்பார்த்து, ஸ்ரீ ராமசந்திரன், சீதாதேவி, இலட்சுமணப்பெருமான்

முதலானபேர்களினுடைய கண்ணீரால் ஸ்நானம் பண்ணப்பட்டதினால், அக்கந்தமாதனத்தில் விளங்கும் இராமநாதனைத் தொட்டுப் பிடுங்கி எறியவேண்டுமென்று நினைத்து அபசாரஞ்செய்த பாபமும் விமோசனமாகி, அஞ்ஞானங்களெல்லாம் அகன்று ஞானோதயமுண்டாகி எங்குஞ் சச்சிதானந்தமயமாய்த் தோன்றப்பட்டதினாலே, ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியையும், சீதாதேவியம்மனையும், தோத்திரங்கள்செய்து வணங்கிச் சகஸ்ர நாமங்களையும், தசாவதாரங்களையும், ஸ்ரீ ராமசந்திரனுடைய கருணாநிதிப் பிரவாகங்களையும் சொல்லித் துதித்து, அடியேன் செய்த அபசாரங்களைப் பொறுத்து ரட்சிக்கவேண்டியதென்றும், ஸ்ரீ ராமசந்திரனது பாதகமலங்களை வணங்கி நமஸ்கரித்து எழுந்திருந்து கைகட்டி வாய்புதைத்து நின்றார். அப்படி நின்ற மாருதியைச் சகலதேவருங் கண்டு சந்தோஷித்துக் கொண்டாடினார்கள். அதுகாலையில் ஸ்ரீ ராமசந்திரனும், அநுமானைப்பார்த்துக் கூறுவார். வாரும் அநுமானே, நாம் மகா ரிஷிகள் வாய்மையின் வண்ணம், சீதை கரத்தினால் பிடித்துப்பாரணித்த சிவலிங்கத்தைப் பூஜித்து இருப்பதின் மகிமையறியாது இறுமாப்புக்கொண்டு கோபித்துக்கொள்ளலாமோ, அதன்றியும், நான் பூஜித்த இராமலிங்கத்தை முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கருட காந்தர்வ சித்த வித்யாதர நாகர்ய காயவாசியர் போக பூமியர் முதலிய சிவகணங்களும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், முதலாகியபேர்களும் ஒன்றாய்க்கூடி பேதிக்கவேண்டுமென்றாலும், பேதிக்கக்கூடுமோ, அப்படியிருக்க, நீ சிறுபிள்ளை புத்தியாய் வீணே இப்படிக்கொத்த துற்புத்தியை நினைந்து அயருற்றனையே, ஆயினும், உனக்கு இன்னங் கூறுகின்றோம். யாதெனில், இப்போது என்னால் இறக்கப்பட்ட இலங்கை வேந்தனானவன் முன்னொருகாலத்தில் என்னையனாகிய சாம்பவ மூர்த்தியானவர் எழுந்தருளியிருக்கும், ஸ்ரீ கயிலாசத்தை பெயர்த்தெடுக்கவேண்டுமென்றெண்ணங்கொண்டவனாய் அவன் பட்ட பாடுகளையெல்லாம்

நீ கேட்டறிந்தில்லையோ, இதல்லாமலும், அந்த பரமேஸ்வரன் தேவர்களை கெருவபங்கஞ் செய்யவேண்டி ஓர் துரும்பை எடுத்து முன்னெறிந்து பேதிக்கச்சொன்னபோது சகல தேவரும் ஒருங்குகூடி எடுத்தும், உனது° தந்தையாகிய வாய்வுபகவான் மகா வலுவுகொண்டு சூருவளியாய்த் தன்னுடைய பூரண வலுவோடு சுழன்று சுழன்றடித்தும், பேதிக்கப்படாததையை யாவருங்கண்டு மயங்கித்தியங்கி நின்றனரே யன்றி அத்துரும்பை அசைக்கக்கூடாதவைக்கு அவனசையாமல் அணுவசையாதென்றும், ஓர் வதந்தி தேவர்களால் உண்டாகி யாவரும் வணங்கித் தோத்திரஞ்செய்ததை நீ கேட்டதில்லையோ, மேலும், இச்சதுர்த்தச புவனமும், அண்டபிண்ட சராசரமும், விளங்காநின்ற எறும்புக்கடை யானைமுதல் எண்பத்து நான்கு நூறாயிரஞ் ஜீவாத்மாக்களிலும் நிறைந்து எள்ளுக்குள் எண்ணெய்போல எங்கும் வியாபகமாய் உள்ளும், புறமும், ஒன்றாய் ஆதிமத்யாந்த ரகிதமாய் திரிநேத்திரதாரியாய் விளங்காநின்ற கர்த்தனுடைய மகிமைகள் உனக்குத் தெரியாததுண்டோ, அந்தோ, நவ வியாகரண பண்டிதனாகிய உனக்கு நாம் சொல்லவேண்டிய தென்னவிருக்கின்றது. மேலும், ஸ்ரீ கயிலாசபதியாகிய சிவபெருமான் எவ்வணமிருப்பாரெனில், காலனுக்குக் காலனாகவும், கருதித் துதிப்பவர்களுக்கெளியவனாகவும், இருப்பவனை அறியாமற்செய்த அபசாரத்துக்குப் பொறுதவராய் உனக்கு இத்தன்மையாகிய துன்பங்களைச் செய்தார். ஆயினும், நீ செய்த அபசாரத்தை அக்கடவுள் எப்போதும், அவர் திருவுளத்தில் வையார். ஏனெனில், அடியார்களானோர் தீங்கு செய்தால் அன்னவரைத் தெண்டித்தும், பாங்கு செய்தவர்களைக் கடாக்ஷித்துவரும் பக்குவத்தை யுடையவராதலால் நீ செய்த பிழையைப்பொறுத்துக் கருணாகடாக்ஷஞ் செய்வரேயன்றி, கைவிடமாட்டார். ஆதலால், நீ விழுந்த அதிற்சியினாலுண்டாகிய பிலத்வாரமானது பூலோகத்திலே உன் பெயரால் உண்டாக்கப்பட்ட தீர்த்தமெனச் சிந்தித்து, அதில் தீர்த்தமாடும் பேர்களு

டைய பாபங்களை யெல்லாங்கெடுத்துப் புண்ணியங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கும். அஃதெப்படியெனில், அந்த இடத்திலே ஊறி இருக்குஞ் ஜலமானது ஆதி பரமேஸ்வரனுடைய சடாடவியில் விளங்குங் கௌரி, கங்காபவானி, கௌதமி, என்று சொல்லப்பட்ட நாமதேயங்களையுடைய கங்கையானவள் பாதாளவாகினியாய்ப் புறப்பட்டிருப்பதனாலே அத்தீர்த்தத்தில் மூழ்கும் பேர்களுக்கெல்லாம், ஆயிரம் அஸ்வமேதயாகஞ்செய்த பலன் கிடைக்கும். இதல்லாமலும் கங்கை, யமுனை, சரஸ்வதி, என்னு மிம்மூன்று நதியினும் தீர்த்தமாடினால், எவ்வளவு பலன் கொடுக்குமோ, அவ்வளவு பலனைக் கொடுக்கும். அன்றியும், நீ விழுந்தவிடத்திற் பெருகியிருக்கும் தீர்த்தம், அநும தீர்த்தமென்று உன் பேரால் இது முதல் பூலோகமுள்ளளவும் விளங்கிக்கொண்டு இருக்கும். அல்லாமலும், அந்த தீர்த்தக்கரையில் பிதுற்களைக்குறித்து திலதற்பண சிரார்த்தபிண்டங்கள் யாரொருவர் செய்கின்றார்களோ, அவர்களுடைய செயலை நம்மால் அளவிட்டுச் சொல்லப்படாது. மேலும், உன்னால் உண்டாயிருக்கும் [illegible]குண்டத்தில் சிரார்த்த பிண்டங்கள் செய்யாமல் மற்ற [illegible]களிற் செய்வாராயின், அன்னவர்களை அவர்களுடைய பிதுர்க்கள் கோபித்து விரும்பமாட்டார்கள். ஆதலால், அவ்வளவு மகிமையுடையதாய் விளங்குமத்தீர்த்தத்திலே முழுகாதபேர்களும், சிரார்த்தஞ் செய்யாதபேர்களும், மகா பாவிகளென்று சொல்லப்படுவார்கள். இதல்லாமலும், அத்தீர்த்தத்திற்றண்ணீர் முகந்து திலதற்பணஞ்செய்தால், அன்னவரைப் பயந்த மாதா பிதாக்களுக்கு நெய்யினால் தற்பணஞ்செய்ததற்குச் சமானமாய் ஒப்புக்கொண்டு சந்தோஷத்தோடும் வாழ்த்துவார்கள். இதன்றியும், உன்னாற் பிரதிஷ்டைசெய்து பூஜிக்கப்பட்ட சிவலிங்கமும், அவ்வாறே மகிமையோடும், விளங்கிக்கொண்டிருக்கும். அதினும் நம்மாற் பிரதிஷ்டை செய்யப்பட்ட இராமலிங்கத்துக்கு நீ செய்யப்போகின்ற மகா லிங்கமானது முதன்மையாய் விளங்கும். அப்படி விள

ங்குவது மன்றியில், அந்த மகா லிங்கத்துக்கு அபிஷேகம், நெய்வேதன முதலிய சோடச வுபசாரங்களும் முன்னதாய் நடந்துப் பின் இந்த கந்தமாதனத்திலே நாம் பிரதிஷ்டை செய்யுமுன்னம் கௌதமராலும், அகஸ்தியராலும், பூஜிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற அத்திர பூர்வ மகா தேவரென்னும் இரண்டு லிங்கத்திற்கும், அபிஷேக ஆராதனை முதலியதும் நடந்துப் பின் இந்த கந்தமாதனத்திலே நாம் பிரதிஷ்டை செய்யுமுன்னங் கௌதமராலும், அகஸ்தியராலும், பூஜிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற அத்திர பூர்வ மகா தேவரென்னும் இரண்டு லிங்கத்திற்கும், அபிஷேக ஆராதனை முதலியதும் நடந்து அதன் பிறகு நாம் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ ராமநாதனுக்குப் பூசை நடக்கும்படியாய் வரமளித்தோமாதலால், நீ கொண்டுவந்திருக்கும் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பூஜித்து வணங்கென்று மகா சாந்த குணசாலியாகிய இராமசந்திரமூர்த்தியார் சொல்ல, அதைக்கேட்ட அநுமாரானவர் மனமகிழ்ச்சியடைந்து ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியார் பிரதிஷ்டை செய்த இராமலிங்கத்துக்கு வடபாலாகத் தான் கொண்டுவந்த சிவலிங்கத்தில் ஒன்றைப் பிரதிஷ்டைசெய்து லோகோபகாரமாய்ப் பூஜித்து, மற்றொரு லிங்கத்தை தன்னுடைய ஆத்மாநுபவமாய்ப் பூஜித்து வணங்கி தோத்திரஞ் செய்தாராதலால், ஓ நைமிசாரண்யர்களே, முன்னர் அநுமாருடைய வாலினால் மூன்று சுற்றுச் சுற்றப்பட்டு இழுக்குங்காலையில், அந்த இராமலிங்கத்துக்கு மூன்று இரேகைபோல் படிந்து தோன்றி இருப்பதனால் யாவருங் கண்டறியலாமென்று சூதமாமுனிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர்கள் மெத்தவும் பிரமானந்தங்கொண்டு, சுவாமி, தேவரீர் இதுவரையிற் சொல்லிவந்த புண்ணிய கதைகளில் இவை மிகவும் மகிமைதங்கியிருப்பதை நோக்கின் தேவர்களுக்கு இம்சையைத் தந்தும், ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியினுடைய மனைவியும் வருந்தச்செய்ததால் அச்சண்டாளனாகிய ராவணனைக் கொன்ற தோஷம், ஸ்ரீ ராமநாதனுக்குத் தீரவேண்டியதாய் சிவலிங்கப்

பிரதிஷ்டைசெய்து பூஜித்தாரென்றுஞ் சொல்லியதால் அப்படி. அவனை வதஞ்செய்த நிமித்தம் ஸ்ரீ ராமசந்திரனுக்கு பிரம்மஹத்தி வருவதற்கு அவன் பிரம்மகுலனாக இருந்தாலன்றோ சம்பவிக்கும். ஆதலால், அவ்வரக்கனுடைய வரலாற்றையும், அவ்வாசனுடைய வரலாற்றையும், தசரதநயனாகிய இராமமூர்த்திக்கு பிரம்மஹத்தி அணுகிய விதத்தையுந் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றுகேட்கச் சூதமாமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

இராமசந்திரன் அர்ச்சனைச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

பிரமகத்திச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, சத்தியலோகத்தின்கண் வெண்டாமரை யாசனத்தில் வீற்றிருக்கும் பிரம்மதேவனுடைய புத்திரரான புலஸ்திய மகாரிஷியிடத்திலே, மகா புண்யகுண வேத நீதி ஒழுக்கத்தோடும் ஓர் புத்திரன் தோன்றி, விச்சிரவாவென்னும் பெயர் பூண்டு, சொர்க்க மத்ய பாதாளமென்னுந் திரிலோகங்களும் மதிப்பதற்குரிய பெருந்தபத்தைச் செய்துகொண்டிருக்கையில் பாதாளலோகத்தில் வாழப்பட்ட இராட்சதர்களில் மகா பலசாலியாயும், அதி வீரபராக்கிரமனாகியுமிருக்கும், சுமாலி என்பவன் பூலோகமுழுதும் சஞ்சாரஞ்செய்துகொண்டு திரிபவன் தனக்குள் தானே நமது குலத்தை அபிவிர்த்தியாகச் செய்யவேண்டுமென்பதற்கு மிகவும் ரூபலாவண்யமுள்ள தனது குமாரத்தியின் வயிற்றிற் பிள்ளைகள் பிறக்கவேண்டும். அவருக்கிசைந்த மணாளனாகவும், பலசாலியாகவுந் தபோபலன்களையுடையவனாகவும், இருப்பவனைத்தேடிப்போகவேண்டுமென்று எண்ணங்கொண்டவனாய் தன் புத்திரியை உள்ளங்கையிலேந்திக் கொண்டு, பூமியந்தர சுவர்க்கமெங்குந் தன்மகளுக்கேற்ற புரு

ஷன் கிட்டாமையால், காற்கொண்ட மேகமானது மின்ன
லோடுங்கூடித் திரிந்தாலெப்படியோ அப்படிபோல் திரிகிற
போது, ஓர் நாள் அளகாபுரிக்கிறைவனாகிய குபேரனானவன்
புட்பக விமானத்திலேறி ஆகாசமார்க்கமாய் விமானத்தை நட
த்திக்கொண்டு வருகிறபோது, அக்குபேரனுடைய ரூபலா
வண்ய சவுந்தரியத்தையும், விமானத்தையுங்கண்ட சுமாலி
என்பவன் ஆச்சரியமடைந்து, இவ்வகைப்பட்ட புருஷாளு
மிருக்கின்றார்களோ வென்று யோசித்தவனாகியும், இவனைப்
போல் நமது குமாரத்தியின் வயிற்றிற் பிள்ளைகள் பிறந்து
அப்பிள்ளைகளினால் இவ்விமானமும் பறிபட்டு இவனும் புற
முதுகிடும்படியான வலுவும், வரப்பிரசாதங்களும் பெற்ற
பிள்ளைகளாக இருக்கவேண்டுமென்றும், எண்ணங்கொண்ட
வனாய்த் தனது புத்திரியைப் பார்த்துச் சொல்லுவான்.
வாராய் என் குலக்கொழுந்தாகிய கைகேசி என்னுங் கண்
மணியே, உன்னுடைய ரூபலாவண்ய சவுந்தரியங்களை, மே
னகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலியபேர்கள்
கண்டால், நாணித் தலைகுனிந்தோடவு மிருப்பதோடும், மகா
லட்சுமியும் சந்தோஷப்படும்படியாகவும், தினது பூரணச் சந்
திரோதயம்போன்ற முகாரவிந்தத்தைக்கண்டு மணிவண்ண
நிறத்தையுடைய வண்டுகளானவை ஓடிவந்து தாமரை மல
ராக்குமென்று மதுக்களருந்தும்படிக் கீதம்பாடி மருண்
டோடிப்போகவும், இருப்பதனாலே உன்னை யாவர்கள் கண்ட
போதினும், மோகிப்பார்கள். அப்படி மோகிப்பவர்களுக்
கெல்லாம் கொடுப்பது அழகன்றேயென, இருப்பது யாது
காரணமெனில், உலகின்கண் ஒங்கும், உயர்வாகிய இரத்தி
னத்தை அதற்கேற்ற பசும்பொன்னோடுந் சேர்த்தணைத்தால்
பிரகாசத்தைக்கொடுக்கும். அப்படி யல்லாமல் மாற்று குறை
ந்த பொன்னிற்சேர்த்தால் அழகு படாதாதலால், யான்
உன்னை உனது சவுந்தரியத்துக்குத்தக்க புருஷனைக்கண்டு
அவனிடஞ் சேர்த்துவைக்கவேண்டுமென்று இதுவரையி
னும் வைத்திருந்தேன். அதுவுமல்லாமல், லோகத்திலே

பெண்களைப் பெற்றபேர்களுக்கு மனதானது எப்படி இரு
க்குமென்றால், பெண்ணுக்குக் கிடைக்கும் புருஷன் கல்வித்
திறத்திலும், புஜபல பராக்ரமத்திலும், ஐசுவரியத்திலும்,
ரூபத்திலும் மிகுந்தவனாகவிருந்து அப்புருஷனைக் கூடிவா
ழும் விபவத்தைக் காண்பதே பெற்றவர்களுக்குப் பெருமை
யாம். அப்படி வாய்க்காமல், நிஷேதமானவனைக்கூடி வாழ்ந்
தால், துன்பமே சம்பவிக்கும். இதல்லாமலும், இன்னப்பட்
டவனுக்கு ஓர் வஸ்துவை கொடுக்கவேண்டுமே யன்றித் இன்
னமல் எறியப்பட்டவனுக்குக் கொடுக்கப்படாது. ஆதலால்,
உனக்கேற்ற புருஷனை என் கண்ணினாற் காணுமளவும், உன்
னை வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றேன். மேலும்,
உன்னைக் கண்டபேர்களுக்கு தேவாமிர்தத்தைக் கண்டது
போல் இச்சையிருந்தும், அன்னவர் இச்சையற்றவர்போலி
ருப்பது யாது காரணமெனில், நான் உன்னைக் கரத்திலேந்
திக்கொண்டே திரிவதால், யாவருங்கண்டு அச்சமுறுகின்றார்
கள். ஆனதால், யான் உனக்கோர் உண்மை சொல்லுகின்
றேன். அதுயாதெனில், பிரமன் பேரனாகிய விச்சிரவா
வென்று சொல்லத்தக்கவன் மகா சவுந்தரியத்தையும், புஜபல
பராக்ரமத்தையும் உடையவனாய், அதோ அந்த வனத்திலே
தபஞ்செய்துகொண்டு இருப்பதால், நீ அவனிடத்திற்போய்
அவனை நட்புக்கொண்டு சேர்ந்திருப்பாயாகில், மகா பலசாலி
களாகிய பிள்ளைகளைப் பெறுவாய். அப்பிள்ளைகளாலே அண்
டபிரண்டங்களையெல்லாம், ஓர் குடையின் கீழாண்டு களிப்
பெய்தலாமென்று சொல்ல, அதைக்கேட்ட குமாரத்தியான
வள் மிகவுஞ் சந்தோஷத்துடனே விச்சிரவாவின்பேரிற்
றணியாக் காதலைக்கொண்டு, அன்று மாலைப்போதில் பிரயா
ணப்பட்டு ஓமகுண்டத்தக்கினி முன்பாக சூரிய பிம்பம்போற்
பிரகாசித்துக்கொண்டு நிஷ்டை செய்திருக்கும், விச்சிரவா
மாமுனியின் முன்பாக வந்து நின்றாள். அஃதெப்படி இருந்
ததெனில், ஆகாசத்தினிடையில் விளங்கப்பட்ட மின்போ
ன்ற தோற்றத்தையுடைய கைகேசியானவள், மகா சவுந்தரிய

முற்றவளாகவிருந்தும், நாணமுற்றவளாய் நின்றதைக்கண்ட விச்சிரவா, ஊழ்வினைப்பகுதியால் அன்னவளை ஏறிட்டுப் பார்க்கும்போது, அதையுணர்ந்த கைகேசியானவள், புன்னகையோடுந் தனது காற் பெருவிரலினாலே பூமியைக்கீறிக்கொண்டே நின்றாள். அவ்வகை நிற்பவளைக்கண்ட விச்சிரவாமாமுனிவர் கூறுவார். வாராய், அதிரூபலாவண்யமுள்ள சவுந்தரியே, நீ யார், உன் தகப்பன் பெயர் யாது, நீ இங்கு தனித்து வருவதற்குக் காரணமென்ன, சொல்லுவாயென்று கேட்க, அப்போது கைகேசியும், அவருடைய பாதகமலங்களிற் பணிந்து நமஸ்கரித்தெழுந்து, கைகளைக்கட்டிக்கொண்டு, சுவாமி, அடியாள் பாதாள லோகத்திலே வாழப்பட்ட சுமாலியினுடைய மகள். என் பெயர் கைகேசி என்று சொல்லுவார்கள். ஆதலால், யான் எனது தந்தையினது உத்தரவின்படி, புத்திர பாக்கியம் வேண்டித் தேவரீரை நாடி வந்தபடியால், தேவரீர் கிருபை செய்து ஆட்கொள்ள வேண்டுமென்று சொல்ல, அதைக்கேட்ட விச்சிரவா மாமுனிவர் ஓர் மாத்திரைப்போது வரையிற் சமாதியிலிருந்து பூர்வகன்மானுபவ லோகாருடப் பிரவிர்த்திகளை யறிந்துகொண்டவராய், கைகேசியை நோக்கி, ஓ பெண்பாவாய், நீ இப்போது சொன்ன காரியங்கள் சரியே, ஆதலால் நீயும், நல்ல குழந்தைகளைப்பெற்றுச் சந்தோஷத்தை யடையவேண்டியிருப்பதால், இப்போது நீ வந்தவேளை சரியாகவில்லை. ஏனெனில், சூரியப்பிரகாசமடங்கி, அச்சூரியன் மேற்றிசையில் மறைந்தாலும், நாம் நிஷ்டை தெளிந்து விழித்துப் பார்த்தாலும், அக்கினி ஹோத்திரந்தொடங்கி முடிக்கும்வேளை யாதலாலும், அவ்வேளையிலுன்னைக் கண்டதனாலும், இப்படி நான்குவிதமாய் உன் வயிற்றிற் பிள்ளைகள் பிறப்பார்கள். அப்படி ஜனிப்பதிலும், அவர்கள் இராட்சதாளாய் கயவாளிகள் சேற்கையாய் துற்புத்தியுடையவர்களாய்ப் பிறப்பார்கள். அது ஏதினாலென்னில், லோகத்திலே எந்த உயிர்களுக்கும் கருத்தரிக்கின்ற கோப்பலனும் இடம் வலஞ் சேர்ந்த பலனுங் கண்டு

கொண்டு கணித்தபலன் எப்படியோ அப்படியே பிள்ளைகள் பிறக்குமாதலால் இப்பொது நீ நம்மிடத்திற்குவந்த நோத்தின் பலன் மாலைப்போதான படியினாலே இராட்சதாளாகப்பிறந்தும் நாம் உண்மையான ஞானநிஷ்டையைவிடுத்து மாயப்பிரபஞ்சத்தைநோக்கி விழித்தபடியினாலே அவர்கள் மாயையடைந்து துர்நடத்தைக்குரியவர்களாகவிருப்பர், அதன்றியும் நாம் அக்கினிஹோத்திரந்தொடங்கிமுடிக்கும்வேளையாதலால் வேதசாஸ்திரஞானப்பயிற்சியுடையவர்களாகவும் இருப்பார்கள், பிறகு பெண்பிள்ளையாகிய உன்னைக்கண்டபலன் அவர்களெல்லோரும் பெண்ணினால் ஜீரணிக்கத் தக்கவர்களாகவும் உன்வயிற்றிற் பிறப்பார்களென்று சொல்ல, அதைக்கேட்ட கைகேசியானவள் கூறுவாள். சுவாமி, அடியாள் தேவரீருக்குப் பெறுகிறபிள்ளைகள், இராட்சதர்களாகவுந் துன்மார்க்கர்களாகவுமிருந்து, அழிந்துபோவது நலமல்லவே, அவ்வாறில்லாமல், சற்புத்திரராகவும், தேவர் முதலிய யாவரும் வணங்கத்தக்கவர்களாகவும், புஜபல பராக்கிரமசாலிகளாகவும் பிறக்கும்படியாய்க் கட்டளையிடவேண்டுமென்று வணங்க, அதற்கு விச்சிரவா, ஓ பெண்கள் நாயகமே, யாம் என் செய்வோம், நீ என்னிடம் நோக்கி வந்தவேளையினது பலன் அவ்வணமிருப்பதால், நீ பெறுகிற பிள்ளைகளில், இளையபிள்ளை நல்ல குணசாலியாகவும், வேத நீதி ஒழுக்கமுடையவனாகவும், நம்போல் பகவத்தியானமுடையவனாகவும், குபேர சம்பத்தையுடையவனாகவும், சிரஞ்சீவியாகவும் வாழ்ந்திருப்பான். மற்ற பிள்ளைகளெல்லாம், நாம் முன்சொன்னதின்படியே அப்படியேயிருக்குமென்று விச்சிரவா சொல்ல, அவ்வாய்மையைக்கேட்டவுடனே கைகேசியுஞ் சந்தோஷப்பட்டவளாய், அம்முனிவரிடத்திற்சேர்ந்து, பணிவிடை செய்து மகிழ்வுற்றிருந்தாள். அப்படி இருக்கின்ற நாளையில், விச்சிரவா மாமுனிவருக்கிய வாழ்வுபோல், நான்கு பிள்ளைகளைப் பெற்றும், அப்பிள்ளைகள் வளர்ந்து சகல கலையினும் வல்லவர்களாய்த் தேர்ந்து, தபங்கள் செய்து, அநேகம் வரப்பிரசாதங்களைப்பெற்று,

இலங்கையிலிருந்து திக்குவிஜயஞ்செய்து, குபேரனைச்செயம்பண்ணி, புட்பகவிமானமுங் கைக்கொண்டு, சகல தேவர்களையுந் தமது கைவசப்படுத்திக்கொண்டு, எங்குந் தானாய் வியாபித்து ஒப்பொருவரில்லாமலிருக்கின்றபோது, முனிவர் சொற்படி இவர்கள் பெண்ணால் அழியவேண்டி காரணார்த்தமிருப்பதால், அப்பிள்ளைகளில் இராவணனானவன், ஸ்ரீ ராமசந்திரன் தேவியாகிய சீதாபிராட்டியைச் சிறை செய்த நிமித்தம், ஸ்ரீ ராமமூர்த்தியானவர் தமது தம்பியோடும், வானரப் படைகளைச் சேர்த்துக்கொண்டுபோய், எதிர்த்து யுத்தஞ்செய்து, அவனது புத்ரமித்ர களத்திராதிகளோடுங் கொன்றபடியினாலும், அந்த ராவணன் பிரம்மாவின் பேரனாகிய விச்சிரவாவுக்குப் பிள்ளையாதலாலும், அவனைக்கொன்ற தோஷம் ஸ்ரீ ராமசந்திரனுக்கு பிரம்மஹத்தி பிடித்துக்கொண்டு அது நிவாரணமாகும்படியாய், மகா ரிஷிகள் வாக்கியப்படியே கந்தமாதனத்திலே சீதை கையினாற் பாணிக்கப்பட்ட மிருத்திகையான மகா லிங்கத்திலே, ராமசந்திரன் பூஜித்து வணங்கினமையால், அவ்விலிங்கத்தில் ஸ்ரீ கயிலாசபதியாகிய பரமசிவன் பிரசன்னமாய் தரிசனங்கொடுத்து, இராமமூர்த்தியைப் பற்றியிருந்த பிரம்மஹத்தி தோஷத்தை நீங்கும்படியாகச்செய்ய, அதுபோல் பிரம்மஹத்தியானது தம்மைவிட்டு நீங்கி யோடுவதைக்கண்ட ராமமூர்த்தியானவர், இதை யாம் விட்டுவிட்டால், பூலோகத்திற்கண்டபேர்களை எல்லாம், பிடித்து வாதிக்குமெனக் கருதி, காள வயிரவனை உபாசனை செய்து வருவித்து, அவன் தனது கோதண்டத்தினால், பாதாளகெவியாய் ஓர் பிலத்வார முண்டுபண்ணி, அந்த பிலத்வாரத்திலே தன்னைப்பற்றிய இராவணனுடைய பிரம்மஹத்தியை காள வயிரவனாற் பிடித்தடக்கும்படி செய்து, அப்பிலத்வாரத்தைமூடி, அதற்குக் காவலாகவிருக்கும்படியாய் காள வயிரவனைத் தானே பிரதிஷ்டைசெய்து, அவ்விடத்தில் ஓர் தீர்த்தம் உண்டுபண்ணி, அத்தீர்த்தத்தில் தாம் ஸ்நானஞ்செய்து, அத்தீர்த்தத்திற்கு பிரம்மஹத்தி விமோசனமெ

ன்று நாமகரணமுங்கொடுத்து, அநேக வரப்பிரசாதங்களுங் கட்டளையிட்டு, ஸ்ரீ ராமநாதனுக்கு வடபாரிசத்திலே காள வயிரவனும், பிரம்மஹத்தி விமோசன தீர்த்தமும், அநேக தேஜசோடும் விளங்கிக்கொண்டிருக்கும்படிசெய்தவராய், ஸ்ரீ ராமநாதனுக்கு தெட்சண பாரிசத்திலே பருவதராஜ குமாரியான மலைவளர் காதலியையும், ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்து, சந்திர சூரியாள், அக்கினிதேவன் முதலாகிய பேர்களையும், இந்திராதி தேவர்கள், சப்த கன்னிகள், சப்த மாதர்கள், அஷ்ட லட்சுமிகள், சரஸ்வதி, கங்கை முதலிய பேர்களையும், விநாயகர், குமாரக்கடவுள், வீரபத்திரர், காளிகா தேவி முதலிய அஷ்ட துற்கைகள், நவவீரர்கள், சிவகணங்கள், விஷ்ணு கணங்கள், பரம பாகவதாள், பெரியோர்கள், ருஷீஸ்வராள் முதலாகிய பேர்களையெல்லாம், அக்கந்தமாதனச்சார்பில் வாசஞ்செய்துகொண்டு, ஸ்ரீ ராமநாதனைச் சூழ்ந்திருக்கும்படியாய் இராமசந்திர மூர்த்தியானவர் வர்க்கலித்துப் பின்னும், இராமநாதனுக்கு ஆலயமும், ஆடையாபரணங்களும், பூசைக்காக வேண்டிய ஸ்திதிமதிகளும், உதவி செய்தும், அநேக கிராம பூமிகளும், நவநிதிகளுங்கொடுத்து நித்யப்படி பூஜித்து வரும்படியாய் அநேகம் பிராம்மணரை வரவழைத்து, கந்தமாதனத்திலே பட்டணமுண்டாக்கி தெய்வலோகம்போல் விளங்கப்படுவதனாலே, அதற்கு தெய்வ நகரமென்றும் பெயர் கொடுத்து, அதில் பிரம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரனென்னும், நான்கு வருணத்தவரையுங் குடியேற்றிவைத்துப் பின்பு இராமநாதனை ஸ்ரீ ராமசந்திரன், இலட்சுமணன், சீதாதேவி முதலிய வானர வீரர்கள், தேவர்கள், முனிவர்கள், யாவருந் தோத்திரஞ்செய்து வாழ்ந்தாரெனச் சூதமாமுனிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர்கள், சுவாமி, தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம், அவர்களெவ்விதமாய்த் தோத்திரஞ் செய்தனரோ அதனை அடியோங்களுக்குச் சொல்லவேண்டுமென்றுகேட்கச் சூத முனிவர் கருணை கூர்ந்தவராய் சொல்லத்தொடங்கினார்.

பிரமகத்திச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

தோத்திரச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, தேவர்களாலும், மற்ற யாவர்களாலும் பண்ணுதற்கரிய சிறப் போங்கிய கந்தமாதன பருவதச்சார்பில், தசரததநயனாற் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ ராமலிங்கத்தை இராமசந்திர மூர்த்தியானவர் அந்தக்கரண சுத்தியோடும், தமதிருகரங்களையுஞ் சென்னிமேற் கூப்பி அஞ்சலியஸ்தராய் நின்று கூறுவார். யாதெனில், ஸ்ரீ கயிலாசபதியாகிய இராமலிங்கத்தை நோக்கி, இவ்வுலகமியாவையும் படைத்தளித் தழிக்கவல்ல தெய்வமே, மகா மாயையுடைய கர்த்தனே, சூலாயுதத்தைக் கையிற்றரித்தவனே, அடியார்களது துன்பத்தை யகற்றி, இன்பத்தைத் தரும் ஆரணனே, யாவுங்கடந்த முதலே, தேவ தேவனே, வேதத்தின் முடிவே, உலகின்கணுற்ற யோகிகளது உள்ளத் துணர்வே, எங்கும் வியாபகமாகிய பொருளே, சர்வலோக சரண்யனே, சுக சொரூபனே, உயிர்த்துணையே, சகலவல்லப சவுரிய பராக்ரம வீரசூர சொரூபமே, பாவ நாசனே, பிட்சை நாசனே, கால காலனே, கடந்த பேரானந்தப் பெருமையே, சராசரங்களுக்குள்ளே நாமரூபமற்ற பொருளே, போக்கு வரவற்ற பொருளே, மகா பெலம் பொருந்தியவனும், இலங்கைக் கதிபனுமிருக்கும், இராவணனுடைய பிரமஹத்தியைத் துலைத்த பிரமமே, காளகோடி விஷத்தையுண்ட கண்டனே, மனோன்மணிபாகனே, கங்கையைத் தரித்தவனே, ஆதிமத்தியாந்த ரகிதமாய் அழிவற்ற பொருளே, அழற்கண்ணனே, பினாகபாணியே, மன்மததகனா, அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூப சாட்சாத்கார சைதன்ய சுகசொரூப கோலாகலத்தாண்டவா, அரவாபரண கங்கணா, கயிலங்கிரி வாசா, ஸ்ரீ ராமநாத தயாநிதே யென்று, ஸ்ரீ ராமசந்திரர் தோத்திரம்பண்ணினார். பின்பு அவ்விராமசந்திரன், பின்னவனாகிய இலட்சுமணர், தனதிருகரங்களையுஞ் சென்னிமேற் கூப்பிக்கொண்டவனாய், இராமநாதனை நோக்கித் திரிபுராந்

தகா, பார்வதிபாகா, சம்போ, சங்கரா, அர்த்த சந்திர ஜடாதரா, சோமசூரியாக்கினி நேத்திரா, சோமசுந்தரா, மார்க்கண்டரக்ஷகா, காலபயங்கரா, அண்டபிண்ட நாயகா, அகிலலோக சுதந்தரா, ஏகசொரூபா, வரப்பிரசாதா, மனோன்மத்தா, சத்யவாசகா, என்போற் றுன்பசாகரத்தின்கண் பிறந்திறந் துழன்று திரியப்பட்டவர்களுக்கு அன்னவர் பிறவிநோயைத் தணிக்கும்படியாகிய மருந்தே, அன்பரை இரட்சிக்குங் கடவுளே, பூதகணத்தலைவா, சுடலையாடி, தொல்லுலகெல்லாம் படைத்த தோன்றலே, எளியேன் வினைப்போகத்தினால் எத்தனை பிறவி எடுத்தபோதினும், அத்தனை பிறவியினும், உனது திவ்யசரணாம்புயங்களை மறவாமலிருக்கும்படியாய் அடியேனுக் கன்பு தந்து இரட்சிக்கவேண்டும், இராமநாதப் பிரபுவே என்று இலட்சுமணப் பெருமாள் தோத்திரஞ்செய்தார். அதன்பின் சீதாதேவியம்மனானவள், தனது இரண்டு கரங்களையுஞ் சென்னிமேற் கூப்பிக்கொண்டவளாய் பர்வதராஜகுமாரி பாகத்தில் விளங்கும் அழகிய மணிமார்பனே, சடாடவியிற் கங்கையைத் தரித்திலகுஞ் சடாமகுடனே, ஒருபாகத்திற் ஸ்ரீமன் நாராயணனுடைய சொரூபந் தோன்றும்படியான தேவதேவ சொரூபனே, மோகனாங்கிதனே, கருணாலயநிதியே, இக்கடையாகிய உடற்கொண்டு திரிந்தலைந்து இறக்கும்படியான அச்சத்தை விளைவிக்கும் அரும்பொருளே, அன்பருக்கன்பனே, அநாதரக்ஷகனே, மாயாமயனே, ஜெகன் மோகனாவதார சிற்சொரூபமே, அடியாள் எத்தனை ஜென்மமெடுத்தாலும், இவ்வாறே ஸ்ரீ ராமசந்திரனுக்கு பாரியாய், அவர் ஏவற்பணிசெய்து, உனது பாதாம்புயங்களை என்றைக்கு மறவாமல், சனகாதியரும், மார்க்கண்டர் முதலிய பெரியோர்களும் பூஜித்து வணங்கத்தக்க பதாம்புய நிழலிலே நான் என்றைக்குங் காத்திருந்து, ஊழியஞ்செய்யும்படியாய் இரட்சிக்கவேண்டும். அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா, ஆதிமத்யாந்தரகிதா, ஸ்ரீ ராமநாத கருணாகரப் பிரவாக சம்புவே என்று பற்பல விதமாய்ச் சீதாலட்சுமி

தோத்திரஞ்செய்தாள். அதன்பின் அஞ்சனாதேவி புத்திரனாகிய அநுமானானவர், தமதிருகரங்களையுஞ் சிரத்தின்மேற் கூப்பி, இராமநாதனை நோக்கி தேடுதற்கரிய திரவியமே, தேவதேவனே, உலகநாதனே, அடியேன் செய்த பிழையெல்லாம் பொறுத்தாள வல்லவனே, என்றைக்கும் எளியேன் நினது எழிலோங்கும் பதாம்புயத்துக்கு ஏவல்செய்து பூஜிக்கும்படியாய் கிருபை செய்யவேண்டும். இறைவனே, இஃதன்றியும், இப்போது நான் உன்னுடைய சொரூபமாய் விளங்கும் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி யிடத்திலே ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறேனாதலால், எளியேன் அவ்வாறிருந்தும், நீ பிரம்மமயமாகவும், உன்னுடைய தேகரூப நாமம் ஸ்ரீ ராமனாகவும், எனக்குத் தோற்றப்படுகின்றமையால், என்னை இன்னமின்னஞ் ஜென்மசாகரத்துக்குள்ளாக்காமல் கிருபைசெய்து, உனது பாதாரவிந்தத்திற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று, உன்னை நம்பிப்பணியுமென்னை ஆட்கொள்ளுவாய், இராமநாதாவென்று தோத்திரஞ்செய்தார். அப்பால், வாலி குமாரனாகிய அங்கதன், அவ்வாறே இரண்டுகரங்களையுஞ் சென்னிமேற் கூப்பிக்கொண்டவனாய், ராமநாதனை நோக்கி, அண்டபிண்ட சராசரங்களும் நீயேயல்லது வேறு பொருளுண்டோ, ஆதியே எங்கும் நிறைந்த சோதியேயென்றுந் தோத்திரஞ்செய்தான். அப்பால் சாம்புவந்தனும், அவ்வாறே கரங்களைக்கூப்பிக் கடவுளைநோக்கிச் சகல இன்ப துன்பங்களையுந்தந்து அநுபவிக்கச்செய்யுங் கடவுள் நீ யல்லாது உன்னைவிட வேறு தெய்வமுளதோ, உனது நாமத்தைப் புகழ்ந்து பேசும் வல்லவருமுளரோவென்று பற்பலவாறாய்த் தோத்திரஞ்செய்தான். அதன் பின்பு நளனானவன், கடவுளை நோக்கி, மாயாப்பிரபஞ்ச மயக்கத்தினாலே அகங்காரங்கொண்டு, மகாவிஷ்ணுவும், பிரம்மதேவனும், தர்க்கந்தொடுத்து அநேகங்கோடிகாலம், பன்றி யுருவாகவும், அன்னபட்சி யுருவாகவும் அலைந்து தேடியுங்காணாத நினது பாதாரவிந்தத்தினாலே கிருபைசெய்து; எளியேனை ரட்சியுமையா, ஸ்ரீ ராம

நாதா, தயாநிதி, என்று தோத்திரஞ்செய்தான். அப்படியே நீலனென்பவன், இராமநாதனைப்பார்த்து, கடவுளே, கயிலாசபதியாகிய நீ, எனது ஆசை, அபிமானம், கோபம், ஆற்றாமை, இவையாவுமகற்றி, அடியேனை ஆட்கொள்ளவேண்டும், இராமநாதாவென்று வணங்கினான். அதுபோல் குமுதனென்பவன் கடவுளைப்பார்த்து, ஓ தேவதேவே, ஞானசொரூபனாகிய நின்னை, யாங்கள் கற்பனையினாலே, ரூபமேற்படுத்தியதேயன்றி, உன்னை யாவராலே அளவிடக்கூடும், அற்புதாவென்று வணங்கினான், அதன்பின் பனசனென்பவன், பன்னற்கரிய பரம்பரனைநோக்கி, சாக்ரம், சொற்பனம், சுழுத்தியென்னு மூன்றவத்தையுங்கடந்து, துரியந் துரியாதீதமென்னும் நிலையிலே இருக்கும் புண்ணியர் கண்களிக்கும் புநிதமே என்று வணங்கினான், அதன்பின் கவசனென்பவன், கண்ணுதலாகிய பரசிவத்தைநோக்கி கடவுளே நின்செயலறிந்துணரா மாந்தரெவரும் எக்காரியங்களையும்நான்செய்தேன் நான்செய்தேனென்னும் இறுமாப்பைக்கொண்டு துன்பப்படுகின்றனர். இவைகளை உய்த்துநோக்குமளவிற் சகலமும் நின் செயலேயன்றி வேறல்லவே, இராமநாதாவென்று வணங்கித் தோத்திரஞ்செய்தான். அதன்பின் பசுக்கண்ணனென்பவன், ஓ-கயிலாசபதியாகிய இராமநாதா, உனது பாதாரவிந்த இச்சையிலே கட்டுண்டபேர்களுக்கு உன்னையன்றிவேறுகதியுளதோ, உத்தமனே என்று தோத்திரஞ்செய்தான். அப்பாற் கயனென்பவன், கடவுளைப்பார்த்து ஓ-தேவதேவே, உலகின்கணுள்ள மானவர்களது பிறவியென்னும் பெரும்பிணிக்கு அமிர்தசஞ்சீவியைப்போன்ற அற்புதனே, சந்திரஜடாதரா, பார்வதிசமேதா, அடியர்கட்கெளியோய், அமலாவென்று வணங்கித் தோத்திரஞ்செய்தான். அப்பாற் சப்பனென்பவன், சயம்புவைநோக்கி, ஓ-தாணுவே, நின்னைக்காண்பதற்கு அரியவஸ்துவென்றும் கைதவமுதலிய யாவுமொழித்துக் கருணையங்கடவுளாகிய நின்னைக்கருதி, தம்முள்தாமே கண்டபேர்களினது நட்பேயென்று கைகுவித்துவணங்கினான். பின்புகந்தமாதனனும் கடவுளை

நோக்கி, ஓ-சிவகணநாதனே, திரிநேத்திரதாரியே, கௌரிபாகா, எளியேனுடைய பாபங்களையெல்லாம் நீ தொலைத்து இரட்சிக்கவேண்டும் ஐயனேயென்றுவணங்கித் தோத்திரஞ்செய்தான். அதன்பின்பு சுக்கிரீவனும், இராமநாதனைப்பார்த்து அஞ்சலியஸ்தனாய், பிறப்பிறப்புக்குரிய இப்பிரபஞ்சத்தில் பெண்சாதியென்றும், பிள்ளைகளென்றும், மாடு, உடைமைசம்பத்தென்றும், தனதான்யசம்பத்தென்றும், ஆசைகொண்டு, அண்டகோடிகளிலே அநேகஜென்மங்களையெடுத்து, ஐம்பொறியென்னும்பாம்பின்றற் கடியுண்டு, விஷந்தலைமண்டைகொண்டு, உலகில்வரும் பிணிஎன்னு முதலைவாயிற்சிக்கி நைந்து, தாபசோபமுற்று, வாடிமயங்கியமடமையேன், இனி அவைகளுக்காளாகாமல், இரட்சித்தருளவேண்டுமென்று வணங்கித்தோத்திரஞ்செய்தான். அப்பால் விபீஷணனானவன், சந்திரஜடாதரமூர்த்தியாகிய ஸ்ரீ ராமநாதனைப்பார்த்து, அக்கினி சொரூபமாய் விளக்குங் காமாதிகளெல்லாம் இண்டஞ்செடிகளாகவும், புன்மையான புத்திகளே கண்டக விருட்சங்களாகவும், கன்மாதுபவ வினைகளே ஜலமாயும், விளக்கும் பிரபஞ்சமாகிய காட்டிலே அடியேனுக்கு யாதொரு தஞ்சமின்றி ஒருவனாய் கரடி புலி சிங்கமென்னுங் கணங்களாகிய நோய்கள் வளைத்துக்கொண்டு வருத்துகின்ற எனக்கு உமதுபாதநீழலைத் தாவேண்டுந் தயாளுவே என்று வணங்கித் தோத்திரஞ்செய்தான். பின்பு வானரவீரர்கள்யாவரும் அப்படியே கடவுளைப்பார்த்து, ஸ்ரீராமநாதா, உலகின்கண்வரும் அளவிறந்த யோனிபேதங்களிற் பிறந்துபிறந்துழன்று கும்பிபாகமுதலிய நரகங்களுக்காளாய்ப், பின்னும் வினைஎன்னும் பிரசண்டவாயுவினாலே வந்துபிறந்து, அநேகதுன்பங்களையடைந்துவிட்டோம், இனியாகிலும்யாங்கள் அப்படிஜனியாமல் உமதுபதாம்புயத்தை நாடிப்பணிந்த எங்களுக்கு அருள்செய்குவாய், இராமநாதாவென்று வணங்கித்தோத்திரஞ்செய்தார்கள் பின்பு பிரம்மதேவனும் அவ்வாறேகடவுளைநோக்கி, அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா, அமலா, ஸ்ரீராமநாதா, இரட்சி

யுமென்றுவணங்கித் தோத்திரஞ்செய்தான், பின்பு தேவராஜன்முதலிய அஷ்டவசுக்களும், திக்குப்பாலகர்களும், சாரணராதி கெருடகாந்தருவர்களும், தனித்தனியேவணங்கித் தோத்திரஞ்செய்தார்கள், பின்பு சந்திரசூரியாள்முதலிய நவக்ரகங்களும், அஸ்வனிதேவதைகளும், அப்படியே தோத்திரஞ்செய்துவணங்கினார்கள். அதன்பின்பு அகஸ்தியமாமுனிவர், நிமலனாகிய இராமநாதனைப்பார்த்து, யானெனதென்னும் அகந்தையற்று நிற்கத்தடுத்தாட்கொண்டபடி என்றைக்கும் என்னைஇரட்சிக்கவேண்டுமென்று வணங்கித்தோத்திரஞ்செய்தார். பின்பு சுதிக்ஷ்ண மகாரிஷியானவர் கடவுளைப்பார்த்து, கயிலாசபதி ஆடையாபரண பூஷணாதிகளும், இராஜபோகமும், அநித்யமெனவெறுத்து நித்யமாகிய துறவடைந்து அதினின்றும் பிறழாதநெறி அடியேனுக்குத்தந்து ரட்சிக்கவேண்டுமென்று வணங்கித் தோத்திரஞ்செய்தார். அதன்பின்புவிசுவாமித்திரர் ஸ்ரீராமநாதனைநோக்கி, வேதசாஸ்திர புராணங்களியாவும் உமதுபாதப்புணையில் பக்திசெலுத்தும் அன்பர்களுக்கு அணுகுமென்று மேலோர்புகலுவதால் அடியேனுக்கும் அந்நிலையை அருள்செய்யவேண்டும் ஜகதீசாவென்றுவணங்கித் தோத்திரஞ்செய்தார். அதன்பின் காளவமகாரிஷியும் அவ்வாறேகடவுளைநோக்கி, கௌரிமனோஹரா, மறைவிதியிற்புகலுந் தானதருமநோன்புவிரதம், யாகாதினக்யங்கள், கங்கை யமுனைமுதலியதீர்த்தபலன்கள் உன்னை வணங்காதபேர்களுக்கு நல்குமோவென்றுவணங்கித் தோத்திரஞ்செய்தார். அப்பால் வசிஷ்டமகாரிஷியானவர், சந்திரஜடாதரமூர்த்தியாகிய ஸ்ரீராமநாதனைப்பார்த்து, அனந்தகோடிபாபங்கள் செய்திருந்தபோதினும் உனது சந்நிதானத்தைக்கண்டால் சூரியனைக்கண்டபனிபோல் ஓடிப்போமன்றோ உமாமகேசாவென்று வணங்கித்தோத்திரஞ்செய்தார். பின்பு அத்திரிமகாரிஷியானவர் கந்தர்ப்பதகனனைநோக்கி, ஸ்ரீராமநாதனுடைய பாதகமலங்களில் ஓர் விசைவணங்கித் தோத்திரஞ்செய்தபேர்கள் மறுபடியும்பூலோகத்தில் தாயினது கருப்பையுட்புக்கு ஜனித்து மலமூத்திரமாகிய கும்

விபாகநரகத்தை ஒருக்காலும் அநுபவிக்கமாட்டார்களன்றோவென்றுவணங்கித் தோத்திரஞ்செய்தார். அதன்பின்பு அக்குருரிஷியென்பவர் இராமலிங்கத்தைநோக்கி, சுவாமி, உமதுபாதாரவிந்தத்திலே வணங்கித்தெரிசித்து எண்ணமுற்றபேர்கள் அவர்களுடைய கோத்திரசூத்திரங்களையும் ஆத்மஜனங்களையும் நினைந்துவணங்கினாலும் அவர்களுடைய பாதகங்களெல்லாம் உனதுகடாக்ஷவீக்ஷண்யத்தினால் அகப்பட்டு முத்திபெறுவரன்றோவென்று வணங்கித்தோத்திரஞ்செய்தார், அதன்பின்பு சதானந்தர்கடவுளைநோக்கி, சுவாமி, வேதசாஸ்திரங்களைச்சிரவணமுற்று அதனால் மோக்ஷவீட்டை விரும்புவோர்கள் உனதுபாதகமலங்களைக் கண்டுபணிந்தால் அவ்வீட்டைப்பெறுவாரன்றோவென வணங்கித்தோத்திரஞ்செய்தார், அதன்பின்கௌதமர் ஸ்ரீராமநாதனைப்பார்த்து, சந்திரஜடாதரா, உலகத்தில் உனது பதாம்புயத்தைக்கண்டு தரிசித்த பேர்களினுடைய முகாரவிந்தத்தைக் கண்டவர்களுக்கும் பாபங்கள் நீங்குமாயின் உன்மகிமையை என்சொல்லப்போகின்றோம் புண்ணியனேஎன்று வணங்கித்தோத்திரஞ்செய்தார், அதன்பின் பிருகுமாமுனிவர் கடவுளைப்பார்த்து, உன்னையாரொருவர் தியானித்து வணங்குகின்றார்களோ அவர்களுடைய பாபங்களெல்லாம்நீங்கி மோட்சத்தை மேன்மேலும் பெறுவார்களென்றால் உனதுமகிமையையாவரால் அளவிடக்கூடும், அரவாபரணனேயென்றுவணங்கித்தோத்திரஞ்செய்தார். அப்பால் குச்சக மகாரிஷி என்பவர் குன்றவில்லியைநோக்கி, காளகண்டத்தையுடைய ஸ்ரீராமநாதனது பாதசேவையானது நரகவேதனையைப் போக்கி இன்பமாகிய மோட்ச சாம்பிராச்சியத்தைக் கொடுப்பதால், அச்சேவைசெய்யாத ஜீவர்களுமுண்டோவென்று வணங்கித் தோத்திரஞ்செய்தார். அதன்பின்பு, காசிப மகாரிஷியானவர், காலகாலனைப்பார்த்து, சூரியப்பிரகாசம்போன்ற ஸ்ரீ ராமநாதனை வணங்கித் தோத்திரஞ் செய்யப்பட்ட பேர்களுக்கு தானம்தருமம் விரதம்நோன்பு தலயாத்திரை, தீர்த்தயாத்திரை, எக்யாதி கிர்த்தியங்கள் வேண்டுமோவெனப்

புகழ்ந்து, சென்னி தாழ்த்தித் தோத்திரஞ்செய்தார். ஆங்கிரசரென்னும் ரிஷியானவர் ஆனந்தக்கூத்தனை நோக்கி, ஏகசொரூபனாகிய ஸ்ரீ ராமநாதா, என்னுடைய தேகம் விட்டுவிடும்போது, பார்வதி சமேதராய் விருஷபவாகனத்தின்மீதெழுந்தருளி, மோகாந்த மயக்கத்தைப்போக்கி, சுஞ்ஞானத்தைத்தரும் உமது பாதாரவிந்தத்தைக்கொடுத்து, இரட்சிக்கவேண்டுமென்று வணங்கித் தோத்திரஞ்செய்தார், அப்பால் காந்தருவர் முதலிய சர்வத்திராளும், இளம்பிறையைச் சடாபாரத்தில் தரித்திராநின்ற இராமநாதனே, எங்களுடைய பந்தபாசங்களை யெல்லாம் நீக்கி, தேவரீருடைய பாதகமலப் பணி செய்யும்படியாய் இரட்சித்தாளவேண்டும், ஐயனே என்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அப்பால், கின்னரர் முதலிய யாவரும் கடவுளைப்பார்த்து, பொன்போற் பிரகாசிக்கப்பட்ட திருமேனியையுடைய ஸ்ரீ ராமநாதனே, உன்னுடைய பாதாரவிந்தத்தை வணங்கப்பட்ட எங்களுக்கு வேண்டிய சாம்பிராச்சிய விபவமென்னென்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அதன்பிறகு இயக்கர் முதலிய பேர்களும், இமாசலன் புத்திரி நாயகனாகிய ஸ்ரீ ராமநாதனைநோக்கி, ஐம்புலன்களினாலுண்டாகின்ற சகல துன்பங்களையும் போக்கி மோட்சத்தை யருளுந்தெய்வம் நின்னையன்றி யுண்டோவென்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அப்பால், பதஞ்சலி வியாக்ர பாதரென்னும் ரிஷிகள், கடவுளை நோக்கி, வீரசூர பராக்ரமசாலியான இராமசந்திர மூர்த்தியால் பூசிக்கப்பட்ட சிற்பரானந்த சொரூபமே, ஸ்ரீ ராமநாதாவென்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அதன் பின் வித்யாதரரியாவரும் கடவுளைப்பார்த்து, அளவில்லாத யோனிகடோறும், பிறந்து பிறந்திறக்கும் இச்சையைப்போக்கி, இரட்சிக்கவேண்டுமென்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அப்பால் கிம்புருடாதியோர்கள் கடவுளைப்பார்த்து, பார்வதி சமேதா, விருஷபத்துவசா, எங்கும் நிறைந்த பரம்பொருளே, எளியோங்களையும் இரட்சித் தாட்கொள்ளவேண்டுமென்று வணா

ங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அப்பால், வசுதேவதைகள் ஸ்ரீ ராமநாதனைப்பார்த்து, சிவகணங்களாற் பூசிக்கப்பட்ட கர்த்தனே, கங்கையைத்தரித்த கடவுளே என்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அதன் பின்பு, விஸ்வ தேவதைகள் கடவுளை நோக்கி, போத சொரூபமாய் நிஷ்டை புரிந்திடும், மகா யோகிகளுக்கு ஆத்ம சொரூபமாய் தெரிசனந்தந்து ஆட்கொள்ளும், அற்புதனே என்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அதன் பிறகு, மிருத்துவ தேவதைகள், பரமசிவத்தைநோக்கி, சகல தத்வ சொரூபமாயும், பிரம்மானந்தப் பேரொளியாயும், மேலான சொரூபமாயும் விளங்கப்பட்ட இராமநாதக் கடவுளே என்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அப்பால், சாத்திய தேவதைகளியாவருங் கடவுளைப்பார்த்து, அஞ்சலியஸ்தராய் மூதின்மையான பொருளாகவும், மோகத்தைப்போக்கு முழு முதலாகவும், சகல காரண சொரூபமாய் விளங்குந் தேவதேவனே என்று வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். அதன் பின்பு, சகல தேவர்களோடும், ருஷீஸ்வரர்கள், முநீஸ்வரர்கள், தபோதனர்கள், பெரியோர்க ளியாவரும், அவரவர்கள் தனித்தனியே அநேக வேத மந்திர சுருதிவாக்யப் பிரமாணங்களினாலே தோத்திரஞ்செய்து வணங்கும் ஓசையானது, சப்த சாகரங்களும் ஒன்றாய்க்கூடி ஒலிப்பதுபோல எட்டுத் திக்குகளினும் மண்டி, ஆகாசவீதியெங்கும் நிறைந்து, எள்ளிடமுதலாய்ப் பரவி, ஸ்ரீ ராமநாதனுடைய சித்தத்தினும் பூரணமாய் நிறைந்ததனாலே மகா இன்பம் பெருகி ஆனந்தத்தையடைந்து, அங்குள்ள சகலரும் காணும்படியாய் பார்வதி சமேதராய், விருஷபவாகனத்தின்மீதெழுந்தருளி தரிசனந்தந்தார். அப்படி தரிசனந்தந்த ஸ்ரீ ராமநாதனுடைய சடாடவியிலே விளங்குங் கங்கா பவானியைக்கண்டு, சிலர் வணங்கினார்கள். சிலர் அச்சடையில் விளங்கும் மூன்றாம்பிறைச் சந்திரனைக் கண்டு வணங்கினார்கள். சிலர் நேத்திரத்தைக்கண்டு வணங்கினார்கள். சிலர் காளகண்டத்தைக்கண்டு வணங்கினார்கள். சிலர்

உமா மயேசனது காலில் வயங்கும் வீரகண்டாமணியைக் கண்டு வணங்கினார்கள். சிலர் வாமபாகத்தில், மரகதம்போ விலங்கும் பார்வதா தேவியைக்கண்டு பணிந்தார்கள். இவ்வாறு ஸ்ரீ கயிலாசபதியாகிய ஸ்ரீ ராமநாதனைக் கண்டபேர்களுடைய பாபங்களும், துன்பங்களும் தொலைந்து, புண்ணியவான்களாகி அநேக தோத்திரங்கள்செய்து பிரம்மானந்த பரிதராய் நெக்குநெக்குருகி வாய்குளற மயிர்க்குச்செறிந்து ஜெயஜெயவென்று வாழ்த்திக்கூத்தாடினார்கள். அப்போது, ஸ்ரீராமநாதன் மனமகிழ்ந்தவராய் தேவர்முதலிய யாவரையும் நோக்கிச்சொல்லுவார், வாருங்கள் ஸ்ரீராமசந்திரனாதி தேவர்களே, நீங்கள்யாவரும்இச்சேதுமத்தியிலோங்குங்கந்தமாதனத்திலே நம்மை மிகுபக்தி விநயத்தோடும் பூஜித்துவணங்கித் தோத்திரஞ்செய்து புகழ்ந்துகொண்டாடினதாலே, அவரவர் மனதிலே சிந்தித்த காரியங்களெல்லாங் கைகூடும்படியாய் வரந்தந்தோம். இப்போது நீங்களென்னைப் பூஜித்தவண்ணம் இனியாவர் பூஜித்து வணங்கியபோதிலும், அவர்களுக்கும் இஷ்டகாமியங்களைத் தருவதுமல்லாமல், மோக்ஷத்தையுமருளுவோம். இதல்லாமலும், இக்கந்தமாதனத்தில் நம்மை தெரிசித்தபேர்களுக்கும், பூஜித்து வணங்கியபேர்களுக்கும், ஆயிரந்தடவை வேதாகமங்களைப் பாராயணஞ்செய்த பலனும், மகா மகிமை பொருந்திய தநுக்கோடியிலே ஆயிரந்தடவைத் தீர்த்தமாடிய பலனும், காசிபிரயாகை முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களிலே கற்பகோடி காலம் வரையிற் பூசித்து வாசஞ்செய்துகொண்டிருந்த பலனும், ஆயிரம் அஸ்வமேத யாகம் பண்ணின பலனும், இக்கந்தமாதனச் சார்பிலே உண்டாகிய தீர்த்தங்களெல்லாமாடிய பலனும், நம்மை ஒரு நாள் பூஜித்து வணங்கியபேர்களுக்குச் சித்தமாய் கிடைக்கும். இது சத்தியமாய்ச் சொல்லுகிறோமென்று திருவாய் மலர்ந்தருளிப் பின்பு அக்கோலத்தோடும், இராமலிங்கத்திலே மறைந்துவிட்டார். இவ்விதம் ஸ்ரீ கயிலாசபதி மறைந்தவுடனே, ஸ்ரீ ராமசந்திரன், சீதாதேவி, இலட்சுமணன் முத

ளிய வானர வீரர்களும், வானராதிகளும், ருஷீஸ்வரார், முநீஸ்வரார், தபோதனர் யாவரும், ஸ்ரீ ராமநாதனுக்கு அபிஷேகமுதலிய ஆராதனைகளும் நடப்பித்து, சதாகாலமுந் தெரிசனஞ் செய்துகொண்டிருந்தார்கள். பின்பு, ஸ்ரீ ராமசந்திரன் முதலிய யாவரும், அயோத்தியாபுரிக்குப்போக எண்ணங்கொண்டவர்களாய், யாவரும் ஸ்ரீ ராமநாதனை மூன்று விசை பிரதட்சணஞ்செய்து நமஸ்கரித்து, கரங்களைச்சிரத்தின்மேற் கூப்பி அநேக தோத்திரங்கள்செய்து விடைபெற்றுக்கொண்டவர்களாய்ப் பின்னும், பசுவைவிட்டகலாத கன்றுகளைப் போலவும், தாயைவிட்டகலாத சேய்களைப்போலவும், நாயகனைவிட்டகலாக் கற்புடைய நங்கையைப்போலவும், குருவைவிட்டகலாத சீடரைப்போலவும், ஸ்ரீ ராமநாதனுடைய சந்நிதானத்தை விட்டுப் பிரியமாட்டாமல், இராமமூர்த்தி முதலிய சகலத்திராளும், நின்று நின்று திகைத்து மறுகி மனங்குழம்பிக்கொண்டு, இக்கந்தமாதனத்தையுஞ் சேது தநுக்கோடியையும், இராமநாதனையும், எவ்வகைவிட்டுப் பிரிவோமென்றும் யோசித்தவர்களாய், மறுபடியும், இராமமூர்த்தியானவர் தன் மனதில் இப்போது நாம் இவ்விருந்தும் பிரயாணப்பட்டு அயோத்தியா பட்டணத்திற்குப் போகாமலிருப்போமாயின் குகனானவன் நாம் வருகிற வழியைப் பார்த்துக்கொண்டிருக்கிறவனாதலால், வீணே கங்கையில் வீழ்ந்து உயிரைப் போக்கிக்கொள்ளுவான், பரதனும், அக்கினியில் வீழ்ந்திறந்துபோவான். நமது தாய்மார்களும் பிராணனை விட்டுவிடுவார்களே, பின்பென் செய்வோமென்று எண்ணமுற்றவராய், எப்போதும் இராமநாதன் நமது இதயத்தினின்றும் நீங்க மாட்டாரென்று திடம்பண்ணிக் கொண்டவராய் அங்குள்ள மகா ரிஷிகளையும், பெரியோர்களையும் பணிந்து, அவரவர்கள் ஆசிரமங்களுக் கேகும்படியாய் விடை கொடுத்துத் தாமும் அன்னவர்களிடத்தில் விடை பெற்று, பட்டணத்துக் கெழுந்தருளினார். அதன் பின்பு, அங்கனமிருந்த சில பெரியோர்களும், ருஷீஸ்வரார்களும்,

தபோதனர்களும், அக்கந்தமாதனத்திலே சேது தநுக்கோடியிலே வாசஞ்செய்துகொண்டு, ஸ்ரீ ராமநாதனை இடைவிடாமல் தெரிசித்துக்கொண்டே யிருந்தார்கள். கேட்பீர்களோ மகா ரிஷிகளே, இவ்வண்ணம் ஸ்ரீ ராமநாதனுடைய மகிமைகள், கோடாநுகோடி அற்புதங்களாக விருப்பதோடும், அந்த சேது தநுக்கோடியிலே ஸ்நானஞ் செய்யவும், கந்தமாதனச்சார்பிலே வாசம் பண்ணவும், ஸ்ரீ ராமநாதனை தெரிசிக்கவும், தவஞ்செய்து ஜனிக்கவேண்டும். அப்படியல்லாது முன் ஜென்மத்திற் கோடாநுகோடி புண்ணியங்கள் செய்து, விட்டகுறையால் அதனைக் கிட்டவேண்டும். இதல்லாமலும், அத்தலத்திலே எப்போதும், தேவர் முதலிய பெரியோர்களும், சித்தர்களும், முநீஸ்வரர்களும், யோகீஸ்வரர்களும், இராஜராஜாக்களும், இரதகஜதுரக பதாதிகளோடும் வந்து தான தருமங்களைச் செய்தும், யாகாதி கிர்த்தியங்களும், எக்கியங்களும் செய்து வருதலால், அதன் மகிமையை என்னவென்று சொல்லப்போகின்றோம், என்று சூதமகாமுனிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யத்து ரிஷிகள் யாவரும் சந்தோஷமடைந்து, சுவாமி, தேவரீருடைய அநுக்கிரகத்தால், இதுவரையினும் தீர்த்த மகிமைகளையும், மூர்த்தி மகிமைகளையும் சொல்லக் கேட்டோம். இனி அத்தல மகிமையும் சொல்லவேண்டுமென்று பணிந்த நைமிசாரண்யர்மேற் கருணைகூர்ந்து, இராமீச்சுரதல மகிமையைச் சொல்லத்தொடங்கினார்.

தோத்திரச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

சங்கர பாண்டியச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே, இவ்வுலகின்கண் ஓங்கும், மதுராபுரி என்னும் பட்டணத்தில் சந்திரகுலத்தில் உற்பவித்த பாண்டியர்களுள், சங்கர

பாண்டியனென்றும் ராஜன், மநு நீதியின்படி குடிகளிடத்தில் ஆறிலோர்கடமை ஏற்று, அசையாமணி கட்டி, அபயமென்கின்ற சத்தமில்லாமல், இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டு வருபவன், தனது பராக்ரமத்தால், அநேகம் ராஜாக்களை வெற்றிகொண்டு, கடல் சூழ்ந்த உலகமுழுதும் வேறொரு மன்னனுக்கில்லாது, தானே ஏக சக்ராதிபதியாயிருந்து அரசாள்வதோடும், நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதினென் புராணத்தையும், ஆய்ந்துணர்ந்த தேவப்பிராம்மணர், பெரியோர்கள் பேரிலும், விசுவாசமாய் அநேகம் யாகாதி கிர்த்தியங்களைச்செய்து முடித்து, மகா சாந்தபதத்தைப்பொருந்தி, பிரம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரரென்னும் நான்கு வருணத்தோர்க்கும், ஆதரவு செய்பத்தக்கவனாய் மநு நீதியினின்றும் பிறழாமல், அரிபூசை, சிவபூசை, குருபூசை, மறவாமலும், தேவாலயம், பிரம்மாலயம், விஷ்ணுவாலய முதலானதுகளுக்கும், பூசை நைவேதனங்களும் தப்பாமல் நடத்தியும், அன்பு, பொறுமை, அறிவு, அடக்கம், தயை, தாட்சண்யம், கொடை, மேன்மை முதலிய யாவுந் தப்பாமல், தன்னுயிர்போல் மன்னுயிர்களைக் காத்து வருகிறபோது, அம்மதுராபுரியைச் சூழ்ந்தோங்கும் வனங்களில், துஷ்ட மிருகங்களடர்ந்து நெருங்கி, குடிகளிடும் பயிர்களை எல்லாம், நாசப்படுத்துவதைக் குடிகளாலறிந்து அம்மிருகங்களை அதப்படுத்திக் குடிகளைக் காக்கவேண்டுமென்னுங் கருணையுற்றவனாய், சில சேனா சயின்யங்களோடும், இரதாரூடனாய் வனத்தை நோக்கி, வேட்டமாடச் செல்கையில், அவ்வனமானது எப்படி இருந்ததென்றால், மா, இலுப்பை, ஆல், அரசு, தேக்கு, ஆச்சா, வேங்கை, பலா மரங்கள் முதலிய விருக்ஷங்கள் எங்குமடர்ந்திருப்பதோடும், அடிக்கடித் தாமரை ஓடைகளும், செங்கழுநீர் ஓடைகளும், சண்பக விருட்சங்களும், கடம்ப விருட்சங்களும், ஆகாயத்தையளாவிய பருவதங்களும், குகைகளும், அவற்றில் கரடி, புலி, சிங்கம், காட்டானை, செந்நாய், சிவிங்கி, பன்றி,

கடம்பை, கலை, மறி, மான், கோனாய், நரி, முயல் முதலிய விலங்கினங்களும், சக்ரவாளம், சகோதரம், நாகணவாய்ப்புள், நாரை, அன்னம், அன்றில், தூக்கணன், மயில், குயில், பாரத்வாச முதலிய மாடப்புறக்கள், மணிப்புறக்கள், காடை, கவுதாரி, கானங்கோழி, சம்பங்கோழி, காட்டுச் சேவல்கள் முதலிய யாவும் அடர்ந்து, களகளவென்னும் ஓசையோடு இருக்கும் அவ்வனத்தில், முநீஸ்வரர்கள், ருஷீஸ்வரர்கள்முதலிய பெரியோர், ஆங்காங்கு பன்னகசாலைகளைப் புதுக்கிக்கொண்டு தத்தம் சீடர்களோடும் நிட்டைசாதித்துக்கொண்டிருக்கும், வைபத்தைக்கண்ட வேந்தன், இரதத்தைவிட்டிழிந்து தனதுகாலில், அணிந்திருக்கும்படியாகிய வீரகண்டாமணியைக் கழற்றி, பாதத்திற் செருடுதோலணிந்து, உடும்பின்றோல்களினாற்செய்திருக்கப்பட்ட கை வார்களையணிந்து, மார்பிற்கவசம்பூண்டு, தலையிற் சிவந்த உருமாலையைக்கட்டி, இடையில் கருங்கச்சை இறுக்கி, வில்லும் அம்பறாத்தூணியுந் தோளிற்போட்டு, பதினெட்டு வகைஆயுதங்களையும் இடையிற்கட்டி, பஞ்சகதியோடுங் கூடிய குதிரையின்மீதேறி, கையிற் கத்திகேடயம்பிடித்து, தோற்கருவி துளைக்கருவிமுதலிய பறைகளை முழக்குவித்துக் கொண்டு, அநேகர், காடுகளைக் கலைத்துக்கொண்டு வரும்படியாயும், அநேக வேட்டைக்காரர்களும், வலைக்காயர்களும், குறவர்கள்முதலிய குழுவர்களியாவரும், வாங்கு, வல்லயம், ஈட்டி, எறியீட்டி, வில், வேல்முதலியஆயுதங்களுடனே, வேந்தனைப் புடைசூழ்ந்துவரவும், சிலர், ஒளியுண்டாக்கி, அந்தந்த இடங்களிலே அணியணியாய், மிருகங்கள்வருகிறவழியைப்பார்த்துக் கொண்டிருக்கவும், சிலர், அங்கங்கு வலைகளைக்கட்டவும், சிலர் மகாசவுரியபராக்ரமமுள்ளநாய்களை பட்டுக் கயிறுகளினாலும், வெள்ளிச் சங்கிலிகளாலும், பொற்சங்கிலிகளாலும் கட்டி அழைத்துக்கொண்டுவரவும். இந்தப்படியாய் வனத்திற்பிரவேசித்து மிருகங்களைச்சின்னாபின்னங்களாகவெட்டிப்பிளந்தும், ஆனைகளினது மஸ்தகங்களை

யுடைத்தும், காடிகளைக்கால்வேறு உடல்வேறாகச்செய்தும், புலிகளின் உடல்களைப்பிளந்தும், சிங்கங்களைக்கொன்றும், சிவிங்கிகளைச் சின்னபின்னப்படுத்தியும், பன்றிகளைப்பிளந் தெறிந்தும், மான்மரைமுதலிய மிருகங்களைவதைத்தும், கடம்பைமுதலியகலைமான்களைக் கண்டதுண்டஞ்செய்தும், அன்னம்மயில்குயில்புறாக்கள் முதலியபறவைச் சாதிகளைவேடுவர்கள்வலைகளைக் கட்டிப்பிடித்தும், எங்கேபார்த்த போதினும் மிருகங்களைப்பிணமலைகளாகக்குவித்து, வேடுவர், குறவர், மறவர், குழுவர்களியாவரும், பன்றி, மான், கடம்பை, கலை, முயல், முதலியவைகளைக் காவடிகளிற்கட்டித் தூக்கிவரவும், வேந்தனானவன், மிருகங்களைத்தனது காத்தினிடமாக இருந்தபதினெட்டுவகை ஆயுதங்களாலும் சின்னபின்னங்களாகக் கண்டித்து சர்வநாசப்படுத்திக் கொண்டுவருகிறபோது, அங்கோர்மலைப்படிவாரத்தில் ஓங்கும், ஆலவிருக்ஷத்தின்நீழலாகிய இருண்டசோலையிற் சாகுல்யமகாரிஷி யென்றொருமுனிவர், தன்னுடையபத்தினியோடும், புலித்தோலைப் போர்த்துக்கொண்டுகிட்டையிலிருந்ததை அறியாத சங்கரபாண்டியனென்னும்வேந்தன், ஆ, ஹா, இவ்விரண்டுபுலியும் நமதுவேட்டையிற்றப்பித்துக்கொண்டு இங்ஙனம்ஜோடாகவந்து நிற்கின்றதென்றுகருதியவனாய் தனதுகரத்தினிடமாக இருக்கும்வில்லிலே, ஓர், எரிக்கணையைச் சந்தித்துப்புலி இரண்டுக்கும் லட்சியம்வைத்து ஆகர்ணப்ரியந்த மிழுத்துவிட்டான், அப்படி. வில்லிலிருந்து விடுபட்டஅம்பானது மகாவேகத்தோடும் வந்து புலியிரண்டையும் தாக்கிப்பின்புற முருவிப்போகையில், புலியைப்போலிருந்த இரண்டுபேர்களும், கோவென்றலறிக் குப்புறவிழுந்து உயிரைவிட்டார்கள், அப்படிவிழுந்ததை அவர்கள் குமாரன்கண்டு சகிக்கமாட்டாதவனாய்க் கோவென்றபயமிட்டு அலறி, நிலத்தின்பேரிற்சாய்ந்து கூறுவான். அந்தோ அன்னைபிதாக்களே, என்செய்வேன், இனி, எவ்வணஞ்செய்வேன், பின்னும் இப்புவியின்மீதெனக்கு ஒருவருந் துணையில்லாமல் தனியேவிடுத்துப்போகலாமோ, என்

னையுங்கூட அழைத்துக்கொண்டு போனாலாகாதோ, இங்ஙனம், எனக்கார் உணவுதருவார்கள், யார்துணைசெய்வார்கள், ஐயோ, யான்சாப்பிட மாட்டேனென்றால் எனக்குநல்லவார்த்தைகளைச்சொல்லி யார்சாப்பிடச்செய்யப் போகின்றார்கள், வேதசாஸ்திர புராணங்களை யாரெனக்குபோதிப்பார்கள், நீங்களிப்படி மோசஞ்செய்வதாக இருந்தால் என்னை ஆண்பிள்ளையாகப்பெற்று வளர்ப்பானேன், இவ்வாறு இந்தலோகத்திலென்னைவிடுத்துப் போகின்றதாகவிருந்தால், நான் நடக்கவேண்டிய காரியங்கட்கு இட்டப்படுத்தியன்றோ போகவேண்டும், அப்படிசெய்யாமல் இப்படி அனியாயமாக என்பழியையேற்றுக்கொண்டுபோகலாமா, இவ்வனத்தில் வசிக்கும், பெரியோர்களுடைய புத்திரவற்சங்களுஞ், சீடர்களும், தாய்தந்தையில்லாத பிள்ளையென்று, அலட்சியமாகத் தூறியடிப்பார்களே, அதைக்கண்டயான்சகிப்பேனோ, தரையிற்றரிப்பேனோ, வேறிடஞ்செல்வேனோ, அந்தோபாவிகளா, இரண்டுபேர்களிலொருவரிருந்து ஒருவரிறந்தாலாகாதா இப்படிஇரண்டுபேருஞ்சாகவேண்டுமா, இவ்வாறென்னை அலைக்கயான் உங்களுக்கென்னகொடுமைசெய்தேன், லோகத்தில், பசுக்கள், கன்றுகளை விட்டிறக்குமாயின் பின்பு அக்கன்றுகளடையுங்கதியறியீர்களோ, அதுபோலன்றோ யான், ஐயோ, என்னைச்சோதிக்கலாமென்று மவுனமாய்க்கண்களை மூடிப்படுத்திருக்கின்றீர்களோ, உங்கள்மனத்திலிருக்குங்கருத்தை எழுந்து எனக்குச்சொல்லப்படாதோ, அவ்வாறு எழுந்தால் அக்காரியம் பிரமனுக்குச்சம்மதியாதோ, நீங்கள், அம்புபட்டுருவிச்சாவுதற்குக்காரணம்யாது, புத்திரனாகிய எனக்குச் சொல்லப்படாதோவென்று, விம்மி, விம்மி, அபயமிட்டலறும்போது, அவ்வோசையை அங்குதவஞ்செய்துகொண்டிருக்கும் பெரியோர்க்கும்போது, ரிஷியும், ரிஷிபத்தினியும், அம்புபட்டுருவி வாயினாலும், மூக்கினாலும், இரத்தங்களைக்கக்கிக்கொண்டு மடிந்திருப்பதைநோக்கி, இதென்னகாரணமெனச்சிந்தித்துப்பார்க்கும்போது, அவ்வனத்திற் சங்கரபாண்டியன், வில்லுங்கையு

மாய் நிற்பதைக்கண்டார்கள், அப்படிகண்ட மாத்திரத்தில்
இவனுற்றுன் நடந்ததென்றறிந்துக் கொண்டவர்களாய், அங்க
ணம், நின்று அழுதுக்கொண்டிருக்குங் குழந்தையை எடு
த்து மார்பைத்தழுவிக் கரங்களினுற் கண்ணீரைத்துடைத்து
அடாகுழந்தாய், உலகில், நித்யமாய்யவரேனும் வாழ்ந்தவர்க
ளுண்டோ, நாங்கள்கற்றுணர்ந்த சாஸ்திரங்களிலும், நித்ய
மாய் ஒருவரேனுமிருந்ததாய் சொல்லக்காணேம். நாங்கள்
கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, இதல்லாமலும் பொன்னு
லகவாசிகளாகிய தேவர்கள் ஓர்காலையிற், பிரமனது கருப்பவா
சத்திலிருந்து, எங்களைஎல்லாஞ் சாகாமலிருக்கச் செய்யவே
ண்டுமென்றுகேட்க, அதற்குப்பிரமன், அப்படிகூடாது, அவ
ரவர்கள் கன்மாநுபவத்துக்கீடாய், நடக்குமென்று சொல்லி
நாமிந்த கர்மம் பூமியிற் பிறந்தமையால் யாவும் அநு
பவித்தேதீரவேண்டும்; பேசுதற்கரியதபஞ்செய்த போதினும்
பிறப் பிறப்பிரண்டும், எதிரிற்றுனேநிற்கும் இவை, நமக்கு
மாத்திரமல்ல, எவ்வுயிர்க்குமே உண்டாதலால், உனது, தாய்
தந்தைகள், அவர்கள்விதிப்படி மாண்டவர்களேயன்றி வேற
ல்ல, அதுபோல் நீயும் உனதுவினைமுடியுமளவுமிருந்து, பின்
இறக்கப் போகின்றுயேயன்றி இருக்கப் போகின்றதில்லையே,
ஆதலால், இப்போது செத்தவர்கள் மீளுசாகாமலிருப்பவர்,
அடித்துவிழுந்து கூக்குரலிட்டழுதால், செத்தவர்களுக்கு
மோட்சமில்லாமல், பேய்க்குச்சமான மாவார்கள். நல்லகதி
யுங் கிடைக்கமாட்டாது, இறவாமலிருப்பதற்கோ உபாயம்
ஒருவருங்கற்றதில்லை,மேலும்காலனெனவன் சாகாமலிருக்கும்
படியாய் ஓர் கிருமியையும் விட்டதில்லை இப்போது நாங்கள்
சொல்வதில், நீ எவ்வளவுஞ் சம்சயப்படவேண்டாம், சகலவு
யிர்களுங் கடவுளுடைய ஆக்கினையின்படியேநடக்கும்; இத
ன்றியும் இத்தேகமானது இரத்தமாம்ச என்புமலமூத்திரங்க
ளால் மூடப்பட்டபடியால், புற்புதத்தைப்போல் க்ஷணநேர
மிருந்து க்ஷணநேரத்தில் மறைந்துபோம், ஆதலால் அறிவி
லிகளாக இருப்பவர்கள் இப்புழுக்கூட்டைக் காப்பாற்றுகிற

தேயன்றிவேறல்ல, என்றைக்கும் அகண்டபரிபூரண சச்சிதா
னந்த பிரம்மம் ஒன்றே நித்தியமாய்விளக்கும், மற்றவை எல்
லாமழிந்துபோம் ஆதலால், நீ அவர்களுக்கு அன்புள்ள பிள்
ளையாக இருந்தபோதிலும் உனதுகண்ணீர், அவர்கள்மீது படு
மாயின் அவர்கள் உயிரினது இதையே யநுபவிக்கவேண்டிய
தாய்வரும், மேலும் பெரியோர்களா யிருக்கப்பட்ட, உனது
தாய்தந்தைகளின்மீது கண்ணீரையுதிர்க்காமல் வேதாகமப்
படி அவர்களுக்குச் செய்யவேண்டிய கருமங்களை நடத்து
வித்து, நல்லகதியடையும்படியாய், அவர்களைத்தகனம் பண்
ணின அங்கத்தைப் பொருக்கி யெடுத்துக் கொண்டுபோய்
சேதுமத்தியிலே கந்தமாதனச் சார்பில் விளங்கும், இராமீச்
சுரதலத்தில் ஓர் பக்கத்திற்றுபனஞ் செய்து,பின்பு, அந்த சே
துதநுக்கோடியில் ஸ்நாநம்பண்ணி, கர்மத்துக்குரிய நவசிரா
த்த, சோடசமுதலிய, திதிசிரார்த்தங்களை விதிப்படி நடத்தி,
அவர்களுக்கு நல்லகதிமோட்சங் கிடைக்கும்படிச் செய்வா
யென்று, அம்முநிவர்கள்சொல்ல, அவ்வார்த்தையைக் கேட்ட
சாகுல்ய மகாரிஷி குமாரனுன சாக்கலனெனவன் கேட்டுச்
சிறுபிள்ளையாக விருந்தபோதினும், பெரியோர்கள் சொல்லி
யதைகேட்டு, அவர்களிற் சிலரைத்தனக்கு உதவியாகவைத்து
க்கொண்டு தாய்தந்தையர்களுக்குச் செய்யவேண்டிய கிரியை
களெல்லாஞ்செய்து முடித்து, தானஞ்செய்து, மறுநாளுதய
காலத்திலே, அங்கங்களை எல்லாம் பொருக்கி யெடுத்துக்கொ
ண்டு, கூடல் மாநகரமாகிய மதுராபுரியின் வனத்தை விட்
டுப் பிரயாணப்பட்டு, இராமீச்சுரம் போய்ச்சேர்ந்து, அத்தல
த்தில் தான்கொண்டுபோன என்பை அடக்கஞ்செய்து, பின்
சேதுதநுக்கோடியில் தீர்த்தமாடி, பிதுற்கருமங்களை விதி
வசத்தாய்ப் பதினொருநாள் வரையிலுஞ்செய்து முடித்து,
மாசமாதிகளிலுஞ் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து
முடித்து, நியமத்தோடும் ஒருவருடம்வரையில் அவ்விராமீச்
சுரத்திலிருந்து, சகலகர்மங்களுஞ் செய்து முடித்து, அச்சி
றுவனெனவன் அன்றிராப்போதில் நித்திரைசெய்கிறபோது

ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் போலும், மகாலட்சுமியைப்போலும், தன்னுடையதாய் தந்தையர்கள் சொற்பனத்தி லெழுந்தருளக் கண்டு, நித்திரைநீங்கி எழுந்திருந்து, சேதுதநுக்கோடியிலே ஸ்நாநம்பண்ணி, இராமநாதனைப் பணிந்து விடைபெற்று மதுராபுரியைச் சார்ந்தவனத்தில்வந்து சேர்ந்து, அங்குள்ள முனிவர்களிடத்தில், தான்கண்ட சொற்பனமின்னபடி என்று சொல்ல, அவர்களுங்கேட்டு, மகாசந்தோஷத்தை யடைந்து, அப்பா சிறுவனே, உனது தாய்தந்தையும், விஷ்ணு சொரூபமாகவும், இலட்சுமி சொரூபமாகவுமே விளங்குவார்களென்றுசொல்ல, அதைக்கேட்ட, சங்கரன் சந்தோஷத்தை யடைந்து, பின்பு, அப்பெரியோர்களிடத்திற் றானேயிருந்து, வித்யாப்பியாசஞ் செய்துக்கொண்டுவந்தான், இங்ஙனமிவ்வா றிருக்க, அவன், வில்லும், வேலுமேந்திநின்ற, சங்கரபாண்டியராஜனை அங்குளமுனிவர்கள், நோக்கிக்கூறுவார்கள். வாரும் வேந்தே, எப்படியுங் கெட்டது கெட்டது, எவ்வளவும், உமக்கு அறிவில்லாமற் போச்சுதே, அந்தோ, தபசிகண்மீது இப்படியும், அநீதியாய் அம்பைப்பிரயோகித்துக் கொல்லலாமோ, ரிஷியைக் கொன்றது மல்லாமல், ரிஷிபத்தினியையுங் கொன்று, இருவர்பழியையு மேற்றுக்கொண்டீரே, இப்படி யார்செய்தார்கள், ஒருவருமில்லையே, இப்பாவத்துக் கென்ன செய்யப்போகின்றாய், மனசாலும் வாக்காலும் காயத்தாலும் குற்றங்கள்வந்து சேரிடாமல், நடப்பதுவே வேந்தர்களுக்கு நீதியும், வெற்றியுமாம், அதைவிடுத்து, வேடரோடொப்பந்தமாய் நடத்தியது இராஜநீதியல்லவே, இவ்வாறு நீ அநியாயமாய்ச் செய்ததற்குப் பரிகாரம்,இறந்தபேர்களுடனே உன்னுடையசரீரத்தையு மிறக்கும்படியாய்ச் செய்யவேண்டும், அவ்வகையிலாவிடில், அக்கினியில் வீழ்த்தி, நீறாக்கவேண்டும், இவ்விரண்டு மல்லாது, இப்பழிநீங்காதாதலால் இப்போது உன்னைக்கண்டபேர்களுக்கும், பேசியபேர்களுக்கும், பிரம்மஹத்திநீங்காமல், அவர்களையும், பிடித்துக்கொண்டு, ஆயிரவருடமான போதினும், அகலாது, ஆதலால், நீ எங்கள்முன்

னேநிற்காமல், அகலப்போவாயடாபாவி, என்றுமுனிவர்களும் அவர்பத்தினிமார்களுங் கூறியதைக்கேட்ட, சங்கரபாண்டியன், நெஞ்சந்திடுக்கிட்டு, துக்கசாகரத்துள்ளழுந்திப் பற்பல விதமாய்ச்சிந்தித்து, இப்பழியைப்போக்கும் விதமியாதெனக் கவலைகொண்டவனாய், முனிவர்கள் கூறியவண்ணம் அக்கினியைவளர்த்தி அதில்வீழ்ந்து, இறந்துபோவோமென்று, ஸ்திரஞ்செய்து கொண்டவனாய், தனக்குப்பின்புறமாக நிற்கும், மந்திரி முதலிய காரியக்காரர்களை நோக்கிச் சொல்லுவான். வாருங்கள் மந்திரிமார்களே, அறிவிலியாகிய எனக்கு வினைவலியால் மகா பெரியவராகிய முனிவரையும், அவருடைய பத்தினியாரையும், வதஞ்செய்த தோஷம், வந்தடர்ந்திருப்பதால், இனி யான் இப்பூமியிலிருந்து, குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து, என்னிடமிருந்ததுபோல் அவனிடமிருந்து நீதி வழுவாது இராச்சிய பரிபாலனம் செய்து வரும்படியாய், யாவும் அவனுக்கு தெரிவிப்பதோடும், இப்போது யான் அக்கினிப் பிரவேசமாகும்படியாய்த் தீயை வளர்த்துங்களென்று சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட மந்திரிகளும், காரியக்காரர்களும், கோவென்றலறிக் கூக்குரலிட்டு, எங்களை இதுவரையிலும், பிள்ளைகளைப்போல வளர்த்துப் பரிபாலனஞ்செய்து, இப்போது தேவரீர் இறந்து போகவும், நாங்கள் உயிர் வைத்திருக்கவுமோ, நல்ல காரியம் சொன்னீர். நாங்களும், உம்முடன் அக்கினிப்பிரவேசமாகின்றோம். அப்படி செய்யாமல் நாங்கள் ஜீவித்திருப்பதில் என்ன பிரயோசனம் என்று, யாவரும் ஒருமித்துச் சொன்னார்கள். அவ்வார்த்தையைக்கேட்ட சங்கர பாண்டியன், அவர்களை எல்லாம் சமுதாயப்புசெய்து, அப்பா மந்திரிமார்களே, என்போலொருபாவி எவ்வுலகிலு மிருக்கப்படாது; சிங்காசனமு மேறப்படாது. ஆதலால்; நான் அக்கினிப்பிரவேச மாய்விடுகின்றேன். என் குமாரன், என்னிலும் என்மனைக்கதிகமாய் உங்களைப் பாதுகாத்து வருவானாதலால், நீங்கள் என்னிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தைப்போல், அவனிடத்திலும்

வைத்து இராஜரீகஞ்செய்து வாருங்களென்று சொல்லிப் பின்னுங் கூறுவான். ஓ மந்திரிகளே! என்றைக்கிருந்தபோதினும், இத்தேகமானது நீர்மேற் குமிழியைப்போல், அழிவுமேயல்லது நிற்கமாட்டாது. அதனோடும், நான் வீண்பழி ஏற்றுக்கொண்டு, இராஜரீகம் செய்திருப்பது அழகல்ல. ஆதலால், நான் சொல்லியபடியே அக்கினியை வளர்த்துங்களென்றுசொல்லிப் பின்பு, அங்குள்ள முனிவர்களியாவருங் காணும்படியாய் ஸ்நானஞ்செய்து, விபூதி தரித்துக்கொண்டு, அம்முனிவர்களைப் பிரதட்சணஞ்செய்து, ஸ்ரீ கயிலாசபதியாகிய உமாமகேசனை நோக்கி, அஞ்சலியஸ்தனாய், சம்போ, சிறியேன் அறியாமையினாற் செய்த பழியை என்னுடனே முடிக்கவேண்டுமென்று அக்கினியை மூன்றுதரம் பிரதட்சணஞ்செய்து, உயர எழும்பிப் பாய்கின்ற சமயத்தில், ஸ்ரீ கயிலாசபதியாகிய சொக்கநாதக்கடவுளருளால், ஆகாயத்தினின்றும், ஓ சங்கரபாண்டிய ராஜனே, நீ அக்கினிப்பிரவேசஞ் செய்துகொண்டால், ரிஷியையும், ரிஷிபத்தினியையுங் கொன்ற தோஷம் நீங்குமோ, நீங்கமாட்டாதாதலால், நாமோர் உபதேசஞ் செய்கின்றோம். அது யாதெனில், தெட்சண சமுத்திரத்தில், ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியாற் கட்டப்பட்ட சேதுவின் மத்தியிலோங்குங் கந்தமாதனச் சார்பில் எழுந்தருளியிருக்கும், ஸ்ரீ ராமநாதக்கடவுளை தெரிசித்து, சேதுவில் தீர்த்தமாடி, அக்கடவுளை திரிகாலமும் வணங்கித் தோத்திரஞ்செய்து, பால், நெய், தேன், இளநீர்முதலிய அபிஷேகஞ்செய்து சோடசோபசாரங்கள்செய்து, வேதப்பிராமணர்களாக விருக்கும்; பன்னீராயிரம்பேர்களுக்கு அன்னதானமும், வஸ்திரதானமுஞ்செய்து, அவர்கள்தானஞ்செய்தபலன் முழுவதும், ஸ்ரீ ராமநாதனுடைய பாதாரவிந்தத்திலே தத்தம் செய்யும்படியாகவுஞ்செய்து, ஒரு வருடம் வரையில், நீ அவ்விடத்திற்றனே வாசஞ்செய்து வருவாயாகில், இவ்விரண்டு பழியும், உன்னைவிட்டு நீங்கிவிடும். அப்போது நீ புண்யசாலியாவாயென்றும், அசரீரியானது கூற, அவ்வாய்மையை அவ்வனத்

திலுள்ள முனீஸ்வரர்களும், சங்கர பாண்டியனுங் கேட்டு சந்தோஷமடைந்து, வேந்தனானவன் அவணின்றும் போகமாட்டாமல், அச்சமுற்று நிற்கும்போது, அவனைக்கண்ட முனிவர்கள் கூறுவார்கள். வாராய் சங்கர பாண்டிய ராஜனே, நாங்கள், ஸ்ரீ ராமநாதனுடைய மகிமையையும், அவர் அருட்பிரசாதத்தையும் மறந்து, உன்னை அக்கினியில் வீழும்படியாய் பரிகாரஞ் சொன்னோம். காயாம்பூ வண்ணனால் நியமிக்கப்பட்ட சேது தநுக்கோடியையும், ஸ்ரீ ராமநாதனையுங் கண்ணினாற்கண்டாலும், சொல்லுதற்கரிய பாபங்களெல்லாம் பறந்து மோக்ஷத்தை கொடுக்குமாதலால், இப்போது உரைத்த அசரீரியின் வண்ணம், சேது ஸ்நானஞ் செய்துகொண்டு வரக்கடவையென்று, நன்கு மதித்தவர்களாய்ச் சங்கர பாண்டியனுக்கோத, அவனும் மகா சந்தோஷத்துடனே, பெரியோர்களாகிய முனிவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, மதுராபுரிக்கு வேவுக்காரர்களை யனுப்பி, பட்டஸ்திரீ முதலியவர்களையும், வேண்டிய திரவியங்களையும், இரதகஜதுரக பதாதிகளையும்வருவித்து, அவணிருந்தே, தானும், இரதாரூடனாய்ச் சயின்யங்களோடும் பிரயாணப்பட்டு, காடு, மலை, வனம், வனாந்திரம், கானாறு முதலிய யாவுங்கடந்து, அச்சேதுவின் மத்தியிலோங்குங் கந்தமாதனச்சார்பில் வந்திறங்கினார்கள். அவ்வாறிறங்கிய சங்கர பாண்டிய ராஜன், அன்று முதல் மகா நியமத்தோடும், விரதமநுட்டித்துக்கொண்டு சேது தநுக்கோடியில் சங்கற்ப விதியின்படி பிரதிதினம், திரிகாலமும் ஸ்நானஞ்செய்து, வேண்டிய தானங்களைச்செய்து, இராமநாதனை வேண்டி அபிஷேகஞ்செய்து, ஆடையாபரணங்களைத் திருத்தி, ஆராதனை முதலிய உபசாரங்களைச்செய்து, பிராம்மண சந்தர்ப்பணைமுதலியயாவும் நடத்தி, யாதுங் குறையின்றி, அசரீரி புகன்றவண்ணம் நடாத்தி வருகையில், அப்படி நடாத்தும் நாட்களில், முந்நூற்றறுபத்தைந்தாம் நாள் மாலையில், ஸ்ரீ ராமநாதனுடைய சந்நிதானத்தில் தோத்திரஞ் செய்துகொண்டு நிற்கும் சங்கரபாண்டியனது முகார விந்தத்

தினின்றும், பிரம்மஹத்தியானது வெளிப்பட்டது, எப்படி இருந்ததென்னில், முன்னம் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியைப் பிடித்திருந்த இராவணனுடைய பிரம்மஹத்திக்கு இளையதென்று சொல்லத்தக்கதாய், நீருண்ட மேகத்தைப்போன்ற தேகமும், மூன்றாம் பிறையைப்போன்ற வக்ர தந்தங்களும், சிவந்தமயிரும், கோரை மீசையுமுடைய அகோர ரூபத்தோடும், கோவென்றலறிக்கொண்டே வெளிப்பட்டதைக்கண்டு, ஸ்ரீ ராமநாதனுடைய அநுக்ரகத்தினாலே, கால வயிரவன்சூலகபாலத்தோடுமெழுந்து, பிரம்மஹத்தியைக்கொன்று உதிரபானஞ்செய்து, அதன் சடத்தை சமுத்திரத்திலெறிந்துவிட்டான். இவ்வாறு, பிரம்மஹத்தியானது அரசனைவிட்டு நீங்கிய உடனே, அரசன்மீது ஸ்ரீ ராமநாதனுக்குக் கிருபையுண்டாகி, ஆகாயவீதியிற் பார்வதி சமேதராய் விடையின்மீதெழுந்தருளிக் காட்சி தந்து கூறுவார். ஓ பாண்டியராஜனே, உன்னைப்பற்றியிருந்த பிரம்மஹத்தி தோஷமானது, இன்றோடே நீங்கிவிட்டபடியால், இனிமேல் உனக்கு வேண்டிய வரத்தைக்கேளென்று கூற, அப்போது வேந்தன் மகா சந்தோஷத்தை யடைந்து, ஆகாயவீதியில் விடையின்மீதெழுந்தருளியிருக்கும் சிவபெருமானைக்கண்டு, ஆனந்த பரவசனாய், அஷ்டாங்க பஞ்சாங்கனாய்ப் பணிந்தெழுந்து தனதிரு கரங்களையுஞ் சென்னிமேற் கூப்பி, அஞ்சலியஸ்தனாய் நின்று அநேக தோத்திரங்கள் செய்து, ஆனந்தக்கூத்தாடிச் சொல்லுவான், சுவாமி, சந்திர ஜடாதர மூர்த்தியே, தேவரீருடைய பாதார விந்தத்தைக்கண்டு தரிசித்த எனக்கு, வேறே என்ன வேண்டி இருக்கின்றது. ஆயினும், அரி பிரமாதிகளாலே அறியப்படாத உமது பாதாரவிந்தத்தை எப்போதும், அடியேன் தெரிசிக்கவும், இறுதி காலத்திற் பிறவா முத்தியை யடையும்படியாகவும், இவ்வுலகின்கண் இருக்கு மளவும், யாதொரு வினையும், அணுகாமலிருக்கும்படியாகவும், கிருபைசெய்து ரட்சிக்கவேண்டுமென்று கேட்டான். அப்படி கேட்ட பாண்டியன் கருத்தின்படியே, பரமசிவன் வரங்க

ளைத்தந்து, இராமலிங்கத்திற் கலந்து மறைந்த தன்மையைப் பாண்டியன் கண்டு, சகலமான பேர்களுடனேயும், ஸ்ரீ ராமநாதனை வணங்கித் தோத்திரஞ்செய்து விடை பெற்று, அவணின்றும் பிரயாணப்பட்டு, அநேக சேனா சயின்யங்களோடும், காடு, மலை முதலிய யாவுங்கடந்து, மதுராபுரி பட்டணம் வந்து சேர்ந்து, வனத்திற் றவஞ் செய்துகொண்டிருந்த பெரியோர்களைக்கண்டு தெரிசித்து, அவர்களிடத்திலே நடந்த சவிஸ்தாரங்களையெல்லாஞ் சொல்ல, அதற்கு அவர்களும், சங்கர பாண்டியனது மன உறுதிக்கும், அன்புக்கும், ஸ்ரீ ராமநாதனுடைய கிருபைக்கும், மகிழ்வுற்றவர்களாய், பின்பு அவ்வேந்தனை, தங்களது ஆனந்த பாஷ்பமென்னுந் தோயத்தால், அபிஷேகஞ் செய்துவைத்து, வேண்டிய வரங்களைக்கொடுத்து, சுகஜீவியாய் இராச்சிய பரிபாலனஞ்செய்து வரக்கடவை என்று, ஆசி கூறியனுப்ப, அவ்விடையை ஏற்ற சங்கர பாண்டியன், மனக்களிப்போடும், மதுராபுரியை யரசாண்டு இஷ்டபோக பாக்கியங்களை அநுபவித்துக்கொண்டிருந்து, வெகு காலத்துக்குப்பிறகு தன்னுடைய குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து, இராஜரீகஞ் செய்யும்படியாயமர்த்தித் தான் துரவாசிரமத்தையடைந்து, ஸ்ரீ ராமநாதனுடைய பாத நீழலாகிய சாயுச்ய பதத்தை யடைந்தான். கேட்டீர்களோ, மகா ரிஷிகளே, இவ்வண்ணம் இராமீச்சுரமென்னுந் தலத்தின் பெருமையை யாவரால் அளவிட்டுச் சொல்லக்கூடும், இதல்லாமலும், சுந்தர பாண்டியனும், இப்படியே வாசஞ்செய்து, சேது மாதவனைக் காணப்பெற்றானென்றுஞ் சூதமகாமுனிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரணியர்கள், சுவாமி, தேவரீர் அப்புண்ணியனது பெருமையையும், அடியோங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்க அதற்குச் சூதமகாமுனிவர், உளமகிழ் கொண்டவராய் உரைக்கத்தொடங்கினார்.

சங்கரபாண்டியச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

சேதுமாதவச் சருக்கம்.

கேளுங்கள், நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, வைகை வளநாட்டிலுள்ள மதுராபுரிக் கிறைவனாகிய சுந்தர பாண்டியனென்னும் ராஜன், மநுநீதி வழுவாது இராச்சியபரிபாலனஞ்செய்து வருநாளில், சகல தேவர்களையும், ஸ்ரீ கயிலாசத்தில், நந்திதேவர் எவ்வித மிடைவிடாமற் காத்து வருகின்றனரோ, அதுபோல், இவ்வேந்தனும் கூடன்மா நகரமென்னும், மதுராபுரி பட்டணத்திலுள்ள மன்னுயிர்களைத் தன்னுயிர்போற் காத்தும், பெரியோர்களாலே சேது மான்மியங்களையும், ஸ்ரீ ராமநாதனுடைய கிருபாநுக்ரகங்களையும் கேழ்விப்பட்டும் தானும், அந்த ராமீச்சுரத்திலே சில நாள் வாசம் பண்ணவேண்டியதாய் மனதில் நினைத்து, அதுபோற் றனது குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து, அரசாண்டு வரும்படியாய்க்கட்டளையிட்டுப் பின் தனது பட்டத்தேவிமார்முதலியரோடும் மந்திரிகளோடும், இரதகெஜ துரக பதாதிகளோடும், இரதாரூடனாய் பிரயாணப்பட்டு, காடு, மலை, வனம், வனாந்திரம், கானாறு முதலிய யாவுங்கடந்து, சேது மத்தியிலோங்கும், கந்தமாதன கிரிச்சாரலில், இராமீச்சுரமென்னுந் தலத்திற்சேர்ந்து, சங்கர பாண்டியனைப்போல இச்சுந்தரபாண்டியனும், அநேகங்கோடி கோடியாய்ப் பொன்களைவாரித் தானஞ்செய்து, சேது தநுக்கோடி முதலிய புண்ய தீர்த்தங்களில் சங்கற்ப விதிப்படி தீர்த்தமாடி, ஸ்ரீ ராமநாதனுக்கு அபிஷேக முதலிய ஆராதனைகள், நிதமும், ஆயிரம் பொன்னுக்குக் குறைவுபடாமல் நடப்பித்து, திரிகாலமும் வணங்கிச் சேவை செய்துகொண்டு வருகிறநாளையில், அப்பாண்டியன் ஸ்ரீ மகாவிஷ்ணுவைக்குறித்துச் சகலரும், அதிசயிக்கும்படியாய், ஓர் யாகஞ்செய்ய நினைந்து, தனது பட்டத்தேவியுடனே, சேது தநுக்கோடியிற் சங்கற்ப விதியின்படித் தீர்த்தமாடி அநேக தானதருமங்களைச்செய்து வேதாகமவிதிப்படி யாகத்தை முடித்து, அநேகந் தேவப்பிராம்மணருக்கு சொர்

ன்னமாரி பெய்வதுபோல் வேணமட்டுந் தான தருமங்களைச் செய்து, ஸ்ரீ ராமநாதனைப் பிரதட்சணம்பண்ணி நமஸ்காரஞ்செய்து, இவ்வாறே நெடுநாளாய் அத்தலத்தை விட்டுப் போகமனமில்லாதவனாய், அவ்விடத்திற்றானே வாசஞ்செய்துகொண்டிருக்கும்போது, சேற்கெண்டையைப்போல் அழகிய கண்களையுடைய மகா லட்சுமியானவள், இந்த பாண்டியனைச் சோதிக்கவேண்டியதாய் கந்தமாதனத்தைச்சேர்ந்துசிறு குழந்தையைப்போல வடிவங்கொண்டு, சேது தநுக்கோடிக் கரையிலே விளையாடிக்கொண்டிருந்தாள். அப்படி யிருக்கையில், அன்றையதினம் சுந்தர பாண்டியன் எப்போதும்போல சேது தநுக்கோடியில் தீர்த்தமாடி, அநேக தான தருமங்களைச் செய்துமுடித்துக்கொண்டு பிறப்படுகிறபோது, மயிலைப்போன்ற சாயலும், குயிலைப்போன்ற இனிய மொழிகளுமுடைய குழந்தைப்பருவத் தோடுங்கூடி விளையாடிக்கொண்டிருக்கும், இலட்சுமி தேவியைப் பாண்டியராஜன் கண்டு, சந்தோஷமும் ஆச்சரியமுங்கொண்டு, விந்தா வாணியுடனும், அக்குழந்தையை நோக்கி, ஓ குழந்தாய், நீ யார், உனது தாய் தந்தைகள் பெயரென்ன, எந்தவூர், நீ இருப்பது என்று கேட்க, அப்போது மகாலட்சுமியாகிய பெண் சொல்லுவாள், வாருமையாராஜனே, என்னைப்பெற்றவர்கள் ஒருவருமில்லை, என்னுடன் பிறந்தசகோதரர் ஒருவருண்டு, அவருஞ் சுடுகாடுபோய்ச்சேர்ந்தார், அதன்பேரில் யானியாதொரு கதியுமில்லாமலிருக்கின்றேனாதலால், என்னை ரட்சிக்கமாட்டீரோவென்று கூறினாள், அவ்வார்த்தையைச் சுந்தரபாண்டியன் கேட்டுச் சந்தோஷத்தையடைந்து, ஓ குழந்தாய், எனக்கோர் ஆண்குழந்தை யிருக்கின்றது, பெண்குழந்தை இல்லாமல், உன்னை எனது குழந்தையாகச் சந்தேகமில்லாமல், வளர்த்து வருவேனென்று, மிக அன்போடும் எடுத்து தன்னுடையபட்டத்தேவியான, விந்தாவாணிகையிற் கொடுத்தான். விந்தாவாணியும் மகாசந்தோஷத்தோடும், அக்குழந்தையைவாங்கி மார்போடணைத்து, உச்சிமோந்து முத்தமிட்டுக்கொண்டு, இரத

ஜதுரக பதாதிகளோடும், பதினெட்டுவகை மேளவாத்தியங்
கள் முழங்கும்படியாய் பொன்னம்பாரிவைத் திலகாநின்ற,
யானையின்மீது வைத்துக்கொண்டு, தனதுஇருப்பிடம்போய்ச்
சேர்ந்து, நாளொருவண்ணமும், பொழுதொரு மேனியுமாய்
வளர்த்து வருகையில், மகாலட்சுமியாகிய பெண்ணானவள்,
விந்தவாணியினது கரங்களைத் தாமரைமலரைப்போற் கருதி
யதில்வாசஞ் செய்திருப்ப தோடும், சுந்தரபாண்டியனுக்கு,
நாளுக்குநாள் அஷ்டபோக பாக்கியங்களை, அளவுசங்கையில்
லாமற் கொடுத்திருக்கையில், ஸ்ரீவைகுந்த வாசராகிய, நாரா
யணமூர்த்தியானவர், இலட்சுமியைப் பிரிந்த துயரத்தால்
மெலிந்து எங்குந்தேடித்திரிந்துங் காணாதவராய், கமலாசன
மாகியதாமரைப்பூவிற்குள் ஒளித்துகொண் டிருப்பாளென்று,
எண்ணங்கொண்டவராய், மகாவிஷ்ணுவானவர் வண்டைப்
போல் உருவங்கொண்டு, எங்கெங்கு தாமரை புட்பித்திருக்
கின்றதோ அவ்விடங்களெல்லாஞ்சென்று, புட்பங்களிற்புகு
ந்து இதழிதழாகப் பரிசோதனை செய்துங் காணாமையால்,
ஞானத்தைமறந்து அதிமோகமுற்றவராய், இன்னம் பாற்போ
மென்று, அவள்வாசம்பண்ணுகின்ற சந்திரனிடத்திலும் பரி
சுத்தமானவீடுகளிலும், அலர்ந்தபுட்பமாலைகளிலும் திருமங்கி
லியங்களிலும் அழகியஸ்திரீகளினது, முகாரவிந்தங்களிலும்
புண்ணியபுருஷாளிடத்திலும்,கெருடன்மீதேறிஅதிவிருப்பத்
தோடும், சகலலோகங்களினுந் தேடிப் பார்த்துக் காணமற்
றிகைத்துத் தன்மனதில்,அடடா, நாம் முன்னொருகாலத்தில்,
இலங்கைவேந்தனாகிய இராவணனைச் சங்காரஞ்செய்து, வர
வேண்டியதாய், உண்டாக்கிய சேதுவைப்போய்ப் பார்த்து
வருவோம், அதுதான் அவளுக்கு, வாசஞ்செய்யத்தக்கவிட
மென்று யோசித்தவராய் கெருடன்மீதேறி அதிதீவரமாய்
சேதுமத்தியில் விளங்குங் கந்தமாதனச்சாரலில், வயங்கும்
இராமீச்சுரமென்னுந் தலத்திற்சேர்ந்து,அதியாவலோடும் அத்
தலத்திலுள்ள பூங்காவனச் சோலைகளிலுந், தாமரையோடை
களிலும்பார்த்துக்கொண்டு வருகிறபோது,மகாலட்சுமியாகிய,

பெண்ணானவள், அநேகந்தோழிப் பெண்களுடன்கூடிப்பூங்கா
வனத்தை நோக்கிவந்து சேர்ந்து, அவ்வனத்துள்மிக உன்னத
மாகவிருக்கும் மலர்களைக்கொய்து, விளையாடிக்கொண்டிருப்
பதைமகாவிஷ்ணுவானவர்பார்த்து, பிரிந்திருந்த தன்மையால்
விம்மலும் பொருமலுமுண்டாகி,மறுபடியும்,மனத்தைதிடப்
படுத்திக்கொண்டவராய், அவளின்று தனக்குத்தானே, நாம்
நமது சுயரூபத்தோடும், அவ்விடஞ் செல்வோமாயின், மாய்
கையால் ஓடிப்போய் விடுவாளாதலால், மாறுவேடம் பூண்
டு நெருங்கிப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று கருதினவ
ராய், தன்திரேகம் வெண்ணிறந் தோன்றும்படியாக பாதாதி
கேசபரியந்தம் விபூதியை உத்தூளனமாய்க் குழைத்துப்பூசி,
நெற்றியில் திரிபுண்டரமாய் விபூதி இலங்கவும், சிரந்தோள்
மார்பு கரம் முதலியவிடங் களிலுஞ்சாத்தி, உருத்திராக்கங்
களைத்தரித்துக்கொண்டவராய், நல்லவெண்பட்டுவஸ்திரமும்
உத்தரீயமு மணிந்து, கையிலேபத்திரம் புனைந்து, லோகத்தி
லிருக்கப்பட்டவர்கள் கடைத்தேறும் படியாய்த், தானொரு
வகைசெய்து காட்டவேண்டுமென்று,யோசித்தவராய் இராம
நாதனுக்குப் பிரிய முண்டாகும்படியாயும், முன்னூற் பிரதிஷ்
டைசெய்யும்போது உண்டாக்கிய கோடிதீர்த்தத் துடனே
கங்கை பிரயாகை என்னும் புண்ணிய தீர்த்தத்தைப் பூலோக
வாசிகள் எடுத்துக்காவடி கட்டிச்சுமந்து, கொண்டுவந்து அபி
ஷேகஞ்செய்து,வைப்பவர்கள்போலத்தானுமோர்காவடியைத்
தோளிற்சுமந்து, காசியாத்திரை செய்துவரும் விருத்தப்
பிராம்மணனைப்போல் மிகுதாபசோபத்தோடும், பஞ்சாட்சரத்
தைஇடைவிடாமற் செபித்துக்கொண்டு, பையநடந்து,இலட்
சுமியானவள் சேடிகளோடுங்கூடி மலர்கொய்துநிற்கும், இடத்
திற்குவந்தார், அப்படியாகவந்த பரந்தாமனை, இலக்குமியான
வள் பார்த்து, யாரோ பிராம்மணனென்று நிற்கையில், நீல
மேகவண்ணனாகியநாராயணன், அப்பூங்காவனத்தைச்சுற்றிப்
பார்த்து, இலட்சுமிக்குச் சமீபமாகப்போய்,தனதுபாதங்களை
முன்னும் பின்னுமாய்வைத்து, உறுதியாய் ஊன்றிக்கொண்டு

மனதைத்துன்பப்படுத்தினவராய், தமதுகரத்தினால் இலக்குமி
யாகியபெண்ணை எட்டிப்பிடித்திழுத்தார், அப்படி இழுக்கின்
றபோது மகாலட்சுமியாகியபெண், திடுக்கிட்டுநெஞ்சம்பதறி
க் கையைஉதறித் திருகிப்பிடுங்கிக்கொண்டவளாய்த் திரும்பி
ப்பாராமல், தோழிப்பெண்களாகிய செவிலித் தாய்களோடு
மோடிச் சுந்தரபாண்டியனைநோக்கி, முறையோவென்று கூக்
குரலிட்டழுதாள். அப்படி இலக்குமிப்பெண் அபையமிட்
டழுங் குரலோசையைக்கேட்டபாண்டியன், தனது குமாரத்
தியினது குரலோசை என்றறிந்தவனாய், மந்திரிப்பிரதானிக
ளுடனே ஓடோடியும் அதிதீவிரமாய்ப் பூங்காவனத்துக்குவ
ந்து, அழுதுகொண்டுநிற்கும் புதல்வியைக்கண்டு பதைத்துக்
கட்டியணைத்தெடுத்து, அம்மணி, குழந்தாய், உன்னை யாரெ
ன்னசெய்தார்கள். ஏன்அழுகின்றாய், எனதுசெல்வமே என்
றுகேட்கையில், அவ்வாய்மையைக்கேட்ட மகாலட்சுமியாகிய
பெண் கூறுவாள். வாருமையா தந்தையே, அதோநிற்கின்ற
விருத்தப் பிராம்மணன், எனதுகரத்தைப்பற்றி இழுத்தது
மன்றியில் இப்போது உம்மைக்கண்டும் பயப்படாமல் நிற்கி
ன்றானென்று மிகப்பொருமலோடும், விம்மலோடும், அழு
துக்கொண்டே சொல்ல, அச்சொல்லைக்கேட்டவுடனே, பா
ண்டியன் கண்களிரண்டும் நெருப்புப்பொறிபறக்கவும், தே
கம் படபடவென்று நடுக்கவும், மீசைகள்துடிக்கவும்,அ
ருகினிலிருந்த வேவுக்காரர்களையும், மல்லக ஜெட்டிகளையு
ம் பார்த்து, அடாதூதர்களே, அதோநிற்கின்ற பிராம்மண
னைப்பிடித்து மடலோடு மடலிறுகும்படியாய்ப் பிணித்து
கொண்டு வாருங்களடா வென்றுசொல்ல, அதுபோல் அ
ந்தவேவுக்காரர்கள். பிராம்மணனைப்பிடித்து மடலொடிய இ
றுக்கிக்கட்டித் தள்ளிக்கொண்டேவந்து அரசனிடத்தில்விட,
அரசன் பிராமணன்மீது கடுங்கோபங்கொண்டவனாய், இவ
னைச்சிறையிட்டு வையுங்களென்றுசொல்ல, அதுபோல் அவ்
வேதியனை தூதர்கள் அடித்துக்கீழேதள்ளிப் புரட்டிக்காலில்
விலங்குபூட்டி, ஸ்ரீராமநாதனுடைய ஆலயத்துக்கு மேற்புற

த்தில் ஓர்மண்டபத்தறையிலிழுத்துக்கொண்டுபோய்போட்டு,
அவ்வறையைத்தாளிட்டு, அநேகஞ் ஜெட்டிகளைக் காவல்வை
த்துப் பத்திரமாய்க் காவல்செய்யும்படிக் கட்டளையிட்டு, அர
சனுக்கறியப்படுத்த, அரசன் கோபமடங்காதவனாய்த் தனது
குமாரத்தியாகிய இலக்குமியைப்பார்த்து, அம்மணி, நீ-இன்
றுமுதல் வெளியில்வரவேண்டாம், அந்தப்புரத்திற்றானேயிரு
வென்று அரண்மனைக் கழைத்துக்கொண்டுபோய், அவள்ம
னதைத்தேற்றிச் சந்தோஷிக்கும்படியாய்ச்செய்து, பின்தானு
ம் ஸ்நானமுதலிய ஜெபதபங்களைமுடித்து, ஸ்ரீராமநாதனுடை
ய சன்னிதானத்துக்குப்போய்க் கடவுளைத் தரிசனஞ்செய்து
அச்சன்னிதானத்தில் பிராம்மணனால் நடந்த அக்ரமத்தையு
ம் அதற்குத்தான்செய்துவைத்த தண்டனையையும் விண்ணப்
பஞ்செய்துகொண்டு வணங்கிப் பின்பு அரண்மனைசேர்ந்து
அறுசுவைபதார்த்தங்களோடும் போஜனமருந்தி, அம்ஸ தூ
ளிகா சயனத்தின்பேரிற்படுத்து நித்திரைசெய்தான், அப்படி
நித்திரைசெய்கிறபோது காவலிற்கட்டுண்டுநிற்குங் கரியமா
லானவர், வேந்தன்தன்னைக் காவற்படுத்தியதையுந் தனது கா
தலியாகிய இலட்சுமிப்பெண்ணை வெளியில்வராமற் கட்டுப்ப
டுத்தினதையும் தெரிந்துகொண்டவராய், இனி - இதற்கென்
செய்வோமென எண்ணங்கொண்டு, தனதுகபடநாடக சூத்தி
ரத்தினாலே சுயசொரூபத்தோடும் சுந்தரபாண்டியனுடைய
சொற்பனத்திலெழுந்தருளி, ஆயிரம் பணாமுடிகளோடுங்கூடி
ய ஆதிசேஷனுக்குமத்தியிலே, கேயூரமணிகுண்டலங்கள் சூ
ரியப் பிரகாசம்போற்றோன்றவும், நீலமேகம்போன்ற தேக
காந்தியும், செம்முருக்க மலரைப்போன்ற இதழ்களும், மார்
பினிடத்தில் முத்தாரமுதலிய துளசிமாலை கவுஸ்துவாபர
ணப் பிரகாசமும், சங்குசக்கர கோதண்டகதாகட்கத்தின் ஒ
ளியும் செங்குவளைத்தார்களானது மகாவுன்னதத்தோடும், ம
காமேருவின்பேரில் அருவிபாய்வதுபோற் பிரகாசிக்கவும், அ
நேகம் பணிமணிகளுடனுந் திவ்யபீதாம்பரதாரியாயும், மார்க்
கண்டேயர், பிரகலாதனர், நாரதர்முதலிய ஆழ்வாராதிகளெல்

லாம்பணிந்து அஞ்சலிசெய்து நிற்கும்படியாயும், தேவர்கள்
புட்பமாரி பொழியவும், ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் எ
ழுந்தருளிஇருப்பதோடுந் தனக்குப்புத்திரியாகக் கிடைத்திரு
க்கும் மகாலட்சுமிப் பெண்ணானவள், பூரணச்சந்திரோதயம்
போன்ற முகாரவிந்தமும், முத்தாபரணங்களும், பொற்பிர
காசம்பொருந்திய மேகலாபரணமுஞ் சரீரத்திற் பிரகாசிக்கப்ப
ட்ட தாமரைப்புட்பங்களிலே அஷ்டதிக்கஜங்களென்னு மும்மத
ங்கொண்ட யானைகளானது துதிக்கைகளினால் ஆகாயகங்கை
யைமள்ளி யிறைக்கவும், அரம்பாஸ்திரீகள் ஊழியஞ்செய்து
பணிந்துநிற்கவும், தான் ஜகதிசனைப்பணிந்து கைகுவித்துநிற
கும்படியாய் வனமாலியானவர் பாண்டியனுக்கு தெரிசனந்த
ந்தமாத்திரத்தில், அரசன்அக்கோலத்தைக் கனவிற்கண்டுநித்
திரை தெளிந்து திடுக்கென்றெழுந்திருந்து மந்திரிகளை அழை
த்துத் தான்கண்ட சொற்பனத்தைச்சொல்லி மகா ஆச்சரியத்
தோடுந் தனதுபுத்திரியிருக்கும் அந்தப்புரத்திற்குச் சென்று
பார்க்கும்போது,தான் சொற்பனத்திற்கண்ட உருவம்போலப்
பிரத்தியட்சத்திலுந் தன்னுடைய கண்களுக்குத் தோற்றக்க
ண்டு பிரம்மானந்தங்கொண்டு, அக்கணமே தன்குமாரத்தியா
கிய இலக்குமியை அழைத்துக்கொண்டு, ஸ்ரீராமநாதனுடைய
சன்னிதானத்துக்கு மேற்பாரிசத்தின் மண்டபத்தரையிற் கா
வற்படுத்தி வைத்திருக்கும், பிராம்மணனைப் பார்க்கும்போது
கனவிற்கண்டதுபோல ஸ்ரீ மந்நாராயண மூர்த்தியினுடைய
சொரூபம் பிரத்தியட்சமாய் விளங்கக்கண்டு, சந்திரகுலாதிப
தியாகிய சுந்தரபாண்டியராஜன் ஆச்சரியமடைந்து, ஆனந்தப
ரவசமுற்றதோடும் துக்கமதிகரித்துக் கண்ணீர் தாரை தாரை
யாய்ப்பெருகும்படியாய்நின்று அநேகதோத்திரங்களைச்செய்து
ஓ-பரந்தாமா, ஆதிமத்யாந்தரகிதா, அச்சுதா,அடியேன் அநே
கஜென்மங்களோறுமெடுத்த இவ்வுடற்சிறையைநீக்கமாட்டா
தயான்,தேவரீருடைய சரணாம்புயங்களில் விலங்கிட்டும் அடி
த்துப் பிடித்தும் தொந்திரவு செய்ததுமல்லாமல் சராசரங்க
ளை எல்லாம் ஈன்றெடுத்ததாயாகிய மகாலட்சுமிக்கு புலைக்கு

டிலையொத்த தேகத்தோடுங் கூடியயான் தாய் தந்தையைப்
போற்பாவித்துப் பண்ணியஅபசாரம் எவ்விதம் நீக்கிக்கொள்
ளப்போகின்றேன். தேவோத்தமா,தேவதாசார்வ பௌமா,
ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா, சங்குசக்ராயுதா,
பாண்டவசகாயா,காயாம்பூவண்ணா, மச்சகூர்மவராக நாரசிம்
மா,வாமனா,பரசுராமா,ஸ்ரீராமச்சந்திரா, கிருஷ்ணா,கற்கியாவ
தாரா, சகலலோகரட்சகா, சர்வஜீவபரிபாலனா, பக்தப்பிரியா,
பாகவதரக்ஷகா,அனாதரக்ஷகா,கேசவா,க்ஷீராப்திசயனா,மாயா
சொரூபா,கபடநாடகசூஸ்திராவென்று வேந்தனாகியபாண்டிய
ன்மகாவிஷ்ணுவைப் பலவாறாகத்தோத்திரஞ்செய்து;அதன்பி
ன் தன்னருகேநிற்கும் இலட்சுமிதேவியைப்பார்த்து அம்மணீ,
சகலலோகநாயகியாய் ஆன்மகோடிகளுக்கு அழகு,செல்வம்,
கல்வி, புண்ணியம், புநிதம், போகபாக்கியம், யாவும் நீயாய்
விளங்கியும் இக்கடையேனை யொருபொருட்டாக மதித்து,
எளியேனிடம் பொருந்தி இருந்த காரணம்யாதோ, என
து தவப்பெருமையே, செல்வமே,வேதமே, வேதாந்தமே,வே
ழ்வியே,வேழ்விப்பயனே,வேதசொரூபியே,மெய்ஞ்ஞானமே
மெய்ஞ்ஞான மணிவிளக்கே, ஜகன்மோகினியே, ஜகத்ரட்சகி
யேஎன்று தோத்திரஞ்செய்து, அடியேன் அறியாமையினால்
இதுவரையிற் செய்திருக்குங் குற்றங்களெல்லாம் எவ்வாறு
நீக்கிக்கொள்ளப் போகின்றேன், என்செய்வேன்என்று துக்க
சாகரத்துட்டோய்ந்து,கைகளைநெறித்து, துன்பப்படும்போது
ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர், மிகவுஞ் சந்தோஷத்தை
யடைந்து அரசனைநோக்கி,வாராய்சந்திரகுலோத்துங்கனாகிய
சுந்தரபாண்டியனே,நீஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்,எனக்கு
உன்னால் நேரிட்ட தண்டனையைப்பற்றி உன்மீது யாதொரு
குற்றமும் என்மனத்திற் கொள்ளவில்லை,ஏனெனில் உன்னைப்
போன்ற அன்பர்கள் இத்தலத்தில் எனக்குச்செய்யும் அபசா
ரங்களெல்லாம் எனக்குச்சுகுர்த மாகவேயிருக்கும், அஃதெப்
படியென்றால்,இப்போது நீ என்னைப்பிடித்து அடித்து இறு
க்கிக்கட்டச்சொன்ன தெண்டனையானது மந்தாரம் பாரிஜாத

முதலிய புட்பங்களால் அர்ச்சனைசெய்ததுபோலும், காலேற்பூட்
டியவிலங்கான்து நவரத்தினகசிதமாகிய கிண்கிணி முதலிய
சிலம்பைப்போலும், சிறையிடச்செய்த இடமான்து அன்பு
பொருந்திய உனது இதயகமலமாகிய கோயிலாகவும், ஒப்புக்
கொண்டோம், ஏனெனின், நீ இத்தலத்தில் அன்போடேவாச
ஞ் செய்வதன்றியும், நம்மைக்குறித்து யாகஞ்செய்தமுடித்த
படியால், இத்தலத்தில் பத்தாளாயிருப்பவர்கள் செய்யுந்திங்கு
களெல்லாம் சிறப்பாகவும், வைபவைகளெல்லாம் வாழ்த்துத
லாகவும், ஒருதருமஞ்செய்யில் அவை கோடி தருமமாகவும்;
பாவிப்போமாதலால், நீ செய்துவரும் பக்தியைவேண்டி நமது
தேவியானவளை நின்னிடம்முன்னனுப்பி யாம்பின்வந்தோம்,
ஆமளவும் யாதொரு குற்றங்களுமில்லாமல் அவள் மனதின்
படி நடந்துவரும் நாளிலேஸ்ரீநாள் நீ அவளைப்பார்த்து, அம்மா
என்மனப்பூர்வகமாய் உன்னை வெளிவிட மாட்டேனுதலால்,
நீஎன்புத்திரியைப்போல அரண்மனையிற்றானே யிருவென்று
சொல்ல, அதற்கவள், ஐயா, என்னையாவரேனும் வந்துதூராக்
ருதமாய்க் கொண்டுபோய்விட்டால், என்செய்வாயென்று கே
ட்க, அதற்கு நீ-அம்மணி, உன்னை என்னுடைய செங்கோ
லின்றிறத்தால் ஒருவரும் நெருங்குவதற்கு பயப்படுவார்களெ
ன்று நீ-சொல்லியிருந்த வண்ணம், அறிவோமென்று யாம்,
உருவமாறி வேடந்தரித்து பூங்காவனத்திற் சேடிகளோடி
ருந்த உன்புத்திரியைக் கையைப்பிடித் திழுத்துச் சோதிக்க
வந்துசம்பவித்ததை எல்லாம்பொறுத்து மகாசந்தோஷத்தை
யடைந்தோம், அன்றியும் எனதுதேவியை நீ-உனது குமார
த்தியாகப்பாவித்து வளர்த்தமையால், நாம் உனக்கு மருகனு
கவேண்டும். இதுமுதல் என்றைக்கும் அஷ்ட அயிசுவரியத்
தோடேயிருந்து இறுதிகாலத்தில், நம்மைப்போற் சொருபம்
பெற்று, வைகுந்தவாழ்வை யடையக்கடவை என்று வரமளி
த்துப் பின்னுஞ்சொல்லுவார், ஓ-அரசே, நீ-நம்மை இலக்கு
மியின்பொருட்டாய் அடித்துப் பிடித்துத் தொந்திரவுசெய்து
விலங்கிட்டுவைத்த இவ்வரையிலே என்றைக்கும் நாம் இவ்

வுருவத்தோடும், வாசம் பண்ணிக்கொண்டிருப்போம், ஆத
லால், நமக்குச் சேதுமாதவனென்னும் நாமதேயம் விளங்கிக்
கொண் டிருக்கும்படியாய் சதாகாலமும் இவணிருப்பது யா
துகாரணமெனில், நம்மாற் புதுக்கப்பட்ட சேதுவைப்பரிபா
லனஞ் செய்யவேண்டியதினாலும், பிரம்மாதிதேவதைகளும்,
இந்திராதிதேவர்களும், ஸ்ரீராமநாதனும் இத்தலத்தில்வாசஞ்
செய்துக்கொண் டிருப்பதினாலே, நாமும் இவிடத்திற்றானே
வாசஞ்செய்யவேண்டுமென்னும் அவாவுற்றிருக்கின்றோமாத
லால், நம்மை இவ்வுருவத்தோடும் யாரொருவர் தரிசிக்கின்று
ர்களோ அவர்கள் அநேகந்தடவை, கங்கை, பிரயாகை, யமுனை
முதலிய தீர்த்தங்களாடிவந்தபலனும், சேது தநுக்கோடியில்
ஸ்நானஞ்செய்து, ஸ்ரீராமநாதனை தரிசித்தபலனும் பெறுவார்
கள், அவ்வாறு தரிசிக்காதபேர்களுக்கு சம்பவித்திருக்கும் ப
லன்களும் வியர்த்தமாம், இதன்றியும், யாரொருவர் கெங்கா
ஸ்தானத்துக்குப்போய் கெங்கையைக்கொண்டுவந்து, ஸ்ரீராம
நாதனுக்கு அபிஷேகஞ்செய்ய எத்தனித்தாரோ அவர்களும்,
நம்மைதெரிசியாமற் போவாராயின் யாதொருபலனுஞ் சித்தி
யாகமாட்டாது, தெரிசித்தால் எல்லாப்பலனும் பூரணமாய்இ
ஷ்டசித்தியைப் பெறுவார்களென்று வரப்பிரசாதமளித்து, ம
காலட்சுமியுடனே இருவரும் மாயையாய் மறைந்தார்கள், அ
ப்பாற் சுந்தரபாண்டியராஜனும் அன்றுமுதற் சேதுமாதவரு
க்கு ஆலயம்புதுக்கி, தான் தண்டனைசெய்த உருவம்போற்பி
ரதிஷ்டைசெய்து அபிஷேக ஆராதனையாவு நடப்பித்து, தா
ன்செய்த அபசாரமெல்லாந் திரும்படியாய்க் கந்தமாதனத்தி
லே சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து அபிஷேகமுதலிய நிவே
தனங்கள்நடப்பித்து, ஸ்ரீராமனுடைய பாதாரவிந்தத்தில் ச
தாகாலமும் பணிவிடை செய்துகொண்டிருந்து தனது பட்
டணமாகிய மதுராபுரியைத் தனதுகுமாரன் அரசாண்டுவந்த
மையால், தான் அக்கந்தமாதனத்திற்றானே, வாசஞ்செய்தி
ருந்து சிலகாலத்துக்குப் பிறகு அவனும் அவனுடைய தேவி
யாகிய விந்தாவாணியுஞ் சாயுஜ்யமென்னும் பரமபதத்தையடை

டைந்தார்களாதலால், அப்பேற்கொத்த சேதுமாதவரைத் தரிசித்த அநேகம்பேர்கள் சேதுயாத்திரையைப் பூரணயாத்திரையாகவடைந்து மேலானபதவியைப் பெற்றிருக்கின்றார்கள். கேட்டீர்களோ, மகாரிஷிகளே, இந்த ராமீச்சுரத்தலமகிமை என்று சூதமகாமுனிவர் சொல்ல, அதைக்கேட்டமுனிவர்கள் சந்தோஷத்தையடைந்து, சூதமுனிவரைநோக்கி, சுவாமி, இவ்வளவுமகிமைபொருந்திய இராமீச்சுரதலத்தைநோக்கிப் பிரயாணப்பட்டுச் சேதுயாத்திரைசெய்து முடிக்குங்கிரமமெப்படியோ, அதனைத்தேவரீர் அடியோங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்கச், சூதமுனிவர்சொல்லத் தொடங்கினார்.

சேதுமாதவச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

சேதுயாத்திரைச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாயய முனிவர்களே, நெடியகடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் தட்சிணபாகத்தில் ஓங்குஞ் சேதுவுக்குப்போகவேண்டி எண்ணமுற்ற புண்ணியர்கள் தங்களுக்கியன்றமாத்திரம் வேதாகமங்களையுணர்ந்த பெரியோர்களாகிய பிராம்மணர்களுக்கு, கோதானங்களும், தட்சிணைகளும், போஜனங்களும் நடப்பித்து, தவளமாகிய விபூதி ருத்திராக்ஷ மாலிகாபரணங்களையணிந்து, அங்குலியாகிய விரல்களுக்கெல்லாம் பவித்திரமோதிரங்களைப்பூண்டு, ஓரேமனதாய் சேதுயாத்திரை செய்யவேண்டுமென்று, சங்கற்பஞ்செய்து, தமதுகிருகத்தைப் விட்டு பிரயாணப் படும்பொழுது, பக்திசிரத்தையோடும், வாய்மவுனத்தோடும், காமக்குரோத லோபமோகமத மாற்சரியங்களைப்போக்கி, தங்களதுகரத்தில், யாதொரு ஆயுதங்களும், குடையுமில்லாமலும், பாதத்தில் தொடுதோல் பாதுகை யில்லாமலும், வாயிற்றாம்பூலந் தரி

யாமலும், தலைக்கு எண்ணெ முழுக்கில்லாமலும், ஸ்திரீகளுடைய சங்கற்பங்களையும் நீக்கி, நன்மார்க்கமாய் ஓரேபோது போஜனஞ் செய்துகொண்டு, செல்லும் மார்க்கங்களில், வீண் வார்த்தைகள் பேசாமல், பஞ்சாக்ஷரத்தையும், அஷ்டாக்ஷரத்தையும், இடைவிடாமற் செபித்தும், சேதுமான்மியத்தையும், புண்ணிய கதைகளையும், பேசிக்கொண்டும், அரிபூசை சிவபூசைகளைத்தப்பாமலும், ஒருவரிடத்திலேயிருக்கும்பொருளை ஆசிக்காமலும், அக்கினி ஹோத்திரவேள்விகள் தவறாமலும், அதிதிகளுக்குத் தம்மாலியன்ற மாத்திரம் அறுசுவைப் பதார்த்தங்களோடும் அன்னமளித்தும், அறிவுடையோர்களாகிய பெரியோர்களுக்கும், வேதாந்திகளுக்கும், திருப்தியடையும்படியாய் தன்னாலியன்றதை உதவிசெய்தும், சேதுவினிடம்போய்ச் சேர்ந்து, வருணபகவானைப் பிரார்த்தனைசெய்து, ஆசமனார்க்கியங்கொடுத்துச் சந்நிதானம்புரிந்து சமுத்திரராஜனைப் பூசைசெய்து வணங்கி, ஸ்ரீமந் நாராயணனைவணங்கித் தோத்திரம்பண்ணி அநுமதிபெற்று, நளன், சாம்புவன், சுக்ரீபன், அங்கதன், விபீஷணன், அநுமார், இலட்சுமணன், சீதை, இராமச்சந்திரன், நாரதன், பிரகலாதனன், அம்பரீஷன், பராசன், விசாசன், சுகர், வாமதேவர் முதலியபேர்களைச் சிந்தித்துத் தோத்திரஞ்செய்து, இரண்ய சிங்க மந்திரத்தை தியானஞ்செய்து, சங்கு சக்கரத்தையுடைய மகாவிஷ்ணுவையும், மான்மழு சதுற்புஜ சாளகண்ட திரிநேத்திரமுடைய பரமசிவனையும் இதயத்தில் நிறுத்தி, வேத மந்திர பிரணவங்களை யுச்சரித்து, சேது மூலத்திலே ஸ்நானம்பண்ணி எழுந்தபின், சூரியபகவானைத் தோத்திரஞ்செய்து, மறுபடியுமோர்தடவை தீர்த்தமாடி நியமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு, பின்பு அவணின்றும் பிரயாணப்பட்டு தெற்பசயனத்துக்குவந்து, அவண் எழுந்தருளியிருக்கும், ஸ்ரீமந் நாராயணமூர்த்தியை வணங்கி அநுமதி பெற்றுக்கொண்டு, உத்தரபாகத்திலிருக்கும் தேவிபுரம்போய், நவபாஷாண பூசைபண்ணி, அவ்விடத்திலும் சேது மூலத்திற்

செய்தபடி சங்கற்பவிதிகளை நடப்பித்து; ஸ்ரீ ராமசந்திரன், இலட்சுமணன், சீதாதேவி, வருணராஜன், கண்ணுவன், சாம்புவன், அநுமான், சுக்ரீபன், அங்கதன், நளன், கணேசன், இடபன், மகா யோகிகள், ரிஷிகள், சித்தர்கள், பிதுர்த்தேவை முதலிய யாவருக்கும், தனது மனோபீஷ்டப்படியாய் தற்பணஞ்செய்து, மந்திரவிதிவசத்தாய் நடப்பித்து, அப்பாற் கரைமீதுவந்து, ஈர வஸ்திரத்தைக்களைந்து, நல்ல பட்டு வஸ்திரந் தரித்துக்கொண்டு, ஆசமனஞ்செய்து, வேதாகமத்தின்வண்ணம், தேவர்களையும், பிதுர்க்களையுங்குறித்து வேதப்பிராமணர்கள், சிரார்த்தங்கள் நடப்பித்து, அவர்களுக்கு அன்னதானம், கோதான முதலிய சொர்ன்னதானங்களைச்செய்து, அவணின்றும் நீங்கி, சக்கரதீர்த்த முதலாய் நாம் சொல்லிவந்த தீர்த்தங்களில், இலட்சுமண தீர்த்தம்வரையிற் சங்கற்ப விதியின்படி ஸ்நானஞ்செய்து, ஜெபதபங்களை முடித்து; அப்பால் இலட்சுமண தீர்த்தத்திலே மயிர்முடி களைந்து, இராமதீர்த்த முதலாய், அக்கினி தீர்த்தம் வரையிலும், சங்கற்பவிதியின்படியே ஸ்நானம்பண்ணிப், பின் தக்களாலியன்ற மாத்திரந் தானதருமஞ்செய்து, பின்பு அக்கினி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, தேவதைகளுக்கும், பிதுர்க்களுக்கும், சிரார்த்த பிண்டங்கள் செய்து முடித்து, பெரியோர்களாகிய பிராம்மணருக்கு மகிழ்வுண்டாகும்படியாய், கோதானம், பூதானம், கன்னிகாதானம், சொர்ன்ன தானங்களுஞ்செய்து, அதன்பின், சக்கரதீர்த்த முதலிய தீர்த்தங்களிலெல்லாம், சங்கற்பத்தின்படித்தீர்த்தமாடி, அப்பால் இராவணனைக்கொன்ற பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்படியாய், ஸ்ரீ ராமசந்திரனாற் பூசிக்கப்பட்ட ஸ்ரீ ராமநாதனுடைய பாதாரவிந்தத்தை வணங்கித்தோத்திரஞ்செய்து, சேது மாதவனையும், ஸ்ரீமந் நாராயணரான இராமசந்திரன், சீதாதேவி, இலட்சுமணன், இவர்களைப் பணிந்து, பின்பு சந்தமாதனச் சார்பிலே யுண்டாயிருக்குந் தீர்த்தங்களிலெல்லாம், விதிப்படியே ஸ்நானம்பண்ணி ஸ்ரீ ராமநாதனை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, மகா

தேஜஸோடுங்கூடி விளங்குந் தநுக்கோடியிற்போய்ச்சேர்ந்து, நியமப்படி விதி முறை தப்பாமல் சங்கற்பஞ்செய்துகொண்டு தீர்த்தமாடி, நித்ய கர்மாநுஷ்டான ஜபதபங்களை முடித்து, சிரார்த்த பிண்டங்கள், கோதானம், பூதானம், கன்னிகாதானம், வஸ்திரதானம், சொர்ன்னதானம், அசுவதானம், கஜதானம் முதலிய தானங்களெல்லாஞ் செய்து, இப்படியே கோடி தீர்த்தத்திலுந் தீர்த்தமாடி தான தருமங்கள்செய்து, ஸ்ரீ ராமநாதனுக்குத் தம்மாலியன்றளவில், அபிஷேக ஆராதனைகள் செய்து, ஸ்ரீ ராமநாதனை வணங்கித் தோத்திரம்பண்ணி, அவருடைய பூசைக்குபகரண முதலாய், சந்தன புட்ப ஆடையாபரணாதிகளை அவரவர்களுக் கிசைந்தமாத்திரங்கொடுத்துப் பணிந்து விடை பெற்றுக்கொண்டு, பொன்போற் பிரகாசியாநின்ற சங்கு சக்கரபாணியாகிய சேது மாதவனையும், சூலகபாலப்படையையுடைய காள வயிரவனையும், வணங்கித் தோத்திரஞ்செய்து விடை பெற்றுக்கொண்டு, முன்பு யாம் சொல்லியிருக்கும் நியமந்தப்பாமல், தம்முடைய தேசம் போய்ச்சேர்ந்து, பிராம்மணருக்கு அன்னதானமுதலிய பற்பலதானங்களுஞ்செய்து, விடைகொடுத்துப் பிறகு தாங்கள் தங்கள் புத்ரமித்ரகளத்ராதி வர்க்கத்தோடும், சிஷ்ய வர்க்கத்தோடும் போஜனம்பண்ணி, யாத்திரையைப் பூரணமாய், உத்யாபனஞ்செய்துகொள்ள வேண்டுமாதலால், கேளுங்கள் முநிவர்களே, இவ்வண்ணம் சேது யாத்திரை பண்ணியபேர்கள், ஸ்ரீ ராமநாதனுடைய கிருபாகடாக்ஷத்தினாலே முன் ஜன்மங்களிற்செய்த ஆகாமிய சஞ்சிதங்களெல்லாந் தொலைந்து, நரக வேதனைகளைக்கடந்து, தாரித்திரங்களுங் கெட்டாதவராகவும், கொடுந் துன்பத்தைதத் தராநின்ற பிணிகளை யநுபவியாமலும், மேலான கல்விகளை யுணர்ந்து, தனகனக வஸ்துவாகன, அஷ்ட யோகபாக்கிய துரந்தர, சுகுண சுக சம்பத்துகளைப் பொருந்தி, புத்ரமித்ர களத்ர பந்து ஜன பாக்ய சம்பன்னராய், ஆனந்தாதி போகங்களை யநுபவித்துக்கொண்டிருந்து இறுதி காலத்திலே, யோக நிஷ்டாபர ரோப்பந்தமாய்;

சாலோக, சாமீப, சாரூப, சாயுச்யமென்னும் பதங்களைப்பெற்று வாழ்ந்திருப்பார்கள். இதல்லாமலும், துறவாசிரமத்தையடைந்தபேர்கள், விதிப்படி இச்சேது யாத்திரை செய்வார்களாயின், சுஞ்ஞானிகளாய், அகண்ட பரிபூரண சச்சிதானந்த சின்மயஸ்வருப சாட்சாத்கார கைவல்யங்களை யடைந்து, மோட்ச சாம்பிராச்சியத்தை யநுபவிப்பார்களென்று சூத மகாமுனிவர் சொல்ல, அதைக்கேட்டு நைமிசாரண்யத்து ரிஷிகள், பிரம்மானந்த பரிதராய், முனிவரை நோக்கி, சுவாமி, தேவரீர் சொன்ன சேது மான்மியத்தில், இப்போது சொன்ன சேது யாத்திரைக் கிரம விதியில், ஒரு ஆச்சரியந் தோன்றுகின்றது. அது யாதெனில், சேது தநுக்கோடி முதலாகிய தீர்த்த மகிமைகளையும், ஸ்ரீ ராமநாதனுடைய மகிமைகளையும், தேவரீர் இதற்கு முன் சொன்னதில், சேது முதலாகிய தீர்த்தங்களையும், ஸ்ரீ ராமநாதனையும், நினைத்தாலும், புகழ்ந்தாலும், அவ்விடம் போகவேண்டுமென்று பத்தடி தூரம் நடந்து போனாலும், அநேகம் புண்ணியங்களும், பலப்பிராப்திகளும், போகபாக்யங்களும் கிடைக்குமென்று சொன்னதைக்கேட்டு மகிழ்ந்திருந்தோம். அப்படி இருக்க, இப்போதுரைத்ததில், யாத்திரை பண்ண வேண்டிய விதி இப்படியென்றும், அநேக வல்லியமாகவும், கிரமக் கிரமமாயுஞ் சொல்லிய தெவ்விதம், சுவாமி, என்று கேட்கச் சூதமாமுனிவர் கூறுவார். வாருங்கள் மகா ரிஷிகளே, நாம் உங்களுக்கு முன்னஞ்சொல்லி இருந்ததும், இப்போது சொன்னதும், ஒன்றுக்கொன்று பேதமில்லை. யாதெனில், யாத்திரைக் கிரமமாய் பிரயாணப்பட்டுச் செல்வதற்குச் சத்தியில்லாத கூன், குருடு, செவுடு, சப்பாணிப் பேதைகளுக்கும், ஞானிகளுக்கும், வேத பண்டிதர்களுக்கும், இக்கிரமம் வேண்டியதில்லை. இராகத்வேஷாதிகளுடனே கூடிப் பெண்டு, பிள்ளை, பண்ட பதார்த்தங்களோடுங் கூடித் தாபந்தரியப்படும் சஞ்சல புத்தியையுடையவர்களுக்கு மனத்தை ஒரு வழியில் திடப்படுத்திப் புண்ணியத்தை தேடவேண்டிய நிமித்தம்,

கிரமமும், விதியும், பூர்வீகாளான ஸ்மிருதி கர்த்தாள் ஏற்படுத்தி இருப்பதால், அதுபோல் நாமுஞ் சொன்னோம். மேலும், நல்வினை தீவினை யிரண்டுமற்றுப் பக்குவாநுக்ரகம் வந்துவிட்டபேர்களுக்கு ஒரு விதிகளும் வேண்டியதில்லை. அப்படி யல்லாதபேர்களுக்கெல்லாம், காலா காலங்களிலே கிரமாகிரமங்கள் தப்பாமல், ஒன்றுக்கொன்று மேலாகிய புண்ணிய காலங்களை யறிந்து யாத்திரை செய்து, நல்ல புண்ணியங்களைச் சம்பாதிக்கவேண்டுமென்று, சூதமகாமுனிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர்கள், சுவாமி, தேவரீர் வாக்கின்படியே சேது யாத்திரை செய்வதிலும், தனதாகப் புண்யகாலங்கள் ஏம்பாடாக விருக்கின்றதோவென்று கேட்க, அதற்கு ஓ ரிஷிகளே, வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரண முதலிய காலதேச வர்த்தமானங்களும், சேர்ந்திருப்பதற்குத் தக்கதாய், புண்ய காலங்களும், பலன்களும் கிடைக்குமென்று, சூதமகாமுனிவர் சொல்ல, அப்போது நைமிசாரண்யர்கள், சுவாமி, தேவரீர் அது காரணங்களை அடியேங்களுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க, முனிவர் உளமகிழ்ந்தவராய்ச் சொல்லத்தொடங்கினார்.

சேது யாத்திரைச்சருக்கம்.

முற்றுப்பெற்றது.

சேது பலச் சருக்கம்.

கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களே, நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண், தட்சிண பாகத்திலோங்குஞ் சமுத்திரத்தில், தசரததனயனாகிய ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியால் அமைக்கப்பட்ட சேது தநுக்கோடியில், ஒரு நாள் ஸ்நானம் பண்ணியபேர்களுக்கு, சிறப்போங்கிய காசி மகா க்ஷேத்திரத்திற் பத்துவருட காலம் வரையில் வாசஞ்செய்துகொண்டிருந்து, ஆயிர முகத்தோடுங்கூடிப் போக்கித் தது

ம்பி, அலைகளாகிய கரங்களை நீட்டி, அன்பர்களை அழைத்து ஆரவாரஞ் செய்துகொண்டிருக்குங் கங்கையில் ஸ்நானஞ் செய்த பலன் கிடைக்கும். மூன்று தினமிருந்து சேது தநுக்கோடியில் ஸ்நானம்பண்ணினால், அவர்களுக்குப் பஞ்சமா பாதகங்களும் நிவர்த்தியாகிச் சிதம்பரத்திலே பத்து வருடம் வரையில் வாசம் பண்ணிக்கொண்டிருந்த பலனுண்டாம். ஆதலால், இந்த பூலோகத்தில் சேதுவுக்குச் சமானமான தலமொன்றுங்கிடையாது. மேலும், இச்சேதுவிலே செய்யப்பட்ட ஜபங்களும், ஓம தானதரும விரதங்களும், ஒன்று கோடியாய் விளங்குவதோடும், அஷ்டாக்ஷரத்தை ஆயிரத்தெட்டு உரு ஜெபித்தவர்களுக்கு மனது ரம்மியமாய், பக்தி சிரத்தையுண்டாகி, ஹரி பூசை பண்ணிய பலனைப்பெற்று, ஸ்ரீ ராமநாதனுடைய பாதாரவிந்தத்திற் சேர்ந்திருப்பார்கள், மாசிமாதத்தில், இச்சேதுவில் ஸ்நானம் பண்ணினபேர்கள், திவ்ய க்ஷேத்திரங்களாகிய திருவெண்காடு, ஸ்ரீ சயிலம், திருப்பதி, சேஷாசலம், நைமிசாரண்யம், அருணாசலம், திருவிடைமருதூர், திருமறைக்காடு, சிதம்பரம், சீர்காழி, தெக்ஷண காசி, ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், வயித்தீச்சுரம், அருட்குடந்தை, திருவாரூர், திருக்காஞ்சி, முதலாகிய சிவஸ்தலங்களினும், ஒவ்வொருவருடம் வாசம் பண்ணிக்கொண்டிருந்த பலனும், தவமும், புண்ணியமும் கிடைக்குமாயின், அந்த தநுக்கோடியின் மகிமையை யென்னவென்று சொல்லப்போகின்றோம். இதல்லாமலும், அதின் பெருமையைத் தாய்போலும், கருணையையுடைய வேதங்கள் நான்கினும், இதிகாச புராண காவிய சூத்திரங்களினும், இவ்வாறே முறையிடுகின்றபடியால், இச்சேது தநுக்கோடியிலே, சந்திர சூரியர்களை இராகு கேது வந்து மறைக்கும்படியாகிய கிரகண புண்ணிய காலத்தில், தீர்த்தமாடியபேர்களுக்கு மகா க்ஷேத்திரமாகிய காசியிற் பத்துவருடகாலமிருந்து கங்காநதியில் ஸ்நாநஞ்செய்த பலன் உண்டாம். அதுவுமல்லாமல், கோடி ஜென்மங்கள் வரையிற்றேடிய பாதகங்களெல்லாம் நிவர்த்தியாய், ஆயிரம்

அஸ்வமேதயாகம் பண்ணிய பலன் சித்தமாய்க் கிடைப்பதுமன்றியில், இறுதி காலத்திலே சின்மயானந்த சொரூபசாட்சாத் காரத்தைப்பெற்று வாழ்ந்திருப்பார்கள். உத்தராயன தெக்ஷணாயன காலமும், பவரணையும், சோமவாரமும், அமாவாசையுங்கூடிய சங்கிரம புண்ய காலத்திலே மகிமை பொருந்திய சேது தநுக்கோடியைக் கண்ணினாற் கண்டவர்களுக்கு ஏழு ஜன்மங்களிலுண்டாகிய ஆகாமிய சஞ்சித பிராரத்வ வினைகளுமகன்று, தேவதா சொரூப நிஷ்டாளாய்ப் புண்ய லோகமாகிய சுவர்க்கத்தை யடைந்து மகிழ்ந்திருப்பார்கள். இதல்லாமலும், அறுபத்தெண்ணாயிரங்கோடி நதிகள் குறிகொள்ளப்பட்ட சேது தநுக்கோடியிலே மாசி மாதங்களில் உதயகாலத்தில் மூன்றுநாள் தீர்த்தமாடினால், அவர்களுடைய பாதகங்களெல்லாம், நிவர்த்தியாகிச்சகலநதிகளினுமாடிய பலனைப்பெறுவார்கள், ஐந்துநாள்செய்தால் அஸ்வமேதயாகம் சாந்திராயனதெரிசனம், நோன்புவிரதாதிகள் அநுஷ்டித்து, வேதாகமங்களோதிய பலனைப்பெறுவார்கள். பத்துநாள்ஸ்நானம்பண்ணினபேர்கள், சகஸ்ராரவிந்தபீடத்தில் விளங்கப்பட்ட பிரமலோகமாகிய மானுவதியடைந்து, சுகித்திருப்பார்கள், பதினைந்துநாள் தீர்த்தமாடியபேர்கள், வைகுந்தத்தைச் சேர்ந்து வாழ்ந்திருப்பார்கள், இருபதுநாளாடியபேர்கள், ஸ்ரீ கயிலாசத்தையடைந்து வாழ்ந்திருப்பார்கள். இருபத்தைந்து நாளாடியபேர்கள், ஸ்ரீராமசந்திரனாற் பூஜிக்கப்பட்ட ஸ்ரீராமநாதனுடைய சொரூபம்பெற்று வாழ்வார்கள். முப்பதுநாளாடியபேர்கள் ஸ்ரீராமநாதனுடனேகலந்து, அயிக்கப்பட்டுவாழ்வார்கள். ஆதலால், இச்சேது தநுக்கோடியிலே அறிவுடையோர்களாக விருக்கப்பட்டபேர்கள், மாசிமாதஅருணோதயகாலங்களில் புண்யதிதிகளிலும், வாரங்களிலுந்தீர்த்தமாடவேண்டும். இதல்லாமலும் சூர்யசந்திர அர்த்தோதயபுண்யகாலத்திற் சேதுதநுக்கோடியில் ஸ்நானம்பண்ணியபேர்கள் ஒருகாலங்களிலும் அன்னையினது கும்பிபாகநரகத்திலே வீழ்ந்து உழலமாட்டார்கள். அதனோடும் நரகமென்பதைக் கண்ணினாலும்

பார்க்கமாட்டார்கள். அவர்களைப்பற்றிய அநேகம்பிரம்மஹத்திகளும் நிவாரணமாகிச் சகலசெல்வங்களையும்பெற்று இந்திராதி போகபாக்கியங்களையடைந்து சந்திரஜடாமகுடாரனசாம்பசிவமூர்த்தியினுடைய பாதாரவிந்தத்தை யடைந்திருப்பார்கள். ஆதலால், அந்த அர்த்தோதய மகோதயசந்திர க்ரகணசூரியகிரகண புண்யகாலத்திலே அகத்தியஞ் சேதுவில் ஸ்நானம்பண்ணி ஸ்ரீராமநாதனைவணங்கித் தோத்திரஞ்செய்யவேண்டும், இதல்லாமலும் அச்சேது தநுக்கோடியிலே சதாகாலமும் முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கெருடகாந்தர்வ சித்தவித்தியாதர ருரகர்சிவகணங்களுருத்திராதிபர், ஆகாயவாசிகள், போகபூமியரியாவரும்; வாசம்பண்ணிக்கொண்டிருப்பதால், அச்சேதுவைநினைத்துப்புகழ்ந்து வேறொரு தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணினாலும், அப்படிசெய்தவர்களுக்கு அநேகம்புண்ணியங்கள் சித்தமாய்க்கிடைப்பதோடும் ஜன்மசாபல்யமாம், இதன்றியும் யாவரேனும் அச்சேது தநுக்கோடியின் கரையிலே ஓர்கவளமன்னம், ஆருக்காகிலுங்கொடுத்தால் இலட்சம் பிராம்மணருக்கு அன்னதானஞ்செய்தபலன் சித்தமாய்க் கிடைக்கும், மேலும் ஸ்ரீராமதநுக்கோடியைக் கண்ணினாற்கண்டபேர்கள் மறுபடியுந் தாயினது கருப்பையுட்புகாமல் வைகுந்தலோகத்தை யடைவார்கள். இதன்றியும், ஞானபுருஷனாகிய விபீஷணன் வேண்டிக் கேட்டுக்கொண்டவண்ணம் ஸ்ரீராமசந்திர மூர்த்தியினாற் கோலிக்கப்பட்ட தநுக்கோடியிலே யாரொருவர் ஸ்நானம் பண்ணியபோதிலும், விதிப்படியே செய்து, ஜெபதபங்களை முடித்துக்கொண்டு, கோதானம், பூதானம், கன்னிகாதானம், வஸ்திரதான முதலிய பொன், பூமி, பசு, பால், தயிர், எண்ணெய், காய்கறி, பருப்பு, எள்ளு, கோதும்பை, சற்கரை, தேன், நவதான்யம், அன்னம், இலை முதலானவைகளை லோபமின்றி, அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி நல்ல வேதப்பிராம்மணருக்கு தத்தஞ்செய்து கொடுப்பார்களாயின், அவர்களுக்கு மூன்று கோடியாய் அனந்தம் புண்ணியங்க

ளுண்டாம். இதுவுமல்லாமல், அந்த சேது தநுக்கோடியிலே எவ்விதமாகிய தானதருமங்கள், வேள்விகள், ஓமங்கள், தர்ப்பணங்கள், மந்திரங்கள் செய்தாலும், அது ஒன்று கோடியாய் விளங்கும். ஆதலால் தீமையாகிய காரியங்களை மறந்து, ஏகமனதாய், நல்ல புண்ணியமான காரியங்களை நடத்தியபேர்களுக்கு வேண்டிய பாக்கியங்கள், மேன்மேலும் பெருகும்படியாய் ஸ்ரீராமநாதன் அருள்செய்வார். இதன்றியும், நன்மனதோடும், புண்யகாலங்களில் சேதுவில் தீர்த்தமாடப்பட்டபேர்களை சகல தேவதைகளும், ருஷீஸ்வராளும், முனீஸ்வராளும் பார்த்து சந்தோஷத்தை யடைவார்கள். அல்லாமலும், அவன் மரபிலுண்டாகிய அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், பெண்சாதி; பிள்ளைகள் முதலாகிய பேர்களெல்லாம் மகா பாபிகளாய் ரவுரவாதி நரகங்களைப் பெற்றிருந்தாலும், அப்பாதகங்களெல்லாம் நீங்கிப் பரிசுத்தராய், சுவர்க்கவீட்டில் வாசம் பண்ணும்படியாய் இருப்பார்கள். மேலும், அந்த தநுக்கோடியிலே எப்போது தீர்த்தமாடினார்களோ, அப்போதே கோடிகோடி பாதகங்கள் செய்திருந்தபோதிலும், பருதி முன் பனிபோல் விலகிப் புநிதராவார்கள். அதுவல்லாமலும், அந்த சேது தநுக்கோடியிலே பிதுர்க்களுக்குப் பிரீதியாய், பெரியோர்களாகிய பிராம்மணருக்கு ஆடையாபரணாதிகள் கொடுத்து, அவர்களாலே ஓமம், தர்ப்பண முதலிய சிராத்தங்களை நடப்[illegible]ங்கள் போட்டவர்களுடைய பாபங்களெல்லாம் விமோசனமாகிப் பிதுர் மரபில் ரவுரவாதி நரகத்தை யநுபவித்தபேர்களும் அந்நரகத்தினின்றும் நீங்கி, மேலான புண்ய லோகங்களில் வாசம் பண்ணும்படியாய் நியமிக்கப்படுவார்கள். அதுவுமல்லாமல், தெய்வலோகத்தில் இந்திராதி தேவர்களுடனே சமானமாய் வாசஞ்செய்துக்கொண்டிருக்கின்ற அவன் மரபைச்சேர்ந்த புண்ணியர்கள், சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்யமென்னும் பதத்தைப் பெற்று, மோட்சானந்தத்தையு மநுபவிப்பார்கள். இதனோடும், சேது தநுக்கோடி, புருடோத்தமம், கோகு

ரணம், பதுமநாபம், கங்கை, பாகீரதி முதலிய புண்ய தீர்த்தங்கள் விளங்கிய சமுத்திரத்திலே, எப்போதும் வரம்பில்லாதபடி தினப்பிரதியாய், சங்கற்பவிதிப்படி தீர்த்தமாடலாமென்று சுருதிகளாலே சொல்லப்படும். அப்படிச் சொல்லதிலும், சந்ததி வேண்டியபேர்கள், சேது தநுக்கோடியையல்லாமல், சமுத்திரத்தின் மற்ற இடங்களில் சனிவாரத்திலும், மங்களவாரத்திலும், தீர்த்தமாடப்படாது. இதுவுமல்லாமல்: கெர்ப்பஸ்த்ரீகளும் கெர்ப்பதீட்சை யுடையவர்களும், சூதகமுடையவர்களும் பிதுர்க்கர்ம்மங்களை நிறைவேற்றாதவர்களும், அச்சேதுதநுக் கோடியன்றியில் மற்றஇடங்களில், ஸ்நாநஞ் செய்யப்படாது, மேலும்அந்தச் சேதுதநுக்கோடியில் தீர்த்தமாடவேண்டிய பேர்களுக்குமாத்திரம், வாரம் நக்ஷத்திரம் தேசவர்த்தமான முதலிய நியமங்கள் வேண்டியதேயில்லையாதலால் நினைத்தபோதெல்லாம், தீர்த்தமாடிவரலாம், இதல்லாமலும் அச்சேதுவில் ஸ்நானஞ்செய்ய வேண்டுமென்று, சொல்பவர்கள், வேறேதூரதேசத்திலிருக்கப்பட்ட அவன் பந்துவையாவது நேசரையாவது நினைத்துஸ்நானஞ்செய்தால் அவர்களுக்கும் அந்தபலனுண்டாம், அப்படி இருந்தபோதிலும் இறந்துபோனபேர்களை மாத்திரம்நினைத்து ஸ்நானஞ் செய்யப்படாது, ஒருவேளை அவசியமாய் அவர்களை நினைந்து ஸ்நானம்பண்ண வேண்டியிருந்தால் தர்ப்பையினாலே இறந்துபோனவர்களை நியமித்து, பெரியோர்களாற்புராண விதிமந்திரங்களை நடப்பித்து, அதனைச்சேது தநுக்கோடியிலே மூழ்கும்படியாய் விட்டுவிடலாம். விசேஷமாய்ச் செய்யவேண்டுமாயின், தங்கத்தினாலே தர்ப்பைசெய்து, அதனையும் அவ்வாறே விடலாம், அப்படிசெய்வதால் அவன்ஜீவனோடு இருக்கையில் ஸ்நானம்பண்ணிய பலனைப்பெற்றுப் புண்ணியலோகத்தையடைவான், இதன்றியும் பவரணை அமாவாசை இவ்விரண்டு திதியில் எந்த இடங்களிலும். ஸ்நானஞ்செய்யலாம், மற்றதிதிகளிற்செய்யப்படாது, மேலும் சேதுவிலும், கங்காசங்கமத்திலும், சிந்துசங்கமத்திலும், புருடோத்தமத்திலும், கோகா

ணத்திலும், எந்தவேளையிலும் சமுத்திரத்திலே ஸ்நானம் பண்ணலாம். அப்படி செய்தவர்களுக்கு கோடானகோடி புண்ணியங்களுண்டாகும். இத்தன்மைபூண்ட சேதுதநுக்கோடியினது பெருமையைச் சகலதேவர்களுங்கேட்கும்படியாய் மகாவிஷ்ணு சொரூபமான ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியும், சீதாதேவியும், இலட்சுமணருமாயிருந்து, தேவரையு முனிவரையும் பிதுர்த்தேவதைகளையும், பார்த்துச் சொல்லுவார், வாருங்கள் தேவர்களே, நம்மாற் புதுக்கப்பட்ட இச்சேது தநுக்கோடியை யாரொருவர் தரிசித்த போதிலும், அவர் செய்த வினைகளெல்லாந் தொலைந்து, நன்மையைப் பெற்று ஆனந்தத்தையடைவார்கள், அதில் ஸ்நானம்பண்ணியபேர்கள், அவர்களது பிறவித்துன்பங்களகன்று மோட்சானந்தத்தைப் பெறுவார்களாதலால், இக்கடல்சூழ்ந்த பூமண்டலத்திலே சிறப்போங்கிய சேதுதநுக்கோடியின் மகிமையையும் ஸ்ரீராமநாதனுடைய மகிமையையும் நினைத்துச்சொல்லவேண்டுமானால்; நூறுகோடி வருடமானபோதிலும் முடியாது, அப்பேர்க்கொத்த மகிமைபொருந்திய சேதுவென்பதாய், ஸ்ரீராகவனாலே கேழ்விப்பட்டு சந்தோஷத்தையடைந்து ஆனந்தக்கூத்தாடி தாங்களும் அச்சேதுவிற்றானே சதாகாலமும்வாசம்பண்ணிக்கொண்டு ஸ்ரீராமநாதனையுஞ் சேதுமாதவரையும் போற்றி வணங்கி, தினைத்துணைப்போதேனும் அச்சேதுவை விட்டகலாமல், அவ்விடத்தி[illegible]மாகஇருப்பதால் அச்சேதுதநுக்கோடியை தொட்டாலும், அதில்ஸ்நானம்பண்ணினாலும், நினைத்தாலும், கண்ணினாற்கண்டாலும், அதன்பெருமையை யாவரேனுஞ் சொல்லக்கேட்டாலும் அவர்களுடைய துன்பங்களெல்லாம் நீங்கி, ஆனந்தபோகத்தைப் பெற்றுவாழ்வார்கள். இதல்லாமலும், தைமாதத்தில் ஆதித்தவாரமும், அமாவாசையுந், திருவோணநக்ஷத்திரமும், விதிபாதயோகமுங்கூடிய சுபதினத்தினது உதயகாலத்தில், நாகவமென்னப்பட்ட கரணமின்றி இருந்தால், அதனை அர்த்தோதய புண்யகாலமென்று சொல்லப்படும். அத்தன்மைபூண்ட புண்

யகாலமான அர்த்தோதயத்திலே யாரொருவர் அச்சேதுதநுக்
கோடியிலே ஸ்நானம் பண்ணுகின்றார்களோ, அவர்களுக்கு
வரம்பில்லாத பாபங்களெல்லாம் நிவர்த்தியாய், ஆனந்த போ
கபாக்கியத்தை யடைந்து, சரிதை கிரியை யோகமென்று
மூன்றுங்கடந்து, ஞானமயத்தை யடைந்து, அகண்டபரிபூர
ண சச்சிதானந்தசொரூப சாட்சாத்காரத்தைப் பெற்றுவாழ்
வார்கள். மேலும் அதன்பெருமை எத்தன்மையெனில், ஆயி
ரம் விதிபாதயோகங்கொண்ட புண்ணியகாலம் ஓர் அமாவா
சை, அப்படிப்பட்ட அமாவாசை ஆயிரங்கொண்டவை ஆ
தித்தவாரத்தில்வரும் அமாவாசை, அப்படி இவ்விரண்டுங்கூ
டிய ஆயிரங்கொண்டவை அதனோடு வந்ததிருவோணம், அத்
தன்மையாகிய சுபதினம், மகாமாத உதயகாலத்திற் பொருந்
தியிருக்குமாயின், அதன்பெருமையை யாவராற்சொல்லியள
விடக்கூடும். ஆதலால், அப்புண்யகாலத்திற் செய்ததர்மம் ஒ
ன்றுகோடியாய் விளங்கும். அஃதெப்படி எனில், ஒவ்
வொருபுண்யகாலமுந் தனித்தனியே வரும்போது அக்காலயி
ற்செய்யுந் தானதருமம், அர்ச்சனை ஜெபதப ஓமங்களும் கோ
டானுகோடியாய் விளங்குமானால், இவ்வளவும் ஒன்றாய்
ச்சேர்ந்துவந்த புண்யகாலத்தினது மகிமையைச் சேடனாலு
ஞ் சொல்லவரிதென்றால் மற்றயாவரால் புகலலாம், மேலும்
மறைவிதியிற்கூறும் இருபத்தேழு நக்ஷத்திரங்களில் சிரேஷ்
டமாகியது திருவோணம், திதிகளிற் சிரேஷ்டமானது அமா
வாசை, யோகங்களிற் சிரேஷ்டமானது விதிபாதயோகம், வா
ரங்களிற் சிரேஷ்டமானது ஆதித்தவாரம், இந்நான்கும் ஒன்
றாய்ச்சேர்ந்து, மகாமாத அர்த்தோதய காலத்தில் அமைந்த
போது, அக்காலயில் ஸ்ரீராமமூர்த்தியினால் உண்டாக்கப்பட்ட
சேதுதநுக்கோடியிலே, கொடுத்துவைத்த புண்ணியர்கள் தீர்
த்தமாடுவார்களாயின் அவர்கள் மறுபடியும், பிறவிச்சாகரத்
தில் விழாதவர்களாய், எடுத்திருந்த ஜன்மத்திற்றானே யோக
நிஷ்டாபரராய் சுஞ்ஞானிகளாகி அகண்டபரிபூரண சின்மயா
னந்த சொரூபத்தையடைந்து, நித்யானந்த தத்துவத்தோடும்

வாழ்வார்கள். இவ்வகையாகக் கூறிய புண்யகாலமானது,
சூரியன் அர்த்தோதயத்துக்கு மாத்திரஞ் சொன்னதேயன்றி,
மூன்று காலமுஞ் சரியாய்ப் புண்ணியங் கிடைக்குமென்று
கூறவில்லை. அதுபோல், யாம் கூறிய திதியும், நக்ஷத்திரமும்,
யோகமும், சோமவாரதினம் வருமாயின், அது மகோதய
மென்று சொல்லப்படும். அக்காலத்தினும், சேதுவிலே ஸ்நா
னம் பண்ணியபேர்களுக்கு சித்தமாய்ப் பலனைப் பெறுவதோ
டும், அப்பேர்க்கொத்த காலத்திலே தானதருமங்கள் செய்ய
எண்ணங்கொண்டவர்கள், நான்கு வேதம், ஆறு சாஸ்திரம்,
பதினெண் புராணங்களையும் அறிந்தபேர்களாகவும், யோக்கி
யர்களாகவும், தபத்தை யுடையவர்களாகவும், சிவார்ச்சனை,
விஷ்ணுவார்ச்சனை முதலியவற்றை செய்யத்தக்கவராகவும்,
சேது ஸ்நானஞ் செய்யப்பட்டவராகவும், பெரியோர்களாக
விருக்கும் பிராம்மணனுக்குச் செய்யவேண்டும். ஒருகால்
அத்தன்மையாகியபேர் கிடைக்காவிடில், அவர்களைக்குறித்து
சங்கற்பித்து வைத்திருந்து அப்பொருள்களைப் பின்பு அவர்க
ளிடத்திற் சேர்ப்பிக்கவேண்டுமே யன்றி, துர் நடத்தையுடை
யவர்களுக்குப், புண்ணியத்தைத் தேடப்பட்டபேர்கள், கொ
டுக்கப்படாது. கேட்டீர்களோ முனிவர்களே என்று சூதமா
முனிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யத்து ரிஷிகள்
சந்தோஷமடைந்து, முனிவனைநோக்கி, சுவாமி, தானதருமங்
கள் செய்வதிலும், உத்தமரென்பவர்யா[illegible]ரென்றும் அறி
ந்து கொடுக்கவேண்டியதாய்ச் சொல்லுகின்றமையால், உத்
தமருடைய நடையை எவ்விதமாய் அறிந்துக்கொள்ளலாம்,
அதனைதேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்க,
அதைக்கேட்ட சூதமுனிவர் சொல்லுவார். வாருங்கள் முனி
வர்களே, முன்னமோர்காலத்தில், திலீபனென்னும் ராஜனு
க்கு, வசிஷ்ட மகாரிஷியானவர், உத்தமர்களின் திறத்தைக்
கூறியிருந்தபடி யாம் அதை உங்களுக்குச் சொல்லுகின்
றோம். அது யாதெனில், உலகின்கண் உத்தமனென்பவன்
ஆசார நயிஷ்டிகமுடையவனாகவும், சூத்திரரிடத்தில் யாதும்

வாங்கிப் பொசியாதவனாகவும், சாஸ்திர புராணங்களறிந்தவனாகவும், மந்திர வேத பாராயண முடையவனாகவும், ஸ்ரீ கயிலாசபதியையும், மகாவிஷ்ணுவையும், பூஜித்து வணங்கப்பட்டவனாகவும், வர்ணாசிரமந்தப்பி நடவாதவனாகவுமிருக்கப்பட்டவன் எவனோ, அவன் உத்தமனென்று சொல்லப்படும். ஆதலால், அப்பேற்கொத்தவனை அறிந்து தருமஞ்செய்தால், அது ஒன்று கோடியாய் அபிவிர்த்தியாகும். அதுவுமன்றியில், எத்தலங்களிலும், எந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களிலும், பாத்திரர்களை அறிந்தே தானதருமஞ் செய்யவேண்டும், அப்படிச்செய்யாமல், துன்மார்க்கராகிய அதமருக்குக் கொடுத்தால், அப்படி கொடுத்தவர்கள் பதினறு ஜென்மம் வரையிற் புழுவாகவும், பூச்சிகளாகவும், தவளையாகவும், அட்டையாகவும், நாயாகவும், நரியாகவும் பிறந்து, பின்பு சண்டாளராகவும், சூத்திரராகவும், செட்டிகளாகவும், க்ஷத்திரியாளாகவும், பிராம்மணாளாகவும் பிறந்து, ஜென்மங்கடோறும், பிணியும், துன்பமும், தரித்திரமும், மேன்மேலுமநுபவித்து, நரகத்தை அடைவார்கள். ஆதலால், சற்பாத்திரரை யறிந்தே தருமங்கள் நடத்தவேண்டும். அச்சமயம் அப்பேர்க்கொத்தவர் கிடைக்காவிடில், அக்காலையில் கொடுக்கத்தக்க பொருள் எதுவோ அதனை உத்தமர்களை நினைந்து சங்கற்பித்துவைத்து, உடனே அவர்களைத்தேடிச்சேர்ப்பிக்கவேண்டும். சேர்ப்பிக்காமற்போனால், கொடிய பாதகத்துக் கேதுவாகவேண்டும். உத்தமர்களுக்குக் கொடுத்தால், அளவிறந்த புண்ணியங் கைகூடுவதோடும், மேலான சாயுச்ய பதத்தையும் பெறுவார்கள். அதுவுமல்லாமல், திருப்பதி, கோகரணம், கும்பகோணம், காஞ்சிபுரம், சாளக்கிராமம், துவாரகை, மதுரை, நைமிசாரண்யம், அயோத்தி, சேது, ஸ்ரீரங்கம், பதுமநாபம், தண்டகாரண்யம், உதயாசலம், இத்தலங்களெல்லாஞ் சிவஸ்தலமாகவும், விஷ்ணுஸ்தலமாகவுமிருப்பதால், இதிற் பரமபாகவதாளும், ருஷீஸ்வராளும் வாசஞ்செய்யும், பிரம்மகுல க்ஷேத்திரமாகவுமிருப்பதால், அத்தலங்களுக்கு யாரொருவர்

போனபோதிலும், அத்தினம் தாங்கள் தீட்சை விட்டிருக்கும் மயிர் முடியைக் களைந்து, உபவாசமாயிருக்கவேண்டும். அப்படி செய்யாமல், இராகத் துவேஷங்களால், நீக்கிச் செல்லுவார்களாகில், கோடானுகோடி பாபங்களுக் குரியவராய், ஜன்மங்கடோறும் துன்பத்துக்கே ஆளாயிருப்பார்கள். ஆதலால், இந்த சேது தநுக்கோடியில் தீர்த்தமாடவந்த புண்ணியர்கள், கந்தமாதனத்தில் விளங்கப்பட்ட இலக்குமண தீர்த்தத்தில் ஸ்ரீ முண்டிதஞ்செய்து, ஸ்நானம்பண்ணி நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு, பின்பு மற்ற தீர்த்தங்களிலும், சேது தநுக்கோடியிலும் தீர்த்தமாடி, இராமநாதனை வணங்கித் தோத்திரஞ்செய்தால், அவர்கள் செய்யும் தான தருமங்களெல்லாம், ஒன்று கோடியதாய், வரம்பில்லாததாய் புண்ணிய பலனைபெற்று, சாலோக, சாமீப, சாரூப, சாயுச்ய மென்னும் பதவியைப்பெற்று, மேலான போகங்களை பெற்றிருப்பார்கள். இதல்லாமலும், இச்சேதுவுக்குச் சமானமான தீர்த்தம் எங்குங் கிடையாதாதலால், அவ்விடத்திற்செய்யுந் தபம்போல், மற்ற இடங்களிற் சித்தியாகமாட்டாது. மேலும், அத்தலத்திற் செய்யப்பட்ட புண்ணியங்கள், விர்த்தியாவதுபோல வேறேரிடங்களிலும் ஆகமாட்டாது. மேலும் உலகின்கண் பிறந்த ஜீவர்கள், ஆயிரஞ் சென்மம் வரையிலெடுத்து, சேதுவில் ஸ்நானஞ்செய்துவந்த பலனெல்லாம், ஒரு அர்த்தோதய புண்யகாலத்தில் ஸ்நானஞ்செய்யப்பட்ட புண்ணியர்களுக்கு ஓர் நிமைப்போதிற் கிடைக்குமென்று வேதாகமங்களாலும், பெரியோர்களாலுஞ் சொல்லப்பட்டிருக்குதென்று சூதமாமுனிவர் சொல்ல, அதைக்கேட்ட நைமிசாரண்யர்கள், சுவாமி, அறுபதினாயிரம் வருடம் வரையிற் கங்கை, பிரயாகை என்னும் புண்ய நதிகளிலே தீர்த்தமாடிய பலனைப்போல சேது தநுக்கோடியிலே, எத்தனை வருடத்திற் பெறலாமென்று கேட்க, அப்போது சூதமகாமுனிவர் சொல்லுவார், ஓ முனிவர்களே, அநேகம் புண்ணிய பலனைக் கொடுக்கப்பட்ட அர்த்தோதய மகோதயத்திலே, ஸ்ரீராமதநுக்கோ

டியிலே ஓர் விசை ஸ்நானம்பண்ணிய பேர்கள் அடைவர்களென்று சொல்லிப் பின்னும் சொல்லுவார். யாதெனில், அந்த அர்த்தோதய மகோதய வேளையிலே பிரயாகை, கங்கை முதலிய நதிகளிலே, ஆயிரம்விசை ஸ்நானம் பண்ணின பலன், ஸ்ரீ ராமதநுக்கோடியிலே அக்காலத்தில், ஒருவிசை ஸ்நானம் பண்ணியபேர்களுக்கு கிடைப்பதோடும், சொர்க்க மத்ய பாதாளமென்னு மூன்று லோகத்திலுமுள்ள சகல தீர்த்தங்களிலும் ஆடியபலன் எவ்வளவோ அவ்வளவு பலனும், ஸ்ரீ ராமமூர்த்தியால் உண்டாக்கப்பட்ட தநுக்கோடியிலே அர்த்தோதய மகோதய காலத்தில், ஸ்நானஞ்செய்தபேர்களுக்கு சித்தமாய்க்கிடைக்கும். இதல்லாமலும், பூலோகத்தில் செய்நன்றி மறந்தபேர்களுக்கு, ஒருகாலமும் நல்ல கெதி கிடைக்கமாட்டாமல், இரவுரவாதி நரகமே சித்தமாய்க்கிடைக்குமென்று, வேதாகமங்களிற் சொல்லப்பட்டிருந்தாலும், அப்படிக்கொத்த பாவிகளும், பிரம விசாரணை செய்யாத அஞ்ஞானிகளும், பஞ்சமா பாதகங்கள் செய்தபேர்களும், சேது தநுக்கோடியிலே அர்த்தோதய புண்ய காலத்தில் ஓர் விசை ஸ்நானம்பண்ணி விடுவார்களாயின், அவர்களுடைய பாபங்களெல்லாம் அகன்று பரிசுத்தராவார்கள். இதல்லாமலும், அர்த்தோதய புண்ய காலத்தில், சேதுவில் ஸ்நானஞ்செய்யாமல், காமாதிகளால் யாரொருவர் கெருவப்படுகின்றார்களோ, அவர்கள் கண்கெட்ட பாவிகளாய்த் துக்கசாகரத்தினின்றுங் கரையேறமாட்டாமல், கும்பமென்னுஞ் சேற்றிலே அழுந்தி, இரவுரவாதி நரகத்தையடைவார்கள். காமாதிகளை விடுத்து ஸ்நானஞ்செய்தபேர்கள், சூரியமண்டலத்தைச் சார்ந்து பிரமானந்தத்தை யடைவார்கள். இதல்லாமலும், சிறப்புற்றோங்கிய சேதுவிலே கிரமப்படி ஸ்நானஞ்செய்கிறபேர்களெல்லாம், ஸ்ரீ ராமநாதன், இராமசந்திரன், சீதாதேவி, அநுமான், சாம்புவன், நளன், தேவேந்திரன் முதலிய தேவர்கள், சித்துபுருஷாள், பிதுர்த்தேவதைகளை எல்லாஞ் சிந்தித்து அர்க்கியங்கொடுத்து, சூரிய சந்திராள் விதிபாத மூர்த்

லான தேவதைகளையும் தோத்திரஞ்செய்து மகிழ்வுறச்செய்து, அப்பால் அவரவர்களுடைய சக்திக்குத் தக்கபடியாய் சற்பாத்திராகிய பிராம்மணருக்கு ஆடையாபரண வலங்கிருதஞ்செய்து, தங்கம், பொன், வெள்ளி, தாம்பரம், வெண்கலம் இவைகளினுற் றம்பாளஞ்செய்து, அவற்றிற் பால், சற்கரை, நெய், கனிவற்கங்கள் ஏதேனும் வைத்து நிறைத்து, அப்பாத்திரத்தைப் பிராம்மணருக்கு முன்னம் வைத்து உபசாரனை செய்து தட்சிணை தாம்பூலங்களோடும் கொடுக்க வேண்டும். அவ்வாறு நடத்துவதற்கு அசக்தராயின், மரத்தினுற்செய்த தாம்பாளத்தில் மேற்கூறியவைகளை நிறைத்து, அடியேனுகியன்றவையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று வுபசாரனை செய்து சந்தோஷப்படுத்துவதனேடு பூஜையுங் கொடுத்துப்பின்னர் சகலஉயிர்களுக்கும் ஆதாரமாகவிருக்கின்றதாயும், புனிதமாயுமோங்கும் பாற்பசுவும், கன்றும் தானஞ்செய்து, ஜெகன்னத சொருபமாய் விளங்கும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே, தினது ஜென்ம நக்ஷத்திரமாகிய திருவோணத்திலே அடியேன்சக்திக்குத்தக்கபடி பிராம்மணருக் குதவியதை நிருத்தயவுசெய்து அங்கீகரித் திரட்சிக்கவேண்டுமென்று வைகுண்ட வாசனுகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தோத்திரஞ்செய்து, பின்பு நக்ஷத்திரங்களுக்கெல்லா முதற்காரணமாகிய வஸ்துவே, ஆடகலோசத்தமார்களுக் கமுதமீந்த தெய்வமே, உரோகணி தேவியினது மனதுக்கிசைந்த மணியே, உலகின்கண் ஒங்கும் சகல கலைகளுக்கும் பதியாய் நீக்கமற விளக்கும் பொருளே, அடியேனை யாட்கொள்ளவேண்டுமென்று வணங்கிப் பின்னர், சந்திரனைநோக்கித், தமியேனது பாபமாகிய இருட்கூட்டத்தைப் பறக்கத்துரத்துஞ் சுடரே, சுயஞ்சோதியே, சொல்லற்கரிய ஞானப்பிரகாசமே, துன்பக் கடலுட்டோய்ந்துழலும் யான் தேவரீருடைய சரோருகம் போன்ற துணைத்தாட்களின்மீது என்றைக்கும் அகலாத அன்பைப் பொருந்தும்படியாய் அடியேனுக்குக் கிருபைசெய்யவேண்டுமெனத் துதித்து, அதன்பின் சூரியனை நோக்கித்

தோத்திரஞ்செய்து, பிறகு அன்னவர் புதல்வனாகிய விதி பாதயோகனை நோக்கி, ஓ தெய்வமே, எளியேன் சக்தி மாத்திரமீந்த தானமானது ஒண்ணட்சயமா யிருக்கும்படியாய்க் கிருபை செய்யவேண்டுமென்று விதிபாத யோகத்தை வணங்கித் தோத்திரஞ்செய்து, வேதப்பிராம்மணனையு மிவ்வாறே வணங்கி, அப்பால் இரண்யசிராத்த முதலிய சிரார்த்தமனைத்தும் நடப்பித்து, லோபமில்லாமல் தானதருமங்களைச்செய்து, அதன்பின் பிராம்மணருக்கு குடை, பாதரக்ஷை முதலியவைகளைப் பூசித்துக் கொடுத்து அனுப்பவேண்டும். விதிபோல் இவ்வாறு அந்த இராம சேதுவின் தனுக்கோடியிலே அர்த்தோதய புண்ணியகாலத்தில், இப்படி செய்கிறபேர்களுக்கும், மாமக புண்ணியகாலத்திற் செய்கிறபேர்களுக்கும், உலகின்கண் யாத்திரைகளும், யாகாதி கிர்த்தியங்களுந் தானதருமங்களுந் தேடவேண்டியதில்லை. அவர்களுக்குச் சகல பலன்களுங் கைக்கூடும். அன்னவர் இந்த சேது தனுக்கோடியை யல்லாமல் மற்ற வேறு தலங்களிலே யிருந்தாலும், மேற்கூறியவண்ணமே நடத்தவேண்டும். கேளுங்கள் மகாரிஷிகளே, இதல்லாமலும், அந்த கந்தமாதனச் சாரின் தென்றிசைச் சமுத்திரத்திலே, ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியால் உண்டாக்கியிருக்கப்பட்ட சேதுவை, மேலவர்களாலோதும் ஞானசீலர்களும், அந்த ஞானத்துக்குரிய நிஷ்டை காலங்களிலே சேதுவைச் சிந்தித்தால், சகல அஞ்ஞானங்களும், பாவங்களும் நீங்கிக் கோடி சூரியப் பிரகாசமாய் பிரம்மானந்தத்தைப் பெறுவதோடும், இச்சேதுவிலே அனாக்ஷணமா வது வாசம்பண்ணுவார்களாயின், அவர்கள் சமீபத்தில் எமபடாளுமணுகாமல் விலகுவதோடும், ஸ்ரீ ராமநாதன் முதலிய தேவர்களுக்குச் செய்த குற்றமனைத்தும் அகன்றுபோம். கேளுங்கள் முனிவர்களே, இதல்லாமலும், உலகின்கண் சிறப் போங்கிய ஸ்ரீ சைலம், குருக்ஷேத்திரம், சித்ரகூடம், திருக்குடந்தை, தண்டகை, வதரிகாசிரமம், சுவேத பருவதம், காஞ்சீபுரம், அனந்தசயனம், திருக்கோட்டியூர், சேடாத்

திரி, வடமதுரை, பத்மநாபம், புருஷோத்தமம், நைமிசாரண்ணியம், இவைமுதலிய விஷ்ணுஸ்தலங்களிலேவாசம்பண்ணி அதிலே உண்டாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, அளவிறந்த தானதருமங்களைச் செய்தாலும், மோக்ஷசாம்பிராஜ்யத்தைப் பெறமாட்டார்கள். இச்சேதுவில் ஒருநாளேனும் ஸ்நானஞ் செய்வார்களாகில், அவர்களுக்கு மோக்ஷங்கிடைக்குமென்று சத்தியமாகச் சொல்லுவோம், இதல்லாமலும், ஸ்ரீ ராமதனுக்கோடியிலே ஸ்நானம்பண்ணிய பேர்களுக்குச்சகல துன்பங்களும் சகலபாபங்களும் நீங்கும், அவ்வாறு செய்யாமல் மற்றைத்தீர்த்தங்களிற் செய்தபோதினும் அவர்களுடைய பாபங்கள்நாசப்படாதென்று, வேதங்களெல்லாம் சத்தியமாக வேசொல்லும். இவையல்லாமலும், பஞ்சாட்சரம் அஷ்டாக்ஷரம் சடாக்ஷரங்களை ஜெபித்தாலும், அல்லது, அவைகளை ஜெபியாமல் மறந்துவிட்ட பாபங்களும்; சிவபூசை, அரிபூசை, குருபூசை, செய்யாதபாபங்களும், விபூதிஉருத்திராக்ஷந் தரியாத பேர்களுடையபாபங்களும், ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவத்தையும் வைகுண்ட நாதனாகிய மகாவிஷ்ணுவையும் அறியாத பாபங்களும், இந்தசேதுவிலே ஸ்நாநம்பண்ணினவுடனே நசித்துப்போமென வேதசாஸ்திரபிரமாணம். பின்னும், தநுர்மாதத்தில் உதயகாலத்திலே தேவதைகளுக்கு அபிஷேக முதலியவை நடாத்திநெய்வேதனஞ் செய்யாத பாபங்களும், சாளக்கிராமம், சிவலிங்கம் இவைகளைப் பூசியாத பேர்களுடையபாபங்களும், அரிஹரநாமஸ்மரணை செய்யாதபேர்களுடைய பாபங்களும், காயத்ரிஜெபங்களை மறந்துவிட்டபாபங்களும், உச்சிநேரத்திற்பசித்து வந்தபேர்களுக்கு அன்னங்கொடாது உண்டபாபங்களும், அவுபாசனம் அக்னிஹோத்ரம், வயிஸ்வதேவம் பிரமகாயத்ரி முதலானவைகளைத் தவறிவிட்டபாபங்களும், மேற்கூறியவைகளை அகாலத்தில் நடத்தினவைத்தபாபங்களும், கன்னிமாதத்திலே மாளயஞ்செய்யாதபாபங்களும், சயித்திரமாதப் பவரணைகாலங்களிற் சித்திரகுத்தருக்குப் பிரீதியாய் வேதவாயினர்களுக்கு அன்னம், பால், பழம்,

சற்கலம், நீர்மோர், இளநீர், வடை, பருப்பு, கந்தகஸ்தூரி, குடை, பாதுகை, தாம்பூலமுதலானவைகளை நல்காதபாபங்களும், பிறவிச்சாகரத்தின் கண்ணுழ்ந்து முத்தியாங்கரையைக்காணாதுழலும்பாபமும், இச்சேதுவிலே ஸ்நாநம்பண்ணினவுடனே அக்கினியிற்சொரிந்த நெய்போற்சுவறிப் புண்யபுருஷர்களாய்க் குடும்பமென்னுந் துன்பசாகரத்தைக் கழித்து மோக்ஷசாம்பிராஜ்யத்தை யடைவார்களென்று முக்காலுஞ் சத்தியமாய்ச் சொல்லுவோம், இதன்றியும், இந்த்ரநீலபருவதம்போல் விளங்குந் தென்றிசைக் கடவுளாகிய இயமனை மார்க்கண்டேயருக்காக உதைத்த பாதாரவிந்தத்தையுடைய சாம்பசிவமூர்த்தி முதலிய சகலதேவர்களுஞ் சூழ்ந்து சதாகாலமும் வாசஞ் செய்துக்கொண்டிருக்கப்பட்ட இந்த சேதுதநுக்கோடியை யடைந்தபேர்கள், எக்காலத்திலும் நித்தியானந்த சொரூபராய் அகண்டபரிபூரண சச்சிதானந்தசொரூபசாக்ஷாத்காரராய் வாழக்கடவர்கள், இதன்றியும், இத்தன்மைபொருந்திய மகிமையோடுங்கூடி விளங்கப்பட்ட இராமீச்சரத்திற் பிறந்திருக்கப்பட்ட புற்பூடுகளும், புழுப்பூச்சிகளும், ஊர்வனமுதலிய ஜந்துக்களும், பறவைச்சாதிமுதலிய வற்றோடு கிளிக்கூட்டங்களும், மரங்களு மனேகபுண்ணியங்களைப்பெற்று உய்வார்களென, வேதசாஸ்திரங்களிற் சொல்லப்படுவதாலும், இத்தலத்திற் பிறக்கப்பட்ட உயிர்களுக்குத் தினைத்துணையேனும் எமதண்டமில்லையென்று சுருதிவாக்கியமாதலால் பின்னும் மற்ற எந்தசமுத்திரக் கரையோரங்களிலாவது தேவபுருஷனாயினு மவனிறப்பனாயின், கழுதையாய்ப்பிறப்பானென்று பெரியோர்களாலும் வேதங்களாலுஞ்சொல்லப்படுவதால், இச்சேதுவின்காற்று விசைகொண்டடிக்கப்பட்ட எல்லைவரையினும் இறந்தவை எக்குற்றங்களைச் செய்தகழுதையாயினுந் தேவசொரூபம்பெற்று புண்ணியலோகத்தை யடையுமென்று மறைவிதியிற் கேழ்விப்பட்டிருக்கின்றோமாதலால், இத்தன்மைவாய்ந்த அச்சேதுவினுடைய மகிமையையாம் எவ்வளவென்று உரைப்போம், எப்பொழுதும்

மகாவுத்தமகுண சாந்தபிரம்மானந்த தேஜசோடுங்கூடி விளங்குஞ் சேதுமான்மிய மிப்படியாக்கும், கேட்டீர்களோ மகாரிஷிகளே, நாம்-உங்களுக்குச் சொல்லிவந்த இச்சேதுமான்மியத்தை யார்படித்தாலுங் கேட்டாலும் அவர்களுடைய தேகத்திலுற்ற வியாதிகளுந்துன்பங்களும் நீங்கி, அக்கினிஹோத்திரம் வேழ்விமுதலியவைகள் செய்தபலனும், சகல தீர்த்தங்களெல்லாம் படியபலனும், சாந்திமுதலிய சாதனங்களையடைந்து வேதாந்தவிசாரணைசெய்தபலனும், ஒருவராலும் ஓதற்கரிய மகாதபஞ்செய்துபெற்ற பலனும்பெற்று, சுவர்க்காதி புண்ணியலோகத்தையடைந்து, ஆனந்தபோகங்களை யனுபவித்துப் பேரின்பமுற்றிருப்பார்கள். இதல்லாமலும் பஞ்சவரிகளும்படர்ந்து விளங்காநின்ற கண்களையுடைய சீதாசமேதரான ஸ்ரீராமசந்திரனாலே பூசிக்கப்பட்ட ஸ்ரீராமநாதன் எழுந்தருளியிருக்குஞ் சேதுமான்மியமென்னு மிப்புராணத்தில் ஒருசருக்கமேனும் வாசிக்கச்சொல்லிக் கேட்டபேர்கள், அனேகயாகாதி கிர்த்தியங்கள், எக்ஞியங்கள், வேதநிர்ணயந்தப்பாமற் செய்துமுடித்த பலனைப்பெறுவார்கள். இரண்டுசருக்கம் வாசித்தபேர்களும், வாசிக்கக்கேட்டபேர்களும், பத்துக்கோடிவரையில் அஸ்வமேதயாகஞ்செய்து பெற்றபலனை யடைவார்கள். பத்துசருக்கம் வாசித்தபேர்களும், அவற்றைக் கேட்டபேர்களும், தெய்வலோகத்தில் தேவேந்திரனோடு கூடியிருந்து நூறு அசுவமேதயாகஞ் செய்தபலனைப்பெற்று இந்திரபோகத்தை யனுபவிப்பார்கள். இருபதுசருக்கம்வரையில் வாசித்தபேர்களும், வாசிக்கக்கேட்டபேர்களும், பிரம்மலோகத்தையடைந்து பிரமனைப்போற் சொரூபம்பெற்று வாழ்வார்கள். முப்பது சருக்கம்வரையில் வாசித்தபேர்களும், அதனை பக்தியோடுங் கேட்டபேர்களும், ஸ்ரீமகாவிஷ்ணுவாசஞ்செய்யாநின்ற வைகுண்டலோகத்தையடைந்து, விஷ்ணுசொரூபம்பெற்று வாழ்வார்கள். நாற்பதுசருக்கம் வரையில் வாசித்த பேர்களும் கேட்ட பேர்களும், ஸ்ரீகைலாசத்திலே சாம்பசிவமூர்த்தியின் சொரூபம்பெற்று, நித்தியானந்தவாழ்

ளை யடைந்திருப்பார்கள். இம்மான்மியத்தை முழுதுந் திரிகரணசுத்தியோடு வாசித்த பேர்களும், வாசிப்பதைக் கேட்ட பேர்களும் ஜன்ம சாகரத்தைக்கடந்து, சிவபதத்தைப் பெற்றிருப்பார்கள். ஆகலால், இத்தன்மையாகிய மகிமைபொருந்திய சேதுமான்மியங்களை அடியிருக அந்தக்கரணத்தை யகற்றித் திரிகரணசுத்தியோடுங் கேட்டபேர்கள் சிவபதத்தைப் பெறுவார்கள். இரண்டு விசைப் படித்தவர்களுங் கேட்டவர்களும், சாமீபபதத்தைப்பெற்று வாழ்வார்கள். மூன்றுவிசை வாசித்தபேர்களுங் கேட்டபேர்களும், சாருபமென்னும் பதவியைப்பெற்று வாழ்வார்கள். நான்குதடவை வாசித்தபேர்களுங் கேட்டபேர்களும், அண்டகோடிகளியாவுந் துதிப்பதற்கரிய சாயுச்சியமென்னும் பதத்தைப்பெற்று பேரின்பத்தை யடைவார்கள். இதல்லாமலும் இச்சேதுமான்மியத்திலே ஒருகவிதையினுடைய தாற்பரியமாவது, அவற்றிற் பாதியாவது, காற்பாகமாவது, அல்லது ஓர்சொல்லாவது, ஓரெழுத்தாவது சேதுவென்னும் பெயருடனே சொன்னாலும், சிந்தித்தாலும், அன்னவர்கள்செய்த பாபங்களெல்லாந்தொலைந்து மேன்மையான பாக்கியத்தைப்பெற்று சக்ரவர்த்திகளாகப் பிறந்து வாழக்கடவர்களென்று பின்னுங்கூறுவார், ஓ - முனிவர்களே இச்சேதுபுராணத்தை யார்படித்தாலுங் கேட்டாலும் எவ்வளவு எழுத்துக்களை திருஷ்டித்தாலும், அவ்வளவுக்கு மவர்களைப் பற்றியிருக்கும் பாபங்களும் பிரம்மஹத்திமுதலிய தோஷங்களுமவர்களை விட்டுநீங்கிவிடும். பஞ்சமாபாதகங்களு மகலுவதன்றியிற் சேதுமுதலிருபத்துநான்கு தீர்த்தமுமாடிய பலன்சித்தமாய்க் கிடைப்பதோடும், நெடியகடல்சூழ்ந்த பூமண்டலமுழுதுங் கீர்த்திநிறைந்துவிளங்கும்; ஸ்ரீராமசந்திரமூர்த்தியா லுண்டாக்கிய, சேதுமான்மியத்தைப் பக்திசிரத்தையோடும் பூரணமா யெழுதப்பட்ட அன்பர்களுக்குத் தீராத பாபங்களெல்லாந்தீர்ந்து புண்ணியபுருஷராய், சிவபதமென்னுஞ் சாயுச்சியபதவியை யடைந்து, சின்மயானந்தசொரூப சாட்சாத்காரமாகிய, அகண்டபரிபூரணத்திலே கற்பூரதீபம்

போற்கலந்து நித்தியமாய் வாழக்கடவர்கள். இதன்றியும், இச்சேதுமகத்துவ மென்னும் புராணம், எவ்விடத்திலிருக்கின்றதோ அவ்விடமெல்லாஞ் சேதுவாகவும், கந்தமாதன மாகவும், இராமீச்சுரமாகவும், விளங்குவதோடும் அந்தஸ்தானங்களிலே பூதப்ரேதபைசாசகணங்களும், டாகினி, யோகினிமுதலியவும், துற்சொற்பனங்களும் கொலைகளவுமுதலியவக்கினிபயங்களும்தேகபீடைகளுங்கிஞ்சித்தேனுமணுகாது, ஸ்ரீராமநாதர் அந்தவிடத்திலே யெப்போதும்வாசம்பண்ணிக்கொண்டிருப்பார், இதல்லாமலும் இன்னஞ்சொல்லுகிறோம் கேளுங்கள் மகாரிஷிகளே, சிரார்த்தகாலத்தில் இந்தச்சேது மான்மியத்தில் ஓர்சருக்கத்தைப் பாராயணஞ்செய்தால், அன்னவரைப்பற்றிய தோஷங்களியாவு நிவர்த்தியாய்ப் புண்ணியபலனைப் பெறுவதோடும், அவர்களுடைய பிதுர்க்களுமனமகிழ்ச்சியுடனே கொடுக்கும் பிண்ட தானங்களை ஏற்றுக்கொள்ளுவார்கள். இதன்றியும், புண்யகாலமாகிய பருவகாலங்களிலேனும் விசேஷதினங்களிலேனும் இம்மான்மியத்தில் ஓர் சருக்கமாவது; சருக்கத்துளடங்கிய ஓர்கதையாவது, அல்லது அவற்றிலோ ரேடாவது, பாதியேடாவது; ஓர்வரியாவது, படித்தாலும் படிக்கக்கேட்டாலும், அவ்விடத்தி லுள்ளபேர்கள், பாக்கியவான்களாயும் கீர்த்திமான்களாயும் குபேரனைப்போல் வாழ்ந்துகொண் டிருப்பார்கள். மேலும் இச்சேது மான்மியத்தை வாசிக்கப்பட்ட பேர்களும் கேட்கப்பட்ட பேர்களும், சத்திர முதலியவைகள், பூங்காவனங்கள், பெரியோர்கள்வாழுமிடம் தீர்த்தக்கரையாகிய புண்ணிய பூமிகளிலிருந்து, ஓதவேண்டுமேயல்லாமல், ஆசாரமற்ற விடங்களிலே யிருந்து வாசிக்கப்படாது, இவ்வாறு மேற்கூறிய புண்ணிய ஸ்தானங்களிலிருந்து வாசிப்பதிலும், சஷ்டி, அஷ்டமி, ஏகாதசி, சதுர்த்தசி முதலியதிதிகளிலும், தட்சிணாயனத்தில், மார்கழி, ஆவணி, புரட்டாசி மாதங்களிலும், வாரங்களில், சோமவாரம் சுக்ரவாரமுதலிய நாட்களினும், படிக்கவுங் கேட்கவுந் தீர்த்தங்களாடவும் பிரவேசிப்பராயின், மகாபலன்களை யடைந்திருப்பார்கள். இதல்லாமலும்,

இச்சேதுமான்மியத்தை வேதவியாசமகாரிஷியினது அருளினாலே கேட்கப்பட்ட சவுமியாசாரியர், பாண்டவர்களுக்குரைத்தவண்ணம் யாமுங்களுக் குரைத்ததேயன்றி, வேறேகற்பனையாக யாதொன்றுஞ் சொல்லவில்லை, இவை சத்தியமாகவும் வேதசம்மதமாகவும் தர்மகாண்ட ஞானகாண்டமிரண்டிற்கு நடுநிலையாய் பேதாபேதமின்றிச் சொல்லியிருக்கிறேமாதலால், நீங்களும் உங்களுக்கு அன்பராகவிருக்கப்பட்ட மாணாக்கர்களுக்கு உண்மையாய்ச் சொல்லுங்களென்று, மகாசந்தோஷத்தோடும், ஆனந்தக்கண்ணீர் ஆறுபோற்பெருக, தேகமயிர்க்குச்செறிய, தேகத்தினின்று வியர்வைபெருக, வாய்குளற, கைகளிரண்டையுஞ் சிரத்தின்மேற்கூப்பி, ஸ்ரீராமநாதன்வாழுஞ் சேதுதனுக்கோடியையும் கந்தமாதனத்தையும் அவற்றிலிருக்கு மகிமைகளையு மனத்திற்சிந்தித்து, ஆனந்தபரவசமடைந்து, சித்திரதீபம்போலே சூதமாமுனிவரிருந்தார். அவ்வற்புதத்தைக்கண்ட அங்குளரிஷிகளியாவருமெழுந்து, ஆனந்தக்கூத்தாடி, அர்க்கியபாத்தியமுதலிய சோடசோபசாரபூசைகள்செய்து, தோத்திரம் பண்ணினார்கள். அதுகண்ட சூதமாமுனிவர் சந்தோஷங்கொண்டு, அன்னவர்களது அன்புக்கமகிழ்ந்து, அனேகவரப்பிரசாதங்களைத்தந்து, ஆசீர்வதித்து, சகலமுனிவர்களும் பின்றொடர்ந்துவர, அன்னவரிடத்தில் விடைபெற்று, அவணின்றும்நீங்கி, காசிக்ஷேத்திரத்தில் வியாசபகவானெழுந்தருளியிருக்கும் பன்னசாலையைச் சேர்ந்து, அங்குள வியாசபகவானை அனேகரிஷிக் கூட்டங்களுடனே, நமஸ்காரஞ்செய்து, அடிபணிந்தெழுந்து, கரங்களைக்கூப்பிநின்ற தமதுமாணாக்கராகிய சூதமாமுனியை வேதவியாசமகாரிஷியானவர் கிருபாநோக்கோடும் பார்த்து, சேயைக் கண்ட தாய்போல் அடங்காக்காதலோடுங் கட்டியணைத்து, உச்சியைமுகர்ந்து, அத்தியந்தப்பிரியத்தோடும் நோக்கி, கருதுதற்கரிய வேதசாஸ்திர புராணங்களின்கரைகண்டு, இப்பூதலத்தின்கண் எனக்குக்கீர்த்தியுண்டாகும்படியாய், மகாமகிமைபொருந்திய இச்சேதுமான்மியத்தை நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்

களுக்குச் சொல்லும்படியாய் நீபெற்றபேறே பேறென்று, அனேகமாய்ச்சிலாகித்து, ஆசீர்வதித்து, அவணுளமுனிவர்களைப் பார்த்து பின்னுங்கூறுவார், சேனுங்கள் முனிவர்களே, பெருமைபொருந்திய இச்சேதுமகத்துவத்தை நாமறிந்ததேயல்லது இதாராளறிய மாட்டாராயினும், நம்மாலதிற்சில வர்த்தமானங்களையுணர்ந்த இச்சூதமாமுனிவராலே சொல்லப்பட்டசேதுமான்மியத்தை நீங்கள் கேட்டறிந்திராதலால், இதுவேதாகமசாஸ்திர புராண இதிகாசங்களுக்கெல்லாம் மேன்மையானதெனக்கருதி, சவுமியரானவர்ளனது அன்பின்பெருக்கால் தருமராஜனுக்கு விருப்பினோடு முரைத்ததுபோல, நீங்கள் சதாகாலமும், பக்திசிரத்தையோடு மிதனைப்படிக்கவும், பிறருக்கோதவும் வேண்டுமென் றுரைத்தவராய், அங்குள முனிவர்களுக் கெல்லாமாசிகூறி, யூகமோங்கிய சூதமா முனிவரோடும் ரிஷிக்கூட்டங்களோடும், வேதவியாச மகாமுனிவரானவர் ருஷபத்துவசத்தோடும், மான்மழுசதுர்ப்புஜ காளகண்ட திரிநேத்திர தாரியாய்விளங்குஞ் சிவசொரூபமாய் ஸ்ரீகயிலாயத்தையடைந்தார்.

சேதுபலச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

சேதுபுராணவசநம்

முற்றுப்பெற்றது.

ஆக - சருக்கம் - ௪௭.

97124